# தமிழவேள் உமாமகேசுவரனார்
# நூற்றாண்டு நினைவு

# கட்டுரைப் பூங்கா

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்
1984

தமிழ் வாழ்க

தமிழவேள் உமாமகேசுவரனார்

நூற்றாண்டு நினைவு

# கட்டுரைப் பூங்கா

காந்தைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சாவூர்

1984

முதற் பதிப்பு : 13-4-1984

உரிமை : கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

விலை : ரூ. 60-00

---

# பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்
(தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.)

திரு. கி. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.
(செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.)

திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.
(முன்னாள் செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.)

திரு. அ. கு. வேலன்
(உரிமையாளர், அருணாசலம் படப்பிடிப்பு நிலையம், சென்னை.)

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்
(பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.)

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.
(முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.)

பேராசிரியர் ச. பாலசுந்தரம்
(பதிப்பாசிரியர், தமிழ்ப் பொழில், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.)

பேராசிரியர் மா. ரா. அரசு, எம். ஏ.
(கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.)

---

அச்சிட்டோர்:
ஏ. கே. வேலன் அன்சன்ஸ் அச்சகம், சென்னை-600 093.

# முன்னுரை

''சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்பேம் அல்லேம்
மாதமிழுக் கேகாந்தர் அல்ல ராகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே''

செந்தமிழ்த்தாயின் திருவடிகளுக்குத் தொண்டு செய்வதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவராக முப்பது ஆண்டுகள் விளங்கியவர், நம்முடைய வணக்கத்திற்குரிய செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் அவர்கள் ஆவார். அப் பெருமகனார் தம்முடைய வாழ்நாள் முழுவதும் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகளை இடையறாது செய்து வந்தார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்விநிலையங்களை வளர்த்துச் சங்கத்தை ஒரு பல்கலைக் கழகமாக வளர்த்துவிட வேண்டுமென்பதும், ஆண்டுதோறும் சிறந்த ஆராய்ச்சி நூல்களைச் சங்கத்தின் சார்பில் வெளியிட வேண்டுமென்பதும் தமிழவேள் அவர்களின் விருப்ப மாகும். அவ்விருப்பத்தை நிறைவேற்றக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் தொடர்ந்து பாடு பட்டு வருகின்றது.

தமிழவேள் அவர்களின் நூற்றாண்டுவிழா நடைபெறுவதற்குள், கரந்தைப் புலவர் கல்லூரியை முதுகலைப் பட்டப்படிப்புக் கல்லூரியாக்கிவிட வேண்டுமென்று விரும்பி, முயற்சிகள் மேற்கொண்ட சங்கத்தாரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, 1982-83 ஆம் கல்வியாண்டில் கரந்தைப் புலவர் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்புத் தொடங்க இசைவு வழங்கிய பாரதிதாசன் பல்கலைக் கழகப் பொறுப்பாளர்கள் அனை வருக்கும், குறிப்பாகத் துணைவேந்தர் திருமிகு பேராசிரியர் பி. எஸ். மணிசுந்தரம் அவர் களுக்கும் சங்கத்தார் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். கல்லூரி யில் ஆய்வு வகுப்புகள் தொடங்கவும், தமிழோடு இயைபுடைய கலைகள் பலவற்றையும் ஆராய்ந்து வளர்க்கவும் தேவையான முயற்சிகள் அனைத்தும் விரைவில் செய்யப் பெறும்.

''யானையின் கோடுகளுக்கிடையில் வைக்கப்பட்ட சோற்றுக் கவளம் உடனடி யாகவோ, சிறிது காலம்தாழ்த்தோ அதன் வாய்க்குள் தப்பாமல் செல்லுமாறு போல, அதியமானிடம் பரிசில் வேண்டிச் சென்றால், அவனிடமிருந்து பரிசிலை உடனடியாகப் பெறுதலுமுண்டு; சிறிது காலம் தாழ்த்துப் பெறுதலுமுண்டு;எவ்வாறாயினும், அவனிட மிருந்து பரிசில் பெறுவது உறுதி'' என்று அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றி ஔவையார் புகழ்ந்து பேசுவார்.

''அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே''

(புறநானூறு, 101: 5-8)

அதுபோல், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை ஒரு பல்கலைக் கழகமாக வளர்த்துவிட வேண்டுமென்னும் தமிழவேளின் கனவினைச் சங்கத்தார் அடுத்த ஆண்டே நிறைவேற்றலாம்; அல்லது ஒருசில ஆண்டுகள் கழித்து நிறைவேற்றலாம். எவ்வாறாயினும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஒரு பல்கலைக் கழகமாக வளரப்போவது உறுதி. அதற்கு ஒல்லும் வகையெல்லாம் உதவி செய்யுமாறு தமிழறிஞர்களையும், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களையும், செல்வர்களையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

கி. பி. 1973ஆம் ஆண்டு நடைபெற்ற சங்க மணிவிழாவின்போது, தமிழ்வளர்ச்சிக் குரிய ஆக்கப்பணிகளுள் ஒன்றாகக் "கடடுரைப் பொழில்" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதி வெளியிடப்பெற்றது. அதனைப்போலவே தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழா நடைபெறும் இந்நன்னாளில் "கட்டுரைப் பூங்கா" என்னும் பெயருடைய இந்நூல் வெளியிடப்பெறுகிறது. இந்நூலில் தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு, மொழியியல், அறிவியல் முதலிய பலதுறைகளையும் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. வருங்கால இலக்கிய வரலாற்று ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில், கட்டுரைகளின் முகப்பில் கட்டுரையாளர்களின் வரலாற்றுக் குறிப்பும், நிழற்படமும் இடம் பெற்றுள்ளன.

இக்கட்டுரைகளை எழுதியுதவிய அறிஞர் பெருமக்களுக்குச் சங்கத்தின் சார்பில் நெஞ்சம்நிறைந்தநன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். நூலை உருவாக்குவதற்குரிய வழிமுறைகளைத் தெரிவித்து உதவிய தமிழ்ப்பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் திரு. க. வெள்ளைவாரணனார், திரு. மா. சுப்பிரமணியம் எம்.ஏ., பி.எல்., பதிப்புத் துறை இயக்குநர் திரு. கோவை. இளஞ்சேரன் ஆகியோர்க்கும், கட்டுரையாளர்களுக்குக் கடிதம் எழுதுதல், கட்டுரைகளைத் தட்டச்சுச் செய்து சரிபார்த்தல், வரலாற்றுக் குறிப்புகளை ஒழுங்கு செய்தல் முதலிய பணிகளை எல்லாம் செம்மையாகச் செய்துதவிய கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி. விருத்தாசலம் எம். ஏ., கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் திரு. பாவலரேறு ச. பாலசுந்தரனார், கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. மா.ரா. அரசு, எம்.ஏ., திரு. இரா. மணியன், எம். ஏ., திரு. பா. மதிவாணன் எம்.ஏ., எம்.ஃபில்., திரு. மு. இளமுருகன் எம்.ஏ., ஆகியோருக்கும், மலரை இலவசமாக அச்சிட்டு உதவிய சங்கப்புரவலர் திரு. அ. கு. வேலன் அவர்களுக்கும், வேலன் அச்சக மேலாளர் திரு. நா. அரங்கநாதன் அவர்களுக்கும், மெய்ப்புப் படிகளைத் திருத்தி உதவிய தமிழறிஞர் திரு. புலியூர்க் கேசிகன் அவர்களுக்கும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"இழந்தபழம் புகழ்மீள வேண்டும்; நாட்டில்
எல்லாரும் தமிழர்களாய் வாழ வேண்டும்
வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்
விழுந்ததமிழ் நாடுதலை தூக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்...."

(பாவேந்தர் பாரதிதாசன்)

வணக்கம்.

இங்ஙனம்,
அன்புள்ள,
சி. இராமநாதன்,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கரந்தை,
13-4-1984.

# பொருளடக்கம்

## I. சமயமும் இலக்கியமும்


1. சைவ சமயமாட்சி — 3
   டாக்டர் அ. மா. பரிமணம்

2. திவ்வியப் பிரபந்த உரைகளின் தனித்தன்மைகள் — 12
   டாக்டர் தெ. ஞானசுந்தரம்

3. திராவிட மொழி நாடகங்கள் — 20
   டாக்டர் ஏ. என். பெருமாள்

4. தஞ்சையின் தாலாட்டு இலக்கியம் — 27
   பேராசிரியர் பாரதி பித்தன்

5. கபிலர் — 34
   டாக்டர் இரா. சாரங்கபாணி

6. பழந்தமிழில் இசைச் செய்திகள் — 40
   பேராசிரியர் து. ஆ. தனபாண்டியன்

7. பழமொழியின் தோற்றம் — 45
   பேராசிரியர் வ. பெருமாள்

8. பொற்காலம் — 48
   டாக்டர் க. த. திருநாவுக்கரசு

9. இருமையின் ஒருமையும்
   ஒருமையின் பெருமையும் — 54
   டாக்டர் வை. இரத்தின சபாபதி

10. கவிதையும் நோக்கமும் — 59
    டாக்டர் சொ. சிங்காரவேலன்

11. அறநெறியும் சட்டநெறியும் — 63
    பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியம்

12. வள்ளுவர் கூற்றில் இருமைநெறி — 68
    டாக்டர் தா. வே. வீராசாமி

13. இலக்கியமும் வாழ்வும் — 72
    பேராசிரியர் சி. செல்வத்தாண்டவன்

14. நான்மணிக்கடிகை கூறும் சிந்தனைகள் 76
பேராசிரியர் பி. விருத்தாசலம்

15. பட்டினத்தார் பாடல்கள் 88
பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி

16. கம்பன் கதையில் நாடகப் பாங்கு 96
டாக்டர் பொன். கோதண்டராமன்

17. புறநானூறு ஓர் அழகோவியம் 100
பேராசிரியர் இரா. மணியன்

18. சங்க நூல்களில் இயற்கையும்-இறைமையும் 104
டாக்டர் வே. காத்தையன்

19. ''அந்த அய்ந்து'' 111
பேராசிரியர் சாமி. தியாகராசன்

20. ''சொல்லாற்றல் உத்தி'' 120
பேராசிரியர் சி. கோதண்டபாணி

21. வள்ளலார்—ஒரு மாபெரும் புரட்சியாளர் 125
டாக்டர் சு. சிவகாம சுந்தரி

22. இலக்கியம் காட்டும் பெண்மையின் அறம் 129
புலவர் கோ. தனலக்குமி

23. இலக்கியத் திறனாய்வு—அறிமுகம் 132
டாக்டர் துரை. சீனிச்சாமி

24. தெம்மாங்கு 142
டாக்டர் குருவிக்கரம்பை சண்முகம்

25. புதுக்கவிதை—ஒரு மேலோட்டமான ஆய்வுப் பார்வை 148
டாக்டர் தமிழன்பன்

26. நம்பியாண்டார் நம்பி 158
பேராசிரியர் பெ. கு. வரதராசன்

## II. இலக்கணமும் மொழியியலும்

1. உத்தி வகை 165
பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்

2. உரிச்சொல் 172
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

3. செய்யுள் வழக்கு 180
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

4. முன்னிலைப் பன்மைப் பெயர்
நீஇர் என்பதா? நீர் என்பதா? 189
பேராசிரியர் அடிகளாசிரியர்

5. முன்னிலைச் சொற்கள்
திணை—பால்உணர்த்தும் முறை 193
டாக்டர் செ. வை. சண்முகம்

6. தமிழில் சில துணைவினைகள் 198
டாக்டர் கி. அரங்கன்

7. குறிப்பு வினையின் பாகுபாடு 203
டாக்டர் க. பாலசுப்பிரமணியன்

8. மாணவர்க்கேற்ற இலக்கணத் தமிழ் 207
இலக்கணப்புலவர் த. சரவணத்தமிழன்

9. மொழிச் செருகலும் திருகலும் 210
கோவை இளஞ்சேரன்

III. வரலாறும் கலைகளும்

1. தமிழ் ஏட்டுச் சுவடிகள் 217
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

2. வரலாற்று நூல்கள் 223
டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

3. தமிழகத்தின் உலோக வளமும்
கலை வளர்ச்சியும் 229
பேராசிரியர் சி. கோவிந்தராசனார்

4. ஐயன் ஆரிதன் 239
பேராசிரியர் செ. இராசு

5. ஆப்பிரிக்கர் தம் உணவு முறை 243
டாக்டர் தாயம்மாள் அறவாணன்

6. ஆவூர்ப் பழம்பதி 246
டாக்டர் இரா. கலைக்கோவன்

iv. அறிவியல்

1. தமிழில் அறிவியல்—ஒரு பார்வை 253
பேராசிரியர் ப. க. பொன்னுசாமி

2. வெப்பவியலும் பொருளாய்வும் 261
டாக்டர் எஸ். நடராசன்

3. இயக்கம் 267
பேராசிரியர் ச. சம்பத்து

4. அறுவடைக்குப் பின் 271
டாக்டர் வ. சுப்பிரமணியன்

V. பல்வகை

1. பொதுவுடைமை ஒரு நாட்டின்
தனியுடைமை அன்று 277
பாவலர் பெருஞ்சித்திரனார்

2. இந்தியப் பொருளாதாரமும்
தமிழகப் பொருளாதாரமும் 283
பேராசிரியர் அர. சேஷாசலம்

3. கபிலரும் ஒர்ட்சுஒர்த்தும் 293
டாக்டர் ம. செ. இரபிசிங்

4. தொல்காப்பிய நூற்பாக்கள் பற்றிய ஐயங்கள் 295
பேராசிரியர் கே. எம். வெங்கடராமையா

5. இயற்கை இலக்கியம் 304
டாக்டர் மெ. சுந்தரம்

6. இயற்கை உண்மை 312
டாக்டர் கு. சீனிவாசன்

7. ''மகனே தோழி என்றனள்'' 315
பேராசிரியர் ந. இராமநாதன்

8. சங்ககாலப் பொதுவுடைமை 321
திருமிகு கு. தமிழ்நிலவன்

9. புறத்தூய்மை 325
டாக்டர் தே. வேணுகோபாலன்

10. திருவள்ளுவரிடம் காணும்
'உலகம என்னும் உணர்வு' 329
டாக்டர் கு. மோகனராசு

11. தொடக்க கால வரலாற்று நாவல்கள் 337
மா. ரா. அரசு

12. SEIZING THE CATTLE 342
Dr. K. P. ARAVANAN

தன்னலம் கருதாப் பொதுநலத் தொண்டாற்றித்
தமிழ்நாட்டு மேன்மை தம்பெரும் நோக்காய்
எண்ணரிய சிறப்புக் கண்ணகன் அன்னையாய்
உடன்பிறவாத உயிரெலாம் உரிமை யாக்கித்
தமிழ்நிறைவான் டாற்றிய சங்கத் தலைவர்
செந்தமிழ்ப் புலவர்

2. வெப்பவியலும் பொருளாய்வும் 261
டாக்டர் எஸ். நடராசன்

3. இயக்கம் 267
பேராசிரியர் ச. சம்பத்து

4. அறுவடைக்குப் பின் 271
டாக்டர் வ. [illegible]

V. பல்வகை

1. [illegible] 277

2. [illegible] 283

3. [illegible] 293

4. [illegible] 295

5. [illegible] 304

6. [illegible] 312

7. [illegible] 315
[illegible] இராமநாதன்

8. [illegible] 321
திருமிகு கு. தமிழ்நிலவன்

9. [illegible] 325
[illegible] வேலுகோபாலன்

10. [illegible] 329
'[illegible]'
டாக்டர் கு. [illegible]

11. தொடக்க கால வரலாற்று [illegible] 337
மா. ரா. அரசு

12. SEIZING THE CATTLE 342
Dr. K. P. ARAVANAN



தமிழவேள்

**த. வே. உமாமகேசுவரம் பிள்ளை**

தோற்றம்: 7—5—1883 மறைவு: 9—5—1941

# சமயமும்
# இலக்கியமும்

# சைவ சமய மாட்சி

டாக்டர் அ. மா. பரிமணம்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

இக்கட்டுரை ஆசிரியர் திருச்சி மாவட்டத்தில் உள்ள இனாம்கல் பாளையத்தில் 15-1-1923இல் பிறந்தார்; வித்துவான் தேர்வில் மாநில முதன்மையராகத் தேறி ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவர்; இவர் தமிழ்த் துறையில் 34 ஆண்டுகள் பணிபுரிந்து பூண்டி புட்பங் கல்லூரித் தமிழ் முதுகலைப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார்; ''இயற்கை நாட்டியம்'' முதலிய பல நூல்களை எழுதியுள்ளார்; தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திற்குச் சில நூல்களைப் பதிப்பித்துத் தந்துள்ளார்; இப்பொழுது திரு புட்பங்கல்லூரி, சென்னைத் தமிழ் வடமொழி பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம் இவற்றின் மதிப்பியல் பேராசிரியராகவும் தமிழ்ப் பல்கலைக் கழகச் சிறப்பாராய்ச்சியாளராகவும் பணிபுரிந்து வருகிறார்.

## சமயம்

மனித உள்ளத்தில் ''தெய்வ மென்ப தோர் சித்த''[1] முண்டாகிய நிலை குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க தொன்றாகும். அந்த நிலை என்று, எங்குமுதன்முதலாகத்தோன்றியது என்பது எளிதில் ஆய்ந்து கூறுதற்குரிய தொன்றன்று. எனினும், அதன் வளர்ச்சி மானிடவியலிற் பெரியதோர் அக மாற்றத்தினைத் தோற்றுவித்து, மனித குலம் செம்மையை — மேனிலையை எய்துதற்கு முயலும் முயற்சிக்கு அடித்தளமாக அமைந்தது. அத்தெய்வ சிந்தனைவளர்ச்சி விலங்கு நிலையினும் உயர்ந்து விளங்கிய மனிதகுலம் மேலும் உயர்வுற்று அமரநிலையினை அடைவதற்கான நெறியினை உருவாக்கியது. தெய்வத்தினை உடன்பட்டு மனித வாழ்க்கையின் செம்மைக்காகப் பல்வேறு இடத்தில் பல்வேறு காலத்தில்தோன்றிய அத்தகு நெறிகள் சமயங்கள் எனப் பட்டன. சமயம் என்பது மனித வாழ்க்கையைச் செம்மையும் நன்மையுமுடைய தாக்கச் சமைக்கப்பட்ட வழி என்றுபொருள் படும். தெய்வசிந்தனை மிக்கமைந்த நெறிகள் தோன்றிய நிலையில் தெய்வம் இல்லையென்றும், தேவையற்றது என்றும் கருதும் சிந்தனையும் தோன்றி அஃதுமோர் வாழ்க்கை நெறியாகப் பேசப்படும் செவ்வியும் உருவாகியது.

## பழந்தமிழர் சமயநிலை

வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்குத் தோன்றிய சமயம் பற்றிய நிலைமை சங்க

1. திருவாசகம், போற்றித் திருவகவல், 42.

காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தில் எவ் வாறிருந்தது என்பதனை அறிவதற்கு விளக்கமான சான்றுகள் கிடைக்கவில்லை. இதனை விளக்குதற்கமைந்த தொல்லியல் அகழ்வாய்வுச் சான்றுகள் தரும் ஒளி குறை வாகவே உள்ளது. ஆனால், சங்ககாலத் தமிழகத்தின் சமய நிலையினை உணர்த்து வதில் இலக்கியக் குறிப்புக்கள் பேருதவி புரிவனவாக உள்ளன. இன்ன சமயம் எனப் பெயர் சுட்டி அதன் கோட்பாடு இது வெனக் குறிப்பிடாவிட்டாலும் சமயங் கூறும் தெய்வங்களைச் சுட்டிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. மாயோன் சேயோன் போன்ற தெய்வங்கள் திணை நிலைத் தெய்வங்களாகத் தொல்காப்பியத் தில் பேசப்பெறுகின்றன. மேலும் தெய்வ வணக்கம் 'கடவுள் வாழ்த்து'[2] என்னும் தொடரால் குறிக்கப்படுகின்றது. 'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை'[3] என்னும் கருப்பொருள் நிரலில் முதற்கண் வைத்துப் பேசப்பெறும் தெய்வத்தினை உள்ளுறை கூறுங்கால் பேசலாகாது என்னும்மரபினை.

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக்
கொள்ளும் என்ப குறியறிந்தோரே[4]

என்று தொல்காப்பியம் வரையறுக்கிறது. இதனால் அக்காலத்தில் சமயம் என்ற பெயரில்அமையாவிட்டாலும் தெய்வத்தின் முதன்மையும் சிறப்பும் அறியமுடிகின்றது.

## பழந்தமிழகத்தில் சிவநெறி

சங்க நூல்களில் சமயக் கோட்பாடுகள் பற்றிய நேர்க்குறிப்புக்கள் இன்றேனும் சமயம் பேசும் திருமால், முருகன், சிவன் போன்ற தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பிற்காலத்தில் அறுவகைச் சமயங்கள் என்ற பகுப்பிலடங்கும் வைண வம், கௌமாரம் ஆகிய சமயங்களின் முழுமுதற் கடவுளராகப் பேசப்பெறும் மால், முருகன் ஆகியோர் அப்பெயரிலேயே குறிக்கப்பட சைவசமய முழுமுதற்கடவு ளாகக் கருதப்பெறும் சிவன் அப்பெயரால் சங்கநூல்களில் குறிக்கப்படவில்லை.

'நீலமேனி வாலிழை பாகத்தொரு வன்'[5] என்றும், 'யாழ் கெழு மணிமிடற் றந்தணன்'[6] என்றும், 'சூலம் பிடித்த சுடர்ப்படைக் காலக்கடவுள்'[7] என்றும், 'தாழ்சடைப்பொலிந்த அருந்தவத் தோன்'[8] என்றும், 'முக்கட் செல்வன்', ''மணிமிடற்றோன்'', ''கறைமிடற்றண் ணல்'' ''நீலமணிமிடற் றொருவன்'', ''ஆலமர் கடவுள்'' ''முது முதல்வன்''[9] என்றும், வரும் தொடர்களால் சிவபெரு மான் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளான். சிவன் என்ற பெயரோ அதற்கு மூலமாகும் சிவம் என்னும் சொல்லோ காணப்படாதது சிந்திக்கத் தக்கது. இந்நிலையில் சைவம் என்னும் சொல்லினை இங்கு எதிர்பார்ப்பது இயல் பாகாது. மொழிக்கு முதலில் வாரா எழுத் துக்களைச் சுட்டுங்கால் சகர ஐகாரம் (சை) விலக்கப்படுவதனை,

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே[10]

என்னும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடு கின்றது.

சிலப்பதிகாரத்திலும் சிவன் என்ற சொல்லால் அக்கடவுளும், சைவம் என்ற சொல்லால் அச்சமயமும் குறிப்பிடப்பட வில்லை. 'பெரியோன்', 'உலகு பொதி உருவத் துயர்ந்தோன்' 'செஞ்சடை வான வன்', தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்' என வரும் தொடர்களால் சிவ

2. தொல்காப்பியம், பொருள், 85.
3. தொல்காப்பியம், பொருள், 20.
4. தொல்காப்பியம், பொருள், 49.
5. ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து, 1.
6. அகநானூறு, கடவுள் வாழ்த்து, 15.
7. பதிற்றுப்பத்து, கடவுள் வாழ்த்து, 11.
8. புறநானூறு, கடவுள் வாழ்த்து, 13.
9. புறநானூறு, 6-18; 56-2; 55-4; 91-6; 198-9; 166-2.
10. தொல்காப்பியம், எழுத்து, 62.

பெருமான் குறிப்பிடப் பெற்றுள்ளான்.[11] ஆனால், சிலப்பதிகார காலத்தொடு ஒத்த காலத்தது எனக் கருதப்படும் மணிமேகலையில் 'சைவவாதி'[12] என்னும் தொடர் காணப்படுகின்றது. இங்குப் புத்தம் சமணம் போலச் சிவநெறி 'சைவம்' என்று வழங்கப் பட்டதனையும், அதனைத் தம் சமயமாகக் கொண்டு அந்நெறிக் கோட்பாடு வல்லவர் களாய் அதற்காக வாதம் செய்பவர்கள் சைவவாதி என வழங்கப்பட்டதனையும் உணர முடிகின்றது. புத்தம் சமணம் போன்ற சமயங்கட்கு அக்காலத்தில் தனித் தனியே மறைநூல், மந்திரம் போல்வன விளங்கிய பாங்கு சிலப்பதிகாரத்தால் புலப் படுகின்றது. அதனால் தமிழகச் சமயமாகிய சைவத்திற்கும் மறைநூல் மந்திரம் முதலா யினவும், சமய அமைப்பும் இருந்திருக்க வேண்டும் என்ற உண்மையினை இரட்டைக் காப்பியங் கொண்டு உய்த்துணரலாம். இவற்றால், சைவம், சிவன், சிவம் என்ற சொற்களைக் காணமுடியாவிட்டாலும் சிவ வழிபாடும், அதனைக் கொண்ட சிவநெறி யும் யாதானுமோராற்றால் சங்ககாலத் தமிழகத்தில் நிலவின என்னும் உண்மை தெளிவு பெறுகின்றது.

மொகஞ்சதாரோவிலும், உலகத்துப் பிற சிலவிடங்களிலும் காணப்பெற்ற இலிங்கத்திருமேனிகள் கொண்டு சைவ சமயத்தின் தொன்மை பல்லாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டது எனக் கூறப்படுகின்றது. அஃதெவ்வாறாயினும், பழந்தமிழ் மக்க ளால் உருவாக்கப் பெற்ற சிவ வழிபாடும் நெறியும் சங்க காலத்திற்கு முற்பட்ட பழமையுடையன என்பதில் ஐயமில்லை. தமிழகத்தில் சிவ நெறிக்குச் சைவம் என் னும் பெயர்சங்க காலத்திற்குப் பின்னும், மணிமேகலை காலத்திற்கு முன்னும் அமைந்திருத்தல் கூடும்.

## சைவ சித்தாந்தம்

சைவம் என்னும் சொல் வழக்குப் பிற் காலத்ததாகும். செம்மையினின்றும் தோன் றிய சிவம் என்னும் தமிழ்ச்சொல் சைவ மென்னும் சொல்லிற்கு அடிப்படையாதல் கூடும். சிவநெறி என்னும் பொருளில் சைவம் என்னும் சொல்லை முதன்முதலா கத் திருமந்திரம் என்னும் நூலிற் காணமுடி கின்றது. 'சைவசமயத்தனி நாயகன் நந்தி'[13] என்னும் தொடரில் சிவநெறி யினைச் சைவசமயம் என்றும், அதன் தலை வனை நந்தி என்றும் திருமந்திரம் குறிப்பிடு கின்றது. மேலும், ஆன்மா சிவனொடு தொடர்பு கொள்ளுதற்காம் நெறியே சைவம் எனப்படும் என்பதனைச் 'சைவம் சிவனுடன் சம்பந்தமாவது'[14] என்று அந் நூல் பேசுகின்றது.

'சித்தாந்தம்' என்னும் சொல் சித்து அந்தம் என்னும் இருசொற்கள் புணர்ந்த வடமொழித் தொடர்ச் சொல்லாகும். சித்து அறிவினையும், அந்தம் முடிவினையும் சுட்டச் சித்தாந்தம் என்பது அறிவின் முடிந்த முடிவாகிய ஒன்றினை ஞானத்தின் முடிந்த எல்லையைக் குறிக்கின்றது. வேதாந்தம் என்னும் தொடர்ச்சொல் வேதங்களின் முடிந்த முடிவு என்னும் பொருள்பட்டு எச்சமய வேதங்களின் முடிவையும் சுட்டுவதாக அமைந்தாலும், வைதிக சமய நான்மறைகளின் முடிந்த முடிவு என்னும் ஒரு குறிப்பிட்ட சமய நெறியினையே சுட்ட வழங்குகின்றது. அவ்வாறே, சித்தாந்தம் என்னும் சொல் லும் எந்தச் சமய ஞானத்தின் முடிவையும் சுட்டத்தக்க பொதுச் சொல்லாக—மெய் யுணர்வினைக் (Philosophy) குறிக்கும் பொதுச்சொல்லாக அமைந்திருந்த போதி லும் சிறப்பாகச் சிவநெறியாகிய சைவ மெய்ஞ்ஞான நெறியினையே குறிப்பதாக வழங்கப்படுகின்றது. சைவ சித்தாந்தம் என்னும் தொடரும் முதன் முதலில் திரு மந்திரத்திலேயே இடம் பெறுகின்றது.

'சைவ சித்தாந்தம்' என்னும் வட மொழித் தொடரால் பெயர் பெற்றாலும் அதனுல் குறிக்கப்படும் மெய்யுணர்வுக்

---

11. சிலப்பதிகாரம், 26-55; 26-98; 26-64.
12. மணிமேகலை, 27-87.
13. திருமந்திரம், 1567.
14. திருமந்திரம், 1512.

கோட்பாடு பழந்தமிழ் மக்களின் சிந்தனையில் உருவாகியதேயாகும். வைதிக நெறிக் கோட்பாடுகள் தமிழ் மக்களின் மெய்யுணர்வுச் சிந்தனையிலும் கலப்புற்ற தன்மையினைச் சங்க இலக்கியத்தில் காணக்கிடக்கும் சில குறிப்புக்கள் கொண்டு அறியலாம். கங்கையும், யமுனையும் கலந்த பின்னர்க் கங்கை நீரைப் பிரித்துக்காண்பது இயலாத வாறு போல மெய்யுணர்வில் வடவர் கோட்பாடும் தமிழர் கோட்பாடும் கலப்புற்ற பின்னர்த் தமிழர் கோட்பாட்டினைத் தனியே பிரித்துக்காண்பது மிகமிக அரியதாக உள்ளது.

தமிழ் மக்கள் தங்கள் கலைஞானத்தை வடமொழியில் எழுதி வைக்குமளவு வடமொழி பழங்காலத்திலேயே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. தமிழ் மக்களின் மெய்யுணர்வுக் கோட்பாடுகளும் வடவரின் மெய்யுணர்வுக் கோட்பாடுகளும் வடமொழியில் அமைக்கப்பட்டன. வடவர் மொழியும் பண்பாடும் தமிழ்மொழிப் பண்பாட்டில் கலப்புற்றபோது மெய்யுணர்வியலிலும் அக்கலப்புத் தவிர்க்க முடியாமல் பேரளவில் இடங்கொண்டது. இன்று தமிழர் கோட்பாடான சிவநெறி, வடவர் கருத்தொடு இரண்டறக்கலந்து காணப்படுவதனால் அது தமிழ் மக்களின் சிந்தனைச் செல்வம் என்பதனைத் தமிழ் மக்களே உணர முடியாத நிலை தோன்றியுள்ளது. சைவ சித்தாந்த நெறி தமிழ்மக்களுடையது என்பதனைச் சமயக்காழ்ப்பின்றி ஆராய்ந்த அறிஞர்கள் விளக்கியுள்ளனர். கிறித்துவச் சமய அறிஞராய் அச்சமய ஊழியம் புரிய வந்த டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் சைவ சமயம் பற்றிக் கூறுவது குறிப்பிடத் தக்கது. ''சைவ சித்தாந்த நெறி இந்தியாவிலுள்ள சமயநெறிகளில் மிக்க விரிவானதும் செல்வாக்குடையதும் தற்சார்புடையதுமாக விளங்கும் ஒன்றாகும். அது குறிப்பாகத் தென்னிந்தியர்களின்-தமிழ் மக்களின் சமயமாகும்'' என்பது அவர் கருத்து.[15] மேலும் அவர், சைவ சித்தாந்தம் தென்னிந்தியாவிலுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட சமயமென்றும், ஆரியருக்கு முற்பட்ட காலப்பழமையுடையதென்றும், தமிழ் மக்களின் நெஞ்சத்தில் இடம் பெற்றதென்றும் குறிப்பிடுகின்றார். போப் அவர்களின் இம்மதிப்பீடு வடநெறிக் கலப்பார்ந்த சைவ சித்தாந்தத்தினைக் கண்ணுற்று அதன்வழி ஆய்ந்து கண்ட முடிபாகும்.

வைதீக நெறி நால் வேத அடிப்படையிலமைந்தது. சைவ நெறி ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது. ஆகமங்களும் வேதங்கள் போல வடமொழியில் அமைந்துள்ளன. வேதநெறிக் கலப்புற்ற நிலையில் ஆகமங்களும் அக்கலப்பின் அடிப்படையிலமைந்தனவாக அமைக்கப்பட்டன. வேதநெறி வேதாந்தம் என்று சிறப்பிக்கப்பட்டவாறு, ஆகம வழிச் சைவ நெறி ஆகமாந்தம் எனப்பட்டது. இருநெறிக் கலப்பு நிகழ்ந்ததற்குப் பன்னூறாண்டுகட்குப் பின்னர்ச் சிவநெறி ''சைவசித்தாந்தம்'' என்னும் கோட்பாடாகச் சாத்திரப்படுத்துங்கால், வேதச்சார்புடைய பாங்கில் உருவாக்கப்பட்டது.

இந்நிலையில் வேதநெறியும் ஆகம நெறியும் ஒன்றே எனக்காட்டும் முயற்சியினைத் தமிழ் மக்களும் கொண்டனர். வேதமும், ஆகமமும் சிவபெருமானால் படைக்கப்பட்டன என்னும் கருத்துச் செல்வாக்குப் பெற்றது. இக்கருத்தமைந்த திருமந்திரப் பாடல் வருமாறு :

> வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்தூல்
> ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
> நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
> பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே[16]

இதனை, வேதம் பொதுநெறியென்றும், ஆகமம் சிறப்புநெறி என்றும் விளக்கி, இருநெறியும் வேறுபட்டது போலப் பேசப்பட்டாலும் இரண்டும் வேறு

15. ஜி. யு. போப், திருவாசக ஆங்கில முன்னுரை.

16. திருமந்திரம், 2397.

பாடற்றனவே—அபேதமானவையே என்று கூறுவர். விளக்கம் எதுவாயினும் 'நாடில் இரண்டந்தம் பேதமதென்பர்' என்னும் பகுதி சிந்தனைக்குரியது. வேத நெறியும் ஆகம நெறியும் (இரண்டு அந்தங்கள்) வேறுபாடுடையன (பேதம்) என்று கருதும் கருத்துத் திருமூலர் காலத்திலேயே இருந்தது என்னும் உண்மையினைப் புலப்படுத்துவதால், இது, தமிழர் சமய வரலாற்றில் அரிய புதைபொருள் வெளியீடாக அமைந்த சிறப்பினதாகும். பெரியோர்க்கு அபேதமே என்னும் முடிவு, இரு நெறிக்கலப்பின் ஆற்றலால் உருவாகிய புதிய சூழலை ஏற்றுக் கொள்ள நேர்ந்த உண்மையின் வெளியீடாகும்.

இரண்டந்தங்களையும் அபேதமாகக் கருதும் பாங்கு வளர்ந்த நிலையிலும் தமிழ் நலஞ்சான்ற சமய உள்ளங்கள் இந்த வேறுபாடுகளை மிகவும் குறிப்பாகத் தங்கள் படைப்புக்களில் புலப்படுத்தியுள்ளன. திருஞானசம்பந்தரின் வரலாறு கூறமுற்பட்ட தெய்வச் சேக்கிழார் அதன் தொடக்கத்திலேயே 'வேதநெறி தழைத்தோங்கமிகு சைவத் துறை விளங்க'[17] என்று கூறுகின்றார். சேக்கிழார் காலத்தே தமிழகத்தில் விளங்கிய சைவசமயம் இருநெறிக்கலப்பினதாயினும், நுட்பமாய்க் காண்பார்க்கு அவ்விரு கூறும் புலனாகும் எனுங்கருத்தில் வேதநெறி என்றும், சைவத்துறை என்றும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். வேத வழியும் சைவவழியும் ஒன்றாகக் கலக்கப்பெற்றாலும், வேறுபாடுடையன என்பதனை நெறி என்றும் துறையென்றும் கூறிய சொற்களைக் கொண்டுணரலாம். ''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'' என்றும், ''செந்தமிழோடு ஆரியனை'' என்றும், ''வடமொழியும்தென்றமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்'' என்றும் வரும் அப்பரடிகளின் திருவாக்குக்கள்[18] இவ்வாறு சிந்திப்பதற்கு உரமூட்டுவனவாக உள்ளன. அப்பரடிகளின் இத்தொடர்களை மொழி வேறுபாட்டாலமைந்த இரண்டு இனமக்களைக் குறிப்பனவாக மட்டும் கொள்ளாமல் சமயநிலையில் அமைந்த இருவேறு பண்பாடுகளையும் உணர்த்துவனவாகக் கொள்ளல் ஏற்புடையதாகும்.

## சைவ சமண மறுமலர்ச்சி

தமிழகத்தில் சமண புத்தசமயங்கள் செல்வாக்குப் பெற்ற நிலையில் அதன் விளைவாகச் சைவசமயம் எழுச்சி குன்றியது. சிலப்பதிகாரக் காவுந்திப்படைப்பும், மணிமேகலை சமயக்கணக்கர் திறம் தெரிந்த தாகஅமையும் பகுதியும் தமிழகத்தில் சமண புத்த சமயங்கள் பெற்றிருந்த செல்வாக்கையும் வைதிக நெறிப்பட்ட சைவம் வைணவம் ஆகிய சமயங்கள் எய்திய வளஞ்சுருங்கிய நிலையையும் காட்டுவனவாகவுள்ளன. திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தோன்றி வைதிகச்சார்புற்றிருந்த சைவ சமயத்தினைத் தமிழகத்தில் மீண்டும் செல்வாக்குறச் செய்தனர். வேற்றுச் சமயங்களின் தாக்கத்திலிருந்து விடுபட விரும்பிய தமிழ்மக்கள் வேற்று நெறிக்கலப்பினைக் கருதாது சைவசமயத்தினைத் தங்கள் சமயமாகப் போற்றலாயினர். சைவ மறுமலர்ச்சிக்குத் தேவார அருளாளர்கள் பக்தி நெறியினை அடிப்படையாகக் கொண்ட எழுச்சிமிக்கதொரு இயக்கத்தை உத்தியாக மேற்கொண்டனர்.

அவ்வுத்தி சிறந்த பயனை நல்கிச் சைவ சமயத்திற்குப் புதியதொரு பொலிவையும் வலிவையும் தந்தது. பின்னர் வந்த பெருமக்கள் அனைவரும் சைவநெறியினை அதன் வேதத் தொடர்பினை ஏற்றே போற்றுவாராயினர். வேதத்தையும் ஆகமத்தையும் இணைத்துக் காணுமாற்றை,

> வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
> ஓதுந்தமிழ் அதனில் உள்ளுறு நெய்—போதமிகு
> நெய்யின் உறுகவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
> செய்த தமிழ் நூலின் திறம்[19]

17. பெரியபுராணம், சாக்கியர், 5.
18. அப்பர் தேவாரம், 6-23-5; 6-46-10; 6-87-1.
19. தனிப்பாடல்.

என்னும் வெண்பாவால் உணரலாம். வேதம், ஆகமம், தேவார திருவாசகம், சிவஞான போதம் ஆகியவற்றை இப்பாட லில் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுதற்குக் காரணமாம் வகையில் பசு, பால், நெய், அதன் சுவை என்று முற்றுருவகம் செய்து காட்டியிருப்பது நோக்கற்குரியது.

## சித்தாந்தச் சிறப்பு

ஆகமாந்தமாகிய சைவம் வேதச் சிறப்பு டையது என்பதனைப் பின்னர் வந்த சமய அறிஞர் பலரும் குறிப்பிட்டுள்ளனர். கி.பி. 17 ஆம் நூற்றாண்டினராகக் கருதப்பெறும் குமரகுருபர அடிகள், தம் ஞானகுருவினை இறைவனாகக் கொண்டு பாடிய பண்டார மும்மணிக் கோவையில் சைவசமய மாட்சி யினை மிகவும் சிறப்பாகக் காட்டியுள்ளார். இறைவனால் படைக்கப்பட்ட வேதம் என் னும் மரம், இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய் என நிரம்பி நின்றது. பலர் இலை முதல் காய் வரையுள்ள பயன் களையே கைக்கொண்டனர். ஆனல் வேதாந்தம் என்னும் உச்சியிற் பழுத்த, பேரின்பப் பெருங்கனியைப் பிழிந்து அதன் சாரமாகக் கொண்ட சைவ சித்தாந்தத் தேனை உண்டு பயன் கொண்டவர் சிலரே என்று அடிகள் கூறுகின்றார்.

ஞானசம்பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தால் நம்பிநீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண்டுய்கெனக்
குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீ இத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீ இ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண்டு வந்தனர் பலரே
அவ்வாறுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே[20] .....

இதிலமைந்துள்ள முற்றுருவகம், பல்வேறு பிறசமயங்களின் நிலையினைச் சைவசித் தாந்த நிலையொடுபயன் வகையால்ஒப்பிட்டு உணர்வதற்குப் பயன்படுவதாக உள்ளது.

இறைவன் சுத்தமாயையாகிய வயல் நடுவேதன் அருள்எனும் வித்தினை விதைத் துக் கருணையெனும் நீர் பாய்ச்சி வேதம் என்னும் மரத்தை உருவாக்கினான் என்று கூறப்பட்டது. இங்கு வேதம் எனப்பட்டது இருக்கு முதலிய நால்வேதங்களையே குறிக்குமென்றாலும், இறைவனால் அருளப் பெற்ற பொதுவான மறை என்று கொள் வது ஏற்புடைத்தாகும். அவ்வாறு கொண் டால் உலகத்துப் பிற சமயங்களெல்லாமும் இறைவன் அருளிய வேத மொழி-மறை மொழி கொண்டமைந்தன வென்னும் உண்மை உணரலாம். மேலும் இதனால் பிற சமயங்கள் காட்டும் முத்திநிலைகள் ஒருமரத்தின் இலைதளிர் அரும்புமலர் காய் போன்ற ஒன்றினொன்றுயர்ந்த இடை நிலைப் பயன்களைக் கொள்வதனை ஒக்கும் என்றும், சித்தாந்த சைவமே முடிந்த முடி வான பெரும்பயனை அடைவிக்கும் என் றும் உய்த்துணர்தல் கூடும். பிற சமய நெறிகளும் பயன்களும் சித்தாந்த சைவம் உணர்த்தும் நெறியிலும் பயனிலும் அடங் கித்திகழும் என்ற குறிப்பும் இதனால் பெறப்படுகின்றது.

விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாகும்[21]

என்று சாத்திரமும்,

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்[22]

என்று தோத்திரமும் உறுதி கூறுதற்குச் சைவ சித்தாந்தம் சமய அருங்கனிச் சாரங் கொண்டமைந்த தேனாய் விளங்குகின்றது என்னும் இவ் உருவகம் விளக்கந் தருவதாக உள்ளது. சைவ சித்தாந்தம் வேதாந்தத்

20. பண்டார மும்மணிக் கோவை.
21. அப்பர் தேவாரம், 4-60-9.
22. சிவஞான சித்தியார், நூ. 2-25.

தின் தெளிவு என்பதனை, 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிவிக்கலுற்றாம்'[23] என்று சிவப்பிரகாசம் பேசுகின்றது.

## சித்தாந்தப் பொருட்சிறப்பு

சமயங்களை ஒப்பிட்டுக் காண்பவர்கள், வேதங்கள், கடவுள், வினை போன்றவற்றில் அவை கொண்டிருக்கும் கருத்துக்களை கொண்டு வகை செய்து காண்பார்கள். சமயங்களிற் சில கண்ணிற்காணும் உலகினை உடன்பட்டுக் காணாத கடவுள் போன்ற வற்றை உடன்படார் உயிர் என்பதனை உடன்படாத சமயமும் உண்டு. இவ்வகையில் சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை ஆராயுங்கால் அஃது இறைவன், உயிர்கள், உலகு என்னும் முப்பொருட்களைக் கொண்டுள்ளது என்னும் உண்மை புலனாகும். இம்மூன்றும் அநாதியாகவும், அழிவற்றும் விளங்குவன என்று கூறப்படுகின்றது. சைவ சித்தாந்த நெறியினைச் சாத்திரப்படுத்திய போது இம்முப்பொருளும் பதி, பசு, பாசம் என்னும் மூன்று சொற்களாற் குறிப்பிடப் பட்டன. இவை சைவ சித்தாந்த முப்பொருட்களை உணர்த்தும் குறியீட்டுக் கலைச் சொற்களாகும். பதி, பசு, பாசம் என்பன முறையே இறை(தலைவன்) உயிர் (ஆன்மா) தளை (பாசம்-கட்டு) ஆகியவற்றைக் குறிக்கும். சைவ சித்தாந்த நெறியினைச் சிவ ஞானபோதம் முதலிய தமிழ் நூல்கள் இலக்கணப்படுத்துவதற்கு முன்னர் ஒழுங்குபடுத்தி வெளியிட்ட சிறப்பு, சாத்திரக் கூறும் தோத்திரக் கூறும் ஒருங்கமைந்து விளங்கும் சமய நூலாகிய திருமந்திரத்திற்கேஉரியது. பதி, பசு பாசமென்னும் சைவ சித்தாந்த முப்பொருட் கோட்பாட்டினைத் தெளிவுபெற விளக்கும் மந்திரங்களில் ஒன்றுவருமாறு :

> பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
> பதியினைப் போல்பசு பாசம் அனாதி
> பதியினைச் சென்றணுகாப்பசு பாசம்
> பதியணுகிற் பசுபாசம் நிலாவே[24]

திருமந்திரம் தன் முதல் தந்திரத் தொடக்கத்திலே இந்தச் சித்தாந்த மெய்ப் பொருளுண்மையினைக் கூறியுள்ளது. சைவ சித்தாந்தம் என்னும் பெயரைப் போலவே பதி, பசு, பாசம் என்னும் சைவக்குறியீட்டுச் சொற்களும் முதன் முதலில் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளன. எனினும் திருமூலரே இக்குறியீட்டுக் கலைச்சொற்களை உருவாக்கினார் என்று கொள்வதற்கில்லை. 'பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்' என்னும் போது இம்முப்பெயர்களும் இக்குறியீட்டுப் பாங்கில் திருமூலருக்கு முன்னரே வழக்கில் இருந்துள்ளது என்பது புலனாகின்றது. 'எழுத்தெனப்படுப அகரமுதல்னகர இறுவாய் 'முப்பஃதென், 'குற்றெழுத்தென்ப', 'நெட்டெழுத்தென்ப,[25] என்னும்போது, அகர முதல் னகர இறுவாய் அமைந்துள்ள தமிழ் எழுத்துக்கள் முப்பதும் குறில் நெடில் என்னும் குறியீடுகளும் தொல்காப்பியருக்கு முன்பே அமைந்து கிடந்தமை அறியப்பட்டமை போல ஈண்டும் பதி பசு பாசம் என்னும் பெயராட்சி திருமூலருக்கு முன்பே அமைந்து கிடந்தது என்றுணர்தல் வேண்டும்.

பதியினை (இறை) உடன்படுபவர்கள் அஃது ஆதியந்த மற்றது என்பதனை மறுக்க மாட்டார்கள். பசு (உயிர்) பாசம் (தளை) ஆகியனவும் பதியினைப்போலவே அனாதித் தன்மை உடையன என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடாகும். அதனைத் திருமூலர் 'பூதியினைப்போல் பசு பாசம் அனாதி' எனமந்திரப்படுத்தியுள்ளார். பசு (உயிர்கள்) பாசங்களால் கட்டப்பட்டது. அனாதியாகிய உயிர் என்றுள்ளதோ அன்றே அது பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ளது. பாசம் எனப்படும் மலங்களால் உயிர் பிணிக்கப்பட்டுள்ளவரை அது இறைவனைச் சென்றடைய இயலாது. இறையருளால் பாச நீக்கம் தொடங்கி முற்றுப்பெற்ற நிலையில் அவ்வுயிர் பதியினைச் சென்றடையும். உயிர்கள் தளைநீங்கி—கட்டகன்று பாசமற்று

---

23. சிவப்பிரகாசம், பாயிரம், 7.
24. திருமந்திரம், 115.
25. தொல்காப்பியம், எழுத்து, 1, 3, 4.

இறைவனை அடைவதனையே சைவ சித்தாந்தம் தன் கொள்கையாக விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகின்றது. அந்த விரிவும் விளக்கமுமெல்லாம், பனித்துளியில் பன் மலைக்காட்சி விளங்குவது போல இத்திரு மந்திரத்தால் தெளிவுபடத் திருமூலர் காட்டியுள்ளார்.

தானே பதியினைச் சென்றடைய மாட்டாத பசு, பதியருளால் பாசத்தின் நீங்குகின்றது. பதியருள் கூடுங்கால் பாசத் தன்மை பசுவிடம் நில்லாது அகல்கின்றது. பாசம் அகன்ற பசு, பதியினைச்சார்ந்து அதனை நீங்காது அதனோடு கலந்தின்புறு கின்றது. இச்சிந்தாந்த நுட்பம்,

பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதியணுகில் பசு பாசம் நிலாவே

என்னும் பிற்பகுதியால் விளக்கப்படு கின்றது.

ஆலமர் செல்வனின் சின்முத்திரை யினைவிளக்கும்போது, கையிலுள்ள ஐந்து விரல்களில் கட்டைவிரல் பதி என்றும், சுட்டுவிரல் பசுவென்றும், ஏனைய மூன்று விரல்களும் மும்பகுப்புடைய பாசம் (மலம்) என்றும் கூறுவர், சின்முத்திரையில், கட்டை விரலும் சுட்டுவிரலும் வளைந்து ஒன்றுபட்டு நிற்கஏனைய மூன்றுவிரல்களும் ஒன்றுபட்டு நெடியதாய் நிற்கும் இயல்பாகக் கையை விரித்தால் கட்டைவிரல் தனித்து நிற்க ஏனைய நான்கும் ஒன்றுகூடி நேராய் நிற் கும். இதனை இறைவன் தனித்து நிற்க, உயிர் மும்மலத்தொடும் கூடி நிற்கும் இயல் பான நிலையினை உணர்த்தும் குறியாகக் கொள்ளலாம். கட்டை விரலும் சுட்டு விரலும்ஒன்று கூடுதற்கு இரண்டன் முயற்சி யும் தேவைப்படும். இஃது ஆருயிர் ஆண்ட வனை அடைவதற்கு இறையருள் முன் னின்றுதவவேண்டும் என்பதனை உணர்த் தும் குறியாகும். ஆலமர் செல்வன் காட்டி நிற்கும் சின் முத்திரையினைச் சைவ சித் தாந்த நெறி வழியே ஆருயிர் ஆண்டவனை அடையும் பாங்கினை உணர்த்தும் குறி யீடாகச் (Symbol) கொள்ளவேண்டும்.

இந்தக் குறியீட்டினை உளங்கொண்டு இத்திருமந்திரப்பாடலை நோக்கினால் இது சொல் வழியாகச் சைவ சித்தாந்தக் கோட் பாட்டினைச் சுருங்க உரைத்த அருமந்திரம் என்பது விளங்கும். மூப்பொருள் (பதி+பசு+பாசம்) இருபொருளாகி (பதி+ பசு=பாசம்) இறுதியில் ஒரு பொருளாய் (பதி+பசு=சிவசாயுச்சியம்) முடியுமாறு காட்டுவதே சைவசித்தாந்தப் பெருநெறி யாகும். இச்சைவ முப்பொருட் கருத்தினை இச்குறியீட்டுச் சொற்களைத் தவிர்த்து வேறுவாய்பாட்டால் சேக்கிழார்சுவாமிகள்

செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்

என்று இலக்கியப்படுத்திக்காட்டியுள்ளார். இவ்வமைப்புப் பிற சமயங்கட்கில்லாமல் சைவ நெறிக்கே சிறப்பாக உள்ளது என் பதனை, 'இவ்வியல்பு சைவ நெறி அல்ல வற்றுக்கில்லை'' என்றும் கூறியுள்ளார். இதன்கட் செய்வினை பாசத்தையும், செய் வான் பசுவையும், பயன் கொடுப்பான் பதியையும் சுட்டுவனவாகும்.

## நால்நெறிச் சிறப்பு

மாந்தர் அனைவரும் ஒரேவித மன வுணர்வுடையராகார்; உடல்நிலையாலும் வேறுபட்டவராவர். இந்நிலையில் மக்கள் அனைவர்க்கும் வீடு பேறளிக்க அவாவும் சமயம் ஒரே நெறியினை—மார்க்கத்தினைக் காட்டுவதாக இருப்பின், அது அனைவர்க் கும் பொருந்தும் வழியாக அமையாமலும் போதல் கூடும். சைவ சித்தாந்தம் மக்கள் முத்தியெய்த முயல நான்கு நெறிகளை அமைத்துள்ளது. சரியை கிரியை யோகம் ஞானம் என்பன அந்நானெறிகளாகும். இந்நூல் நெறிகளில் முறைகளைக் கூர்ந்து நோக்கினால் இவை உடல் உள்ளம் ஆகிய இரண்டன் ஈடுபாட்டான் அமையுமாறு விளங்கும். மனிதன் உடலியற் கூறும் மன வியற் கூறும் ஒருங்கே அமைந்த கூட்டா கலின், அவனுக்கு உய்தி அளிக்க முற்படும் எந்த நெறியும் அவ்விரு கூறுகளையும் (Physiological and Psychological elements) தழுவியனவாகவே அமைதல்

வேண்டும். அவ்வகையில் உடலியற் கூறுமிக்கமையும் சரியை, வளர்ச்சியுற்ற உளவியற் கூறுமிக்கமையும் ஞானம் வரை செல்லும் நால் நெறியாக அவை அமைந்துள்ளன. சரியையிற் சரியை, சரியையிற் கிரியை முதலான பாகுபாடுகளால் நால் நெறியும் உடல் உளவியல் கூறுகளின் நுட்பமான செயற்பாடுகள் அமைந்த பல்வேறு வழிகளாக அமைந்து, பல்வேறு மனப் பாங்கும் உடற்கூறும் அமைந்த மக்கள் பலரும் தங்கட்குகந்த நெறி பேணிப்பயன் கொள்ள வாய்ப்பாகின்றன.

ஏணிப்படி போல (சோபானம்) அமைந்த இந்நெறிகள் மாந்தர்க்குத் தனித்த நிலையிலும், வளர்ந்து முழுமையுற்ற மேனிலையிலும் ஆன்மப்பயனளிக்க வல்லனவாகும். சரியையில் மட்டுமே நின்றும் பயனடையலாகும். அன்றிப் படிப்படியாக வளர்ந்து ஞானத்தாலும் பயனடைதல் கூடும். இத்தகு படிப்பயன் நல்கும் பாங்கறிந்து இந்த நால்நெறிச் சிறப்புரைக்க வந்த தாயுமானவர் இவற்றை அரும்பு, மலர், காய்கனிகட்கு உவமைப்படுத்திக் காட்டியுள்ளார்.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ
பராபரமே[26]

அரும்பு முதலிய ஒவ்வொன்றும் தனித் தனியே பயன்விளைக்கும் நெறியாகும். அரும்பு மலர் ஒருபகுதியாகவும், காய்கனி ஒரு பகுதியாகவும் கருதக்கிடப்பது போலச் சரியையும் கிரியையும் ஒரு பகுதியனவாய் உடற்கூறு மிக்கனவாகவும், யோகமும் ஞானமும் மற்றொரு பகுதியனவாய் உளக் கூறு மிக்கனவாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு எந்நிலை மக்கட்கும் செந்நிலை நெறி காட்டி அவர்கள் உய்தி பெறுவதற்கு வழி வகுப்பது சைவ சித்தாந்தமாகும்.

கட்டிடக்கலை நுட்பங்கள் (Architectonics) அனைத்தும் அமைந்து கவினுறத் திகழ்ந்து பயன்மிக நல்கும் அரியதோர் அரண்மனைபோலத் தன் தத்துவ நுட்பத்தாலும், செயற்பாட்டு நெறியாலும் சிறந்து விளங்கும் ஒரு சமயமாகச் சைவ சித்தாந்தம் விளங்குகின்றது. கிறித்துவ சமய ஞானியராய் அச்சமய ஊழியம் புரிவதனைத் தம் வாழ்க்கைத் தொண்டாய்க் கொண்டொழுகிய மறைத்திரு போப்பையர், கௌடை (Rev. Cowdie) போன்ற மேனாட்டுச் சான்றோர்கள் சைவ சித்தாந்த நெறியினைச் சிறப்பித்துப் பாராட்டியதற்குத் தத்துவ நிலையில் அந்நெறியமைப்பின் சீர்மையே சிறந்த காரணமாகும்.

---

26. தாயுமானவர், பராபரக்கண்ணி, 157.

# திவ்வியப் பிரபந்த உரைகளின் தனித்தன்மைகள்

டாக்டர் தெ. ஞானசுந்தரம்,
எம்.ஏ., பிஎச்.டி.

இவர் தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரை அடுத்த குழையூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர். குடந்தை அரசினர் கல்லூரியில் இளங்கலையும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முதுகலையும் பயின்றவர். 1982 ஆம் ஆண்டுவரை சென்னைக் கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்தவர். இதுபோது தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அரிய கையெழுத்துச் சுவடித் துறையில் அயற்பணி அடிப்படையில் இணைப் பேராசிரியராகப் பணி புரிகிறவர். இவரது 'வைணவ உரை வளம்' என்னும் ஆய்வேட்டிற்குச் சென்னைப் பல்கலைக் கழகம் முனைவர் பட்டம் வழங்கியது. பேச்சும் எழுத்தும் இவருக்குப் பிடித்தமான பணிகள். இப்பொழுது திருமங்கை மன்னன் பெரியதிருமொழிக்குப் பெரியவாச்சான் பிள்ளை அருளிய மணிப்பிரவாள உரையினைத் தமிழாக்கம் செய்யும் பணியினை மேற்கொண்டுள்ளார்.

## வைணவர் தந்த செல்வம்

இராமானுசரால் சிலரது தனி வுடைமையாக இருந்த திவ்வியப் பிரபந்தங்கள் பொதுவுடைமை ஆயின. அவருக்கு முன்னே திவ்வியப் பிரபந்த விளக்கங்கள் மறையவர் குலத்தில் பிறந்த சிலருக்கே ஆசிரியன்மாரால் சொல்லப்பட்டு வந்தன. இந்நிலையினை மாற்றிய பெருமை இராமானுசரையே சாரும். அவர் திருவாய் மொழியின் பொருளை எல்லோருக்கும் விளக்கவேண்டும் என்று பணித்தார் அதன் விளைவாக முதலில் திருவாய்மொழிக்கும் பின்னர் மற்ற நூல்களுக்கும் ஒன்றன் பின் ஒன்றாக உரைகள் எழுத்து வடிவில் மலர்ந்தன.

இராமானுசரின் ஏற்பு மகனாகவும் மாணாக்கராகவும் திகழ்ந்த திருக்குருகைப் பிரான்பிள்ளான் வரைந்த ஆறாயிரப்படியே வைணவம் கண்ட முதல் உரையாகும். அதன் பின்னர் நஞ்சீயரும், பெரியவாச்சான் பிள்ளையும், நம்பிள்ளையும், வாதிகேசரி அழகிய மணவாளசீயரும் முறையே ஒன்பதினாயிரப்படி, இருபத்து நாலாயிரப் படி, மூப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு, பன்னீராயிரப்படி ஆகிய உரைகளைத் திருவாய்மொழிக்குத் தந்தனர். ஏனைய நூல்கள் அனைத்திற்கும் பெரியவாச்சான் பிள்ளை உரை கண்டார். அவற்றுள் பெரியாழ்வார் திருமொழிக்கு அவர் தீட்டிய உரையில் முதல் நானூறு பாக்களுக்கு உரிய பகுதி கிடைக்காமல் மறைந்து போயிற்று.

அப் பகுதிக்குத் திருவாய்மொழிப் பிள்ளையும் மணவாளமாமுனிகளும் உரை எழுதினர். இவை தவிரத் திருப்பள்ளி யெழுச்சிக்கும் திருவிருத்தத்துக்கும் நம் பிள்ளை உரையும், திருப்பாவைக்கும் அமலனாதிபிரானுக்கும் அழகிய மணவாள பெருமாள் நாயனார் உரையும், கண்ணி நுண் சிறுத்தாம்புக்கு நஞ்சீயர், நம்பிள்ளை ஆகியோர் உரைகளும், 'மைவண்ண நறுங் குஞ்சி' என்னும் திருநெடுந்தாண்டகப் பாட்டிற்குப் பட்டர் உரைத்த விரிந்த உரையும் கிடைத்துள்ளன. இவையே திவ்வியப் பிரபந்தங்களுக்கு அமைந்த பழமையான உரைகள் ஆகும்.

## கூட்டுப் பயிர்

உரை உலகத்தில் ஒப்பற்று விளங்குவன வைணவ உரைகள் என்பது அறிஞர் துணிபு. இதற்குக் காரணம் அவ் உரைகள் தனி மனிதர்களின் படைப்புகள் அல்ல; இலக்கிய நெஞ்சமும் சமயப் பிடிப்பும் கொண்ட வைணவ அறிஞர்கள் பலர் சேர்ந்து வளர்த்த கூட்டுப் பயிர்கள். ஆசிரியன்மார் திருமாளிகைகளில் (இல்லங்களில்) மறை வாகச் சிலருக்கே சொல்லப்பட்டு வந்த விளக்கங்கள் இறைவன் திருமுற்றங்களில் இராமானுசர் காலம் முதல் நிகழலாயின. இத் திருமுற்றப் பள்ளிகளில் மறையவர் களுக்கு மட்டுமேயன்றி மற்றைக் குலத் தார்க்கும் பெண்ணுக்கும் பேதைக்கும் இடம் கிடைத்தன. பாசுரங்கள் விளக்கப் படும்போது கேட்டிருந்தார் தம் உள்ளத்தில் பளிச்சிட்ட கருத்துகளையும் எடுத்துச் சொன்னார்கள்.[1] அவ்வாறு சொல்லப்பட்ட அழகிய விளக்கங்களை முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொள்ளும் பாங்கு ஆசிரியர்களாக விளங்கிய சமயத் தலைவர்களிடம் நிறைந் திருந்தது.

இராமானுசருக்கு முன் இருந்த சமயத் தலைவரான ஆளவந்தார் திருமாலையாண் டானுக்குச் சொல்லிவைத்த உரைநயங் களும், இராமானுசர், எம்பார், கூரத்தாழ் வான், அமுதனார், திருநறையூர் அரையர் முதலானோர் கொண்ட உரைகளும் சொன்ன கருத்துகளும் ஈட்டுரையிலும் பெரியவாச்சான்பிள்ளை உரையிலும் பொதிந்து கிடக்கின்றன. ஓர் உரையில் ஒருவர் தந்தவிளக்கமாகச் சொல்லப்படுவது பிறிதோர் உரையில் பெயரின்றி இடம் பெற்றிருத்தலைக் காணலாம். இவற்றால் இவ் உரைகளை அக் கால அறிஞர்களின் கூட்டுச் சிந்தனையின் விளைச்சல் என்பது பொருந்தும்.

## புதிய சங்கமம்

இவ் உரைகளில் வடமொழி வேதக் கருத்துகளும் தமிழ் மண்ணில் உலாவிய ஆழ்வார்களின் தூய சிந்தனைகளும் ஒன்றாகக் கலந்தன. இது புனித சங்கமம். மட்டும் அன்று; புதிய சங்கமும் கூட! வைணவப் பெருமக்கள் ஆழ்வார்களின் கருத்துகளோடு வடமொழி மறைக் கருத்து களை இணைத்து எழுதுவதனை ஒரு கொள்கையாகக் கடைப்பிடித்தனர். இதற்கு ஓர் அடிப்படைக் காரணம் உண்டு.

வைணவ சமயக் கோட்பாடுகள் செம் மையாக உருப்பெற்று வேருன்றத் தொடங்கிய காலம் இவ் உரைகள் தோன்றிய காலம். பல கிளைகளாகப் பிரிந்து கிடக்கும் வேதங்களின் பொருள் களை விளக்குவதில் சிக்கல்களைச் சந்தித்த காலப் பகுதி அது. வேதத்தில், ''பரம் பொருள் ஒன்றே உள்ளது'' என்னும் அத் வைதக் கொள்கையினை வற்புறுத்தும் தொடர்களும், ''பரம்பொருள் வேறு; உயிர்வேறு'' என்னும் துவைதக் கொள்கை யினை வற்புறுத்தும் தொடர்களும், இவ் இரு தொடர்களையும் இணைத்து இசை விக்கும் தொடர்களும் காணப்படுகின்றன. இவற்றை முறையே அபேத, பேத, கடக சுருதிகள் என்பர். இப்படி வேறு பிரித்துச் சொல்லும் தொடர்களையும் ஒன்று படுத்திச் சொல்லும் தொடர்களையும், இணைத்து இசைவிக்கும் தொடர்களைக்

---

1. திருவாய்மொழி 6:4:5 இன் ஈட்டுரையிலும் மூன்றாம் திருவந்தாதி 91ஆம் பாட்டின் உரையிலும் உறங்கா வில்லிதாசர் சொன்னவையும், பெரிய திருமொழி 10:2:1இன் உரையில் நம்பிள்ளை நஞ்சீயருக்குச் சொன்ன திருத்தத்தையும் காண்க.

கொண்டு ஒற்றுமைப்படுத்திக் காட்டுவதே விசிட்டாத்வைதம். இவ்வாறு ஒற்றுமைப் படுத்திக் காட்டும் பணியில் ஆசிரியன்மார் களுக்கு ஆழ்வார்களின் பாசுரங்கள் துணை புரிந்தன. ஆழ்வார்களின் பாசுர விளக் கொளியில் வேதங்களை உற்றுநோக்கிய போது அவர்களுக்குப் பல தெளிவுகள் உண் டாயின. ''பரம்பொருள் வேறு; உயிர்களும் உலகங்களும் வேறு வேறு. ஆனால் பரம் பொருளுக்கு அவை உடலாக அமைகின்றன. எனவே பரம்பொருள் அவற்றோடு கூடிய நிலையில் ஒன்றாக இருக்கின்றான். இறை வனும், உயிரும், உலகமும் உள்ள பொருள் கள்'' என்னும் விசிட்டாத்வைதக் கோட் பாட்டினை ஆழ்வார்களின் பாசுரங்கள் நன்கு விளக்கின. இவற்றின்துணைகொண்டு வேதப் பகுதிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நிலை உண்டாயிற்று. ''செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளி யாத மறை நிலங்கள் தெளிகின்றோமே'' என்னும் வேதாந்த தேசிகரின் பாசுரமே இதற்குத் தக்க சான்று. எனவே உண்மைப் பொருளை அறுதியிடுவதற்கு வடமொழி வேதங்களைப் போல ஆழ்வார்களின் பாசு ரங்களும் மேற்கோள்கள் (பிரமாணங்கள்) என்று கருதினர். இதனை வற்புறுத்தும் வகையில், வேதம் வேறு, ஆழ்வார்கள் பாசுரங்கள் வேறு அல்ல; வேதமே ஆழ் வார்களின் பாடல்களாகப் புதிய பிறப் பெடுத்தன என்று எழுதினர். இக் கருத்தி னாலேயே இவற்றைத் தமிழ் வேதம் என்று கூறி வடமொழி வேதங்களோடு ஒப்ப வைத்து 'உபய வேதாந்தம்' என்று போற் றினர். தங்கள் விளக்கங்களில் வடமொழி மறை முடிபுகளும் ஆழ்வார்கள் சிந்தனை களும் பல இடங்களில் கைகோத்துச் செல் வதனை எடுத்துக் காட்டினர். இதனால் இவ் உரைகள் வடமொழி மேற்கோள்கள் மிகுந்தனவாய், இருபெருஞ் சிந்தனையோட் டங்களின் சங்கமமாய்த் திகழ்கின்றன.

நம்மாழ்வார்,

தகுங் கோலத் தாமரைக் கண்ணன் எம்மான்
மிகுஞ் சோதி மேலறிவார் எவரே

என்று இறைவனை 'மிகும் சோதி'யாகப் போற்றுகிறார். உபநிடதங்களும் நாரா யணனை மேலான ஒளிவடிவினனாகவே சொல்லுகின்றன என்பதனை,

''பரஞ் ஜ்யோதி ருபஸம்பத்ய'' (பரஞ் சோதி என்னும் சொல்லுக்குப் பொருளான பரம் பொருளினை அடைந்து)

''நாராயண பரோ ஜ்யோதி'' (பரம் பொருளும் நாராயணனே, பரஞ்சோதியும் நாராயணனே) என்று, நாராயணானு வாகம் முதலியவற்றில் வரும் தொடர் களைக் காட்டி விளக்குவர்.[2]

கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்
ணோர்க்குத்
தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே

என்னும் திருவாய்மொழி இறைவனை மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் கண்ணாகச் சொல்கிறது. இதே கருத்து யசுர் வேதத்திலும்,

''சக்ஷுர்த் தேவாநாமுத மர்த்யநாம்'' (விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் கண்) என்று வருதலைக் காட்டுவர்.[3]

''பிறப்பில் பல்பிறவிப் பெருமான்'' என்னும் திருவாய்மொழிப் பகுதியினை விளக்குமிடத்தில் இதனையே ''வினையடி யாகப் பிறவாத பெருமான் விழைவடியாகப் பல வகையாகப் பிறக்கிறான்; அதனைப் பெரியோர்கள் அறிவார்கள்.'' (அஜாய மாநோ பஹுதா விஜாயதே தஸ்ய தீரா: பரிஜா நந்தி யோநிம்) என்று வேதம் புகல் கிறது என்று ஒப்பிட்டுக் காட்டுவர்.[4]

இவ்வாறு அங்கங்கே வேதக் கருத்துகள் விரவி வருதல் காணலாம்.

## இதிகாச விருந்து

வேதம், இதிகாசங்கள், புராணங்கள், திருவாய்மொழி ஆகியன ஒரு கருத்தினை வெவ்வேறு வகையில் விளக்குவன என்பது இவர்தம் கருத்து இதனை, இவற்றை

2. திருவாய்மொழி, 2:2:5-36.
3. திருவாய்மொழி, 1:8:3-36.
4. திருவாய்மொழி, 2:9:5-36.

இறைவனுடைய வெவ்வேறு வடிவங்களோடு ''பரத்வம் போலே வேதம், அவதாரம் போலே இதிகாசங்கள், அர்ச்சாவதாரம் போலே திருவாய்மொழி'' என்று ஈடு ஒப்பிட்டுச் சொல்வதால் அறியலாம்.[5] இவ் இதிகாசங்களிலும் இராமாயணத்திலும் இவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. பெரியவாச்சான் பிள்ளை தமது உரையில் ''ஸ்ரீராமாயணம் அவிழ்த்துக் கட்டாத இடம் நாடல்ல, கொடுவினைத் தூறு'' என்கிறார்.[6] எனவே இவர்கள் பாசுரப் பலாச்சுளைகளை இராமாயணத் தேனிலும் பாரத நெய்யிலும் தோய்த்துப் பரிமாறினர்.

நம்மாழ்வார் இறைவனை நோக்கி ''உன் பொன்னடிச் சேர்த்து ஒல்லை'' என்று வேண்டுகிறார். இதில் 'பொன்னடி' என்பதற்குக் ''கல்லுக்கும் சைதந்யம் (உயிர்) கொடுக்க வல்ல அடியன்றோ'' என்று அகலிகை வரலாற்றினை இணைத்து உரை வரைகிறது ஈடு.[7]

கள்வன்கொல் யானறியேன் கரியானொரு
காளை வந்து
வள்ளி மருங்குல் என்றன் மடமானினைப்
போத வென்று

என்னும் பாசுரத்தில் ''வள்ளி மருங்குல் என்றன் மடமானினை'' என்பதற்கு, ''அவனைக் கொடு வந்த விச்வாமித்ரனைச் சொல்லுகிறது. இவளுடைய அழகாயிற்று அவனை அழைப்பித்தது'' என்று பெரிய திருமொழியில் உரை எழுதப்பட்டுள்ளது.[8] இதில் இராமபிரானை விசுவாமித்திரன் மிதிலைக்கு அழைத்துச் சென்ற செய்தி நயமாகப் பின்னப்பட்டுள்ளது.

தலைமகள் வண்டினை நோக்கி, ''என் நிலைமை உரையாயே'' என்று வேண்டுகிறாள். இதில் 'உரையாயே' என்பதன் உரையில், ''ஒரு கந்தர்வன் துர்யோதநனைக் கட்டிக் கொண்டு போகா நிற்கச் செய்தே தர்மபுத்ரன் பேரைச் சொல்லிக் கூப்பிட, அவனைப் பின்னே ஆந்ருசம்ஸ்யத்தாலே (இரக்கத்தாலே) மீட்டான் என்னா நின்றது; அங்ஙனன்றிற்கே தன்னை ஆசைப்பட்டுப் பிரிந்திருந்து நோவு படுகிறபடியைக் கேட்டால் உதவாத ஸ்வபாவனோ என்கிறாள்'' என்று பாரத நிகழ்ச்சி எடுத்துக்காட்டப்படுகிறது.[9]

மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க் கெல்லாம்
பொய்யனாகும் புறமே தொழுவார்க் கெல்லாம்

என்பது திருவாய்மொழி.

இதற்குச் சொற் பொருள் வரைவதனோடு ''க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: என்று இருப்பார்க்கு மெய்யனாய் இருக்கும் படைத் துணை வேண்டி வந்த துர்யோதநனுக்கு நாராயண கோபாலர்களை அடையக் கொடுத்தானாய், தான் பாண்டவர்களுக்காக நின்று அத்தலையை அழியச் செய்கையாலே பொய்யன் ஆகும்'' என்று பாரத மேற்கோள் விரவி எழுதுவர் ஈட்டுரைகாரர்.[10]

''நாளும் நாளும் நாடுவன் அடியேன் ஞாலத்தே'' என்னும் பாடலில் 'ஞாலத்தே' என்பதற்கு, ''பரமபதத்திலே (வைகுந்தத்திலே) இருந்து அஸ்த்தாநே பயசங்கை (அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுதல்) பண்ணுகிறேனோ? ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம் பண்ணுவார், நாக பாசத்தையிட்டுக் கட்டுவார், அழைத்து வைத்து மல்லரையிட்டு வஞ்சிக்கத் தேடுவார், பொய் யாசநம் இடுவார் ஆகிற தேசத்திலே வர்த்தியா நின்றால் (வாழா நின்றால்) நான் அஞ்சாதே செய்வது என்?'' என்று உரை தீட்டப்பட்டுள்ளது.[11] இதில் முன்னிரு செயல்களும் இராமாயணத்திலும் பின்னிரு செயல்களும் பாரதத்திலும் வருவன என்பது வெளிப்படை.

இவையேயன்றிச் சில இராமாயண பாரதச் செய்யுள்களை மேற்கோள் காட்டி

5. திருவாய்மொழி, 5:7:11-36.
6. திருவாய்மொழி, 7:5:2-24.
7. திருவாய்மொழி, 2:9:10-36.
8. பெரிய திருமொழி, 3:7:1 உரை.
9. பெரிய திருமொழி, 3:6:1 உரை.
10. திருவாய்மொழி, 9:10:8-36.
11. திருவாய்மொழி, 8:3:3-36.

விளக்கிச் செல்வது ஈட்டிலும் பெரியவாச் சான் பிள்ளையின் திருவாய் மொழிஉரை தவிர்ந்த ஏனைய உரைகளிலும் காணலாம்.

## மாணிக்கப் பேழை

இவ் உரைகாரர்கள் தங்கள் அருளாசிரியன்மாரிடத்து எல்லையற்ற மதிப்பும் ஈடுபாடும் உடையவர்கள். அவர்களைப் பற்றிய அரிய குறிப்புகள் நிறைந்த மாணிக்கப் பேழையாகத் தங்கள் உரைகளை அமைத்துள்ளனர். நாதமுனிகள், மணக்கால் நம்பி, ஆளவந்தார், எம்பெருமானார், எம்பார், கூரத்தாழ்வான், பட்டர், பிள்ளை திருநறையூர் அரையர், சிறியாத்தான் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உரைகளில் காணப்படுகின்றன.

நாதமுனிகள், ஒரு நாள் அரசன் ஒருவன் சாமந்தன் (படைத்தலைவன்) தலையிலே அடியையிட்டு யானைக் கழுத்தில் புக்கபடியைக் கண்டு, தேவாதி தேவனாகிய திருமால், பிரமன் முதலானோர் தலையிலே இப்படியல்லவா அடியிட்டுப் பெரிய திருவடியின் மேலே ஏறியருளுகிறான் என்று எண்ணிச் சிந்தை மயங்கினார் என்கிறது ஈடு.[12] இதனால் அவரது உணர்வு மயமான வாழ்க்கையை உணர முடிகிறது. அரண்மனையில் வாழ்ந்த ஆளவந்தாரை மணக்கால் நம்பி எளிதில் சந்திக்க முடியவில்லை என்றும் ஒவ்வொரு நாளும் அரண்மனைக்குத் தூதுவளைக் கீரையைக் கொடுத்து வந்து இடையில் நிறுத்திப் பின்னர்க் கொடுத்து அதன் வழியாக ஆளவந்தாரைச் சந்தித்து அவருக்கு மெய்ப்பொருள் விளக்கம் செய்தார் என்றும் குரு பரம்பரைகள் கூறும். இதனை உறுதிப்படுத்தும் வகையில், ''ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பியையும் போலே'' எனவும், ''இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடு ஒப்பர்'' எனவும் வரும் உரைக் குறிப்புகள் அமைந்துள்ளன.[13] இராமானுசர் நெடிதுநாள் வாழ்ந்தவர் என்பதனை, ''எம்பெருமானாரைப் போலவே நூறாண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே யிருந்து'' என்னும் உரைத் தொடர் காட்டுகிறது.[14] 'சிறுவண்டே' என்னும் சொற்றொடருக்கு, ''கார்ய வாய்ப்புப் பெருந்து எம்பார் திருமேனி போலே வடிவு சிறுத்திரா நின்றன வாயிற்று'' என்று எழுதப்பட்டுள்ள உரையால் எம்பார் சிறிய வடிவினர் என்பது விளங்குகிறது.[15] மேலும் கூரத்தாழ்வான் பெருங் கல்வி வாய்ந்தவர் என்பதும்,[16] பட்டர் 'அழகிய மணவாளப் பெருமாள்' என்னும் திருப்பெயரை இனிது நவில்வார் என்பதும்,[17] பிள்ளை திருநறையூர் அரையர் மேன்மைக் குணமுடையார் என்பதும்,[18] சிறியாத்தான் இரக்கம் மிக்கவர் என்பதும்[19] உரைக் குறிப்புகளால் விளங்குகின்றன.

## கற்பனைக் காட்சிகள்

கவியரசர்தம் பாக்கள் படிப்பவர் நெஞ்சிலும் அவர் பெற்ற அனுபவத்தினைத் தோற்றுவிக்க வல்லன. உயர்ந்த கவிஞர்களின் சொற்களுக்கு அத்தகைய ஆற்றல் இருந்தாலும் கவிதை நெஞ்சங்களால் மட்டுமே அச்சொற்களின் வாயிலாகக் கவிஞர்கள் பெற்ற அனுபவங்களையும் கண்ட காட்சிகளையும் உணரவும் காணவும் இயலும். அத்தகைய கவிதை நெஞ்சம் இயல்பாகவே வாய்க்கப் பெற்றவர்கள் இவ் உரைகாரர்கள்.

இவர்கள் சொற்களில் படிந்து ஆழ்ந்து ஒன்றி நிற்கும் தவத்தால் கண்டறியாதன காணும் பேறு பெற்றனர்.

கண்ணபிரான் வெண்ணெய் திருடி உண்ட செய்தியினை,

> தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி
> ஆராத வெண்ணெய் விழுங்கி—அருகிருந்த
> மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே
> ஓராதவன்போல் கிடந்தானை

என்று பாடுகிறது சிறிய திருமடல்.

---

12. திருவாய்மொழி, 4:4:8-36.
13. திருவாய்மொழி, 6:8:1-36; 9:3:5-36.
14. 5:1:11-63.
15. பெரிய திருமொழி, 3:6:2 உரை.
16. திருமாலை, 6 உரை.
17. திருவாய்மொழி, 6:5:7-36.
18. திருமாலை, 8 உரை.
19. பாவை, 1, மூவாயிரப்படி உரை.

கண்ணன் வெண்ணெய் களவு கண்டு மோர்க்குடத்தை உருட்டிவிட்டான். யாரேனும் காணப்போகிறார்கள் என்று பதறி விழுந்தான். விழுந்த இடம் முன்பு படுத்த படுக்கையாயிற்று. களவு கண்டான் என்று சொல்லினும் ''படுக்கையோடேயே எழுந்திருந்து களவு கண்டது'' என்னும்படி கால்போட்ட இடத்தே கால்போட்டுக் கை போட்ட இடத்தே கைபோட்டுக் கிடந்தான் அப்போது தான் உருட்டிய மோர் படுக்கை யிலே வந்து பாய்ந்து நனைக்கச் செய்தேயும் அறியாதவனாய்க் கிடக்கிறான். இப்படி அப்பகுதிக்கு ஓவியக் காட்சிபோல அழகிய உரைவகுத்துள்ளார் பெரியவாச்சான் பிள்ளை. இதில் மோர் வந்து பாயை நனைப் பதாகப் பாட்டில் நேரடியாகச் சொல்லப் படவில்லை. ஆனால் அவர் 'மோரார் குட முருட்டி', 'ஓராதவன் போல் கிடந்தான்' ஆகிய சொற்றொடர்களின் துணையால் மோர் வந்து அவன் படுக்கையை நனைக்கும் காட்சியினைக் கற்பனையில் கண்டு உரைக்கிறார்.

''பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப'' என்று வயல் வளம் பாடுகிறாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி.[20] இவ்அழகிய தொடர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உள்ளத்தில் ஆண்வண்டும் பெண் வண்டும் உறங்கி உணர்ந்தெழும் காட்சி யினைக் கொண்டுவந்து நிறுத்துகிறது. மது அருந்தியதாலும், புல்லிக்கிடந்த கலவி யாலும் பிறந்த புகர் முற்றும் வடிவிலே புலப்படுமாறு இருக்கும் வண்டுகள் மிக்க ஆர்வத்தோடு புக்கு மலரின் ஊற்றின்பத் தாலே நஞ்சு உண்டாரைப்போலே கிடந்து உறங்குகின்றன. பின்பு உணர்ந்து எழுந்த போது, ''என்னை நீ எழுப்பிற்றிலை, என்னை நீ எழுப்பிற்றிலை'' என்று ஒன்றுக் கொன்று 'சிறுபாறு' என்னா நிற்கின்றன என்று அதனை அவர் சொல்லோவிய மாக்கிச் செல்கிறார். இதில் வண்டுகள் படுக்கை வாய்ப்பாலே நெடிது உறங்கிப் பின்னர் விழித்து ஒன்றோடொன்று பிணங்கும் காட்சியினைக் 'கண்படுப்ப' என்னும் சொல்வழிக் கண்டுரைக்கிறார்.

இத்தகைய இடங்களில் விளக்கங்கள் நூலற்ற காற்றாடிபோல் மூலத்தினின்றும் விலகி எங்கோ பறப்பதுபோலத் தோன்றும். ஆனால் உண்மையில், தாயின்மடியிலிருந்து மெல்லக் கீழே இறங்கிக் குழந்தை தெருவில் புழுதியில் விளையாடியபோதிலும் அவள் பார்வை வட்டத்திலிருந்து விலகாமல் இருப்பதுபோலவே இவ்உரைகளும் மூலத் தின் பொருள் வளாகத்துக்குள்ளேயே அமைகின்றன.

## உவமைக் களஞ்சியம்

தம் கருத்தை விளக்குவதற்கு உரை காரர்கள் எல்லாரும் உவமைகளைக் கையா ளுவது பொதுவான இயல்பு. இவ் உரை யாசிரியர்கள் விளக்கத்திற்காக மட்டுமன்றி அழகுக்காகவும், சுவைக்காகவும் கூட உவ மைகளை இடையிடையே காட்டிச்செல்வர். பெருமிதமான அரசவாழ்க்கை முதல் துள் ளித் திரியும் கன்றுக்குட்டியின் வாழ்க்கை ஈறாகப் பல்வேறு துறைகளினின்றும் உவமைகளைத் தெரிந்தெடுத்துள்ளனர்.

''ராஜாக்கள் கறுப்புடுத்து (மாறுவேட மிட்டு) புறப்பட்டால் அந்தரங்கர் (மெய்க் காப்பாளர்) அபேக்ஷித்த தசையில் (வேண்டும் பொழுது) முகங்காட்டுகைக்காக பிரியத் திரிவர். அதுபோல,''[21]

''ராஜகுமாரன் புழுகு நெய்யிலே பூவைத் தோய்த்துச் சூடுமாபோல''[22]

''கூறு செய்த ஊரிலே கையும் கைத் தளையுமாய்த் திரிவாரைப்போல''[23]

''வெள்ளத்தைக் கள்ளமடையாலே பள்ளத்தே விடுமாபோலே''[24]

''கர்ஷகனானவன் (உழவன்) பயிர்த் தலையிலே குடில்கட்டி நோக்குமா போலே''[25]

---

20. திருப்பாவை, 3.
21. திருவாய்மொழி, 1:8:9-36.
22. திருவிருத்தம், 40 உரை.
23. பெரிய திருமொழி, 1:5:8 உரை.
24. அமலனாதிபிரான், 1 பெரி. உரை.
25. பெரிய திருமொழி, 1:2:1 உரை.

''கிண்ணகத்தில் (வெள்ளத்தில்) இழிவார் கைகோத்துக்கொண்டிழிய ஆள்திரள் பார்த்திருப்பாரைப் போலே''[26]

''கூமாம காலத்தில் (பஞ்ச காலத்தில்) ப்ரஜைகள் (பிள்ளைகள்) 'சோறு சோறு' என்னுமாபோலே''[27]

''வழிபறிக்கும் இடத்தே தப்பிப்போன வன் கிழிச்சீரையை (பணமுடிப்பை) அவிழ்த்துப் பார்த்து இதுதப்பப் பெற்றோமே என்று உகப்பாரைப் போலே''[28]

''மாதாப்ரஜைகளுக்கு முலை கொடுத்து அவற்றின் முகமலர்த்தி காண்கைக்குப் பாங்காகச் சாயுமா போலே''[29]

''புதிதாக வைதவ்யம் (கைம்மை) வந்தவர்கள் ஆள்கிளம்புவதற்கு முன்னே மனிதர் முகத்திலே விழியாமே போமா போலே''[30]

''பால் குடிக்க நாய் தீருமா போலே''[31]

''குழக்கன்று செருக்காலே துள்ளுமா போலே''[32]

இவை போன்ற நூற்றுக்கணக்கான உவமைகளைக் கையாண்டுள்ளனர். இவை அவர்தம் பரந்த அறிவைக் காட்டுவதோடு அக்காலச் சமுதாய நிலையினைக் காட்டும் பலகணிகளாகவும் திகழ்கின்றன.

## இலக்கியத் தேன் துளிகள்

சொல்வதனை அழகுறச் சொல்வது ஒரு தனித் திறன். வைணவ உரையாசிரியர்கள் சொல்லின்பத்தில் தோய்பவர்கள். அங்கங்கே இருபொருள் தரும் சொற்களைக் கையாண்டு தொடர்களைத் தொடுத்துச் செல்வர். இவ் இரட்டுற மொழிதல் என்னும் உத்தியில் அமைந்த தொடர்களை இலக்கிய இன்பம் நல்கும் தேன் துளிகள் எனலாம்.

பெருமான் மீது காதல் கொண்ட தலைமகள் உடம்பில் பசலை படர்ந்தது; கண்களில் நீர் நிறைந்தது. 'கேழ் அல் ஒண் கண்ண நீர் கொண்டாள்' என்கிறாள் திருத்தாயார். இதனை விளக்குமிடத்துத் தலைமகளின் தாய், ''தாமரையிலே முத்துப் பட்டாற் போலே இக் கண்ணும் கண்ண நீருமாய் இருக்கிற இருப்பைக் காட்டில் எறித்த நிலவாக்குவதே! இவ் இருப்புக்கு க்ருஷி பண்ணி (முயற்சி செய்து) பல வேளையிலே (பயன் பெறும் நேரத்திலே) இழப்பதே; பொன்னும் முத்தும் விளையும்படியிறே க்ருஷி பண்ணிற்று'' என்று கூறுவதாக உரை வரையப்பட்டுள்ளது.[33] இதில் பொன் என்பது பொன்னாகிய உலோகத்தையும், பசலை நிறத்தையும், முத்து என்பது முத்தாகிய மணியையும் கண்ணீரையும் குறிக்கும் வகையில் இரு பொருள்பட அமைந்திருத்தல் காணலாம்.

பெருமான் தன் கையில் சங்கம் ஏந்தி நிற்கிறான். அதற்குப் பாஞ்சசன்னியம் என்பது பெயர். ''கூனற் சங்கத் தடக்கையன்'' என்கிறார் நம்மாழ்வார். 'கூனற் சங்கம்' என்பதற்கு ''வாயது கையதாக அநுபவிக்கிறவனே'' என்று இருபொருள் அமைய உரை கூறுகிறது ஈடு.[34] இத் தொடர் முறையே வாயிலும் கையிலுமாக இருப்பவனே என்றும் வாய்ச்சுவையைத் தனதாக்கிச் சுவைப்பவனே என்றும் பொருள் தருகிறது.

இத்தகைய தொடர்களை வடமொழியில் 'ரசோக்திகள்' என்பர்.

## உணர்ச்சி வெள்ளம்

பாசுரங்களில் தலைமகள், தாயார் கூற்றாகவும், ஆழ்வாரது கூற்றாகவும் வரும் பகுதிகளுக்கு அவர்கள் உள்ளத்து உணர்ச்சியை ஒட்டி விரிவாக வரையும் உரைகள் உணர்ச்சி வெள்ளமாகத் திகழ்

---

26. பெரிய திருமொழி, 3:1:1 உரை.
27. திருவிருத்தம், 69 உரை.
28. பெரிய திருவந்தாதி, 25 உரை.
29. திருமாலை, 19 உரை.
30. திருவிருத்தம், 24 உரை.
31. பெரிய திருமொழி, 5:8:10 உரை.
32. பெரிய திருமொழி, 3:2:7 உரை.
33. திருவாய்மொழி, 2:4:10-86.
34. திருவாய்மொழி, 4:5:9-36.

கின்றன. வினாக்களின் தொகுதியாக அமைந்து கற்பார்தம் கருத்தினை ஈர்த்து நிற்கின்றன.

சான்றாக, ''கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்'' என்று தலைமகள் கூற்றாக வரும் திருநெடுந்தாண்டகத் தொடரின் உட்பொதிந்துள்ள உணர்ச்சியினைப் புலப் படுத்தும் பகுதி வருமாறு: ''பிறரால் வந்த ஆபத்திலோ ரக்ஷிக்கலாவது? உன்னால் வந்த ஆபத்தில் ரக்ஷிக்கலாகாதோ? கல்வர் ஷத்தில் (கல் மழையில்) அகப்பட்டா ரையோ ரக்ஷிக்கலாவது? .... துக்க வர்ஷத் தில் (துயர மழையில்) அகப்பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? ஒரு ஊராக அகப்பட நோவுபட்டாலோ ரக்ஷிக்க லாவது? அவ் ஊராகப்பட்ட நோவை ஒருத்தி பட்டால் ரக்ஷிக்கலாகாதோ? என்னுடைய ரக்ஷணத் துக்கும் மலையை எடுக்க ணுமோ? மலையை எடுத்த தோளைக் காட்ட அமை யாதோ?'' என வருதலைக் காணலாம்.[35]

இவ்வாறே ''ஒரு முறை ஈரடி மூவுலகு அளந்தவனே'' என்னும்[36] திருவெழுகூற்றி ருக்கைத் தொடருக்கும், ''மண் கடந்த வண்ண! நின்னை யார் மதிக்க வல்லரே''[37] என்னும் திருச்சந்த விருத்தத் தொடருக் கும் உணர்ச்சி அலையெறியும் உரைகள் தீட்டப்பட்டுள்ளன.

இவையே யன்றிப் பதசாரம் கூறல், அடைமொழிகளுக்கும் இடைச் சொற்களுக் கும் நுட்பமாக விளக்கம் தருதல் முதலான பல இயல்புகளும் இவ் உரையாசிரியர் களிடம் மேலோங்கி நிற்றலைக் காணலாம். அவை விரிப்பின் பெருகும். சுருங்கச் சொன் னால் வைணவ உரைகள் சில புதிய பெரு வழிகளை உரை கூறும் உலகில் அமைத் துள்ளன எனலாம்.

35. திருநெடுந்தாண்டகம், 13 உரை.
36. திருவெழுகூற்றிருக்கை, அடி 9 உரை.
37. திருச்சந்தவிருத்தம், 27 உரை.

# திராவிட மொழி நாடகங்கள்

டாக்டர் ஏ. என். பெருமாள்,
எம்.ஏ., பி.டி.,பிஎச்.டி.

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள உசரவிளையில் 14-4-1930 இல் பிறந்தார். பத்தாண்டுகள் உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியராகவும் பத்தாண்டுகள் கல்லூரிப் பேராசிரியராகவும் பணியாற்றி இப்பொழுது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். ''சம்பந்த முதலியார் நாடகங்கள்'' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து கேரளப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். நாடகம், நாட்டுப்புற இயல் தொடர்பாக இதுவரைப் பத்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

## திராவிட மொழிகள்

தென்னிந்திய மொழிக் குடும்பம் திராவிடம் என்று அழைக்கப்படும். கள ஆய்வு செய்துள்ள அறிஞர் அதில் இருபத்தொரு மொழிகள் இருப்பதாகக் கணக்கெடுத்துக் கூறியுள்ளனர். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, குடகு, தோடா, கோடா ஆகிய எட்டும் தென் திராவிட மொழிகள் என்றும்,கோலமி, நைகி, பார்ஜி, கட்பா (ஒல்லரி), கோண்டி, பென்கோ, மண்டா, கொண்டா, குவி, கூய் ஆகிய பத்தும் மத்திய திராவிட மொழிகள்என்றும் குரூக், முல்டோ, பிராக்வி ஆகிய மூன்றும் வட திராவிட மொழிகள் என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

இவற்றுள் தமிழ்,தெலுங்கு,கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் நன்கு வளர்ச்சியடைந்த இலக்கிய வளம் மிக்க செம்மொழிகளாக உள்ளன. தெலுங்கு பெரும்பான்மையோரால் பேசப் பெற்றும் எழுதப் பெற்றும் வருகிறது. பழமைப் பெருமையிலும் இலக்கியச் சிறப்பிலும் தமிழ் சிறப்பிடம் பெறுகிறது. கன்னடம் மக்கள் தொகையிலும் இலக்கியத் தோற்றத்திலும் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. பிந்திய தொடக்கமும் குறைந்த மக்கள் தொகையும் உடையதாக மலையாளம் காணப்படுகிறது.

திருந்தி வளர்ந்துள்ள இந்த நான்கு திராவிட மொழிகளிலும் செம்மையான

முறையில் சிறப்பாகப் படைக்கப்பெற்றுள்ள இலக்கியச் செல்வங்கள் நிரம்பக் காணப் படுகின்றன. அவற்றுள் நாடக மலர்கள் நனி சிறந்து நல்ல மணமுடன் விளங்கு கின்றன. நான்கு மொழிகளும் நாடகச் செல்வங்களினால் நன்கு புகழப்படுகின்றன. திராவிட நாகரிகம், பண்பாடு, வாழ்க்கை இயல் ஆகியவற்றின் கொள்கலமாக இம் மொழிகளின் நாடகங்கள் விளங்குகின்றன.

## திராவிட நாடகத்தின் தொன்மை நிலை

தற்காலத்தில் சிரும் சிறப்பும் பெற்று நவீனமுறையில் பலவிதமான உத்திகளுடன் நன்கு வளர்ந்து உலக அரங்கில் போட்டி யிடும் தகுதியில் உயர்ந்து வளர்ந்துள்ள திராவிட நாடகம் திடீரென்று தோன்றிய கலை அன்று. மனிதனின் கலையுணர்வில் தோற்றம் கொண்டு, கால வளர்ச்சியில் மாற்றம் பெற்று, அண்டை அயலாரின் தொடர்பின் தாக்கம் கொண்டு இன்றைய நிலையை எட்டியுள்ளது.

பன்னெடுங்காலமாகத் திராவிட நாட கம் நாட்டுப்புற மக்களின் கலையுணர்வின் உருத்தோன்றலாகவே இருந்தது. தங்களுடைய அறிவு, கலைத்தன்மை, வாய்ப்பு, வசதி ஆகியவற்றுக்கு உட்பட்டே நாட்டுப்புற மக்கள் நாடகக் கலையை உரு வாக்கி நடித்துக் களித்தனர். இசைக்கு மிகுதியான இடம் கொடுத்தனர். வேகமும் வீரமும் மிக்க ஆடல் அவர்களை மிகவும் கவர்ந்தது. உணர்ச்சிகளை ஆடலாலும் பாட லாலும் வெளிப்படுத்திக் காட்ட முயன்ற னர். நாட்டுப்புறக் கலைஞர் கையாண்ட முறைகளை மக்கள் ஒப்புக்கொண்டு நன்கு சுவைத்து மகிழ்ந்தனர். நாடகக் காட்சிகள் நடிப்பும் உரையாடலும் இன்றி ஆடலாகவும் பாடலாகவும் அமைந்தன.

தமிழ் நாட்டில் பலவிதமான நாட்டுப் புற நாடகங்கள் தோன்றின. பெரும்பாலும் அவை தெரு முனைகளிலும் பரந்த வெளி களிலும் நடத்தப் பெற்றன. இந்தத் திறந்த வெளியரங்கக் காட்சிகள் மக்களுக்கு மகிழ் வைக் கொடுத்தன. இவற்றைத் தெருக் கூத்து என்று மக்கள் அழைத்தனர். மேலும் பள்ளு, குறவஞ்சி, குளுவம், நொண்டி நாட கம் போன்றவைகளும் நடிக்கப்பெற்றன. இவை அனைத்தையும் கொண்டு தமிழில் இலக்கியங்கள் படைக்கப்பெற்றுள்ளன.

தெலுங்கு நாட்டில் பாகவதர் என்று அழைக்கப்படும் குழுவினர் ''வீதி நாடகம்'' என்ற ஒருவகைக் கூத்தை நடித்துக் காட்டி னர். இது தவிர யக்சகானம், குச்சுப்புடி போன்ற நாட்டுப்புற நாட்டிய நாடகங்கள் தெலுங்கில் பெருவழக்காக இருந்தன. கன்னட நாட்டில் யக்சகானம் நாட்டுப்புற மக்களுக்கு நல்ல நாடக விருந்தாக அமைந் தது. சரளரகௌள போன்ற பலவகையான இசையமைப்பில் பாடல்கள் புனையப் பட்டன. மலையாள நாட்டில் கதகளி, கூடியாட்டம், ஓட்டம், துள்ளல் போன்றவை நாட்டுப்புறக் கலைகளாக அமைந்து மக்களை இன்புறுத்தின. தமிழ்நாட்டுத் தெருகூத்துக்குக் கேரள நாட்டில் சிறிது காலம் நல்ல வரவேற்பு இருந்தது.

போர்த்துக்கீசியர்களின் வருகையால் கேரள நாட்டில் சவிட்டு நாடகம் என்ற ஒரு வகைக் கூத்துப் புகுந்தது. இதில் குதித்தல், துள்ளல், சாடல், வியப்புறும் செயல்கள் செய்தல் ஆகியவை மிகுந்திருந்தன. இன்று பீகார், ஒரிசா, வங்காளம் போன்ற மாநிலங் களில் பெருவழக்காக இருக்கும் ஷாத்ரா என்ற ஒருவகை வெளியரங்க நாடகங்களின் தாக்கமும் திராவிட மொழி நாடகத்துக்கு உண்டு. இங்குள்ள கூட்டுப் பாடல், கூடியா டும் நாடகங்களை ஜப்பான் நாட்டு நோ நாடகங்களுடன் ஒப்பிட்டுக் கா ண் ணு ம் அளவுக்கு ஒப்புமைக் கூறுகள் அமைந் துள்ளன.

திராவிட மொழி நாடகங்கள் கூத்து என்ற அளவில்தான் இருந்துள்ளன. அது பலவகையாகவும் பலவகைப் பொருள் களைக் கொண்டதாகவும் காணப்பட்டுள் ளது. வடமொழியில் மாறுபட்ட நாடகங் கள் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்தும் அவற்றைத் திராவிட மொழியினர் ஏற்றுக் கொண்டதாக அறிய முடியவில்லை.

## நவீன நாடகத்தின் தோற்றம்

ஆங்கில மொழிக் கல்வி இந்தியாவில் மிக வேகமாகப் பரவிய காலகட்டமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் திராவிட மொழிகளின் நாடகம் நவீன உருவம் பெற்று மேடையேறத் தொடங்கியது. ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் நாடகங்களைக் கல்லூரிகளில் படித்த இளைஞர்கள் அவைபோன்று நாடகங்களைத் தங்கள் தாய்மொழிகளில் எழுதத் தலைப்பட்டனர். புதுமையான மேனாட்டு முறை நாடகங்களைத் தங்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்ற படித்த இளைஞர்களின் ஆர்வமே புதுமுறை நாடகங்களின் தோற்றமாக அமைந்தது.

தெலுங்கு மொழியில் முதன் முதலில் வாவில்லா வாசுதேவ சாஸ்திரி என்பார் ஜூலியஸ்சீசர் என்ற நாடகத்தை 1876 ஆம் ஆண்டு மொழி பெயர்த்தார். அதே ஆண்டு மெர்சன்ட் ஆப் வெனிஸ் என்ற நாடகத்தை வெனிஸ் வணிகன் என்ற பெயரில் கோபாலாச்சார் என்பார் தமிழில் மொழி பெயர்த்தார். இந்த ஆண்டு முதல் தெலுங்கிலும் தமிழிலும் நாடகம் நவீன உருவில் வளரத் தொடங்கியது.

இந்தக் காலத்தில்தான் வடமொழி நாடகங்கள் சிலவற்றை மோனியர் உல்லியம்ஸ், வில்சன் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். அவற்றை ஆங்கிலத்தில் படித்து அவை போன்று நாடகங்களை எழுத வேண்டும் என்று பலர் விரும்பினர். 1882 ஆம் ஆண்டு மலையாளத்தில் கேரள வர்மா என்பார் காளிதாசனின் அபிஞ்ஞான சாகுந்தலம் நாடகத்தை ஆங்கிலத்திலிருந்து மலையாளம் மொழிக்குப் பெயர்த்து எழுதி நவீன நாடகத்துக்கு வித்திட்டார். 1920 ஆம் ஆண்டில்தான் கன்னடத்தில் நவீன முறையில் முதல் மொழி பெயர்ப்பு நாடகம் தோன்றியது.

உரைநடையாகவும் உரையாடல் அமைப்பிலும் இருந்த வடமொழி நாடகங்களைப் பற்றி முன்பே திராவிட மொழியினர் நன்கு அறிந்திருந்தாலும் அம்முறையில் தங்கள் நாடகங்களை அமைக்க அவர்கள் விரும்பவில்லை. இசை நாட்டமும் கூத்திலுள்ள நயமும் அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும். ஆனால் ஆங்கிலம் படித்த இளைஞர் நாடகத் துறையில் மாற்றம் காண விரும்பினதினால் மேனாட்டு நாடக அமைப்பில் முதன்முதலில் மொழி பெயர்ப்பு நாடகங்களைப் புகுத்தி மக்களைப் புதுமைப் பாதைக்குத் திருப்ப முயன்றிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சியின் வெற்றியால் திராவிட மொழி நாடகங்கள் இன்று நவீன நாடக வளர்ச்சி நிலையில் விரை நடையிட்டுக் கொண்டிருக்கின்றன.

## நவீன நாடகத்தின் தொடக்க நிலை

வடமொழி நாடகங்களைத் தெலுங்கு மொழியில் சிறப்பாக ஆதரித்து வளர்த்தவர் விஜயநகரம் மகாராஜாவான ஆனந்த கஜபதி என்பார். அவர் தன் அரண்மனைக்கு அருகில் ஒரு நாடக அரங்கம் அமைத்து நாடகங்கள் நடத்த நல்ல பொருளுதவி செய்து ஆதரித்துள்ளார். அவ்வாறே தமிழ்நாட்டில் சில ஜமீன்தார்கள் சிறப்பாக நாடகக் கலையை ஆதரித்து வளர்த்துள்ளனர். அத்தகைய நவீன நாடகங்களை விரும்பிச் சுவைக்கும் தகுதியுடையவர்களே அரங்கிற்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் கூத்துகளையே இக்காலத்திலும் விரும்பியுள்ளனர் என்பதை உணரலாம்.

மொழிபெயர்ப்பு நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு நவீன அமைப்பில் சொந்தப் படைப்புகளாகப் பல நாடகங்களைப் புனைந்து மேடையேற்ற ஆசிரியர்கள் முயன்றனர். கொரடா ராமச்சந்திரகவி என்பார் தெலுங்கில் மஞ்சரி மது காரியம் என்ற நாடகத்தை எழுதினார். ஆனால் 1880 ஆம் ஆண்டு வாவில்லா வாசுதேவ சாஸ்திரி எழுதிய நந்தக ராஜ்யம் என்ற வரலாற்று நாடகம் மக்கள் மத்தியில் பெரும் புகழைப் பெற்றது.

தமிழில் திண்டிவனம் இராமசாமி ராஜு என்பார் பரத்தன்மை ஒழுக்கத்தைக் கண்டித்து 1877 ஆம் ஆண்டு எழுதிய பிரதாப சந்திர விலாசம் என்ற நாடகம் தற்படைப்பாக விளங்குவதுடன் இன்றும் பாராட்டத்தக்க நிலையில் சிறந்துள்ளது. இதில் உரையாடல்கள் உரைநடையாகவும் பாடலாகவும் அமைந்து மக்களைக் கவர்ந்துள்ளன. மேலும் சமுதாய விமரிசனமாகவும் திகழ்கிறது. இதனை அடுத்துச் சல சலோசன செட்டியாரின் சரசாங்கி என்ற நாடகம் நல்ல புகழைப் பெற்றுள்ளது. இது ஆங்கில நாடகமான சிம்பலைன் என்பதின் மொழி பெயர்ப்பாகும். இவர் நாடகத்தை நேரடியாக மொழிபெயர்க்காது தமிழரின் பழக்கத்துக்குத் தக்கவாறு பெயர்களை மாற்றியும் இடங்களை மாற்றியும் எழுதுகிறார். மேனாட்டுப் பண்பாடுகளையும் வழக்கங்களையும் தமிழ் முறைகளுக்குத் தக்கவாறு மாற்றி அமைத்துள்ளார். பல இடங்களில் வேற்று மொழி நாடகம் என்ற உணர்வினையே மறக்கும்படித் தன் பணியைச் செய்துள்ளார். இம்முறையைப் பின்னர் வந்த சம்பந்த முதலியார், சங்கரதாஸ்சுவாமிகள் போன்றோரும் பின்பற்றி உள்ளனர்.

தெலுங்கு மொழியிலும் வாவில்லா வாசுதேவ சாஸ்திரி என்பார் சில ஆங்கில நாடகங்களைத் தெலுங்கு மொழிக்கும் பண்பாடு பழக்க வழக்கங்களுக்கும் தக்கவாறு மொழிமாற்றம் செய்துள்ளார். இத்தகைய மொழிமாற்ற முறையைச் சரியான மொழி பெயர்ப்பு என்று கருதுவதில் இடர்ப்பாடு உள்ளது. தழுவல் என்று கூறவும் முடிவதில்லை. ஆகையினால் சிறிது மாற்றி மென் தழுவல் (Tender Adaptation) என்று கொள்ளலாம்.

மலையாளத்தில் பெரும்பாலும் தொடக்க நிலையில் வடமொழி, ஆங்கில நாடகங்களின் மொழிபெயர்ப்புகளே செய்யப்பட்டுள்ளன. ஜனகி பரிணயம் (1889), மாளவிகாகனிமித்ரம் (1890), உத்தர ராம சரிதம் (1892), அஸாரிய சூடாமணி (1893) போன்ற வடமொழி நாடகங்களும் கிங்லீயர் தற்றேமிங் ஆப் தஸ்ரு (The Taming of the shrew) போன்ற ஆங்கில நாடகங்களும் மலையாள மொழியில் தரப் பெற்றன. கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த எபிரேயக் குட்டி என்ற நாடகத்தை வர்கீஸ் மாப்பிள்ளை என்பார் 1893 ஆம் ஆண்டு எழுதி அரங்கேற்றியுள்ளார். கோவிந்தன் பிள்ளையின் நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. ஆனால் சி. வி. ராமன் பிள்ளை மலையாள நாடக வளர்ச்சி நிலைக்குத் தூணாகக் கருதத்தக்கவர்.

கன்னட நாடகம் கேரூர் என்பாரின் அரவணைப்பில் தொடக்க நிலையில் நன்கு வளர்ந்துள்ளது. அவருடைய வசிகரணர், சுரத நகரஸ்ரேஷ்டி போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை. அவருடைய நள தமயந்தி இலக்கிய நயம் மிகுந்தது. எம். நாராயண ஐயர் எழுதிய ஸ்திரி தர்ம ரகஸ்யா என்ற நாடகம் குடும்பச் சிறப்புக்கு வழிகாட்டும் நல்ல படைப்பாக உள்ளது. ஸ்ரீ என்று அழைக்கப்படும் நாடக ஆசிரியர் கதாயுத்த நாடகா, அஸ்வத்தாமா, பராசிகரு ஆகிய நாடகங்களால் புகழ்பெற்றார். சமயவுணர்வு, சமுதாய சிந்தனை, இலக்கிய நயம் கொண்ட நாடகங்கள் கன்னட இலக்கிய உலகைக் கவர்ந்துள்ளன.

பழமையுடன் புதுமை கலந்து உறவாடும் ஓர் இனிமையான இயைபுத் தன்மையைத் திராவிட மொழியின் தொடக்க கால நவீன நாடகங்களில் காண முடிகிறது. சமுதாய உணர்வுக்கும் இலக்கிய ஈடுபாட்டுக்கும் மக்களைக் கவர்ந்திழுக்கும் முயற்சியில் நாடக ஆசிரியர் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். மக்களின் சமய வுணர்வை வளர்க்கும்பணிக்கு நாடகத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

## நவீன நாடக முன்னோடிகள்

தெலுங்கு நாடக முன்னோடியாக வாவில்லா விஸ்வநாத சாஸ்திரியைக் குறிப்பிடலாம். பின்னர் மிகச் சிறப்பாக கே. வீரேசலிங்கம் என்பார் அபிஞ்ஞான சாகுந்தலம், ரெத்னாவளி ஆகிய வடமொழி நாடகங்களைத் தெலுங்கில் மொழி

பெயர்த்துள்ளார். அரிச்சந்திரா நாடகத்தால் அவருடைய புகழ் ஓங்கிப் பரந்தது. அவருடைய உரையாடல்கள் ஆற்றலுடன் சூழ்நிலைக்குத் தக்கவாறும் அமைந்து நாடகத்துக்கு நயம் கூட்டின. பலிஜப்பள்ளி லக்ஷ்மிகாந்தனின் அரிச்சந்திரா இன்னும் சிறப்பாக விளங்கியது.

ஒரே சமயத்தில் தர்மாவரம் கிருஷ்ணமாச்சாரியா என்பாரும் கோலாசலம் ஸ்ரீநிவாசராவ் என்பாரும் தெலுங்கு நாடக வானில் ஒளி மீன்களாகத் தோன்றினர். இருவரும் வழக்கறிஞர்களாகப் பணியாற்றியவர். கற்றவர்களுக்கு ஏற்ற உயர்வான நாடகங்களை மேடையேற்றித் தெலுங்கு நாடக சேவையை மிகச் சிறப்பாகச் செய்தவர்கள். கிருஷ்ணமாச்சாரின் தெலுங்கு நாடகச் சேவை பல நிலைகளில் பம்மல் சம்பந்த முதலியாரின் தமிழ் நாடகச் சேவையுடன் ஒப்பிட்டுக் காணும் அளவுக்குச் சிறப்பாக அமைந்தது. கிருஷ்ணமாச்சாரியா பெல்லாரியில் தெலுங்கு நாடகங்களை நடிப்பதற்காக 1891 ஆம் ஆண்டு சரச வினோதினி சபாவை அமைத்தார். அதே ஆண்டு சென்னையில் தமிழ் நாடகங்களை நடிப்பதற்காகச் சம்பந்த முதலியார் சுகுண விலாச சபாவை நிறுவித் தன்னுடைய முதல் நாடகமான புஷ்பவல்லியை மேடையேற்றிக் காட்டினார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கால இலக்கிய வழக்கத்தை மீறி கிருஷ்ணமாச்சாரியா தெலுங்கில் விஷாதா, சாரங்கதரா என்ற துன்பியல் நாடகங்களையும், தமிழில் சம்பந்த முதலியார் கள்வர் தலைவன் என்ற அவல முடிவு நாடகத்தையும் எழுதி மேடையேற்றினர். இருவரும் மரபு மீறியதை மக்கள் வரவேற்றனர். கிருஷ்ணமாச்சாரியாவைத் ''தெலுங்கு நாடகப் பிதாமகன்'' என்றும், பம்மல் சம்பந்த முதலியாரைத் ''தமிழ் நாடகத் தந்தை'' என்றும் மக்கள் கொண்டாடினர். இருவரும் இருவேறு மொழி நாடகத்துக்கு ஒரே காலத்தில் அரும் சேவை புரிந்து பெரும் புகழ் ஈட்டியவர்கள். இருவருடைய நாடகப் பணிகளும் வியப்பான வரலாற்று ஒப்புமை நிகழ்ச்சிகளாக அமைந்தன.

தமிழ் நாடக முன்னோடிகளாகப் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள், சூரிய நாராயண சாஸ்திரி, சுந்தரம் பிள்ளை ஆகிய நால்வரையும் குறிப்பிடலாம். சம்பந்த முதலியார் பல்வேறு வகையில் தொண்ணூற்று நாலு நாடகங்களையும், சங்கரதாஸ் சுவாமிகள் சுமார் நாற்பது நாடகங்களையும், சூரிய நாராயண சாஸ்திரி கலாவதி, ரூபாவதி, மானவிஜயம் போன்ற இலக்கிய நாடகங்களையும், சுந்தரம்பிள்ளை மனோன்மணியம் என்ற கவிதை நாடகத்தையும் படைத்துள்ளனர். நால்வரும் முறையே கற்றோர்நடை பாமரர் நடை, பண்டிதர் நடை, கவிதை நடை ஆகியவற்றில் தங்கள் நாடகப் படைப்புகளைத் தந்துள்ளனர். சம்பந்தனாரும் சங்கரதாசரும் அமைச்சூர் நாடக சபைகளை அமைத்து நவீன உத்தி முறைகளைப் பயன்படுத்தி நாடகங்களை நடித்துக் காட்டியுள்ளனர். இவர்களின் வாழ்க்கைப் பணியால் தமிழ் நாடகம் தலை நிமிர்ந்துள்ளது.

மலையாள மொழியில் சி.வி. இராமன் பிள்ளையின் வரலாற்று நாவல்களான மார்தாண்டவர்மா, தர்மராஜா, ராமராஜ பகதூர் ஆகியவை நாடகமாக்கப் பெற்று நடிக்கப் பெற்றன. அவற்றிலுள்ள ஆற்றல் மிக்க உரையாடல்கள் நாடகங்களுக்கு உயர்வையும் உணர்வையும் ஊட்டின. வரலாற்று நாவல்களின் தந்தையாக விளங்கிய இராமன் பிள்ளை மலையாள நாடக வளர்ச்சியின் தூணாக விளங்கினார். அவரைப் பின்பற்றிப் பல மலையாள நாடகங்கள் விறுவிறுப்பாக மேடையேறின.

இ. வி. கிருஷ்ணபிள்ளை, சீதாலக்ஷ்மி, ராஜா கேசவதாஸ், ரவிக்குட்டிப் பிள்ளை ஆகிய நாடகங்களை இராமன் பிள்ளையைப் பின்பற்றி எழுதினார். கைமிகா பத்மநாபனின் ''வேலுத் தம்பி தளவா'' என்ற நாடகம் மலையாள மொழியில் அழியா இடம் பெற்றுள்ளது. ஆங்கில ஆட்சிக்கு

எதிராகப் போராடி உயிர் நீத்த இந்த வீரனின் வரலாற்று நாடகம் மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. இத்தகைய நாடக ஆசிரியர்களால் உரம் பெற்று மலையாள நாடகம் வளமாக வளரத் தொடங்கியது.

கன்னட மொழியிலும் பல ஆசிரியர்கள் புதுமுறை நாடகங்களைப் பயன் இலக்கியங்களாகப் படைத்து அளித்தனர். டி. வி. ஜி. என்பாரின் வித்யாரண்ய விஜயா மிகச் சிறப்பாக அமைந்தது. மாஸ்தி என்பாரின் சாந்தா, உஷா, சித்திராங்கதா ஆகிய புராண நாடகங்களும், தலிக்கோட்டா, சிவ சத்திரபதி, திருப்பனி, யசோதரா, அனார்கலி போன்ற வரலாற்று நாடகங்களும் புகழ் மிக்கவை. நாடக ஆசிரியரின் படைப்பாற்றல், கற்பனைத்திறன், உள நூலறிவு ஆகியவை சிறந்து பாத்திரங்கள் உயிருள்ள மானிடப் பதிப்புகளாக உருவாக்கப் பெற்றுள்ளன.

டி. பி. கைலாசம் கன்னட நாடக உலகில் தனக்கென ஒரு தனி இடம் பிடித்துள்ளார். அவரது சமூக நாடகங்களான டொள்ளுகொட்டி, போலிகிட்டி, பண்டு வலில்லாத படையி, சத்தவதன சந்தபா, சூளே போன்றவை சிறப்பான படைப்புகள். இரண்டு சகோதரர்களின் தனித்துவத் தன்மைகளை முரண்பாடு தோன்ற விளக்கி நாட்டு நடப்புக்குத் தக்கவாறு பொருத்தமான முடிவை இயல்பாகக் காட்டும் இனிய நாடகமாக டொள்ளுகொட்டி விளங்குகிறது. மனிதனின் போலித் தன்மைகள் அம்பலப்படுத்தப் படுகின்றன. சூளே என்ற நாடகம் பரத்தையர் ஒழுக்கத்திலிருந்து இளைஞர் சமுதாயத்தைக் காக்கும் நோக்கத்துடன் எழுதப்பெற்றுள்ளது. பல இடங்களை அங்கதச் சுவை விளங்கக் கைலாசம் படைத்துள்ளார். நகைச்சுவைக்குத் தகுந்த இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவருடைய நாடகங்கள் கன்னட நாடக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன.

### நாடக வளர்ச்சி நிலை

திராவிட மொழிகளிலுள்ள நாடகங்கள் பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டு நாடக வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகளில் பெருந்துணை புரிந்துள்ளது. காலகட்ட இயக்கங்களும் உணர்வுகளும் தேவைகளும் நாடகத்துக்கு நல்ல உணவு ஊட்டி வளமுறச் செய்துள்ளன. சமுதாயத்தின் உள்ளீடாகவும் பிரதிபலிப்பாகவும் நாடகங்கள் காணப்படுகின்றன. சமுதாயத்தின் ஓர் அங்கமாக வுள்ள நாடக ஆசிரியர் அதன் திறனாய்வாளராக மாறி நாடகங்களைப் படைத்துச் சமூக மேம்பாட்டுக்கு வழி கண்டுள்ளதையும் பார்க்க முடிகிறது. மக்களின் வாழ்வு கலைப் படைப்புக்களாக அரங்கமேறிக் கண்ணுக்கு விருந்தளிப்பதுடன் கருத்துக்கும் பயனுணவு பரிமாறியுள்ளதைப் பல்வேறு நாடகங்கள் வாயிலாக நன்கு அறியலாம்.

பாரத நாடு விடுதலைக்குப் போராடிய காலத்தில் சுதந்திர வேகமும் உரிமை முழக்கமும் கொண்ட பல நாடகங்கள் அரங்கமேறியுள்ளன. தெலுங்கில் விசாகப்பட்டினம் யக்ருநாராயணா என்பார் எழுதிய 'இரஜபுத்திர விஜயம்' அத்தகைய உணர்வுகளை அள்ளி வீசியது. மக்களிடம் துஞ்சிக் கிடந்த விடுதலை வேட்கையை வேகமாக எழச் செய்யும் ஆற்றலுடன் இந்த நாடகம் அரங்கமேறியது. இரஜபுத்ர வீரர்களான இராஜசிம்மன் துர்காதாஸ் ஆகியோர் முஸ்லீம் தாக்குதலுக்கு எதிராகத் துள்ளி எழுந்த காட்சிகள் உணர்ச்சிப் பிழம்பாக இந்த நாடகத்தில் உடைத்துக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பல நாடகங்கள் அக்காலத்தில் தெலுங்கு மொழியில் எழுதப் பட்டன.

தமிழ் நாடக வானில் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், சுவாமிநாத சர்மா போன்றவர்கள் சுதந்திர தாரகைகளாகத் தோன்றினர். கிருஷ்ணசாமிப் பாவலர் கதரின் வெற்றி, தேசக்கொடி, கவர்ணஸ் கப், பம்பாய் மெயில் போன்ற தேசிய நாடகங்களையும் சுவாமிநாத சர்மா, பாணபுரத்து வீரன் என்பதையும் எழுதிச் சுதந்திரக்கனலை மூட்டினர். நாடகக் கனலின் வெப்பம் தாங்காது அன்றைய ஆங்கில அரசு அவற்றைத்

தடை செய்தது. சுதேச இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் போன்றவை வலியுறுத்தப்பட்டன.

மலையாளத்தில் வேலுத் தம்பி தள வாய் என்ற வரலாற்று நாடகம் விடுதலை உணர்வை ஊட்டுவதாக உள்ளது. மலையாளத்திலும் கன்னடத்திலும் தேசிய இயக்க நாடகங்கள் தமிழ் தெலுங்கு போன்று மிகுதியாகவும் வேகமாகவும் காணப்படவில்லை. அக்காலத்தில் மலையாள நாடுகளான திருவிதாங்கூர், கொச்சி ஆகியவையும் கன்னட மொழி வழங்கும் நாடான மைசூரும் மன்னர்களின் ஆட்சிக் குட்பட்ட சுதேச சமஸ்தானங்கள். ஆகையினால் ஆங்கில ஆட்சியின் நேரடி நிருவாகத்தின்கீழுள்ள தெலுங்கு, தமிழ் நாடுகளைப் போன்று சுதந்திர வேகத்தை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. தேசிய நாடகங்கள் மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் குறைவாகக் காணப்படும் காரணம் இதுவாக இருக்கலாம்.

தமிழில் பகுத்தறிவு வாதக் கொள்கைகளை வலியுறுத்தும் திராவிட இயக்க நாடகங்கள் நாடு விடுதலை அடைந்தபின் மிகுதியாகத் தோன்றியுள்ளன. அண்ணாதுரை, கருணாநிதி, சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருவாரூர் தங்கராசு போன்றோர் இத்தகைய நாடகங்களை எழுதி அரங்கேற்றினர். அண்ணாதுரையின் நாடகங்கள் ஆற்றலுடன் சமுதாயத்தை விழிப்புறச் செய்தன. அரசியல் மாற்றம் காண அவருடைய நாடகங்கள் பெருந்துணையாக இருந்தன என்பதை உறுதிப்படுத்திக் கூறலாம்.

மலையாளத்தில் மார்க்ஸீய கொள்கை வளமுறுவதற்கு நாடக அரங்கம் ஆற்றல் மிக்க சாதனமாக விளங்கியது. கேசவதேவ் பொன்குன்னம் வர்கி, இண்டசேரி கோவிந்தன் நாயர், கே. தாமோதரன் கே. இராம கிருஷ்ண பிள்ளை ஆகியோருடைய நாடகங்கள் புரட்சிச் சுடர்களாக விளங்கின. பாட்டப்பாக்கி, பிரதிமா, மந்திரியாக்கல்லே, நிஞ்ஞள் என்னே கம்யூனிஸ்டாக்கி, ஞானிப் போள் கம்யூனிஸ்டாவும் முதலியவை மார்க்ஸீய தத்துவ விதைகளாக மக்கள் மீது நாடக மேடைக்கு முன்னர் தூவப் பெற்றவை.

தெலுங்கு நாடகமான கன்யா சுலகம் 1897-ஆம் ஆண்டு குருஸ்டா அப்பாராவ் என்பவரின் சமுதாய நாடகமாக அரங்கேறி அழியாப் புகழைப் பெற்றது. சமுதாயப் போலித் தன்மையை எள்ளி நகையாடி சீர் திருத்த முயன்றது. எ. எஸ். சர்மாவின் மனோரமா (1895) வல்லூரி பாபிராஜின் சாகரிகா (1897) ஆகியவையும் குறிப்பிடத் தக்கவை.

கன்னடத்தில் டி. பி. கைலசாம், அயத் ரங்காச்சாரி (ஸ்ரீரங்கா) போன்றோரின் சமூக நாடகங்கள் நல்ல மாற்றங்களைச் செய்து மக்களைக் கவர்ந்தவை. உதிர வைராக்கியா, தரித்திர நாராயணா, ஹரிஜன் வாரா, சந்தியாக்கலா, பிரபஞ்ச பனி பத்து முதலிய நாடகங்கள் குறிப்பிடத் தக்கவை. இவற்றுள் ஹரிஜன் வாரா சாதி வேறுபாட்டைக் கண்டிக்கும் புரட்சித் தன்மை மிக்க நாடகம். சுதந்திரத்துக்குப் பின்பு வெளியான சோக சக்ரா, ஜீவனஜோகாலி, ஸ்ரீரங்க ஜராசந்தி போன்றவை தற்கால அரசியல் எள்ளல்களாக விளங்கி அறிவுரை கூறும் தரமான கன்னடநாடகங்கள்.

நகைச்சுவைநாடங்கள் (Farce), நாடக நையாண்டி (Burlesque), அங்கதம் (Satire) போன்ற பலவகை நாடகங்களும் திராவிட மொழிகளில் மிகுதியாக உள்ளன. சம்பந்த முதலியாரின் சந்திரகரி என்பது அரிச்சந்திரன் நாடகத்தைத் தலைகீழ் மாற்றமாக எழுதிய புகழ் மிக்க நாடக நையாண்டியாகும். அனைத்து நிலைகளிலும் திராவிட மொழி நாடகங்கள் நல்ல வளர்ச்சி நிலையைக் கண்டு வருகின்றன.

உலக அரங்கில் உன்னத நிலை அடையும் மிகச் சிறந்த நாடங்களை வழங்கிச் சிறக்கும் வாய்ப்பு திராவிட மொழிக்கு உண்டு. மனித உணர்வை நுணுகிக் காண்பதுடன் சமுதாயப் பிரச்சனைகளைச் சரியான முறையில் அணுகி உயர்வு காணத் துடிக்கும் நுட்பவுணர்வுடைய நாடக ஆசிரியர்களின் பேனாக்கள் விரைவில் உலகுக்கு அறிமுகமாவது உறுதி.

# தஞ்சையின் தாலாட்டு இலக்கியம்

பேராசிரியர், பாரதிபித்தன்,
எம்.ஏ.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருபுவனத்தில் பிறந்த இக்கட்டுரை ஆசிரியர் பல்லாண்டுகள் தமிழாசிரியப் பணியில் ஈடுபட்டுப் பின்னர் நாகை கனகசபைப் பிள்ளை தமிழ்க் கல்லூரியில் முதல்வராகவும் செயற்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் ஐயாற்று அரசர் கல்லூரில் முதல்வராகப் பொறுப் பேற்றுப் பணிபுரிந்து வருகிறார்.

சிறந்த எழுத்தாளரும், பேச்சாளருமாகிய இவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஆளவை (சினட்) உறுப்பினராகவும் இருந்து வருகிறார். பல நூல்களும், கட்டுரை களும் எழுதி வெளியிட்டுள்ள இவர்தம் ''பஞ்ச சீலம்'' என்னும் மாணவப் பருவக்கட்டுரை அனைத்து இந்திய சமாதான ஒருமைப் பாட்டுக்குழு நடத்திய போட்டியில் முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது டாக்டர் பட்டத்துக்காகத் தஞ்சை நாட்டுப் புறப்பாடல்களைப் பற்றி ஆய்வு நடத்தி வருகிறார்.

இலக்கியம் நுண்கலைகளுள் ஒன்றாகும். இலக்கியத்தை எழுதப்பட்ட இலக்கிய மெனவும், எழுதா இலக்கியமெனவும் இரண்டாகப் பகுக்கலாம். நாட்டுப்புறப் பாடல்கள் எழுதா இலக்கியத்துள் அடங்கும்.

நாட்டுப்புறப் பாடல் பலவகை. அதனைத் தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, நலுங்கு எனவும், தொழில் பாடல், கதைப் பாடல் எனவும் பலவகையாகப் பிரிக்கலாம்.

அவற்றுள் தாலாட்டுப் பாடல்கள் மிகவும் நயமிக்கவை.

தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக் கான தாலாட்டுப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அவற்றுள் இவ்வாசிரியரால் திரட்டப்பட்ட 32பாடல்களை மையமாகக் கொண்டதே இவ்வாய்வுக் கட்டுரை. இப் பாடல்கள் இதுவரை நூல் வடிவம் பெறா தவை.

## வரலாறு

நாட்டுப்புற இலக்கியம் எழுதப்பட்ட இலக்கியத்தை விடத் தொன்மையான வரலாறு உடையது. தமிழ் நூல்களுள் மிகவும் தொன்மை சான்ற தொல்காப்பியத் தில் செய்யுளியலில் நாட்டுப் பாடல்களுக் கான இலக்கணம் அமைந்து கிடப்பதி லிருந்தே இதன் காலங்கடந்த பழமையை நன்குணரலாம். பழமொழியை 'முதுமொழியிலும்' விடுகதையை ''பிசி''

யிலும் ஏனைய பாடல் வகைகள் அனைத்தையும் ''பண்ணத்தி''யிலும் தொல்காப்பியர் அடக்கியுள்ளார் என்பதனை,

பாட்டிடைக் கலந்த பொருள வாகி
பாட்டின் இயல பண்ணத் தியல்பே (482)

என்ற நூற் பாவாலும்,

அவைதாம்,
நூலினான உரையினான
நொடியொடு புணர்ந்த பிசியினான
ஏது நுதலிய முது மொழியான... (467)

என்ற நூற்பாவாலும் உணரலாம்.

நாட்டுப் புறப் பாடல் வகைகளுள் தாலாட்டும், ஒப்பாரியும் மிகவும் தொன்மை வாய்ந்தவையாகக் கருதத்தக்கவை. ஏனெனின் மக்கட்பேறும், சாவும் மனித வாழ்வி லிருந்து பிரிக்க இயலாதவை.

தாலாட்டு இலக்கியத்தை இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துப் பேசலாம்.

தன் குழந்தையை மகிழ்விக்கத் தாய்மார் தாமே இட்டுக் கட்டிப் பாடியவை முதல்வகை.

''தாலாட்டு'' என்னும் இலக்கிய வடிவத்தை இலக்கிய ஆசிரியர்கள் கையாண்டு பாடியவை இரண்டாம் வகை.

இரண்டாம் வகை இலக்கியப் பிரிவு மிகவும் பிற்காலத்தில் கிளைத்ததாகும். பெரியாழ்வார் தான் யசோதை நிலையிலிருந்து கண்ணனைத் தாலாட்டிப் பாடிய நூலே இந்த வகையில் முதல் நூலாகும்.

எழுதா இலக்கிய வகையாகிய தாலாட்டுப் பாடல்கள் முதலும் முடிவு மற்றவை. தஞ்சை மாவட்டத் தாலாட்டுப் பாடல்கட்கும் இது பொருந்தும்.

## வட்டாரத்தன்மை

இலக்கிய ஆசிரியன் வாழும் வட்டாரத்தின் பழக்க வழக்கங்கள், வழக்குச் சொற்கள், ஆறுகள், மலைகள், சிறப்பு விழாக்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றின் நிழல் அவன் படைப்புகளில் விழும். எழுதப்பட்ட இலக்கியத்தைவிட எழுதா இலக்கியத்தில் இந்தத் தன்மை மிகுதி. ஏனெனில் இவற்றின் ஆசிரியர்கள் பாமரர்கள். அவர்களால் அவர்கள் வாழும் சுற்றுச் சூழலின் பாதிப்புக்களிலிருந்து எளிதில் தப்ப இயலாது.

தஞ்சை மாவட்டத்தில் எந்த வட்டத்தில் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களிலும்,

ஆறிரண்டும் காவேரி
அது நடுவே சீரங்கம்
சீரங்கமாடி-என் கண்ணே
திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி என் கண்ணே
மதுரைக் கடலாடி...

என்ற வரிகள் முதலிலோ, இடையிலோ வரும்.

மற்ற மாவட்டத்துப் பாடல்களில் இந்தக் கூறுகள் இடம் பெறுவதுண்டு எனினும் தஞ்சை மாவட்டத்துப் பாடல்களில் இவை தவறாமல் இடம் பெற்றிருக்கும்.

காவிரி ஆறும், திருவரங்கத்தலமும், மாமாங்க விழாவும் தஞ்சாவூர்க்காரர்களால் மறக்க இயலாதவை. தாய்க்குலம் இவற்றைப் புனிதமாகப் போற்றிப் பழக்கப்பட்டதாகும். ஆகவே எல்லாத் தாய்மார் தம் வாக்கிலும் இவை செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் பலப்பல சிற்றாறுகள் ஓடிய போதிலும் காவிரித் தண்ணீரே ஓடுவதாக உணர்ந்து பூரிப்பதும் புகழ்வதும் வழக்கம். அதற்கேற்பவே ''ஆறிரண்டும் காவிரி'' என்ற தொடருக்குப் பொருள் கொள்ள வேண்டும். காவிரி முக்கொம்பில் இரண்டாகப் பிரிந்து கல்லணையில் மீண்டும் இணைந்து பின் பிரிவதை நாமறிவோம்.

முக்கொம்பில் பிரியும் மற்றொரு நதியைக் ''கொள்ளிடம்'' என்று நாம் அழைத்த போதிலும் நம் தாய்க்குலம்

அதனையும் காவிரி எனவே கருதி ''ஆறி ரண்டும் காவிரி'' எனப்பாடி வருவதை அறிய நம் மனம் மகிழ்கிறது.

மேற்கண்ட பாட்டில் வரும் ''மதுரைக் கடல்'' எது?

மதுரையில் கடல் இல்லையே! மதுரைக் கடல் என அவர்கள் குறிப்பது இராமேசு வரத்தையே எனக் கருதலாம்.

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் பாடப்படும் தாலாட்டு ஒன்றில் ''தைப் பூசமாடி தனுஷ்கோடி நீராடி''—என வரு வது நம் ஊகத்தை உறுதிப்படுத்துகிறது.

இவை தவிரத் தஞ்சை மாவட்டத்தின் எல்லைக்குள்ளே இருக்கக்கூடியதும், மற்ற மாவட்டத்தில் அறியாததுமாகிய ஊர்கள் பல தாலாட்டுப் பாடல்களில் உண்டு.

ஒம்பத்து வேலி-என் கண்ணே
ஒடப்பெடுத்து ஒடுதுண்ணு
கும்பத்து மேலேறி என் கண்ணே
கணக்கெழுத வந்தவனோ

இது திருக்காட்டுப்பள்ளி வட்டாரத் தில் வழங்கும் தாலாட்டுப் பாடலாகும். கல்லணைக்கு அருகில் வெள்ள அபாயத்தில் எப்போதும் இருக்கும் திருக்காட்டுப்பள்ளி யின் ஒரு பகுதியே ''ஒம்பத்துவேலி'' என்பது.

ஐந்து மணி நேரம் - என் கண்ணே
அழகான வண்டி கட்டித்
தஞ்சை நகரை விட்டு - என் கண்ணே
வல்லம் தாலுகா சென்றிரங்கி
வஜ்ரவல்லி மண்டபத்தில் - என் கண்ணே
மதிலோரம் சுத்தி வந்து
வரங்கேட்டு நிற்கையிலே

எனவரும் தாலாட்டுப் பாடல் வரிகள் தஞ்சைக்கு அருகில் முன்னொரு காலத்தில் கோட்டை கொத்தளத்தோடு சிறந்து விளங் கிய வல்லத்தையும், அந்த ஊரில் இருந்த ''வஜ்ரவல்லி'' மண்டபத்தையும் குறிப்பிடு வதை ஆராய்ந்தால் வட்டார நிகழ்ச்சிகள் நாட்டுப்புறப் பாடல்களில் செலுத்தும் செல் வாக்கின் ஆழ அகலங்களை உணரலாம்.

மாயூரத்திற்கு அண்மையில் உள்ள பந்தநல்லூர் வட்டாரத்தில் உள்ள ஒருதாய் பாடும் பின்வரும் தாலாட்டுப் பாடல் கூறுகள் இதனை மேலும் உறுதிப் படுத்தும்.

காலை ரயிலேறி - உங்களம்மான்
கா(ல்) மணி வண்டியேறி
காரைக்கால் போயிறங்கி - என் கண்ணே
கல்லெழைச்ச பொம்மை வாங்கி
வாங்கி வைரம் எழைச்சி - என் கண்ணே
சுத்தி சிவப் பெழைச்சி
மாயாரம் வந்தெறங்கி - என் கண்ணே
வைரப் பாலடைங்க.....,

## இதிகாசச் செல்வாக்கு

இராமாயணமும், மகாபாரதமும்இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாகச் சொல்லப்பட்டு வரும் கதைகளா கும். இந்த நூல்களைப் படித்தறிந்தவர் களைவிடக் கேட்டறிந்தவர்களே அன்றும் அதிகம்; இன்றும் அதிகம்; இன்னும் கூட இந்தக் காவியங்களை முதல்வரி முதல் முடிவு வரி வரை படித்துப் பார்த்திருக்கும் தமிழ்ப் புலவர்கள் மிகக்குறைவு. ஒரு தலைமுறையினர் மற்றொரு தலைமுறை யினர்க்குச் சொல்லிப் பரப்பியவை இந்தக் கதைகள். ஆகவேதான் வட்டாரத் திற்கு வட்டாரம் மொழிக்கு மொழி இதிகாசக் கிளைக் கதைகள் வேறுபடு கின்றன.

சிற்றூர் மக்களிடம் இந்த இதிகாசக் கதைகள் இன்றும் செல்வாக்குடன் விளங்கு கின்றன. இராமாயணத்தைவிடப் பாரதக் கதை சிற்றூர் மக்களிடம் அதிகமாகப் பரவி யிருக்கிறது. பாரதக் கதைத் தலைவர்கள் நாட்டுப்புறப் பாடல்களில் அடிக்கடிப் பேசப்படுவர். தாய்மார்கள் தங்கள் செல் வங்களைப் பாரதத் தலைவர்களுடன் ஒப் பிட்டுப் பேசுவதில் மிகுந்த மன நிறைவு கொள்கிறார்கள். அவர்களைக் கதை மாந் தராகவே அவர்கள் கருதுவதில்லை; கடவு ளர்களாகவே கருதுகிறார்கள். அதனால் தான் அருச்சனனின் பலதார மணமும், திரௌபதியின் பல் கணவ மணமும் தாய்க் குலத்தின் வெறுப்புக்குள்ளாகவில்லை.

தாழை சுத்தி பூவெடுக்கும்-என் கண்ணே
தருமரோ உங்களப்பா
வேம்பு சலசலக்க
வெள்ளாறு தண்ணிவர
வெள்ளாத்துத் தண்ணியெல்லாம்-உன் மாமன்
வீமர் பயிர்ச் செலவோ
.... ..... .....
காட்டாத்துத் தண்ணியெல்லாம்-உன் மாமன்
கர்ணர் பயிர்ச் செலவோ
.... .....
ஐந்து தலை நாகம்
அடைத்திருக்கும் தாழையிலே-என் செல்வமே
அஞ்சாமல் பூவெடுக்கும்
அர்ச்சுனரோ-உன் மாமன்
.....
பத்து தலைப் பூ நாகம்
பாராமல் பூவெடுக்க-என் கண்ணே
பாண்டவரோ உன் மாமன்
..... .....
மாதா துணையிருப்பா
மாரியம்மன் காவலிருப்பா
தூங்கிக் கிடக்கையிலே
தொரவதை காவலிருப்பா

## மூவேந்தர் குறிப்பு

சேர, சோழ, பாண்டியர்களில் பாண்டியர் வீரம் தாய்க்குலத்தை நீண்ட காலமாக கவர்ந்து வந்திருக்கிறது. தாலாட்டுப் பாடல்களில் பாண்டிய மன்னனோடு தன் குழந்தையை ஒப்பிட்டு பேசும் போக்கே எங்கும் காணப்படுகிறது.

பத்துதலை நாகம்
பதுங்கிருக்கும் தாழையிலே-என்செல்வமே
பயப்படாமல் பூவெடுக்கும்
பாண்டியரோ உன் மாமன்

இது மயிலாடுதுறை வட்டத்தில் வழங்கும் ஒரு பாட்டு.

மானோடி வீதியெல்லாம்
நீனோடி வந்த கண்ணோ
பட்டு வந்து விக்கிதப்பா
பகலோடி வந்த சுப்பலிலே
பட்டு விலை மதிப்பான்
பாண்டியனும் உன் தகப்பன்

இது திருத்துறைப்பூண்டி வட்டத்தில் வழங்கும் ஒரு பாட்டு.

பச்சை சைக்கிள் வண்டி
பானுமதியே ஓட்டும் வண்டி
பானுமதி ஓட்டும் வண்டி
பாண்டியரே செய்த வண்டி
.....

இது திருக்காட்டுப்பள்ளி வட்டாரப்பாட்டு.

பாலும் அடுப்பிலிலே
பாலகனும் தொட்டிலிலே
பாலகனைப் பெற்றெடுத்த
பாண்டியனார் கட்டிலிலே...

இது மன்னை வட்டத்தில் வழங்குவது.

## உளவியல்

தாலாட்டுப் பாடல்கள் அனைத்திலும் தாய்மார்களின் ஒரு பொதுவான மனப் போக்கு பிரதிபலிக்கப்படுகிறது. பெண்கள் தங்கள் பிறந்த வீட்டைப் பொதுவாகவும், சகோதரனைக் குறிப்பாகவும் பெருமைப் படுத்தித் தாலாட்டில் குறிப்பிடுவது பொதுவான போக்காகும். தன் குழந்தைக்குத் தாய்மாமன் முறையாகும் தன் சகோதரனைப் பெருமையாகப் பேசாத தாலாட்டே இல்லை. அதுபோலப் புகுந்த வீட்டைப் பெருமை பேசுவது தாலாட்டில் காணப் படாத அம்சமாகும். தன் கணவனைத் தவிர மற்றவர்களைப் பாராட்டும் குறிப்புத் தாலாட்டில் இல்லை.

மேலே பாரதக் கதைத் தலைவர்களைக் குறிக்கும் பாட்டாலும் இது விளங்கும். அதற்கு மேலும் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

அவற்றுள் இவை சில :-

மலையைக் களம் செதுக்கி-என் கண்ணே
மல்லிகைப் பூ போர் போட்டு
ஆனை வந்து போரடிக்கும்-என்
அர்ச்சுனரோ உன் மாமன்
* * *
கீடல் கலங்க மலை அசைய
கர்ணர் கை வில்லனசைய
சபை அசையபேசி வரும்
சமர்த்தரார்ம் உன் மாமன்
* * *
எட்டு சட்டம் நூலோட்டம்-என் கண்ணே
எளனிமலைத் தேரோட்டம்
யாரு வந்தா தேரசையும்-என் கண்ணே
உங்களம்மான் வந்தா தேரசையும்

பழங்காலத்தில் கோயில் தேரிழுக்க நிலப்பிரபுக்கள் ஆள் அனுப்பும் பழக்கமும், பொறுப்புமுடையவர்கள். அத்தகைய நிலப்பிரபுக்களில் ஒருவராகத் தன் சகோதரனைச் சொல்கிறாள் இந்தத் தாய்.

இன்னொரு தாயின் கற்பனையோ விண்ணை முட்டுகிறது.

மாட்டுப்பால் போட்டு-என் கண்ணே
மதிப்பு குறைவு இம்பார்(ர்)-உங்களம்மான்
காட்டுப் புலிப்பாலு-என் கண்ணே
கானகத்துமான் பாலு

புலிப்பால் குழந்தைக்குத் தரலாமா என்பது கேள்வியில்லை. தன் குழந்தைக்குப் புலிப்பால் வேண்டுமானாலும் தன் சகோதரன் கொண்டு வருவான் என்பதில் அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

பல தாய்மார்கள் தன் உடன்பிறந்தார் பெருமை பேசுவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். சிலர் தன் கணவன் வீட்டு உறவினரை வசை பாடவும் தயங்குவதில்லை. ஒரு தாய்

சின்ன அத்தை மாருகளெல்லாம்
சின்ன கோவில் தேவடியா
பெரிய அத்தை மாருகளெல்லாம்
பெரிய கோவில் தேவடியா
சித்தப்பா மாருகளெல்லாம்-என் கண்ணே
செருப்பு தைக்கும் சக்கிலியர்

என்று பாடுகிறாள். குழந்தையின் அத்தை தனக்கு நாத்தனார் அல்லவா? எவ்வளவு காழ்ப்புணர்ச்சி? சராசரி பெண்கள் தாமே?

தஞ்சை மாவட்டம் மருத நிலப்பகுதி. பரத்தையர் ஒழுக்கம் இங்கு நீண்ட நாட்களாகவே ஒப்புக் கொள்ளப்பட்ட ஒழுக்கக் கேடு. அற நூல்கள் கண்டித்தாலும் அக இலக்கியங்கள் அதனைத் தூற்றுவதில்லை. நீண்ட நாட்களாகப் பழகிப் போனதாலோ என்னவோ அந்த ஒழுக்கக்கேடு பெருமைக் குரிய ஒன்று போலப் பேசப்படுகிறது.

வாழ்க்கையில் எதையும் மறைக்காத பாமரர் இலக்கியங்கள் இதனையும் மறைப்பதில்லை. ஒரு தாய் தன் மகன் தாசி வீடு போவதை எவ்வளவு பெருமையாகப் பேசுகிறாள்.

அந்தி நேரத்திலே-என் கண்ணே
அழுதூட்டும் வேளையிலே-நீ
வெள்ளி கொடை புடிச்சு-என் கண்ணே நீ
அருச்சனைக்குப் போவயிலே-எங்க தம்பிக்கு
உள்ளூரு தேவடியா
உடனே சரணமின்னா

தங்கக் கொடை பிடிச்சுஎன்- கண்ணே
தரிசிக்க போவயிலே
அசலூரு தேவடியா-என் கண்ணே
அப்போ சரணமின்னா
தங்கத்தாலே பள்ளிக்கூடம்-என் தம்பிக்கு
தாசி வீடு தண்ணித் தொறை
வெள்ளியாலே பள்ளிக்கூடம்.என் கண்ணே
வேசி வீடு தண்ணித்துறை

வடக்கு நெலம் வாங்கி
வாழமரம் தோப்பாக்கி
வாழை கொலை சாய்க்கும்-அப்பாவுக்கு
வப்பாட்டி ரெண்டாச்சே

ஒழுக்கக்கேடு உடமை வர்க்கங்களோடு உடன் பிறந்தவை போலும். பரத்தையர் ஒழுக்கத்திற்குப் பணவசதி வேண்டாமா? ஆகவே, இப்பாட்டில் பணச்செழிப்பும், பரத்தையர் ஒழுக்கமும் இணைத்துப் பேசப் படுவதை நாம் பார்க்கலாம்.

யாருமில்லாதபோது தாலாட்டுப்பாடும் தாய்மார்கள் தங்கள் உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவது வழக்கம். தங்கள் வாழ்வின் இழிவையும் தோல்விகளையும் மனம் விட்டுப் பாடுவதுண்டு.

காதல் வயப்பட்டுத் தாயானவள் ஒருத்தி பின்னர் கணவனால் கைவிடப் பட்ட நிலையில் அவன் மற்றொருத்தியை நாடும் தன் சோக வாழ்க்கையை மனம் விட்டுப் பாடுகிறாள்.

காலையிலே பூத்த பூ
காட்டு மல்லிகை நானிருக்க
காடு சுத்தி அத்தை மவன்
காடு காடா சுத்துறானே

தட்டுலே பூவிருக்க
தங்க சரம் நானிருக்க
தட்டு கெட்ட அத்தை மவன்
தங்கச்சியை மாலையிட்டான்
சாலையிலே கூட்டம் கூடி
சாதி நாயம் பேசையிலே
சாதி கெட்ட பையனாலே
சபையிலே கையெடுத்தேன்

தன் கணவன் வீட்டிலிருக்கையில் அது தெரியாமல் வந்துவிடும் கள்ளக்காதலனை எச்சரிக்கும் தாலாட்டும் உண்டு.

பாலும் அடுப்பினிலே
பாலகனும் தொட்டிலிலே
பாலகனைப் பெற்றெடுத்த
பாண்டியனார் கட்டிலிலே
அவரை சலசலங்கும்
அம்புவல்லி காய்காய்க்கும்
அவரை நெழலிலே நீ
ஆருபழி வாங்க வந்தே
புல்லு கெடக்குதுன்னு
பொழுதனைக்கும் மேயாமே
அரவயறு நெறஞ்சொடனே-ஒங்க
அரமணைக்கே போயிடுங்க.
.....

எவ்வளவு ஏழையாக இருந்த போதிலும் தன் குழந்தை தவம் கிடந்து பெற்ற பிள்ளை எனக் குறிப்பிடுவதே தாய்மார்கள் வழக்கம் என்பதைத் தாலாட்டு நமக்கு உணர்த்துகிறது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு தானே.

## தெய்வ வழிபாடு

தெய்வ வழிபாடு சம்பந்தப்பட்ட மட்டில் தமிழகத்தில் ஒரு ஜாதிப் பிரிவினை ஏற்பட்டிருப்பதைச் சிற்றூர் வாழ்க்கையைக் கவனித்தவர் அனைவரும் உணர்வர். சிவன், திருமால், முருகன் முதலிய பெருந் தெய்வங்களை வழிபடுவோர் உயர் சாதிக் காரர்களாகவும், மாரியம்மன், காளியம்மன் முனீஸ்வரன், காட்டேரி முதலிய தெய் வங்கள் கீழ் சாதியினர்க்கு உரியதாகவும் இருப்பதை நாம் காணலாம். ஆகவே

பாமரர் இலக்கியமாகிய நாட்டுப்புறப் பாடல்களில் சிறு தெய்வ வழிபாடு பெரிதும் போற்றப்படுவதை நாம் தெளிவாகக் காண லாம்.

தன் குழந்தைக்குக் காவல் தெய்வ மாகத் தாய்மார்கள் தம் தாலாட்டில் குறிப் பிடும் தெய்வங்கள் அனைத்தும் சிறு தெய் வங்களே.

மாவிளக்குக் கையேந்தி-என் கண்ணே
மகமாயி மதிலோரம்
நின்னு என் கண்ணே
மைந்தன் வரன் கேட்கையிலே-என் கண்ணே
மாரி மகமாயி
மாவிளக்கைக் வாங்கி-என் கண்ணே உன்னை
மணி விளக்கை தந்தேனுன்னா
.....

தோழி துணை யிருப்பா-ஒங்களுக்கு
துணையா காளியிருப்பா
மாதா துணையிருப்பா
மாரியம்மன் காவலிருப்பா
.....

தாய்மார்கள் நோற்கும் நோன்புகள் தாலாட்டுப்பாடல்களில் தவறாமல் வெளிப் படும்.

மிளகு மந்திரித்து வாங்கி வைத்துக் கொண்டு அதனைக் குளித்து முழுகி விட்டு வெறும் வயிற்றில் தின்பது மகப்பேற்று விர தத்திற்காக மகளிர் எடுக்கும் ஒருவகை நோன்பாகும். அதைப் பலபாடல்கள் குறிக் கின்றன.

அள்ளி மிளகு தின்னு
அறுபதுநாள் நோம்பெடுத்து-என் கண்ணே
பிடிச்சு மிளகு தின்னு
கௌரி நோம்பெடுத்து
.....

பச்சை மாவு தின்னு
பகவானைக் கையெடுத்து
.....

அள்ளி மிளகு தின்னு-என் கண்ணே
அனந்த கிரி நோம்பெடுத்து
.....

கேதாரி நோம்பிலே-என் கண்ணே நீ
கிடைச்ச திரவியமோ
.....

அள்ளி மொளவு தின்னு
அருணகிரி நோம்பெடுத்து

## இலக்கிய நயம்

நாட்டுப்புற இயல் என்பது இலக்கியஞ் சார்ந்த துறையன்று. அது சமூக விஞ்ஞா னத்தின் ஒரு பிரிவாகும். நாட்டுப்புறப் பாடல்கள் மட்டுமே இலக்கியத்தோடு ஒருங்கு வைத்து எண்ணத் தக்கவை.

எழுதப்பட்ட இலக்கியத்தை நோக்க எழுதா இலக்கியங்களாகிய நாட்டுப்புறப் பாடல்களில் இலக்கியப் பாங்கு குறைவு தான். கம்பனோடும், இளங்கோவடிக ளோடும், வில்லியோடும், சேக்கிழாரோடும் சாதாரண பாமரக் கவிஞன் போட்டி போட முடியுமா என்ன? இருந்த போதிலும் நாட்டுப்பாடல்கள் காலங்காலமாக

மக்களை ஈர்த்தே வந்துள்ளன. அதற்கு முதற்காரணம் அதன்பால் அமைந்துள்ள சந்த இன்பம்.

நாட்டுப் பாடல்களில் எதுகையை விட மோனையே பெரிதும் போற்றப்படுவதைக் காணலாம். ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருதல் நான்கடுக்கி வருதல் நாட்டுப்புறப் பாடல்களில் நாம் காணலாகும் பொதுத் தன்மையாகும்.

உவமையும், உருவகமும், உயர்வு நவிற்சியும் நாட்டுப் பாடல்களில் மிளிர்வதுண்டு, சில சமயங்களில் அவை ஏட்டிலக்கியத்தையும் விஞ்சும்.

## உவமைகள்

மாசி வடுவோ-என் கண்ணே
வைகாசி மாம்பழமோ
கோடை பலாப்பழமோ-என் கண்ணே
கொஞ்சி வந்த ரஞ்சிதமோ
.....

(ரஞ்சிதம்—மனோரஞ்சித மலர்)

அடுப்பு மொழுவி கண்ணே
அறுகு போல் கோலமிட்டு
சிப்பி ஒடிச்சு வச்சு-என் கண்ணே
செருக உமி அணைச்சி
விறகு ஒடிச்சு வச்சு-என் கண்ணே
வெங்கலம் போல் தீமூட்டி
.....

அறுகு—அறுகம்புல்

## உருவகம்

உருவகம் உவமையின் சுருங்கிய வடிவம். உருவகத்திற்குக் கற்பனைத்திறன் மிகுதியும் வேண்டும். உவமை பருப்பொருள் தன்மை வாய்ந்தது; உருவகம் நுண்பொருள் தன்மை வாய்ந்தது. படிக்காத அந்தத் தாய்மார்களுக்கு நூலறிவு இல்லாமலிருக்கலாம்; நுண்ணறிவு உண்டே! அது பிறப்போடு வந்ததாயிற்றே! வாழ்க்கையில் ஏமாற்றங்கட்கு ஆளான ஒருத்தித் தன் ஆற்றாமையை வெளியிடுகிறாள். கணவன் கண்டவளோடு பழகுவதை ஆரம்பத்திலேயே தடுக்கத் தவறியவளாய் இப்படிப் பாடுகிறாள். இத்தகைய பாடல்களில் சோகம் இழையோடும். ஒப்பாரியின் சாயல் தென்படும்.

சிவப்பு நல்ல புளியங்கொட்டை
சீர்காழி மாம்பழமாம்
என் சேந்தாளிதான் திங்கச் சொல்லி
சீதை மனம் துனிஞ்சி (ஒ... ஆரோரோ)

வெள்ளை நல்ல புளியங்கொட்டை
வேலூரு மாப்பிள்ளையாம்
வேண்டியரேதான் திங்கச் சொல்லி
வேசி மனந்துனிஞ்சேன் (ஒ...ஆரோரோ)

## உயர்வு நவிற்சி

மண்ணெல்லாம் சர்க்கரையாம்-என் கண்ணே ஐயா
மணலில்லாப் பச்சரிசி
கண்ணில்லாத் தேங்காயாம்-கண்ணே ஐயா
கணுவில்லாச் செங்கரும்பாம்

பாலடையும் சங்கும்-என் கண்ணே நீ
பரப்பி வெளையாடையிலே
பாலடையைக் காணுமின்னு-நீ
பாம்பைப் புடிச்சழுதே

## நகைச்சுவை

ஒரு குழந்தை நேரங்கெட்ட நேரத்தில் அழுகிறது. அதை இவ்வாறு நையாண்டி செய்து அமைதிப்படுத்துகிறாள் அந்தத் தாய்.

காப்புடி கம்பரிசி
காலு போன கோழி குஞ்சு
காலு கறி போடலன்னு
அழுவுறாண்டா சாமத்திலே

மூக்காப்படி கம்பரிசி
மூக்கு போன கோழி குஞ்சாம்
மூக்கு கறி போடலன்னு
அழுவுறாண்டா சாமத்திலே

இக்கட்டுரையில் ஆராயப்பட்டவை முப்பத்திரண்டே பாடல்கள் என்பதால் ஆறே தலைப்புக்களில் அவை அடங்கி விட்டன. பாடலின் எண்ணிக்கை மிகும் போழ்து வகைப்பாடும் மிகலாம். எனினும், இவற்றின் பகுப்பாகவும், விரிவாகவுமே அவை அமையும். எது எப்படி இருந்த போதிலும் இதுவரை அச்சில் வராதவையும் கட்டுரை ஆசிரியரால் நேரில் போய்த் திரட்டப்பட்டவையுமான பாடல்களை மையமாகக் கொண்டதே இக்கட்டுரையின் தனித் தன்மையாகும்.

# கபிலர்

டாக்டர் இரா. சாரங்கபாணி
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

இக்கட்டுரையின் ஆசிரியர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள தேவன்குடியில் 18-9-1925இல் பிறந்தவர்; சென்னைப் பல்கலைச் கழகத்தில் எம். ஏ., பி. எச். டி., ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் 32 ஆண்டுகள் பணி புரிந்துள்ளார்; பன்னிரண்டு ஆண்டுகள் அக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணி புரிந்துள்ளார். திருக்குறள் உரை வேற்றுமை, பரிபாடல் திறன், இயற்கை விருந்து, முதலிய நூல்களை எழுதியுள்ள இவர் இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இலக்கியத் துறையில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணி புரிந்து வருகின்றார். ''சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்'' உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கபிலர் வள்ளல் பாரியின் உயிர்த்தோழ ராயும் அவைக்களப் புலவராயும் திகழ்ந்தவர். பாரி வாழ்ந்த காலத்தே பறம்பு மலையிலும் பின்னர், செல்வக் கடுங்கோ வாழியாதனின் உளங்கவர் புலவராய் மலை நாட்டிலும் வாழ்ந்தவர். மலையமானது முள்ளூர் மலையும் கொல்லி மலையும் அவர் பழகிய இடங்களாகும். ஆகவே கபிலரது வாழ்க்கையை நோக்கும்போது அவர் வாழ்ந்து மகிழ்ந்த இடம் பெரும்பாலும் மலைப்பகுதியே என்பது போதரும். எனவேதான் குறிஞ்சித் திணைப் பாடல்களை மிகுதியும் பாடிக் 'குறிஞ்சிக் கபிலர்' எனப் பாராட்டுப் பெற்றார்.

'புலனழுக்கற்ற அந்தணாளன் இரந்து சென்மாக்கட்கு இனி இடனின்றிப் பரந்திசை நிற்கப் பாடினன்,[1] எனப் பண்பும் குலனும் புகழும் சுட்டியும் 'பொய்யா நாவிற் கபிலன்'[2] என வாய்மை சுட்டியும் மாறோக்கத்து நப்பசலையாரும்; 'உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக்கபிலன்'[3] எனச் சீர்த்தியையும் வாய்மையையும் ஏத்தி நக்கீரரும்; 'செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்'[4] எனப் புலமை, வாய்மை, புகழ்மைகளை வியந்து பொருந்திலிளங்கிரனாரும் கபிலரைப் போற்றியுள்ளனர். பொய்யா நாவிற் கபிலன் என்ற பாராட்டடைகள் அவர்தம் வாய்மையே பேசிய ஒழுக்கச் சிறப்பை உணர்த்தும்.

'யானே பரிசிலன் மன்னும் அந்தணன்; நீயே வரிசையில் வணக்கும் வாள் மேம் படுநன்; நினக்கியான் கொடுப்பக் கொண் மதி'[5] என்று விச்சிக் கோனிடம் பாரி மகளிரை அழைத்துச் சென்று திருமணம் செய்விக்க முயன்றபோது கூறியமையால் கபிலர் அந்தண மரபினர் என்பது புலனா கின்றது. பின் இருங்கோவேளிடம் அழைத்துச் சென்றபோதும் பாரிமகளிரைக் காட்டி, 'இவரே நெடுமாப்பாரி மகளிர்; யானே, தந்தைதோழன்; இவர் என் மகளிர்; அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே'[6] என்று மீண்டும் தம் பிறப்புப் பற்றிக் குறித்துள்ளார், தலைவன் ஊர்ந்து வரும் குதிரையின் தலையிலுள்ள உச்சி மயிர், பார்ப்பனக் குறுமகன் குடுமிபோல் உள்ளது[7] என உவமை கூறுவர். தலைவன் அனுப்பிய திருமணச் செய்தியைப் பெண் வீட்டார் ஏற்றுக் கோடற்கு, 'நெய்பெய் தீயின் எதிர்கொண்டாங்கு'[8] என வேள்வி யுவமை வருகிறது. இவ்வுவமை ஆட்சிகளும் அவர் பிறந்த குலத்தை உறுதிசெய்கின்றன.

பாரி மகளிர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்த பின்னர் வடக்கிருந்த கபிலர், 'இம்மையில் பாரியுடன் வாழ்ந்து இன்புற்றதுபோல மறுமையிலும் வாழ்ந்து இன்புறவேண்டும்; அங்ஙனம் உடன்வாழும் நல் வாய்ப்பினை நல்குக, என ஊழினை வேண்டுவர்.

இம்மை போலக் காட்டியும்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த பாலே 9

தலைவியின் நறுமணச் சிறப்பைக் குறிக்க, 'அகிலின் நறும்புகை கமழும் கபில நெடுநகரின் மணம் ஒப்புமை கூறப் பட்டுள்ளது.

அகிலார் நறும்புகை ஐதுசென் றடங்கிய
சுபில நெடுநகர் கமழு நாற்றமொடு
மனைச்சொறிந் தனளே வாணுதல் 10

கபிலர் என்ற பெயர் தம் காலத் திலேயோ அதற்கு முன்னரோ சிறப்புற்றி ருந்தமை, அப்பெயரை ஒரு நெடுநகர்க்கு இட்டுக் 'கபிலநெடுநகர்' என வழங்கினர் என காட்டும் கபிலர் கூற்றால் அறியலாம்.

சேரமான் செல்வக் கடுங்கோ வாழி யாதன் கபிலர்க்கு நூறாயிரங்காணம் நல்கியதோடு நன்றா என்னும் மலை மீதேறிக் கண்ணுக் கெட்டியவரை தெரியும் நாடுகளையும் வழங்கினான் எனப் பதிற்றுப் பத்துப் பதிக உரை கூறும். இப்பதிகச் செய்தி,

நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே 12

எனச் சுருக்கமாகப் பதிற்றுப் பத்தில் பெருங்குன்றூர் கிழாரால் குறிக்கப் பெற்றுள்ளது.

குறிஞ்சித் திணையின் கருப்பொருள் களாகிய யானை, புலி, குரங்கு, மயில் முதலியவற்றின் இயல்புகளையும் யானைக் கும் புலிக்கும் நடக்கும் போரினையும் மலை வாழ் குறவர்களின் பழவழக்கங்களையும் பண்புகளையும் தெளிவாகவிளக்கியுள்ளார்.

### யானை:

தினைப்புனங்காக்கும் பரண்மீதிருப் பவன் இரவில் தினைமேய வரும் யானை யைத் தீக் கொள்ளியைக் காட்டி விரட்டு கிறான். அதற்கு அஞ்சி மீள்கின்ற யானை விண்ணகத்தினின்றும் கீழே விழும் விண் மீன் ஒளியைக் கண்டு அதுவும் கொள்ளியின் ஒளியெனப் பிறழ உணர்ந்து விரைந்து ஓடுகிறது.[13] வாழையும் சுரபுன்னையும் செறிந்த மலையில் பிடி தூங்குகிறது. அப் பொழுது மேகம் படர்ந்து அதனை மறைத்துவிடுகிறது. அந்நிலையில் அதன் காதற் களிறு தன் துணையைக் காணாது அரற்றிப் பிளிறுகின்றது.[14] ஆண்புலி, காட் டிலே மடப்பிடி ஈன்ற குட்டியைக் கொள் வதற்காகப் பலாமரத்தின் நிழலிலே பதுங்கியிருக்கும்.[14அ] கைப்பற்ற எண்ணிப் பாயும்போது, களிறு தப்பி ஓடியதால் புலி சினம் மிகுந்து கார் மேகம் இடிப்பதுபோல முழங்கும்.[15] யாமத்தில் இரும்புலியினைத் தொலைத்த பெருங்கையான வெஞ்சினத் துடன் இடிப்போலப் பிளிறும்.[16] யானை

புலிகளின் இயல்புகளை எடுத்துக் காட்டிய கபிலர் அவற்றிடையே நிகழும் போரினைப் பலவாறு சித்திரித்துக் காட்டுகிறார்.

முளைவளர் மூங்கிலைச் சிதைத்துத் தன் சுற்றத்தோடு மேய்ந்த யானை, ஒடுங்கி மறைந்திருந்த புலியைக் கோட்டினால் சிதைத்துக் கொன்று அதனால் குருதி பட்டுச் செந்நிறமாகிய கொம்பினை மழை நீரில் கழுவியது. பின் மலைச் சாரலில் பைய நடந்துசென்று, பகையை ஒழித்த பெருமித உள்ளத்தோடு பீடு நடையுடன் தன்பிடியினை நெருங்கி முயங்கி வாழையஞ் சிலம்பில் துயிலும்.[17] பூத்துக்குலுங்கிய வேங்கை மரத்தைப் புலியெனக் கருதிச் சீற்றம் கொண்டு அதன் அடி மரத்தில் குத்திய மதயானை அம்மரத்திலிருந்து தன் கொம்பினைப் பெயர்த் தெடுக்க முடியாது, மலையகம் எதிரொலிக்கப் பிளிறி வருகிறது.[18] புலியைத் தாக்கி வென்ற யானை களைப்பால் மலைப்பக்கத்தே உறங்குகிறது. நனவிற் புலியைத் தாக்கி வென்ற செயல் அதன் அடிமனத்திலே கிடந்தமையால் அந்நனவே கனவாகியது. கனவுகண்டு உறங்கியபோதே, திடீரென விழித்து எழுந்து, புதுவதாக மலர்ந்த வேங்கை மரத்தைப் புலி என்று நினைத்து அதனைக் கோட்டினால் குத்திச் சாய்த்தது. பின்னர் அம்மரத்தைக் கண்டபோது, கனவை நனவாக்கிய தன் செயலை நினைந்து நாணித் தலைகுனிந்தது.[19] வெகுளி நிலையில் நிகழ்ந்த யானையின் செயலையும் வெகுளி தீர்ந்தபின் அறிவு நிலையில் நிகழ்ந்த அதன் செயலையும் கபிலர் நுட்பமாகப் புலப் படுத்தியுள்ளார். யானையின் முறம் போன்ற செவி வழியே மறைந்துவந்த புலி யானையைத் தாக்கியது. வீரம் செறிந்த நூற்றுவர் தலைவனான துரியோதனனை வீமன் பொருது வீழ்த்தியது போலத் தன் கோட்டினால் மார்பிற்குத்திப் புலியை வீழ்த்தியது; பின்னர் மல்லர்களை மாய்த்த கண்ணனைப் போலக் குன்றிடத்துள்ள யானைக் கூட்டத்திடையே பெருமிதத் துடன் அந்த யானை உலாவியது.[20]

பெரும்புலியின் வலிமையைத் தொலைத்த யானை தழையுணவருந்தி அமைதியாக மலைச்சாரலில் அருவியொலி தாலாட்ட உறங்குகிறது.[21] தொல்காப் பியத்தில் வரும் 'தடுமாறு தொழிற் பெயர்' என்பதற்குக் காட்டாகப் 'புலி கொல் யானை' என்பதனைக் காட்டிப் புலியைக் கொன்ற யானை புலியாற் கொல்லப்பட்ட யானை என்று உரையாசிரியர்கள் விளக்கந் தருவர். இவ்விளக்கத்திற்கு விளக்கமாக, கபிலர் யானைக்கும் புலிக்கும் நிகழ்ந்த போரைப் பல நிலைகளில் விளக்கியிருப்ப தைக் காண்கின்றோம்.

### குரங்கு

வாழைத் தீங்கனியாலும் பலவின் தீஞ்சுளையாலும். பாறையிலுள்ள நெடுஞ்சுனையில் உண்டான தேறலை நீரென மயங்கி உண்ட கடுவன் பக்கத்திலுள்ள மிளகுக் கொடி படர்ந்து சந்தன மரத்தில் ஏற முடியாமல் அங்கிருக் கும் பூப்படுக்கையிற் படுத்து எதிர்பாரா இன்பமெய்தி உறங்கும்.[22] முதிய கடுவன் மிளகுத் தளிர் உண்பதை வெறுத்து மலை முகட்டினின்றும் மரங்களுக்குத் தாவ, அப்பொழுது பல்வகைப் பூக்கள் உதிர்ந்து சிதறுகின்றன. அம்மலர்கள் பரவிக் கிடக் கும் இடம் வேடன் ஆடும் வெறியாட்டுக் களம் போலக் காட்சியளிக்கிறது.[23] அருவியிற் பாய்ந்த மந்தி பலாப்பழத்தைத் தெப்பமாகக் கொண்டு அதனைக் கடந்து அடுத்த கரை அடைகிறது.[24] தலைமை யான குரங்கு ஒன்று பிரப்பஞ்சிறுகோல் கொண்டு பாறையிற் பெய்த மழை நீர்க் குமிழியைப் புடைக்கும்.[25] மிளகிலை மேய்ந்த கடுவன் மணங்கமழும் நறைக் கொடியால் பாறைமீது தவழ்ந்து செல்லும் வெண்மேகத்தை அடிக்கிறது.[26]

மலையில் வளர்ந்த மூங்கிலில் குரங்குக் குட்டி பாய, மீனெறி தூண்டில்போல அம் மூங்கில் விண்ணோக்கி விசைத் தெழுகின் றது.[27] காட்டுமயில் பாறையில் ஈன்ற முட்டையைக் குரங்குக் குட்டிகள் வெயி லில் உருட்டி விளையாடுகின்றன.[28] பலாப் பழத்தைக் கவர்ந்த குரங்கு கானவன் வில்லினின்று அம்பைத் தொடுத்தவுடன் அஞ்சிப் போர்க்குதிரை போலச் சாரலில் உள்ள மூங்கில் மீது தாவிப் பாயும்.[29] பனி தோய்ந்த மலையில் பலாக்கனியைக்

கவர்ந்துண்ட கடுவன், தன் செம்முக மந்தி யொடு பொலிந்து மகிழ்ந்து, மலையுச்சியில் உள்ள மூங்கிலின் மேல் உறங்கும் [30] இவ்வாறு குரங்கின் இயல்புகளைக் கபிலர் ஆங்காங்கே சுட்டிக் காட்டுவர்.

## மயில்

எரிபோல மலர்ந்துள்ள வேங்கை மரத்தில் மயில் அமர்ந்திருக்கும் காட்சி, பொன்னணிகளை நிறையத் தம் மேனியில் அணிந்துள்ள மகளிர் போல் தோன்றுகிறது.[31] மலர்ந்த வேங்கை மரத்தில் இருக்கும் தோகையுடைய மயில் பூப்பறிக்கின்ற மகளிர் போல் காட்சிதருகிறது.[32]

மலைச் சாரலில் உள்ள காட்சிகளைக் கொண்டு கபிலர் ஒரு நாடக அரங்கினை அமைக்கிறார்.[33] மூங்கில் வண்டு துளைத்த துளை வழியே கோடைக் கால காற்றுப் புகுந்து ஒலிக்கிறது. அவ்வொலி குழலோசையாகிறது. மான் குரல் தும்பொலியாக அமைகிறது. வண்டினோசை யாழிசையாகிறது. இவ்வின்னிசைகளைக் கேட்டு மந்தி மகிழ்கிறது. மயில் விறலி போல் ஆடுகிறது. குறிஞ்சித்திணைப் பொருள்களைக் கொண்டே இங்ஙனம் ஒரு நாடகக் காட்சியைக் கபிலர் அமைத்துள்ளார். இதனைப் பின்பற்றிச் சாத்தனார், கம்பர் முதலிய புலவர் பலரும் இதுபோன்ற நாடகக் காட்சியினை அமைத்துள்ளனர்.

## குறவர்

அருவிப் பரப்பில் ஐவனம் விதைத்து, காட்டுமல்லிகை மரற்கொடி முதலியவற்றைக் களையெனப் பிடுங்கி எறிந்து, குறவர்கள் பயிர் விளைக்கின்றனர்.[34] காந்தள் செறிந்த மலையில் வாழும் அம்மக்கள் வறுமையால் வாடும்போது யானைக் கோட்டை விற்று உண்கின்றனர்.[35] மாமரத்திலிருந்து விழுந்த இளம் பிஞ்சுகளைக் குறவர்கள், மழைபெய்யும் பொழுது விழும் ஆலங்கட்டிகளைத் தொகுப்பது போலப் பொறுக்கிச் சேர்க்கின்றனர்.[36] யானைத் தந்தத்தாலும் சந்தன மரத்தால் செய்த உலக்கையாலும் ஐவன வெண்ணெல்லைக் குறமகர் குற்றுவர்.[37]

குறத்தி அடுப்பெரிப்பதற்குச் சந்தன மர விறகுகளைப் பயன்படுத்துகிறாள். அடுப்பிலிருந்து எழும் சந்தனப்புகை மலைச் சாரலிலுள்ள வேங்கைப் பூஞ்சினைகளில் தவழ்கிறது. கடவுள் வழிபாடு செய்து மலைவாழ் மக்கள் வேண்டிய வேண்டியாங்கு எய்துகின்றனர். மழை தேவைப்படும்போது கடவுளுக்குப் பலியிட்டு, வேண்டிப் பெறுகின்றனர். வெள்ளத்தால் பயிர் பாழாகும்போதும் இறைவனை வேண்டி மழையை நிறுத்திக் கொள்கின்றனர். வெள்ளப் பாழ் வந்தபோது, மழை நீங்கிய மகிழ்ச்சியால் புனத்தில் அறுவடை செய்து மகிழ்கின்றனர்.[39]

கபிலர் தம் உள்ளம் கவர்ந்த நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் ஓரிடத்திற் குறிப்பிடுவதோடமையாது வேறிடங்களிலும் சிலபல பாடல்களில் குறிப்பிடுவர்.

தினைமேய வந்த யானையின் நடையொலியைக் கேட்டுக் கானவன் நள்ளிரவில் பரண் மீதிருந்து கவண் கல் வீசுகிறான். அக்கல் அம்புபோல் விரைந்து சென்று மலைப்பக்கத்திலிருந்த வேங்கைப் பூங்கொத்தைச் சிதறித் தேன் கூட்டைச் சிதைத்துப் பின்னர்ப் பலாப் பழத்தினுள் தங்கிவிடுகிறது என்று, அகநானூற்றுப் பாடலில் (318) வருகிறது. இந்நிகழ்ச்சியே இன்னும் சற்று விரிவாகக் கலித்தொகைப் பாடலில், (41) மழை பெய்த நள்ளிரவில் மின்னொளியில் பிடியொடு மேயும் களிற்றின் அடி ஒதுக்கம் கேட்டுக் கானவன் ஆசினிப் பலாமரத்தின் மேல் கட்டப்பட்ட பரண் மீது ஏறிக் கவண் எறிந்தான் எனவும் அது வேங்கைப் பூவைச் சிதறி ஆசினியின் கனிந்த பழத்தை வீழ்த்தித் தேனிறாலைத் துளைத்து, மாந்தளிரை மயக்கி, வாழை மடலைக் கிழித்து, இறுதியில் பலாப்பழத்தில் தங்கியது எனவும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

முற்றிய வளைந்த பெரிய தினைக்கதிர் யானையின் கைபோல் உள்ளது என்பது பல விடங்களில் குறிப்பிடப் பெறுகின்றது. ''பைந்தாட் செந்தினை மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்ப்பு கரிக்குறட்டு

இறைஞ்சிய செறிகோட் பைங்குரல்'' எனக் குறுந்தொகையிலும் (198)

முறஞ்செவி யானைத் தடக்கையின் தடைஇ
இறைஞ்சிய குரல பைந்தாள் செந்தினை

என நற்றிணையிலும் (376)

'' நெற்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை
முத்தார் மருப்பின் இறக்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுநீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினை''

எனக் குறிஞ்சிப் பாட்டிலும் (35-38) தினைக்கதிர் யானைக்கைபோல் உள்ளமை சுட்டப்படுகின்றது.

பறம்புமலை உச்சியிலிருந்து ஓடி வரும் நீரினைக் காட்டிலும் பாரிவள்ளல் இனியவன்; மென்மைத் தன்மை வாய்ந்தவன் எனக் கபிலர் கூறுவர்.

மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினும் இனிய சாயல்
பாரி வேள் (புறம் 105 : 6-8)

இதே கருத்தினைக் கலித்தொகையில் தலைவன் பண்பியலைப் புலப்படுத்தும் போதும் குறிப்பிடுவர் :

தன்மலை
நீரினும் சாயல் உடையன்; நயந்தோர்க்குத்
தேரீயும் வண்கை யவன் (கலி 42 : 19-21

இக்கலித்தொகையடிகள் பாரியை நினைந்து பாடியவை போலவே தோன்றுகின்றன.

மலர் மேலே இடையறாது மழை பொழிவதனால் அது பொலிவு குன்றிக் காணப்படும் காட்சி கபிலர் உள்ளத்தை ஈர்த்துள்ளது. குறுந்தொகையில் தலைவியின் புலந்தழுத கண்ணுக்குத் தண் துளியேற்ற குவளை மலர் உவமையாகிறது.

அதுபுலந் தழுத கண்ணே, சாரல்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றனவே (291)

இக்கருத்து, குறிஞ்சிப் பாட்டிலும் வருகிறது.

நீரெறி மலரிற் சாஅய் இதழ்சோரா
ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கள் (247,248)

பறம்புமலைச் சுனையிலும் இக்காட்சியினைக் கண்டு கபிலர்,

தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யாதாயினும் (புறம் : 105)

எனப் பாடியுள்ளார். குறிஞ்சிப் பாட்டிலுள்ள கருத்து, புறநானூற்றில் கபிலர் பாட்டில் வருதலாலும் குறிஞ்சிக் கலியிலுள்ள கருத்து அகநானூற்றிலும் புறநானூற்றிலும் கபிலர் பாடலில் வருதலாலும் குறிஞ்சிக் கலி, குறிஞ்சிப் பாட்டு முதலியவற்றைப் பாடியவரும் வெவ்வேறு கபிலரல்லர்; ஒருவரே என்பது போதரும்.

குறிஞ்சிக் கருப் பொருள்களை நுனித்தாய்ந்த கபிலரது மதி நுட்பத்தினை அவர் கையாண்ட உவமைகளாலும் அறியலாம். யானை, பொருளாகவும் உவமையாகவும் பயின்றுவந்து அவர்தம் கூரிய புலமையினை உணர்த்துதலை இனிக் காண்போம்.

யானை முதுகின் இருபுறமும் தொங்கும் கயிறு மலை மேலுள்ள ஒற்றடிப் பாதை போல் உள்ளது.

களிறு மென்றிட்ட கவளம் போன்றது, தேனைப் பிழிந்து எறிந்த கோதுடைச் சிதறல்.

பகையானையுடன் பொருத யானையின் சிவந்த கொம்பு, காந்தளின் புதிதாக அரும்பும் மொட்டுப் போன்றது.

யானையும் புலியும் பொருதபோது, தும்பி வேங்கைமலர் பூத்த கிளை எனக் கருதிப் புலியிடமும் வேங்கைச் சினை எனக் கருதிப் புகர் முகவேழத்திடமும் மாறி மாறிச் செல்வது, இருபெருவேந்தர் வாட்போர் செய்யுங்காலை, நட்பாக்க அவ்விருவரிடமும் மாறிமாறிச் சான்றோர் செல்வது போலுள்ளது.

களிற்று முகத்தில் உள்ள புள்ளி போன்றது தெறுழ்க் கொடியின்பூ. மாசறக் கழுவப் பெற்ற யானை போலப் பெருமழையால் தூய்மை செய்யப் பெற்ற துறுகல் தோன்றும்.

30459

வேறு சில பொருள்களும் உவமையாக அமைந்துள்ளன. வாழையினது வளைந்த காய்களையுடைய குலைக்குப் புலியின் அடி உவமை.

மலையினின்று ஒடி வரும் அருவிக்கு மலையில் ஊடுருவிச் செல்லும் இற்றியின் வெள்வேர் உவமை.

தலைவியின் சிவந்த கண்ணுக்கு விலங்கினை வீழ்த்து அதனுடம்பினின்று பறித்த குருசு தோய்ந்த அம்பு உவமை.

முல்லையரும்புக்குக் காட்டுப் பூனையின் கூரிய பற்கள் உவமை. இவ்வுமைகளும் கபிலரின் இயற்கைப் பொருள்களை ஆழ்ந்து நோக்குத் திறனைக் காட்டும். இத்தகு திறன் வாய்க்கப் பெற்றமையால் தான் குறிஞ்சிக் கபிலர் எனும் சிறப்பு கபிலருக்கு வாய்த்தது.

கபிலர் வாய்மைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து திகழ்ந்தவர். அதனால் தான், வாய்மை யறம் அவருடைய பாடல்களில் அழுத்தமாகவும் சிறப்பாகவும் பேசப் படுகின்றது. செல்வக் கடுங்கோவாழியாதன் பண்பியலைப் பாராட்டும்போது. அவன் வாய்மையாளன் என்பதைப் பொய்யா நாவிற் கபிலர் சிறப்பாகப் பாடுகிறார். உலகம் ஊழிக்காலத்தால் அழிந்தாலும் அவன் சொன்ன சொல் தவறமாட்டான். விளையாட்டிலும் கூடப் பொய் பேசமாட்டான் என்கிறார்:

நிலந்திறம் பெயரும் காலை யாயினும்
இளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே (பதிற் 63)

நகையினும் பொய்யா வாய்மை (பதிற் 70)

பொய்மை பேசி அறம் வழுவி நடப்பவன் நாட்டிலே வளம் குன்றும் என்பது கபிலர் உட்கிடக்கை.

வள்ளி கிழ்விழா; ரைமிசைத் தேன்தொடா;
கொல்லை குரல்வாங்கி ஈனா; மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுகு லான் (கலி. 39)

வாய்மை பிறழ்ந்தவன் மலையகத்தே அருவியிலும் நீர் ஓடாது என்பது கபிலர் நம்பிக்கை. பொய் கூறுபவன் நாட்டின் அருவியில் நீர் ஓடுதலைக் கண்டு வியந்து, கூறுவதாகப் பிறர் கூற்றில் வைத்து

இலங்கும் அருவீத்து இலங்கும் அருவித்தே-
வானின் இலங்கும் அருவித்தே-தானுற்ற
ருள் பேணான் பொய்த்தான் மலை (கலி 41)

எனக் கபிலர் பாடுவர்.

வாய்மை கூறுபவன் பொய் கூறின் அது திங்களுள் தீத் தோன்றியது போல மருட்சிக்குரியது என்பர். இக்கருத்துக்கள் எல்லாம் அவர் வாய்மையறத்தின்பால் கொண்ட அழுத்தத்தினால் தோன்றியவை எனலாம்.

வள்ளல் பாரியிடமும் பின்னர் வாழியாதனிடமும் கொண்ட நட்பின் தொடர்பால் அவர் நட்பின் சிறப்பையும் அதனால் பெறும் இன்பத்தையும் நன்கு கண்டு துய்த்தவர். அதனால் தான், உயர்ந்தோர் நட்பிற்குத் தாமரைப் பூவில் எடுத்துச் சந்தனமரத்தில் தொடுத்த சிறந்த தேனை உவமை காட்டுகின்றார்.

தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை (நற்-1)

நட்புப் பற்றிக் கபிலர் கூறும் வேறு சில கருத்துக்களும் உளங்கொளத்தக்கவையாகும். முதலிலேயே ஒருவரது குணக் குற்றங்களை ஆய்ந்து நட்புக் கொள்ள வேண்டுமேயன்றி நட்புக் கொண்டபின் அவரது இயல்புகளை ஆராயலாகாது.

நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே (நற்-32)

நண்பர்களிடம் தோல்வியடைவதுபற்றி நாணுதல் கூடாது. கண்ணோட்டம் காரணமாக நட்பினர்க்கு அஞ்சுதல் வேண்டும்.

பகையெனிற்
கூற்றம் வரினும் தொலையான்தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் (கலி 43)

நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே (பதிற் 63)

இவ்வாறு நட்புப் பற்றிய சில அறங்களைக் கபிலர் தம் வாழ்க்கை பயிற்சியினால் உணர்ந்து வெளிப்படுத்தியுள்ளார். கபிலர் வாழ்க்கையில் பின்பற்றிய சீரிய அறங்களைத் தம் புரவலர்பாலும் கண்டு மகிழ்ந்து அவற்றைப் பாராட்டிப் பாடியிருத்தல் உணர்ந்து இன்புறத்தக்கதாம்.

# பழந் தமிழில் இசைச் செய்திகள்

பேராசிரியர் து. ஆ. தனபாண்டியன்

'கருணாமிருத சாகரம்' எனும் இசைத்தமிழ் நூலின் ஆசிரியரான தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் பெயரராகிய இக் கட்டுரையாசிரியர் 24-10-1921-இல் தஞ்சாவூரில் பிறந்தவர்; திருச்சி, தில்லி, சென்னை-வானொலி நிலையங்களின் செய்நித் துறையில் ஏறத்தாழ முப்பதாண்டுகள் பணியாற்றியவர்; வானொலிக்காகப் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர்; 'தமிழ் வளர்த்த கிறித்தவப் பெரியார்கள்...' 'இசைவழி இறைப்பணி' 'இறை வழிபாடும் இசையும்' 'தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் வாழ்க்கை வாலாறு' ஆகிய நூல்களை இயற்றியவர்; பல புதிய பண்களைக் கண்டுபிடித்தவர்; இவர் இப்போது தமிழ்ப் பல்கலைக் கழக இசைத் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

## முத்தமிழில் இசையின் சிறப்பு

பாரதத்தின் மிகப் பழமையான இரு மொழிகள் தமிழும் வடமொழியுமாகும். இவைகளில் தமிழ் இன்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சிறந்த பேரிலக்கிய மொழியாக இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இன்று வரையும் அது ஒரு பேச்சு மொழி யாகவும் இருந்து வருகிறது. அது மேலும் வளம் பெற்று வளர்ந்து வருகிறது.

தமிழ் மொழியை இயல், இசை, *கூத்து என மூன்று வகைப்படுத்தி முத் தமிழ் எனப் பழந்தமிழ் மக்கள் அழைத் தனர். எனவே தமிழ் மொழி வரலாற்றில், இசை ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

## தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புகள்

அமிழ்தமெனப் போற்றப்படும் தமிழ் மொழியில் உள்ள நூல்களிலெல்லாம் மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்தது தொல் காப்பியமாகும். இது கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டு காலத்திலேயே இயற்றப்பட்டதென இலக்கிய வல்லு நர்கள் கருதுகின்றனர். இடைச் சங்கத் தாருக்கும் கடைச் சங்கத்தாருக்கும் நூலா

* கூத்து என்பது நாட்டியம், அபிநயம், நடிப்பு ஆகிய மூன்றும் சேர்ந்த கலையைக் குறிக்கிறது.

யிற்றுத் தொல்காப்பியம் என இறையனார் களவியலுரை பகருகின்றது. இந்நூலில் கூறப்பட்ட கணக்கின்படி இடைச் சங்கம் கி.மு.1320-ல் தொடங்கப் பெற்றதாதல் வேண்டும் என்பது அறிஞர்களின் முடிவாகும். எனவே இவரது காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும் எனத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம் பூரணர் உரையுடன் விளக்கவுரையும் பதிப்பித்துள்ள பண்டித வித்வான் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் இந்நூலின் ஆராய்ச்சி முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்கள் கொண்டது. எழுத்தும் சொல்லும் தமிழ் மொழியின் அமைதியை விளக்குகின்றன. பொருள் பழந் தமிழரின் ஒழுக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. பழமையும் வளமையும் கொண்ட இந்நூல் மூலம் பழங் காலத்தில் தமிழ்மொழி எவ்வாறு வளமுள்ளதாக இருந்தது என்பதையும், தமிழர்களின் வாழ்வியல், ஒழுக்கம் முதலியவை எவ்வாறு இருந்தன என்பதையும் நாம் அறிய முடிகிறது.

அகத்திய முனிவர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரும், இடைச் சங்கப் புலவருள் ஒருவருமான தொல்காப்பிய முனிவர் இதை இயற்றிய ஆசிரியராவார். பழமையான காப்பியக்குடியில் பிறந்ததால் இப்பெயர் வந்தது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய அறுவரில் ஒருவரான இளம்பூரணர், தொல்காப்பியனாரின் ஆசிரியரான அகத்தியனார் முத்தமிழுக்கும் இலக்கணமாக அமைந்த அகத்தியம் என்ற நூலை இயற்றியிருந்ததாகச் சொல்லுகின்றார். இறையனார் களவியலுரையிலும் இது கூறப்பட்டுள்ளது. இந்த நூல் இறந்து போயிற்று. தொல்காப்பியத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே முத்தமிழ், மிகச் சிறப்பான நிலையிலிருந்தது என்று இதிலிருந்து நாம் ஊகிக்க இடமுண்டு.

தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாக இருந்தபோதிலும் இதில் இசைத் தமிழைப் பற்றிய குறிப்புகளையும் ஆங்காங்கே நாம் காணலாம். உதாரணமாகத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 33-வது நூற்பாவில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு வெண்ணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்

தொல்காட்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையில் இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது.

''உயிரெழுத்துக்களெல்லாம் தமக்குச் சொன்ன அளவினைக் கடந்து ஒலித்தலையும், ஒற்றெழுத்துக்கள் தம்மொலி முன் கூறிய அளபின் நீடலையும், குரல் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூற்கண்ணும் உள எனச் சொல்லுவர் அவ்விசை நூலாசிரியர் என்று சொல்லுவர் புலவர்''.

இதுபோன்று இன்னும் இசைசம்பந்தப் பட்ட பல குறிப்புகளைத் தொல்காப்பியத்துள் நாம் ஆங்காங்கே காணலாம்.

## திவாகரத்தில் காணும் இசை விளக்கம்

சேந்தன் திவாகர நூலில் ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் பண்டைக் காலத்தில் வழங்கிய ஏழிசையின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

குரலே துத்தம்-கைக்கிளையுழையே
இளியே விளரி-தாரமென்றிவை
எழுவகையிசைக்கும்-எய்தும் பெயரே.

மற்றொரு சூத்திரத்தில் ஏழிசைக்குரிய எழுத்துக்களைச் சொல்லுகிறார்.

''ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் இவ் வேழெழுத்தும் ஏழிசைக்குரிய.''

ஏழு உயிர் நெட்டெழுத்துக்களையும் கொண்டு பூர்வ தமிழ் மக்கள் ஏழிசையைப் பாடினார்கள் என்று இதிலிருந்து நாம் ஊகிக்கலாம். இப்பொழுதுகூட இராக

ஆலாபனை செய்யும்போது நாம் அகாரம் இகாரம் போன்ற உயிர் நெட்டெழுத்துக் களையே பயன்படுத்துகிறோம்.

## சிலப்பதிகார உரையில் ஏழிசைப் பெயர்

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியர் கி. பி. பதின் மூன்றாம் அல்லது பதிநான்காம் நூற்றாண் டில் வாழ்ந்தவர் என்றும், அடியார்க்கு நல்லார் கி. பி. பதினைந்தாம் அல்லது பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் தமிழ் மொழியில் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த உரையாசிரியர்கள் காலத்தில் என்ன இசைச் சொற்கள் வழக்கிலிருந்தனவோ அவைகளையே இவர்கள் தங்கள் உரைகளில் பயன்படுத்தியுள்ளனர். உதாரணமாக குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் பெயரில் பூர்வ காலத்தில் வழங்கப்பட்ட ஏழு சுரங்களும் பிற்காலத்தில் சட்ஜம் (ச), ரிஷபம் (ரி), காந்காரம் (க), மத்யம் (ம), பஞ்சமம் (ப). தைவதம் (த), நிஷாதம் (நி) என்ற வட மொழிப் பெயர்களில் அழைக்கப்பட்டன,

## பாணர் வாழ்வும் யாழும்

பண்டைய காலத்தில் தங்கள் வாழ் நாள் முழுவதும் பாடுவதையே தொழி லாகக் கொண்ட பாணர்கள் சிரும் சிறப்பு மாய் வாழ்ந்து வந்தனர். இவர்கள் யாழ் என்னும் இனிய இசைக் கருவியை இசைத் துக் கொண்டு இனிமையாகப் பாடி இறை வனைத்துதித்து யாவரையும் மகிழ்வித்து வந்தனர். [1]அக்காலத்தில் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழ் என்னும் நான்கு வித யாழ்களும் வேறு பல யாழ்களும் இருந்தன என்று தெரி கிறது. அக்கால மன்னர்களும் பாணர் களைப் போற்றி ஆதரித்து வந்தனர். பாணர், சென்னியர், வைரியர், சூதர், மாகதர், இன்னிசைகாரர், மதங்கர் முத லிய பெயர்களால் அழைக்கப்பட்டனர். இன்னிசைப் பணிபுரிந்த பெண்களுக்கு விறலி மதங்கி, பாண்மகள், பாடினி என் னும் பெயர்கள் இருந்தன என்று திவாகர முனிவர் இயற்றிய சேந்தன் திவாகரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைக்குச் சுமார் [2]1800 ஆண்டு களுக்கு முன்பு இளங்கோவடிகள் இயற் றிய சிலப்பதிகாரம் ஓர் இசைக் கருவூல மாகத் திகழ்கிறது. சொற் சுவையிலும் பொருட் சுவையிலும் இக்காப்பியம் சிறந்து விளங்குகிறது. இதற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் சிகண்டி என்னும் முனிவரால் இயற்றப்பட்ட இசை நுணுக்கம், யாமளேந்திரரென்னும் ஆசிரி யரால் செய்யப்பட்ட இசைத் தமிழ் நூலா கிய இந்திர காளியம், அறிவனார் இயற் றிய பஞ்சமரபு, ஆதிவாயிலாரென்னும் ஆசிரியரால் செய்யப்பட்ட பரத சேனாப தீயம் என்னும் நாடகத் தமிழ்நூல், மதி

---

1 சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் செய்யுள் வரி 26-ல் வரும்

''யாழும் குழலும் சிருமிடறும் . . . . . என்னும் அடிக்கு அடியார்க்கு நல்லார் எழுதியிருக்கும் உரையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

'' யாழ் நால்வகைப்படும், அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், என்பன, இவை நான்கும் பெரும்பான்மை சிறுபான்மையான் வருவனவுமுள என்னை?''

2 இளங்கோவடிகளுக்குத் தமையனான சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குக் கோயில் சமைத்து விழாக் கொண்டாடிய காலத்தில் இலங்கையில் கயவாகு என்ற அரசன் இருந்தான் என்று இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன. இன்றைக்குச் சற்றேறக்குறைய 1860 வருடங்களுக்கு முன்பு கயவாகு அரசன் இலங்கையை ஆண்டு வந்தான் என்று சரித்திர வாயிலாகத் தெரிய வந்துள்ளது. இவன் முதற் கயவாகு என்று அழைக்கப்பட்டான். இளங்கோவடிகளின் காலம் முதற் கயவாகுவின் கால மென்றே கருதப்படுகிறது.

-ஆதாரம் : உ. வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப்பெற்ற சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும்.

வாணர் என்னும் பாண்டியர் இயற்றிய மதிவாணர் நாடகத் தமிழ் நூல் என்னும் ஐந்து இசை நூல்களை மேற்கோள்களாகக் கொண்டுள்ளார். தேவ விருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம், தாளவகையோத்து கடைச்சங்கப் புலவர்கள் இயற்றிய பெருங் குருகு, பெருநாரை போன்ற இசை நூல் கள எல்லாம் அவர் காலத்திற்கு முனபே இறந்து போயின என்று அவர் தெரிவித்தி ருக்கிறார்.

அடியார்க்கு நல்லார் எழுதிய உரை யில் ஆங்காங்கே அக்காலத்து இசைத் தமிழ் பற்றிய பல உண்மைகள் காணக் கிடைக்கின்றன. உதாரணமாக இக் காலத்து இசைவாணர்களைவிட அந்தக் காலத்து இசைப் புலவர்கள் இசைத் தமி ழில் அதிகத் தேர்ச்சி பெற்று விளங்கினார் கள். நம்மிடையே ஓர் இசை வல்லுநர் இசை நிகழ்ச்சி நிகழ்த்துவதாயிருந்தால் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டியவைகள் எல்லாம் நமக்குத் தெரியும். சுருதி பிசகா மல் பாட வேண்டும்; தாளம் சரியாக இருக்க வேண்டும். ஓர் இராகத்தை அதனுடைய வடிவத்தைக் கெடுக்காமல் இசை இலக்கணப் பிழையில்லாமல் பாடத் தெரிந்திருக்க வேண்டும். பாடும் பாடல் புரியாத ஒரு மொழியில் இருந்தாலும் பர வாயில்லை; இன்னும் சொல்லப் போனால் தானம், நிரவல், பல்லவி இவைகளெல் லாம் தெரிந்திருந்தால் ரொம்பவும் நல்லது. ஆனால் அக்காலத்து இசைவாணனுக்கு இவைகளெல்லாம் தெரிந்ததுமல்லாமல், எல்லாவற்றிலும் முக்கியமான மற்றொன் றும் தெரிந்திருந்தது. பாட்டு இயற்றின வரின் மனக் குறிப்பையும், அந்தப் பாட்டின் முழு அர்த்தத்தையும் உணர்ந்து, உணர்ச்சியோடு பாடுவதுதான் அது. இன் னும் ஒரு சிறப்பான குறிப்பு என்னவென் றால், அவன் இயல், இசை, கூத்து ஆகிய எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தான். பல நிகழ்ச்சிகளில், இவை மூன்றும் ஒரே சமயத்தில் சாதிக்கப்பட்டன. இவைகளை யெல்லாம் பார்க்கும்போது ஆதிகாலத்தில் இசைத் தமிழ் எவ்வளவு சிறப்புப் பெற்று விளங்கினது என்று நினைத்து வியக்க இட மிருக்கிறது.

## தண்ணுமையின் முதன்மை

அடுத்தாற்போல் இசைக் கருவிகளுக் குள்ளே தண்ணுமைக்குத்தான் இளங்கோ வடிகள் முக்கிய இடம் கொடுத்திருக்கிறார். (தண்ணுமை = மிருதங்கம்) இசையாசிரிய னின் இலக்கணத்தைப் பற்றி விவரித்த வுடனே தண்ணுமையைப் பற்றித்தான் சொல்லுகிறார். இது மட்டுமல்ல. இசை யரங்கில் வாய்ப்பாட்டிற்கு அடுத்தாற் போல், நுட்பமான லயச் சொற் கட்டுகளை அமைத்து, வாசித்து, இசைக்கே ஒரு துணைபோல் நிற்பதால், இந்த இன்னி சைக் கருவிக்கு அதிகக் கவனம் செலுத்தி யிருக்கிறார். இசையாசிரியனுக்குத் தெரிந் தவையெல்லாம் தண்ணுமையோனுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்லு கிறார்.

யாழும், குழலும், கன்னடப் பாடலும் இசைந்துக் கேட்போர் செவிக்கு எது இனி மையாய் இருக்கும் என்று அறிந்து, அந் தந்த இசைக் கருவியைத் தகுந்த முறையில் இயக்கும்படி செய்து வந்தான். அப்படி இசைக் கருவிகள் எல்லாம் இசையைப் பிறப்பிக்கும்போது தானும் குறிப்பறிந்து சேர்ந்து வாசிக்குமிடத்தில் அடக்கி வாசித் தும், மற்ற இசைக் கருவிகளின் குறையை நிரப்பியும், தன் கலையின் திறனையும் சிறப்பையும் அதே சமயத்தில் எடுத்துக் காட்டுவதற்கும் வல்லவனாய் இருந்தான் என்று தெரிகிறது.

## குழலிசை

நமது பண்டைத் தமிழ் இலக்கியத்தில் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள இசைக் கருவிகளுள் குழலும் ஒன்று. இது மிகவும் பழமையான காலந்தொட்டு வழக் கில் இருந்து வருகிறது. நமது முன்னோர் குழலை வேய்ங் குழல் என்றும், புல்லாங் குழல் என்றும் வங்கியம் என்றும் அழைத்து வந்திருக்கின்றனர். புல்லாங்குழல் செய்வ தற்குரிய மரங்களையும் உலோகத்தையும்

உரையில் குறிப்பிட்டிருக்கிறார். மூங்கிலில் செய்வது உத்தமம்; வெங்கலத்தில் செய்வது மத்திமம்; சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களில் செய்வது அதமம் என்று கூறியிருக்கிறார். குழலை எவ்வாறு செய்வது என்பது பற்றி அடியார்க்கு நல்லார் விவரமாக விளக்கியிருக்கிறார். மேலும் குழலாசிரியனின் அமைதி முதலியவைகளெல்லாம் சிலப்பதிகாரத்தில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

## யாழாசிரியன்

யாழாசிரியனின் அமைதி பற்றிச் சொல்லும்பொழுது பண்ணுப்பெயர்த்தல் (கிரகபேத முறை) முறையின்படி கிடைக்கும் செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை ஆகிய ஏழு பாலைப்பண்களையும் மற்றும் பல்வேறு பண்களையும் இசைப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தான் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

## கருணாமிர்த சாகரம்

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இசைத்தமிழைப் பற்றித் தாம் கண்டறிந்த உண்மைகளையும், பல ஆய்வாளர்கள், அறிஞர்கள் ஆகியோரின் கருத்துகளையும், பழந்தமிழ்நூல்களில் சொல்லப்பட்ட அரிய பல விளக்கங்களையும் ஒருங்கே தொகுத்துச் சுமார் ஏழு ஆண்டுகள் விடா முயற்சியுடன் பாடுபட்டுக் ''கருணாமிர்த சாகரம்-முதல் புத்தகம்'' என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலை 1917-ம் ஆண்டு வெளியிட்டார். இசை சம்பந்தமான பல அரிய உண்மைகளைக் கொண்ட இந்நூலை ஓர் ஒப்பற்ற இசைக் களஞ்சியம் என்று கூறலாம். இந்நூல் சுமார் 1200 பக்கங்களைக் கொண்டது. இதில் இசைத்தமிழின் சிறப்பு, இசையின் பூர்வீகம், ஓர் இயக்கில் (ஸ்தாயி) உள்ள சுருதிகள் பற்றிப் பண்டைத் தமிழ் நூல்களில் கூறப்பட்டவை, பண்ணுப் பெயர்த்தல் முறையில் (கிரகபேத முறை) பிறக்கும் செம்பாலைப்பண் முதலிய பாலைப்பண்கள் பற்றிய குறிப்புகள், பழந்தமிழ் நாட்டில் வழங்கி வந்த பாலை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என்னும் நால்வகை யாழ்களைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## யாழ் நூல்

யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் நூலை இயற்றிய அருட்டிரு விபுலானந்த அடிகளார், பழங்கால யாழ்கள் பற்றிய விவரங்கள், பாணர் வரன்முறை, ஏழிசையின் பிறப்பு, ஏழ்பெரும்பாலைப் பகைகள், பன்னிருபாலை, யாழாசிரியன் அமைதி, தேவாரத்தில் இசையமைதி, இக்காலத்தில் வழங்கும் எழுபத்திரண்டு மேள இராகங்களின் மூர்ச்சனைகள் முதலியவற்றைத் தமது நூலில் விவரித்துள்ளார்.

## இசைக் கலையின் மறுமலர்ச்சி

பழந்தமிழர்களாகிய நம் முன்னோர்கள் இசையில் பல ஆராய்ச்சிகள் செய்து நமக்குக் கொடுத்திருக்கிற இசைச் செல்வங்களும், பழம் இசைக் கருவிகளும் எண்ணற்றன. இசைத்தமிழையும் நமது பண்டை இசைக் கருவிகளையும் பாதுகாத்துப் போற்றி வருதல் நம் அனைவரின் கடமையாகும். அருமையான கருத்துள்ள பல புதிய தமிழ்ப் பாடல்களுக்கு இசை இலக்கணமும் மரபு நெறியும் பிறழாமல் இசை அமைப்பது நல்லது. அதுவே நம் இசைக்கலையின் மறுமலர்ச்சியாகும்.

# பழமொழியின் தோற்றம்

பேராசிரியர் வ. பெருமாள்
எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்., எப்.எப்.ஐ.

இக்கட்டுரையாசிரியர் தஞ்சை மாவட்டத்திலுள்ள கொரடாச்சேரியில் 30-9-1934-இல் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், கருநாடகத்தில் உள்ள கோலார் தங்க வயலில் தங்கி பல்வேறு தமிழ்க் கழகங்களை நிறுவி தொண்டு செய்து வருகிறார். முன்னூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் ஐந்து தமிழ் நூல்களையும் ''GLIMPSES OF TAMIL CULTURE'' என்னும் ஆங்கில நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

## பழமொழியின் தோற்றம்

ஒவ்வொரு பழமொழியும் எங்கு எச் சூழ்நிலையில் தோன்றிற்று என்பதை ஆராய்ந்து அறுதிபிட்டு உறுதியாகக் கூற இயலாது. நம் வரலாற்றறிவுக்கு உட்பட்ட பழமொழிகளின் தோற்றத்தை ஆராயுங் கால் அவை தோன்றிய இடம், காலம், சூழ்நிலை ஆகியவற்றை உறுதியாகக் கூறலாம். நம் வரலாற்றறிவுக்கு அப்பாற்பட்ட பழமொழிகளாக இருப்பின் அவற்றின் தோற்றம், வரலாறு ஆகியவை குறித்து முடிவுக்கு வருதல் கடினமாக இருக்கும். பழமொழியின் தோற்றத்தைக் காலம், இடம், சூழ்நிலை ஆகிய மூன்றின் அடிப்படையில் ஆராயலாம். சில பழமொழிகளுக்கு இம்மூன்றையும், சிலவற்றிற்கு இரண்டையும், இன்னும் சிலவற்றிற்கு ஒன்றையும் வைத்து அறிந்து கொள்ளலாம். இம்மூன்றில் ஒன்றாற் கூட அறிய முடியாத வாறு பல பழமொழிகள் இருக்கின்றன.

ஒட்டக் கூத்தரும் புகழேந்திப் புலவரும் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமகாலப் புலவர்கள். ஒட்டக்கூத்தர் சோழன் அவைக் களப் புலவர். சோழன் பாண்டியன் மகளை மணந்தபோது சோழனுக்குத் தன் அவைக் களப் புலவர் புகழேந்திப் புலவரையும் மகட் கொடையாகச் சோழ நாட்டிற்கு அனுப்பினார். ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரின் திறமையையும், புலமையையும் கண்டு அவர்பால் வெறுப்பும் காழ்ப்பும் கொண்டார். ஒட்டக்கூத்தர் தம் சூழ்ச்சியால் சோழனைக் கொண்டு புகழேந்திப்

புலவரைச் சிறையில் வைத்தார். சோழன் மனைவி தன் தந்தையின் அவைக்களப் புலவர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதை அறிந்து மனம் வருந்தி அந்தப்புரத்தைத் தாழிட்டுக் கொண்டிருந்தாள். சோழன் வந்து கதவைத் தட்ட அவள் திறந்தாள் அல்லள். பின்னர் ஒட்டக்கூத்தர் பாடினால் அரசி கதவைத் திறப்பாள் என்னும் எண்ணத்துடன் அவரை அழைத்துப் பாடுமாறு சொன்னான். ஒட்டக்கூத்தர் பாட்டைக் கேட்டவுடன் அரசி தன் தோழியை நோக்கி,

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு
இரட்டைத் தாழ்ப்பாள் போடு'

என்று சொன்னாள். இதுவே பழமொழியாக நிலைத்து விட்டது. இப் பழமொழி 12-ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டு அரண்மனையில் அந்தப் புரத்திலுள்ள அரசியின் வாயிலிருந்து தோன்றிற்று. இப் பழமொழி தோன்றிய காலம், இடம், சூழ் நிலை முதலிய மூன்றும் தெளிவாகப் புலனாகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் பட்டுக்கோட்டை. பட்டுக் கோட்டைக்குச் செல்ல விரும்பிய ஒருவன் அருகில் உள்ள ஊரில் கொட்டைப் பாக்கு வாணிபம் செய்பவனை நோக்கிப் 'பட்டுக் கோட்டைக்கு வழி எது' என்று கேட்டிருப் பான். கொட்டைப் பாக்கு வணிகன் வழிப் போக்கன் தன்னிடம் கொட்டைப் பாக்கின் விலையைத் தான் கேட்கிறான் என்று தவறாகப் புரிந்து கொண்டு கொட்டைப் பாக்கின் விலையைச் சொல்லியிருப்பான். உடனே வழிப்போக்கன் 'பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்கின் விலை யைச் சொல்கிறாயே' என்று கேட்டிருப்பான். அதுவே பழமொழியாக நிலைத்து விட்டது. இப்பழமொழி தோன்றிய இடமும், சூழ் நிலையும் நமக்குத் தெளிவாகின்றன. ஆனால், இது தோன்றிய காலம் நமக்குத் தெரியாது.

நெய்தல் நிலத்தில் வாழ்கின்ற சிலர் கடல் வணிகராக இருப்பர். அயல் நாடு களுக்கும் கப்பல் வாயிலாகப் பண்டங்களை ஏற்றுமதி செய்து வாணிபம் நடத்துவது அவர்தம் இயல்பு. அவர்கள் பயன்படுத்திய பாய்மரக் கப்பல் காற்றைப் பொறுத்து இயங்கும். காற்றடிக்கின்ற திசை நோக்கியே பாய்மரக்கப்பல் செல்லும். சாதகமாகக் காற்று வீசுவதற்கு மாறாகப் பாதகமாக வீசத் தொடங்கினால் கப்பல் திசை தடுமாறி விடும். நடுக்கடலில் மூழ்கி விடும். கப்பல் மூழ்கிவிட்டால் கப்பற்காரன் வாழ்வும் பாழாகிவிடும். இவ்வுண்மையைக் ''கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு'' என்று மக்கள் சொல்லத் தொடங் கினர். அதுவே பழமொழியாக வேரூன்றி விட்டது. இப்பழமொழி எக்காலத்தில் தோன்றியது என்பதை நம்மால் உறுதியாக கூற இயலாவிட்டாலும் நெய்தல் நிலத்தில் தோன்றியது என்பதை நாம் உறுதியாகக் கூறலாம்.

மருத நிலத்தில் நடைபெறுகின்ற தலை மையான தொழில் உழவு. உழவுத் தொழி லில் ஏர் உழுதல் ஒரு பெரும் பணியாகும். ஒரு வயலில் ஒரே நேரத்தில் பல ஏர்களைப் பயன்படுத்தி உழுதல் மரபு. அவ்வாறு பல ஏர்கள் உழும்போது முன்னால் உள்ள ஏர் எவ்வாறு செல்கின்றதோ அவ்வாறே பின் ஏரும் செல்லும். முன்னேரும் பின்னேரும் ஒரே வரிசையில் செல்கின்ற மருத நிலக் காட்சியைக் கண்டு அக்காட்சியிலிருந்து பிறந்தது 'முன்னேர் போன வழி பின்னேர்' என்னும் பழமொழி. இப்பழமொழியின் தோற்றம் மருத நிலம் என்பது தெளிவு. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' என்பது உழவனின் வரவு-செலவுக் கணக்கிலிருந்து தோன்றிய பழ மொழி.

'செட்டி மிடுக்கா சரக்கு மிடுக்கா' என் பது வாணிபச் செட்டியாரின் கடையி லிருந்து தோன்றிய பழமொழி. 'தூண்டில் காரனுக்கு மிதப்பு மேல் கண்' என்பது மீன வர் வாழ்க்கையிலிருந்து தோன்றிய பழ மொழி. இடையன் ஆட்டுக்குட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு ஊரெல்லாம் தேடிய நிகழ்ச்சி பழமொழியாகிவிட்டது. இது முல்லை நிலத்தில் தோன்றிய பழ மொழியாகும். 'மாமியார் மெச்சிய மருமகள் இல்லை' 'ஆகாத மாமியார்க்குக் கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்' முதலிய பழ

மொழிகள் மாமியார் மருமகளின் கசப்பான உறவின் காரணமாகக் குடும்பச் சூழ்நிலையில் தோன்றியவை. 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்னும் பழமொழி சமையல் அறையில் தோன்றியிருத்தல் வேண்டும். 'கோவில் பூனை தேவர்க்கு அஞ்சுமா' என்னும் பழமொழி கோயிலில் அல்லது கோயிலுக்கு அருகில் தோன்றியிருத்தல் வேண்டும். 'எல்லாம் நுழைந்தது வால் மட்டும் நுழையவில்லை' என்னும் பழமொழி திண்ணைப் பள்ளிக்கூடத்து மாணவன் வாயிலாகத் தோன்றியிருத்தல் வேண்டும். சீச்சீ இந்தப் பழம் புளிக்கின்றது, பூனைக்கு யார் மணி கட்டுவது, 'குரங்கு மத்தியஸ்தம் செய்தது போல', ஆப்பு அசைத்த குரங்கு போல, வால் அறுந்த நரி போல், பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன், புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டது போல, ஆகிய பழமொழிகள் விலங்குக் கதையிலிருந்து தோன்றியவை. 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்' என்பது நோயாளியின் வேதனைக் குரலிலிருந்து தோன்றிற்று. 'தெனாலிராமன் பூனை [குதிரை] வளர்த்த கதை' என்னும் பழமொழி 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தெனாலிராமன் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தோன்றிற்று. 'ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைப்பதா' என்னும் வினாவை முதன்முதலாக ஒரு கூத்தாடி மற்றவர்களைப் பார்த்துக் கேட்டிருத்தல் வேண்டும். அவ்வினாவே பழமொழியாகி விட்டது.

'கலியாண வீட்டில் பிள்ளை வளர்ப்பதுபோல்' என்பது திருமண வீட்டில் தோன்றிய பழமொழி. திருவாசகத்தை ஆழ்ந்து படித்துச் சுவைத்த மெய்யன்பர் 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்று சொல்லியிருப்பார். திருவாசகத்தைப் பற்றிய அவர் வாசகமே நல் வாசகமாக அமைந்த பழமொழியாகி விட்டது. ஆட்டுவாலைப் பன்முறை கூர்ந்து கவனித்த ஒருவன் 'ஆட்டுக்கு வால் அளவெடுத்து வைத்திருக்கின்றது' என்று சொல்லியிருப்பான். அவன் உரைத்த விலங்கியல் உண்மையே பழமொழியாக நிலைத்து விட்டது.

ஐப்பசித் திங்களில் மிகுதியாக மழை பெய்வதையும், தைத்திங்களில் உழவன் வாழ்வு மலரத் தொடங்குவதையும் ஆண்டு தோறும் கூர்ந்து கவனித்தவன் 'ஐப்பசி மாதம் அடைமழை', 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்லியிருத்தல் வேண்டும். காலத்தின்—பருவத்தின் அடிப்படையில் எழுந்த அவ்வுண்மையுரைகள் பழமொழிகளாகிவிட்டன. ஆங்கிலேயன் குண்டும் மருந்தும் பயன்படுத்தித் துப்பாக்கியால் குருவி முதலிய பறவைகளைச் சுடுவதைக் கண்ட தமிழன் முதன் முதலாகக் குண்டும் மருந்தும் இல்லாமல் குருவியைச் சுடலாமா? என்று பிறிதொரு சந்தர்ப்பத்தில் கேட்டிருப்பான். அக்கேள்வியே பழமொழியாகி விட்டது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது தமிழிலுள்ள மிகச்சிறந்த பழமொழிகளுள் ஒன்று. இப் பழமொழி பொதுவாக எக்காலத்தில் எங்கு யாரால் யாருக்கு முதன் முதலாகக் கூறப்பட்டது என்பதைச்சொல்ல இயலாது. இத்தகைய தோற்றமும் வரலாறும் தெரியாத பழமொழிகள் தமிழில் மிகுதியாக இருக்கின்றன.

ஒவ்வொரு பழமொழியின் தோற்றத்தையும் வரலாற்றுக் கண்கொண்டு நோக்குமிடத்து அஃது ஒருவர் கூற்றாக இருப்பதைத் தெளிவாக அறியலாம். பழமொழி மக்கள் எல்லோருக்கும் உரியது என்றாலும் அது பலராலும் ஒரே சமயத்தில் சொல்லப் பட்டிருக்க முடியாது. ஒருவர் சொல்ல அதைப் பலரும் பன்முறை சொல்லிச் செல்லி எதுகை, மோனை, சந்த இன்பம் முதலிய நயத்தைப் பெறச் செய்து பண்படட மொழியாக்கி—பயன்மொழியாக்கி—பழமொழியாக மாற்றியிருத்தல் வேண்டும். பழமொழி ஒருவருடைய சாதுரியம் பலருடைய அறிவு (The wishdom of many and the wit of one) என்னும் ஜான் ரஸ்ஸல் பழமொழிக்கு வகுத்த வரையறை இங்கு நோக்கத்தக்கது. சுருங்கக் கூறுமிடத்து ஒவ்வொரு பழமொழியும் காலம், இடம், சூழ்நிலை, வரலாறு, கதை, நிகழ்ச்சி ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றிற்று எனலாம்.

# பொற்காலம்

திருக்குறள்மணி டாக்டர் க. த. திருநாவுக்கரசு
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

20-1-1931 இல் பிறந்த இவர், தமிழ், வரலாறு, மொழியியல் ஆகியவற்றுள் பெரும்புலமை பெற்றவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.லிட்., பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் மு.வ.வின் படைப்பிலக்கியம் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டமும் பெற்றனர்; திரையன் முதலிய புனைபெயர்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதியவர்; சென்னை மணலித் தமிழ்க் கல்லூரியின் முதல்வராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆய்வுமையத் தலைவராகவும் விளங்கியவர்; நாடகம், வரலாறு, திறனாய்வு போன்ற துறைகளைச் சார்ந்த முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர்; 1975 இல் ''திருக்குறள் நீதி இலக்கியம்'' எனும் நூலிற்குச் சாகித்திய அகாடமி பரிசு பெற்றவர். இவர் இப்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இணைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

ஒரு நாட்டின் வரலாற்றில், பலவகையான சிறப்புகளை உடைய ஒரு கால கட்டத்தைப் 'பொற்காலம்' எனப் போற்றுவது வழக்கம். பிற கனிமங்களுக்கு (உலோகங்களுக்கு) எல்லாம் இல்லாத ஒரு தனிச் சிறப்புப் பொன்னிற்கு (தங்கத்திற்கு) உண்டு. மனிதன் நாகரிகம் அடையத் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை, பொன்னே தலை சிறந்த—பெறுதற்கரிய—உலோகமாகப் போற்றப்பட்டு வருகிறது, இதற்குக் காரணம் என்ன? பொன் பொலிவு மிக்கது; ஒளி விட்டுப் பிரகாசிப்பது; நயமானது; எளிதில் எடுத்துச் செல்ல வசதியானது; அருமையாகக் கிடைப்பது. மாசடையாதது. இக்காரணங்களால்தான், எல்லா நாடுகளிலேயும் பொன்னினைச் சிறப்புமிக்க உலோகமாகப் பன்னெடுங் காலமாகப் போற்றி வருகின்றனர். தனி மனித வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் 'பொன்'னிற்கு ஒப்பான வேறொரு பொருள் கிடையாது.

## கீழை மேலை நாடுகளின் மரபு

நாட்டு வரலாற்றினைக் கற்காலம், செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக் காலம் எனப் பெரிதும் பயன்பட்ட பொருளைக் கொண்டு, அக்காலப் பண்பாட்டைப் பாகுபடுத்திக் கூறுவர். ஆனால், இந்த அடிப்படையில் 'பொற்காலம்' எனும் பாகுபாடு செய்யப்படுவது இல்லை. 'ஏன் இவ்வாறு செய்வதில்லை?' எனும் ஐயம் எழலாம்.

இதற்கு இரு காரணங்களைக் கூறலாம். ஆதி மனிதன் மலைவாழ் மனிதனாகவும், காட்டில் வாழ் மனிதனாகவும் கற்களால் செய்யப்பட்ட கருவிகளைப் பேரளவில் பயன்படுத்துவதற்குக் கற்ற காலத்திலேயே, 'பொன்' எனும் பளிச்சிடும் பொருளை அவன் மலைப் பாறைகளின் இடையிலும், ஆற்றுப் படுகைகளிலும் கண்டு எடுக்கக் கற்றான். ஆனால், அப் பொருள் மிகமிகக் குறைந்த அளவிலேயே கிடைத்தமையால், அதனைப் பேரளவிற்குப் பயன்படுத்த இயலாதவனாக இருந்தான்.

கிடைத்தற்கு அருமையாக இருந்தமையால், அதன் பயன் மதிப்பும், பெருமையும் மற்றவற்றை விடப் பன்மடங்கு உயர்ந்தன. எனவே, பிற உலோகங்களைப் போல, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அல்லது பயன்படும் தட்டுமுட்டுச் சாமான்களைப் பொன்னினால் செய்து பயன்படுத்த இயலாதவனாக மனிதன் இருந்து வருகிறான்.

மனித வாழ்க்கை அமைதியும் இன்பமும் நிறைந்ததாக, பல்வேறு துறைகளிலும் வளமும் வனப்பும் வாய்ந்ததாகத் தொடர்ந்து விளங்கும் கால கட்டத்தை—ஊழிப் பிரிவை—நம் முன்னோர்கள் ''கிருதயுகம்'' என்று போற்றினர். இந்தியரின் ''யுகப்பாகுபாடு'' இந்த முறையில் செய்யப்பட்டதேயாகும். நம் முடைய இதிகாசங்களும், புராணங்களும், சதக நூல்களும் இந்த நால்வகை யுகங்களைப் பற்றி மகிழ்ச்சியும், அச்சமும் ஊட்டத்தக்க வகையில் சித்திரிக்கின்றன.

நம் முன்னோர்கள், ''வரவர உலகம் கெட்டுவிட்டது; மனிதன் கெட்டு விட்டான்'' எனும் துன்பியல் (Pessimistic) நோக்கிலேயே, கிரேதாயுகம், திரேதாயுகம் துலாபரயுகம், கலியுகம் எனும் நால்வகை யுகங்களை வகுத்துள்ளனர். நாம் கலியுகத்தில் வாழ்ந்து வருகிறோம். இப்பொழுது கலியுகம் தொடங்கி 5084 ஆண்டுகளாவதாக நம் பஞ்சாங்கம் கூறுகிறது! 'கலி' என்னும் சொல்விற்குத் 'துன்பம்' என்பது பொருள். எனவே, நாம் வாழும் காலத்திற்குத் 'துன்பம் நிறைந்த'—'துன்பமயமான' காலம் என்பது பொருள்.

இந்த நான்கு யுகங்களிலும் சிறந்தது, விரும்பத்தக்கது கிரேதாயுகம் என்பது நம் நாட்டினரின் நம்பிக்கையாகும். இதனால் தான், ருஷியப் புரட்சியை,

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றில் எழுந்ததுபார்; குடியரசு என்று
உலகறியக் கூறிவிட்டார்!
அடிமைக்குத் தளை இல்லை! யாரும் இப்போது
அடிமை இல்லை! அறிக! என்றார்

என்று பாடிய நம் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், அடுத்து

இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்,
கிருதயுகம் எழுக மாதோ!
(பா. கவி. பக். 221)

எனத் தம் விழைவார்ந்த விருப்பத்தை வெளிப் படுத்தியுள்ளார். இந்தியரின் மனப் போக்கை அறிவதற்கு இது சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

மேற்கு நாட்டுச் சிந்தனையாளர்களே, முதன் முதல் 'பொற்காலம்' எனும் கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். கி.மு. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்க நாட்டில் ஹெஸியட் (Hesiod) எனும் கவிஞர் வாழ்ந்தார். அவர் 'வேலையும் நாள்களும்' (Works and days) எனும் நெடும்பா ஒன்றை இயற்றியுள்ளார். அதில் தான், இன்று நாம் எல்லாரும் பயன் படுத்தும் காலப் பாகுபாடு இடம் பெற்று இருக்கிறது.

அவர் ''உலகம் வரவர எல்லாத் துறைகளிலும் தேய்ந்து கொண்டு-இழிந்து கொண்டு-வருகிறது'' எனும் கருத்தினை உடையவராக வாழ்ந்தார். மனித இன வரலாற்றின் தொடக்க காலத்தையே (நாகரிக வரலாற்றின் முற்பகுதியை) 'பொற் காலம்' என்று அவர் குறிப்பிடுகிறார். மனிதன் தோன்றி, வளர்ந்து, நாகரிகம்

அடைந்து வரும் (அவருடைய காலத்திற்கு முற்பட்ட) 'கடந்தகாலத்தை' ஹெஸியட், ''பொற்காலம், வெண்கலக் காலம், இரும்புக்காலம்'' என்று மூன்று வகையாகப் பாகுபடுத்தி, அவற்றின் இயல்புகளை விளக்கிப் பாடியுள்ளார்.[1]

இப்பொழுது நடைபெறுவது 'இரும்புக் காலம்' என்று அவர் தெரிவித்துள்ளார். இரும்புக்காலத்தின் கொடுமையை ஐம்பது' அடிகளில் படம்பிடித்துக் காட்டுகிறார்.[2]

இப்பாகுபாட்டை முன்மாதிரியாகக் கொண்டே, கி.மு. நான்காம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் தோன்றிய அரிஸ்டாட்டில் மனிதர்களை மூன்று வகையாகப் பிரித்தார். ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் (ஆளும் சமூகம்) எல்லாம் 'பொன் போன்ற மனிதர்கள்' வாணிகம் செய்வோர் எல்லாம் 'வெண்கலம் போன்ற மனிதர்கள்' பிற பணிகளை—உழவுத் தொழில் முதல் பல தொழில்களையும், எடுபிடி வேலைகளையும் செய்வோர் 'இரும்பு போன்ற மனிதர்கள்' என்பது அரிஸ்டாட்டிலின் பாகுபாடு. அவருடைய கருத்துப்படி, கிரேக்க நாட்டின் 'அடிமைகள்' எல்லாரும் இரும்பு போன்ற இழிந்த மனிதர்களாவர்'[3]

ஹெஸியட்டின் காலப்பாகுபாடு, நம் நாட்டவர்களுடைய யுகப்பாகுபாட்டைப் போன்றது என்பதை, முன்கண்ட விளக்கத்தால் எளிதில் உணரலாம். மேலும், பண்டைக் கிரேக்கரும், இந்தியரும், 'எதிர் காலம் துன்பமயமானது' எனும் எண்ணப் போக்கு உடையவர்களாக இருந்தனர் என்பதும் சிந்திக்கத் தக்கதாகும்.

## வரலாற்று நோக்கில்...!

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில், ஐரோப்பிய நாடுகளில் 'மறுமலர்ச்சி' உண்டாயிற்று.

இதன் விளைவாக ஒவ்வொரு நாட்டின் வரலாற்றையும் எழுதுவதற்கு அறிஞர்கள் முயன்றனர். அப்பொழுது, அவர்கள், ''பொற்காலம்'' ''இருண்ட காலம்'' எனும் கோட்பாடுகளை உருவாக்கினர். நிலவளம், நீர்வளம், குடிவளம், மக்கள் மனவளம், கலைவளம் நிறைந்து போரற்ற அமைதியும், செல்வச் செழிப்பும், வாழ்க்கை வசதிகளும் பெற்று இன்பம் நிறைந்ததாய் ஒரு நாடு எந்தக் காலத்தில் சிறப்புற்று இருந்ததோ, அந்தக் காலத்தைப் 'பொற்காலம்' எனும் தொடரால் போற்றினர்.

ஒரு நாட்டில், எக்காலத்தில் காட்டு வாழ் மக்கள் படையெடுப்பால் அழிவும் துன்பமும் உண்டாகி, அதன் விளைவாக 'அரசு' அமைப்பு மறைந்து, பஞ்சமும் பட்டினியும், வறுமையும் நோயும் கோரதாண்டவம் புரிந்ததோ, அக்காலத்தை 'இருண்ட காலம்' எனவும் சுட்டினர்.

இந்த முறையைப் பின்பற்றியே, தமிழக வரலாற்றில் சங்க காலத்தையும், சோழப் பேரரசர் காலத்தையும் 'பொற்காலம்' என நாம் போற்றுகிறோம், சங்க காலத்திற்கும் பல்லவர் ஆட்சிக் காலத்திற்கும் இடைப்பட்ட கால கட்டத்தை (கி. பி. 300-600) 'இருண்ட காலம்' எனக் கருதுகிறோம். இந்தக் 'கால கட்டத்தில் தான், தமிழர் அல்லாத 'களப்பிரர்' எனும் கொள்ளைக் கூட்டத்தார் தமிழகத்தில் புகுந்து குழப்பம் செய்தனர். தமிழகத்து மூவேந்தரின் ஆட்சிக்கு முடிவு கட்டினர். புறச்சமய ஆதிக்கத்திற்கு வழிகோலினர். பழைய தமிழ்ப்பண்பாடு நலிவுற்றது. இக்காரணங்களால், இக்காலப் பகுதியை, அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் ''இருண்ட காலம்'' எனும் பெயரால், முதன்முதல் சுட்டினார்.

---

1. Works and Days, 110-200
2. காண்க : க. த. திருநாவுக்கரசு; திருக்குறள் நீதி இலக்கியம், பக். 138.
3. அரிஸ்டாட்டிலின் அரசியல், பக். 124.

## பொற்காலத்தின் சிறப்பு இயல்புகள்

இந்திய வரலாற்றையும் ஐரோப்பிய வரலாற்றையும் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது 'பொற்காலத்தினை'' இனங் கண்டு கொள்ளுவதற்குரிய பொதுமைப் பண்புகள் புலனாகின்றன. அவற்றைப் பின் வருமாறு வகைப் படுத்தலாம். அவை (1) ஒரு நாடு வெளியாருடைய படையெடுப்பால் அல்லற்படாமல் அச்சமின்றி, அமைதியான வாழ்க்கைக்கு உதவும் அரசியல் சூழ்நிலையைப் பெற்றிருக்க வேண்டும்; பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் அற்றதாக விளங்க வேண்டும். (2) மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் அரசின் தலையீடோ அடக்கு முறைக் கொடுமைகளோ இன்றி, அல்லவை குறைந்து அறநெறி ஓங்கி இருத்தல் வேண்டும். (3) மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் தொடர்பான பொருள்கள் இயலும் உழைப்பில் கிடைக்கத் தக்கனவாக இருத்தல் வேண்டும். (4) குடிமக்களுடைய நல்வாழ்வில் ஆட்சி செலுத்துவோர் அக்கறை கொண்டவர்களாக இருத்தல் முக்கியமானது. (5) சமூகம், கலை, பண்பாட்டுப் பணிகளுக்கு அரசின் ஆதரவும் ஊக்குவிப்பும் தொடர்ந்து இருத்தல் வேண்டும். (6) பொருளாதார அமைப்பில், நிலை பேற்றுத்தன்மையும் முற்போக்கான வளர்ச்சியும் இருத்தல் வேண்டும். (7) ஒரு நாட்டில் வாழும் பல திறப்பட்ட-பல நிலைப்பட்ட-மக்களிடையே சமத்துவ உணர்வும், சமாதான மனப்பான்மையும் செழிப்பதற்கு ஏற்ற வசதிகள் இன்றியமையாதவை. (8) இவை அனைத்திற்கும் மேலாக, நாட்டு மக்களிடையே தங்களுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தாம் சிறப்புற வேண்டுமென்ற துடிப்பும், அந்நிலையை அடைவதற்குரிய ஆர்வமும், சீரிய முயற்சியும் உந்துதல் ஆற்றல்களாக அமைய வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட இயல்புகளுள் பெரும்பாலானவை, ஒரு நாட்டின் வரலாற்றில் அமைந்துள்ள காலகட்டத்தையே 'பொற்காலமாக' போற்றுவது வழக்கமாக இருந்து வருகிறது.

இந்த இயல்புகள் நிறைந்த சங்க காலத்தையும், சோழப் பேரரசர் ஆட்சிக் காலத்தையும் நாம், தமிழக வரலாற்றின் பொற்காலமாகப் போற்றுவது முற்றிலும் பொருந்தும்.

## புதுவகை விளக்கம்

ஐவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் பண்டைக்கால வரலாற்றுத் துறையின் தலைவரான பேராசிரியர் திருமதி டாக்டர் ரோமிலா தப்பார், 'பொற்காலம்' என்பதனைப் புதிய நோக்கில், சமுதாய உணர்வு அடிப்படையில் விளக்கியுள்ளார்.

பல்வேறு வட்டார அரசுகள், சிறு சிற்றரசுகள் பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வளர்த்து, நாட்டின் ஒற்றுமையைக் குலைத்து, அராசரிகத்தை நிலை நாட்டிய வரலாற்றுக் கால கட்டத்தை ''இருண்ட காலமாக'' இந்த அம்மையார் தெளிவுறுத்தியுள்ளார்.

இதற்கு நேர்மாறான நிலையில், பல வட்டார அரசுகளும் சிற்றரசுகளும் ஆற்றல் மிக்க தலைவனால் அடக்கியொடுக்கப்பட்டு, வலிமை வாய்ந்த மைய ஆட்சியுடன் பரந்து பட்ட நிலப்பரப்பைத் தழுவிய அரசு நிலை நிறுத்தப்பட்ட காலகட்டத்தைப்—'பேரரசு' அமைக்கப்பட்ட காலகட்டத்தைப் 'பொற்கால'மாகப் போற்றுவதே பொருத்தமாகும்[4] என்பது பேராசிரியர் ரோமிலாதப்பாரின் கருத்தாகும்.

இப்புதிய விளக்கத்தின் அடிப்படையில் இந்திய வரலாற்றை நோக்கினாலும், நாம் முன்பு கண்ட இயல்புகளைக் கொண்ட காலகட்டமே, பேரரசுகள் நிறுவப்பட்டு அதன் பயனாக உற்பத்திப் பெருக்கம், வாணிக வளம், போரற்ற நிலைமை, கலைகளின் வளர்ச்சி போன்ற வாழ்வியல் துறை

4. A History of India P. 21

கள் வளம் பெற்ற நிலைமைகளை உடைய தாகத் தோன்றுகிறது.

நாம் முன்னர்க் கண்ட பொற்காலத் தின் எண்வகை இயல்புகளும், ஒரு நாட்டில் நிலையான ஆற்றல்மிக்க ஆட்சி (அரசு) அமைவதால், உண்டாகக் கூடிய விளைவு களாகும். இதனைப் பின்வரும் சான்று களைக் கொண்டு தெளியலாம்.

இந்தியாவில் — வட இந்தியாவில் — முதன்முதல் நிறுவப்பட்ட பேரரசு மௌரியப் பேரரசு. அதன் வீழ்ச்சிக்குப் பிறகு கலகங்களும் குழப்பங்களும் உண்டா யின; காட்டுமிராண்டி மக்களின் படை யெடுப்பும், தாக்குதல்களும் வட இந்திய மக்களின் வாழ்க்கையைச் சீர் குலைத்தன. அதன் பிறகு நிறுவப்பட்ட (கி.பி. நான்காம் நூற்றாண்டில்) குப்தப் பேரரசு, மக்களுக்கு நல்வாழ்வை அளிப்பதில் கருத்தைச் செலுத்தியது. இதனால் நாட்டில் செல்வச் செழிப்பும், அமைதியான வாழ்க்கையும் அமையக் கூடிய சூழ்நிலை உருவாயிற்று. இதன் விளைவாகக் கலைகளையும், கலைஞர்களையும் போற்றி ஆதரிக்கும் புரவலர்களும், பேரரசர்களும்தோன்றினர். சந்திரகுப்த விக்கிரமாதித்தன் ஆட்சிக் காலத்தில் இந்திய நாகரிகமும் பண்பாடும் புதுவாழ்வு பெற்றன. எனவே, குப்தர் களுடைய ஆட்சிக் காலத்தை, இந்திய வரலாற்றின் முதற் 'பொற் காலமாக'ப் போற்றுவது ஐரோப்பிய வரலாற்று அறிஞர்களின் வழக்கமாயிற்று.

பாபர் தொடங்கி வைத்த முகலாயர் ஆட்சி, அக்பரின் ஆட்சிக் காலத்தில், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வள மிக்கப் பேரரசாக வளர்ந்து சிறந்தது. அக்பரின் பல்வேறு ஆக்கப் பணித் திட்டங் களாலும், வளர்ச்சிப் பணிகளாலும் வட இந்தியாவில் இந்திய-இசுலாமியக் கலவைப் பண்பாடு தழைத்தோங்கலாயிற்று. இதன் பயனாக, அக்பருடைய பேரனான ஷாஜகானுடைய ஆட்சிக் காலம், இந்திய வரலாற்றில் 'இரண்டாவது பொற் கால மாகப்' போற்றத்தக்க சிறப்பினைப் பெற்றது.

இந்தியாவின் விடுதலைக்குப் பிறகு, ஜவகர்லால் நேருவின் தலைமையில், இந்தியக் குடியரசு அமைந்தது. முதன் முதலாகத் தனியரசுகளே இல்லாத, ஒன்று பட்ட பாரதத் திருநாட்டில் மையக்குவிமுக ஆட்சிக்கு (Bureaucracy)ட் பட்ட ஒரு பேரரசு உருவாயிற்று.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம், நாட்டின் வளமும் மக்களின் வாழ்க் கைத் தரமும் உயர்வதற்குரிய ஆக்கப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. நாட்டில் நல்வாழ்வு அமையலாயிற்று. சீனப் படை யெடுப்பிற்கு முற்பட்டப் பன்னிரண்டு ஆண்டுக் (1950—1962) காலத்தில், இந்தியா உண்மையிலேயே பல துறைகளில் முன்னேற்றத்தை—வளர்ச்சியைக் கண்டது. இதனால், இந்தக் கால கட்டத்தை (பாரதப் பிரதமர் நேருவின் ஆட்சிக் காலத்தை) இந்திய வரலாற்றின் 'மூன்றா வது பொற்காலமாக'—இமயம் முதல் குமரி வரையில் பரந்துபட்டும் ஒன்றுபட்டும் விளங்கும் இந்திய திருநாட்டின் ஈடிணை யற்ற பொற்காலமாகக் குறிப்பிடும் நிலை உண்டாயிற்று!

தமிழகத்தின் சங்க காலத்தை—கடைச் சங்க காலத்தைப் 'பொற் காலமாகப்' போற்றுவது மாபு. பல்வேறு இனக் குழுக் களைக்கொண்டு இருந்த தமிழ்ச்சமுதாயம், மூவேந்தரான சேர, சோழ, பாண்டியரின் தலைமையின் கீழ், நிலப் பிரபுத்துவ சமுதாயமாக மாறலாயிற்று. மூவேந்தர் களுள் சோழன் கரிகாலன், சேரன் செங் குட்டுவன், தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற மாவீரர்கள், தமிழகம் முழுவதை யும் தங்கள் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்து ஒரு பேரரசை நிறுவ முயன்றனர். இக்காலத்தில் உள்நாட்டு வாணிகமும், வெளி நாட்டுக் கடல் வாணிகமும் செழிப் பின் உச்சகட்டத்தை அடைந்தன; காவிரிக்குக் கரை அமைத்தல் போன்ற

மாபெரும் ஆக்கப்பணிகள் செயல்பட்டன; கலைகளும் கலைஞர்களும் பெருவாழ்வு பெற்றனர். பாண்டியருடைய தலைநகர மான மதுரையில் 'சங்கம்' எனும் 'தொட்டிலில்', நம் தமிழ்மொழி வளர்க்கப் பட்டது. அறுநூறுக்கு மேற்பட்ட புலவர் கள் முத்தமிழை—மூவாத் தமிழைப் பேணி வளர்த்தனர். தமிழ்ப் பண்பாடு, தனிச் சிறப்பு வாய்ந்த பண்பாடாக உலகில் ஒளி வீசலாயிற்று. இதனால், சங்க காலத்தைத் தமிழக வரலாற்றின் முதல் 'பொற் கால மாக'ப் போற்றி வருகிறோம்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விசயாலயனால் நிறுவப் பட்ட சோழப் பேரரசு, கி.பி. பத்தாம் நூற்றாண்டில், பேரரசன் இராசராசன், பேரரசன் இராசேந்திரன் ஆகியோர் ஆட்சிக் காலத்தில், வளமார்ந்த வாழ்வின் கொடுமுடியை எட்டிப் பிடித்தது; நாட்டிலே கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந் தனர். இந்த நிலை பேரளவிற்கு, அவர் களுடைய ஆட்சிக்குப் பிறகும் நீடிக்கலா யிற்று. கம்பனுடைய இராமாயணம் முத லான ஒப்பற்ற இலக்கியங்கள் இக்காலத்தி லேயே இயற்றப்பட்டன. ஆற்றல்மிக்க மைய அரசு, கடல் கடந்த நாடுகளோடு வாணிகத் தொடர்பு, உள்நாட்டில் உற் பத்திப் பெருக்கம், பல்வேறு தொழில்களின் விரைவான வளர்ச்சி போன்றவை சோழப் பேரரசின் சிறப்பு இயல்புகளாகும். இவற் றோடு சிற்பக் கலையும், இசைக் கலையும், நாட்டியக் கலையும், ஓவியக் கலையும், வெண்கலப் படிவங்களின் வார்ப்புக் கலை யும் வான்புகழ் பெரும் அளவிற்குப் பெரு வளர்ச்சியுற்றன. இக்காரணங்களால், சோழப் பேரரசர் ஆட்சிக் காலத்தைத் தமிழக வரலாற்றின் 'இரண்டாவது பொற் காலமாக' வரலாற்று அறிஞர்கள் சிறப் பித்துப் பேசுகின்றனர்.

விடுதலை பெற்ற இந்தியாவில், தமிழகம் 'மூன்றாவது பொற் காலத்தை' ஜவகர்லால் நேருவின் ஆட்சியில் கண்டது.[5] புதியதொரு பொற் காலத்தை உருவாக்க அறிஞர் அண்ணா முயன்றார்; முயற்சி வெற்றி பெறுவதற்குள் அவர் மறைந் தார்.

5. கம்யூனிஸ்டுகள் 'பொற்காலத்தை'ப் பிதற்றல் என்பார்கள். ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

# இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்

டாக்டர் வை. இரத்தின சபாபதி
வித்துவான், பி.ஒ.எல்., எம்.ஏ., பிஎச்.டி.

இக்கட்டுரை ஆசிரியர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கரையேற விட்டநகர் என்னும் ஊரில் 1924இல் பிறந்தவர்; திருப்பாதிரிப்புலியூர் மடம் தவத்திரு ஞானியார் அடிகளின் மாணவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவ ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்; திருஞான சம்பந்தர்-ஓர் ஆய்வு, வீர சைவம் முதலிய பல நூல்களை எழுதியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சில ஆண்டுகளும் பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியில் முதுகலைப் பேராசிரியராக இரண்டாண்டு களும் பணியாற்றிய இவர் இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேலிலைக் கல்வி நிறுவனத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

*முன்னுரை*

திருஞானசம்பந்தர் என்னும் ஒரு பெயரால் இவ்வுலகில் வாழ்ந்து, ஆறதேறுஞ் சடையான் அருள்மேவ, வீறதேறுந் தமிழரால் வழிநண்டவன் என்றும் பதிகப் பெருவழி கண்டவன் என்றும் நம்பியாண் டார் நம்பிகளால் போற்றப் பெற்று, ''அருளரசின் முதலரசு இயற்றிய துரை யாதலின்'' சைவசமய முதற் குருநாதன் என் இறைவனாலேயே இவ்வுலகில் பல்லக்கு, குடை, திருச்சின்னம் முதலியன அளிக்கப் பெற்று, உலக குருவாக அறிமுகப் படுத்தப்பெற்ற திருநெறிய தமிழ்க் குருநாதன் என வள்ளலாரால் குருவாக ஏற்கப்பெற்று, சைவ சமயத்தைத் தமிழ கத்துப் பெருநெறி என விளக்கி, தமிழகச் சைவத்தைக் கொள்கை வகையாலும் செயல்முறைத் திறனாலும் நிலை நாட்டி யருளிய திருஞானசம்பந்தர் பாடிய பதிகங் களுள் ஒன்று திருஎழுகூற்றிருக்கை.

'திருஎழுகூற்றிருக்கை'யானது இணைக் குறளாசிரியப்பா வகையில் அமைந்த ஒரே பாட்டு ஆயினும், மரபு பற்றிப் பதிகம் எனப்பெறும்; ஒரு பாட்டே ஒரு பதிகமாகக் கருதப்பெறும் பெருமையுடையது என்பது ஒருபுறமிருக்க, திருஞானசம்பந்தரின் பதிகங்கள் எல்லாவற்றையும் ஒதினால் பெறக்கூடிய பயனை, இது ஒன்றே தரும் ஆற்றலுடையது எனக் கொள்ளுவதும் மரபு. பயன்தரும் பண்பினால் மட்டுமன்றி,

திருஞானசம்பந்தரின் தந்தையாரின் வேண்டுகோளுக்கிணங்க, திருஞானசம்பந்தரின் திருமுறைகளின் அடிப்படைக் கருத்து வகைகளை இணைத்துச் சாறு என வடித்து எடுத்துத் தந்த வகையில், திருஞானசம்பந்தரின் கொள்கைக் கருவூலம் என்றும் கொள்ளலாம்.

திருஞானசம்பந்தரின் திருவெழுகூற்றிருக்கைப் பதிகத்தில் வரும் தொடரே ''இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்'' என்பது. இத்தொடரின் மூலம் திருஞானசம்பந்தர் குறிப்பிடும் கொள்கை யாது எனத் தேர்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

## பதிக அமைப்பு முறை

திருஎழுகூற்றிருக்கைப் பதிகம் ஒருருவாயினை என்ற தொடக்கத்தையுடையது. இறைவனை முன்னிலையாக நிறுத்தி, ஒருருவாயினை என்றாற்போல இருபத்துநான்கு மாற்றங்களைக் கூறும் திருஞானசம்பந்தர், இருமையின் ஒருமையாயினை, ஒருமையின் பெருமையாயினை என முன்னிலைப்படுத்தி கூறாது,

> இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
> மறுவிலா மறையோர்
> கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
> கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
> அனைய தன்மையை ஆதலின் நின்னை
> நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே

எனக் குறிப்பிட்டருளி முடிக்கின்றார்.

## உரைக் குறிப்பு

இருமையின் ஒருமை என்பதற்குச் சக்தி சிவங்களாயிருந்துள்ள இரண்டும் ஒன்றாய் அர்த்த நாரீசுர வடிவமாய் இருந்த தன்மை என்றும்,

ஒருமையின் பெருமை என்பதற்குத் தானே ஒரு எல்லையில்லாத சிவமாக இருந்த தன்மை என்றும்,

இதுவரையில் வெளிப்போந்த பல்வேறு உரையாசிரியர்களின் உரைவிளக்கங்களாகக் காணப்பெறுகின்றன.

திருவெழுகூற்றிருக்கைத் தொடக்கமாக அமைந்துள்ள ''ஒருருவாயினை, மானாங் காரத்து ஈரியல்பாய்'' என்ற வரிக்கும், மான் ஆங்காரத்து ஈர் இயல்பால் ஒருருவாயினை எனப் பொருள் கோள் செய்து, சத்திசிவம் என இரண்டாய் நின்ற ஒருருவம் எனக் கொண்டு, இம்முதல் வரிக்கும் அர்த்த நாரீசுர மூர்த்தமே கருத்துப் பொருளாகக் கொள்ளப் பெற்றுள்ளது.

செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்களாய் மொழி மாற்று, மாலை மாற்று முதலிய பதிகங்களை,

> மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற
> ஞானத்து உயர் காழியாரைப் பாடினார்
>
> ஞானசம்பந்தர்

என்று தெய்வச் சேக்கிழார் கூறுவதைச் சிந்தித்தல் வேண்டும்.

> அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக

என்றும்,

மாதொரு பாகனாய் நின்ற கோலமே தொன்மைக் கோலம் என்றும், அருளாசிரியர்களின் திருவாக்கும் தத்துவ நிலைகளை அரிதின் நாட்டும் சந்தானாசாரியர்களின் திருவாக்கும் வலிவுற அமைத்துக் காட்டும் நுட்பம் நோக்கி, திருவெழுகூற்றிருக்கையின் முதலிலும் இறுதியிலும் அவ்வாறுரை அமைத்தார்கள் என்று கொள்ளலாம்.

மேலும், திருஎழுகூற்றிருக்கை, மொழி மாற்று முதலிய பதிகங்கள் பலவகையான பாக்களையும், விகற்பப் பாக்களையும் பாட வேண்டும் என்ற நிலையில் பாடப்பெற்றன என்று கருதிவிட்டமையால், அத்தகைய பாடல்களை மீண்டும் மீண்டும் திருவருள் வயத்தில் நின்று பொருள் காணும் பெற்றியைச் சைவ சமயச் சான்றோர்கள் மேற் கொள்ளாமையும் நம் தவக் குறைவே.

## இருமையும் ஒருமையும்

'இருமை' என்ற சொல்லுக்குப் பெரும் பாலும் இம்மை, மறுமை என்ற உரையே பெரிதும் காணப்பெறுவது. ஆயினும், திருஞானசம்பந்தர் திருவாக்கில் 'இருமையின்

ஒருமை' என்பதனாற் குறிக்கப் பெறுவது அர்த்தநாரீசுர மூர்த்தமாயின், ஒருமையின் பெருமை என்பதற்கும் அர்த்தநாரீசுர மூர்த்தியின் பெருமை என்பதாகவே பொருள் கொள்ள வேண்டி வரும். அர்த்த நாரீசுர வடிவமே தம்மை முதன்முதல் ஆட் கொண்ட திருவுரு என்பது முதற்பதிக முதல் தேவாரத்தால் தெளியவுணர்த்தப் பெறுவதாயினும், தோணியப்பனும் தோணியம்மையும் தனித்தனியே, ஆயினும் இணைந்து அமர்ந்திருந்த கோலமும் திரு ஞானசம்பந்தரின் காட்சிக்கு இலக்காயிற்று என்பதை மறுத்தல் இயலாது.

''பெண்தான் மிக நின்றான்'' எனப் பெண்மைக்கு ஏற்றம் கொடுத்தருளிய மையை நுட்பமாக எடுத்துக்காட்டி, ''பெண்ணின் நல்லாளொடு பெருந்தகை இருந்ததே'' எனப் பெண்மைக்கு 'ஒடு' உருபு கொடுத்து ஏற்றமுறப் பாடியருளிய தேவாரப் பாக்களின் நுட்பத்தையும் ஓர்ந்துணர்தல் வேண்டும்.

ஆண்மையும் பெண்மையும் இருமை என்பதாயின், இருமையை இடமாகக் கொண்டு நிற்கும் ஒருமை என்பது என்ன? அந்த ஒருமையானது பெருமையுடையது என்றும் சுட்டிக் காட்டுகின்றார் திருஞான சம்பந்தர்.

## அற்புதத் திருவந்தாதி தரும் விளக்கம்

காரைக்காலம்மையார் புதுமையும் நுட்பமும் இணைந்த கருத்து ஒன்றை எடுத்துக் கூறியருளுகிறார்கள்.

> ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
> ஒருபால் உமையவளாம் என்றால்-இருபாலும்
> நின்னுருவம் ஆக நிறந்தெரிய மாட்டோமால்
> நின்னுருவோ மின்னுருவம் நேர்ந்து

என்ற அற்புதத் திருவந்தாதியில், ஒரு திருவுருவத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று திருமால்; மற்றையது உமை. இவ்வாறு இரு பகுதிகளும் இரு வேறுபட்டவர்களால் கொள்ளப் பெற்று விட்டன ஆகையால், நின்னுருவம் எது? என வினவி, நின்னுருவோ, மின்னுருவம் என அமைத்துக் காட்டுகின்றார்.

இங்கேயும் அரியர்த்தபாகம், அர்த்த நாரீசுர பாகம் என உரை கண்டுள்ளனர். ஆயின் அம்மையார் கண்டதும், காட்ட எண்ணிய கருத்தும் வேறுபட்ட ஒன்றாகும்.

உமையவள் வடிவமும் திருமால் வடிவமும் இருவேறுபட்டவை. இவ் விரண்டும் தத்தம் தனிநிலைகளால் நிற்பன வல்ல. இவ்விருமையைத் தாங்கியும் வாழ வைத்தும் நிற்பது இருமையைக் கடந்த தாய், இருமைக்கு வேறுபட்டதாய் நின்ற ஒன்று. ஆனால், அது இருமையை இட மாகக் கொண்டு தோற்றம் பெறுகிறது.

இருவேறுபட்ட முரண்பாடுகளை வாழ வைத்து, இருவேறு முரண்களைக் கடந்த தாய், இருவேறு முரண்பாடுகள் இணைந்து நிற்கும்போது அவற்றின் இடையே உணரப் பெறுவதாய் நின்ற ஒன்று; அதுவே ஒருமை; அதுவே பெருமைக்குரிய ஒருமை.

இக்கருத்தினை விளக்கும் வகையில் கீழ்வரும் சான்றினைக் காணலாம்.

சிவஞானபோத முதல் நூற்பாவில் மூன்றாவது வரியில் வரும் இருசொல் இணைப்பைக் காண்க.

''அந்தம் ஆதி'' என்மனார் புலவர் என்ற வரியில் அந்தமே ஆதி எனக் கொண்டு முத்தொழிற்கு மூலமாம் பதிப் பொருளைக் குறிப்பிடுகின்றார். அந்தமும் ஆதியும் கடந்த ஒன்றை, அந்தம் ஆதி என்ற இரு முரண்பாடு கொண்ட இருமை யின் இடையில் நோக்கிக் காண வேண்டும். அந்தம் ஆதி என்ற இரண்டையும் கடந்த ஒன்று, இரண்டையும் நிறுத்தி வாழ வைத்து, இரண்டன் இடையில் நின்று தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறது என்பது மூலகாரண முழுமையை உணர்ந்து கொள்ளுதற்குரிய அளவையியல் முறை.

மேலும், சைவ சமயத்தில் இறைவனைச் சந்திக் காலங்களில் வழிபாடு

செய்தல் உண்டு. பகல், இரவு என்ற இரண்டு மாறுபட்ட காலங்களில் இணைப்பில் வழிபாடு செய்வதன் உட்பொருள் இரு வேறுபட்ட கால அமைப்புக்களின் இடையில் நின்று, இரண்டையும் இயக்குவதாய், இரண்டையும் கடந்து நிற்பதாய் உள்ள ஒன்று உண்டு என அறிந்து வழிபடுதலே.

## மலைவில்லார்

கல்லால் நிழல் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

என்ற சிவஞான போதத்துக் கடவுள் வணக்கத்தில் 'மலைவில்லார்' என்பது சிவபரம் பொருளைக் குறித்து நின்றது. இதற்கு மலையை வில்லாக வளைத்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் சொல்வது மரபு. இங்கேயும், மலைவு—மாறுகோள். மாறுபட்ட பொருள்களுக்கு இடையில் மாறுபாடுகள் இல்லாதால், மாறுபாடுகளைக் கடந்த நிலையில் விளங்கும் காரண முழுமைப் பொருள் எனக் கொள்ளுதல் அளவையியல் அடிப்படையில் தத்துவங் கடந்த பரம்பொருளை உணர்த்தும் முறையாகும்.

அரவும் நிலவும் ஒரு நெறிப்படச் சூடினான், ஆண் பெண் என நின்றான் என ஒன்றோடு ஒன்று இகலும் இருமைகளைச் சுட்டுவதன் மூலம் அவ்விருமைகளின் இடை நின்று, இருமைகளைக் கடந்ததாய், இருமையை வாழ வைப்பதாய் நின்று உரைத்தகும் இருமை கடந்த ஒருமையாய், முழுமையாய், காரணமாய் நின்ற பொருள் ஒன்று உண்டு என்பது உணர்த்தப் பெறுகிறது.

## தமிழக மரபு

''இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்'' என்பது பரம நிலையுடைய முழுமை மூலப் பொருளை இலக்கண முறையாலும் அளவையியல் நெறியாலும் உணர்த்தும் முறைமையில் அமைந்த நூற்பா. திருஞானசம்பந்தர் அமைத்த இப்பொருளிலக்கண நூற்பாவானது தமிழக மரபை அடிப்படையாகக் கொண்டது.

ஒன்றே வேறே என்று இரு பால் வயின்
ஒன்றி உயர்ந்த பால் அது ஆணையின்
ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப,

என்ற தொல்காப்பிய நூற்பாவில் இருமை முதலில் சுட்டப் பெறுகிறது. இருமையுடன் இணைந்ததாய், இருமையைக் கடந்ததாய். உயர்ந்து விளங்கும் ஒருமை ஒன்று உண்டு. அதன் ஆணையினால் ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்பார்கள் என இருபெருங் கிழவர்களை இணைக்கும் மூல காரணப் பொருள் இருமையின் இடை நின்று தன்னைத் தோற்றுவித்துக் கொள்வது, இருமையையுங் கடந்த ஒருமை என நின்று உயர்ந்தது என அது விளக்கப் பெறுகிறது.

மேலும், அகத்திணையியலில்

நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

என வரும் நூற்பாவில், இரு நிலங்களுக்கு நடுவில் நின்ற பாலை தனக்கென நிலமில்லாதது. ஆயினும் ஏனைய நான்கு வேறுபட்ட நிலங்களையும் தன்னளவில் வரையறைப்படுத்தி நிலைநிறுத்துவது பாலையே, அது இரு வேறுபட்ட நிலங்களின் இடையில் நின்று தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

## இரட்டையும் இணைப்பும்

இருமை என நிற்றல் உலகியல். பகல் இரவு, விருப்பு வெறுப்பு, இன்பம் துன்பம், நன்மை தீமை என எல்லா வகைப் பிரிப்பினும் இருமை பெற நிற்றல் உலகியல் நிலையென உணர்தல் வேண்டும்.

இருமையைக் கடந்ததாய், இருமையையும் இணைய நிறுத்தி வாழ வைப்பதாய், இருமையுள் எந்த ஒன்றும் மற்றையதை முற்றாக அழித்தல் இன்றி, ஒன்றை ஒன்று முற்றாக வெல்லுதலும் இன்றி அவைகளை அவ்வந் நிலையில் நிறுத்தி வாழ வைப்பதாய், அவ்வாறு அவைகளுடன் இணைய நிறுத்தி வாழ வைக்கும் அளவில் அவற்றோடு இணைந்தும், ஆனால், அவை

களைக் கடந்து நிற்கும் நிலையில் ஒருமையாய் உயர்வு பெற்றும் நிற்பதே ஒருமை.

இருமை என நின்ற உலகியலில் இருமையையுங் கடந்த 'ஒருமை' என நிற்பது அருளியல்.

இவ்வுண்மையை உணர்த்தும் போக்கில், இறைவனடியவர்களின் பெருமையை இறைவன் திருவாக்காகவே அமைத்துச் சொல்ல முற்பட்ட சேக்கிழாரடிகள்,

> ஒருமையால் உலகை வெல்வார் ஞானமேல்
> ஒன்றும் இல்லார்
> இருமையும் கடந்து நின்றார்.

என உணர்த்தியருளியதை இவ்விடம் இணைத்துக் காணுதல் நலம் பயப்பதாம். இதனை,

> இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற்று உலகு.

என்ற நீத்தார் பெருமை மூன்றாங் குறளில் அருளியல் விளக்கப் பெற்றிருப்பதைக் கண்டு தெளியலாம் என வடலூர் வள்ளற் பெருமான் குறிப்பிட்டருளியிருப்பதும் கொண்டு தெளியலாம்.

## முடிப்புரை

திருஞானசம்பந்தர் அருளிய திரு எழு கூற்றிருக்கை எனப்பெறும் தெய்வத் திருப் பதிகத்தினுள் கூறப்பெறும் ''இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்'' என்ற தொடர் 'திருவருள்' எனப்பெறும் தெய்வப் பெருநிலையின் இருப்பும் விளக்கமும் செயற்பாடும் இவையிவை என விளங்கிக் கொள்ளும் வகையில் தத்துவ அமைப்பில் நிறுத்தி எடுத்துக்காட்டும் வகையில் அளவையியல் இலக்கண முறையில் அருளிய 'அருளியல் இலக்கண நூற்பா' எனக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வகையான வடிவமைப்பை எடுத்து நிறுத்தி, திருவருளால் மெய்ப் பொருளை நாடும் விதிமுறையை வகுத்துக் கொள்ள வேண்டும் என அருளியல் ஆய்வு நெறி முறையை முதன் முதலில் வகுத்தளித்த பெருமை காரைக்காலம்மையாரையே சாரும் எனவும் கொள்ள வேண்டும்.

# கவிதையும் நோக்கமும்

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர், டாக்டர் செ. சிங்காரவேலன்,
எம்.ஏ., பிளச்.டி.

இவர் தஞ்சை மாவட்டம் திருச்சிற்றம்பலத்தில் 25-11-1933 இல் பிறந்தவர்; தமிழ் வித்துவான் தேர்வில் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவர்; ஏறத்தாழ 150 கட்டுரைகளும், 25 நூல்களும் எழுதியவர்; செஞ்சொற்கொண்டல் முதலிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்; தமிழ், சமயச் சொற்பொழிவு களை தமிழகத்திலும், இலங்கையிலும், பல ஆண்டுகளாக நிகழ்த்தி வருபவர்; இவர் இப்போது மயிலாடுதுறை ஏ. வி. சி. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணிபுரிந்து வருகின்றார்.

## நோக்கம் வேண்டும்

கவிதையின் நோக்கம் பற்றி எண்ணு கின்ற சிந்தனை பெரிதும் தேவைப்படுவ தாக இன்று உள்ளது. நோக்கம் ஒன்று இல்லாத எந்தச் செயலும் உலகத்திற் பாராட்டப் பெறுவதில்லை. எந்தச் செய லுக்கும் நோக்கம் ஒன்று இருந்தே தீர் கின்றது. கவிதை கவிஞனுடைய அற்புதப் படைப்பு; உள்ளத்தே கனன்ற கனலொன்றே அற்புதமான வார்ப்படமாக வடிவு கொள்கின்றது. 'கவிதை' என்ற பெயரில் சில வேளைகளில் நெஞ்சத்தில் தேங்கியிருந்த துயர நினைவுகள் பீறிட் டெழுந்து கவிதையாகி விடுகின்றன. பொங்கித் ததும்பி நின்ற மகிழ்ச்சி கவிதை வடிவம் பெற்றுக் களிப்பித்தலும் உண்டு. எங்ஙனமாயினும் ஒரு நோக்கம் கவிதைக்கு இன்றியமையாது அமைந்துள்ளமையை அறியாதார் யாரும் இல்லை.

ஒப்பற்ற கவிஞர்கள் உலக நல்வாழ்வே நாட்டமாக உள்ளவர்கள்; தம் நலம் என்பதைக் கனவிலும் கருதாதவர்கள்; அத்தகு பெருந்தகையோர் ஆவர். ''தீய என்பன கனவிலும் கருதாத் தூய மனத்தவர்'' என்ற தொண்டை நாட்டுச் சான்றோர் களைச் சேக்கிழார் குறித்தது கவிஞர் களுக்கும் பெரிதும் பொருந்துவதாக உள்ளது. கவிஞர்கள் உலகத்திற்கு உறுதிப் பொருளைக் கூறி நன்னெறிப்படுத்துவ தொன்றையே நாடுகின்றனர். எம்மொழிக்

கவிஞர்க்கும் இது பொருந்துவதாகவே உள்ளது.

## பயன்படுத்தும் போக்கு

கவிதைக்கு நோக்கம் எதுஎதுவாக இருக்கலாம் என்று நெடுக எழுதுவதை விடச் சுருக்கமாக ஒன்று கூறுவது பொருத்தம். தன்னைப் படிப்பவரிகளை உயர்ந்த நிலைக்குக் கொணர்வதே ஓர் உண்மையான கவிதையின் அளவடையாக இருக்கமுடியும். ''கவிதைக்கு இன்பம் ஊட்டுவதே நோக்கம்'' என்று கூறுவோரும் உண்டு. அவ்வாறு இன்பம் ஊட்டுவது கவிதையின் பயனாக இருந்த போதிலுங்கூட, அவ்வின்பம் பயனாக இதயத்தைப் பண்படுத்தும் நோக்கமே முடி நிலையாகக் கருதப்படுவதைக் காணலாம்.

பாட்டியல் நூலில் ''மதுரகவி'' எது வென்று உரைக்கும் இலக்கணம் ஒன்று இங்கே நினைக்கத் தக்கது.

> எடுத்த பொருளினோடு ஓசை இனிதாய்
> அடுத்தவை செஞ்சொல்லாய் அலியும்-தொடுத்த
> தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
> இடமுடைய மாமதுர யாப்பு,

இப்பழைய பாட்டும் கவிதையின் பொருள் நோக்கத்தையே முதலாவதாகப் பேசியிருக்கின்றமை காணலாம். ''எடுத்த பொருள்'' என்பது, தொல்காப்பியர் ''வீழுமியது நுவலல்'' என்று கூறுவதனோடு ஒத்தது.

## உலகியற் செம்மை

மனம் போனபடியெல்லாம் பாட்டு எழுதுவதும் பணம் தேடுவதற்கென்றே எழுதுவதும், பிறரைப் பார்த்து நகல் செய்யும் நிலையில் எழுதுவதும், இக் காலத்துப் பலரால் பின்பற்றப்பட்டு வருகின்றமை எல்லோரும் அறிந்த ஒன்று. கவிஞர்கள் இயற்கையில் உருவாவதால், அவர்களது படைப்பு உலகிற்குப் பயன்படத்தக்க உயர் படைப்பாகி விடுகின்றது. உலகியல் செம்மை ஒன்றே சீரிய கவிஞர் சிந்தையிடை உறுதியாகப் பற்றி நிற்பதாகும். செம்மை நிரம்பிய வாழ்விற்குக் கேடு வருமாயின் பெருங் கவிஞர் பலரும் சீறிச் சினந்து மாற்ற முனைதலும் கண்கூடாகப் பலருடைய கவிதைகளில் காணப்படுவதாகும். ''தனியொருவனுக்குணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்'' என்கின்ற பாரதி வரிகள் தகுந்த சான்று பகர்கின்றன. இந்த மனநிலைக்கு, ''இரவலர் புரவலை நீயுமல்லை'', என்று பாடும் சங்கப் புலவர் மனநிலையும் இங்கு ஒப்பிட்டுணர் தற்குரியதாகும்.

## வாழ்விக்கும் பெற்றி

பகைவன் மக்களை அழிக்க முற்பட்ட கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடும் பாட்டும், அவர் இளந்தத்தனைக் காத்தற்குப் பாடும் பாட்டும் புறநானூற்றிற் பொலிகின்றன. செம்மையின் நீங்கிய செயல்கள் நிகழத் தொடங்கினால், அதனைக் கவிதை பாடிக் கண்டித்துத் திருத்துவது இலக்கணம் என்பதை மறத்தலாகாது.

> இழுக்க லுடையுழி ஊற்றுக் கோலற்றே
> ஒழுக்க முடையார் வாய்ச்சொல்.

என்பது குறள்நெறி. வழுக்கு நிலத்தில் நடக்கலுற்ற ஒருவனுக்கு ஊன்றுகோல் பயன்படுமாறு போல ஒழுக்கம் உடைய பெருமக்களது வாய்ச்சொற்கள் மனித சமுதாயத்திற்கு மாண்பயன் தரும் என்பது முக்காலும் மெய்யாகும். ''ஒழுக்கம் உடையார்'' என்ற சொற்கள் ஊன்றி உணர்தற்குரியன. ஏனெனின் மெய்யான ஒழுக்கம் உடையவர் கூற்றையே மாந்தர் கொள்ளுவர்; பின்பற்றுவர்; தாம் நடை பாதையினின்றும் விலகித் தம் உரைகளால் நாட்டை நன்னெறிப் படுத்தலாம் என்று விரும்புபவர் செயல் விரும்பப்படுவதன்று. தாமும் நன்னெறியின்கண் நடந்து பிறரையும் நடத்துகின்ற பெருங்கருணைப் பெற்றியாளரையே உலகம் வியந்து வாழ்த்தெடுக்கும். ''வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு கனவினும் கொடியது'' என்று நல்லார் வெறுத்தொதுக்கிவிடுவர். ஆதலின் கவிதை என்னும் அற்புதமான தெய்வீகக் கருவியைக் கையாளுகின்ற மாமனிதர்கள் ஒழுக்கம் என்னும் உயர் நெறியில் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்கும் பெற்றி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

## படைப்போனும் படிப்போனும்

தன்னைக் கற்போர்க்குத் தான் உணர்ந்து வந்த செய்தியை உணர்த்த இயலாதவரை ஒரு கவிஞனை உயர்த்திக் கூறிவிட இயலாது. உலக நிலையில் ஆழ்ந்து கிடக்கும் மனிதனைத் தன் கருணைக் கரத்தால் தழுவியெடுத்து, அவனுக்கு இயற்கையின் மாபேராற்றலை அறிவுறுத்தி, கீழ்நிலைப் படுத்தும் உணர்வுகளினின்றும் அவனை மீட்டு, உயர்ந்த சிந்தனைகளை அவனுடன் ஒன்ற வைக்கும் திருப்பணியைத்தான், உயர்ந்த கவிதைகள் மிக எளிதாகச் செய்து முடித்துவிடுகின்றன. அதுவரை மூடிக்கிடந்த மனிதனின் அக விழிகள் இப்போது மலர்கின்றன. தன்னைச் சூழவுள்ள உலகையும், தான் உணர்ந்திடும் புதிய உலகையும் ஒப்பிட்டு உணர்ந்து இன்பம் அடைகின்றான். கவிஞனின் மாயச் சொற்கள், இனிய கற்பனை, உணர்த்தும் திறன் ஆகிய அனைத்தும் சேர்ந்து அவனைக் கவியுலகிற்கு மீண்டும், மீண்டும் கொண்டு சென்று நிலைக்க வைத்து விடுகின்றன. ஆம்; கவிதையின் உள்ளுணர்வு, படிப்போனின் நெஞ்சில் சுடர்விட்டுக் கொழுந்தெனக் கனலத் தொடங்கிடுவது அப்போதே எனலாம்.

## இயற்கையில் தோய்தல்

தன்னுடைய படைப்பிற்கு எது அழகு தரும் கற்பனை, எது ஏற்ற வடிவம் என்றெல்லாம் ஒரு கவிஞன் எண்ணுவதில்லை. 'தான் கூற விழையும் செய்தியைத்தான் அவன் தன் படைப்பிற்கு உயிராக எண்ணுகிறான்' என்று கூறுவது தவறாகாது;[1] இயற்கையைப் புனைந்துரைக்கும்போது கூட 'வேர்ட்ஸ்வொர்த்' போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் பலரும் இயற்கை வழியே மனிதனுக்குத் தாங்கள் விளம்பும் உண்மைகளையே எடுத்து வழங்குகின்றனர். தாங்கள் விழையும் உண்மைகளையே எடுத்து வழங்குகின்றார்கள். சத்திய வேட்கையும், இலட்சிய உணர்வும் நிரம்பிய படைப்புக்களாக அவை உலக இலக்கியங்களுள் ஒளிர்ந்து நிற்கக் காண்கின்றோம். ''இயற்கையின் நுட்பங்களை மனிதனுக்கு எடுத்துரைக்கும் மாந்தரில் தலை சிறந்தவர்'' என்று அட்சன் ''வேர்ட்ஸ்வொர்த்'' தைப் பற்றி விளக்கியது எல்லாக் கவிஞர்களுக்கும் பொருந்துவதாகவே உள்ளது.[2] அவர் தம்முடைய அக விழிகளால் எந்தப் புதிய கூற்றையும் கூர்ந்து நோக்கினார்; அவருடைய பார்வையைவிட்டு எத்துணை நுட்பமான பொருளும் விலகியதில்லை. அவர் கண்ட காட்சிப் பொருள்களை ஆழ்ந்த நம்பிக்கையுணர்வுடன் வெளிப்படுத்தும் வித்தகத் திறன் அவர்பால் விளங்கிற்று. இயற்கையின் அடிப்படை நுட்பங்களைத் தாமும் உணர்ந்து பிறர்க்கும் உணர்த்தும் புதுயுகக் கவிஞர்களில் 'கூரிய நோக்கு' படைத்த இணையற்றவர் அவர். அவரது கற்பனை நலம் பொதுளிய வருணனைகளில் ஒவ்வொன்றும் மெய்யானது; இலக்கியத்தில் வரும் பழந்தொடர்களை அப்படியப்படியே எடுத்தாளும் 'நகல்' தன்மையில்லாதது; தம்முடைய நுட்பமதியாற் ''கண்டுணர்ந்த நுண்திறம் வாய்ந்தது'' என்று அட்சன் மேலும் எழுதும் வரிகள், உயர் கவித்திறன் வாய்ந்த ஒப்பற்ற கவிஞர் ஒவ்வொருவர்க்கும் உரித்தானவை என்று கூறல் தவறாகாது.[3]

---

1. "He doesn't care for image but for message"—William Henry Hudson. "An Outline History of English Literature" (1961) P.190.
2. "As an interpreter of nature he still holds the first place unchallanged" —Ibid. P. 190.
3. "He wrote always (in his own words) with his eye, steadily fixed upon the object; nothing was too small to escape his attention; and his controlling purpose was to render with obsolute fidelity what he has seen. He has been called, and rightly, 'the keenest eyed of all modern poets for what is deep and essential in nature; and it has Justly been said that in all his descriptions every touch is true, not the copying of a literary phrase, but the result of direct observation"—Ibid. P. 190

## நோக்கத்தின் நுட்பம்

சமுதாயத்திற்கு உண்மை காட்டி நெறிப்படுத்தும் குறிக்கோள் வாய்ந்த கவிஞர்களையே உலகம் தன் நினைவில் வைத்துக் கொண்டு போற்றி வருகின்றது. இன்று தோன்றி நாளை மடியும் கீழ்த்தரப் பாட்டுக்களைப் பாடிக் குவித்துப் பணம் 'பண்ணும்' பாவலர்களை உலகு என்றுமே நினைவு கொள்ளாது. குடிக்கும் நிலையில் இருந்து கொண்டு பிதற்றும் சொற்களைப் பிறர்க்கு வழிகாட்டும் அற்புதம் வாய்ந்த தெய்வீகச் சொற்கள் என்று கூற முடியுமா என்ன? அறிவின் தெளிவு நிலையில் இருந்து கவிதைகளைச் சிந்தனைக் கூர்மையும், கற்பனை ஆற்றலும் பொதுள எடுத்து வழங்கிய கம்பர், வள்ளுவர், திருத்தக்க தேவர், சேக்கிழார் போன்ற ஒப்பற்ற கவிஞர்களின் திருவாய் மலர்ந்த தேனூறும் கவிதைகளே வென்று நிற்கும் கவின் உடையவை; எக்கால மாந்தரும் இனிது உணரும் ஏற்றம் படைத்தவை. ''மிக விழுமிய அறிவுத் திறனும், படைப்புத் திறனும் இணைந்த ஒரு வியத்தகு இணைப்பை''யே அவர்களது கவிதைகளில் நாம் கண்டு அனுபவிக்கின்றோம். இத்தகு கவிஞர்களையே 'இந்த உலகின் நடைமுறைகளை ஆட்டிப் படைக்கும் நெறியாளர்களாகக்' 'கீட்சு' போன்ற பெருங் கவிஞர்கள் பேசினர். இவர்களது அமரத் தன்மை வாய்ந்த கவிதைகளே நோக்கத்தாற் சிறந்தவை என்பது துணிவு.

# அறநெறியும் சட்டநெறியும்

மா. சண்முகசுப்பிரமணியம்,
எம்.ஏ., பி. எல்.,

இக்கட்டுரை ஆசிரியர் திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரத்தில் 1922-ஆம் ஆண்டில் பிறந்தவர்; வழக்கறிஞராகவும், மாவட்ட முன்சீப்பாகவும் பணியாற்றி தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் செயலாளராக இருந்தவர்.

'தீங்கியல் சட்டம்', 'குற்றவியல் சட்டம்', ''குறள் கூறும் சட்டநெறி'' ஆகிய சட்ட நூல்களையும் 'ஞானச்சுடர்' ''பாரதி-ஒரு ஞானக் கவி'' ஆகிய ஆன்மீக நூல்களையும் எழுதியுள்ளார். இப்பொழுது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் வளர்தமிழ்ப் புலத் தலைவராகப் பணியாற்றுகிறார்.

அறம் என்பது மக்களின் இன்ப வாழ்விற்கு ஏற்ற நெறிகளைக் கூறுவது. எனவே தான் ''அறத்தான் வருவதே இன்பம்'' என்கிறார் திருவள்ளுவர்.

சமுதாய வாழ்வில் மக்கள் ஒருவருக் கொருவர் இசைந்து இன்பமாக வாழ்வதற்கான நெறிகளைக் கூறுவது சட்டம்.

அறம், சட்டம் இரண்டுமே சமுதாய இன்பத்தைக் குறிக்கோளாகக் கொண்டே இயங்குகின்றன.

மக்கள் சமுதாயத்தில் நீதி (Justice) நிலை பெற்றால்தான் சமுதாய இன்பம் நிலைக்க முடியும். சமுதாயத்தில் வாழும் மக்களில் ஒருவரி மற்றொருவரின் உரிமைக்கு ஊறு விளைவித்தால் நீதி மன்றம் ஊறு விளைக்கும் செயலை அகற்றி, ஊறு விளைத்தவரை ஒறுக்கின்றது. இவ்வாறு, நீதிமன்றங்கள் நீதி வழங்க வில்லையெனில் சமுதாய இன்பம் நிலைத்து நிற்க இயலாது.

இவ்வாறு, நீதி வழங்குவதற்கு உற்ற கருவியாக உள்ளது சட்டமேயாகும். சட்ட விதிகளை அடிப்படையாக வைத்தே நீதி மன்றங்கள் நீதி வழங்குகின்றன.

எனவே சட்டத்தின் குறிக்கோள் நீதியேயாகும். நீதிக்கு அடிகோலும் முறையில், நீதியைக் குறிக்கோளாகக் கொண்டே சட்டம் அமைகின்றது. ஆதலால் தான்,

சட்ட இயல் அறிஞர்கள் 'சட்டம்' என்பதை விளக்கும் போது, ''நீதி வழங்குவதற்கு உற்ற விதிகளைக் கொண்டது சட்டம்'' என்கின்றனர்.

("Justice is the end, Law is merely the instrument and the means"—Salmond)

நீதி வழங்கும் மன்றங்களை நாம் இன்று ''நீதி மன்றம்'' என்று குறிப்பிடு கின்றோம். நம் முன்னோர்கள் இம்மன்றங் களை ''அறங் கூறும் அவையம்'' என்று குறித்தனர்.

செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன செம்மைத்தாகிச்
சிறத்த கொள்கை அறங்கூறவையம் (490-492)

என்ற அறங் கூறும் அவையத்தின் சிறப் பினைப்பாடுகின்றது மதுரைக் காஞ்சி.

''அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன . . .
(93:5)

என்பது அகநானூற்றுப் பாடல் வரி.

அரைசு கோல் கோடினும் அறங்கூறவையத்து
உரைநூல் கோடி ஒரு திறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவை நீருகுத்துப்
பாவை நின்றவூஉம் பாவை மன்றமும். . .

என்ற சிலப்பதிகாரம் அறங்கூறும் அவையத்து நடுவுநிலைச் சிறப்பினை நவிலுகின்றது.

இவ்வாறு, சட்டத்தைக் கருவியாகக் கொண்டு நீதி வழங்கும் மன்றத்தை 'அறங் கூறும் அவையம்'' என்று பழந் தமிழ் இலக் கியங்கள் பகருகின்றன.

சிறிது சிந்தித்தால், சட்டவிதிகள் பல வும் அறத்தின் அடிப்படையில் தோன்று பவை என்பது புலனாகும்.

உண்மையே பேச வேண்டும் என்பது அறம்: நீதிமன்றத்தில் உண்மையை மறைத் துப் பொய்ச் சான்று உரைத்தல் சட்டப்படி யும் குற்றமாகிறது. கற்பு காக்கப்பட வேண் டும் என்று அறம் கூறினால், கற்பழித்தல் கடுங்குற்றம் எனச் சட்டம் விதிக்கின்றது. வஞ்சனையையும் வன்முறையையும் அறமும் சட்டமும் கடிந்து விலக்குகின்றன. பிறருக்கு இன்னா செய்யாமையைப் போற்றுகிறது அறம்; இன்னா செய்தலைத் தடுக்கிறது சட்டம்.

''அடுத்தவர் மீது அன்பு காட்டு'' என்ற அறநெறியே ''அயலாருக்குத் தீங்கு விளைவிக்காதே'' என்ற சட்ட விதியாக மாறுகிறது, என்கிறார் அட்கின் என்ற ஆங்கில நாட்டு நீதிபதி.

("The rule that you are to love your neighbour becomes in law you must not injure your neighbour"—Lord Atkin)

சட்டவிதிகளில் அடங்கியுள்ள அறக் கொள்கைகளை நாம் உணரும்பொழுது தான் சட்ட விதிகளின் சால்பினை நாம் நன்கு அறிதல் இயலும். அறநெறியை ஒட் டிச் சட்ட நெறி அமைவதே சட்ட நெறி யின் தனிச் சிறப்பாகிறது.

''சட்டமும் ஒழுக்கமும் இணைந்து நிற்கின்றன. சட்டநெறியில் அடங்கியுள்ள ஒழுக்கக் கொள்கைகளை ஒருவர் உணரா விடில் சட்டத்தின் அடிப்படைத் தன்மை யினை அறிதல் இயலாது''-என்கிறார் பேராசிரியர் குட்ஹார்ட் என்ற சட்டஇயல் அறிஞர்.

(There is, therefore, a close bond between law and morals and it is impossible to understand the nature of law unless we also recognise the various moral ideas which it represents-Dr. A. L. Goodhart in "English Law and Moral Law.")

இவ்வாறு, நீதி வழங்குவதற்குக் கருவி யான சட்டநெறி, அறநெறியின் அடிப் படையில் அமைவதால்தான், நீதிமன்றங் களை ''அறங் கூறவையங்கள்'' என்று அன்றைய நம் ஆன்றோர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

ஆயினும் நம் முன்னோர்கள் ''நீதி வழங்குதலை'' ''அறம் வழங்குதல்'' என்று குறிப்பிடவில்லை. நீதி நெறி தவறிய

பாண்டிய மன்னனை ''இறை முறை பிழைத்தோன்'' (காதை 20, வரி 26) என்றே சிலப்பதிகார ஆசிரியர் கூறுகின்றார். அவனை ''அற நெறி பிழைத்தோன்'' என்று கூறவில்லை. நீதி வழங்குவதை ''முறை செய்தல்'' என்றுதான் திருக்குறளும் கூறுகின்றது.

முறைசெய்தல் அறத்தின் அடிப்படையில் அமைகின்றது என்ற உண்மையினை உணர்ந்த நம் முன்னோர்கள், முறை செய்யும் மன்றங்களை ''அறங்கூறும் அவையங்கள்'' என்று கூறினர். இருப்பினும், அறநெறியும் இறைமுறையும் (சட்ட நெறியும்) ஒன்றல்ல என்ற உண்மையினையும் நமக்கு உணர்த்துகின்றனர்.

எத்தகு அறநெறிகளைச் சமுதாய நல்வாழ்விற்கு இன்றியமையாதன என்று அரசு கருதிச் செயல்படுத்துகின்றனவோ அத்தகு அறநெறிகளே சட்ட நெறிகள் ஆகின்றன. ஆதலால் அறநெறிகள் அனைத்துமே சட்ட நெறிகள் ஆகிவிடுவதில்லை.

## அறநெறிகள் அனைத்தும் சட்ட விதிகள் ஆவதில்லை

அன்புடைமையும் அருளுடைமையும், விருந்தோம்பலும் வெகுளாமையும் அற நெறிகள்; ஆனால் இவை சட்ட நெறிகளல்ல. ஒவ்வொருவரும் விருந்தோம்ப வேண்டுமென்றோ அருள்சேர்ந்த நெஞ்சினராய் வாழ வேண்டுமென்றோ சட்டம் விதிப்பதில்லை. அவ்வாறு விதித்துச் செயல் முறைப்படுத்துவதும் இயலாது.

நல்லவை அனைத்தும் அறம் என்கிறது அறநூல். ''கடன் என்ப நல்லவை எல்லாம்'' (குறள் 987) என்பது அறநெறி. அன்புடைமையும் அழுக்காறாமையும், பண்புடைமையும் பயனிலசொல்லாமையும் அறநெறியின்பாற்பட்ட பண்புகள். இப் பண்புகள் சட்டநெறி ஆவதில்லை.சமுதாய நலனுக்கு இன்றியமையாதன என்று அரசு கருதும் அறநெறிகள் மட்டுமே சட்டவிதிகளாகச் செல்லுறுத்தப் படுகின்றன.

''ஒருவர் உண்மையே பேச வேண்டும்'' என்பது ஒழுக்க நெறி. ஆனால், எங்கும் எப்பொழுதும் ஒருவர் உண்மையே பேச வேண்டும் என்று சட்டம் விதிப்பதில்லை. நீதிமன்றத்தில் சான்றளிப்போர் உண்மையைக் கூறவேண்டும் என்றும், பிறருக்குத் தீங்கிழைக்கும் வகையில் உண்மையைத் திரித்துப் பேசுதல் கூடாது என்றுமே சட்டம் விதிக்கிறது. ஒருவர் தாம் அளித்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டும் என்பது அறநெறி. ஆனால், பிறரிடமிருந்து எதிர்பயன் பெற்றுஅளிக்கப் பட்ட வாக்குறுதிகளை மட்டுமே கட்டாயமாக நிறைவேற்றவேண்டும் எனச் சட்டம் விதிக்கிறது.

இவ்வாறு, இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற வகையில் அறநெறிகளில் சில மட்டுமே சட்டவிதிகளாக இயற்றப் பெறுகின்றன.

## நன்மையைப் பெருக்குவது அறம்; தீமையை ஒடுக்குவது சட்டம்

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்'' என்பது உயர்ந்த அறநெறி (குறள் 987). ஆனால், தமக்குத் தீங்கு இழைத்தவர்க்கும் நன்மையே செய்ய வேண்டும் என்று சட்டம் கூறுவதில்லை. ''அன்பின் வழியது உயிர்நிலை'' (குறள் 80) என்பது அறநெறி; ஆனால், அன்பு என்ற அறப்பண்பினைச் சட்டத்தால் செல்லுறுத்த முடிவதில்லை.

உயர்நிலைப் பண்புகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊறிவிட்டால் சமுதாய இன்பம் இயல்பாகவே மலர்ந்து விடும் என்ற அடிப்படையில் அறநெறி அமைகின்றது. ஆனால், சட்டத்தின் முறை வேறு. சமுதாய நலன் எது என்பதை வரையறை செய்துகொண்டு, அந்நலனுக்கு மாறான செயல்களை மக்கள் செய்யாத வாறு சட்டம் கண்காணிக்கிறது.

''நல்லனவற்றைச் செய்'' என்று அறநெறி கூறும்போது, ''தீயனவற்றைச்

செய்யாதே'' என்று சட்டவிதி சாற்று கிறது. எனவே, அறம் நன்மையைப் பெருக்குகிறது எனில், சட்டம் தீமையை ஒடுக்குகிறது.

## அறம் அறிவுறுத்துகிறது; சட்டம் அச்சுறுத்துகிறது

''ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை'' (குறள் 137), ''நன்றிக்கு வித்தாகும் நல் லொழுக்கம்'' (குறள் 138), ''வேண்டற்க வெஃகியாம் ஆக்கம்'' (குறள் 177) என்று நன்னெறிகளைக் கூறி அறிவுறுத்துகிறது அறம். ஆனால், சட்டம் கையாளும் முறை வேறு. அரசின் வலிமையால் மக்களை அடங்கி நடக்குமாறு செய்கிறது சட்டம். அவ்வாறு அடங்கி நடக்காதவரைச் சட்டம் தண்டிக்கிறது. சட்டவிதிகளை மீறினால் தண்டனை உண்டு என்பதை ஒவ்வொரு சட்டத்திலும் காணுகிறோம். இந்த அச் சுறுத்தல் சட்டத்தின் தனித்தன்மையாகும். அறநெறியில் இந்த அச்சுறுத்தல் இல்லை. நன் நெறியை நயம்பட உரைப்பதோடு அறம் அமைகின்றது. காட்டிய நெறியில் நிற்குமாறு கட்டாயப்படுத்துகிறது சட்டம்.

''சட்டம், ஒழுக்கம் இரண்டையும் ஆதாரமாகக் கொண்டது சமுதாய ஒழுங் கமைப்பு. இரண்டுமே மக்களின் கட்டுப் பாடுகள்தாம். ஆனால் சட்ட விதிகள் அரசின் அதிகாரத்தால் நிறைவேற்றப் படுவன; அறநெறிகள் மனிதனின் மனச் சான்றினைப் பற்றி நிற்பன,'' என்று கேப்பிட்டன்ட் என்ற பிரஞ்சு அறிஞர் விளக்குகிறார்.

(Social organisation rests equally on law and Morals. The precepts of both are obligatory; those of laws are enforced by public authority, those of morals are addressed only to the individual conscience—Capitant, in "Introduction to Civil Law".)

இவ்வாறு, நன்னெறியில் மக்கள் நிற்கு மாறு காரணம் காட்டுகிறது அறம்; கட்டாயப்படுத்துகிறது சட்டம். அறம் அறிவுறுத்துகிறது; சட்டம் அச்சுறுத்து கிறது.

## சிந்தனையைத் திருத்துகிறது அறம்; செயலைத் திருத்துகிறது சட்டம்

சிந்தனையே செயலாக உருவெடுக் கிறது. ஆதலால், சிந்தனையைத் திருத்தி னால் செயல்களும் திருந்திவிடும் என்ற அடிப்படையில் அறநெறி இயங்கு கிறது.

''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம்'' (குறள் 34) என்று கூறும் அறநெறி மக்களின் மனத்தூய்மைக்கு அடிகோலு கிறது. ''பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம்'' என, ''உள்ளத்தால் உள்ளலும் தீதே'' (குறள் 282) எனக் கூறிக் கள்ளச் சிந்தனையே விலக்குகிறது அறம். ஆனால், அந்தக் கள்ளச் சிந்தனை களவுச்செயலாக உருவெடுக்கும் நிலையில்தான் சட்டம் தலையிடுகிறது; களவுக் குற்றம் செய்த வனைத் தண்டிக்கிறது.

கனிந்து கூறிக் காரணம் காட்டும் அறத்தால்தான் மனிதனின் உள்ளத்தை உயர்த்த இயலும், கடிந்து கூறிக் கட்டளை யிடும் சட்டத்தால் இது இயலாது.

''எண்ணங்களையும் உணர்வுகளையும் பொறுத்தது ஒழுக்கம்; ஆனால் செயல் களைப் பொறுத்தது சட்டம்''—என்கிறார் ராஸ்கோ பவுண்ட் என்ற அமெரிக்கப் பேராசிரியர்.

(With respect to subject matter, it is said that morals have to do with thought and feeling, while the law has to do only with acts—Roscoe Pound in "Law and Morals")

இவ்வாறு, அறம் மக்களின் சிந்தனை யைத் திருத்துகிறது; சட்டம் மக்களின் செயலைத் திருத்துகிறது.

## அறம் மாறாத நெறியினைக் கொண்டது; சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது

நன்மை எது, தீமை எது என்று மனத்துக்கண் மாசின்றி எத்தனையோ காலம் எண்ணி எண்ணிச் சான்றோர்கள் கண்டறிந்த உயர்ஒழுக்கமே அறநெறி ஆகின்றது. இது நாட்டிற்கு நாடு, காலத்திற்கு காலம் மாறுவதில்லை. அன்பும் அருளும், ஈகையும் இரக்கமும், உண்மையும் ஒப்புரவும் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் பண்புகள்; எக்காலத்திற்கும் ஏற்ற நலன்கள்.

ஆனால், சட்ட விதிகள் நாட்டுக்கு நாடு மாறலாம்; காலத்திற்கேற்ப மாறுபடலாம்.

கள்ளுண்ணாமை என்பது காலத்தால் மாறாத அறநெறியாகும். ஆனால், கள்ளுண்ணல் குற்றம் எனக் கூறும் சட்டம் மாற்றப்படுகிறது, திருத்தப்படுகிறது. நாட்டுக்கு நாடு அது வேறுபடுகிறது. ''பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்'' என்றுமே அறத்திற்கு மாறான தாகும். இதைத் தடை செய்யும் சட்டமோ நாட்டிற்கு நாடு மாறுகிறது.

எனவே, அறம் மாறாத நெறியினைக் கொண்டது; சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

இவ்வாறு, அறநெறியும் சட்டநெறியும் சமுதாய இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தாலும், அவை வெவ்வேறு தன்மைகளைக் கொண்டு இயங்குகின்றன.

அறம், தனி மனிதப் பண்பினை உயர்த்தி சமுதாய இன்பத்தை வளர்க்கிறது; சட்டம் சமுதாய நலனைக் காக்கும் வகையில் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்குறச் செய்கிறது. ''நன்மையைச் செய்'' என்று அறம் கூறுகிறது; ''தீமையைச் செய்யாதே'' என்று சட்டம் தடுக்கிறது. அறம், காரணம் காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது. சட்டம், கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது;சட்டம்அச்சுறுத்துகிறது. மக்களின் சிந்தனையை உயர்த்துகிறது அறம்; செயல்களைத் திருத்துகிறது சட்டம். அறம் மாறாத நெறிகளைக் கொண்டது; சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

அறமும் சட்டமும் ஒன்று என்று நாம் கொள்ள இயலாது; எனினும் அவை ஒன்றியுள்ளன என்ற உண்மையினை நாம் மறக்கலாகாது.

இவ்வாறு, அறநெறிக்கும் சட்டநெறிக்கும் உள்ள உறவினை நாம் ஆய்வது, அறத்தின் திறத்தினையும், சட்டத்தின் சால்பினையும் நன்கு அறிவதற்கு உதவுவதாகும். சட்டத்தின் ஆட்சி (Rule of law) என்பது எவ்வாறு அறத்தின் அடிப்படையில் அமையும் மாட்சிமையுடையது என்பதையும் நாம் தெளிவாக அறிகின்றோம்.

# வள்ளுவர் கூற்றில் இருமைநெறி

டாக்டர் தா. வே. வீராசாமி,
எம்.ஏ., பிஎச். டி.,

இவர் பெரியார் மாவட்டத்தில் உள்ள தாராபுரத்தில் 1-2-1931இல் பிறந்தவர்; பெரியபுராண இலக்கண ஆய்வுக் கட்டுரைக்காக டாக்டர் பட்டம் பெற்றவர்; பதினைந்து நூல்களின் ஆசிரியரான இவர் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார்; 'பொன்குஞ்சு' என்ற ஓரங்க நாடகத்துக்குச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதல் பரிசைப் பெற்றுள்ளார்; நாவலைப் பற்றிய இவரது திறனாய்வு நூல்கள் புகழ்மிக்கவை. கேரள, மதுரைப் பல்கலைக் கழகங்களிலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலும் பல ஆண்டுகள் பணிபுரிந்த இவர் இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல்புலத் தலைமைப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டுள்ளார்.

மக்கள் வாழ்வில் நன்மை பெருகவும், தீமை குறையவும் சான்றோர்கள் விரும்பு கின்றனர். அவ்விருப்பம் செயலாக மாறு தற்குத் தங்கள் எண்ணங்களை நூல் வடிவில் சிலர் அளித்துச் சென்றனர். சிலர் சொல்வடிவில் கூறிச் சென்றனர். எழுத் தும் கூற்றும் அறநூல் வடிவில் மக்கள் வாழ்வில் நலமூட்ட முயல்கின்றன. அம் முயற்சியின் பொன்முடியாகப் பொலிகிறது வள்ளுவரின் வாய்மொழியாம் திருக்குறள்.

வாழும் மனிதரின் வாழ்க்கை இன்ப ஒளி பெறவும், துன்ப இருளிலிருந்து நீங்க வும், அன்பு நிலையில் நின்று அறங்கூறும் போது, தனி மனிதன் எல்லாவற்றையும் துறந்து வாழும் துறவறம் பற்றிக் கூறும் அறங்களுள் உயர்ந்த ஒழுக்க நெறியில் நிற்க வேண்டிய கட்டுப்பாட்டை வற்புறுத்தும் கண்டிப்பு நெறி புலப்படும். ஆயின், கணவன் மனைவியாய்க் கூடி மக்கட் செல்வம் பெற்று அன்பு வாழ்வு வாழும் இல்லற வாழ்வில் அறவுரைகள் கூறும் போது அத்துணைக் கண்டிப்பு நெறி வேண்டுவதில்லை; முடிந்த வளர்ச்சி குறிக் கோள் நிலை. ஆயினும், அதனை அடைதற் குரிய நெறிகளில் சில ஏற்ற இறக்கங்கள், நெளிவு சுழிவுகள், நெகிழ்வு செறிவுகள் அமைதல் வேண்டும். அத்தகைய நிலை எது என்பதை இல்லறவியலில் காணும் இருபது அதிகாரங்களின் துணை கொண்டு காண முடியும். எனினும் எல்லா வழிகளை யும் காண்பது என்பது விரிந்த நிலைக்குக்

கொண்டு செல்லும். எனவே, உடன்பாடு எதிர்மறை என்ற இரண்டு கூறுகள் அமைந்த இல்லற இயற் குறள்களை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

பொதுவாக வள்ளுவர் — முதல் அதிகாரக் குறள்களை மட்டும் வழிகாட்டும் விளக்காகக் கொள்வோமாயின் — மூன்று தலையாய 'கூற்று' நெறிகள் தென்படுகின்றன.

(1) தெரிந்த உவமையைக் கூறித் தெரியாத உண்மையை விளக்கல். 'எழுத்துகளுக் கெல்லாம் முதல் அகரம்' என்ற கல்விக்கு அடிப்படையாக விளங்கிய முதல் தொடக்கத்தை எடுத்துக் காட்டிக் கண்ணால் காணமுடியாத, ஆயின் மன அறிவால் மட்டும் உணரக்கூடிய இறைவனைப் பற்றிய உண்மை நிலையை அறிவுறுத்துவார் ஆசிரியர்.[1] இந்நிலை எளிய நிலையில் நின்று அரிய உண்மையை உணர்த்தும் நெறியாகும்.

(2) அறிவின் பண்பே கேள்வியாக மலர்வது தான். உலக உண்மை உணரவும், பிறர்க்கு உணர்த்தவும், மக்கள் துன்பத்தைப் போக்கவும், இன்பத்தை ஆக்கவும் பாடுபட்ட சான்றோர் அனைவரும் கேள்வி கேட்டுப் பெற்ற பயனே வளர்ச்சியைச் சுட்டும் நெறியாக விளங்கும். மாணவ நிலையில் கேள்விகேட்டு ஆசிரியரிடம் அறிவு பெறும் நிலை தொடக்கநிலை, ஆசிரியர் தானறிந்த உண்மையை மாணவர்க்கு உணர்த்த வேண்டி வினாவடிவில் கேட்கும்போது கிடைக்கும் எதிர்மறை விடையின் வழியாகத் தாம் விரும்பும் நெறியிலே விடையளித்தவரைச் செலுத்தும் போக்கில் அறிவூட்டி வழி காட்டும் ஒளி தெரியும். வழியறியாது சென்றபோது 'அது வழியன்று' என்று தாமே உணர்த்தாமல் 'அது நேர் வழியா?' என்று கேட்டு நிற்க, விடையளிப்போன் தான் செல்லும் வழி தவறு என உணர்ந்து, எவ்விதப் புறக் கட்டுப்பாடுமின்றித் தன் செயல் பிழை என்பதை உணர்ந்து அப்பிழையை ஒப்புக் கொள்ளும்போது தானாகவே எதிர்மறை விடை கூறி ஆசிரியரோடு இயைந்து செல்வது அடுத்த படிநிலையில் அமைவது.[2]

(3) தன் தவற்றை உணர்ந்தபின் நன்மை கிடைக்குமென்று சுட்டும் கூற்று நிலையும்[3], மேலும் அத் தவறான வழியில் சென்றால் தீமை உண்டாகும் என்று சுட்டும் எதிர்மறை நிலையை உணர்த்தும் கூற்று நிலையும்[4] ஒரு உண்மையை உணர்த்தும் இருவேறு கூற்றுக் கிளைகளாக அமையும்

இந்நெறியின் அடிப்படையில் 'செயல்' விளங்குகிறது. அச்செயல் அறத்தோடு ஒன்றுபட்டு விளங்கும்போது நன்மையாக விளைகிறது. அதுவே அறநெறியில் மாறுபட்டு விளங்கும்போது தீமையாக விளைகிறது. எதையும் வாயாரச் சொல்லும் போது நம்பும் உள்ளம் மிகமிகக் குறைவு. செயல்புரிந்து அதன் விளைவைத் துய்க்க முடிந்த நிலையில்தான் உண்மை தெளிவாகப் புலப்படும். இதனை அன்றாட வாழ்வில் நீர் விளையாட்டில் நீந்திக் கரை காணும் நிலைகொண்டு ஆசிரியர் புலப்படுத்துவார்.

தமிழகத்தின் சங்க வாழ்வு புனல் விளையாட்டில் கண்ட இன்பநிலையைப் பல பாடல்களில், பரிபாடல் காட்டும் 'வையை'ப் பாட்டோவியங்களில் மிகத் தெளிவாகக் காண்கிறோம்.[5] தொடித்தலை

---

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு.
2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.
3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்.
4. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தல் அரிது.
5. பரிபாடலில் 'வையை' என்ற தலைப்பில் 8 பாடல்கள் உள. (6, 7, 10, 11, 12, 16, 20, 23); பின்னிணைப்பில் 4 உள.

விழுத்தண்டினார் உள்ளத்தில் 'நீராட்டு' ஏற்படுத்திய சிக்கலில் புனலாடல் என்பது மனித வாழ்வில் என்றுமே இன்பம் தருமா என்ற வினாவைக் கிளப்பித் தண்டுன்றித் தளர்ந்த வாழ்க்கையைச் சான்றாகக் கொண்டு 'இல்லை' என்ற எதிர்மறை விடையை அளித்தது,[6] அத்தகைய சிந்தனை மேலும் தொடரும்போது நீர் வழிப்படூஉம் புணை ஒருகாலத்தில் இன்ப வாழ்வின் புணையாக இருந்தது என்பதால் எக்காலத்திலும் அது இன்பம் தரும் உண்மை ஆகாது. ஆயினும் அதுகொண்டு 'நீர் வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர் முறை வழிப்படு'கின்ற நிலைத்த உண்மையைத் தாம் கண்டவாறு கணியன் பூங்குன்றனார் உரைத்துச் செல்கிறார்.[7] உலகிலுள்ள பொருள்கள், அவற்றிடையே காணும் உறவுகள், பொருள்கள் செயல்படும்போது ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைக் கூர்ந்து கண்டறிந்தபின், தாம் கண்ட உண்மைகளைத் தெளிவுபடுத்தச் சான்றோர்கள் முனைகின்றனர். இதில் செயல்-விளைவு என்ற இருநிலைகளைக் காண்பர். விளைவிலும் நேர் விளைவு எனவும் எதிர்விளைவு எனவும் இரண்டைக் காண முடிகிறது. ஒன்றை மட்டும் பார்த்து மற்றொன்றைப் பாராமல் விட்டுவிடின் முழுமை அறிவு கிடைக்காது. இவ் விரண்டையும் ஒரே இடத்து ஒரே காலத்துக் காணும்போது தெளிவுண்டாகும். இத் தெளிவை உணர்த்தும் முறையில் பண்டைய மரபு வழிவந்த, புனல் விளையாட்டின் வழியே வளர்ந்துவந்த கருத்தை ஒட்டி மேலும் வளர்க்கும் வகையில் திருவள்ளுவர்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

எனக் கூறியுள்ளார். நீந்திக் கடப்பின் இன்பம். நீந்தியும் கடக்க முடியாமல் ஆழ்ந்து போயின் துன்பம். இவ்வகையில், வாழ்வு நிகழ்ச்சியில் காணும் விளைவுகளைச் சுட்டிக்காட்டிச் செய்யும் செயல் எது என்பதையும், செய்யாமல் தவிர்க்கும் செயல் எது என்பதையும் தேர்ந்து முடிவு செய்யும் வகையில் நெறிகாட்டும் கூற்றை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு, செயலின் இருவகைப் பயன்களைச் சுட்டும்போதுதான் தெளிவு கிடைக்கவும், அதன்வழி நல்வழி ஒழுகவும் இயலும்.

இவ்வாறு உவமை வாயிலாக எளிமையில் உண்மையை உணர்த்தவும், கேள்வி வாயிலாக அறிவுநெறி தழைக்கவும் பயனின் இருவகையைக் காட்டுதல் வாயிலாக அறநெறியில் ஈடுபடத் தெளிவூட்டவும் வள்ளுவர் கையாண்ட கூற்றுநெறி வெளிப்படுகிறது, இந்நெறியில் இருவகைப் பயனையும் ஒரே குறளில் இல்லற இயலில் கையாண்டுள்ள இடங்கள் பதினான்கு ஆம்.[8]

இல்வாழ்க்கையில் புகுவதே எல்லா இன்பங்களையும் நலன்களையும் தான் மட்டுமின்றித் தன்னைச் சேர்ந்தாரும் துய்க்கவேண்டும் என்ற நோக்கை வெளிப்படுத்தும். அதற்கு வள்ளுவர் கால நிலைப்படி பெண்ணொருத்தி வாழ்க்கைத் துணையாக அமைதல் வேண்டும். அவள் நலமாக அமையின் எல்லாம் அமையும். அவள் மாறாக அமையின் எது அமைந்தும் பயனில்லை. உண்மை இன்மை எனும் இருநிலையை இவ்வாறு சுட்டி எல்லாம் உள்ளவாறு அமையும் நலத்தைப் போற்றுவார் ஆசிரியர் (கு. 53). இது ஆசிரியர் தாமே கண்ட நிலை.

உயிர் இருந்தால் ஒழிய இவ்வுடம்பு இயங்காது. இவ்வடிப்படை வாழ்வுண்மைப் பலனைக் கொண்டு அன்பின் வழியது உயிர்நிலை எனவும், அது அற்ற நிலை செயலற்ற உடம்பு எனவும் (கு. 80) காண முடிகிறது.

உடம்பிலே புண்பட்டபின் அது ஆறும் நிலையைக் காண்கிறோம். ஆயினும் நாவினாற் சுட்ட வடு ஆறாது என உண்மை அடிப்படையில் 'ஆறும்', 'ஆறாது' என இருமையைக் காட்டி (கு. 129) நாவடக்

6. புறநானூறு 243
7. புறநானூறு 192
8. குறள் எண் 53, 72, 80, 96, 108, 110, 129, 137, 155, 196, 200, 222. 236, 240.

கத்தை நிலைநாட்டுவார். அந்நெறியில் சென்று இனியவை கூறின் அல்லவை தேய அறம் பெருகும் நிலையை உணர்த்துவார் (கு. 96). அன்பற்ற வாழ்வில் எல்லா வற்றையும் தமக்கு உரிமை ஆக்கிய மாற்றத் தைக் காட்டும்போது (கு. 80) இல்லறத் தில் காணும் பொருளுடைமை, பொரு ளின்மை எனும் இருநிலைக்குப் புதுப் பொருள் கிடைக்கிறது.

தம் உரிமையை மட்டும் ஆசிரியர் காட்டுவதோடமையாமல் உலகில் மற்றச் சான்றோரும் அத்தகைய நிலையில் அமைவதை இக்கூற்று நிலையிலேயே கூறிச் செல்கிறார். பயனில் சொல் பாராட்டு வானை மகன் என்று சொல்லாமையையும், அவனையே மக்கட் பதடி என்று சொல்வ தையும் (கு. 196) காட்டிப் பிறர் செயல் வாயிலாகப் பயனில சொல்லாமையை மறுப்பர். அதுபோன்று பொறுமையுடைய வரைச் சான்றோர் ஒரு பொருளாகப் போற்றி மதிப்பதையும் பொறுக்காமல் பிறரை வருத்துபவரை மதிக்காமலிருப்ப யும் காட்டுவர் (கு. 155).

எனவே, பயனுள்ளவை சொல்லுக எனவும், பயனில சொல்லற்க (கு. 200) எனவும் கூறுவதன் வாயிலாகப் பயன்படும் வாழ்வை விரும்பும் வேட்கை வெளிப்படும். இத்தகைய பயனை வேறுவழியாகவும் குறள் கூறும். 'நன்று', 'நன்றன்று' எனச் செய்ந்நன்றி அறிதலையும், நன்றல்லதை அன்றே மறப்பதையும் கூறும் (கு. 108). ஏற்பது தீது எனவும், ஈவது நன்று எனவும் (கு. 222) பகுத்துக் காட்டும். இத்தகைய ஒழுக்க நெறியில் சென்றால் மேன்மை எய்துவர் எனவும், இதிலிருந்து இழுக்கின் பழி எய்துவர் (கு. 137) எனவும், 'பயன்' பெறும் உயர்வைச் சுட்டும். இத்தகைய நெறியில் சென்றால் உய்வுண்டு; இல்லை எனில் உய்வில்லை என்று (கு. 110) 'செய்ந்நன்றி அறிதல்' கொண்டு உணர்த் தும். இத்தகைய நல்ல பிறப்புத்தான் தோன்றற்குரியது; அவ்வாறில்லாவிடில் மனிதனாகத் தோன்றாமை நன்று (கு. 236) எனக் கூறி, 'இசையொழிய வாழ்வாரே வாழாதவர்' எனவும், 'வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்' எனவும் (கு. 240), இல்லறப்பயனாம் 'புகழ்' பெற்று வாழ்வதன் சிறப்பை உணர்த்தும்.

இவ்வாறு இருவகைப்பட்ட பயன் களைக் கூறி அடுத்தடுத்து அவற்றை வைப்பதால் மக்கள் வாழ்வுயர வழிகாட்டும் அறிவு நெறியும், ஆளுமை நெறியும் தெரி கின்றன. உண்மை நிலை உணர்ந்து, உயிர்ப்பண்பு பெருக, அல்லவற்றைத் தேய்த்து, அறத்தைப் பெருக்கி, நன்மை திமை நாடிப் பிறப்பில் உயர்ந்து நல்வாழ்வு வாழ வள்ளுவர் இல்லற இயல் ஒளி காட்டு கிறது.

# இலக்கியமும் வாழ்வும்

புலவர் சி. செல்வத்தாண்டவன்,
எம். ஓ. எல்.

இக் கட்டுரை ஆசிரியர் சிதம்பரத்தில் 3-2-1923இல் பிறந்தவர்; தமிழில் ''புலவர்'', ''எம். ஓ. எல்.'' ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பதினேழு ஆண்டுகளும், தமிழ்க்கல்லூரி முதல்வராகப் பதினைந்தாண்டுகளும் பணியாற்றியவர். இதுவரை மூன்று நூல்களையும், பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இப்பொழுது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இலக்கியத்துறையில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகின்றார்.

உலகில் வாழவிரும்பும் மக்கட்கெல்லாம் ஒழுக்கமுடைய சான்றோரின் கருத்துக்கள் உற்ற துணையாகும். சான்றோர் தம் அனுபவத்தால் நுனித்துக் கண்டறிந்து தெளிந்த உண்மைகளை, கருத்துக் கருவூலங்களைத் தாம் படைத்த இலக்கிய மாளிகையில் தொகுத்து வைத்துள்ளனர். சான்றோரை அணுகி அவர் கருத்துக்களைக் கேட்டு இன்புற்றுச் சிறப்புறுதற்குக் காலமும் இடமும் தடையாகலாம். ஆனால் அவர் படைத்து வைத்துள்ள இலக்கியங்களை அணுகுதற்குக் காலமும் இடமும் தடையாவதில்லை. ஆதலால், மக்கள் விரும்பியபொழுதில் விரும்பிய இடத்தில் இலக்கியத்தின் துணை கொண்டு வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவும் சீரிய கருத்துக்களைப் படித்து இன்புறவும் சிறக்கவும் இயலும்.

இலக்கியப் பயிற்சி உடையார் யாவரும் இலக்கியம் படைத்துள்ள புலவர் வழிநின்று இலக்கிய மாந்தர்களைக் காணல் வேண்டும். இலக்கியப் புலவர், இலக்கிய மாந்தர்கள், இலக்கியம் கற்போர் ஆகிய மூவருக்கும் இடையே ஒரு முக்கோணத் தொடர் அமைய வேண்டும். கற்போர், இலக்கியப் புலவர் மூலம் இலக்கிய மாந்தர்களின் பண்பாடுகளை உணர வேண்டும். இலக்கிய மாந்தர்கள் மூலம் இலக்கியப்புலவரின் தனித் தன்மையைக் கண்டு பாராட்ட வேண்டும்.

இலக்கியம் கற்போர் தேர்வு நோக்கம், பொழுதுபோக்கு ஆகிய காரணங்களுக்காக

இலக்கியம் பயிலுதல் சிறப்பாகாது. எச் செயலைச் செய்தாலும் அதனால் பயன் காண விழையும் பயன்கோட்பாட்டுக் கொள்கை உணர்வு மிகுதியாக உள்ள இந் நாளில் இலக்கியம் கற்பதால் விளையும் பயன் என்ன என்பதைச் சிந்திப்பதும் முறையே. அச் சிந்தனையின் பயனாகச் சான்றோர் மூன்று நிலைகளை வகுத்துள் ளனர். 'அணிகொள் காவியம் ஆயிரம் கற்பினும் ஆழ்ந்து நிற்கும் கவியுள்ளம்' காணாராயின், கற்றதனால் ஆய பயன் என்ன? ஒன்றுமில்லை யன்றோ?

ஆழ்ந்து தோய்ந்து பயின்று, நூலாசா னின் உள்ளம் காண வேண்டும்.

'வாழும் மக்கள் இனத்திற்கு வேண்டு வன இவை' என்று தன் அனுபவத்தால் கண்டு தெளிந்து, நூலில் பொதிந்து வைத் துள்ள ஆசிரியனின் உயர்ந்த நெறிகளைப் பின்பற்றி ஒழுகுதல். இஃது இரண்டாம் நிலை.

உயர்நெறிகளைப் பின்பற்றி ஒழுகுவ தன் வாயிலாகப் பொல்லா மனக்கோட்டம் தீர்ந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, உயர்ந்து சிறந்து, குன்றிலிட்ட விளக்கென எல்லாரும் போற்ற, தனக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கும் உயர்நிலை அடைதல். இது மூன்றாம் நிலை.

இலக்கியம் பயிலுவோர் இலக்கியம் படைத்துள்ள ஆசிரியனை அணுகிப் பயன் கொள்ளும் முறையை இனிக் காண்போம்.

பதினெண் மேற்கணக்கு நூல்கள் பாட்டும் தொகையும் என இருவகைப்படும். அவற்றுள் தொகை எட்டாகும். தொகை எட்டனுள் ஒன்று புறநானூறு. தமிழ்ச் சான்றோர்களின் வாழ்க்கை முறைகளை ஆசிரியப்பாக்களின் மூலம் நிழற்படமாக்கிக் காட்டும் இந்நூலில் வரும் ஒரு நிகழ்ச்சியைக் காண்போம் (புறம். 43).

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் புலவர் தாமப்பல் குட்டுவ னாரும் வட்டாடினர். புலவர் வட்டுக் காயை மறைத்தார். நிமை கண்டவழி வெகுண்டு அதைத் தீர்க்கும் அரசமரபில் வந்த மாவளத்தான் வெகுண்டு புலவரை வட்டுக்கொண்டு எறிந்தான். தம்மை இது வரை யாரும் இப்படிக் கடுமையாக நடத்தி யதில்லை; அதனால் புலவர்க்குச் சீற்றம் மிகுந்தது. உணர்ச்சி வயமாயினார்.

''தன்னை வந்தடைந்த அஃறிணைப் பொருளாகிய புறாவின் துன்பத்தைத் தீர்க்கத் தன்னையே அளித்த கொடைமை யும், பகைவரை வஞ்சிக்காமல் நேருக்கு நேராகப் பொருத வீரமும் உடைய சோழ மரபில் வந்தவனே, சோழன் நலங்கிள்ளி யின் தம்பியே, நின் முன்னோரெல்லாம் பார்ப்பார் வருந்துஞ் செயலைச் செய்ய மாட்டார். நீ இங்ஙனம் செய்தமையால் நினது பிறப்பின்கண் ஐயப்படுகிறேன்'' என்று மிகக் கடுமையான சொற்களை, நெருப்புக் கங்குகளைச் சோழன் மாவளத் தான்மீது கொட்டினார் புலவர்.

சோழ இளவல் முதலில் உணர்ச்சிவசப் பட்டு வட்டால் எறிந்தாலும் பின்னர் உணர்ச்சி நிலையினின்று விடுபட்டுத் தெளிந்த அறிவுநிலை பெற்றான். தன் மானத்தைவிடத் தன் குடிமானம் பெரிது என நினைத்தான். தன் முன்னோர் செய் யாத ஒன்றை உணர்ச்சிவசப்பட்டுச் செய்த மையால் தனக்கும் தன் குடிக்கும் இழுக்கு நேர்ந்ததை எண்ணி வருந்தினான். அறி வென்னும் நீரால் சினத்தையும், அதன் காரணமாக எழுந்த உணர்ச்சியையும் அவித்த மாவளத்தான், மிகவும் நாணி நின்றான்.

குணம் என்னும் குன்றேறி நின்ற மாவளத்தானைக் கண்டவுடன், தாமப்பல் கண்ணனார் வெகுளியை விட்டு, நிகழ்ந்த வற்றையும் அவற்றால் ஆய விளைவுகளை யும் அமைதியாகச் சிந்தித்தார். 'நின் பிறப் பில் ஐயமுடையேன்' என மிகமிகக் கடுமையான சொற்களைச் சொல்லி மாவளத்தானை நாவால் வடுப்படுத்திய தம் பெரும்பிழையை எண்ணி நொந்தார்.

இப்பிழைக்காக இளவரசன் தமக்கு எவ்வகையான தண்டனையும் தரலாம். எனினும் அங்ஙனம் தராமல் பிழைபொறுத்துத் தம்மைக் காத்த சிறுமுதுக்குறைவனின் தலைமைப்பாட்டினைப் பலமுறை நினைந்து,

> நின்யான் பிழைத்தது நோவா யென்னினும்
> நீ பிழைத் தாய்போல் நனிதா னினையே;
> தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
> இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காண்மெனக்
> காண்டகு மொய்ம்ப காட்டினை; ஆகலின்
> யானே பிழைத்தனென்-

எனத் தீர்ப்பும் தானே வழங்கித் தம்மைக் குற்றவாளியாக்கிக் காட்டுகின்றார்.

இப்பாடலில் தாமப்பல் கண்ணனார் நிகழ்ச்சி கூறும் புலவராகவும், நிகழ்ச்சிக்குரிய மாந்தராகவும் இருக்கிறார்; மாவளத்தான் நிகழ்ச்சி மாந்தனாக மட்டும் உள்ளான். இந்நிகழ்ச்சியில் முதலில் தவறு செய்பவர் புலவர் தாமப்பல் கண்ணனார். அதனைக் கண்டு வட்டு எறியும் தவறு செய்பவன் மாவளத்தான். புலவர் வட்டெறி பட்டவுடன் நீர்மை குன்றிய கடுஞ்சொற்களைச் சொல்லுதலால் மீண்டும் தவறு செய்கிறார். குடிமானம் போற்றும் சோழ இளவல் அறிவு வயத்தனாய், உணர்ச்சி நீங்கி நாணி நின்றான். இந்நிலையில் புலவர் மாவளத்தான் நிறையையும் தம் குறையையும் உணர்ந்து அவனைப் பாராட்டுகின்றார்.

'யானே பிழைத்தனென்' எனப் புலவர் தம் பிழையை உணர்ந்து வருந்துகின்றார். எனினும், அவர் தம் பிழையை உணர்தற்கு மாவளத்தான் நாணத்துடன் அடங்கி நின்றதே காரணம். மாவளத்தான் புலவர் கடுஞ்சொற்கேட்டு மேலும் சினந்து செயற்பட்டிருப்பானாயின், புலவரின் உணர்ச்சி நிலையும் மேலும் கூடியிருக்கும், விளைவுகளும் வேறுவகையாக மாறியிருக்கலாம். எனவே, இவ்விருவரில், ஒருவர் பொறையால் இருவர் நட்புக்குக் காரணமாக நடந்து கொண்ட சோழன் மாவளத்தான் சிறப்பே மேலானது. அதனாற்றான் இந்நிகழ்ச்சியைக் கூறும் பாடலுக்குத் துறை வகுத்தான்றோர், அரசன் பெற்ற வெற்றியாகக் கருதி, அரசவாகை எனத் துறை கூறிச் சிறப்பித்துள்ளனர்.

பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி வலவராகிய சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்தில் தில்லைவாழ் அந்தணர்க்கு அடுத்தபடியாக இடம் பெற்றுள்ளவர் திருநீலகண்ட நாயனார். இந்த வரலாற்று இலக்கியத்தைக் கற்பதன்மூலம் நாம் பெறும் பயன் யாது எனக் காண்போம். திருநீலகண்ட நாயனார் தில்லையில் வேட்கோவர் குலத்துப் பிறந்தவர்; சிற்றம்பலத்தில் தனிக்கூத்தாடும் நாதனார் திருவடிகளை நாளும் போற்றும் நலம் மிக்கவர்; திருவோடு சமைத்துச் சைவ மெய்யடியார்களுக்குத் தந்து மகிழும் இயல்புடையவர். உலகுயிர்களைக் காக்க இறைவன் நஞ்சுண்ட அளவிலாக் கருணையை நினைந்து, அதன் அடையாளமாக விளங்கும் திருநீலகண்டத்தைத் 'திருநீலகண்டம்' என்று அவர் இடையறாது சொல்லி வந்தார். இங்ஙனம் வாழும் நாளில், இளமை காரணமாகப் பரத்தையை அணைந்தார். திருநீலகண்டரின் பரத்தமை காரணமாக அவரிடம் மனைவி ஊடல் கொண்டாள். ஊடலைத் தணிக்க நாயனார் பலமுறை முயன்றார். புலவி தீராத அம்மையார், 'எம்மைத் தீண்டாதீர், திருநீலகண்டம்' என்று ஆணையிட்டார். அது கேட்ட திருநீலகண்டர் தெளிவு பெற்று ''எம்மைத் தீண்டாதீர் என மொழிந்தமையால் வேறு பெண்டிரையும் மனத்தினாலும் தீண்டேன்'' எனக் கூறி விரதம் பூண்டார். அம்மையாரும் அன்று முதல் மெய்யுறுதல் ஒன்றுமட்டும் இன்றிக் கணவர்க்குச் செய்யவேண்டிய கடமைகளில் சிறிதும் குறைவின்றிச் செய்து வந்தார்.

திருநீலகண்ட நாயனாரும் அவர் மனைவியாரும் அன்புறுபுணர்ச்சி இல்லாது தாம் வாழும் நிலை பிறரறியா வண்ணம் காத்து வாழ்ந்து வந்தனர். சிவபெருமான் இத்தொண்டரை விளக்கங்காண வந்தார்; சோதனை செய்தார்; அருள் வழங்கினார்.

இது திருத்தொண்டர் புராணத்தின் மூலம் நாம் அறியும் திருநீலகண்டநாயனார் வரலாறாகும்.

மேலே கூறப்பெற்ற இரு வரலாற்று நிகழ்ச்சிகளையும் நுணுகிக் காண்போமாயின் சில உண்மைகள் புலனாகும். நல்லாறொழுக்கின் தலை நின்றார் அல்லன செய்தற்கு ஒருப்படார். பசி, ஆசை-முதலியவை காரணமாக ஒரோவழித் தவறு நேரின் அதற்காக வருந்தித் திருந்தி முன்னைய நிலையினும் சிறப்புறுதலைக் காண்கின்றோம். 'குற்றம் புரிதல் எனக்கியல்பே; குணமாக்கொள்ளல் நினக்கியல்பே' என அருள்பெற்ற ஞானியரும் கூறுதலால், இந்த உலகில் உடலொடுகூடி வாழும்வரை மனிதன் நிறை குறைகளுக்கு உரியவனே. ஆதலால் குறைகளைந்து நிறை போற்றி உயரும் பண்பினை மாவளத்தான் வாழ்க்கையிலும் திருநீலகண்ட நாயனார் வாழ்விலும் காண்கிறோம். விளக்கின்முன் இருள் மாய்வதுபோல அவர்கள் அறிவுத் தெளிவின்முன் அவர்கள் செய்த குறைகள் மாயக் காண்கிறோம்.

திருநீலகண்டர், அம்மையார் இட்ட ஆணைமொழி கேட்டவுடன் தெளிந்த ஞானம் பெறுகிறார். 'உன்னை மட்டும் அன்றி, வேறு மாதரையும் கரத்தினால் மட்டுமின்றி மனத்தினாலும் தீண்டேன்' என்று உரைத்து நோன்பு மேற்கொள்கின்றார்.

இச்செயலினும் சிறப்பாக நாயனாரும் அவர் மனைவியாரும் வாழ்க்கை நிகழ்ச்சியை அயலார் அறியாவண்ணம் போற்றிக் காத்தனர். மாவளத்தான், தன் மானத்தினும் குடிமானம் பெரிதெனப் போற்றியது போலவே திருநீலகண்ட நாயனாரும் தன் மானத்திலும் குடும்பமானம் பெரிதெனக் கொண்டமையால் தம் குடும்பநிலையைப் பிறர் அறியாவண்ணம் காத்து வாழ்ந்து வந்தனர். இச்செய்தியைச் சேக்கிழார், 'இளமையின் மிக்குளார்கள் இருவரும், அளவில்சீர் ஆணை போற்றி, வேறு வைகி, அற்புறு புணர்ச்சி இன்மை அயலறியாமை வாழ்ந்தார்' எனப் பாராட்டி யுரைக்கின்றார்.

தன்மானத்தைப் பெரிதெனக் கருதிக் குடும்ப மானத்தைக் கெடுக்கும் கணவன் மனைவியரும், தன்மானத்தைப் பெரிதெனக் கருதிக் கட்சிமானத்தைக் காற்றில் பறக்க விடும் தலைவர்களும், தன் மானத்தையே பெரிதெனக் கருதி நாட்டு மானத்தை, நாட்டு நலத்தைக் கெடுக்கும் ஆட்சியாளர்களும் அறிந்து கொள்ள வேண்டிய அரிய நெறியே, பிழை பொறுத்து அயலறியாமை வாழ்வதாகும்.

திருநீலகண்ட நாயனார் வாழ்க்கை மூலம் சேக்கிழார் பெருமான் இரண்டு கருத்துக்களை உணர்த்த முற்படுகின்றார். (1) தில்லைவாழ் அந்தணர் புராணத்தின் இறுதியில் திருநீலகண்டநாயனார் புராணத்தைத் தோற்றுவாய் செய்யுமிடத்து,

நிகழ்திரு நீலகண்டக் குயவனார் நீடு வாய்மை
நிகழும்அன் புடையதொண்டர் செய்தவம்
கூறலுற்றாம்

எனத் திருநீலகண்டர் இளமையில் சொன்ன வாய்மையைக் கைவிடாது காத்த பான்மையைத் தவம் என்று குறிப்பிடுகின்றார்.

(2) திருநீலகண்ட நாயனார் புராண இறுதியில்,

அயலறி யாத வண்ணம் அண்ணலார் ஆணை
உய்த்த
மயலில் சீர்த் தொண்ட னாரை யான்அறி
வகையால் வாழ்த்தி

எனச் சேக்கிழார் அவரது அயலறியாத ஆணை வாழ்க்கையைப் பாராட்டி முடிக்கின்றார்.

மாவளத்தானிடம் காணும் பொறையும் திருநீலகண்ட நாயனாரிடம் காணும் ஆணை போற்றல், அயலறியாமை வாழ்தல் ஆகிய இரு பண்புகளும், பிரிந்தும் பிளந்தும் பகைத்தும் வாழ்கின்ற குடும்பங்களுக்கும் சமுதாயத்திற்கும் நன்மருந்துகளாகும்.

இலக்கியங்களை நுணுகிக் கற்று உணர்ந்து, அவை கூறும் அனுபவ நெறியை மேற்கொண்டு ஒழுகி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்புறுவதுவே சீரிய இலக்கியப் பயனாகும்.

# நான்மணிக்கடிகை கூறும் சிந்தனைகள் ★

பேராசிரியர் பி. விருத்தாசலம்,
எம்.ஏ.

இக்கட்டுரை ஆசிரியர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருப்பூந்துருத்தி என்னும் சிற்றூரில் 22-5-1940இல் பிறந்தார். திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று புலவர் பட்டமும், தனிப்படிப்பு வாயிலாகத் தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்ற இவர் இப்போது முனைவர் பட்டம் பெறுதற்காக ஆய்வு செய்து வருகின்றார். உயர்நிலைப் பள்ளிகளில் ஆறரை ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், 1969 முதல் கரந்தைப் புலவர் கல்லூரியில் பேராசிரியராகவும், 1973 முதல் கல்லூரி முதல்வராகவும் பணிபுரிந்து வருகின்றார். இவர் எழுதிய ''கண்ணகி சிலம்பீந்த காரணம்'', ''கனவும் கற்பனையும்'' என்னும் பெயருடைய இரண்டு நூல்கள் விரைவில் வெளிவரவுள்ளன. தனித்தமிழ் இயக்கத்தில் பேரீடுபாடு கொண்ட இவர் சென்னைப் பல்கலைக் கழக அடையாளச் சின்னத்தில் ''கற்றனைத்தூறும் அறிவும் ஆற்றலும்'' என்னும் தமிழ்த் தொடர் இடம் பெறப் பெரிதும் பாடுபட்டு வெற்றி பெற்றவர். தமிழ்க் கல்லூரிகளின் வளர்ச்சிக்காகவும் தமிழகத்தில் பணியின்றி வாடும் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட பணியில்லாத் தமிழாசிரியர்களின் வாழ்விற்காகவும் குரல் கொடுப்பதைத் தம் இலக்காகக் கொண்டவராவார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நான்மணிக்கடிகை தமிழில் எழுதப்பட்டுள்ள மிகவும் சிறப்புடைய நீதி நூல்களில் ஒன்றாகும். 'விளம்பி' என்ற ஊரில் வாழ்ந்த 'நாகனார்' என்னும் புலவர் பெருமகனால் பாடப்பெற்ற நான்மணிக் கடிகை என்னும் இந்நூல் 106 வெண்பாக்களைக் கொண்டு விளங்குகிறது. நான்கு மணிகளால் அமைக்கப்பட்டதோர் அணிகலன் பலராலும் விரும்பப்படும் பான்மை உடையதாக விளங்குவதுபோல ஒவ்வொரு வெண்பாவிலும் நந்நான்கு அறக் கருத்துக்களை அழகாகவும், சுவையாகவும் எடுத்துரைக்கும் இந்நூலும் நான்மணிக்கடிகை எனப் பெயர்பெற்றது மிகவும் பொருத்தமானதாகும்.

உலக வாழ்க்கையில் நாம் நாடோறும் ஆயிரக்கணக்கான மக்களைப் பார்த்து, பேசி, பழகி, அவர்களுக்கு வேண்டியவற்றை நாம் செய்து, நமக்கு வேண்டியவற்றைப் பிறர் செய்யுமாறு செய்து வாழ வேண்டியுள்ளது. பிறருடைய உதவியின்றித் தாம் மட்டும் தனித்து வாழும் ஆற்றல் உலகில்

* 1983 டிசம்பர் 3, 6, 10, 13, 24 தேதிகளில் திருச்சி வானொலியில் ஒலிபரப்பானவை. நிலையத்தாரின் ஒப்புதலுடன் வெளியிடப்பெறுகிறது.

பெரும்பாலோரிடம் இருப்பதில்லை.அப்படித் தனித்து ஒதுங்கி வாழ வேண்டிய தேவையு மில்லை. நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிந்ததாகச் சொல்லப் படும் புராணகாலத்து முனிவர்களும் தம் முடைய தவத்துக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாப்புத் தேடிக்கொள்ள மன்னர்களை யும், போர் மறவர்களையும் உதவிக்கு அழைக்கவேண்டிய நெருக்கடியான நிலை மைக்கு ஆளானது உண்டு, தாம் செய்யும் யாகத்தை மற்றவர்கள் தடுத்துவிடாமல் காப்பாற்ற வேண்டி விசுவாமித்திரமுனிவன் இராமனைக் காட்டுக்கு அழைத்துச் சென்றதாகச் சொல்லப்படும் இராமாயணக் கதை நமக்குத் தெரியும். ஆகவே பற்றெலாம் முற்றத் துறந்த முனிவர்களாயினும், உலகம் முழுவதும் தம் ஒரு குடைக்கீழ் ஆளுகின்ற பேறுபெற்ற ஒப்பற்ற வேந்தர்களாயினும், குன்றுபோல் செல்வம் படைத்த கொழுங் குடிச் செல்வர்களாயினும், இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஏழை எளியவர் களாயினும், தம்மைச் சூழ்ந்து வாழும் எல்லாருடனும் அன்புடன் பழகி, அவர் களுடைய அன்பையும் ஆதரவையும் முழு மையாகப் பெற்று இன்புற்று வாழ வேண்டி யுள்ளது. இதுதான் மக்கள் செம்மையாக வாழும் முறைமையாகும். இதற்கு மாறாகப் பலருடனும் பகைகொண்டு வாழ்வோர் யாராயினும் அவர்கள் மன அமைதியோடு இவ்வுலகில் வாழ இயலாது. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் செயல்களுக்கு ஏற்றபடி இன்ப துன்பங்கள் விளைந்தே தீரும். வினையின் விளைவுகளிலிருந்து யாரும் தப்பி ஓடிவிட முடியாது. விதை யொன்று போடச் சுரையொன்று முளைக் காது. ஆதலின் பிறரைத் துன்புறுத்துவோர் யாராயினும் அவர் பிறரால் துன்புறுத் தப்படுவது உறுதி. எனவேதான் ஒருவரை விளையாட்டுக்காகக்கூடப் பிற ரிடம் பகைகொள்ளக் கூடாது என்பர் சான்றோர்.

பகையெனும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பா ற்றன்று

என்பது வள்ளுவர் நமக்குக் கூறும் அறிவுரை யாகும்.

உடலும் உயிரும் போல ஒன்றுபட்டு வாழுகின்ற கணவன் மனைவியராக இருப் பினும், ஒருவருக்காக ஒருவர் உயிரையும் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒன்றுபட்டு வாழும் உயர்ந்த நண்பர்களாக இருப்பினும், அவர்கள் விளையாட்டு வகையான் ஒருவரை ஒருவர் எள்ளி நகையாடிப் பேசி இழிவு படுத்துவராயின், அவ்விளையாட்டே வினை யாய்-மனப்புண்பட்டுப் பிரிந்து சென்று ஒருவருக்கொருவர் தீங்கிழைத்துக் கொள்ளும் கொடும் பகைவர்களாக மாறி விடுவதைப் பார்க்கிறோம். தம்முடைய வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கும்போது பெற்றோர் தம்மைக் குறைவுபடுத்திப் பேசிக் கண்டிக்க முயன்றால், அதனைத் தாங்கிக் கொள்ள இயலாத சின்னஞ்சிறு குழந்தைகள் எவ்வளவு தேறுதல் சொன்னா லும் மனப்புண் ஆறாது குமுறிக் குமுறித் தம்முடைய கடுமையான எதிர்ப்பைக் காட்டுவதை நாம் அறிவோம். ஆகவே, தம்முடைய செல்வாக்கையும் சினத்தையும் காட்ட வேண்டும் என்பதற்காகச் செல்வத் திலும், பதவியிலும், ஆற்றலிலும் தாழ்ந்த நிலைமையில் இருப்பவர்களை இழிவுபடுத் தும் போக்கில் எள்ளி நகையாடுவது என்பது பண்பற்ற செயலாகும். ஒருவர் மனம் புண் படும்படி இழிவுபடுத்தி இன்னொருவர் பேசுவதுதான் உலகில் பகைமை உண்டாவ தற்கு அடிப்படைக் காரணமாகும். ஆகவே அந்தப் பண்பற்ற செயலைச் செய்ய வேண்டா என்று நமக்கு அறிவுரை கூற வந்த விளம்பிநாகனார்,

எள்ளற்க என்றும் எளியாரென்று

எனக் கூறுகின்றார்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்

என்று ஏறத்தாழ இதே கருத்தை வள்ளு வரும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

''ஏற்பது இகழ்ச்சி'' என்று கூறிய தமிழ்ப் பெரும் புலவராகிய ஔவையாரே, ''ஐயம் இட்டுண்'' என்று கூறியிருப்பதை நாம் அறிவோம். கொடுப்பவர் கை மேலே இருக்க, ஏற்பவர் கை கீழே இருக்கும். பிறருக்கு ஒரு பொருளை ஈவதில் இன்பம் உண்டு. இந்த உலகில் மனிதன் அடையும்

இன்பங்களில் ஈத்துவப்பதனால் ஏற்படும் இன்பமே மேலானதாகும். அதைப்போலவே மனிதன் அடையும் துன்பங்களில் பிறரிடம் ஒரு பொருளை இரந்து கேட்கும் துன்பமே கொடுந் துன்பமாகும்.

ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

என வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் பாடிய புறநானூற்றுப் பாடல் இரத்தலின் இழிவையும் கொடுத்தலின் உயர்வையும் அருமையாக விளக்கிக் காட்டுகின்றது. குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கப் பெறாமையால் உயிர் துறக்கும் நிலையில் உள்ள பசுமாட்டினைக் காப்பாற்ற வேண்டி ஒரு குடம் தண்ணீர் தருக என்று ஒருவரிடம் சென்று ஒருவர் கெஞ்சிக் கேட்பது அவ்வாறு கேட்பவர் நாவினுக்கு மிகவும் இழிவு தருவதாகும் என்பார் திருவள்ளுவர்.

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்

என்பது குறள். தம்முடைய செயலால் புகழ் வருமென்று தெரிந்தால் அதற்காக உயிரையும் கொடுப்பதும், பழிவரும் என்று தெரிந்தால் உலகத்தையே தம்மிடம் கொண்டு வந்து கொடுத்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் சான்றோர் இயல்புகளாகும்.

புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்

என்பது புறநானூறு. ஆகவே, பண்பில்லாத கீழ்மக்கள் கை மேலோங்கி நிற்கவும், தம்முடைய கை கீழே ஏந்தி நிற்கவும் கூடிய வகையில் - எந்தப் பொருளாக இருந்தாலும், உலகமே தமக்குக் கிட்டுவதாக இருந்தாலும் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்திடுக என்று நமக்குத் தெளிவாக அறிவுரை கூற விரும்பிய நான்மணிக்கடிகை ஆசிரியர்

என்பெறினும் கொள்ளற்க கொள்ளார்கை
மேலவா

என்று கூறுகின்றார்.

எத்தனை எத்தனை கொடிய துன்பங்கள் வந்து தம்மைத் தாக்கினாலும் உயர் குடிப் பிறந்த சான்றோர்கள் தமக்குரிய சான்றாண்மையிலிருந்து விலகுவதில்லை; அவர்கள் கனவிலும் தவறுகள் செய்வ தில்லை. வறுமையிலும் செம்மையாக வாழ்வது சான்றோர் இயல்பு. அதற்கு மாறாக ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுண்ணவும் வழியின்றி வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்ற ஏழை எளியவர்களில், தம்முடைய வறுமை காரணமாகவும் அறியாமை காரணமாகவும் சில நேரங்களில் சில மனிதர்கள் சிறுசிறு தவறுகளைச் செய்து விடுவதுண்டு. நெடுநாள் பழகி உண்மையாகவே தமக்குத் தொண்டு செய்துவந்த அந்த இரங்குதற்குரிய மனிதர்கள் தம்மை அறியாது செய்துவிட்ட சின்னஞ்சிறு தவறுகளுக்காகச் சினந்து பேசி வேலையைவிட்டு விலக்கிவிடின் அவர்கள் அடியோடு அழிந்து போவார்கள். பெரியோர் அளிக்கும் மன்னிப்பால்தான் ஏழை எளியோர் வாழ முடியும். இதனை நினைத்துத் தான் ''இறைவனே! இவர்களை மன்னித்து விடுங்கள்; தாம் செய்யும் தவறு இது என்று தெரியாமலேயே தவறுசெய்கிற ஏழைகள் இவர்கள்'' என்று ஏசுபெருமான் கடவுளிடம் வேண்டிக் கொண்டார். ஆதலின் சிற்றில் பிறந்தார் செய்யும் தவறுகள் தம்முடைய நெஞ்சத்தைச் சுட்டு வருத்தினாலும் அவர்களைச் சினந்து விலக்குதல் கூடாது; அவர் செய்யும் தவறுகளை அன்புடன் எடுத்துக் கூறித் திருத்தி அவர்களை அரவணைத்து வாழச் செய்ய வேண்டும் என்னும் கருத்தில், ''உள் சுடினும் சீறற்க சிற்றிற் பிறந்தாரை'' என்று கூறுகிறார் விளம்பிநாகனார். ''யாகாவராயினும் நாகாக்க'' என்பார் திருவள்ளுவர். சினம் காரணமாகவும் அறியாமை காரணமாகவும் வாய்தவறித் தவறான சொற்களைப் பேசி விடுவதால் விளையும் கேடுகள் பல. அதனால்தான்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

என்று வள்ளுவர் கூறினார். எனவே, சொல்லத் தகாத சொற்களை அவசரப்

பட்டுச் சொல்லி அழிந்து போகாமல் உங்களைக் காத்துக் கொள்க என்னும் பொருள் தருமாறு, ''கூறற்க கூறல் லவற்றை விரைந்து'' என்கிறார் அப்புலவர். மேலே சொன்ன அறிவார்ந்த வாழ்க்கை நெறிகளை விளக்கும் அருமையான நான்மணிக் கடிகைப் பாடலை இப்போது கேண்மின்,

எள்ளற்க என்றும் எளியாரென்(று); என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேலவா-உள்சுடினும்
சிறற்க சிற்றிற் பிறந்தாரை; கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

## 2

மனிதன் எப்படி வாழ வேண்டுமென்று நினைக்கின்றானோ அப்படியே வாழ அவனால் முடியும். தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கும் மனிதன் அக்கொள்கையில் வெற்றி பெறுவது திண்ணம். உலகம் முழுவதையும் வென்று ஆளவேண்டும் என்று கருதினாலும் அவ்வாறே ஆள முடியும். தக்க காலமறிந்து, இடமறிந்து, தன்வலி பெருக்கித் திட்டமிட்டு முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

என்று நம்பிக்கை ஊட்டுகிறார் திருவள்ளுவர்.

ஆதலின் மனிதன் எதையும் தன்னால் செய்ய முடியும் என்ற உயர்ந்த குறிக்கோளோடு வாழ வேண்டும்.

எவ்வகை யோர்க்கும்
இம்மையில் தம்மை இயக்கு தற்கு
இன்பம் பயக்குமோர் இலக்கு வேண்டும்

என்பார் மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. தாமும் இன்புற்று மற்றவர்களையும் இன்புற்று வாழச்செய்ய வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்கள் இவ்வுலகில் இன்பமாக வாழ முடியும். பிறருக்குத் துன்பம் செய்ய நினைப்பவர்கள் இன்பமுடன் வாழ இயலாது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது நம் நாட்டுப் பழமொழி.

வாழும் முறைமை அறிந்து வாழ்பவர்களுக்கு இவ்வுலகில் எந்நாளும் இன்பமே விளையும்; துன்பமில்லை. உலகிற்கு ஆக்கந் தரும் செயல்களைச் செய்பவர்களே இன்பத்துடன் வாழ முடியும். மக்கள் அனைவராலும் மதிக்கப்பட வேண்டும், பாராட்டப்பட வேண்டும் என்று கருதுபவர்களை மக்கள் மதிக்க மாட்டார்கள்; பாராட்ட மாட்டார்கள்; மாறாகப் பழிப்பார்கள். தாமே உழைத்துப் பாடுபட்டுத் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவித்துத் தாமும் உண்டு பிறருக்கும் கொடுத்து வாழ வைக்கும் உழவர்கள் போற்றப்படுகின்றார்கள்; வேறு தொழில்களைச் செய்து அதனால் வந்த பொருளால் வாழ்பவர்களும் போற்றப்படுகின்றார்கள். பிறருடைய உழைப்பால் பெற்ற சுவையான உணவைவிடத் தம்முடைய உழைப்பால் பெற்ற உப்பில்லாக் கஞ்சியே இனியது.

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தான் தந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில்

என்பது குறள். இன்னவாறு இனித்தது என்று பிறர்க்கு எடுத்துரைக்க இயலாத காதலின்பத்திற்கு உவமை கூற வந்த திருவள்ளுவர், தாம் கட்டிய வீட்டில் தங்கியிருந்து, தம்முடைய உழைப்பால் பெற்ற உணவினைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்ணும்போது பெற்ற இன்பம் போன்றது என்று கூறுகின்றார்.

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு

என்பது குறள்.

தம்முடைய பசியைப் போக்கிக் கொள்ளவும், தமக்குத் தேவையான பொருள்களை அடையவும் விரும்புவோருள் சிலர் சிறிதும் உழைக்காமல் பிறர்பால் சென்று பிச்சைகேட்டு அவற்றைப் பெற்று வாழ நினைக்கின்றார்கள். இது மிகவும் துன்பம் தரக்கூடிய தவறான இழிந்த செயலாகும். இரந்து கேட்க நினைக்கும் போதே நினைப்பவன் நெஞ்சம் தாழ்ந்து

போகிறது. தான் வேண்டிய பொருள் கிட்டுமோ, கிட்டாதோ என்று ஏக்கத் தோடு பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டி ஆமையைப் போல அடங்கி, ஒடுங்கிக் கூனிக் குறுகி நின்று பணிந்து மொழிந்து பிறரது ஏளனப் பார்வைக்கும் இழிவான பேச்சுக் களுக்கும் இலக்காகித் தான் வேண்டிய பொருளைப் பெற்று வாழும் வாழ்வு ஒரு வாழ்வாகுமா? பிச்சைக்காரர்களை அவமானப்படுத்திய பிறகும் பிச்சை போடாமல் அனுப்புகின்ற மகராசிகள் எத்தனை பேர்? ஆகவே, இவ்வுலகில் மதிப்புடனும், மானத்துடனும், இன்பத் துடனும் வாழக் கருதுகின்ற யாரும் இரந்து வாழ்வதைக் கனவிலும் விரும்ப மாட்டார்கள். ஆதலின் யாருக்கேனும் துன்பப்பட வேண்டும் என்று ஆசை தோன்றுமானால் அவர்கள் பிச்சையெடுக் கப் போகலாம் என்னும் கருத்துத் தோன்றும்படி ''இன்னாமை வேண்டின் இரவெழுக'' என்று கூறுகின்றது நான்மணிக்கடிகை.

இரத்தல் இழிந்தது; அதனால் உழைக் கக்கூடிய ஆற்றல் படைத்த யாரும் இரந் துண்ண விரும்ப மாட்டார்கள். பிறரிடம் இரந்து உயிர் வாழ வேண்டிய நிலைமை நேருங்கால் சான்றோர் உயிர் துறந்து விடுவர். சோழன் கோச்செங்கணானால் சிறை செய்யப் பெற்றுக் குடவாயிற் கோட் டம் என்னும் சிறையில் இருந்து வாடிய சேரமான் கணைக்கால் இரும்பொறை சிறைக்கோட்டத்துக் காவலரை நோக்கித் ''தண்ணீர் தருக'' என்று கேட்க, அக் காவலர்கள் அவனை மதிக்காமல் உடனே கொடுக்காமல் சிறிது காலம் தாழ்த்தித் தண்ணீர் கொடுக்க, அதனால் மனம் நொந்த கணைக்கால் இரும்பொறை அத் தண்ணீரைப் பருகாது, உயிர் துறந்த செய்தியைப் புறநானூற்றால் அறிகிறோம். இத்தகைய சூழ்நிலையில் உயிர் துறந்து, மானம் காக்க விரும்பாது, எப்படியோ காலம் கழித்தால் போதும் என்று கருதி வாழ்பவர்களும், உலகில் ஏராளமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களைப் போன்றவர்களும், கண் தெரி யாத குருடர்களும், காது கேளாத செவிடர் களும், காலில்லாத முடவர்களும், பாது காத்து வளர்த்தற்குரிய பெற்றோரை இழந் தவர்களும், தீராத பெரும்பிணியால் வாடி வருந்துவோருமாகிய இரங்குதற்குரிய மாக் கள் பிறர்பால் இரந்துண்டாவது வாழக் கருதுவது உலகத்து இயல்பு. அத்தகைய வர்களின் நிலையுணர்ந்து அவர்களுக்குத் தேவையான உணவு உடை முதலியவற்றை அளித்துக் காக்க வேண்டிய மக்களாகப் பிறந்த அனைவருடைய கடமையும் ஆகும். அவ்வாறு வறியார்க்கொன்று ஈதலே ஈகை யாகும்.

கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே

என்பது தொல்காப்பியம். கல்வி அறிவா லும், வீரத்தாலும், பிற நற்பண்புகளாலும் ஒருவனுக்குப் பெருமித உணர்வு தோன்று மாயின் கொடையினால் வரும் பெருமிதம் மிகவும் உயர்வானது; எல்லார்க்கும் உரியது. அதனால்தான் தொல்காப்பியர் கொடை யினை இறுதியில் வைத்தார். ஈத்துவக்கும் இன்பத்தை அறியாதவர் எவருமிலர். மக்கள் மட்டுமல்லாது விலங்குகளும் ஒரு பொருளைப் பிறர்க்குக் கொடுப்பதால் வரும் இன்பத்தை நன்கறிந்துள்ளன. பெண் குரங்குகளால் ஏறமுடியாத உயர்ந்த மரங் களில் ஆண் குரங்குகள் ஏறி, இனிய கனி களைப் பறித்து அப்பெண் குரங்குகளுக்குக் கொடுத்து மகிழ்ச்சி அடைவதனை

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்

என்று கூறி மகிழ்கின்றார் குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர்.

ஆதலின், கொடுப்பது உயர்வானது; சிறப்பானது; புகழ் தரக்கூடியது என்பது விளங்குகின்றது. ஆகவே, பிறர்க்குக் கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மக்கள் அனைவரும் வாழ வேண்டும்.

இவ்வுலகம் நிலையில்லாதது; நேற் றைக்கு உயிருடன் இருந்தவர் இன்றைக்கு

உயிருடன் இல்லை என்று சொல்வதையே பெருமையாக உடையது இவ்வுலகம்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

என்பார் திருவள்ளுவர். ஆதலின் நிலை யற்ற இவ்வுலகத்தே நிலையாக வாழ வேண்டுமென்று கருதுவோர், தம் ஊனு டம்பு இறப்பதைத் தடுக்க முடியாமற் போயினும், கொடைபல கொடுத்துப் புகழ் பெற்று, அப்புகழால் என்றென்றும் வாழ முடியும். அதனால்தான்

மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே

என்று புறநானூறு கூறுகின்றது. ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான் ஊனுடம்பு மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகி விட்டன; ஆனால், அவனது புகழுடம்பு இன்றும் வாழ்கிறது. நாவிலே தழும்புண்டா கும்படி புலவர்கள் தம்மைப் புகழ்ந்து பாடு வது போல முல்லைக்கொடி தம்மைப் புகழ்ந்து பாடாது என்று தெரிந்தும், அம் முல்லைக்குத் தேரீந்த பாரியின் கொடை மடத்தால் ஏற்பட்ட புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது அல்லவா?

இதனை நன்குணர்ந்த நான்மணிக் கடிகை ஆசிரியர், ''இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக'' என்று நமக்கு அறிவுறுத்துகின்றார்.

மனிதர்கள் பிறக்கும் பொழுது தம் முடன் ஒரு பொருளையும் கொண்டு வந்த தில்லை; இவ்வுலகில் வாழ்ந்து முடிந்து இறக்கும்போது யாதொரு பொருளையும் தம்முடன் எடுத்துச் செல்வதில்லை. ஆயினும், ஒரு பிறப்பில் ஒருவன் செய்த நல்வினை தீவினைகள் பற்பல பிறப்புகளி லும் அவனுயிரைத் தொடர்ந்து சென்று தத்தம் வினைப்பயன்களைத் தவறாமல் ஊட்டும். ஆதலின், கையில் பொருளிருக்கும் போது காலம் தாழ்த்தாது நல்லறச் செயல் களை இடையறாது தொடர்ந்து செய்க என்று சான்றோர் பலரும் வற்புறுத்திக் கூறுகின்றனர். அம் முறையில் விளம்பி நாகனாரும் ''தன்னொடு செல்வது வேண்டின் அறஞ்செய்க'' என்று அறமுரைக்கின்றார்.

வைக்கோல் போரில் வைக்கப்பட்ட நெருப்பு அதனை முழுவதுமாக அழித் தொழித்துவிடும். அதுபோல் யார் சினங் கொள்கின்றார்களோ அவர்களையே அச் சினம் அழித்துவிடும். சிறுசிறு தவறுகளைச் செய்தார்கள் என்ற காரணத்துக்காகத் தம்மைச் சூழ்ந்து நிற்கும் சுற்றத்தார் களைச் சினந்து கொண்டால், அச் சுற்றத் தார் ஒருவர்பின் ஒருவராக அவனைவிட்டு விலகிவிடுவார்கள். ஆபத்து ஏற்படும் காலங் களில் அதனைத் தடுப்பதற்கு உதவும் சுற்றத்தார்களை இழந்த ஒருவன், தனக்கு வந்த இடையூறாகிய கடலிலிருந்து தப்பிப் பிழைத்துக் கரையேறல் அரிது. எனவே, துன்பமாகிய கடலிலிருந்து தம்மைக் கரை யேற்ற உதவும் சுற்றத்தாராகிய தெப்பத் தினைச் சினம் என்னும் நெருப்பினால் சுட் டெரித்துவிடக் கூடாது என்று திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார். அதனால்தான் விளம்பிநாகனாரும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் வெகுளியைக் கைவிடுக என்று மெய்யினை விளம்பு கின்றார். இதுகாறும் சொல்லப்பட்ட அறங்கள் அனைத்தையும் அழகுறச் சொல் லும் நான்மணிக்கடிகைப் பாடல் பின் வருமாறு :

இன்னாமை வேண்டின் இரவெழுக! இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசை நடுக! தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க! வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

## 3

நம்முடைய வாழ்கையில் நாம் நாடோ றும் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு மிக எளி தான தீர்வுகளை எடுத்துரைப்பதில் நான் மணிக்கடிகை ஆசிரியராகிய விளம்பிநாக னார் மிகவும் வல்லவராக விளங்குகிறார். மனிதன் நாடோறும் உணவினை உண்டு வளர்ந்து பெரிய ஆளாக மாறுகின்றான்.

மனித உடம்பையே உணவின் பிண்டம், உணவின் தொகுதி என்று கூறலாம்.

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

என்பது புறநானூறு.

உணவினை உண்ண விரும்பாத மனிதன் இவ்வுலகில் உண்டா? உண்பதற்காக மட்டுமே உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதப் பிறவிகள் ஏராளம் உண்டு. நன்றாக உடலுழைப்பில் ஈடுபட்டு வலிமை வாய்ந்த கட்டுடலோடு வாழும் ஒருவன் எத்தகைய உணவுண்டாலும் அவனுடைய நல்வயிறு அவனுடைய உணவைச் செரிக்கு மாறு செய்துவிடுகிறது. அதே நேரத்தில் நோய்வாய்ப்பட்டுத் துன்புறும் ஒருவன் சத்துமிகுந்த நல்ல உணவுண்டாலும் அந்த உணவினைச் செரிக்கச் செய்யும் ஆற்றலை அவனுடைய வயிறு இழந்து நிற்பதால் உண்ட உணவே நஞ்சாகி உடலுக்கு மேலும் ஊறுசெய்வதைப் பார்க்கிறோம். அதனால் தான் ''புதிதாகச் சுவையான உணவினை உண்பதால் உண்டாகும் இன்பத்தைவிட முன்னர் உண்ட உணவு செரிப்பது மிகவும் இன்பத்தைத் தருவதாகும்'' என்றார் திருவள்ளுவர். ''உணலினும் உண்டல் அறலினிது'' என்பது அவர் அமுதமொழி. இக் கருத்தையே வேறு தொடர்களால் விளக்குகிறார் விளம்பிநாகனார்.

இரைசுடும் இன்புறாயாக்கையுட் பட்டால்

என்பது அவரது பொன்மொழி. அளவுடன் உண்ணும் பொருளுக்குப் பெயர் உணவு. அளவுகடந்து மாடுபோல் மிகுதியாக உண்ணும் பொருளுக்குப் பெயர் இரை. ''உணவுண்ணுக; இரை உண்ணற்க'' என்பது தெளிவான அறிவுரை.

அறிவுத் தெளிவுடைய சான்றோர் எப்போதும் பிறர்க்கு நன்மை பயக்கும் செய்திகளை இனிமையாக எடுத்து மொழிவர். நன்மை தரும் அறிவுரைகளாக இருந்தாலும் கடுமையாக, இன்னாத மொழிகளால் எடுத்துரைப்பதை யாரும் விரும்புவதில்லை.

இன்சொல் இனிதின்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

என்று வள்ளுவர் வினாவும் வினாவின் பொருளை எல்லாரும் நன்குணர்தல் வேண்டும். விளக்கமான தெளிந்த அறிவில்லாதவர்கள், பலநேரங்களில் பிறர் மனத்தைப் புண்படுத்தும் சொற்களைச் சொல்லி அதனால் பிறருடைய வெறுப்புக்கும் சினத்துக்கும் ஆளாகித் துன்புறுகின்றனர். உறையூரைச் சார்ந்த சோலை ஒன்றில் தங்கியிருந்த கோவலன், கண்ணகி ஆகிய இருவரைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பிய வம்பப் பரத்தனும் பரத்தையும் வினாவிய தகுதிக் குறைவான வினாக்களால் வெகுண்ட கவுந்தியடிகள், அவ்விருவரையும் நரிகள் ஆகும்படி சாபமிட்டார் என்ற சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சி, இதற்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

ஆதலின் அறிவற்ற மக்களை அவர் வாயிலிருந்து வரும் சொற்களே சுட்டு வருத்தும் என்னும் கருத்தை,

உரை சுடும் ஒண்மை யிலாரை

என்னும் தொடரால் விளக்குகின்றார் விளம்பி நாகனார்.

அறம் வலிமை உடையது. அறத்திற்கு மாறுபட்ட செயல்களைச் செய்து பிறரைத் துன்புறுத்தியவர்களை அவ்வறம் கொல்லும். தம்மினும் வலிமை குறைந்தவர்களைக் காரணமின்றித் துன்புறுத்தி இன்பம் காணுவோர், தம்மினும் வலிமை படைத்த வேறு ஒருவரால் துன்புறுத்தப்படுவர் என்பது உறுதி. ஆதலின் எல்லாரும் நல்லறம் பிழையாது நடக்க வேண்டும்! என்று வற்புறுத்த விரும்பிய விளம்பி நாகனார்,

வரைகொள்ளா முன்னை ஒருவன் வினைசுடும்

என்று எச்சரிக்கின்றார்.

உலகாளும் மன்னர்களில் வலிமை குறைந்த மன்னர்கள் தம்மினும் படை வலிமை உடைய மன்னர்களின் நாடுகளைக் கைப்பற்றி ஆள நினைப்பதில்லை. படை வலி மிகுந்த மன்னன் தன்மேல் படை

யெடுத்து வராமலிருந்தால் போதும் என்று கருதி அச்சங் கொண்டு அடங்கி வாழ்கின்றனர். படை வலிமை மிகுந்த சோழன் நலங்கிள்ளி தங்கள் நாட்டின்மீது படையெடுத்து வந்துவிடுவானோ என்று எண்ணி, வேற்றுநாட்டு வேந்தர்கள் அஞ்சினார்கள் என்பதைத் ''துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே'' என்னும் புறநானூற்று வரியால் அறிகின்றோம். எனவே, அரசர்கள் தங்கள் படை வலிமையைக் கொண்டே தங்கள் நாட்டை ஆண்டுவிட முடியும் என்று கருதிக் கொடுங் கோலாட்சி செய்வதும், அமைதியான நல்லாட்சி நடைபெறும் அண்டை நாடுகள்மீது படையெடுத்துச் செல்வதும் அரசர்களில் சிலருக்கு இயல்பாகி விடுகிறது. ''சிரமறுத்தல் வேந்தனுக்குப் பொழுதுபோக்கும் சிறிய காதை, நமக்கெல்லாம் உயிரின் வாதை'' என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் சொல்வதும் அத்தகைய மன்னர்களை மனத்தில் கொண்டுதான்.

படை வலிமை காரணமாக அறம் பிறழ்ந்து கொடுங்கோலாட்சி செய்யும் மன்னர்கள் மக்களது புரட்சி காரணமாக அழிக்கப்படுவது உறுதி என்பதை நல்லறிஞர்களாகிய புலவர் பெருமக்கள் அவ்வப் பொழுது நாடாளும் மன்னர்களுக்கு எடுத்துரைத்து வந்துள்ளனர்.

கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

என்பது புறநானூறு. பல நேரங்களில் எந்தப் படையை நம்பி அரசர்கள் அறம் பிறழ்ந்து கொடுங்கோலாட்சி நடத்துகிறார்களோ, அந்தப் படையே அரசர்களுக்குப் பகையாக மாறிப் புரட்சிசெய்து அரசர்களை அழித்துவிடுவதுண்டு. இந்த வரலாற்றுண்மையை நன்கறிந்த விளம்பி நாகனார், ''வரைகொள்ளா வேந்தனையும் தன்னடைந்த சேனை சுடும்'' என்று அரசர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

எவை எவை யார்யாரைச் சுட்டு வருத்தும் என்பதை எடுத்துக்கூறி, நலமுற வாழாதவர் நெஞ்சில் நல்லற வேட்கை நன்கு தோன்றுமாறு செய்யும் நான்மணிக் கடிகைப் பாடலை முழுமையாகக் கேண்மின்:

இரைசுடும் இன்புறா யாக்கையுட் பட்டால்;
உளரசுடும் ஒண்மை யிலாரை-வரைகொள்ளா
முன்னை ஒருவன் வினைசுடும்; வேந்தனையும்
தன்னடைந்த சேனை சுடும்.

# 4

உலக வாழ்க்கையில் உள்ள எல்லா வகையான இன்பங்களையும் முறையாகவும் முழுமையாகவும் துய்த்தறிவதற்குப் பொருள் மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. பிறவுயிர்களை வாழவைப்பதற்குரிய அறச்செயல்களைச் செய்யவும், தாமும் தம்முடைய சுற்றத்தாரும் இன்புற்று வாழவும் பொருள் தேவை.

அறம் பொருள் இன்பமென மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்

என்று நாலடியார் கூறுகின்றது. ஈதலும் துய்த்தலும் பொருளில்லார்க்கு இல்லை என்பதை எல்லாரும் நன்கறிவர். ஆயினும், பாடுபட்டுப் பொருள் தேடிச் சிக்கனமாக வாழ்ந்து மிச்சப்படுத்திச் செல்வராய் வாழ்வோர் சிலரே, உலகில் மிகப் பெரும்பாலோர் என்னதான் இரவு பகல் என்று பாராது இடையறாது பாடுபட்டாலும் செல்வராக முடியாமல் ஏழையராய் இருந்து இடையூறு அடைகின்றனர். கையில் காசு பணம் இல்லாத அந்த ஏழை எளியவர்கள் ஒருவகையில் இரங்கத் தக்கவர்களே! ஆனாலும், பாடுபட்டுத் தேடிய பணத்தால் தானும் இன்பம் துய்க்காமல், பிறர்க்கும் இன்பம் செய்யாமல் தான் ஈட்டிய பணத்தைக் கள்வர்கள் கவர்ந்து கொண்டு போகாமல் காப்பாற்ற வேண்டுமே என்னும் கவலையிலேயே மூழ்கி வருந்தும் அறிவில்லாச்

செல்வர்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது, செல்வமில்லாத ஏழைகள் எவ்வளவோ நல்லவர்கள். அந்த ஏழைகளுக்குப் பொருளைக் காக்க வேண்டுமே என்ற கவலையில்லை. இந்த உண்மையை ''கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்'' என்னும் தொடரால் மிகத்தெளிவாக விளக்கிக் காட்டுகின்றார் நான்மணிக்கடிகை ஆசிரியர்.

வறியவர்களுக்குப் பொருளில்லாத் துன்பம் தவிர வேறு புதிய துன்பம் எதுவும் தோன்ற வழியில்லை. ஆனால் பாடுபட்டுத் தேடிய பணத்தால் நாம் ஒரு சிறிதும் இன்பம் துய்க்காமல், வறியவர்களைப் போல் வாழ்ந்து கொண்டு தம்முடைய செல்வத்தைப் பாதுகாக்கும் துன்பத்தை மட்டுமே அனுபவித்துவந்த செல்வர்கள், எதிர்பாரா வகையில் தம் செல்வத்தைக் கள்வர்களிடம் பறிகொடுத்தபின், தாம் இழந்துவிட்ட செல்வத்தையே எண்ணி எண்ணி ஏங்கிச் சாவதைப் பார்க்கிறோம். இந்த நிலையைச் சற்று ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் பொருளைப் பெற்றிழந்த வேதனையால் வாடும் செல்வர்களைவிடச் செல்வத்தைச் சேர்க்காத வறியவர்களே மேலானவர்கள் என்பது விளங்கும். இதனைத்தான் ''வைத்தாரின் நல்லர் வறியவர்'' என்னும் தொடரால் விளக்கிக் காட்டுகின்றார் விளம்பி நாகனார்.

பாம்பு படமெடுத்தாடிப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அச்சத்தை விளைவித்துத் துன்புறுத்துவதுபோலச் சின்னஞ்சிறு தவறுகளைக்கூடப் பொறுத்துக் கொள்ளாமல் பக்கத்தில் இருப்பவர்களைக் கோபித்துக் கொள்ளும் நல்லவர்களைவிடப் பிறர் சினந்து கூறிய மொழிகளைப் பொறுத்துக் கொண்டு அமைதி காப்பவர்கள் மேலானவர்கள். தவறு செய்தறியாத நல்லவர்களில் பலர் பலநேரங்களில் தாம் தவறு செய்யாது வாழ்ந்த பெருமிதம் காரணமாகச் செருக்குடன் நடந்து கொண்டு பிறரை மதிக்க மறுத்துச் சின்னஞ்சிறு தவறு செய்தவர்களை அவமதிப்புடன் நடத்தும் பெருந்தவறைச் செய்கின்றனர். அதே நேரத்தில் தமது அறியாமையாலோ, வேறு வழியில்லாத நெருக்கடியான நிலைமையாலோ சின்னஞ்சிறு தவறுகளைச் செய்து விட்டவர்கள், தம்முடைய நெஞ்சே தம்மைச் சுட்டு வருத்துவது காரணமாக நாணம் மேலிட்டு அமைதிகாத்துப் பிறரை உயர்வாக மதித்துப் போற்றி அன்புகாட்டி உதவி செய்கின்றனர். இந்த வாழ்வியல் உண்மையை ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் பிறர் செய்த சின்னஞ்சிறு தவறுகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் பொங்கியெழுந்து கண்டனம் தெரிவிப்பதுடன் நின்றுகொண்டு, நெறிப்படி வாழ்கிறோம் என்று சொல்லிக்கொண்டு பிறர்க்குச் சிறு நன்மையும் செய்யாத பெரிய மனிதர்களைவிட, உலகத்தார் தம்மைத் தீயவர் என்று பழித்தாலும் பொறுமைகாத்துப் பிறர்க்கு முடிந்தவரை நன்மை செய்கின்றவர்கள், முன்னர் அறியாமையால் சிறிய தவறுகளைச் செய்திருப்பினும் நல்லவர்களாகக் கருதத்தக்கவர்களே என்று சொல்லலாம். இதனை நன்குணர்ந்த நான்மணிக்கடிகை ஆசிரியர் ''பைத்தெழுந்து வைதாரின் நல்லர் பொறுப்பவர்'' என்று கூறி, நம் சிந்தனையைத் தூண்டுகின்றார்.

பிறருக்கு நன்மை செய்பவர்கள் மேலானவர்களே! ஆனாலும், பிறருக்கு நன்மை செய்தவர்களைவிடப் பிறர் செய்த நன்றியை மறவாமல் போற்றுபவர்களே மேலானவர்கள். ஏனெனில், பிறர்க்கு நன்மை செய்தவர்கள் தம்மால் உதவி பெற்றவர்களைவிடத் தாம் உயர்ந்தவர்கள் என்னும் ஒரு போலியான உயர்வு மனப்பான்மைக்கு ஆளாகி விடுகின்றனர். அதனால் தாம் உயர்ந்தவர்கள் போலவும், தம்மிடம் உதவி பெற்றவர்கள் தாழ்ந்தவர்கள் போலவும், தம்பால் உதவி பெற்றவர்கள் தமக்கு என்றென்றும் நன்றியுணர்ச்சி உடையவர்களாய்த் தமக்கு அடிமைகளைப் போல நடந்துகொள்ள வெண்டும் என எதிர்பார்ப்பவர்களாய் மாறிவிடுகின்றனர். தம்மிடம் உதவி பெற்றவர்கள் தம் விருப்பம் போல் நடக்க உரிமையுடைய மக்கள் என்பதையும் மறந்து, தாம் விரும்புவர்களை அவர்களும் விரும்ப வேண்டுமெனவும், தாம்

வெறுப்பவர்களை அவர்களும் வெறுக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு தாம் விரும்பியபடி அவர்கள் நடக்காதபோது மிகுந்த சினங் கொள்கின்றனர். எனவே, பல நேரங்களில் உதவி செய்தவர் நெஞ்சில் அமைதியின்றித் தவிக்க நேரிடுகிறது. இத்தகையவர்களைவிடச் செய்ந்நன்றி அறியும் இயல்புடையவர்கள் எப்போதும் பணிவுடையவர்களாகவும் இன்சொல் பேசுபவர்களாகவும் விளங்குகின்றனர். தமக்கு உதவி செய்தவர்களுக்கும், அவர்களால் விரும்பப்படுபவர்களுக்கும் எப்போதும் உதவிசெய்ய வேண்டும் என்று கருதுகின்றனர். இதனைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது பிறர்க்கு நன்மை செய்தவர்களைவிடப் பிறர் செய்த நன்றியைப் போற்றும் இயல்புடையவர்கள் மேலானவர்கள் என்பது விளங்கும். இதனை ''செய்தாரின் நல்லர் சிதையா தவர்'' என்று நான்மணிக்கடிகை நவில்கின்றது.

இவ்வாறு நமது சிந்தனையைத் தூண்டும் நான்கு கருத்துக்களை நமக்கு எடுத்துரைக்கும் அந்த அருமையான நான்மணிக்கடிகைப் பாடலை இதோ நீங்களும் கேளுங்கள்:

கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரின் நல்லர் வறியவர்; பைத்தெழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர்; செய்தாரின்
நல்லர் சிதையா தவர்.

## 5

மக்களாகப் பிறந்தோர் அனைவரும் இவ்வுலகத்து இயற்கையினை உள்ளவாறு உணர்ந்து தெளிந்து தம்முடைய மனத்தைப் பண்படுத்தி உடலையும் உயிரையும் ஓம்பிப் பிறவுயிர்களோடு பகைமை கொள்ளாமல் ஒன்றுபட்டு வாழ்வாங்கு வாழ்வதற்குக் கல்வி அறிவு இன்றியமையாது வேண்டப்படுகிறது.

மாவும் மாக்களும் ஐயறி வினவே
மக்கள் தாமே ஆறறி வுயிரே

என்பது தொல்காப்பியம். பகுத்தறிவாகிய ஆறாவது அறிவு தெளிவாக விளக்கமடைவதற்குக் கல்வி அறிவே பெரிதும் காரணமாக விளங்குகின்றது. கல்வி அறிவு பெறுவதற்கு ஏற்ற காலம் இளமைக் காலமே ஆகும். அதனால்தான் 'இளமையிற் கல்' என்று சான்றோர் கூறினர். இளமையில் கற்கும் கல்வி பசுமரத்தாணி போல ஒருவன் நெஞ்சில் ஆழமாகப் பதியும்; கல்வெட்டு எழுத்துப்போல நெடுங்காலம் நிலைத்து நிற்கும். வாழ்க்கையில் எத்தகைய துன்பமும் பொறுப்பும் கவலையுமின்றிப் பெற்றோர்களின் பாதுகாப்பில் இருக்கும் இளமைப் பருவத்தில் ஒருவன் கற்கும் கல்வியே அவனுக்கு வாழ்நாள் முழுவதும் வழித்துணையாக அமைகின்றது. ஒருபிறப்பில் ஒருவன் கற்ற கல்வி ஏழு பிறப்புகளிலும் அவனுக்கு இன்பமதரும் காவலாக அமையும் எனகினறார் திருவள்ளுவர். ஒருவன் கல்விகற்றுத தேர்ந்த நுண்ணறிவாளனாக விளங்கினால், அவன் பெற்றுளள கலவி அவனை மட்டுமன்றி அவன பிறந்த நாட்டையும காப்பதற்குத துணைபுரிகின்றது. ஆகையால் உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வின் இளமைப் பருவத்திலேயே தனக்குரிய கல்வியை முறையாகப் பயின்று தேர்ச்சிபெற வேண்டும். அவ்வாறு கல்வி கற்காத ஒருவன் மக்கள் உடம்பில் வாழ்ந்தாலும் விலங்காகவே பிறரால் கருதப்படுவான். தற்கொலை செய்து கொள்வது எவ்வளவு கொடிய குற்றமோ அவ்வளவு கொடிய குற்றம் கல்வி கற்காமல் இருந்து ஒருவன் தனது வளமான எதிர்காலத்தைத் தானே கெடுத்துக் கொள்வதும் ஆகும். இவற்றையெல்லாம் நன்கு எண்ணிப்பார்த்த காரணத்தால்தான், நான்மணிக்கடிகை ஆசிரியர் கற்பதற்குரிய இளமைப் பருவத்தில் ஒருவன் கல்விகற்காமல் இருப்பது குற்றம் என்கின்றார். இவ்வுலகில் எவனுக்கும் குற்றமான செய்கைகளைச் செய்ய உரிமையில்லை.

அதைப்போலவே செய்யும் செயல்களைக் காலமறிந்து, இடமறிந்து செய்ய வேண்டும். நல்ல செயல்களையும் அளவறிந்து செய்ய வேண்டும். அளவுக்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சாகும். பிறர்க்கு

வந்த துன்பங்களைத் தமக்கு வந்த துன்ப மாகக் கருதி உதவுவதும், உதவி புரியத்தக்க வர்களுக்கு அவர் வேண்டிய பொருளைக் கொடுத்து உதவிசெய்வதும் நல்ல பண்பு களே. ஆனால், வருவாய் சிறிதுமில்லாத ஒருவன், பொருளீட்டுதற்குரிய புதியபுதிய முயற்சிகளில் ஈடுபடாத ஒருவன், பிறர்க்கு வாரிவாரி வழங்குதல் குற்றமாகும். பிறர்க் குக் கொடுப்பது எப்படிக் குற்றமாகும் என்று சிலர்க்கு ஐயந் தோன்றலாம். உடல் நலத்துடன் வாழும் ஒருவன் குற்றாலத்து அருவியில் குளிப்பது நல்லதுதான்; அதற் காகக் குளிர் காய்ச்சலால் துன்புறும் ஒரு வன் அந்தக் குற்றாலத்து அருவியில சென்று குளித்தால் என்னாவது? அவன் அதனால் மேலும் துன்பத்துககு ஆளாக மாட்டானா? நோய்க்காக மருந்துண்டு உப்பில்லாப் பத்தியம் இருக்கும் ஒருவன் ஊறுகாயைத் தின்ன முடியுமா? சாக்கரை நோயால் துன்புறும் ஒருவன் இனிப்பான தினபண்டங்களைத் தினபது அவனுக்குக் கேடு பயக்கும் செயலாக முடியாதா? அவற்றைப் போன்றே வருவாய் இலலாத ஒருவன் வள்ளலாக இருநதால அவனது குடி அழியும். சிலப்பதிகாரக் காப்பிய தலைமகனான கோவலன் அவனுடைய முன்னோர் தேடித்தந்த குன்றுபோன்ற செல்வத்தை எல்லாம் இழந்து வறுமை யுற்று, வேற்று நாட்டிற்குச் சென்று உயிர் இழக்க நேர்ந்தது இத்தகைய வள்ளன்மை யால் தானே! இதனை நன்கு எண்ணிப் பார்த்த நான்மணிக்கடிகை ஆசிரியர் பொருள் வளமில்லாத காலத்து வள்ளல் தன்மையோடு வாழ்வது குற்றம் என்கின் றார். ''வளமிலாப் போழ்தத்து வள்ளன் மை குற்றம்'' என்று சொல்லும் விளம்பி நாகனாரது வாழ்வியல் கோட்பாடுகள் மிகவும் உயர்வானவை.

தமக்குத் திட்டமிட்டுத் தீங்கிழைக்கும் பகைவர்மேல் சினங்கொண்டு போர் செய்து, அப் பகைவர்களை அழித்துத் தற்காத்துக் கொள்வது ஒவ்வொருவரது கடமை ஆகும். ஆனால் தமக்குத் துணை யாகத் தம் பக்கம் இருந்து போர் செய்ய வல்ல உற்றார் உறவினர்கள் தம் அருகில் இல்லாத போழ்தில், பகைவர்கள் வலிமை யுடன் உள்ள காலத்தில் போர் செய்யச் செல்வது, பகைவர்க்கு ஆக்கமாகவும், தமக்குக் கேடாகவும் முடியும். அதனால், தெளிந்த அறிவுடையவர்கள் தம் சினத்தை உடனடியாகப் புலப்படுத்தாமல், நெஞ்சில் மறைத்து வைத்திருந்து, தாம் வெற்றி பெறுதற்குரிய காலம் வந்தபோது, அச் சினத்தை வெளிப்படுத்திப் பகைவரை அழிக்கவேண்டும் என்பார் திருவள்ளுவர்.

பொள்ளென ஆங்கே புறம்வேரார்; காலம்பார்த்து
உள்வோர்ப்பர் ஒள்ளி யவர்.

என்பது குறள். நான்மணிக்கடிகை ஆசிரியர் திருவள்ளுவரிடம் மாணாக்கராக இருந்து பயின்றாரோ என்னவோ தெரியவில்லை. திருவள்ளுவர் சொன்ன அதே கருத்தை வேறு சொற்களால் சொல்வார் போல,

கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்

என்று பாடுகின்றார்.

ஔவையாரால் பாடப்பெற்ற

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடிபெறும்
உண்ணீர் உண்ணீர் என்று ஊட்டாதார் தன்மனை
யில் உண்ணாமை கோடிபெறும்

என்னும் பாடலும்,

காணக்கண் கூசுதே; கையெடுக்க நாணுதே;
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே-வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தய்யய்யோ
அன்பில்லாள் இட்ட அமிழ்து

என்னும் பாடலும்,

அன்புடன் விருந்தோம்பாதவர் வீட்டில் உணவுண்ணுவதால் வரும் துன்பத்தைத் தெளிவாக எடுத்துரைப்பனவாகும். அன் புடன் விருந்தோம்பாதவிடத்து, முகமலர்ச்சி யில்லாமல் மன எரிச்சலுடன் அளிக்கப்படும் உணவினை உண்ணும்போது, உண்ட உணவு செறிப்பதும் அரிதாகும். அதனால் அன்பில்லாத நெஞ்சினரால் பரிமாறப்படும் உணவே நஞ்சாகி ஊறு செய்தாலும் செய் யும். மேலும், அன்பில்லாத நெஞ்சினர் முறையாகச் சமைக்காமல்,

பக்குவமில்லாமல் சமைப்பதும் கூடும், அதனாலும், அவர் அளிக்கும் உணவு சுவையில்லாமல் போகக்கூடும். மேலும் அன்பில்லாத நெஞ்சினர், உண்ணும் உணவில் நஞ்சு கலந்து தந்தாலும் தரக்கூடும். ஆகவே, எவ்வகையில் பார்த்தாலும் தமரல்லாதவர் அளிக்கும் உணவை, அஃதாவது அன்பில்லாதவர் அளிக்கும் உணவை உண்பதால் மனமும் கெடும்; உடலும் கெடும். எனவே தமரல்லார் கையகத்து உணவினை உண்பது குற்றமாகும் என்று நான்மணிக்கடிகை ஆசிரியர் நவில்கின்றார். இதுகாறும் கூறிய நான்கு அறங்களையும் கூறும் நான்மணிக்கடிகைப் பாடலைக் கேண்மின்:

> இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்?!
> வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்!
> கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்; குற்றம்
> தமரல்லார் கையகத் தூண்,

# பட்டினத்தார் பாடல்கள்

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி,
எம்.ஏ.



பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தோனார்ப் பட்டியில் 1930ஆம் ஆண்டு பிறந்தார். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் பயின்று புலவர் பட்டமும், மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வெழுதிப் பண்டிதமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். இருபத்துமூன்று ஆண்டுகள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகவும், ஓராண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேருரையாளராகவும் பணியாற்றி, இப்பொழுது திருப்பனந்தாள் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி வருகின்றார். தொல்காப்பியம், திருக்குறள், சைவசித்தாந்த சாத்திரங்கள் முதலிய பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். 'சுந்தரர் வரலாற்று ஆராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும்' என்ற ஆய்வு நூலையும் வெளியிட்டுள்ளார்.

## வரலாறு

தமிழக வரலாற்றில் சங்கம் மருவிய காலத்திற்குப் பிறகு 'இருண்ட காலம்' என அழைக்கப்பெறும் களப்பிரர் ஆட்சி முந்நூறு ஆண்டுக்காலம் நடைபெற்றது. அப்பொழுது ஏற்பட்ட சமய, மொழிப் பாதிப்புக்களைப் பின்னர்த் தோன்றியருளிய அருளாளர்கள் நிறைவு படுத்தினர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் முறையே சைவவைணவ சமயங்களைத் தமிழ்ப் பாசுரங்களினால் பரப்பி வந்தார்கள். அவ்வகையில் சைவ சமயத்தைப் பரப்பத்தோன்றிய அருளாளர்களில் பட்டினத்தடிகளும் ஒருவராவார். இப் பட்டினத்தார் எனும் பெயரில் மூவர் வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். திருமுறையைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிகள், பட்டினத்தார் பாடல்கள் என்னும் தலைப்பில் 'கோவில் நான்மணிமாலை', 'திருக்கழுமல மும்மணிக் கோவை', 'திருவிடைமருதூர் மும்மணிக் கோவை', திருவேகம்பமுடையார் திருவந்தாதி', 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது', என்னும் ஐந்து நூல்களையும் பதினோராந் திருமுறையில் தொகுத்துள்ளார். எனவே இவ்வைந்து நூல்களையும் பாடிய பட்டினத்தடிகள் நம்பியாண்டார் நம்பிகள் காலத்திற்கு முந்தியவராய் இருத்தல் வேண்டும்.

மேலும் இவர், திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் வரகுணபாண்டியனது பக்திச் சிறப்பினைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

என்று குறித்துள்ள வரிகளால், வரகுண பாண்டியனது காலத்தில் அல்லது அதை யொட்டிய பிற்காலத்தில் இவர் வாழ்ந்தவ ராதல் வேண்டும். வரகுண பாண்டியனின் காலம் கி.பி. 800 முதல் 830 என்று வர லாற்றாசிரியர் கூறுகின்றனர். எனவே பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய பட்டினத் தார் காலம் சுமார் பத்தாம் நூற்றாண்டாக இருத்தல் வேண்டும்.

அடுத்துப் பட்டினத்தார் பற்றிய கதை யொன்று நாட்டில் வழங்கி வருகிறது. அது:- ''பட்டினத்தார் காவிரிபூம்பட்டினத் தில் வணிகர்மரபில் தோன்றி வாழ்ந்தவர். வாணிகத்தின்மூலம் பெருஞ்செல்வத்தைத் திரட்டியவர். திருமணமாகிப் பல்லாண்டுகள் சென்ற பின்னும் பிள்ளையில்லாக் குறை யினால் மிகவும் மனம் வருந்தி இறைவனை வேண்டினார், திருவிடைமருதூர் இறைவ னான மருதவாணர் ஒரு குழந்தையின் வடிவில் வில்வமரத்தடியில் கிடக்க, ஏழை அந்தணர் ஒருவர் அக்குழந்தையை யெடுத்துச் சிலநாள் தன்வீட்டில் வளர்த்துப் பின்னர் பட்டினத்தாரிடம் நிரம்பப் பொருள் பெற்றுக் கொண்டு கொடுத்து விட்டனர். பட்டினத்தார் அக்குழந்தைக்கு 'மருதவாணன்' என்றே பெயரிட்டு வளர்த்து வந்தார். மருதவாணன் 16 வயதில், ஓர்நாள், 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' எனும் தொடர் எழுதிய ஓலைத் துண்டு ஒன்றினைப் பெட்டியில் வைத்துத் தந்தையிடம் சேர்ப் பிக்கும்படி தாயாரிடம் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார். பட்டினத்தார் இத் தொடரைக் கண்ணுற்று, அதுவே மெய் யறிவுகொளுத்தும் தொடராக உணர்ந்து, திருவிடைமருதூர்ப் பெருமானே இங்ஙனம் உணர்த்தியருளினர் என்று அறிந்து சேமித்த பணத்தை அனைவருக்கும் வாரி வழங்கி, கட்டிய வேட்டியுடன் வெளியேறினார். பன்னாட்கள் துறவு மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். தம் தாய் காலமானபோது அவ் வருத்தம் தாளாது பல பாடல்கள் பாடி யருளினார். பின்னர்த் திருவொற்றியூர் அடைந்து சிவப்பேறு பெற்றார்.''

இக்கதை 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகளுக்குப் பிறகு தோன்றிய பட்டினத்தார் பற்றிய கதை யாக இருக்க வேண்டும். இவர் பாடிய பாடல்களும் மிகுதியாக உள்ளன. அவற்றுள் ஒரு பாடலின் இறுதி வரிகள், 'காதற்ற ஊசியும் வராது காணும் - கடை வழிக்கே' என்று முடிகின்றது. இதுபோன்ற பாடல் களைப் பாடிய பட்டினத்தார் வாழ்ந்த காலம் பதினான்காம் நூற்றாண்டு என்று சிலர் கருதுகின்றனர்.

அடுத்துப் பத்தொன்பதாம் நூற்றாண் டில் பட்டினத்தார் எனும் பெயரில் ஒருவர் வாழ்ந்தார். அவர் பாடிய பாடல்கள் ''சித்தர் ஞானக்கோவை'' எனும் திரட்டு நூலில் இடம் பெற்றுள்ளன.

இங்ஙனம் பட்டினத்தார் எனும் பெயரில் மூவர் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும், இவர்கள் தனித்தனி நூல்களாக வும் தனித்தனிச் செய்யுட்களாகவும் பல செய்யுட்கள் பாடியுள்ளனர் என்பதும், இவர்களைப் பற்றிச் சிற்சில வரலாற்றுச் செய்திகள் அவர்களின் பாடல்கள் மூல மாகவே தெரிய வருகின்றன என்பதும், இவைகொண்டு இவர்கள் வரலாற்றை ஒரு வாறு கணிக்க முடிகின்றது, என்பதும் இது வரை சிந்தித்தமையால் புலனாகின்றன.

## துறவு

பட்டினத்தடிகள் என்றும், பட்டினத் தார் என்றும் கூறப்பெறுகின்ற அருளாளர் கள் இவ்வுலக நிலையாமை பற்றியும், ஆன்மா அடையவேண்டிய உன்னத நிலை பற்றியும், அதனை அடைய மேற்கொள்ளும் துறவு நெறி பற்றியும், மிக விளக்கமாகப்

பாடியுள்ளனர். பின்னே தோன்றியருளிய தாயுமான அடிகள் பதினான்காம் நூற்றாண்டில் அவதரித்த பட்டினத்தாரின் துறவுநெறி பற்றி,

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்
பிள்ளையைப் போல்
ஆரும் துறக்கை அரிது அரிது

என்று பாராட்டியுள்ளார்.

பதினோராந் திருமுறையில் இடம் பெற்ற பாடல்களைப் பாடிய பட்டினத்தார். ''கோயில் நான்மணி மாலை'' எனும் நூலில் துறவிகளின் உள்ளங்கருதும் சம நிலை உணர்வினை மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார். ''நின் அடியாருடன் கூடி, தெய்வக்கூத்து நிகழ்த்தும் நின் செய்ய பாதத்தை அடையவும், அணுகவும் பெற்ற பெருஞ்செல்வம் கிடைத்தலான், நான் நரகம் சேரினும் சேர்க; அல்லது வானோர் இன்பம் பெறினும் பெறுக; உலகம் நலன் எனினும் என்க; அல்லன எனினும் என்க; இளமை அமையினும் அமைக; மூப்பு குறுகினும் குறுகுக; வாழினும் வாழ்க; வீழினும் வீழ்க; எல்லாம் எமக்கு ஒன்றே'' என்ற கருத்துடன் பாடல் பாடுகின்றார். அப் பாடல் வரிகள்,

தம்மார்பு பருகச் செம்மாந்து இருக்கும்
ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக; கதும் எனத்
தெறுசொல் ஆளர் உறுசினம் திருகி
எற்றியும் ஈர்த்தும் குற்றம் கொளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் ஏற்றுபு குடைந்தும்
வார்ந்தும் குறைத்தும் மதநாய்க்கு ஈந்தும்
செக்குஉரல் பெய்தும் தீநீர் பெக்கியும்
புழுக்குடை அழுவத்து அழுக்கி அல்சேற்றுப்
பன்னெடும் காலம் அழுத்தி இன்னா
வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்
நிரயம் சேரினும் சேர்க; உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க; அவரே
அல்லன் எனினும் என்க; நில்லாத்
திருவொடு நிளைத்துப் பெருவளம் சிதையாது
இன்பத்து அழுந்தினும் அழுந்துக; அல்லாத்
துன்பம் துதையினும் துதைக; முன்பில்
இளமையொடு பழுக்கக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்க; அன்றி
இன்றே இறக்கினும் இறக்க; ஒன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்தகைக் குரிசில் நின் அடியரொடும் குழுமித்
தெய்வக் கூத்து நின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வம் கிடைத்த லானே'

என்பனவாகும். சமநிலையென்பது நெஞ்சில் சந்தனம் பூசினும் வாள் கொண்டு ஒச்சினும் நிலை தடுமாறா உணர்வைக் குறிக்கும். இதனை,

'செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலைமை'

என்பர். இவ்வுணர்வில் அப்பாடல் வரிகள் அமைந்துள்ளமை நினைந்து இன்புறத் தக்கது.

பின் தோன்றிய பட்டினத்தார், தாயுமான அடிகள் பாராட்டியதுபோலத் துறவுநெறி பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவையாக உள்ளவை ஊண், உடை, உறையுள் என்பனவாகும். இன்றுள்ள பலரும் இம்மூன்றிற்காகவும் இம்மூன்றைச் சார்ந்து கிடைக்கும் இன்பங்களுக்காகவுமே மிகவும் அல்லலுறுகின்றனர். உண்ணும் உணவும் உடுத்தும் உடையும் வசிக்கும் வீடும் தமக்குச் சொந்தமாக அமைய வேண்டும் என்னும் விருப்பிலும், அவை இன்றிருக்கும் காலப்போக்கிற்கேற்ப ஆடம்பரமான நிலையில் அமையவேண்டும் எனும் ஆசையிலும் தான் மக்கள் துன்புறுகின்றனர். தேவைக்கு ஏற்ற சாதாரண உணவும், அற்றம் மறைக்கும் வகையில் எளிய உடையும், வசிக்கும் அளவில் சிறிய இடமும் அமைந்தால் போதும் எனும் மனநிலை இன்று பலரிடமும் இல்லாமையே பல்வகைத் துன்பங்களுக்கும் காரணமாகின்றது. இதனால்தான் பட்டினத்தார், வாழ்க்கையில் தேவையினைச் சுருக்கியும் அத் தேவைகளை எளிமைப்படுத்தியும் வாழ்தல் நல்லது என்று பாடுகின்றார். அங்ஙனம் துறவு நெறியில் வாழும் மனிதனுக்கு ஈடு உலகில் ஒருவருமில்லை என்றும் உணர்த்துகின்றார். அப் பாடலாவது,

வீடு நமக்குத் திருவாலங்
காடு விமலர் தந்த
ஓடு நமக்கு உண்டு வற்றாத
பாத்திரம் ஓங்கு செல்வ

நாடு நமக்கு உண்டு கேட்டதெல்
லாம் தர நல்நெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ
ஒருவரும் இங்கில்லையே

என்பதாகும். இங்ஙனம் பட்டினத்தடிகளும் பின்வந்த பட்டினத்தாரும் துறவுநெறி பற்றி இருவேறு அமைப்பில் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளனர்.

## நிலையாமை

இவ்வுலகம் நிலையற்றது என்பதும், நிலையில்லா உலகில் பிறந்த நாம் நிலையான பேரின்பத்தை அடையப் பெருமானடி சிந்தித்தல் வேண்டும் என்பதும் பலரும் கூறி வருவனவாகும். இந்நிலையாமையைத் திருவள்ளுவரும் மிகச்சிறப்பாக விளக்குகின்றார். இவ்வுலகில் நாட்கள் என்றும் வாரங்கள் என்றும் மாதங்கள் என்றும் ஆண்டுகள் என்றும் கணக்கிட்டுப் பேசப்படுவன எல்லாம் வெறும் காலக்கணக்கே தவிர உண்மையில்லை. ஒவ்வொரு நாள் கழியும் போதும் நேற்றைய நாள் கழிந்தது என்று கருதாமல் நம் வாழ்நாளில் ஒருநாள் கழிந்தது என்று கருதும் மனநிலை வேண்டுமென்பர் திருவள்ளுவர்.

'நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்'

என்பது அக்குறள். இந்நிலையாமையை உணராதவர்களைச் சாடுமுகத்தான்,

'நில்லா தனவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை'

என்று கூறுகின்றார். இத்தகைய நிலையாமையைப் பட்டினத்தடிகள் ''திருக்கழுமல மும்மணிக்கோவை'' எனும் நூலில் விளக்குகின்றார். ஆண்டவனை நோக்கி, உனக்கு ஒன்று உணர்த்துகிறேன் என்று கூறி, நின் நினைவு மாத்திரையினால் தோன்றிய இவ்வுலகில் எனக்குத் தாயராகவும் தந்தையராகவும் வந்தவர் பலர்; அவர்களுக்கு யான் தாயராகவும் தந்தையராகவும் வந்துள்ளேன்; நான் பிறவாத நிலனுமில்லை; இறவாத நிலனுமில்லை; என்னைத் தின்னாத உயிர்களுமில்லை; யான் தின்னாத உயிர்களுமில்லை; இங்ஙனமாகக் காலம் பல சென்றது; இறைவனே! இனியும் இங்ஙனம் பிறந்து இறந்து இளைத்தல் இயலாது; ஆதலின் என் வழிபாட்டினை ஏற்று, பிறப்பு இறப்பில் அழுந்தாது காத்தல் நின் கடன்' என்று கூறுகின்றார். அப்பாடல் வரிகளாவன :

பாலையுடன் இருந்த பரம யோகி
யான்ஒன்று உணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நீகிவமும் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்பு அரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாயர் ஆகியும் தந்தையர் ஆகியும்
வந்திலாதவர் இல்லை; யான் அவர்
தந்தையர் ஆகியும் தாயர் ஆகியும்
வந்து இராததும் இல்லை; முந்து
பிறவா நிலனும் -இல்லை; அல்லபின்
இறவா நிலனும் இல்லை; பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை;யான்அவை
தம்மைத் தின்னாது ஒழிந்ததும் இல்லை;அனைத்தே
காலமும் சென்றது யான் இதன்மேல் இனி
இளைக்குமாறு இலனே நாயேன்
நந்தாச் சோதி நின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே ஆயினும்
இயன்றதோர் பொழுதில் இட்டது மலராச்
சொன்னது மந்திரம் ஆக என்னையும்
இடர்ப்பிறப்பு இறப்புஎனும் இரண்டின்
கடற்படா வகைக் காத்தல்நின் கடனே

என்பனவாகும்.

இந்நிலையாமை பற்றிப் பதினான்காம் நூற்றாண்டுப் பட்டினத்தாரும் பல்வேறு பாடல்களில் பாடுகின்றார். இருப்பது பொய்; போவது மெய்; என்று எண்ணி வாழும் நெஞ்சை உடையவராகவும் ஒருவருக்கும் தீங்கு நினையாதவராகவும் வாழவேண்டுமென்று வற்புறுத்துகின்றார். மேலும் உடலை-உடல் உறுப்புக்களை நிலையானவை என்று கருதி வாசனைப் பொருள்களால் தேய்த்துக் குளித்துப் வாசனைப் பொருட்களைப் பூசி அலங்கரித்தும் காத்து வருகின்றோம். அவ்வுடல் உறுப்புக்கள் நமக்குச் சொந்தமானவை என்று பன்னாட்கள் கருதிக் காத்து வந்தாலும், அவை ஒருநாள் நாய்களுக்கும் நரிகளுக்கும் பேய்களுக்கும் கழுகுகளுக்கும் சொந்தமாகப் போக வேண்டியவையே என்று எச்சரிக்கின்றார் பட்டினத்தார். அப்பாடலாவது,

இருப்பதுபொய் போவதுமெய் என்று எண்ணி
நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே-பருத்ததொந்தி

நம்மது என்று நாம் இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம் இருக்கும் தான்.

எனும் இப்பாடலில் எத்துணை எளிமையாக நம் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைப் பட்டினத்தார் விளக்கி விடுகின்றார். இங்ஙனம் பட்டினத்தடிகளும் பட்டினத்தாரும் மிகத் தெளிவாகவும் மனம் கொள்ளும் வகையிலும் நிலையாமைத் தத்துவத்தை உணர்த்துகின்றனர்.

## சிவனடியார்கள் குறிப்பு

அருளாளர்கள் அனைவரும் தமக்கு முன் வாழ்ந்த அடியார்களைப் போற்றியும், அவர்கள் வாழ்ந்த இடத்தினைக் காலால் மிதிக்க அஞ்சியும், அவர்களின் கருத்தினை விளக்கிப் பாடியும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் மேன்மையினை தம் பாடலில் பொதிந்து சிறப்பித்தும் வந்துள்ளனர் என்பது திருமுறைகளாலும் பின்னே தோன்றிய பாடல்களாலும் அறியக் கிடக்கின்றன. திருஞானசம்பந்தர் சைவ சமயத்தினைப் பரப்பியமையைப் போற்றுமுகத்தான் பின்னே தோன்றிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

'நாளும் இசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'

என்று கூறுகின்றார். காரைக்கால் அம்மையார் எழுந்தருளியிருந்த திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சிய திருஞானசம்பந்தர் அருகிலிருந்த ஊரில் தங்கியமையும், இவ்வடியொற்றிச் சுந்தரரும் அப்பரடிகள் உழவாரப்பணி செய்த தலமாகிய திருவதிகையினை மிதிக்க அஞ்சிச் சித்தவட மடத்தில் தங்கியிருந்தமையும், அருளாளர்கள் தங்களின் முன்னோர்களை எங்ஙனம் மதித்து வாழ்ந்து வந்தனர் என்பதற்குச் சான்றுகளாக அமைந்து விளங்குகின்றன. இங்ஙனம் அருளாளர்கள் அடியார்களைப் போற்றும் மரபில் வந்த பட்டினத்தடிகளும் திருக்கழுமல மும்மணிக் கோவையில் திருஞானசம்பந்தர் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபொழுது சீகாழிக் குளத்தங்கரையில் தந்தையாரைக் காணாது அழுதமையும், அவ்வமயம் பெருமான் ஞானப்பால் ஊட்டச் செய்தமையும், பின்னே ஞானசம்பந்தர் தந்தையாருக்குத் ''தோடுடைய செவியன்'' எனும் பதிகம் பாடி இச்செய்தியினை உணர்த்தியமையும் விளக்கியுள்ளார். அவ்வரிகளாவன:

தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னாயோ என்று அழைப்ப முன் நின்று
ஞான போனகத்து அருள் அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன் வயின் அருள
அத்தணன் முளிந்து தந்தார் யார்என
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோடுடைய செவியன் என்றும்
பீடுடைய பெம்மான் என்றும்
கையில் சுட்டிக் காட்ட
ஐய நீ வெளிப்பட்டு அருளின ஆங்கே

என்பனவாகும். பின்னே தோன்றிய பட்டினத்தார் காளத்திப் பெருமானை நோக்கிப் பாடிய பாடலில் சிறுத்தொண்டரையும் திருநீலகண்டரையும் கண்ணப்பரையும் குறிப்பிட்டுப் போற்றிப் பாடியுள்ளார். அப்பாடலாவது,

வாளான் மகவு அரிந்து ஊட்ட வல்
லேன் அல்லேன்; மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்
லேன் அல்லேன்; தொண்டு செய்து
நாள்ஆறில் கண் இடந்து அப்ப வல்
லேன் அல்லேன்; நான் இனிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்
காளத்தி அப்பனுக்கே

என்பதாகும். இங்ஙனம் சிவனடியார்கள் சிலரின் பக்திச் சிறப்பினைப் பட்டினத்தார் இருவரும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

## தத்துவங்கள்

நம் சைவசமயக் கருத்துக்கள் தோத்திரங்கள் எனவும் சாத்திரங்கள் எனவும் இருவேறு தத்துவ நெறிமுறைகளை விளக்கிக்கூறும் சிறப்புடையவாகும். அன்பு நெறி என்றும் அறிவுநெறி என்றும் அந்நெறி முறைகள் பிரிவுபடுவன. அறிவு நெறிப்பட்ட சாத்திரங்கள் தத்துவ நிலைகளைச் சிறப்பாகப் பேசுவன. ஒன்றைப் பெறுவதும் பெற இயலாததும் அவரவர்களின் வினை வயத்தால் ஆவலவேதவிர பிறிதொன்றால் ஆவதில்லை. கடவுளை வணங்குபவர் படும் இன்னல்களுக்கு அவர்கள் செய்த பாவங்

களே அடிப்படை என்பதும், இறைவன் இடைநின்று கூட்டுவிப்பவனே என்பதும் சைவ சமயம் கூறும் தத்துவமாகும் இத் தத்துவத்தினைப் பட்டினத்தடிகள் தம்முடைய ''திருவிடைமருதூர் மும்மணிக் கோவை''யில் விரிவாகக் கூறியுள்ளார். ''மருதவாணனே! நின்னிடம் குற்றம் ஒன்றுமில்லை. எல்லாம் உயிர்களின் குற்றமே; எதுபோல வெனில் அறுசுவை உணவு அருகிலிருக்கவும் புசியாது ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுணவின் குற்ற மன்று; தெளிந்த நீர் அருகிலிருக்கவும் அருந்தாது துன்புறுதல் தண்ணீரின் குற்ற மன்று; அருகில் நிழலிருக்கவும் வெயிலில் வருந்துதல் நிழலின் குற்றமன்று; என்பன போல நீ அருகிருக்கவும் உணராது வருந்து தல் உனது குற்றமன்று; உன்னை வணங் காதவரின் குற்றமே;'' என்று பட்டினத் தடிகள் மிகச் சிறப்பாகக் கூறுகின்றார்.

மருதிடம் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ண அரும் கோடி இடர்ப்பகை களைந்து
கண்உறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்று எனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனில்
முறியாப் புழுங்கல் முப்பழம் கலந்த
அறுசுவை அடிசில் அட்டு இனிது இருப்பப்
புசியாது ஒருவன் பசியில் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின் வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்ற மிட்டிருப்ப
மடாஅ ஒருவன் விடா வேட்கை
தெண்ணீர் குற்றம் அன்று கண்ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகம் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த்து இடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தங்கு ஒன்றே

என்னும் இவ்வரிகளால், பட்டினத்தடிகள் ஆன்மாவின் அனுபவ விளக்கத்தைக் கூறு கின்றார். ஈண்டு இராமாயணப் பாடல் ஒன்று நினைவு கூறத்தக்கது இலக்குவன், தமையன் இராமனுக்கு ஆட்சி இல்லை என்பதறிந்து வெகுண்டபொழுது,இராமன் அவன்சீற்றம் தணிப்பான் வேண்டி தத்துவக் கருத்தொன்றைக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது, ''நதியில் நீரில்லாமை நதியின் பிழையன்று. அதுபோன்று இப் பொழுது நடந்த இம்மாற்றம் ஆளும் மன்னனின் பிழையுமன்று; நம்மைக் காத்து வந்த அன்னையின் பிழையுமன்று; அவள் மகன் பிழையுமன்று; எல்லாம் விதியின் பிழை இதற்கு ஏன் வெகுண்டது?'' என்று இராமன் விளக்கம் கூறுவதாக அப்பாடல் அமைந்துள்ளது.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை! அற்றே
பதியின் பிழையன்று! பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று! மகன் பிழையன்று! மைந்த!
விதியின் பிழை! நீ இதற்கென்ன வெகுண்டது?
என்றான்.

எனும் இப்பாடல், எல்லாம் வினையின் பிழை என்பதனை மிகத்தெளிவாக விளக்கு வதைக் காணலாம். எனவே, ஆண்டவன் அருள் கிட்டுவதும் கிட்டாமல் இருப்பதும் பெறுவான் தவமே தவிர தருவான் குறை யில்லை எனும் பட்டினத்தடிகளின் கருத் தினை இப்பாடல் கருத்தோடு ஒருவகை யான் ஒப்பிட்டுக் கண்டு மகிழலாம்.

இனிப் பதினான்காம் நூற்றாண்டுப் பட்டினத்தார் பாடிய பாடல்களில் தத்துவக் கருத்துக்கள் ஆங்காங்கே பலவாக உள்ளன. ''அழுதாலும் பயனில்லை; அடைந்த இன்னலை எண்ணி வருந்தினா லும் பயனில்லை; நன்மையும் தீமையும் நான்முகன் எழுதியுள்ள எழுத்தாலன்றி வாராது; எனவே சலியாது இரு என் ஏழை நெஞ்சமே!'' என்கிறார் பட்டினத்தார்.

அழுதலால் பயன்என்ன நொந்தால்
பயன்என்ன ஆவது இல்லை
தொழுதால் பயன்என்ன நின்னை
ஒருவர் சூட உரைத்த
பழுதால் பயன்என்ன நன்மையும்
தீமையும் பங்கயக்கோன்
எழுதாப்பிற வருமோ சலி
யாது இருஎன் ஏழை நெஞ்சே.

என்பது இப்பாடல் இங்ஙனம் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய நெறியில் ஆண்டவனே வழிபடுதல் ஆன்மாவின் அடிப்படை என்ப தும், ஆனால் எண்ணியாங்கு எதுவும் நடை பெறாமைக்குக் காரணம் அவரவர் வினை யேயாகும் என்பதும், அவ் வினைவழி அனு பவங்களைப் பெற்று மீட்டும் வினை வாரா வழி வாழ்ந்தால் பெருமானின் திருவருளைப் பெறமுடியும் என்பதும் சைவசித்தாந்தம்

கூறும் உண்மையாகும். இதனைப் பட்டினத்தார் பாடல்கள் ஆங்காங்கே தெளிவுபடுத்துகின்றன.

## உடலின் அருவருப்பு

அருவருக்கத் தக்கதே உடல் என்பதும், அது நிலையற்றது என்பதும், பிணியின் கொள்கலம் என்பதும் பலரும் கூறிவரும் செய்திகளாகும். இங்ஙனமுள்ள அருவருப்பான உடலை அருவருக்காமல் போறறுவது என்ன காரணம் என்பது பலருக்கும் புரியாத ஒன்று. இன்றிருப்பார் நாளை இல்லை என்னும் நிலையுணர்ந்தும், உடல் காலப்போக்கில் அழிந்து தேயும் என்பது அறிந்தும், இச் செய்திகளை மிக விளக்கமாக மேடையில் பேசியும் கேட்டும் மகிழும் மனிதர்கள் அங்ஙனம் எண்ணி வாழமாட்டாமைக்குக் காரணம் என்ன என்பது விளங்காத புதிராகும். இப்புதிருக்கு விடை கூறுவாராகத் தருமை யாதீன குருமுதல்வர் குருஞான சம்பந்தர், தம் ''சொக்கநாத வெண்பா''வில் ஒரு பாடல் பாடுகின்றார். அருவருப்பு கொள்ள வேண்டிய உடலை அங்ஙனம் எண்ணாமல் வாழ்வது ஏனெனில் இன்னும் அனுபவிக்க வேண்டிய வினைகள் பல உள்ளன என்பதும், அவற்றை அனுபவிக்கும் காலம் வரும் வரை அருவருப்புத் தோன்றாது என்பதும் அப்பெருமான் தரும் விடையாகும்.

அருவெறுப்பே மெத்தியிடும் ஆசத்தைச் சற்றும்
அருவெறுக்கத் தோற்றுதில்லை ஐயோ-
அருவெறுப்புத்
தோற்றியிடாதது என்னவினைத் துய்ப்பித்
திருப்பதற்கோ
சாற்றியிடாய் சொக்க நாதா.

என்பது அப்பாடல். இத்தகைய உடல் அருவெறுப்புக் குறித்து பட்டினத்தார் இருவரும் ஒருசில பாடல்கள் பாடியுள்ளனர். பத்தாம் நூற்றாண்டுப் பட்டினத்தடிகள் ''கோயில் நான்மணி மாலை'' என்னும் நூலில் இக் கருத்தில் ஒரு பாடல் பாடுகின்றார். பெண்களின் கூந்தலை அறல் என்றும், நுதலை மதியென்றும், சிரிப்பை நிலவின் ஒளியென்றும், மார்பைக் கலசமென்றும், இடை அறிதற்கு அரிது என்றும், அடிகள் கமல மலர் என்றும், இங்ஙனம் அவயவங்களை வருணிப்பர் பலர். அவற்றால் யாது பலன்? இவ்வருணிப்பை விடுத்து இறைவனை வணங்க முயன்றிலர் எனும் கருத்தில் ஒரு பாடல் பாடுகின்றார்:

நெறிதரு குழலை அறல் என்பர்கள்
நிழல் எழு மதியம் நூல் என்பர்கள்
நிலவினும் வெளிது நகை என்பர்கள்
நிறம்வரு கலசம் முலை என்பர்கள்
அறிகுவது அரிது இவ் இடை என்பர்கள்
அடியிணை கமல மலர் என்பர்கள்
அவயவம் இயை மட மங்கையர்
அழகியர் அமையும் அவர் என்செய
மறிமழு உடைய அரன் என்இலர்
மறலியை முனியும் அரன் என்இலர்
மதிபொதி சடில தரன் என்இலர்
மலைமகள் மருவு புயன் என்இலர்
செறிபொழில் நிலவு தி(ல்)லை என்இலர்
திருநடம் நவிலும் இறை என்கிலும்
சிவகதி அருளும் அரசு என்இலர்
சிலர் நரகு உறுவர் அறிவின்றியே

என்பது அப்பாடலாகும்

பதினான்காம் நூற்றாண்டுப் பட்டினத்தார் கச்சித் திருவகவல் என்னும் பகுதியில் பெண்களை - பெண்களின் உடலை - உடல் உறுப்புகளைக் கண்டு கண்டு மயங்கித் திரியும் மனித உயிர்களுக்கு உடலின் அருவெறுப்பு குறித்து மிக அழகாக ஒரு பாடல் பாடுகின்றார். பாதாதி கேசமாகவும் கேசாதிபாதமாகவும் வருணிக்கும் வருணனை மரபு தொன்றுதொட்டுத் தமிழிலக்கியம் கண்டது. ஆனால் படடினதத்தார் பாதாதி கேசமாகப் பாடும் இப்பாடல் ஒருவகையானது, உண்மையை உண்மையாக உரைக்கும். இப்பாடலை படிக்குந்தொறும் நெஞ்சு தடுமாறுவதைக் காணலாம்.

மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும்
மானுடர்க்கு எல்லாம் யான் எடுத்து உரைப்பேன்
விளிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்
முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென உரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வரால் எனச் சொல்லித் துதித்தும்
தசையும் எலும்பும் தக்க புன் குறங்கை
இசையும் சதலித் தண்டென இயம்பியும்
நெடுமுடை தாங்கி நீன்றிடும் இடையைத்
துடிபிடி என்று சொல்லித் துதித்தும்
மலமும் சலமும் வழும்பும் திரையும்
அலையும் வயிற்றை ஆல்இலை என்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் எழுந்து
நிரைமடு விம்மிச் சிப்பாய்ந்து ஏறி

உகிரால் கீற உலந்துஉள் உருகி
நடுவார்க்கு இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட்டு என்றும்
குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும்

ஊட்டவும் பிசையவும் உதவிஇங்கு இயற்றும்
அங்கையைப் பார்த்து காந்தன் என்று உரைத்தும்
வேர்வையும் அழுக்கும் மேவிய கூழ்த்தைப்
பாரினில் இனிய கமுகுஎனப் பகர்ந்தும்
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்

துப்பு முருக்கின் தூய்மலர் என்றும்
அன்னமும் கறியும் அசைவிட்டு இறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்று நின்று ஒழுகும்
கூரிய மூக்கைக் குமிழ் எனக் கூறியும்

தண்ணீர் பீளை தவிராது ஒழுகும்
கண்ணைப் பார்த்து கழுநீர் என்றும்
உள்ளும் குறும்பி ஒழுகும் காதை
வள்ளைத் தண்டின் வளம் என வாழ்த்தியும்
கையும் எண்ணையும் கலவாது ஒழியில்

வெய்ய அதரும் பேனும் விளையத்
தக்க தலையோட்டின் முளைத்து எழுந்த
சிக்கின் மயிரைத் திரண் முகில் என்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்

எனும் இவ்வரிகள் நம் நெஞ்சின் எண்ணங்களைப் பரிசோதிக்கும் அம்புசள் எனலாம்.

## முடிவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய பட்டினத்தார் பாடிய பாடல்கள் எதுவும் இத்தொகுப்பில் இடம்பெறாமையால் அவற்றைத் தவிர்த்துப் பத்தாம் நூற்றாண்டு, பதினான்காம் நூற்றாண்டு எனும் இரண்டு நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தார் பாடிய பாடல்களில் அமைந்துள்ள கருத்துகளைப் பல்வேறு தலைப்புக்களில் நாம் எடுத்தாராயலாம் எனினும், காலமும் இடமும் கருதிச் சுருங்கிய அளவில் ஆறு தலைப்புகளில் இங்குக் கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன. தமிழன்பர்கள் இவற்றை ஒரு முன்னோடியாகக் கொண்டு, பட்டினத்தார் பாடல்களைப் படித்து அவற்றின் வழி வாழ்ந்து இன்புறுவார்களாக!

# கம்பன் கதையில் நாடகப் பாங்கு

டாக்டர் பொன். கோதண்டராமன்,
எம்.ஏ., பிஎச், டி.



டாக்டர் பொன், கோதண்டராமன், அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலண்டன் பல்கலைக் கழகத்திலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் பணியாற்றியவர், பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களும், எண்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியவர், ''புலமை'' என்ற ஆய்விதழின் சிறப்பாசிரியர். இலண்டனில் எப், ஆர். ஏ. எஸ். என்ற சிறப்புப் பெற்றவர். மேலை நாடுகள் பலவற்றிற்குச் சென்று பட்டறிவு பெற்றவர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

தமிழகம் வலிவும் வளமும் பெற்று விளங்கிய காலத்தில் தோன்றிப் பெரு வாழ்வு பெற்றுத் திகழும் ஒரு பெருங்காப்பியம் கம்பன் கவிதை. காப்பியங்கள் யாவும் பொதுவாகக் கதைகூறும் போக்கில் அமைந்தனவே என்றாலும், சிலப்பதிகாரம் கம்பராமாயணம் போன்ற காப்பியங்கள் நாடகப்பாங்கு மிக்கனவாக அமைந்துள்ளன. அதாவது இந்தக் காப்பியங்கள் கதைகளை நமக்கு அறிவிப்பவையாக மட்டும் நில்லாமல் நிகழ்ச்சிகளை நம்முன் காட்டுவனவாக அமைந்துள்ளன. கலைநுட்பத்தோடு உருவாக்கப் பெற்ற காட்சிகளும், உலகியலோடு ஒத்துச்செல்லும் உரையாடல்களும் நாடகங்களின் உயிர் நாடி எனலாம். காட்சிகளில் எதிர்நிலைகள் அல்லது முரண்பாடுகளை அழகுறப் பின்னிப் பிணைத்த காட்சி நம் நெஞ்சில் ஆழப் பதிந்து உள்ளத்தை ஒருமுகப்படுத்திச் சுவையூட்ட வல்லது. இராமன் முடிசூட இருக்கும் சூழலையும் முடிசூடிக் கொள்ளாமல் மரவுரி அணிந்து காட்டுக்குச் செல்லும் சூழலையும் நாம் இங்கே குறிப்பிட்ட எதிர்நிலை அல்லது முரணுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இத்தகைய முரண், நாடகங்களுக்குப் பொலிவூட்டும் முரண் ஆதலால் இதை ''நாடக முரண்'' என்று குறிப்பிடுவோம். கம்பன் கவிதையில் காணும் நாடக முரண்கள் பல்வேறு வகையில் அமைந்துள்ளன.

கம்பன் கவிதையில் காணும் நாடகப் பாங்கின் சிறப்புக்கு அதில் காணும் நாடக

முரண்களே தலைமைக் களமாக விளங்குகின்றன.

இராமனுக்கு முடிசூட்டு விழா நிகழ இருக்கிறது. இதை அறிந்த கூனி கைகேயியைக் கருவியாக்கி முடிசூட்டு விழாவைத் தடுக்க முயலுகிறாள். கைகேயி நங்கையின் தூயசிந்தையை மாற்றப் பலவாறு முயன்று பேசுகிறாள். சிந்தை திரியாத நிலையில் கைகேயி ''எனக்கு நல்லையும் அல்லைநீ; என் மகன் பரதன்தனக்கு நல்லையும் அல்லைநீ; தருமமே நோக்கின் உனக்கு நல்லையும் அல்லை'' என்று தன் தோழியைக் கடிந்து. 'அடி அறிவில்லாதவளே' என்றெல்லாம் அவளை ஏசுகிறாள். அப்படிப்பட்ட தூய சிந்தைகொண்ட கைகேயி கூனியை ஆவலோடு நோக்கி 'எனக்கும் என் மகனுக்கும் நீதான் நல்லவள். என் மகனுக்கு முடிசூட்டு விழா நடக்க நீதான் வழி சொல்ல வேண்டும்' என்று கேட்கிறாள். இவ்வளவு பெரிய மனமாற்றத்தை இயல்பாக விளக்கி இரண்டு முரண்பட்ட நிலைகளையும் கலையழகோடு இணைப்பதில்தான் கவிஞனின் வியத்தகு படைப்புத்திறம் நமக்கு விளங்குகிறது.

கைகேயி தன் கணவனின் முடிவை மாற்றித் தன் மகனுக்கு முடிசூட்ட வேண்டுமென்ற முடிவோடு தன் கணவன் தயரதன் வருகையை எதிர்நோக்கித் தரையில் அலங்கோலமாகக் கிடக்கிறாள். தயரதன் அவள் அறையில் நுழைந்தவுடன் அவளது கோலத்தைக் கண்டு துன்பப்பட்டு, ''மானே எடுக்கும் ஆனையேபோல் தடங்கைகள் கொண்டு தழுவி' அவளை எடுக்கிறான், மீண்டும் அவள் துவண்டு மண்ணில் வீழ்கின்றாள். ''என்ன நிகழ்ந்தது? உன்னை இகழ்ந்தவர் யார்? உனக்கு நேர்ந்ததைச் சொல். பிறகு நான் என்ன செய்கிறேன் என்று பார்'' என்றெல்லாம் கூறி மன்னன் தவிக்கிறான். மன்னன் முன்பொருகால் தந்த வரங்களை நினைவூட்டி, 'என் சேய் உலகாள்வது ஒரு வரம்; இராமன் போய் வனமாள்வது இன்னொரு வரம்; இந்த இரண்டு வரங்களையும் தா' என்று கைகேயி கேட்க, ஆவி பதைத்து மன்னன் துன்பப்படுகிறான். கைகேயியின் கால்மேல் விழுந்து கெஞ்சுகிறான். அவள் மனம் கனியவில்லை. அவள் தரையில் அலங்கோலமாக் கிடந்தபோது, அவளைத் தழுவி எடுத்து, அவளுக்காக எதையும் செய்வேன் என்று கூறிய மன்னன், இப்போது உள்ளமும் உடலும் சோர்ந்து கீழே விழுந்து புரள்கின்றான். அவள் மனம் நெகிழவில்லை. 'தர வேண்டிய வரத்தைத் தந்துவிடு' என்று கேட்கிறாள் கைகேயி. 'ஈந்தேன், ஈந்தேன்' என்று வரங்களை ஈந்தவுடன், மன்னன் செயல் மறந்து மூர்ச்சித்து விழுகிறான் ஆனால் கைகேயி அப்போதுதான் அமைதி பெற்றுத் தூங்குகிறாள். கைகேயியின் துன்பத்தைக் கண்டு மனந்தாங்காமல் தயரதன் தவித்ததையும், தயரதன் துன்பத்தைக் கண்டு ஒரு சிறிதும் கவலைப்படாமல் கைகேயி தூங்குவதையும் கம்பன் நம் கண் முன் காட்டுகின்ற முறை அவனது காப்பியத்தின் நாடகப் பாங்கிற்கு ஒரு தனிச் சிறப்புச் சேர்க்கிறது.

''எலி எலாம் இப்படை; அரவம் யான்'' என்று வீரமுழக்கமிடுகிறான் குகன். தன் சேனைகளை யெல்லாம் அவன் கூவி அழைக்கிறான்.

கங்கைக் கரையில் ஒரு கூட்டத்தோடு நிற்கின்ற பரதனைக் குகன் பகைமை உள்ளத்தோடு பார்த்துப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறான். தானே முன்வந்து குகனைக் காண வேண்டுமென்று விரும்பிக் கங்கைக் கரையை நெருங்கி நிற்கிறான் பரதன். பரதனின் கோலத்தைக் கூர்ந்து கவனிக்கிறான் குகன்.

வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றெழிந்தான்.

நாணேற்றப்பட்ட வில்லோடு சிவந்த விழிகளோடு போர்க்கோலம் பூண்டு நிற்கும் குகன், பரதனை என்ன செய்யப் போகிறானோ என்று காண்போர் கையற்று நிற்கும்போது நிலைமை மாறுகிறது. குகனது கையிலிருந்த வில் கீழே விழுகிறது குகன் செயலிழந்து நிற்கிறான். இப்படிப்பட்ட காட்சிகளை

மனங்கொள இயல்பாகப் படைக்கும்போது தான், காவியத்தின் நாடகப் பண்பு உயர்ந்து நிற்கிறது.

பரதனுக்கும் குகனுக்கும் மிகக் கடுமையான போர் நடக்கப் போகிறதோ என நினைக்கிற அளவுக்கு ஒரு சூழலை உருவாக்கி, அந்தப் பரதனையும் குகனையும் ஒருவரையொருவர் வணங்கித் தழுவிக் கொள்ளுமாறு செய்து ஒரு நட்புச் சூழலையும் உருவாக்கி, இந்த முரண்பட்ட சூழல்களை இணைத்துப் பின்னியுள்ள திறம் நம் உள்ளத்துக்கு ஒரு புதிய அனுபவத்தையே வழங்குகிறது.

வாலியும் சுக்கிரீவனும் போர் செய்து கொண்டிருக்கிறார்கள். சுக்ரீவனின் கழுத்தைப் பிடித்துத் தலைக்கு மேலே தூக்கி அவனை வாலி தரையில் மோதிக் கொல்லப் போகிறான். இதோ சுக்ரீவன் முடிந்து விட்டான் என்று நாம் நினைக்கிற நேரத்தில், ஒரு அம்பு வந்து வாலியின் மேல் பாய்கிறது. மேருமலை வேரற்று வீழ்ந்ததுபோல் வீழ்கிறான் வாலி. சுக்ரீவன் அவன் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். தன்மீது பாய்ந்த அம்பைத் தன் ஆற்றல் முழுவதும் திரட்டி வெளியே இழுக்கிறான் வாலி. ''இந்த அம்பை எய்தவன் யார்? அவன் பெயரைத் தெரிந்து கொள்கிறேன்.'' என்று வாலி அந்த அம்பை மார்பிலிருந்து வெளியே இழுக்கிறான். இராமன் என்ற பெயரைப் பார்க்கிறான்; சிரிக்கிறான்; இன்னொரு வீரனின் சிறு செயலுக்காக நாணித் தலை குனிகிறான். இறுதியில் வாலி மடிந்து போகிறான். இராமன் மறைந்திருந்து அம்பு எய்தமைக்காக அவனை எள்ளி நகையாடி இகழ்ந்து பேசிய வாலி, இறுதியில் அவனை ஏற்றிப் போற்றுவதும் இங்கே எண்ணிப் பார்க்கத்தக்க நாடக முரண்.

தான் போரிட்டபோது சுக்ரீவனைத் தரையில் மோதிக் கொல்ல இருந்த வாலி, தன் உயிர்போகும் தறுவாயில் இராமனிடம் ஒரு வரம் வேண்டுகிறான். 'என்னைக் கொன்றது போல் என் தம்பியையும் இந்த அம்பால் கொன்று விடாதே' என்கிறான். தான் கொல்ல இருந்த சுக்ரீவன் மேல் இருந்த பகையும், தன்மேல் அம்பினை எய்த இராமன் மேல் ஏற்பட்ட பகையும் ஒருங்கே நீங்க வாலி நிறைவு பெற்ற நெஞ்சத்தோடு சாகிறான். வாலியை இங்கே கொலை குறித்த கோபத்தையும் காட்டி, அருள் நிறைந்த சான்றோனாகவும் மாற்றிக் காட்டுகிறார் கம்பர்.

இலங்கையில் அசோகவனத்தில் வாடிச் சோர்ந்து வருந்திய சீதை பலவேறு வகையில் தன்னையே நொந்து கொள்கிறாள். 'இனி வாழ்ந்து பயனில்லை. இறத்தலே அறம்' என்று துணிந்தவளாய், யாரும் தன்னைக் காணாத நேரத்தில் ஒரு புதர் அருகே சென்று தற்கொலை செய்து கொள்ள முயலுகிறாள். அந்த நேரத்தில் ''அண்டர் நாயகன் அருள் தூதன் யான்'' என்று கூறியபடியே கைகூப்பி வணங்கி அனுமன் அவள் முன்வந்து நிற்கிறான். அனுமன் அப்போது அவளுக்கு உயிர் தந்தான். அவன் அடையாளமாக அவளிடம் தந்த இராமனது ஆழியால் அவள் உள்ளமும் உயிரும் தழைத்தன.

கல்லினிடையே முளைத்தெழுந்து ஒரு துளி நீரைக்கூடக் காணாது வாடிப்போன ஒரு நல்ல மருந்துச்செடி போன்ற சீதை இராமனது கணையாழியைக் கண்டு புத்துயிர் பெறுகிறாள். வாடிக்கிடந்த அவளது தடந்தோள்கள் விம்முகின்றன. இத்தகைய காட்சிகள் காவியத்தை வெறுங்கதையாக நிறுத்தாமல் அரிய நாடகமாக்கிக் காட்டுகின்றன.

இராவணனது அரசவைக்குக் கொண்டு வரப்பட்ட அனுமன், ''உன்னைக் காண வேண்டும் என்ற எண்ணத்தால்தான் மென்மையோடு உன்மாட்டு வந்தேன். உன் வீரர்களின் வலிமையினால் நான் இங்கு இழுத்து வரப்பட்டேன் என்று எண்ண வேண்டாம்,'' என்று கூற, அதைக்கேட்ட இராவணன் சினம் பொங்கும் உள்ளத்தோடு, 'இவனைக் கொல்லுங்கள்' என்று ஆணையிடுகிறான். இராவணன் ஆணை இதுவரை தப்பியதில்லை. உடனே நிறைவேற்றப்பட்டு விடும். இதோ அனுமன் இறக்கப் போகிறான் என்று நாம் நினைத்து

அஞ்சுகிற வேளையில், 'நில்லுங்கள்' என்று இன்னொரு குரல் ஆணையிடுகிறது. கொல்ல வந்த வீரர்கள் நின்றுவிடுகிறார்கள். அப்படி ஆணையிட்டு நிறுத்தியவன் வீடணன். ''வந்திருப்பவன் தூதனல்லவா? வந்த தூதரைக் கொன்றுளார்கள் யாவரே? தூதனுக இங்கு வந்த இவனைக் கொல்லுதல் நமக்கு இழுக்கு,'' என்று வீடணன் எடுத்துரைக்கிறான். இராவணனும் பெருந்தன்மையோடு ஒத்துணர்ந்து, ''இவனைக் கொல்லல் பழுதே. எனினும், இவனது வாலைச் சுட்டு எல்லை கடக்க விடுமின்கள்,'' என்று மறுஆணை பிறப்பிக்கின்றான். அனுமனின் தலைக்கு வந்தது வாலோடு போகிறது.

காப்பியங்களில் காணும் நாடக முரண்கள் காப்பியங்கட்கு நாடக இயல்பை ஊட்டிப் படிப்போரின் உள்ளத்தை ஒருமுகப்படுத்துவதோடு கதையைத் தொய்வில்லாமல் சுவைபட வளர்த்துச் செல்லவும் உதவுகின்றன.

கதைமாந்தர் தம் வாழ்வில் நிகழ்ந்த பழைய செய்திகளை நினைத்துப் பார்த்தல், தாம் கண்ட கனவுகளைக் கூறுதல் ஆகியனவும் நாடகங்களுக்குப் பொலிவூட்டும் சிறப்புக் கூறுகளே. கம்பன் கவிதையை ஒருமுறை படித்தாலும் இத்தகைய நாடகக் கூறுகள் யாருக்கும் எளிதில் புலப்படும்.

கதையமைப்பும் யாப்பும் அணியும் பாத்திரப் படைப்பும் மிகவும் இன்றியமையாதவை என்பதில் ஐயமில்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக ஒரு காப்பியத்தில் காணும் நாடகக் கூறுகள்தான் அந்தக் காப்பியத்துக்கு இறவா வாழ்வளித்து அந்தக் காப்பியத்தை என்றென்றும் மக்கள் நெஞ்சில் வாழ வைக்கின்றன.

# புறநானூறு ஓர் அழகோவியம்

புலவர் இரா. மணியன்,
எம். ஏ., பி. ஓ. எல்., பி.டி.

இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நத்தம் என்னும் ஊரில் 1932இல் பிறந்தவர். இப்போது சென்னைத் தியாகராயர் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். கவிமணி, வ.உ.சி. ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை விளக்கும் வகையில் ''வாழ்வும் இலக்கியமும்'' என்னும் நூலையும், ''அசோகா ஆங்கில போதினி'', ''எளிய ஆங்கிலக் கட்டுரைகள்'' என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். இவர் பாடிய ''அண்ணா கோவை'' என்னும் அரிய கோவை நூல் இவரது கவியாற்றலுக்குச் சிறந்த சான்று. மேடைப் பேச்சும், கவிதைபாடும் திறனும் ஒருங்கே அமையப்பெற்றவரான இவருடைய கவிதைகளும் கட்டுரைகளும் பல தொகுப்பு நூல்களில் வெளி வந்துள்ளன.

அழகான பெயரமைப்பைக் கொண்ட நூல்களுள் புறநானூறும் ஒன்றாகும். பொருளினாலும், அளவினாலும் இந்நூல் அப்பெயரைப் பெற்றது. ஆயிரத்தெண் ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களான புலவர் பெரு மக்களால் பாடப்பெற்ற பாடல்களுள் புறப் பொருளைச் சார்ந்த நானூறு பாடல் களைத் தேர்ந்தெடுத்துப் புறநானூறு என்ற பெயரால் தொகுத்தனர்.

சமுதாயப் பழக்க வழக்கங்கள், பண் பாட்டுப் பெருமைகள், அரசியல் நெறிகள், போர் நிகழ்ச்சிகள், வரலாற்றுச் சிறப்புக் கள், வாழ்க்கை வரலாறுகள், வாணிக நெறி கள், அறிவியல் செய்திகள், அறவுரைகள், அறிவுரைகள் போன்ற பல்வேறு துறை களைப் பற்றிய புறப்பொருள் கருத்துகளை அழகுற உரைப்பது புறநானூறு.

பாட்டு என்பது செய்யுளுக்குக் கூறப் பெற்ற இன்றியமையாத உறுப்புக்கள் அனைத்தையும் பெற்று, எட்டுவகை வனப் புகளுள் ஏதேனும் ஒன்றைக்கொண்டு விளங் குவதாகும். செய்யுள உறுப்புக்களை குறை வின்றிப் பெற்று, அழகு எனும் வனப்பைக் கொண்டு நல்லிசைப் புலவர்களால் பாடப் பெற்ற பாடல்களின் தொகுப்பே புற நானூறு. இப்பாடல்கள் யாவும் அகவிக் கூறும் அழகிய ஓசையைக் கொண்ட இனிய ஆசிரியப் பாக்களாக அமைந்த அழகோவி யங்கள். அவற்றுள் ஓர் ஓவியத்தின்

அருமை பெருமைகளைக் காண்பதன் மூலம் புறநானூற்றின் பெருஞ்சிறப்பை உணர முற்படுவோம்.

சேர, சோழ, பாண்டியர் மூவரும் கூடிப் பறம்பு மலையை முற்றுகையிட்டுப் போரிட்டு வென்றனர். பாரி வீரமரணம் எய்தினான். கபிலரால் காப்பாற்றப்பெற்ற பாரிமகளிர் பாதுகாப்பான வேறொரு நாட்டில் வாழ்ந்துக் கொண்டிருந்த காலத்தில், ஒருநாள் இரவில் வெண்ணிலாவைக் கண்டபோது, அம்மகளிர் தம் பண்டை வாழ்வு நிலையை எண்ணி உள்ளம் நொந்தனர். அவர்களின் அவல உணர்வே ஓரழகிய உயிரோவியமாகி அகவற்பாவின் வடிவத்தைப் பெற்றது.

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே:
(புறம்-112)

பாரிமகளிர் பாடிய இப்பாடலில் கையறுநிலை உணர்ச்சி பொங்கித் தளும்பிக் கொண்டிருப்பதை உணர்ந்து நாமும் துயருறுகின்றோம், அவல உணர்வை அளிப்பினும் அகவற்பாவின் கவிதையெழிலை எண்ணி எண்ணிக் களிப்பில் ஆழ்கின்றோம். உணர்ச்சியும், கற்பனையும், கருத்தும் தெளிவாக விளங்குவதைக் கண்டு வியப்படைகின்றோம் இனிய நடையமைந்த அழகிய வடிவினைக் கண்டு மகிழ்கின்றோம், பாராட்டுகின்றோம். வெண்டளைகள் விரவி வரினும், அகவலோசையே நிமிர்ந்து நிற்பதைச் செவிப்புலன் மிக்கவர் உணர்ந்து மகிழ்வர்.

மோனை முதலிய தொடைகள் அளவுடன் அமைந்து பாடலின் ஒலிநயத்தை மேலும் அழகுபடுத்தி, உணர்ச்சியை மிகுதியாக்குகின்றன. பாரி மகளிரின் ஆழ்ந்த அவலவுணர்வுகளை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. செய்யுளுக்குத் தேவையான எளிமை, இனிமை, ஆழமுடைமை ஆகிய மூன்று பண்புகளும், பாரிமகளிரின் பாவிலே அமைந்து கிடப்பதைக் கண்டு அகம் மகிழ்கின்றோம்.

வெண்ணிலவைப் பார்த்த பாரிமகளிரின் எண்ணங்கள் ஒரு திங்களுக்குமுன் பறம்பு மலையில் பார்த்த வெண்ணிலவின் காட்சியை அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றன. தம் தந்தை பாரி தங்களோடு வாழ்ந்து கொண்டிருந்ததையும், பறம்பு மலை தங்களுக்கே சொந்தமாக இருந்ததையும் எண்ணுகின்றனர். இந்த எண்ணம் முதல் இரண்டு அடிகளிலேயே வெளிப்பட்டு விடுகிறது. அவ்வாழ்வு மறைந்துவிட்ட செய்தியும் தோன்றுகிறது. மூன்றாவது அடி, அவ்வுணர்வு தோன்றிய சூழ்நிலையை உணர்த்துகிறது. நான்காம் அடி, அவர்களின் வாழ்வு அழியக் காரணமாயிருந்தவர்கள் யார் என்பதை அறிவிக்கிறது. ஐந்தாவது அடி பாரிமகளிரின் அப்போதைய நிலையை, நினைவை அறிவுறுத்துகிறது.

ஐந்தே அடிகளைக் கொண்ட அப்புறப் பாட்டின் நான்காம் அடியில் மூன்று சீர்கள் உள்ளன. இம்முச் சீர்களுள் தம் தந்தை பாரியின் வீரத்தையும், முடியுடை மூவேந்தர்களின் சூழ்ச்சி நிறைந்த வஞ்சகத்தையும் விளக்கி, மூவேந்தரின் வீரத்தை எள்ளி நகையாடுகின்றனர் பாரி மகளிர்.

''வென்றெறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்'' என்ற சொற்களில் உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடுவதை காணலாம். 'ஒருவனை மூவர் கூடி வென்றதும் ஒரு வெற்றியோ' என்று பாரிமகளிர் மூவேந்தரை இகழ்கின்றனர். 'அம்மூவருக்கும் முரசம் வேறு வேண்டுமோ? அதுவும் வெற்றி முரசு ஆகுமோ? அவர்களுக்கு வேந்தர் என்ற பட்டமும், முடியுடை என்ற அடைமொழிச் சிறப்பும் தகுமோ? புலவர்கள் இவர்களையும் பாராட்டுவது ஏனோ?' என்றெல்லாம் பாரிமகளிர் வினாக்களைத் தொடுக்கின்றனர்.

'எம் குன்றின்' என்ற தொடரில், 'எம்' என்பது பாரிமகளிரைக் குறிக்கும்; 'தந்தை இறந்தபின் பறம்புமலை எங்களுக்கே உரியதன்றோ? மகளிர்களாகிய எமக்கு உரியதையும்கூடப் பறித்துக் கொண்டனரே! பெண்களை நாட்டைவிட்டு விரட்டி வெற்றியுற்றதும் ஒரு வீரமோ!!' என்று கூறிய இகழ்ச்சிக் குறிப்புகளெல்லாம் தோன்றுகின்றன.

'குன்றும்' என்பதிலே உள்ள 'உம்'மை பாரியின் வள்ளல் தன்மையைக் குறிக்கும். பாரிக்குச் சொந்தமான முந்நூறு ஊர்களையும் இரவலர்க்கு வழங்கிவிட்டு, அக் குன்றினை மட்டுமே தன் மகளிர்க்காக விட்டு வைத்திருந்தான் என்ற குறிப்பையும் உணர்கின்றோம். 'நாங்கள் பிறந்திராவிட்டால், இக்குன்றையும் யாருக்காவது வழங்கியிருப்பான்; எங்களுக்கென்று மீதமிருந்த அக் குன்றையும் இவ்வஞ்சகர்கள் கைப்பற்றிக் கொண்டனரே' என்று ஏங்கும் ஏக்க உணர்வுகளை, அந்த 'உம்' என்னும் ஓர் அசை மூலமே பாரிமகளிர் நமக்கு உணர்த்திவிடுகின்றனர். 'எந்தையும் இலமே' என்பதில் உள்ள 'உம்', 'தாயும் இல்லாதவர்கள் நாங்கள்' என்ற குன்ற குறிப்பைத்தோற்றிப் பாரிமகளிர் பால் நம் இரக்க உணர்வை மிகுவிக்கிறது.

இத்தகைய உணர்ச்சி வெள்ளத்தைப் பொங்கியெழச் செய்கின்ற புறநானூற்றுப் பாடல் ஒவ்வொன்றும் ஓர் அழகோவியமாகக் காட்சியளிப்பதைக் காணலாம். எளிமை, இனிமை, ஆழமுடைமை என்னும் செய்யுளழகுடன், கவிதையின் உணர்வுக்கும், கற்பனைக்கும், கருத்துக்கும் ஏற்ற வடிவத்தையும் பெற்றுத் திகழ்வதைக் காணும்பொழுது, 'வடிவமைப்பு உணர்வை பாழ்படுத்துகிறது' என்று கூறும் அரைவேக்காடுகளை எண்ணி அனுதாபப்படுகிறோம்.

ஒரு கவிதையின் உயிரும், உடலும், உள்ளமும் முறையே உணர்ச்சியும், கற்பனையும், கருத்தும் எனக் கொண்டால், வடிவை ஆடை எனக் கொள்ள வேண்டும் என்று திறனாய்வாளர் கூறுவர். ஆடை உடுத்தாத மனிதனைக் காட்டுமிராண்டி என்றே கருதுவர். எனவே, வடிவமற்ற கவிதையைக் காட்டுமிராண்டிக் காலக் கவிதை என்றுதான் திறனாய்வாளர் கருதுவர். ஆகவே, வடிவத்தின் சிறப்பையும், இன்றியமையாமையும் அறியாத கவிஞர் இருக்கமுடியாது—இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அவரைக் கவிஞர் எனக் கூற இயலாது—கூறக் கூடாது.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான ஆடையைப் பயன்படுத்துவர்; அது போல ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு வகையான வடிவத்தைக் கொண்ட கவிதைகள் காணப்படலாம். ஒரு நாட்டிலேயே கூடப் பல்வேறு வகையான ஆடைகளைச் சூழ்நிலைக்கு ஏற்ப உடுத்துக் கொள்வர்; ஆனால், ஆடையே உடுத்திக் கொள்ளாமல் இரார். அதுபோல ஒரு மொழியிலேயே பல்வேறு வகையான வடிவங்களைக் கொண்ட கவிதைகள் இருக்கலாம்; ஆனால் வடிவமே இல்லாத கவிதை இருக்கக் கூடாது.

ஒரு நாட்டில் தட்ப வெப்ப நிலைக் கேற்ற ஆடை வகைகளைக் காணலாம்; ஆண் பெண் பால் வேறுபாடு காரணமாக ஆடை வகை மாறுபடலாம்; காலத்துக் கேற்ற, இடத்துக்கேற்ற, நிகழ்ச்சிக்கேற்ற, உணர்வுக்கேற்ற, வயதுகேற்ற ஆடைவகைகளை அணிவதும் மரபாகும். ஆனால், ஆடையே அணியாமல் இருப்பது மரபன்று.

மகிழ்ச்சியூட்டும் மண விழாவுக்குச் சென்றால் ஒருவகை ஆடை; வருத்தமளிக்கும் இழவுநிகழ்ச்சிக்குச் சென்றால் ஒரு ஆடை; அலுவலகங்களுக்குச் சென்றால் ஒரு வகை ஆடை; வீட்டிற்கு ஒருவகை ஆடை; கோடைக்கொருவகை; குளிருக்கொருவகை போருக்கு ஒருவகை; உலாவுக்கு ஒருவகை. இவைபோல உணர்ச்சிக்கேற்ற, கற்பனைக் கேற்ற, கருத்துக்கேற்ற, காலத்துக்கேற்ற வகையில் கவிதை வடிவங்களை மாற்றியமைக்கலாமே யொழிய, வடிவேயின்றி எழுதி அதைக் கவிதை என்றால் ஆய்வறிஞர் ஒப்பார்—பாட்டு என்று தமிழறிஞர் கொள்ளார்; உரைச் செய்யுள் என்றே கொள்வர்.

பண்டைக் காலத்தில் மக்கள் அணிந்து கொண்டிருந்த ஆடை வகையையே இக் காலத்திலும் அணிய வேண்டும் என்று யாரும் வற்புறுத்தார்; அதுபோலவே பண்டைய வடிவ அமைப்புகளே கவிதைகளுக்கு இருக்கவேண்டும் என்று எந்த ஒரு அறிஞரும் கூறார். ஆனால், ஏதாவது ஒரு வடிவம் வேண்டும் என்று கோருவதில் தவறார்.

தொல்காப்பியரின் காலத்துக்கும் முன்பே பலவகையான வடிவங்களையுடைய

பாக்கள் இருந்தன என்பதை அவரது நூலால் அறிகின்றோம். சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலங்களில் பாக்கள் பல்வேறு வகையான வடிவங்களைப் பெற்று வளரத் தலைப்பட்டனவே யொழிய, வடிவம் பெறாமலேயே வளரத் தலைப்படவில்லை.

சங்க காலத்துக்குப் பின்னர்க் கலிவிருத்தங்களும், ஆசிரிய விருத்தங்களும், துறைகளும், தாழிசைகளும் மிகுதியாயின. வடிவங்கள் மாறினவேயொழிய அழிந்துபடவில்லை. பிற்காலத்துச் சிந்தானாலும் கும்மியானாலும் அவற்றுள்ளும் ஒருவகையான கட்டுக்கோப்புள்ள வடிவழகைக் கண்டு மகிழலாம்.

சங்க காலத்துக்கும் முற்பட்ட பாடல்கள்கூடப் புறநானூற்றில் தொகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கருத்துக்கும், உணர்வுக்கும் ஏற்ற கற்பனைகளைக் கொண்டு, தேர்ந்தசொற்களைத் தொடுத்து, இனிய ஒலிநயத்தை உண்டாக்கி, இன்புறுத்தும் கவிதைகளைத் தருவதில் சங்ககாலச் சான்றோர்கள் சிறந்தவர்களாக விளங்கினர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒவ்வொன்றும் ஓர் அழகோவியமாக நின்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

# சங்க நூல்களில் இயற்கையும் - இறைமையும்

முனைவர் : வே. காத்தையன்,
எம், ஓ. எல்.

இக் கட்டுரையாசிரியர், தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் உள்ள கோடுகிழி என்னும் சிற்றூரில் 15-5-1935-இல் பிறந்தவர் ; அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று பி. ஓ. எல். தேர்வில் பல்கலைக் கழக முதலாகத் தேறிப் பின் எம். ஓ. எல். பட்டம் பெற்றவர். 1956-இல் அகில இந்திய வானொலி நடத்திய பல்கலைக் கழக அளவிலான பேச்சுப்போட்டியில் முதற் பரிசு பெற்றுத் தொடர்ந்து தம் பேச்சாற்றலால் கேட்டார்ப் பிணிக்குந் தகையராய் விளங்குபவர்; 'கல்லூரி இலக்கணமும் கட்டுரைப் பயிற்சியும்' எனும் நூலை இயற்றியவர். இவருக்குத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றுத் தந்த பாரதிதாசன்-வாணிதாசன் பாடல்களில் 'இயற்கை' எனும் ஆய்வேடு விரைவில் நூலாக வெளிவரவுள்ளது. இவர் வெள்ளிவிழாக் கண்ட பூண்டிப் புட்பங்கல்லூரி தொடங்கிய காலந்தொட்டுத் தொடர்ந்து அங்குத் தமிழ்த் துறையில் பணிபுரிந்து வருகிறார்.

பாட்டும் தொகையுமாக இன்றுகிடைத்துள்ள சங்க நூல்கள் அனைத்தும் தமிழிலக்கியத்தின் படைப்புகளெனத்தகும் சிறப்புமிக்கன. சங்க காலத் தமிழ் மக்களின் வாழ்வு இயற்கையோடியைந்த வாழ்வாகும். அவர்தம் வாழ்வுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவினை அக்காலக் கவிஞர்தம் பாடல்கள் நமக்கு விளக்குகின்றன. 'இயற்கை அரங்கு, மானிட அரங்கு, இரண்டு களங்களே கவிஞனின் தொழிற் சாலைகள்''[1] என்று ஜே. சி. ஷார்ப் என்ற அறிஞர் கூறுவது சங்க நூல்களுக்கும் பொருந்துவதாகும் சங்க காலப் புலவர்கள் தம் கூர்த்த மதிநலத்தால் மேற்குறித்த இரண்டு அரங்குகளிலும் உலவியும், ஊடாடியும், இயற்கை அரங்கைத் துணையாக்கி மானிட இயக்கத்தை எழிலுறப் புனைந்துள்ளனர். சங்கப் பாடல்களைப் பயில்வோர், அறிஞர் 'பால்க்ரேவ்' கூறுவது போல் 'இயற்கையும் மனிதனும் மணம் செய்து கொள்ளும்'[2] எழிலார்ந்த காட்சிகளைக் காணலாம். சுருங்கச் சொல்லின் சங்க நூல்கள் 'சொல் வடிவில் அமைந்த இயற்கை ஓவியமாகும்'[3]

1. முனைவர் மு. வ. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 12
2. முனைவர் எஸ். தனிநாயகம், Landscape and poetry, p. 2
3. மேற்படி, ப-2.

## இயற்கை தந்த உணர்வுகள்

இயற்கையோடியைந்த வாழ்வு கொண்ட பழந்தமிழர், தம் வாழ்வுக் களனான இயற்கையின்பால் வியப்பும், மதிப்பும், அச்சமும், அழகும் ஆகிய உணர்வுகளைக் கொண்டிருந்தனர்; மண்ணும் விண்ணும் மலையும் கடலும் என விரிந்து விளங்கும் இவ்வுலகில், எங்கும் எல்லையற்று நிறைந்திலங்கும் பேரியற்கையின் பெருமை கண்டு வியந்தனர்; அதன் அளப்பருங் கருணை வளம் நோக்கிப் போற்றினர்: வரம்பிலா ஆற்றல் உணர்ந்து அஞ்சினர்; அழியா அழகு நோக்கி அகம் களித்தனர். சங்க நூல்களில் வெளிப்படும் பழந்தமிழ் மக்களின் இயற்கை பராவும் நெறி, அவர்தம் நாகரிக மேம்பாட்டையும் பண்பாட்டுச் சிறப்பையும் உணர்தற்கமைந்த கருவியாகவும் திகழ்கின்றது.

## வழிபாட்டு நெறி

பழந்தமிழர் இயற்கையை வழிபட்ட பாங்கினை இருவகையாகக் காண முடிகின்றது. இயற்கைத் தன்மையை இறைத் தன்மையாகக் காட்ட இயற்கையினையே தெய்வமாகக் கொள்ளும் போக்கு முதல் வகை என்றும்; இயற்கையைத் தெய்வத்தோடு தொடர்புடையதாய் மதித்துப் போற்றும் பாங்கு இரண்டாம் வகை என்றும் கொள்ளலாம், இயற்கை தரும் பயன் கருதி வழிபடுவதும், வாழ்த்துவதும் உண்டு.

## ஞாயிறு

உலகின் ஒளிச் செல்வனான ஞாயிறு தெய்வமாகவே மாந்தரால் எண்ணித் தொழப்படுகின்றது. கிலப்பதிகாரம் ஞாயிற்றைப் போற்றும் இயற்கை வணக்கத்துடன் தொடங்குகின்றது[4]. காலப் போக்கில் சூரிய வழிபாடு வளர்ந்து பெருகிய நிலையை அறிகிறோம். கடவுள் வாழ்த்தோடு பொருந்திவரும் முப்பொருள்களாகத் தொல்காப்பியர் சுட்டும் கொடிநிலை, கந்தழி, வள்ளி[5] என்பவற்றில் கொடிநிலை என்பது ஞாயிற்றைக் குறிக்கும் எனத் தமிழறிஞர் சிலர்[6] கருதுவது குறிப்பிடத்தக்கது, 'ஞாயிற்றுப் புத்தேள்'[7] என்னும் தொடர் சங்ககாலத்தே மக்கள் ஞாயிற்றைத் தெய்வமாக மதித்த நிலையை உணர்த்துகின்றது. ஞாயிற்றுத் தோற்றம் எவ்விடத்தும் எக்காலத்தும் மக்களால் தொழுது வரவேற்கப் பட்டிருக்கின்றது. ஞாயிற்றை மக்கள் தொழுத நிலையைக் குறிக்கும் பாவலர் சொற்றொடர் அமைப்பைக் காணுங்கால் அதன் தோற்றமே மக்கள் தொழுவதற்காக அமைந்துள்ளது என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றது. 'பலர் தொழத் தோன்றி'[8] ''உலகு தொழத் தோன்றி''[9] என வரும் தொடர்கள், உலகோர் தொழும் பாங்கில் ஞாயிறு தோன்றுகின்றது என்ற பொருளோடு உலகுதொழ வேண்டித் தோன்றுகின்றது என்ற கருத்தையும் புலப்படுத்துமாறு அமைந்துள்ளன, இந்திய சமய வரலாற்றில் இடம்பெற்றுள்ள ஆறு சமயங்களில் ஞாயிற்றை முழுமுதலாகக் கொண்ட சௌரம் என்னும் சமயம் இவ்வழிபாட்டின் சிறப்பையும் செல்வாக்கையும் காட்டுவதாக உள்ளது. உலகின் பல பாகங்களிலும் சூரிய வழிபாடு இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## திங்கள்

மாந்தர் தொழும் பாங்கில் ஞாயிற்றை ஒத்துத் திங்களும் சிறப்பிடம் பெற்றுள்ளது. ஞாயிறு போன்றே திங்களும் புத்தேள் என்ற தெய்வச் சொல்லால் சிறப்பிக்கப் படுகின்றது. வான மண்டிலத்தில் வளர்ந்தும் தேய்ந்தும் விளங்கும் திங்கள் பிறப்பும் இறப்புமாகிய உலகியலுண்மையை உணர்த்துகின்றது என்னும் பொருளில் அமைந்துள்ள

---

4. சிலம்பு-1 : 4
5. தொல். பொருள் ; 85
6. கு. மோகனராசு, தொல்காப்பிய விருந்து, பக். 39-40.
7. கலி. 108 : 12-13,
8. நற்றிணை-283 : 6-7.
9. அகம்-263 : 1

தேய்தலுண்மையும் பெருகலுண்மையும்
மாய்தலுண் மையும் பிறத்தலுண் மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் [10]

என்னும் கூற்றுக் குறிப்பிடத்தக்கது.

சிவபிரான் திருநுதல் விளங்கும் இளம் பிறை தேவகணமும் ஏத்தும் சிறப்புடையது[12]. வானில் தோன்றும் புதுப்பிறையை வையமுழுதும் தொழுதமைக்குச் சான்றுகள்[12] கிடைக்கின்றன. மாலைப்பொழுதில் மகளிர் பிறை தொழும் மரபு தமிழகத்தில் நிலவியது[13]. திங்களுக்குச் சங்கமருவிய காலத்தில் திருக்கோயில் விளங்கிய தன்மையைச் சிலம்பு சுட்டும் நிலாக் கோட்டம்[14] கொண்டு அறியலாம். பயிர்களுக்குத் திங்கள் அதிபனாகையால் கன்னிப் பெண்கள் எருவை முன்னே இறைத்து அவனைத் தொழுதல் வழக்கமென்று உ. வே. சா. குறிப்பிடுவது[15] கருதத்தக்கது.

## வீண்மீன்

அருந்ததியாகிய வீண் மீன் கற்புக்குக் காட்டாகப் பல இடங்களில் சுட்டப்படுவதைச் சங்க இலக்கியங்களிற் காணலாம்[16]. மனைவிளக்காய் ஒளிரும் மங்கையர் கற்புக்கு உவமையாக, வான விளக்காய் ஒளிரும் வடமீன் சுட்டப்படுவது சங்க மாந்தர் கற்பறத்திற்குச் சான்றாம். கற்புநெறி தொழுதேத்தும் சிறப்பு நிலைக்குரியது என்பதனை அதற்கு உவமையாகக் காட்டப்பட்ட வடமீனைத் தொழுவது கொண்டு அறியலாம்[17].

சிவபெருமான் ஆதிரை நாளுக்குரியவன் எனக் கொண்டு ''ஆதிரையான்''[18], 'ஆதிரை முதல்வன்'[19] என்ற பெயரையும் வழங்கினர். இத்தெய்வத் தொடர்பு காரணமாக ஆதிரை நாளும் வழிபாட்டிற்குகந்ததாக அமைந்தது. அந்நாளில் அந்தணர் விழவுதொடங்கிய குறிப்புச் சங்க நூலில் உள்ளது[20].

## மழை

உலகில் உயிரும் பயிரும் வளர வான் மழை இன்றியமையாதது. இம்மழை வளம் அறாமைக்குக் கடவுள் அருள் காரணமாகும் என்னும் எண்ணம் சங்கமாந்தர் நெஞ்சத்தில் தோன்றியிருக்கின்றது. மாயோன் எனப் பெறும் திருமாலை நிலமாகவும், நிலத்தில் உயர்ந்த இமயமாகவும், இமய முகடு தழுவும் விசும்பாகவும், விசும்பு சூழ்ந்த எழிலியாகவும் காணும் சங்ககாலப் போக்கு, அம் மக்கள் தாம் காணும் இயற்கைக்கு இறைமை சேர்க்கும் பண்பினைக் காட்டுவதாக அமைந்துள்ளது[21]. முருகக் கடவுளது திருமுகங்கள் ஆறனுள் ஒன்று உலகின் பாயிருள் நீக்கிப் பகலொளி தருவதாகவும்[22], பன்னிரண்டு கரங்களுள் ஒரு கரம் மண்ணுலகு செழிக்க மழைத்துளி பொழிவதாகவும்[23] நக்கீரர் கூறுவது, இயற்கையின் இயக்கத்தை இறையின் செயலாகக் கருதிப் போற்றும் அக்காலப் போக்கினைக் காட்டுகிறது. அதன் பயனாகத் திங்களும் ஞாயிறும் போல மழையும் போற்றப்படுவதற்குரியதாகக் கருதப்பெற்று, இளங்கோவடிகளால் நூலின் தொடக்கத்திலுள்ள இயற்கை வாழ்த்தில் இணைக்கப்பட்டுள்ளது.[24]

## மலை

இயற்கைக் காட்சிகளுள் வியப்பும், பெருமிதமும் கொண்ட தோற்றப் பொலிவுடையது மலை. 'மலை காணா மானிடன் கவிஞனாகத் தகுதியற்றவன்' என மேனாட்டறிஞர் ஜான்சன் கருதியதாகக் கூறப்படு

---

10. புறம்-27 : 11-4
11. மேற்படி-கடவுள் வாழ்த்து : 9-10
12. குறுந்தொகை-178 : 5-7 ; 607 ; 1-3
13. அகம்-239 : 13
14. சிலம்பு-9 : 13
15. உ. வே. சா-சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப. 86.
16. புறம்-122: 8-9, அகம்-16 : 18.
17. கலி-2 : 21
18. கலி-150 : 20
19. பரி-8 : 6
20. மேற்படி-11 : 77-78
21. மேற்படி-1 : 47-48
22. முருகு ; 91-92
23. மேற்படி : 116
24. சிலம்பு-1 : 8-10

கிறது[25]. வானுயர் மலையின் வளமலி காட்சியில் ஈடுபட்ட பழந்தமிழர் மலைக் கடவுளாக முருகனைக் கொண்டனர். பின்னர்த் திருமாலையும் மலைத் தெய்வமாகக் கருதத் தொடங்கினர். தொல்காப்பியம் மாயானையும் சேயோனையும் முறையே முல்லை, குறிஞ்சி நிலங்கட்குரிய தெய்வங்களாகக் கூறுகின்றது[26].

உலகில் வனப்பும் வடிவும் வாய்ந்த குன்றுகள் பல எனவும், அவற்றுள் பயனும் வளமும் பாரோர்க்குத் தருவன சிலவெனவும், அந்த குன்றுகளுள்ளும் தெய்வம் விரும்பும் சிறப்புடையன மிகச் சிலவெனவும், அவற்றுள் திருமால் குன்றமே சிறந்த மலைகளுள்ளுஞ் சிறந்தது எனவும் இளம்பெருவழுதியார் கூறுவது[27] குறிப்பிடத்தக்கது. மலை மாண்பு இங்கு இறை மாண்போடு இணைந்து நெஞ்சில் நிலைக்கின்றது.

மலையைத் தொழுதலும், வாழ்த்துதலும், சங்கமாந்தர் மேற்கொண்டிருந்தமை அறியலாம். தெய்வங்கள் மலையகத்தைத் தம் மனையகமாகக் கொண்டு விளங்குகின்றன எனக் கருதிய கருத்தின் அடிப்படையில் இவ்வழிபாடு அமைந்திருக்கலாம். 'ஆனால் தெய்வச் சார்பின்றி மலை தரு வளமும், இன்பமும் நோக்கி அதனைத் தொழும் நிலையும் அக்காலத்தில் இருந்தமையினைச் சங்க நூல் கொண்டு அறிகிறோம்.[28]

## இமயம் :

மலையரசாகப் பல நூல்களில் பெருமிதத்தோடு பேசப்படுவது இமயமாகும். இமயத்திற்கும் தெய்வத்திற்கும் நெருங்கிய தொடர்பு கூறப்படுகின்றது. பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவன் முப்புரப் போர் கருதிய ஞான்று இமயத்தை வில்லாகக் கொண்டா னென்னும் குறிப்பு[29] சங்க நூலில் உள்ளது. அவன் உமையோடு அமர்ந்திருப்பது அம் மலையின் கண்ணே என்றும்[30], அம் மலையரசன் பெற்ற மடப் பாவையே உமையம்மை என்றும்[31] கூறப் பட்டுள்ளன. நக்கீரர் முருகனை மலை மகள் மகனாகக் காட்டுகின்றார்.[32] கடவுள் நிலைபெற்றுள்ளதாகக் கருதப்படும் மேரு மலையைக் கடவுள்மலை என்ற பெயரால் குறிப்பது புராண மரபாகும். உரையாசிரியர் நச்சினார்க்கினியர் மேருவிற்குச் 'சுராலயம், என்று பெயர் சுட்டுவார்.[33]

கடவுளுருவை நேரிற் காண மாட்டாதார் அவன் நிலைபெற்ற குன்றைத் தொலைவிற் பார்த்து வணங்கினால், கடவுளைக் கண்டாற் போலும் பயன் பலவும் பெறலாம் என்ற எண்ணமும் அக்காலத்தே இருந்ததாகத் தெரிகின்றது, தெய்வத்தோடு ஒத்த சிறப்புப் பொருந்தியமையால் அதனைக் கண்டு பணிந்த அளவிலேயே அடியார்தம் மனமயக்கத்தை அழிக்கவல்ல காமக் கடவுளாக அம்மலை விளங்கிய தெனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.[34] நன்னனது அயிரை மலையை வெற்றித் தெய்வமான கொற்றவையின் இருப்பிடமாக நம்பினர். கொற்றவை கோயிலாக அம்மலை எண்ணப்பட்டு யாவராலும் அச்சத்துடன் பார்க்கப்பட்டதாக அறிகிறோம்.[35]

## ஆறு :

உயிர் தழைக்கவும், உணவு பெருகவும் நிலவளத்துடன் நீர் வளமுந் தேவையாகும். அந்த நீரைத் தரும் ஆறுகள் நாட்டின் உயிர்நாடி எனலாம். நாட்டைச் சேயாகவும், அதனைப் புரக்கும் ஆற்றைத் தாயாகவும், இளங்கோவடிகள் கூறுகின்றார்.[36] சங்கமாந்தர் உண்ணவும் குடையவும் உரியதான ஆற்றினைப் போற்றிப் பயன் கொண்டனர். ஆற்றினுக்குக் கை

---

25. மு. வ. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை-ப. 227.
26. தொல் பொருள்-5
27. பரி-15 : 1-14
28. நற்றிணை-139 : 1-2
29. கலி.36 : 1
30. மேற்படி-32 : 2
31. சிலம்பு-24 : 17
32. முருகு ; 257
33. சிறுபாண் : 205 நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பு.
34. பரி-15 : 37
35. பதி-90 : 19
36. சிலம்பு-7. ஆற்றுவரி-3 : 1-2

யுரை பல ஈந்து வாழ்த்தியதோடு, அதன் பால் வரம் வேண்டிய செய்தியையும் இலக்கியம் காட்டுகின்றது.

ஆற்றில் புதுவெள்ளம் நிறைந்து வரும் போது பொன்னாற் செய்த நண்டு, நத்தை, இறால், வாளை இவற்றைப் பெண்கள் கையுறையாக இட்டு நாவிலம் விளையவும், நாடு பொலியவும் வாழ்த்துக் கூறி நீராடும் காட்சி பரிபாடலில் சித்தரிக்கப்பட்டுள்ளது.[37] இவ்வாறு ஆற்றில் நீராடிக் களித்து அதனை வாழ்த்தும் பெண்டிர், தம் காதலர் வண்டு மனம் கொள்ளா ஆடவராகத் திகழவும், அவர் கைகவர் முயக்கத் தால் தாம் என்றும் மகிழ்ந்து பொலியவும் வரங்கேட்கின்றனர்.[38] மேலும், தம் கணவரும் தாமும் பெற்ற இளமை எழில் மூவா இளநலமாக நிலைத்து நிற்கவும் வேண்டுகின்றனர்.

கிழவர் கிழவியர் என்னாது ஏழ்காறும்
மழவீன்று மல்லல் கேள் மன்னுக[39]

என்பது மகளிர் கேட்ட வரமாகும்.

வையையில் நீராடும் வாய்ப்பினைப் பெற்றவர் தவப்பயன் மிக்கோராகப் பண்டு பாராட்டப் பெற்றனர்.[40] கன்னிப் பெண்டிர் மேற்கொள்ளும் தை நீராட்டுத் தவநீராட்டாகவே சிறப்பிக்கப்படுகின்றது,[41] மேலும் ஒளிசிறந்த முத்து, வலம்புரிச் சங்குகளைச் சொரிந்து நீரால் குளிர்ந்த பனித்துறை பலவும் பரவியதாகவும் தெரிகின்றது.[49]

மரம் :

இயற்கையிலீடுபட்டு, அவ்வியற்கைப் பொருள்களில் இறைநிலையுணர்ந்து போற்றிய சங்க மக்கள் மரத்தையும் மரத்தடி மன்றையும் கடவுள் உறையும் இடமாகக் கருதி வழிபட்டு வந்துள்ளனர்.[43] பருத்த அடிப்பகுதியும் படர்கிளைகளும் அடர்ந்த விழுதுக் கால்களும் கொண்டு, நிழலின் நெடும்பரப்பாய் அமைந்த ஆலமரத்தைத் தெய்வத்தன்மை கொண்டதாக நினைத்துப் போற்றினர். ஆல மரத்தைக் ''கடவுள் ஆலம்''[44] என்று சுட்டும் குறிப்புள்ளது. நிலத் தெய்வமாகச் சுட்டப்பெறாத சிவபெருமானை ஆலமரத்தோடு இணைத்துப் பேசும் தன்மையை ''ஆலமர் கடவுள்''[45], ''ஆலமர் செல்வன்''[16] ''ஆல் கெழு கடவுள்''[47] எனவரும் சங்கச் செய்யுட் டொடர்கள் தெளிவுபடுத்துகின்றன. மர வணக்க முறையில் பெருமரம், முதுமரம் இவற்றோடு பொதுவாகத் தெய்வத் தொடர்பை இணைத்துக் ''கடவுள்மரம்''[48], ''கடவுள் முதுமரம்''[49] என வழங்கிய நிலை வளர்ச்சிபெற்றுக் குறிப்பிட்ட மரத்தைக் குறிப்பிட்ட கடவுளரோடு தொடர்பு படுத்தும் நிலை உருவாகியது எனலாம். முருகனை ''ஆலமர் செல்வனின் அணிசால் மகனாகக்'' கலித்தொகையில்[50] காணலாம், ஆலின்கீழ் நாட்பலி இடும் வழக்கம் இருந்ததாகவும்,[51] அப்பலியைக் காக்கையுண்டதாகவும் தெரிகின்றது.[52]

ஆல மரத்துடன் சிவபெருமானை இணைத்துக் கூறும் மரபுபோல் கடம்ப மரத்துடன், அதுவும் பூத்துப் பொலியும் புதுப்பூங் கடம்புடன், முருகக் கடவுளைத் தொடர்பு படுத்தும் இயல்பும் பண்டு தமிழகத்தில் இடம் பெற்றிருக்கின்றது. முருகன் உறையும் இடங்களில் ஒன்றாகக் கடம்பும் கருதப்பட்டது. கடம்பமரக் குடியிருப்பை முருகன் பெரு விருப்புடன் மேற்கொண்ட நிலை கருதி அக்கடவுளுக்குக்

37. பரி-10 : 85-86
38. மேற்படி-11 : 118-119
39. மேற்படி-11 : 120-121
40. மேற்படி-22 : 27-28
41. மேற்படி-11 : 90-91
42. அகம்-201 : 4-8
43. முருகு : 225-226
44. புறம்-199 : 1
45. மேற்படி-168 : 9
46. கலி-83 : 13
47. முருகு : 266
48. அகம்-270 : 11-15
49. நற்றிணை-83 : 2-4
50. கலி-83 : 14
51. அகம்-237 : 6-7
52. நற்றிணை : 343 : 4-5

'கடம்பன்'[53] என்ற பெயரும் வழங்கப்பட்டிருக்கின்றது. ''கடம்பமர் நெடுவேள்'[54] என்றும், ''கடம்பமர் செல்வன்''[55] என்றும் முருகனைக் குறித்தனர். முருகனை வழிபடுவோர் அவன் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றில் இருந்த கடம்புக் கடி மரத்துக்குப் பலியும், பூசையும் செய்து பரவுக் கடன் பூண்டதாகக் கூறப்பட்டுள்ளது.[56] தெய்வம் சேர்ந்த வேப்ப மரத்துக்குக் குருதிப்பலியும் புலவுப்புழுக்கும் படைக்கப்பட்ட செய்தியும் காணலாம்[57]. இல்வாறு தெய்வம் உறைவதாகக் கருதிச் செய்யப்பட்ட மரவழிபாடு நாளடைவில் தமிழகத் திருக்கோயில்களில் தல விருட்சம் அமைத்துப் போற்றப்பெறும் மரபு தோன்றியதற்கு அடிப்படையாக அமைந்திருத்தல் கூடும்.

## மலர்கள்

சங்கத் தமிழர் வாழ்வில் மலர்கள் பெரும்பங்கு பெற்றிருந்தன. மலர்களில் வடிவும் வனப்புஞ் சான்ற மலர்களைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்தியுள்ளனர். நான்முகன் தாமரையில் தோன்றியதாகக் கருதப்பட்டு ''தாமரை இறை''[58], ''பூவினுட் பிறந்தோன்''[59] ''மலர்மிசை முதல்வன்''[69] எனச் சுட்டப் பெற்றுள்ளான். முருகனும் தாமரையில் தோன்றியவனாக எண்ணப்பட்டான்[61]. இவ்வாறு அமைந்துள்ள தெய்வத் தொடர்பு பற்றித் தாமரை மலர் ''கடவுளொண் பூ''[62], ''கடவுட் டாமரை''[63] என் அழைக்கப்படுகின்றது. தெய்வ மலராதலின் மக்கள் இதனைச் சூடுதலை விலக்கினர் என்ற குறிப்புமுண்டு[64]. கடவுளர்தம் உறுப்புக்களுக்குத் தாமரை உவமையாக்கப்பட்டுள்ளது[65].

காந்தள் மலருக்கும் முருகக் கடவுளுக்கும் தொடர்பு கூறப்படுகின்றது. முருகனருள் வேண்டி வெறியாடும் வேலன் காந்தள் மலர் சூடுவதை இலக்கியத்திற் காணலாம். தாமரை கடவுட்டாமரை எனப்பட்டவாறு, காந்தளும் ''கடவுட் காந்தள்''[66] எனப்பட்டது. கடவுட் காந்தளாகக் கருதப்பட்டமையால் தேனுண்டு வாழும் சுரும்பினமும் அதன்கண் மொய்க்காது என எண்ணினர்.[67]

## இலை :

மலர்களைப் போன்றே சில இலைகட்கும் தெய்வத் தொடர்பு கூறப்பட்டது. துழாய் திருமாலுக்குரிய பச்சிலையாகும். கடம்பு சூடும் முருகன் கடம்பன் எனப் பெற்றவாறு, துழாய் அணியும் திருமால் ''துழாயோன்''[68]. ''துழாய் அலங்கற் செல்வன்''[69] என்று அழைக்கப் பெற்றார்.

## முடிவுரை :

பழந்தமிழர் இயற்கையோடு இணைந்த வாழ்வினர். காடும் மலையும் கடலும் வயலுமாகிய நானில இயற்கை அவர்கள் இளமையில் தொட்டிலாகவும், வளர்ந்த நிலையிற் பல்கலைக் கழகமாகவும் திகழ்ந்தது. தென்றலும், புல்லும், பூக்களும், மரமும் மலையும் பறவையும் விலங்கும் போன்றன வெறும் ஐம்புல நுகர்வுக்குரிய பொருள்களாக மட்டுமன்றி, அறிவூட்டும் ஆசானாகவும் ஆன்ம நலங்காட்டும் வாயிலாகவும் அமைந்தன.[70] இத்தகு இயற்கைப் பின்னணியில் நிலத்தெய்வம் அமைத்துப் போற்றினர். இந்த நிலையின் வளர்ச்சியாக இயற்கையோடு இறைத் தன்மையை

---

53. முருகு: ஈற்றுச் செய்யுள்
54. பெரும்பாண்-75
55. பரி-8 : 126
56. மேற்படி-17 : 3-4
57. அகம்-309 : 4-6
58. பரி-9 : 4
59. பரி. பா. தி-8 :-7
60. பரி-8 : 2-3
61. மேற்படி-5 : 44-49
62. பெரும்பாண் : 289-290
63. மதுரை : 710
64. பெரும்பாண்: 290
65. பரி-13 : 50-51
66. அகம்-151 : 16-17
67. முருகு : 142-43
68. பரி-15 : 15-16
69. பதி-31 : 3-9
70. முனைவர் அ. மா. பரிமணம்-இயற்கை நாட்டியம், ப-36.

இணைத்துக் காணும் பாங்கும் வளர்ந்தது. இறைமை இணைவுப் பண்பாளர்களாக நக்கீரர் போன்ற சங்கப் பாவலர்கள், இயற்கையையும் இறைமையையும் இணைத்துக் கண்டவர்களாக, காட்டியவர்களாகத் திகழ்கின்றனர். இயற்கையின் சில கூறுகளைத் தெய்வமாகவும், சிலவற்றைத் தெய்வ உறையுள்களாகவும் எண்ணிப் பரவி வந்துள்ளனர். சில பொருள்களோடு தெய்வ உணர்வைத் தொடர்பு படுத்தினர். இயற்கை நிகழ்ச்சிகளுக்கு இறைவனே அடிப்படை என்றும், அதனை ஆளுபவன் அவனேயாவான் என்றும் எண்ணிய நிலையும்[71] தெரிகின்றது.

71. மதுரைக் காஞ்சி : 453-55

# "அந்த அய்ந்து"

வித்துவான் சாமி. தியாகராசன்,
எம்.ஏ., பி.ஓ.எல்.,பி.எட்.

இக்கட்டுரை ஆசிரியர் சாமி. தியாகராசன் தஞ்சையின் ஒரு பகுதியான கருந்திட்டைக்குடியில் 1939ம் ஆண்டு பிறந்தவர்; கரந்தைப் புலவர் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்; இப்போது குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர்; ''நிலம்பும் சிந்தனையும்'' என்ற நூலை எழுதியுள்ள இவர் சிறந்த இலக்கியச் சொற்பொழிவாளர். ''இருபதாம் நூற்றாண்டுத் திருக்குறள் உரைகள்'' என்ற தலைப்பின் கீழ்ச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ''டாக்டர்'' பட்டத்திற்காக ஆய்வு செய்து வருகிறார்.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்டது அமைச்சு (குறள்-632)

''வினை செய்தற்கண் அசைவின்மை யும், குடிகளைக் காத்தலும், நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், முயற்சியும் மேற்சொல்லிய அவ் அங்கங்கள் ஐந்துடனே திருந்த உடையானே அமைச் சனாவான் என்றவாறு.

''எண் ஒடு நீண்டது அவ்வைந்து எனச் சுட்டு வருவிக்க; அவையும் இவற்றோடு கூடிய மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு அய்ந்து என்னும் தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டு எண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடி காத்தல் என்பதனைக் குடிப்பிறப்பும் அதனை ஒழுக்கத்தால் காத்தலும் எனப் பகுப்பாரும், கற்றறிதல் என்பதனைக் கற்ற லும் அறிதலும் எனப் பகுப்பாரும் உளர். அவர் 'உடன்' என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி என்பதனை ஆகு பெயராக்கியும் இடர்ப்படுப.''

—பரிமேலழகர்

இவ்வுரையைப் படித்த நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் அவர்கள், பரிமேலழகர் இக்குறளுக்குப் பிழைபட உரை செய்துள்ளார் எனக் கருதி, அவரை மறுப்பான் எண்ணித் தான் ஓர் உரையை எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள புது உரையை (இக்குறளுக்கு) உரசிப் பார்ப்ப துடன், அது தொடர்பாக இக்குறளுக்கு

உரிய உரை எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

'தைரியம், குடிப்பிறப்பின் மானம், கல்வி அறிவு, விடாமுயற்சி ஆகிய இவற் றோடு பஞ்ச தந்திரங்களின் அறிவும் சேர்ந்த பெருமையுள்ளதே சிறப்பான மந்திரிகளின் தகுதிகள்.'

'குடிகாத்தல் என்பது குடிமக்களைக் காப்பது அல்ல. அது அரசனுடைய வேலை. மந்திரி குடிகாத்தல் என்பது தன்னுடைய குடிப்பிறப்பின் பெருமையைக் காத்துக் கொள்வது' .... .... .... .... .... .... .... .... .... முன் குறளில் சொல்லப்பட்ட அருவினை என்பது, இதில் ''அய்ந்து அருவினை களுடன்'' என்று விரிக்கப்பட்டுள்ளது. அவை மந்திரிக்கு வேண்டிய பஞ்ச தந்திரங் கள்.

—நாமக்கல்லார் உரை.

இவ்வாறு உரை எழுதிய நாமக்கல்லார் ''வள்ளுவரின் உள்ளம்'' என்ற அவரது நூலில், இக்குறளுக்குரிய பரிமேலழகரின் உரையை மறுத்து நீண்ட விளக்கம் எழுதி யுள்ளார். இன்றியமையாப் பகுதிகளைப் பார்க்கலாம்.

''இந்தக் குறளில் 'ஐந்து' என்பது இங்கே தனித்து நிற்கிறது. .... ... ... ... இது யாரைப்பற்றிச் சொல்லப்படுகிறது? மந்திரியைப் பற்றி, மந்திரியின் இன்றியமை யாத திறமை எது? மந்திரி என்பவன் வெகு தந்திரியாக இருப்பதே அவன் சிறப்பு. இந்தச் சூழ்நிலையில் எந்த அய்ந்துடன் சிறந்தவனாவான்? அ து தா ன் அய்ந்து தந்திரம்—பஞ்ச தந்திரம் . . . . . ஆனால் இதைத்தான் வள்ளுவர் கருதினாரா என்ற அய்யம் எழலாம். ஆம்; இதைத்தான் திருவள்ளுவர் கருதியிருக்கிறார் என்பதை அடுத்த குறள் உறுதிப்படுத்துகிறது. அதில் பஞ்ச தந்திரங்களில் முக்கியமாக மூன்று தந்திரங்களைத் தமிழ்ச் சொல்லால் குறிப் பிடுகின்றார். அந்த அடுத்த குறள்

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு

என்பதாகும். (633)

மேலும் நாமக்கல்லார் கூறுகிறார்:

''இவர் பிரித்திருக்கிறபடியே இந்தக் குறளில் வன்கண், குடிகாத்தல், கற்றறிதல் ஆள்வினை என்ற நான்கே விஷயங்கள்தாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க, மேற்சொல்லிய அவ்வங்கங்கள் அய்ந் துடனே என்றால் அந்த அய்ந்து அங்கங்கள் எங்கே? ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு என்றதில் ஆள்வினை யோடு என்பதில் உள்ள 'ஒடு' என்ற சொல் ஆள்வினையை எதனோடு சேர்க்கிறது? அதன்பின் இருக்கிற ஐந்துடன் என்பதில் உள்ள 'உடன்' என்ற சொல் எதை எத னுடன் சேர்க்கிறது? ஒடு என்பது பயனற்ற அசைச்சொல் போல நீக்கப்பட்டிருக்கிறது. உடன் என்ற சொல் இக்குறளில் சொல்லப் பட்டுள்ள நான்கே விஷயங்களை 'அவ்வங் கங்கள் அய்ந்துடனே' என்று கூட்டுகின்றது. நான்கே நான்கைச் சுட்டிக்காட்டிவிட்டு அவ்வைந்தும் என்பது எப்படி பொருந்தும்? . . . . . இப்படி மிகவும் குழப்பமாக உரை செய்ய வேண்டியிருந்தது பரிமேலழகருக்கே சமாதானமில்லாமல் அந்தக் குழப்பத்தை தெளிவிப்பதுபோல் பத உரைக்குக் கீழே விசேட உரை எழுதி விளக்க முயல்கின்றார். அந்த விசேட உரை இந்தக் குழப்பத்தை இன்னும் அதிகமாகக் கலக்கி விடுகின்றது. . . . . .

இதை (விசேட உரையை) மிகவும் கவனித்துப் பார்த்தல் வேண்டும். இதில் இந்நான்கினையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது என்கிறார், மேற் கூறியவற்றோடு என்பது எவற்றோடு? அந்த மேற்கூறியவை ஒருகால் இக்குறளுக்கு மேற் குறளில் கூறப்பட்டவையாக இருக்குமோ என்றால், இதற்கு முந்திய குறளிலும் நான்கு விஷயங்கள்தாம் சொல்லப்படுகின்றன. இந்தக் குறளுக்கு முந்திய குறளாவது

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு

—என்பதாகும். (631)

இதில்; கருவி காலம் செய்கை செய்யும் அருவினை என்ற நான்கே சொல்லப்படு கின்றன. இந்த நான்கை மட்டும் வைத்துக் கொண்டு 'அய்ந்துடன்' என்று எப்படிக்

கூற முடியும், ஒரு கால் இந்தக் குறளி லுள்ள நான்கையும் ஒரே தொகையாக வைத்துக் கொண்டு, அடுத்த குறளில் உள்ள நான்கையும் தனித்தனியாக எண்ணிக் கொண்டு, 'இந்த நான்கினோடு மேற்கூறிய ஒன்றையும் கூட்டி, 'அய்ந்துடன்' என்று சொல்லுகிறாரோ என்று பார்த்தால், அது இன்னும் பொருத்தமற்றதாகிறது. ஏனெனில் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது என்பதிலுள்ள 'மேற்கூறியவற் றோடு' என்பது பன்மைச் சொல்லாக இருப்பதால், முன் குறளில் சொல்லப்பட்ட ன ஒரு தொகையாவது எப்படி?

இனி பரிமேலழகருக்கு முன்னாலிருந்த உரையாசிரியர்களில் சிலர் 'ஐந்து' என்று தொகையுண்டாகுவதற்காகக் குடிகாத்தல்-கற்றறிதல் என பிரித்திருக்கிறார்கள். இரண்டையும் பகாப்பதங்களாகத்தான் திருவள்ளுவர் வைத்திருக்கிறார் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அப்படிப் பகுப்பதானால் இந்த இரண்டில் எதைப் பகுப்பது? இரண்டையும் பகுக்கலாம். இரண்டுக்கும் ஒரே நியாயந்தான். அப்படி இரண்டையும் பகுத்தால் அய்ந்து என்பது ஆறு என்றல்லவா ஆகிவிடும்? ஆதலால் இந்தச் சொற்களைப் பகுக்கவே இட மில்லை.''

—வள்ளுவரின் உள்ளம்:

(பக்கங்கள் 30, 31, 32, 33.)

இவ்வளவு நீண்ட விளக்கம் எழுதிப் பரிமேலழகரை மறுத்துள்ள கவிஞரின் உரை சரியா? தவறா? என்று முடிவு கட்டுவதற்கு முன், இவர் பரிமேலழகரைச் சரியாகக் கவனித்துள்ளாரா என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

'கருவியும் ...அமைச்சு' என்ற முதல் குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் கருவியும்-என்ற சொல்லுக்கு (1) தானையும் (2) பொருளும் என்று உரை காணுகிறார். பின் அக்குறளில் தெளிவாகக் காணக்கிடக் கும் (3) காலமும் (4) செய்கையும் (5) செய் யும் அருவினையும் என்ற மூன்றையும் கூட்டி, 'ஐந்து' எனக் கணக்கிடுகிறார். இவ் வாறு அவர் கொண்ட ஐந்து என்ற கணக் கையே,

''வன்கண்....அமைச்சு'' என்ற இரண் டாவது குறளின் விசேட உரையில், ஐந்துடன் என்பதற்கு ''அவ்வைந்து எனச் சுட்டு வருவிக்க'', அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலாலும், அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறு தற்கும்'' என்று குறிப்பிடுகின்றார்.

அமைச்சு அதிகாரத்தின் இரண்டாவது குறளில் உள்ள ''ஐந்துடன்'' என்ற சொல் லுக்கு அவ்வதிகாரத்தின் முதல் குறளில் உள்ள ஐந்து அங்கங்கள் என்று பரிமேலழகர் பொருள் கொள்கிறார் என்பது தெளிவு.

கருவி என்பதற்குத் தானை பொருள் என்று இரண்டாகப் பிரித்துப் பொருள் கொண்டது ஏற்புடையதா? இல்லையா? என்பது வேறு. அதுபற்றிய கேள்வி இங்கே தேவையில்லை. இவ்வாறு பிரித்து மொத்தம் அய்ந்து என்று பரிமேலழகர் கணக்கிட்டதைக் கவிஞர் கவனித்துள்ளா ரா? இல்லையா? என்பதே இப்போதைய கேள்வி.

''இதில் கருவி, காலம், செய்கை, செய்யும் அருவினை என்ற நான்கே சொல் லப்படுகின்றன. இந்த நான்கை மட்டும் வைத்துக் கொண்டு, ''அய்ந்துடன்'' என்று எப்படிக் கூட்ட முடியும்''—என்று கவிஞர் கேட்பதை ஆராய்ந்தால்—கவிஞர் பரிமே லழகரைக் கூர்ந்து கவனிக்கவில்லை என்று தான் சொல்ல முடிகிறது.

இரண்டாவது குறளில் உள்ள 'ஐந் துடன்' என்பதற்கு, முதற் குறளில் இட மில்லை என்று கூறி மறுத்த கவிஞர், இந்த ஐந்து என்ற தொகை எண்ணுக்குரிய பொருளை எங்கே தேடுகிறார் என்று கவனிக்க வேண்டும்.

'அமைச்சனுக்கு இருக்க வேண்டிய ஐந்து தந்திரங்களில் (பஞ்சதந்திரங்களில்) மிக முக்கியமான மூன்றை இம்மூன்றாவது குறளில் (அமைச்சு அதிகாரத்தின் மூன்றா

வது குறள்) திருவள்ளுவர் குறிப்பிடுவதால் இரண்டாவது குறளில் உள்ள ஐந்து என்ற தொகைஎண் பஞ்ச தந்திரங்களைத்தான் குறிப்பிடுகின்றது. வடமொழி அறிவையும், வடநூல் அறிவையும் அறிந்திருந்த திரு வள்ளுவர் அமைச்சருக்கு வேண்டிய இந்த அய்ந்து தந்திரங்களையும் இக்குறளில் குறிப்பிட்டுள்ளார்'' என்று கூறுகிறார்.

இரண்டாவது குறளில் காணப்படும் அய்ந்து என்ற தொகை எண்ணுக்குரிய விளக்கத்தைப் பரிமேலழகர் முதற் குறளில் தேட, கவிஞர் மூன்றாம் குறளில் தேடியுள் ளார்.

இவ்விருவருமே 'அய்ந்து' என்ற எண் ணுக்குரிய விளக்கத்தை அது இடம் பெற் றுள்ள இரண்டாவது குறளில் தேடவில்லை என்பது மிகத் தெளிவு.

அமைச்சனுக்குரிய ஐந்து தந்திரங்கள் வடமொழி அறிவாலும், வடநூல் பயிற்சி யாலும் அறியப்படுவன என்று கூறுவது எவ்வாற்றானும் ஏற்புடையது அன்று. தமிழ் அமைச்சர்களுக்கு பிரித்தலும், பேணிக்கொளலும், பிரிந்தார்ப் பொருத்த லும் தெரியாதா?

மேலும், கற்றறிதல் என்பதற்குக் 'கல்வி அறிவு' என்று பொருள் கூறுகிறார் கவிஞர். எதைக் கற்று எதனை அறிகிறார் கள் அமைச்சர்கள். அவர்கள் கற்ற கல்வி யாலும் பெற்ற அறிவாலும் செய்வன, தவிர்வன அவர்கட்குத் தெரியாதா? அச் செய்வன தவிர்வனவற்றுள் இவர் கூறும் தந்திரங்கள் அடங்காதா என எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏதோ ஒரு வேகத்தில் பரிமேலழகரை மறுக்க வந்த கவிஞர், தானும் மறுப்புக்கு ஆளாகி விடுகிறார்.

மேலும், இவ்வாறு தொகை எண் வந்துள்ள மற்ற குறள்களுக்கு இவ்விருவரும் உரை எழுதுங்கால் அந்தந்தக் குறள்களின் முன்னும் பின்னும் உள்ள பாக்களில் சான்று தேடியிருக்கிறார்களா? என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. ஏன்? அந்தந்தக் குறட்பாக்களிலேயே தொகை எண்ணுக்குரிய வகைகள் கிடைத்து விட்டன. அப்படியானால் இந்தக் குறளில் மட்டும் கிடைக்கவில்லையா? ஆம்; கிடைக்க வில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். இது உண்மையா? என்பதுபற்றிப் பேசுமுன் தொகை எண்களைக் குறட்பாக்களில் வள்ளுவர் எவ்வாறு அமைத்துள்ளார் என் பதைக் கவனிக்க வேண்டும்.

27, 35, 43, 146, 360 ஆக ஐந்து பாக்களில் அறத்துப்பாலிலும், 381, 382, 383, 390, 391, 501, 513, 581, 625, 632, 674, 675, 682, 684, 743, 833, 939, 952, 953, 983, 992, 1022 ஆக இருபத்திரண்டு குறள்களில் பொருட்பாலி லும்,

1101ஆம் குறளில் காமத்துப்பாலிலும், ஆகக் கூடுதல் 28 குறட்பாக்களில் தொகை எண்களைத் திருவள்ளுவர் வெளிப்படையாகத் தெளிவாகச் சுட்டியுள்ளார்.

27 குறள்களில் பரிமேலழகருக்கோ, கவிஞருக்கோ, பிற உரையாசிரியர்கட்கோ சந்தேகம் இல்லை. ஒரே ஒரு குறளில், அது வும் அமைச்சு அதிகாரத்தின் இரண்டாவது குறளில் உள்ள ''ஐந்துடன்'' என்ற தொகை எண்ணில் சந்தேகம் ஏன்? இக்கேள்விக்கு விடை காண்பதற்குமுன் மேற்கொண்டு சில விளக்கங்களையும் பெறவேண்டும்.

1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு (632)
2. பிரித்தலும் பேணிக்கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு (633)
3. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு (634)

இக்குறட்பாக்களில் தொகை எண்கள் சுட்டப்படவில்லை. ஆனால் உம்மைகள் எண்ணிக்கையைச் சுட்டி நிற்பதை உணரலாம்.

தொகை எண்களும் குறிக்கப்பட்டு, உம்மையும் விரிந்து நிற்கும் குறட்பாக்களும் உண்டு.

1. ஒற்றும் உரைசான்றநூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவர் கண் (581)

2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார் (952)

தொகை எண்களும் இல்லாமல், உம்மையும் இல்லாமல், எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டி நிற்கும் குறள்கள் இரண்டு உள்ளன.

1. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல்
வேந்தவாம்
பண்புடைமை தாதுரைப்பார் பண்பு (681)

2. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன் (1109)

தொகை எண்கள் மட்டும் வெளிப்படச் சுட்டப்பட்டிருந்தாலும், உம்மை மட்டும் விரிந்து இருந்தாலும், எண்ணும் உம்மையும் கூறப்பட்டிருந்தாலும், எண்ணும் இல்லாமல் உம்மையும் இல்லாமல் இருந்தாலும் அந்தந்தக் குறள்களிலேயே எண்ணிக்கை காணக்கிடக்கிறது — கணக்கிடப்படுகிறது — என்பதைமட்டும் மேலேகண்ட குறட்பாக்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இதிலிருந்து தெரிவது என்ன எனில் திருவள்ளுவரைப் பொறுத்த மட்டில் தெளிவாகவே கூறி உள்ளார் என்பதும், குழப்பத்துக்கு ஆட்பட்டவர்கள் பரிமேலழகரும், கவிஞருமே என்பதும் ஆகும்.

இனி,

வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை என்ற நான்குடன், மேற்கொண்டு ஐந்து தன்மைகளையும் கொண்ட வன் அமைச்சனாவான் என்ற பொருளில் பரிமேலழகரும், கவிஞரும் ஒன்றுபடுவதைக் கூர்ந்து கவனித்தால் புலப்படும்.

1. தானை, பொருள், காலம், செய்கை, செய்யும் அருவினை, வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை என்ற ஒன்பது என்கிறார் பரிமேலழகர்.

2. வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை, தீய உறவுகளை நீக்குதல், நல்ல உறவுகளைப் பாதுகாத்தல், பகையானவர்களையும் நட்பாக்கிக் கொள்ளுதல், பொருள் கொடுத்துக் காரியங்களை முடித்துக் கொள்ளல், ஆராய்ந்து காரியம் செய்தல் என்ற ஒன்பது என்கிறார் கவிஞர்.

இவர்களோடு மேலும் இதேபோலச் சேருகின்ற உரையாசிரியர்களையும் பார்க்கலாம்.

3. தானை, பொருள், காலம், செய்யுமாறு, பலன் என்று சொல்லப்பட்ட அய்ந்துடன், வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை என்று பொருள் கூறுகிறார் கவிராச பண்டிதர்.

4. ஐம்பொறிகள் தூய்மையுடன் இந்த நான்கையும் கொண்டு என்கிறார் புலவர் குழந்தை.

இப்பெருமக்கள் நான்குடன், மேலும் ஐந்தைக் கூட்டி, ஒன்பதுடன் மாண்டது அமைச்சு என்று பொருள் காட்டுகின்றனர். இது வேடிக்கையாக உள்ளது.

இந்தக் குறளைத்தவிர வேறு ஏதாவது ஒரு குறளில் தொகையைக் குறிக்கும் எண்ணையும் கூட்டி இவர்கள் பொருள் கொண்டுள்ளனரா? இல்லை. பின் ஏன் இந்தக் குழப்பம் இவர்கட்கு வரவேண்டும். காரணம் பரிமேலழகரே.

பரிமேலழகரை வம்புக்கிழுத்து—இக் குறளுக்கு அவர் தவறான பொருள் சொல்லிவிட்டார் என்று கூறுவோர் இருவர். ஒருவர் கவிஞர்; மற்றொருவர் பாவாணர். உண்மையில் பரிமேலழகர் தவறு செய்துள்ளாரா? அவர் செய்து விட்டார் என்று கூறினாலும் அவர் அந்தத் தவறைச் செய்ய ஓர் அடிப்படையைக் கொண்டுள்ளார் என்பது மட்டும் தெரிகிறது. அந்த அடிப்படை ஏற்கக் கூடியதா? இல்லையா? என்பது வேறு. ஆனால் அந்த அடிப்படை எது என்பது மட்டும் ஆராய வேண்டிய ஒன்றே.

தொகை எண்கள் குறிப்பிடப்பட்டுள்ள குறட்பாக்களைப் பார்த்து வரும்போது, அவ்வெண்கட்குமுன் 'ஒடு' என்ற எண்ணிடைச் சொல்லைத் தன்னகத்தே கொண்டுள்ள குறட்பாக்கள் மூன்றே.

ஆய்வுக்குரிய ''வன்கண் . . . . . அமைச்சு'' என்ற இந்தப் பாவுடன்

1. பொருள் கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் (675)

2. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் (983)

ஆகிய இவ்விரண்டையும் நோக்க வேண்டும். இவ்விரண்டு குறளிலும் ஒடு ஒவ்வொரு சொல்லுடன் சென்று சேருகிறது.

அதாவது பொருளோடு, கருவியோடு, காலத்தொடு என்று, ஒடு கூடுதல் எண்ணைக் குறிக்கும்.

ஆனால் ''வன்கண் . . . அமைச்சு'' என்ற குறளில் ஆள்வினையொடு ஐந்தும் மாண்டது அமைச்சு என்றிருந்தால் வம்பே வந்திருக்காது. பதிலாக ஐந்துடன் என்று உள்ளது. இந்த 'உடன்' என்ற சொல்லே பரிமேலழகரைச் சிந்திக்கத் தூண்டியிருக்க வேண்டும்.

ஒரெழுத்தாயினும், சொல்லாயினும் ஒதுக்கி விடாமல் அவற்றிற்கு விசேட உரையோ, இலக்கண அமைதியோ கூறிச் செல்வது பரிமேலழகரின் உரைப்பாங்கு என்பதை நினைவில் கொண்டு அவரை அணுக வேண்டும்.

'உடன்' என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், 'குடி' என்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப'' என்ற விசேட உரையிலிருந்து, இவருக்கு 'உடன்' என்பது முற்றும்மை என்ற பொருளில் வருவது உடன்பாடில்லை எனத் தெரிகிறது. அப்படியானால் 'உடன்' என்பதற்கு இவர் என்ன பொருள் கொண்டிருக்க வேண்டும்.

இதற்கு இவர் நேரிடையாக இலக்கண அமைதி கூறவில்லையாயினும், ''அவையும் இவற்றோடு மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கும்-அவ்வைந்து எனச் சுட்டு வருவிக்க'' என்பதில் இருந்து-இவ் 'உடன்' என்ற இடைச் சொல்லைப் பரிமேலழகர் மூன்றாம் வேற்றுமைச் சொல் உருபாகக் கொண்டுள்ளார் என்பது தெளிவு. அப்படியானால் சரி—இந்தச் சொல் உருவை இந்தக் குறளிலேயே ஏற்றிப் பொருள் கொள்ளக் கூடாதா என்று யோசிக்கும்போது, 'ஒடு' என்ற எண்ணிடைச் சொல் அவருக்கு இடர்ப்பாடாக வந்து நிற்பதும் புலப்படுகிறது. 'ஒடு' மட்டுமே இருந்திருந்தால் மற்றக் குறள்களுக்குக் கூறியதுபோல பொருள் கூறியிருக்கலாம். இந்த ஒடு என்பதோடு உடன் என்பதும் சேர்ந்ததால் அதற்கென ஒரு விசேடத்தை அவர் கற்பித்துக் கொண்டுள்ளார்.

இந்த விளக்கத்தைக் கொண்டு பார்க்கும்போது பரிமேலழகர் தன் உரைக்கு ஒரு நியாயத்தைக் கற்பித்துக் கொண்டுள்ளார் என்பது புலப்படும். அவர் கூறும் நியாயம் ஒப்புக்கொள்ளக் கூடியதா? இல்லையா? என்பது வேறு. ஆனால் நியாயப்படுத்தி உள்ளார் என்பது மட்டும் தெளிவு.

பரிமேலழகர் நியாயம் ஏற்புடையதா? திருவள்ளுவரைக் கொண்டே இதற்கு விடை காண வேண்டும். அவர் எழுதியுள்ள எல்லாக் குறள்களிலும் அவர் குறித்துள்ள தொகைகள் அந்தந்தக் குறளிலேயே இருப்பதை நோக்க இந்த ஐந்தும் இந்தக் குறளிலேயே இருந்தால்தான் நியாயம். மேலும் ''உம்மை, என்று, என, ஒடு, என்னும் இந்நான்கெண்ணும் அஃதின்றியும் இயலும்'' என்பதால், இக்குறளில் எண் ஒடு தொகை பெறவில்லை என்பதாலும், ஐந்துடனும் என முற்றும்மைப் பொருள் கொள்வதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லையாதலாலும் பரிமேலழகர் உரை ஏற்புடையது அன்று.

கவிஞரின் உரையோ-எந்தவித இலக்கண அமைதியும் கூறப்படாமல் கற்பிதமாகக் கூறப்பட்டுள்ளதால் ஏற்கத் தக்கது அன்று.

இவர்கள் உரை ஏற்கத்தக்கன அல்ல என்று ஒதுக்கியபின், வேறு எந்த உரை

ஏற்புடையது என்ற கேள்வி எழுவது நியாயமே! அதற்கான விடையைக் கவனிக்கலாம்.

இந்த இரண்டாவது குறளில் உள்ள 'ஐந்துடன்' என்பதற்கு, இக்குறளிலேயே விடைகாண முற்பட்ட உரையாசிரியர்கள் பலர். சிலரைக் காண்போம்:

1. அஞ்சாமை, குடிகாத்தல், இந்திரியங்களைக் காத்தல், நூல் முகத்தான் அறிதல், முயற்சி இவை ஐந்து.

—மணக்குடவர்

2. அஞ்சாமை, குடிப்பிறத்தல், இந்திரியங்களைக் காத்தல், நூல் முகத்தான் அறிதல், முயற்சி.

—பரிப்பெருமாள்

3. தறுகண், ஆண்மை, குடிகாத்தல், கல்வி, அறிவுடைமை, உத்தியோகம் ஆக இவை ஐந்து.

—பரிதியார்

4. தறுகண்மை, குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதல், காத்தலாகிய நாடு காவல், காடு காவல், நூல் கற்று உணர்ந்து அறிதல், ஆள்வினை.

—காலிங்கர்

5. அஞ்சாமை, குடிகாத்தல், அற நூல்களைக் கற்றறிதல், முயற்சியுடன் ஐம் பொறித் தூய்மை.

—புலவர் குழந்தை

6. அஞ்சாமை, சிறந்த குடிப்பிறப்பு, குடிகளைக் காத்தல், கல்வி அறிவு, முயற்சி

—சாமி. சிதம்பரனார்

7. அறிவுடையன் ஆதல், குடிமக்களுக்கு தீமை வராமல் பாதுகாத்தல், நூலறிவோடு நுண்ணறிவு பெற்றிருத்தல், செயல் ஆற்றும் திறமை.

—ஜி. வரதராஜன்

8. குடி-நற்குடிப்பிறத்தல். குடி என்பது வேளாண்குடி காத்தல்-குடிகளைக் காத்தல்

—பாவாணர்

இவ்வுரையாசிரியர்களில் ஒருவர்கூட 'வன்கண்', 'ஆள்வினை' என்பதில் மாறுபடவில்லை. குடிகாத்தல், கற்றறிதல் ஆகிய இவ்விரண்டிலேதான் வேறுபடுகிறார்கள்.

இவ்விரண்டையும் பிரிக்கக் கூடாது. இவை பகாப்பதம் என்கிறார் நாமக்கல்லார் ஆனால் பல உரையாசிரியர்கள் இவ்விரண்டு சொற்களில் ஏதேனும் ஒன்றைப் பிரிக்கிறார்கள்.

முதலில் உள்ள குடிகாத்தலை எடுத்துக் கொள்வோம்.

குடிகாத்தலும், இந்திரியங்களைக் காத்தலும் —மணக்குடவர்

குடிப்பிறத்தலும் இந்திரியங்களைக் காத்தலும் —பரிப்பெருமாள்

குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதல், நாடுகாத்தல் காடுகாத்தல்

—காலிங்கர்

நற்குடிப்பிறத்தல்-குடிகளைக் காத்தல்

—பாவாணர்

இவ்வுரைகளில் உள்ள 'இந்திரியங்களைக் காத்தல்' என்பது குழந்தை சொல்லும் ஐம் பொறித் தூய்மை எனக் கொண்டால், அது அமைச்சர்களுக்கு மட்டுமே உரியது அல்ல; பொதுவாக எல்லாருக்குமே அது திருவள்ளுவரால் வேண்டப்படுகிறது.

குடிப்பிறத்தல் என்பதற்கும் குடிகளைக் காத்தல் என்பதற்கும் இவர்கள் காட்டும் விளக்கங்கள் போதியவை ஆகா. குடிப் பிறத்தல் என்றால் என்ன? உயர் குடிப்பிறத்தலா? திருவள்ளுவரால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லையே! எக்குடியை உயர் குடி என்றும் நற்குடி என்றும் கொள்வது? ''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்'' ''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்'' என்றும், ''வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவனும் அவன்கண் படும்'' என்பதும் தானே தமிழ் வழக்கு.

பாவாணர் 'வேளாண்குடிப் பிறத்தல்' என்கிறார். அதற்குச் சான்றாக ஔவை

யார் பெயரில் உள்ள ஒரு தனிப் பாடலை ஆதாரமாகக் கொள்கிறார். இது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.

'குடிகாத்தல் அரசன் வேலையே தவிர அமைச்சன் வேலை இல்லை' என்கிறார் நாமக்கல்லார். ஓர் அமைச்சனுக்கு இன்றியமையாப் பணிகளில் குடிகளைக் காத்தலும் ஒன்றாகும். நேரிடையாகச் செங்கோல் ஓச்சிக் காத்தலே காத்தல் அல்ல. அதற்குக் காரணமாக அமைதலும் காத்தலோடு ஒக்குமே.

குடிகாத்தலை இரண்டாகப் பிரிப்போர் கற்றறிதலை இரண்டாகப் பிரிக்காத தற்குக் காட்டும் காரணம் என்ன?

கற்றலே அறிதலாதலின் அது இரண்டாகாமை அறிக
—பாவாணர்

என்கின்றனர்.

இனி,

கற்றறிதலை எடுத்துக் கொள்வோம்
கல்வி, அறிவுடைமை
நூலறிவோடு நுண்ணறிவு பெறுதல்
கற்று அறிதல்

எனப் பிரிக்கப்பட்டு கற்றலும் அறிதலும் எனப் பொருள்படும். எதைக் கற்றல்?

அடிப்படைக் கல்வியைக் கற்ற ஒருவனே அமைச்சனாக முடியும். அதற்கு மேலும் அமைச்சுத் தொழிலுக்குரிய அற நூல்களையும் மற்ற நூல்களையும் கற்றல். எதை அறிதல்? செய்வன தவிர்வன அறிதல்.

நீதி நூல்களையும் அமைச்சுத் தொழிலுக்கான அனைத்தையும் கற்றல் என்ற போதே, செய்வன தவிர்வனவாகியவற்றை ஒருவன் அறிந்து கொள்வானே! தனியாக அறிதல் என்று ஒன்று தேவையில்லையே! என்று இதனைப் பிரிப்போர்க்குச் சிலர் விடையிறுப்பர். ஓரளவுக்கு நியாயமே!

இவர்கள் குடிகாத்தலைப் பிரிப்போரை எவ்வாறு மறுக்கின்றனர் எனில்,

குடிகாத்தலில், இந்திரியங்களைக் காத்தல் எங்கே இருக்கிறது? வலியக் கொண்டு வந்து சொல்வதாக உள்ளதே? என்கின்றனர்.

குடி என்பதற்குச் சமாதானம் சரியில்லை என்பதாகக் கூறுகின்றனர். இனி, குடிகாத்தல்-கற்றறிதல் இவ்விரண்டையும் பிரிக்கும்போது திருவள்ளுவரை நாம் பார்க்க வேண்டும். அவர் நம்மைப் பார்க்க வேண்டும்.

குடிகாத்தல்-குடியைக் காத்தல் என்றே விரியும். அது இரண்டாம் வேற்றுமைப் பொருள்படும். எந்தக் குடியை என்பது வேறு. குடியும் காத்தலும்-என்று உம்மை விரி கொடுத்துப் பொருள் கொண்டால் சிறக்கவில்லை. மாறாக வேறு பொருள் தந்தாலும் தரலாம்.

ஆனால் கற்றறிதலை—கற்றலை அறிதல் என்று பிரிப்பதைவிடக் கற்றலும் அறிதலும் என உம்மை கொடுத்து பிரித்தால் பொருள் சிறக்கும்.

குடியைக் காத்தல் என்பது ஒரு சொல் நீர்மைத்து; கற்றலும் அறிதலும் என்பது இரண்டு சொற்கள் இணைவன.

கற்றல் வேறு; அறிதல் வேறு. கற்றவன் எல்லாம், அறிவுடையவன் அல்லன். அறிவுடையவன் எல்லாம் கற்றவன் அல்லன். கற்றல் என்பது நூல் கல்வியைக் குறிக்கும்; அறிதல் என்பது நூல் கல்விக்கு மேற்பட்ட ஒரு சிறப்பு; நூல் கல்வியுடன் தன் உண்மை அறிவையும் கொண்டு செய்வன தவிர்வன அறிதல். இதனால் அன்றோ திருவள்ளுவரும் கல்வி, கல்லாமை, கேள்வி என்று அதிகாரங்களை அமைத்த பின்னர் அறிவுடைமை என்று ஓர் அதிகாரத்தைத் தனியே வைத்தார். இந்த அறிவுடைமை அதிகாரத்துக்குத் தோற்றுவாய் சொல்ல வந்த பரிதியார் ''அறிவுடைமையாவது கல்வியினும், கேள்வியினும் பெரிது என்றவாறு''—என மிக அருமையாகச் சொல்லிச்செல்கிறார். இந்த அறிவுடைமை அதிகாரத்தை ஊன்றி நோக்கினால் அது நூல் கல்வி பற்றிப் பேசாது—உண்மை அறிவு பற்றிப் பேசுகிறது என்பதை எளிதில் உணரலாம்.

அறிவாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணர்தல் என்கிறார்கள் பெருமக்கள்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் உள்ள ''பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு உருவு நிறுத்த''—என்ற மெய்ப்பாட்டியல் சூத்திரத்திற்கு உரை எழுத வந்த பேராசிரியர், ''உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினாராயினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம் என்பது என்னை? ''வன்கண் . . . அமைச்சு'' என்புழி, 'கற்றறிதல்' என்பதனை இரண்டாக்கி ஐந்து என்பவாகலில் என்றது காண்க''—என எழுதிச் சென்றுள்ளார்.

கற்றறிதல் என்ற சொல்லைப் பிரிப்போரிடையே வேறுபாடு கிடையாது. கற்றலும்-அறிதலும் என்றே பிரிப்பர். வேண்டுமானால் சில சொல் அலங்காரங்கள் முன்னும் பின்னும் இருக்கலாம்.

ஆனால் குடிகாத்தல் என்ற சொல்லைப் பிரிக்கும் உரைகாரர்களிடையே வேறுபாடு அதிகம். விளக்கம் குறைவு.

இதுகாறும் மேலே கூறிவந்த செய்திகளைத் தொகுத்துப் பார்க்குங்கால் அமைச்சு அதிகாரத்தின் இரண்டாவது குறளில் கூறப்பட்டுள்ள ''அந்த ஐந்து''—எவை—என்ற கேள்விக்கு, பரிமேலழகரும், நாமக்கல்லாரும், அவ்வதிகாரத்தின் முதல் குறளிலும், மூன்றாங் குறளிலும் விடை காணச் சென்று சொன்ன விளக்கங்கள் ஏற்புடையன அல்ல என்பது தெளிவாகும்.

அதே குறளில் ஐந்து எவை எனத் தேடப்புகுந்து, குடிப்பிறப்பும், காத்தலும் என்று குடிப்பிறப்பை இரண்டாக்கி, மற்ற மூன்றுடன் கூட்டி ஐந்து என்று சொன்னவர்கள் உரை தெளிவில்லை என்பதுடன், திருவள்ளுவர் நூலிலும் வழக்கு இல்லை, சான்றோர் வழக்கிலும் சான்றில்லை என்று நிறுவப்பட்டது.

கற்றறிதலைப் பிரித்தலே பொருள் புலப்பாடு உடையது என்றும், திருக்குறள் அந்த விளக்கத்திற்கு இடம் அளிக்கின்றது என்றும், பேராசிரியர் போன்ற சான்றோர் நூல்களில் சான்று உள்ளது என்றும் கூறி—''அந்த அய்ந்து எவை எனில் வன்கண், குடிகாத்தல், கல்வி, அறிவு, ஆள்வினை ஆகியவையே அவை என்பது விளக்கப்பட்டது. இதனையே பரிதியார் மிக அழகாகக் கூறியுள்ளார். ஆக இக்குறளுக்குப் பரிதியார் கொண்ட உரையே சாலப் பொருத்தமாக அமைவது தெளிவு.

# "சொல்லாற்றல் உத்தி"

பேராசிரியர் கி. கோதண்டபாணி,
எம். ஏ., பி. ஓ. எல்.,

இக் கட்டுரையாளர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரத்தூர் கிராமத்தில் 13-8-1915-இல் பிறந்தார்; பதினோராண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து, தனி முறையில் பயின்று, 1957இல் பி.ஓ.எல். (ஆனர்சு) பட்டம் பெற்றார்; 'இலக்கிய விருந்து, குமர வெண்பா' ஆகிய இரு நூல்களை இயற்றியுள்ளார். புல்லையந்தாதி, கஞ்சன் அம்மானை என்ற இரு நூல்களைப் பதிப்பித்துள்ளார். பல ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழ்ப்பொழில், திருக்கோயில், ஈழ நாட்டுச் வெநேசன் போன்ற இதழ்களில் எழுதி வெளியிட்டுள்ளார். கடந்த இருபத்தாறு ஆண்டுகளாகப் பூண்டிப் புட்பம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

சிறந்த கவியரசர்கள் ஆக்கியளித்த அமர காவியங்கள் செஞ்சொற் கவிதைத் தொகுப்பாய் இம்மண்ணகத்தே நின்று நிலவுதல் கண்கூடு. ஒரு காவியம் அழியா நிலைபேறு எய்தலைப் போலவே, சிறு சிறு தனிக் கவிதைகள்கூட அழியாக் கவிதைகளாய்க் காலத்தை வென்று நிற்பதனைக் காண்கிறோம். பல இலக்கியங்களும், செய்யுட்களும் நிலைத்து நிற்கும் தகுதியற்று அழிந்து படுவதனையும் அறிகின்றோம். ஆகவே காலத்தை வென்று நிற்கவேண்டின் கவிதைகளோ காவியங்களோ சிறந்த கருத்தாழம், ஆற்றல், திட்ப நுட்பம் செறிந்து விளங்கி ஒளிர வேண்டும் எனக் கவிஞர்கள் சில உத்திகளை இடம் நோக்கிக் கையாளுகின்றனர். அவ்வாறு பொருட்செறிவு, திட்பநுட்பம், ஆழமுடைமை, ஓசையுடைத்தாதல் முதலிய தனித்தன்மைகளைச் சில கவிதைகள் பெற்று விளங்குவதனை இனி ஆய்வோம்.

நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் சொல்லதிகாரப் பொதுவியலில் ''எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி இசைத் திரிபாற் றெளி வெய்து மென்ப'' என்ற நூற்பாவில், எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர் மொழிகள் குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும், முதலும் தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே துணியப்படும் என்று சொல்லுவர் புலவர்' என்று

30459

விளக்கமுறக் கவிதைப் பொருட்பாட்டினைப் புலப்படுத்தியுள்ளார். எனவே, ஒரே சொல் பல பொருள்களைத் தருவது எழுத்துக்களின் பிரிப்பினாலும், கூட்டலாலும் எனப் பொருள்பட்டு நிற்றலை அறிகின்றோம். இதற்கு எடுத்துக்காட்டாக 'செம் பொன் பதின்றொடி, நாகன் றேவன் போத்து, குன்றேறுமா, குறும்பரம்பு' என்ற நான்கு சொற்களைக் காட்டியுள்ளார். இதனை, செம்பொன்+பதின்றொடி என்று பிரித்து இசையறுத்தால் செம்பொன் பத்துப் பலம் என்ற பொருளும், செம்பு+ ஒன்பதின்றொடி எனப் பிரிப்பின் செம்பு ஒன்பது பலம் என்ற வேறு பொருளும் தந்து நிற்பதனை அறியலாம்.

இவ்வாறு இசையறுத்துக் (பிரித்து) கூறிப் பொருள் காண்டல் மரபென்பது நன்னூலார் கூற்றிலிருந்து தெளியலாம். இம்மரபினைப் பின்பற்றிப் பல கவிஞர்கள் தம் இலக்கியங்களில் கவிதை யாத்துள்ள நிலையினைக் காண்போம். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் தன் திறனை இம் முறையிலும் புலப்படுத்தியுள்ள நிலையினைக் கீழ் வரும் கவிதை மூலம் அறியலாம். வீரமாநகர் வேந்தனாகிய இராவணன்பால் அவனது தங்கையாகிய சூர்ப்பநகை சீதையின் எழில் நலத்தினை அவனுக்கு எடுத்துக் கூறி, அவளைப் பெற்றால் அவன் பெறும் உயர்வினையும், சிறப்பினையும் உணர்த்துகின்றாள்; அவனது அடங்கிக்கிடந்த காம உணர்வைத் தூண்டி விடுகின்றாள். அப்போது அவள் கூற்றில் மங்கலப் பொருளும், அமங்கலப் பொருளும் விரவி நிற்றலை உணரலாம்.

இந்திரன் சசியைப் பெற்றான்
இருமூன்று வதனத்தோன் தன்
தந்தையும் உமையைப் பெற்றான்
தாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்
தேவியைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கில் நன்மை
அவர்க்கிலை உமக்கே ஐயா.

என்பது பாடல். இந்திரன் சசி என்னும் இந்திராணியை மனை விளக்காகப் பெற்றுள்ளான். ஆறுமுகச் செவ்வேள் தந்தையாகிய சிவபெருமான் உமாதேவியினையும், தாமரைச் செங்கணான் ஆகிய திருமால் திருமகள் ஆகிய இலக்குமியினையும் மனைக் கிழத்திகளாகப் பெற்றுள்ளனர். அதுபோலவே நீயும் சீதையை உரிமைக் கிழத்தியாகப் பெற்றால் அவர்கட்கில்லாத பெருமையும் புகழும் உன்னைச் சாரும் என்று ஒரு பொருள் கொள்ளக் கிடக்கிறது பாவின் அமைப்பு. மற்றுமொரு பொருளும் இசைத்துப் பொருள் காணும்போது எதிரிடையாக அமைந்துள்ளதனையும் அறியலாம். 'அந்தரம் பார்க்கில் நன்மை அவர்க்கு, உமக்கு இல்லை' எனப் பிரிக்கும் போது, அவர்கட்கு நன்மையும் உமக்குத் தீமையும் நேரவுள்ளது' என்ற வேறு பொருளும் அமைந்துள்ளதனை அறியலாம்.

அடுத்து, சிவனடி போற்றும் திருத்தொண்டர்களின் வரலாற்றுக் காவியமாகிய திருத்தொண்டர் புராணம் இயற்றிய சேக்கிழார் கூற்றிலிருந்து ஒரு செய்யுளை ஆய்வோம். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் மேவப் பெற்றவர் மெய்ப் பொருள் நாயனார் என்னும் மெய்யடியார். இவரை அமரில் வென்று ஆற்றலைக் காட்ட எண்ணினான் முத்தநாதன் எனும் சிறுமதியாளன். பலமுறை தொடுத்த போரில் முத்தநாதன் தோல்வியை எய்திப் பரிபவப் பட்டுப் போனான். ஆகலின், அவரை இகலால் வெல்லாது சூழ்ச்சியால் வெல்லத் தலைப்பட்டான். மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக் கையிலே புத்தகக் கவளி ஏந்தி ஒளியுருவோடு மெய்ப் பொருள் அரண்மனைக்குச் சென்றான். அக்கமும், திருநீறும் அணிந்தாரைத் தடையின்றி விடுக்க முன்னரே தன் பணியாட் கட்கு விதித்திருந்த ஆணையால் முத்தநாதன் தடையின்றி வாயிலில் அனுமதிக்கப் பட்டான். எனினும், தத்தன் எனும் காவலன் அவன் செல்லும்போது ஐயுற்று அவனைப் பின் தொடர்ந்தான். சென்ற காலமோ இரவுப்போது. மன்னர் மெய்ப் பொருளும் அவரது மனைக் கிழத்தியாரும் தனியே ஒருங்கமர்ந்து உரையாடி மகிழ்ந்திருந்தனர். அவ்வமயம் முத்தநாதன் போலிவேடம் புனைந்து செல்லவே அடி

யாரை இருவரும் ஒருங்கு வழிபட்டனர். இதனைக் கண்ணுற்ற வஞ்ச மனத்தானாகிய முத்தநாதன், ''யான் உலகிலில்லாத சிவாகமம் ஒன்றினை நினக்கு உபதேசிக்கக் கொண்டு வந்துள்ளேன். இதனை யான் நினக்கு உபதேசிப்பதாகில் நீயும் நானும் தனியிடத்தே இருத்தல் வேண்டும். அரசியாரை அந்தப்புரம் அனுப்பி நீ தனியே அமர்ந்து என்பால் இச் சிவாகமத்தைக் கேட்டல் வேண்டும்'' என்று நயப்புரை கூறினான்.

பேறெனக் கிதன் மேலுண்டோ
பிரானருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித்
தருள்செய வேண்டும் என்ன
நாறு பூங்கோதை மாது
தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்
என்றவன் விளம்ப வேந்தன்.

இச் செய்யுளின் பின்னிரண்டடிகள் சிந்திக்கற்பாலனவாம். 'மணம் பொருந்திய பூவணிந்த குழலினையுடைய அரசமாதேவியார் நீங்கியிருக்க, நாமிருவரும் தனியிடத்தே யிருந்து இச்சிவாகமம் பயிலவேண்டும் எனப் பொருள் தருகின்றன். இதனையே வேறுவிதமாக 'நாறுபூங்கோதை+மாது தவிரவே நானும் நீயும் வேறிடத்திருத்தல் வேண்டும்' என்று இசையமைக்கும்போது ''மணமிக்க மலரை யிம்மாது நீங்குமாறு நாம் தனியிடத்தே இருக்கல் வேண்டும்' எனவும் பொருள் புலப்பாடு எய்துகிறது. நெற்றியில் திலகம் வைப்பதும், குழலில் மலர்சூடலும் வாழ்வாகியாராகிய மங்கலப் பெண்களின் இலக்கணங்கள். அவை நீங்கினால் மங்கலமகளிரா யில்லாது அமங்கலியாய்க் காட்சியளிப்பர். அடுத்து முத்தநாதன் மெய்ப்பொருளைக் கொல்ல சமயந்திக்கும் நிலையினை முன்னரே விளக்கிக் காட்டும் உன்பாதமாகவும் இவ்வடிகள் அமைந்து விடுவதனை நாம் உணர முடிகின்றது. ஏனெனில் சூழ்ச்சியாக உலகிலில்லாத சிவாகம உபதேசம் எனத் தனியிடத் தழைத்து, மெய்ப்பொருள் ஆழ்ந்த அன்பில் எளியராய் இருக்கும்போது, புத்தகக் கவளி அவிழ்ப்பான் போல் கருவி எடுத்து அவரைக் கொலை செய்து விடுகின்றான். அக் கொலை நிலையை முன்னரே அறிந்து கூறுவதுபோல அமைந்த செய்யுள் பொருள் நிலையினை உணர முடிகின்றது.

இதனையடுத்துக் காவியங்களில் அமங்கலச் செயலையும் எவ்வாறு மங்கலமாகச் சொல்லுந் திறன் கவிஞர்கட்குக் கைவந்த கலையாய் ஒளிர்கின்றது என்பதனைக் காணலாம். செந்நாக் கவிஞராகிய சேக்கிழார் இகலால் வெல்லாது சூதால் வெல்லத் தலைப்பட்ட முத்தநாதன் மெய்ப் பொருளின்பால் மேற்கொண்ட செயல்களை முறைப்படுத்திக் கூறும்போது, முதற் கண் குறிப்பிடும் அடியே ''மை பொதி விளக்கேயன்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப் பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தநாதன்'' என்பதாகும். இதற்கு முன்னர் அவன் பொய் வேடத்தை விளக்கி விட்டார். உடலெல்லாம் திருநீறு பூசி, சடாமுடி தரித்து, அக்க மணியாகிய உருத்திராக்கமணிந்து காட்சியளிக்கும் இவனது புறத்தோற்றம் விளக்குப் போன்றதே என விளக்குகின்றார். உள்ளத்தே மெய்ப் பொருளைக் கொல்ல வேண்டும் எனும் நச்சுப்புகை படிந்துவிட்டது என்பதனை இவ்வாறு விளக்கிக் காட்டுகின்றார். மேலும் இவ்வாறு சென்றவன் எண்ணிய அடாத கொலைச் செயலைக் கூறும்போது, சேக்கிழார் 'செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவலூரிற் சேர்வான்' எனக் கூறுகின்றார். கொடுஞ்செயலைச் சொல்லவும் அஞ்சும் சேக்கிழார் உள்ளம் வெள்ளிடை மலையெனத் தோற்றம் பெறுகின்றது. 'பின், முத்தநாதன் மெய்ப்பொருள்பால் சென்று தான் எண்ணிய செயலை முற்ற முடித்தேவிட்டான்' என்று கூறும்போது, 'தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய' எனக் கூறுகின்றார். முத்தநாதனின் வஞ்சகக் கொலைச் செயலுக்கு மெய்ப் பொருள் இலக்கானார் என்று கூறும் நிலையினை மறைத்துக் கிளக்கும் திறன் போற்றற்குரியதாய் விளங்குகின்றது.

புலவர்கள் மரபு வழி ஒழுகும் நெறிப் பாடுடையவர்கள்.

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே

என்று மரபு பற்றி இலக்கணம் விளக்கிக் கூறும். இவ்வாறு மரபு வழுவாது பாடும் நல்லியற் புலவர்கள் மரபினை மாற்றிக் கூறிச் சிறந்த பொருள் புலப்பாட்டினைத் தோற்றி விடுவர். இதனை ஒரு சிறந்த உத்தியாகவும் கவிதை சிறக்கக் கையாண்டுள்ளனர். இங்ஙனம் மரபு மாற்றிக் கூறும்போது ஆழ்பொருள் தோன்றி நிற்றலை அகழ்ந்து நோக்கின் உணரலாம். வள்ளுவர், அளவோடு உண்பானின் சிறப்பினையும் அளவிறந்து உண்பானின் இழிவினையும் சுட்டிக் கூற விழைகின்றார். அளவோடு உண்பான் இன்பமுற்று நலமுடன் வாழ்வான் எனவும், அளவின்றி உண்பான் (கழிபேரிரையான்) நோய்க்கு இடங்கொடுத்து நொந்து வாழ்வான் என்றும் கூற விரும்புகின்றவர், பாவில் மரபினை மாற்றி ஒரு புதிய உத்தியினைப் புகுத்திவிடுகின்றார்.

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

மனிதன் உண்பதனை உணவென்றும் மாக்களாகிய விலங்குகள் உண்பதனை 'இரையென்றும்' வழங்குவதே மரபு. அம் மரபினை மாற்றி மிகையாக உண்பவனை ''பேரிரையாளன்'' எனக் கூறி எள்ளற் குறிப்பினைப் புலனாகவைத்த திறம் போற்றற்குரியது.

இதே உத்தியினை, அடுத்துச் சேக்கிழார் கையாண்ட திறனையும் நோக்குவோம். நாவரசரின் தமக்கையராகிய திலகவதியாரைக் கலிப்பகையார்க்கு மணம் பேசி முடித்துவிட்டனர். கலிப்பகையாரோ மன்னவர்க்காய்த் தண்டெடுத்து வடபுலம் சென்று போரில் மாண்டுவிடடார். இச் செய்தியினைக் கேட்ட திலகவதியார் துணுக்குற்றார். தனக்கு வரித்த கணவனாகிய கலிப்பகையார் சென்ற வழியே தானும் செல்வேன் எனத் திலகவதியார் உறுதி பூண்டு உயிர்நீக்கத் தலைப்பட்டார். இவண் இந் நிகழ்ச்சியினைக் கூறும் சேக்கிழார்,

எந்தையும் எம்அனையும் அவர்க்கெனைக் கொடுக்க
இசைந்தார்கள்
அந்த முறையா லவர்க்கே உரியது நான் ஆதலினால்
இந்த உயிர் அவருயிரோ டிசைவிப்பன் எனத்துணிய
வந்தவர்தம் அடியிணைமேல் மருணீக்கி யார்
விழுந்தார்

(சேக்-திருநாவு-37)

இப்பாடல் ''கலிப்பகையார் இறந்து அவரது உரிமைப் பொருளாக நான் இருக்கின்றேன்; 'என் உயிரை அவரோடு மாய்விப்பன்' எனத் துணிந்தாள் எனப் பொருள் தருகின்றது. 'அந்த முறையால் அவர்க்கே உரியவள் நான்'' என்று இருப்பதே மரபு. இந்த முறையினை மாற்றி உயர்திணைக்குப் பதில் அஃறிணை பெய்து ''உரியது நான்'' என மரபு மாற்றிவிட்டார். இதனால் கலிப்பகையார் இறக்கும் வரை திலகவதியார் உடல், உயிர் நிலை பெற்ற உடலாக இருந்தது. இறந்த செய்தி எட்டிய வுடன் 'உயிர் நீங்கிய உடலாக உள்ளேன்' அதாவது 'நடைப்பிணமாக உள்ளேன்' எனக் கூறித் தன் எளிய நிலையைக் கூறும் தன்மை மிகவும் அவலச் சுவையினைத் தோற்றுவிப்பதாய் உள்ளது.

மேலும் செய்தியை விளக்கிக் கூறும் போது மற்றவர்கள் உளங்கொள்ளுமாறு சொல்லல் வேண்டும். அதனையே வள்ளுவர் 'செலச் சொல்லல்' என்று கூறுவார். சொல்லுகின்ற அரிய பொருளையும் பிறர் விரும்பிக் கேட்குமாறு எளிய பொருளாக ஆக்கி அதனையும் பிறர் உளங் கொள்ளுமாறு சொல்லுகின்ற திறமே செலச் சொல்லும் திறமாகும்.

எண் பொருளவாகச் செலச் சொல்லி

(குறள் அறிவுடைமை, 4)

என்பார் வள்ளுவப் பெருந்தகை.

இம்முறையினை நல்ல உத்தியாகக் கவிஞர்கள் மேற்கொண்டு தாம் இயற்றிய நூல்களும், பாக்களும் சிறக்கச் செய்துள்ளனர். ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டின் நிலை கூறும் போது இவ்வாறு தொகுத்தும், வகுத்தும் கூறும் உத்தி முறையினைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார்.

முதற்கண்

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப

எனத் தொடங்குகின்றார். மெய்ப்பாடு எட்டு வகைப்படும். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனத் தொடங்கி அமைத்துச் செல்ல வேண்டியவர், மெய்ப்பாங்கு விரிவு முப்பத்திரண்டாகும் எனவும், பின்னர் அவை பன்னிரண்டு ஆகும் எனவும், அதன் பின்னர் 'நாலிரண்டாகும் பாலுமாருண்டே' எனவும் கூறிச் செல்லும் திறம், புதுநெறி புகும் உத்தியாகக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் அமைந்துள்ளதனை அறியலாம்.

இவ்வாறு கவிஞர்கள் பலவகையான உத்திகளை மேற்கொண்டு தாம் இயற்றிய பனுவல்களையும், பாக்களையும் என்றும் அழியா நிலைபேற்று அமரப் படைப்புக்களாக ஆக்கியுள்ளனர் என அறியலாம்,

# வள்ளலார் - ஒரு மாபெரும் புரட்சியாளர்

டாக்டர் சு. சிவகாமசுந்தரி,
எம். ஏ., டிப். எட்., பிஎச். டி.,

இக்கட்டுரையாசிரியர் 18-1-1936-இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாற்றில் பிறந்தவர்; 'தமிழகப் பெண்கள் வாழ்வும் வளர்ச்சியும்' 'அறம் வெல்லும்' எனும் நூல்களை எழுதியவர்; 'நீலக் குறிப்பேடு' எனும் பொழிபெயர்ப்பு நூலொன்றை வெளியிட்டவர்; கவிதை, திரைப்படப்பாடல்கள், நாடகம் முதலியன எழுத வல்லவர்; பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியவர்; வானொலியில் அறுபதுக்கு மேற்பட்ட உரைகளை நிகழ்த்தியவர்; ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு, இலங்கையில் நிகழ்ந்த உலக இந்து சமய மாநாடு ஆகியவற்றிற் கலந்து கொண்டவர்; 'செந்தமிழ்ச் செல்வி', 'அருட்பா மாமணி', 'தமிழறிஞர்' ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர் இப்போது கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

இந்திய நாட்டுக்குப் பலவகையான சிறப்புக்கள் இருந்தபோதிலும், தலைமையானது, முதன்மையானது, சிறப்பானது, ஆன்மீகத் துறையில் உலகிற்கு அது தொடர்ந்து வழிகாட்டி வரும் சிறப்பே ஆகும். இந்து சமயம் உலகியலுக்கு ஏற்ற முறையில் மக்களின் அன்றாட வாழ்க்கை முறையில் பின்பற்றத் தக்கவாறு ஆன்மிக வாழ்க்கை நெறியைப் புகட்டி வருவதுதான் இதற்குக் காரணம். தேவை ஏற்படுங் காலங்களிலேயெல்லாம் இந்த மண்ணில் பெரியவர்கள் தோன்றிப் புதிய, புதிய திட்டங்களைப் புரட்சிகரமான முறையில் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அருளியலின் பண்ணையாகிய தமிழ் நிலம் அவர்கள் அறிவுரைகளின் அடிப்படையை மட்டும் மாற்றவில்லை. ''அவன் அன்றி ஓரணுவும் அசையாது'' என்பதும், ''வேத ஆகமங்களே நமக்கு வழிகாட்டி'' என்பதும் இவ்வடிப்படைகள் எனலாம். அவ்வாறு தோன்றிய பெரியவர்களில் ஒருவர்தாம் வள்ளலார் என்றழைக்கப்படும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்.

கருணையும் சிவமே பொருள் எனக்காணும்
காட்சியும் பெறுக: மற்றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறிவித்த
வண்ணம் பெற்றிருக் கின்றேன்

என்று இறைவனிடம் அவர் கூறும் அனுபவம், அவரது கடவுட் கோட்பாட்டையும்,

ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகறின்று ஓங்கிய அருட்பெருஞ் சோதி

என்ற அகவல் வேதநெறிக்கு அவர் புறம் பானவர் அல்லர் என்பதையும் காட்டுகிறது. ''யாதொரு தெய்வம் கண்டீர், அத்தெய்வ மாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'' என்ற சித்தாந்த சாத்திரத்திற்கு இலக்கியமே அருட்பா என்று கூறலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டார் ஆட்சி, ஆட்சி மொழி, நாகரிகம் இவைபெற்ற செல்வாக்கின் விளைவாக இந்து சமயத்தில் சீர்திருத்தப் புயல் வீசியது. இந்தச் சீர்திருத்தத்தின் ஆர்வ வேகத்தில், இந்து சமயத்தின் அடிப் படைக் கருத்துக்களையே மூடநம்பிக்கை யென்று புறக்கணித்து, மேனாட்டார் கருத்துக்களைத் தமதாக்கிக் கொள்ளச் சிலர் எண்ணினார்கள்.

ஆங்கில ஆட்சியில் மக்கள் அதிகத் திரை செலுத்த வேண்டியிருந்தது. போர்ச் செலவுகட்கு ஈடுகட்ட மககளிடமிருந்து அரசு பலவழிகளில் பணம் பறித்தது. வரி வசூலில் பல கொடுமைகள் அழைக்கப் பட்டன. வரி கொடுக்க முடியாதார் சொத்துக்கள் ஏலமிடப்பட்டன; சூறை யாடப்பட்டன. மக்கள் பலவகைகளில் அச்சுறுத்தப்பட்டனர்; கொடுமைகட்கு ஆளாகப்பட்டனர். மக்களில் பெரும பாலானவர்களாயிருந்த உழவர்கள் நிலங்க ளெல்லாம் பறிபோயிற்று. உணவின்றி. உழைப்பின்றி, உரமும் இன்றி, உழவர் களும் வாடினர். கிராமத் தொழில்கள் புறக் கணிக்கப்பட்டன. அரசியல், பொருளாதார நிலையிலே ஏற்பட்ட வறட்சி மக்களின் சமூக வாழ்வியலை மாற்றவும் தவற வில்லை.

தமிழர்களின் சமய வாழ்வியலும் ஆங்கிலேயரது தலையீடு தவறாமல் சென் றது. இதனால் மக்களிடையே குழப்பங் கள், வேறுபாடுகள், மாறுபாடுகள் ஏற் பட்டன. ஆங்கிலக் கல்விமுறை, பண்பாடு, சமயநோக்கு, பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்ள ஒரு சிலரும், பழமையை விரும்பித் தமிழக மரபிலேயே செல்ல வேண்டுமென்று வேறு சிலரும் எண்ணப் பண்பாட்டுப் போராட்டமும் நடந்தது. சாதியின் பெய ராலும், மொழியின் பெயராலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன.

இந்தக் காலத்தின் நிலையை உணர்ந்து பணிசெய்யப் புறப்பட்ட சில சமுதாயப் புரட்சியாளர்களுள் வள்ளலார் குறிப்பிடத் தக்கவராவார். தனிமனித வாழ்விலும், சமுதாயத்திலும் நிறைந்திருந்த சீர்கேடு களைக் களைய வேண்டுமென்று வள்ளலார் விரும்பினார். தனிமனிதன் திருந்தாத வரை சமுதாயம் திருந்தாது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

வள்ளலார் எளிமையும், இனிமையும், இசை நயமும் ததும்பும் தோத்திரப் பாடல் களைப் பாடிய கவிஞர் மட்டுமல்லர்; கீர்த்தனைகளையும், கும்மியையும், கண்ணி யையும், தெம்மாங்கையும் பாடித தமிழுக்கு வளங்கூட்டிய புலவர் மட்டுமல்லர்; மனு முறை கண்ட வாசகம் எழுதிய உரைநடை ஆசிரியர் மட்டுமல்லர்; ''நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்'' என்ற தலைப்பில் மருத்துவத் திறன் விளக்கிய மருததுவர் மட்டுமல்லர்; பசியாலும், பிணியாலும் மக்கள் வாட, வருந்த, துடிக்க, துவளப் பார்த்துக் கொண்டிராது, சமுதாயம் விழிப் படையத் தொண்டாற்றிய ஒரு மாபெரும் புரட்சியாளரும் வள்ளலார் ஆவார்.

எல்லா மக்களும், எல்லா மதத்தினரும், எல்லா இனத்தவரும், எல்லா நாட்டினரும் வேற்றுமையின்றி வாழ வேண்டும். அறிவே இறைவன். அன்பே இறைவன். சாதியின் பெயரால் வேறுபாடுகளை வளர்க்கக் கூடாது. சாதி செயற்கையானது. சாதி வேறுபாடுகள் இருக்கும்வரை சமுதாய முன்னேற்றம், ஒற்றுமை சாத்தியமில்லை என்கிறார் வள்ளலார். மனித உணர்விற்கு அடிப்படை கருணை. அது வளரச் சாதி தடையாக இருக்கிறது. கருணையில்லாமல், தயவு இல்லாமல், இரக்கம் இல்லாமல் கடவுள் இல்லை. சாதியைத் தவிர்த்தால் தான் அருள்நிலை பெறலாம். சாதியால் அறிவு மயங்குகிறது. சன்மார்க்க நெறிக்கு முக்கிய தடை சாதியே யாகும். இதைப் பல நிலைகளில் அருட்பா வழி பேசுகிறார்.

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும்
குலமும் கொண்டு என் செய்வீர்?

என்றும்,

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத்
தடுமாறும்
ஆதமிலி நாயேன்

என்றும் கூறி,

எச்சமயத் தவரும்வந் திறைஞ்சா நிற்பர்

எனக் கூறும் தாயுமானார் வழிநின்று,

எச்சபைப் பொதுவென இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் சோதி

எனும் சமரசக் கோயிலை நாட்டுகின்றார்.

சமரசம் என்பது நாடு, மொழி, சமய நெறி, சாதிவெறி முதலியவற்றால் கட்டுப் படாது, எல்லாவற்றையும் கடந்த நிலையில் நிற்பது. உலகத்தோடு இயைந்து வாழ எண்ணிச் செயல்படுவது. இந்தச் சமரச மனப்பான்மையே மனிதப் பண்பை வளர்த்துக் கடவுட் காட்சியை வழங்கும். இதற்கென வள்ளலார் வழங்கிய புரட்சிப் பாக்கள் நூறு, நூறாகப் பல உள்ளன. சாதியைச் சங்கடம், குப்பை, இருள், பொய்க்கோடு, சழக்கு, பேயின் வெறியாட்டம், பொய், புனைவு, நரகம் என்றெல்லாம் குறித்து அதன் இழிவைச் சுட்டுகின்றார்.

சாதியும் மதமுஞ் சமயமுங் காணா
ஆதி அநாதியாம் அருட் பெருஞ்சோதி
சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி.

இதைவிட இன்னும் தெளிவாகவும், ஆழமாகவும் சொல்ல விரும்பிய வள்ளலார்,

சாதியும் மதமும் சமயமுந் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்

என்று, குறைவில்லா நிறைவுடையோனாக வாழ்வதற்குச் சாதி ஒரு தடையாக இருக்கக் கூடாதென்று கூறுகிறார்.

சாதி, சமயம், ஆசாரம் இவையெல்லாம் உடன் உருவாக்கி, உடன் அழிக்கும் மண்வீடு போலப் பிள்ளை விளையாட்டுகளே என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

நால் வருணம் ஆசிரமம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை
விளையாட்டே
மேல் வருணந் தோல்வருணங் கண்டறிவா நிலைநீ
விழித்திது பார் என்றெனக்கு விளம்பிய
சற்குருவே.

மனிதனுக்குள்ளே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலையோ, தோலாலோ, இரத்தத்தாலோ வேறுபாடோ கிடையாது. உயிர்கள்மீது அருள் உடைமையே தெய்வ வழிபாடாகும். இறைவன் ஒருவன்தான். அந்த இறைவன் ஒருமைப் பாடுடைய மக்களைப் படைத்தானே அன்றி வேறுபடுவதற்காக அல்ல. இதனை

எல்விடத்தும் எல்வுயிர்க்கும் இலங்கு சிவம் ஒன்றே
என்னாணை என்மகனே இரண்டில்லை யாங்கே

எனக் கூறி, சாதியை விட்டுவிட்டால் உலகில் மனிதன் பெறக்கூடிய நன்மைகளையெல்லாம் வள்ளலார் சுட்டிக்காட்டுகிறார்.

இறைவனை அடைய முதலும், முடிவுமான நிலை சாதி பேதமற்ற நிலையிலேயே தோன்ற முடியும். சாதியை விட்டால்தான் இறைவனின் உண்மைத் தன்மையைக் காணமுடியும். ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல்'' எண்ணியவர் வள்ளலார். எல்லா உயிரிலும் இறைவனைக் காண முற்பட்டவர். சாதியை விட்டால் பொதுநிலை தானாக வரும். சாதியால் வருகின்ற விருப்பு, வெறுப்பால் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை வளராது. சாதி ஒழிப்புக்காக நமது நாட்டில் வள்ளலார் காலத்திலேயே பல சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றிச் செயல்பட்டன. அவை தோன்றுவதற்கு முன்பே தனி ஒருவராகச் சாதி பேதமற்ற சமரச இயக்கத்தை உருவாக்குவதற்காக வள்ளலார் செயல்பட்டார். தன்னம்பிக்கையில்லாமலும், வாழ்க்கையில் லட்சியமில்லாமலும் வாழ்ந்த மக்களிடையே தன்னால் இயன்ற அளவு தன்னந் தனியாக நின்று அமைதியாகப் போராடினார். சாதிப் பாகு

பாடுகள் இலறவழிபாட்டிற்குத் தடையா யிருந்தன. கோயில்களெல்லாம் பெரும் பாலும் சாதிக்கோயில்களாகவே இருந்தன. அதனை மாற்றக் கருதித்தான் எல்லோரும் வழிபடக்கூடிய சமரச சோதிக் கோயிலை வள்ளலார் உருவாக்கிக் காட்டினார். எல்லா உயிரிடத்தும் ஆன்மநேயங் கொள்ள இக்கோயில் வகை செய்யுமென நம்பினார். உயிர்களுக்குத் தொண்டாற்றுவதன் வழி யாக இறையுணர்வு பெறுதல் அவரது குறிக் கோளாகும். ''ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' என்பது அவர் லட்சியம். அவர் உள்ளத்தே உயிர்கள் பற்றி வேறுபாடு தோன்றவில்லை. எவ்வுயிரும் ஒருயிராய்க் காட்சி அளித்தது. மனிதனுக் கும், விலங்கிற்கும், பறவைக்கும் புல்லுக் கும் அவர் வேறுபாடு காணவில்லை. அவரது உயிர் இரக்கம் மனித இனத்தோடு நிற்கவில்லை. அனைத்தையும் தாண்டி, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற உண்மையான அடிப்படையில் எல்லா உயிர் களையும் பற்றி நின்றது அவரது சமரசம். எனவே, எவ்வுயிர் வாடினும் அவர் வாடி னார். எல்லா உயிர்களும் வாழ வழிவகுத் தார். தமது எழுத்துக்கள் முழுவதிலும் இவ்வருள் உயர்வைப் பரப்பினார். உயிர் கள் வாடும் வாட்டத்தை நேரில் கண்டவர் வள்ளலார். அந்தக் காட்சி அவர் உள்ளத் தை உருக்க, கண்கள் நீரைச் சொரிய வாய் பாடிற்று.

காணுறு பசுக்கள் கன்றுகளாதி
கதறிய போதெல்லாம் பயந்தேன்
ஏணுறு மாடுமுதல் பலமிருக
மிளைத்தவை கண்டுள மிளைத்தேன்
தோணுறு கோழிமுதல் பலபறவைகள்
கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்
வீணுறு கொடியர் கையிலேவாளை
விதிர்த்தல் கண்டென்ன வெகுண்டேன்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடு தோறிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்

நீடிய பிணியால் வருந்துகின் றாரென்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய்
நெஞ்சைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்

என்ற அருட்பாவின் இரு பாக்கள் வழி உயிர்களுக்கு வரும் இடையூற்றினைப் போக்கி அவற்றை நல்வழியில் அழைத்துச் செல்ல அவர் விரும்பிய விருப்பம் தெளிவா கிறது.

சாதி ஒழிந்து, இரக்கந்தோன்றும் சன்மார்க்கம் வளர்ந்தோங்கும் பொழுது இரக்க உணர்வும், உயிர்களின் மேல் கருணையும் தோன்றும். சமயப் பெரியார் கள் சாதிக்கொடுமை பற்றி எண்ணியும், எண்ணாமலும் இருந்த காலத்தில், வள்ளலார் ஒரு புதிய சிந்தனையைச் சுவை யோடு, பொருள் நிறைந்த, வளமான ஒரு பாதையைக் காட்டினார். சமயப்பணியில் ஒரு திருப்பு முனையைத் தோற்றுவித்தார். எல்லோரையும், எல்லாவற்றையும் சம மாகக் காணவேண்டும். இதுவே அவர் புரட்சிச் சிந்தனைக்கு வித்திட்டது.

பன்மார்க்கமெல்லாம் பசையற்று ஒழியும்; சன்மார்க்கம் ஒன்றே தழைக்கும். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்கள் சத்தியமாக நன்மார்க்கம் அடைய முடியும்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
காணார்க்கும் கண்டவர்க்கும்
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்

எல்லார்க்கும் பொதுவான வாழ்க்கையைத் தான் வள்ளலார் போற்றினார்! புகழ்ந் தார்! வாழ்த்தினார்! வணங்கினார்! உயிர் இரக்கத்தின் வாரிசாக நின்று பெரும் புரட்சி செய்த வள்ளலாரைப் பின்பற்றி வாழையடி வாழையாக இவ்விருபதாம் நூற்றாண்டில் ஒரு பெரிய எழுத்துப் பரம் பரை தோன்றியிருப்பது யாராலும் மறைக்க முடியாத உண்மையாகும்.

# இலக்கியம் காட்டும் பெண்மையின் அறம்

புலவர் கோ. தனலக்குமி,
எம். ஏ.

இவர் தஞ்சையின் ஒரு பகுதியான கரந்தையில் 1940 ஆம் ஆண்டில் பிறந்தார்; கரந்தைப் புலவர் கல்லூரியில் பயின்று புவவர் பட்டம் பெற்றார். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றார்; உமாமகேசுவரனார் மேனிலைப்பள்ளியில் இப்போது தமிழாசிரியையாகப் பணிபுரிந்து வருகின்றார்.

ஐம்பெரும் பூதங்களும், கலையும், திருவும், வீரமும், சக்தியின் வடிவங்களே. கவிமணி அவர்களும் ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா, அவர் பங்கயக் கைநலம் பார்த்தலவோ இந்தப் பாரில் அறங்கள் வளருமம்மா'' என நவின்றார். தமிழ் மறையும் ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்'' என்று போற்றிக் கூறும்.

மகளிர், சங்க காலத்தில் கல்வி, அரசியல் இவற்றில் முதல் இடம் பெற்று இருந்தனர். இருபெரு வேந்தர்களின் போரை நிறுத்தும் பேராற்றல் ஒரு பெண்ணிற்கு (ஔவைக்கு) இருந்தது என்றால், அத் திறமையை, உளத்திண்மையை என்னென்று புகல்வது. தூது சென்ற தொண்டைமானிடத்திலேயே, ''இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக் கண்டிறள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து கடையுடை வியனகரவ்வே பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து கொற்றுறைக் குற்றில மாதோ'' என அவனைப் புகழ்வதுபோன்று இகழ்ந்து, அனைவர்க்கும் கொடுத்து உண்ணும் இயல்புடைய அதியனின் ஆயுதங்கள் ஒடிந்து கொல்லன் உலைக்களத்தில் உள்ளன என்று இகழ்வதுபோல் புகழ்ந்து வஞ்சப்புகழ்ச்சியாகக் கூறிய நெஞ்சுரத்தை என்னென்பது! சிங்கத்தின் குகையினுள் நுழைந்து அதன் பிடரியைப் பிடித்து உலுக்கும் செயலை அன்றோ செய்திருக்கின்றார்.

கடமையை அறியும் தன்மை கொண்ட தன்றி, உணர்த்தும் தன்மையையும் பெற்றுப் புகழ் பெற்றிருந்தனர். மொழிக்கு முதலாம் இலக்கணமேயன்றி வாழ்க்கைக்கு முதலாம் இலக்கியங்களும் இயற்றியோர் பலர். அவருள் ஒருவர் பொன்முடியார். ''முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி சரியச் சுமந்து பெற்ற தாய்''என்று முற்றும் துறந்த பட்டினத்தடிகளாலும் துறக்க முடியாத பெரிய பாசம் தாய்ப் பாசம். இன்பக் கனவும் இனிய நல் நினைவும் கொண்டு, தன்னுயிரை மதியாது ஈன்று புறந்தந்த தலையாய செயலைச் செய்தவள் தாய். அத்துடன் அவள் கடமை முடிவுற்றது. தாயின் அன்பு மட்டும் அன்றித் தந்தையின் அன்பும் தேவையன்றோ. தாய் அன்பு செலுத்தும் இயல்பினளேயன்றி அச்சுறுத்தும் இயல்பினள் அல்லள். தந்தையின் கடன் என்னவோ என நவில்பவருக்கு, தான் கல்வி அறிவில் சிறந்து, எல்லா நற்குணங்களும் கைவரப் பெற்றுவர, வழிகாட்டியாய்த் தான் நன்னெறியில் நின்று, மைந்தனுக்கும் நற்கல்வி, அறிவு, வீரம், அஞ்சுவது அஞ்சல் ஆகிய நற்குணங்களைக் கற்பித்து, ஆன்றோனாக மாற்றுவதே யாகும்.

அரசியல் சூழ்நிலையில் போர் வருங்கால், களத்திற்கு வேல் பயன்பட்டது. இன்று அறிவியல் பெருகிய காலமாதலின், அவரவர் மேற்கொள்ளும் கருவிகளை அவ்வத்துறை வல்லுநர் ஆக்கிக் கொடுத்தல் கடமையன்றோ. அறிவியல், கலை, தொழில்நுட்பம் இவற்றிற்குத் துணையாம் கருவிகளை வடித்துக் கொடுத்தல் அவ்வத்துறை வல்லுநர்க்கும் கடனாகும். ''அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'' அல்லவா? தசரதனை உயிராகவும், அவன் நாட்டின் மக்களை உடலாகவும் கம்பர் புனைந்துரை செய்தார். அவ்வாறு உயிராகவும் உடலாகவும் உள்ள அரசு வாழ்க்கையின் நன்னெறிகளைக் கற்றுக் கொடுத்தல் கடனன்றோ. ஒரு மனிதனின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவன் வாழும் சூழ்நிலைதான் காரணம் என்று கூறுவர் அறிஞர். இசையில் வீருப்பமில்லா ஔரங்கசீப் வாழ்ந்த காலத்தில் இசை வளரவில்லை என்பதையும், முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்த்த மன்னர்கள் காலத்தில் தமிழ் பெருவளர்ச்சியடைந்து பொற்காலமாகத்திகழ்ந்ததையும் நூல்கள் உணர்த்தும். அவ்வாறே வேண்டும் துணைக் கருவிகள் தடையின்றிக் கிடைத்தால் தொழில் வளர்ச்சி வெள்ளம்போல் பெருகி வளர்ச்சியடைய வழி ஏற்படும்.

போர்க்களத்தில் வேலெறிந்து வெற்றி பெறுதலே அன்று ஆண்மகன் கடனாகக் கூறினார். எல்லா வாய்ப்பும் இருந்தும் செயலைச் செம்மையுறச் செய்யவில்லை என்றால் யாவும் வீணாகுமே. ''தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை வாளாண்மை போலக் கெடும்'' என நம் முப்பால் நவில்வதை நாம் அறிவோம். வீரன் கையில் வாள் கிடைத்தால் போர்க்களத்தில் பகைவர் உடல்கள் சிதைவுறும். பேடி கையில் கிடைத்தால் யாது பயன்? அவ்வாறே மைந்தன், தன் தொழிலை, செயலைச் செம்மையாக முடித்துவாழ்வதே சிறந்த வாழ்வு. கடமையைக் கண் எனக் காக்கும் இயல்பு கொண்ட அம்மையார் கடமையை எடுத்துரைக்கும் பாங்கை என்னென்பது. இனி அப்பாடலை நோக்குவோம்.

ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிருவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம்)

கணவனுக்குப் பழி என்றவுடன் சீறியெழுந்து, மன்னனையும், மாநகரத்தையும் அழித்த கண்ணகியின் மறக் கற்பை என்னென்பது. பொறுமை, அடக்கம் பெண்களின் அணிகலன் என்றாலும் தீமை கண்ட விடத்துச் சீறியெழுந்து அதனை ஒடுக்குவதே பெருமை. அவசரத்தில் செய்தாலும் குற்றம் குற்றமே என்பதை உண்மையாக்கிய கற்புத்தெய்வத்தின் உளத்திண்மை அனைவருக்கும் வேண்டும்.

மாதவியின் மனை நீங்கி, கண்ணகி முன் வந்து எழுக என்று அழைத்தவுடன் அவள்

உடன் புறப்பட்டாள். இருவரும் மதுரையில் மாதரி மனையில் இருந்த ஞான்று தன் செயலுக்குத் தானே வருந்திய கோவலன், ''எழுகென எழுந்தாய் என்செய்தனை?'' எனக் கூற, கண்ணகி ''அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'' எனத் துன்புற்றுக் கூறுகின்றாள். கோவலன் இன்மையால் அறவோர்க்கு அளித்து வாழ்தலும், அந்தணர்க்குச் செய்யும் அறமும் தடைப்பட்டது. வழிவழியாக விருந்தினரைப் பாதுகாத்தலில் சிறப்பிடம் பெற்றவர்கள் பெண்கள். அச்சிறப்புடைய விருந்தை எதிர்கொள்ள இயலாத நிலைக்கு வருந்தினாளேயன்றி வேறன்று. 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' இயல்பு கொண்டவரல்லவா தமிழர்.

வந்த விருந்தினரின் பசியாற்ற, கழனியில் அன்று தான் விதைத்த நெல்லை, மழையில் ஒதுங்கியிருக்கும் மடையிலிருந்து அள்ளிக் கொண்டுவந்து உணவு சமைத்த இளையான்குடி மாற நாயனாரின் இல்லறமும், தன் குழந்தையைத் தானேஅரிந்து விருந்து படைத்த சிறுத்தொண்ட நாயனாரின் சிறப்பும், இறந்த மகனை மறைத்து வைத்த தியாகி அப்பூதியடிகளின் இல்லறமும் புகழ்ந்து போற்றப்படுகின்றன. விருந்து எப்படிப்பட்டது என்பதை ''விருந்தே புதுமை'' என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இத்தகைய பெருமை உடைய விருந்தினரைப் பாதுகாக்கும் பெருங்கடமையில் இருந்து தவறியதுதான் தனக்கு தாளாத் துன்பம் தருவதாக நவின்றாள். இப்படி விருந்தைப் பெருமை உடையதாகப் போற்றினர்.

''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'' எனத் தமிழறம் நவில்வதுபோல், கற்றோர் நிறைந்த அவையில் முதன்மையாக அமரும் அறிவுடைய மக்களை ஈன்று காப்பதும் அறம் எனப் போற்றப்பட்டது ''மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே''யல்லவா. சிறிய இல்லம், அதில் உள்ள தூணைப் பற்றிக் கொண்டு ஒரு சிறிய பெண் நிற்கின்றாள். அவ்வீட்டின் மூதாட்டியிடம் 'அம்மா நின் மைந்தன் எங்கே' என நவின்றாள். உடனே அம்மூதாட்டி 'புலிதங்கிச் சென்ற குகைபோல் என் பெற்ற வயிறு இருக்கின்றது; ஆனால் அவன் தோன்றும் இடம் போர்க்களம்' என நவின்றாள். என்னே! அவ்வீரத் தாயின் தொண்டுள்ளம்; நாட்டுப் பற்று!

யார் வரினும் அஞ்சாத வீரம் மிக்க புலி அமைதியாக தங்கிச் செல்லும் கல்குகைக்கு தன் வயிற்றையும், யார் வரினும் அஞ்சாமல் போரிட்டு வெற்றி பெறும் புலியின் ஆற்றலுக்குத் தன் மகனையும் ஒப்பிட்டுக் கூறும் மறத்தாயின் வீர உள்ளம் எத்தகையது என சிந்திப்பவர்க்கே விடை கிடைக்கும். நாட்டிற்குத் தன் மகன் செய்கின்ற தொண்டே பெருமையுடைத்து என்கின்றாள். என்னால் என்ன முடியும் என்று கூறவில்லை. என்னால் எல்லாமே முடியும் என்று தலை நிமிர்ந்து கூறுகின்றாள். ''எங்கள் பாரத தேசம் என்று தோள் கொட்டுவோம்'' என்று முழங்கிய பாரதியின் முழக்கமல்லவா அன்று அந்த மூதாட்டி வழங்கியது.

இவ்வாறு கடமையை உணர்த்தியதோடு மட்டுமன்றி, அவ்வாறே தாங்களும் செயலாற்றி, இன்பத்திலும் துன்பத்திலும் கலங்காமல் இருந்து, ''கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா'' என்று வாசுகி கூறியதுபோலக் கொழுநனுடன் மனம் ஒன்றி வாழ்ந்து, விருந்து புறந்தந்து, நன்மக்களை ஈன்று சிறந்து வாழ்ந்தனர். அதனைப் பின்பற்றி எவ்வளவு அறிவியல் காலமாக இருந்தாலும், அடிப்படை அறங்களைப் போற்றி வாழ்வதே பொன்னான வாழ்வாகும்; பெண்மைக்கும் அறமாகும். இதனை நோக்கும்பொழுது ''பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா! பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா'' என்று கூத்தாடத்தான் தோன்றுகின்றது.

# இலக்கியத் திறனாய்வு - அறிமுகம்

டாக்டர் துரை. சீனிச்சாமி,
எம்.ஏ., பி எச்.டி.

இவர் 15-6-1944இல் நெல்லை மாவட்டத்தில் உள்ள சித்தாமணியில் (புளியங்குடி) பிறந்தவர்; காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் பயின்று தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், ''கம்பராமாயணத்தில் இயற்கை'' என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் பி எச். டி., பட்டம் பெற்றார். ''அந்தி,'' ''உரித்த யானை'' என்னும் கவிதை நூல்களையும், ''இலக்கியத்தில் இயற்கை'' என்னும் ஆய்வுக் கட்டுரை நூலையும் வெளியிட்டுள்ளார். இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இலக்கியத் துறையில் பணியாற்றி வருகிறார்.

## முன்னுரை

குறைந்தது இருபத்தைந்து நூற்றாண்டுக்கால வரலாற்றுப் போக்குடையது தமிழ் இலக்கியம். பல்வேறு சுழிப்புக்கள் கண்டு விசையுடன் இயங்கும் ஓர் உயிர்ப்புடைய பேராற்றலின் முடுகலில், பின்வர இருக்கும் பலநூறு ஆண்டுகட்கு முன்னுள்ள நமது இந்த ஆண்டு பழமைக்குப் புதிதானதுதான்; ஆனால், எதிர்காலத்திற்கு முதல் கட்டம் போன்றதும்கூட. இதுபோல்தான் இந்த ஆண்டிற்கு முந்திய ஆண்டுகளும் அவ்வப் போது முதல் கட்டங்களாகிப் பழமைப்படுகின்றன. இவற்றில் எது பழையது? எது புதியது? உலோகங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய நாளிலிருந்து மனிதனுடைய நாகரிக வரலாற்றை ஓரளவு தொடக்கம் செய்வர். ஆயினும், நாகரிகமற்ற காலங்கள் என்று சொல்லப்படுகின்ற தொல்பழங் காலங்களிலும் (Primitive Periods) மனிதனின் உயிர்ப்பு வெளிப்பட்டே வந்துள்ளது. தொல் பழங்காலக் குகை ஓவியங்களும் தாழிகளும் பானைச் சித்திரங்களும் அவர்களின் வாழ்வுச் சலனங்களை வெளிப்படுத்தியுள்ளன. தமிழர் வாழ்விலும் இச்சலனங்களை ஆதிச்சநல்லூர்க் காலத்திலிருந்தே காண்கிறோம். வாழ்வின் இந்த முடுகலின் ஆழ்ந்த அனுபவ விசையைச் சொற்களில் வெளிப்படுத்துபவனே இலக்கியப் படைப்பாளன். ''முடுகலின் ஆழ்ந்த அனுபவ விசையை வெளிப்படுத்துதல்'' என்பது மிகவும் முக்கியமானது. இலக்கியத் திற

னாய்வு என்பது இந்த ஆழ்ந்த மையத்துடன் மிக நெருங்கி இயங்குவது.

## திறனாய்வு எதற்கு?

'படைப்பினையே நேரடியாகப் படித்து அனுபவிக்க முடியும்போது, திறனாய்வு என்ற ஒன்று தேவையா?' என்ற கேள்விக்குக் காணும் விடையில்தான் திறனாய்வின் ஆதாரம் உள்ளது. பொதுவாக, நான்கு குறைகளைச் சொல்லி எட்டு நிறைகளைச் சொல்வதா? அல்லது எட்டுக் குறைகளைச் சொல்லி நான்கு நிறைகளைச் சொல்வதா? அல்லது பன்னிரண்டு குறைகளை மட்டும் சொல்வதா? அல்லது பன்னிரண்டு நிறைகளை மட்டும் சொல்வதா? பல நேரங்களில் நம் காலத்தின் வளைந்துகொடுத்து ஒத்துச் சென்று பயனடையும் வணிக அரசியல் மனப்பான்மையே நமது இலக்கிய அணுகலிலும் கலந்துள்ளது; அலலது எதிர்க்கட்சி மனப்பான்மை ஏற்படுகிறது. ஆராய்ச்சிகளிலும் இது வருகிறது. ஆனால், திறனாய்வு என்பது பங்கிடு செய்வது அல்ல; அடிப்படையில், ஒரு இலக்கியப் படைப்பு நலலதா கெட்டதா என்பதைத் தீர்மானிப்பதே திறனாய்வு ஆகும். 'நல்லதா கெட்டதா' என்று வினவுவதில் ஓர் கருத்து முதலிலேயே தெளிவாகிவிட வேண்டும்; நல்ல நீதிக் கருத்தா, கெட்ட கருத்தா என்பதல்ல இதன் பொருள். ஓர் இலக்கியம், இலக்கிய ஆற்றல் என்ற நிலையில் அதன் மதிபபு என்ன என்பதைத் தீர்மானிப்பதே ஆகும். மிகச் சிறந்ததாய் ஓர ஆற்றல் இலக்கியப் படைப்பில் கிடைக்கப் பெற்றால் அதுவே நல்ல இலக்கியம். இவ்வாறு மிகச்சிறந்த ஆற்றலுடைய இலக்கியத்தை அறிவதன்மூலம் இலக்கிய அனுபவத்துடனான நம் அனுபவம் விரிந்தகன்று ஆழப்படுகிறது.

இந்த அகன்மையும் ஆழ்மையும் வாழ்விலிருந்து பெறப்பட்ட தனித்துவமான வடிவங்கள். இந்த ஆற்றல் வடிவங்களை, ஆற்றலற்ற போலியிலிருந்தும் வலுக்குறைவானவற்றிலிருந்தும் வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்குரிய தீர்மானிக்கும் வழிதான் திறனாய்வு. எனவே, திறனாய்வு இல்லை என்றால் இலக்கியப் படைப்பியல் பற்றிய அறிவிற்கே இடமில்லை எனலாம்; அத்துணை அளவு அது தேவையானது.

## தீர்மானித்தல்

தீர்மானித்தல் என்பது முகவும் முக்கியமானது. திறனாய்வு என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லான criticism என்பது crites என்ற கிரேக்கச் சொல்லடியாகப் பிறந்த சொல். crites என்றால் கிரேக்கத்தில் நீதிமான் என்று பொருள். நீதிமான் என்பவர் குற்றங்களைத் தீர்மானிப்பவர். தமிழில் இன்று திறனாய்வு என்பதன் நேரடிப் பொருள் தன்மையை ஆய்தல், அதாவது இலக்கியத் தன்மையை, திறத்தை ஆய்தல், இலக்கியத் திறத்தின் இயல்பை ஆராய்தல் எனலாம். தொல்காப்பியரின் சில சூத்திரங்கள் மூலம் இலக்கியத் திறத்தின் இயல்பை ஆராயும் இயலே திறனாய்வு என்பது புலப்படுகிறது. தொல்காப்பியர் பயன்படுத்தும் சொல்லான 'திறத்தியல்' என்பது ஓரளவு திறனாய்வு என்ற பொருள்படுகிறது.

> இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
> திறத்தியல் மருங்கில் தெரியுமோர்க்கே
> (பொருள் : 226)

> உவமப் பொருளின் உற்ற துணருந்
> தெளிமருங் குளவே திறத்தியலான
> (பொருள் : 291)

> இறப்பே நிகழ்வே எதிரதென்னுந்
> திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்
> பொருள் நிகழ் உரைப்பது காலமாகும்
> (பொருள் : 503)

என்ற சூத்திரங்கள் இதனைக் காட்டுவன. திறனாய்வு என்பது 2300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் உண்டு எனக் கூறி மகிழ்வதற்கல்ல இச்சொல்லைக் காட்டுவதன் நோக்கம். பழைய மரபின் இருப்பைக் காண்பதே முக்கியம். திறம், திறத்தியல் போன்ற சொற்களும், அவை ஆளப்படும் சில இடங்களும், அக்காலத்திலும் இலக்கியச் சிறப்புத் தன்மைகளை ஏதோ ஒருவழியில் தீர்மானித்தனர் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. ஒரு படைப்பின் தன்மையைக் காண்பது என்ற கருத்துப் பெறப்படுவதே தமிழ்ச் சொல்லின் மூலம் அறிய முடிகின்ற பழந்தமிழ்த் திறனாய்வு மரபு உண்மை என்பதே முக்கியம். தொல்காப்பியர்க்குப் பின்

இந்த மரபு தீவிர மதவாதத்தால் அழிந்து போயிற்று எனலாம்.

## யார் தீர்மானிப்பது?
## எப்படித் தீர்மானிப்பது?

ஓர் இலக்கியப் படைப்பின் ஆற்றல் தன்மையை, தகுதியை இனங் காட்டுவது திறனாய்வின் நோக்கம் என்றால், இதனை எப்படிச் செய்வது? யார் செய்வது? யாரோ சிலர் சொல்லியிருப்பதை விதிகளாக எடுத்துக் கொள்ளலாமா? அல்லது வேறு ஏதேனும் பொதுவான மதிப்பீட்டுக் கருத்துக்கள் உள்ளனவா? வேண்டுமா?

பெரும்பாலும் ஒன்றை ஒருவர் தீர்மானிப்பது என்பது, அவருடைய விருப்பு வெறுப்பினால்கூட அமையலாம். ஆனால், (ஊழலற்ற) நீதிமான் என்ன செய்கிறார்? உண்மைகளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு அதற்கேற்பப் பொதுவான விதிமுறைகளின் படி தீர்மானிக்கிறார். நீதிமானுக்குச் சில பொதுமையான விதிகள் உண்டு. அப்படியானால் திறனி(critic)க்கும் பொதுமையான விதிகள் வேண்டுமா? போதுமா?

சரி, போதுமென்றே இப்போதைக்கு எடுத்துக் கொள்வோம். கொண்டால், தனி நபர் சிலர் தங்கள் கருத்துக்களை, இது இப்படி, அது அப்படி இருக்கிறது, இல்லை, இருக்கவேண்டும் என்றெல்லாம் சிலவற்றைத் தெரிவிக்கின்றனரே அவற்றையே பொதுவிதிகள் எனக் கொள்ளலாமா? இவை போதுமா? போதாது. ஏனெனில் இதன் விளைவு கொடுரமாக, ஒரு போக்கினதாக, மனம்போன போக்கிலேயே காணப்படும்.

அப்படி என்றால், தனி நபர் சாராத பொது விதிகள் உண்டா? அவற்றை எப்படிக் காண்பது?

காலப்போக்கில் நாம் கண்டுள்ளோம், சில படைப்புக்கள் காலங்கடந்தும் இன்னும் ஆற்றலுடன் திகழ்கின்றன. பல நூல்கள் ஒரு காலத்தில் தோன்றிப் பரபரப்பூட்டி ஆரவாரம் செய்கின்றன; நாளடைவில் மங்கி விடுகின்றன. ஆனால் சங்கப் பாடல்கள் பல, சிலப்பதிகாரம், இராமகாதை, திருவாசகம், நாச்சியார் திருமொழி, அழகின் சிரிப்பு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், ந. பிச்சமூர்த்தியின் கவிதைகள் சில, புதுமைப்பித்தன், கு. ப. இராசகோபாலன், கு. அழகிரிசாமி, இராச்சம் அய்யர், தி. ஜானகிராமன், மௌனி போன்றோரின் பல படைப்புக்கள் — எனச் சில, இன்றும் ஏதோ ஓர் ஆற்றலைத் தம்முள் கொண்டு நிலைத்துள்ளன. ஒருகாலத்தில் ஆசு கவிகளாகவும் சித்திரகவிகளாகவும், பந்தங்களாகவும் நாட்டிலே ஆரவாரம் ஏற்படுத்திய கவிதைகள் எங்கே? சிலேடைகளிலேயே சுகங்கண்ட எத்தனை கவிஞர்கள் நினைவுக்கு வருகின்றனர்? எங்குப் பார்த்தாலும் பரபரப்பூட்டிய 'சிவகாமியின் சபதமும்', 'பார்த்திபன் கனவும்', 'கயல்விழியும்' இன்று ஆற்றலிழந்து போயினவே! ஆயின், 'கமலாம்பாள் சரித்திரமும் புதுமைப்பித்தன் எழுத்துக்களும் இன்னும் இவை போன்றவையும் உயிர்ப்புடன் இருந்துகொண்டிருக்கின்றன. இதுபோலவேதான் சில ஆண்டுகளுக்கு முன்பு படாரென வெடித்து நெம்புகோல்களாகவும், பூபாளங்களாகவும், முன்பனிப் பின்பனித் தாகங்களாகவும் இரத்த புஷ்பங்களாகவும் சிதறிய சில புரட்சிப் புதுக் கவிதைகளில் ஒருசில தவிரப் பிற யாவும் சிதறி விழுந்ததோடு சரி; ஆனால், ந. பிச்சமூர்த்தியின் படைப்புக்கள் இன்றும் கவிதை உயிர்ப்பின் அடையாளத்தை உணர்த்தி வருகின்றன. எனவே, இலக்கிய ஆற்றல் என்பது படைப்புக்குள்தான் எப்படியோ இருக்கின்றது.

ஆக, இலக்கியப் படைப்புக்கள் சில ஒரு காலத்தில் பொங்கிப் பிரவகித்துப் பட்டெனப் போய்விடுகின்றன. சிலவோ ஆழமான அமைதிக்கடல் போலக் காலந்தோறும் உயிர்ப்புப் பெற்று இயங்குகின்றன. இப்படைப்புக்கள் சிறந்த இலக்கிய ஆற்றல் கொண்டுள்ளன. மிக நல்ல இலக்கிய ஆற்றல்கள் இவ்வாறு மிகச்சில படைப்புக்குள் தான் காணப்படுகின்றன. இந்த ஆற்றல்கள் இப்படைப்புக்களில் வெளியிடப்பட்டிருக்கும் பாங்குகள், மிகச்சிறந்த படைப்புகளுக்

குரிய பொதுவிதிகளாக அமைத்துக் கொள்ளத் தகுதியானவையே! (ஆனால் இவற்றை அப்படியே முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதல்ல இதன் பொருள்.)

இப்படைப்புக்களிலும்கூட தனி ஒரு படைப்பாளியின் சிந்தனையும் வெறுப்பு விருப்பும் கலக்காமல் இருக்காது. ஆயினும் இவற்றையும் கடந்து, அவை ஆற்றலுடன் திகழ்கின்றன. திகழ்வதற்கெனச் சில அமைப்புக் கூறுகளைத் தம்முள் கொண்டுள்ளன. இக்கூறுகளின் அடிப்படையில், நல்லது கெட்டதைத் தீர்மானிக்கும் விதிகளை வகுத்துக் கொள்ளலாமா? திறனி இம்முறையைப் பின்பற்றலாமா? சிறப்பாக இவற்றின் மூலம் சிறந்த இலக்கியத்தை அனுபவப் படுத்துதல் என்பது முதன்மையானது எனலாம். சிறந்த இலக்கிய அனுபவத்தை நேர் கொள்ள உதவும் அடிப்படைத் துணை என்பதாக இது அமைய முடியும். இலக்கிய அறிதலுக்கு இது ஆதாரமான ஒரு நிலை.

## திறனியின் தகுதிகள்

ஆனால், திறனியின் அடிப்படைத் தகுதி நிறைவே சிறந்த இலக்கியப் படைப்புக்களை அடையாளம் காண, காட்டிட முடியும். சிறந்த இலக்கியப் படைப்புக்களின் ஆற்றல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மட்டும் ஒருவன் சிறந்த திறனியாகிவிட முடியுமா? எல்லாப் படைப்புக்களிலிருந்தும் சிறந்தனவற்றை மதிப்பிட்டுக் காட்ட முடியுமா? இப்போது திறனியின் தகுதிகளும் இங்கே முக்கியமானவை. முதலாவதாக, நாம் மேலே காட்டிய நூல்களைப் படித்தவுடன் எதுவுமே சிறப்பாகப் பெரு நிலையாக ஒருவனுக்குப் படவில்லை என்று கொள்வோம்; இத்தகையவன் எந்தக் காலத்திலும் திறனியாகும் வாய்ப்பே கிடையாது. சிலரோ சிலவற்றைப் படிப்பர்; புரிந்தது போலிருக்கும்; ஆனால் கவியரங்கத்தின் துணுக்குப் பாடலுக்கும் கம்பனின் காப்பியப் பரிமாணப் பாடலுக்கும் வேறுபாடு தெரியாது. எல்லாமே இவருக்குத் தமிழ்ப் பெருமைகளாகத்தான் தெரியும். பலவற்றைப் படித்தாலும் ஒரேமாதிரிக் குழப்பந்தான். கண்ணகி, மாதவி பாத்திரப்படைப்பு என்பதைச் சக்களத்திப் போராட்டத்தில் இனங் கண்டு பெரிதாகப் பேசக்கூடியவர்கள். இன்றைய 99 விழுக்காடுப் பட்டி மன்றப் புலிகள் இந்த வகையினர். இவர்கள் ஒரு மாபெரும் இலக்கிய அனுபவத்தின் பெரு நிலையை உள்ளுணர்ந்து கொண்டதும் கிடையாது; இப் பெருநிலையின் தாக்கம் கூட இவர்களிடம் விளைந்தது கிடையாது. இவர்களாலும் இலக்கியப் படைப்பின் பெரு நிலையைப் பார்வைப்படுத்த முடியாது. பின் இவர்களால் எப்படித் தீர்மானிக்க முடியும்? முடியாது. இன்னுஞ் சிலர், பழங்கால இலக்கியங்களில் எல்லாம் உண்டு என்பர்; அல்லது இல்லை என்பர்; இவர்களே புதிய காலப் படைப்புக்களில் எதுவும் இல்லை என்பர்; அல்லது இவற்றில் மட்டுமே உள்ளது என்பர். எது பழையது? எது புதியது? எனவே, எப்போது ஒரு காலத்தில் மட்டுமே ஆற்றலுடைய படைப்புக்கள் தோன்ற முடியும் என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டுவிட்டதோ அங்கே இலக்கிய ஆற்றலினைத் தெரிந்துகொண்டதாகச் சொல்லப் படுவது போலியான கூற்றே. இது ஒரு குண்டுசட்டிக் குதிரைச் சவாரிப் பெருமையே. இத்தகையவர்களாலும் திறனியாக முடியாது. நான்காவதாக, இலக்கியத்தை வெறும் விளம்பரக் கருவியாக மட்டுமே நினைப்பவர்கள். தாங்கள் நம்பும் மதம், கட்சித்தலைவர் கருத்துக்கள் ஆகியவற்றின் விளம்பரக் கோஷங்களாக இவர்கள் இலக்கியத்தைக் கருதுபவர்கள். இவர்கள் ஆரவாரமுடையவர்கள்தான்; ஆயினும், இவர்கள் இலக்கியத் திறனிகளாக மாட்டார்கள். பெரும்பாலும் இவர்கள் சந்தர்ப்பவாதிகளாகவே இருப்பர். வியாபார ரீதியாக இலாப நட்டக் கணக்கில் எழுத்தை மதிப்பவர்கள். திறனாய்வு நுண்மை இவர்களிடத்தில் வராது. ஐந்தாவதாக, தொழில் முறை இலக்கியச் சொற்பொழிவாளர்கள். இவர்கள் எல்லாவற்றிலும் பாண்டித்தியம் பெற்று நயமாக உரையாற்றக் கூடியவர்களே. இவர்கள் எதையும் நயமாக்கிடும் ஆற்றலினர். இதனாலேயே இவர்களுக்கு இலக்கியப் பெரு ஆற்றலை இனம்கண்டு வெளிப்படுத்த இயலாது. இவர்களால் கழுதை குதிரை

யாகிவிடும். ஓரளவிற்குத் தகுதியான திறனி என்பவன் எல்லாக் கால இலக்கியங்களிலும் பரந்த கல்வி அறிவு பெற்றவனாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட சிலவகைப் படைப்புக்களில் மட்டுமே அவனுக்கு விருப்பு இருப்பினும் அதனை இலக்கிய ஆற்றல் தன்மையுடன் பொதுநிலையில் வெளிப்படுத்தக் கூடியவனாக இருக்கவேண்டும். மற்றப் படி காலந்தோறும் விளையும் இலக்கிய வீச்சுக்களை அனுபவப்படுத்தக்கூடியவனாக இருப்பது மிக முக்கியம்.

பரந்த கல்வி அறிவு மட்டும் போதாது. இதன் மூலமாக ஒரு படைப்பின் ஆற்றலை உணர்வதோடு உணர்ந்ததைப் பிறருக்கு முறையாக வெளிப்படுத்தும் திறனும் வேண்டும். இலக்கியப் பெருநிலையை முறையாக இனங்காட்டி வழிகாட்டக்கூடியவனே சிறந்த திறனி எனலாம். இவ் வழிகாட்டுதலின் மூலமே திறனி தன் இலக்கியக் கடமையைச் செய்பவனாகிறான்.

எவ்வாறு தகுதியுடைய திறனி தன் பணியைச் செய்வான்?

## திறனியின் முறைகள் :

1. நவிற்சி : திறனியின் அடிப்படையான நோக்கு சிறந்ததை இனங்காட்டுவது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு சிறந்ததை இனங்காட்டுவது என்ற நிலையில் செயல்படும் போது இயல்பாகச் சிலவற்றைத் தீர்மானித்துச் சொல்கிறான் திறனி. தீர்மானகரமாகச் சொல்லும்போதுகூடவே எப்படிச் சிறந்ததாகிறது அல்லது ஆகவில்லை என்பதை விளக்குவதும் நிகழ்ந்துவிடுகிறது. இதுவே நவிற்சி (Interpretation) எனப்படுவது. தீர்மானிப்பதும் நவிற்சியும் இவ்வாறு ஒன்றில் ஒன்று பற்றி நின்றாலும், நவிற்சிக்குத் தனிப் பாங்கு உண்டு. பல நூல்களைப் படிக்கும் வாசகன் அவனளவில் சிலவற்றை உணர்ந்துகொள்ள முடியும்; உணரமுடியாத சில எல்லைகளில் உள்ள இலக்கியப் பெருநிலையை, இலக்கியத்துவ உயர்வைத் திறனியே விளக்கக்கூடியவன். மிகச் சிறந்த பல நூல்களில் தோய்ந்த அனுபவத்தாலும், அவனிடமுள்ள கவித்துவச் செழுமையாலும் திறனியே சிறந்த படைப்புகளின் சிறந்த அம்சங்களை எடுத்து விளக்கி, அவற்றின் அழகியல் ஒழுங்கின் உன்னதங்களைக் காண்பிக்க முடியும். சாதாரண நிலையில் நாம் சிலவற்றை உணர்ந்ததுபோல உணர முடியும். ஆயினும் படைப்பாளியின் முழுக் கலை வீச்சினை இனங்கண்டு கொள்வதில் ஓர் இடைவெளி இருப்பது போலவே நமக்குத் தோன்றும். இந்த இடைவெளியை நிரப்பி, சிறப்பின் பரிமாணங்களையும், படைப்பு என்ன, எப்படிச் சொல்லுகிறது, என்பதில் முழு அளவிலான மதிப்பினையும் நமக்குக் காட்டக் கூடியவனே திறனி. எனவே, அடிப்படையில் நவிற்சி என்பது திறனியின் முக்கியப் போக்காகும். படைப்பின் சிறப்பை வெளிப்படுத்தும் கவித்துவ முறையியலாகும்.

2. பொதுவிதிப்படுத்தல் : நவிற்சியில் ஈடுபடும்போது, பல்வேறு சிறந்த படைப்புக்களின் சில பொதுவான சிறப்புக் கூறுகள் உருவாகுவதுண்டு. இவற்றை மையமாகக் கொண்டு ஒரு படைப்பினைத் திறனாய்தலும் ஒரு முறையாகும். ஒவ்வொரு படைப்புக்கும் தனித்தனித் தன்மைகள் இல்லாமல் இல்லை. இருப்பினும் பல்வேறு படைப்புக்களை எடுத்து அவற்றின் கூறுகளை வகைப்படுத்தி உத்திகளை இனங்காட்டி அவற்றின் திறத்தைப் பொதுமைப்படுத்துதல் ஓர் முக்கியமான திறனாய்வுப் போக்காகும். முற்கால இலக்கியத் திறனிகள் பெரும்பாலும் இப்போக்கினரே. மேற்கு நாட்டினரான அரிஸ்டாட்டில், நம் நாட்டினரான தொல்காப்பியர் ஆகியோரை இம்முறையினர் எனலாம். தொல்காப்பியர், தம் காலப் பாடல்களை எடுத்து முதல், கரு, உரி எனப் பொருளைப் பிரித்து, திணைகளை வகைப்படுத்தி, இது இப்படி வருவது, இப்படி வர வேண்டும், இவ்வாறு கூற்று நிகழவேண்டும், நிகழக் கூடாது என்ற பொது விதிகளை வகுக்கிறார். நாடகம் பார்ப்பவர் மனத்தைத் தூய்மைப்படுத்தும் வகையில் ஆற்றலும் படைப்பு ஒழுங்கும் துன்பியல் நாடகத்திற்கு வேண்டும் என்று கூறி, அதன் கட்டுமானங்களை எல்லாம் அரிஸ்டாட்டில் விளக்குவார்.

தொல்காப்பியரோ ஒரு நீண்ட இலக்கிய மரபினைப் பொதுவிதிகளில் நோக்கு, வண்ணம், வனப்பு என்ற சிலவற்றையும் கூறிக் கவிதைகளின் ஆற்றல் நிலைகளைக் காட்டுகிறார். எனவே, பொதுவிதிகளை உருவாக்கி இவ்வாறெல்லாம் படைப்பு இருந்தால் சிறந்ததாகத் திகழும் எனக் கூறுவதும் ஒரு திறனாய்வு முறை எனலாம்.

ஆனால் திறனி என்பவன் சில விதிகளை உருவாக்கி எல்லாக்காலப் படைப்புக்களையும் அவற்றிற்குள் திணிப்பதையே நோக்கமாகக் கொண்டவன் அல்லன். அவன் செயல்படுவதில் மிகுந்த நயமும் தொலைப் பார்வையும் அமைய வேண்டும். தன் கவித்துவ நவிற்சியை அல்லது வீச்சினை ஏற்கனவே படைப்புக்களில் கிடைக்கும் பொதுவிதிகளின் பினே செலுத்துபவனாக இருக்கக் கூடாது. மாறாக விதிகள், கவித்துவ வீச்சின் பரிமாணங்களுக்கேற்பப் பின்னியங்குபவையாக இருக்க வேண்டும். சான்றாக,

> முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங் காலை முறை சிறந்தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை
>
> (பொருள் : 3)

முதல் கரு உரி என்ற முறையில் அகப் பாடல்களை அமைப்பது என்பது அன்றைய மரபு. இதுவே எல்லாக் காலத்திற்கும் உரிய பொது வழியாகக் கொள்ளுதல் கூடாது. இன்றையப் பாடல்களையோ அல்லது பிறகாலப்பாடல்களையோ எடுத்து வைத்து முதல் கரு உரி முறைப்படிதான் அமையவேண்டும் என்றும், அதற்கு மாறானவை எல்லாம் ஒழுங்கற்றவை, பெருமையற்றவை என்றும் அறுதியிடல் கூடாது. மாறாகப் புதிய படைப்பு முறைகளை இனங்கண்டு வெளிப்படுத்தி, அவற்றின் பொதுமைப் பண்புகளைக் காட்டலாம். மேலும், இப் பொதுவிதிகளுக்கும் மேலாக ஒவ்வொரு படைப்பிற்கும் உரிய தனித்துவப் பாங்கினை (Unique)யும், வெளிப்படுத்தும் தனி ஆற்றல்களையும் நவிற்சிப்படுத்த வேண்டும். இதுவே திறனாய்வு.

**தனிப்படைப்புக்களை ஆய்தல் :** தனித்துவத்தை வெளிப்படுத்துவது என்பது திறனாய்வில் அதிகமான கவனத்திற்குரியது. அண்மைக் காலங்களாகவே, தனி ஒரு படைப்பாளியின் படைப்புக்களை ஆய்வது பெருகியுள்ளது. கம்பன், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், அம்மூவனார், கபிலர், பரணர்-என்று குறிப்பிட்ட சிலருடைய நூல்களை எடுத்து அவற்றினை ஆய்தல் பெருகியுள்ளது. இதை முறையாகச் செய்யவேண்டும். ஒருவன் எழுதிய எல்லாப் படைப்புக்களுமே சிறந்தவையாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவுகட்டிவிடக் கூடாது. அந்தந்தப் படைப்புக்களின் இலக்கிய ஆற்றலை அந்தந்தப் படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்த வேண்டும். படைப்புக்குப் படைப்பு வேறுபாடுகள் இருக்கலாம். பொதுவான ஒரு போக்குக் காணப்படலாம். பிறவற்றின் தாக்கம் இருக்கலாம். பிறவற்றின் நடை இருக்கலாம். பாரதி எவ்வாறு சிந்து, கண்ணிகளில் ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்டானோ அதுபோலப் பலர் வெளியிடலாம். சொல் ஆட்சி, வரி அமைப்பு, பேச்சு முறைமை போன்ற நடைத் தோரணைகள் பாரதியிடமிருந்து வேறுபடாமலிருக்குமானால் அதனைத் தனித்துவமுடைய சிறந்த படைப்பு எனச் சொல்ல முடியாது. இது போலவே, ஒவ்வொரு தனித்துவப் பாங்குகளையும் கண்டறிய வேண்டும். கம்பன், பாரதி, இளங்கோ போல ஏதோ ஓர் பேராற்றல் மொழித் தோரணைகளில் வெளிப்படுகிறதா? புதிய தனித்துவமான அனுபவம் கிடைக்கிறதா? என்று காண வேண்டும். ஒருவன் படைத்த எல்லாவற்றிலும் காணப்படுகிறதா, ஒன்றிரண்டில்தான் காணப்படுகிறதா என்பவற்றைத் திறனியே தன் ஆழ்ந்த கூரிய கவித்துவப் பார்வையால் அறுதியிட முடியும். இவ்வாறு ஒரு காலத்தில் தோன்றியுள்ள சிறந்த படைப்புக்களை மட்டும் இனங்கண்டு கொள்ள முடிந்து, பிறருக்கும் அச் சிறப்புத் தன்மைகளை நவிற்சி செய்யும் இலக்கிய அனுபவத்தின் ஆழ்ந்த அகன்மையைத் திறனி உருவாக்க வேண்டும். இதுவே, தான் செயல்படும் முறை.

செய்முறை : படைப்புக்களின் ஆழ்ந்த அகக் கட்டுமானத்தின் பாங்கு என்பதன் மூலமே ஆழ்ந்தவனுபவம் கிடைக்கும். இங்கே உருவமும் உள்ளடக்கமும் என்ற இருவேறு நிலைக்கு இடமில்லை. எவ்வாறு உருவ உள்ளடக்கம் ஒரு படைப்பில் பின்னித் தழுவிக் கிடக்கின்றது என்பதைத் திறனியே வெளிப்படுத்துபவன், வெளிப்பாடு என்பது முழுதும் மொழி வடிவத்தில் காணப்படுவ தால் மொழித் தோரணைகளும் படைப் பாளியின் நோக்கமும் எவ்வாறு சார்பு கொள்கின்றன என்பதைக் காட்ட வேண் டும். இச்சார்புத் திறமே ஒருவனின் தனித் துவத்தைக் காட்டும். மொழிக்கென்று சில பொதுக்கூறுகள் உண்டு. இப் பொதுப் பண்புகளும், படைப்பாளியின் நோக்கிற்கேற்ப அமையும் மொழிப்பாங்கும் எவ்விதத்தில் புத் தாற்றலாய் விளங்கி அமைகின்றன என்பதைக் காண வேண்டும். சொற்கள் மூலம், வரி மூலம், வரித்தோரணைகள் மூலம், தொடர் கள் மூலம், குறிப்புக்கள் மூலம் என விரிவாகக் காட்டி விளக்குவது செய்முறைத் திறனாய் வாகும். இது மிகவும் தேவையானதே. மூலத்தின் பொருளையும், பொருள் வெளி யாகும் மொழிப் பாங்கினையும், அதனுள் காணப்படும் உத்திகளையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். சுட்டு, நகை போன்ற குறிப்புக்கள், இறைச்சி, உள்ளுறை உவமம் போன்ற உத்திகள், உவமை, பொருள்கோள், வண்ணம்—போன்றவை யாவும் பொதுமைப் படுத்தப்பட்ட விதிகளே. இவை, ஒவ்வொரு ஆசிரியனிடம் வெளிப்படும் தோரணைகளைக் கணக்கி லெடுத்தால்தான் ஆற்றல்மிகு தனித்துவப் பாங்குகளை இனங்காண முடியும். இங்கு, கவித்துவப் பரிமாண நூதன முறையின் பின் தான் விதிகள் போக வேண்டும். விதிகளுக்காக அல்ல, படைப்புகள். செய்முறை மூலம் வார்த்தைகளுக்கும் படைப்பாளியின் உளப் போக்கிற்கும் உள்ள தொடர்பு மிக அருகில் உணரப்படக் கூடும். உளவியலுக்கு மிக முக்கிய இடம் இங்கே உண்டு. திறனி கவனிக்க வேண்டும்.

படைப்பாளன் வாழ்நிலையிலிருந்து : இந் நிலையில், படைப்பாளி, ''எப்போது எழுதினான், எங்கே எழுதினான், ஏன் எழுதினான். அவன் குடும்பத்தின் நிலை இது. இதற்கு அவன் மனைவி காரணம், இதைத்தான் நாட்குறிப்பில் எழுதியிருந் தான்'' என்றெல்லாம் துருவித்துருவி ஆரா யும் போக்கிலும் திறனி ஈடுபட நேரிடும். இதில் ஒரு கவனம் வேண்டும். இல்லை யென்றால் திறனி என்பவன் தனிப்பிரச்சினை களின் மர்மம் தேடும் துப்பறியும் ஆளாக மாறி விடுவான். ஒரு படைப்பாளியின் வாழ்க்கை உண்மைகளைத் தேடித் தேடித் துருவி ஆராய்ந்து விவரங்களைத் திரட்டுவது பாராட்டுவதற்குரியதே. ஆனால், இது வெறுமனே புள்ளிவிவர விளக்கமாகப் போய்விட்டால் அது பயனில்லை. வறுமை யில் வாடினான், கஞ்சா குடித்தான், அதனாலேயே பாரதி தன் பாடல்களில் மயக்குஞ் சொற்களையும், சமதர்மத்தை யும் பாடினான் என்று கூறிவிடுவது, குன்றக் குறைத்தல் என்னும் கவித்துவ நெறி சாராத உப்புப்புளி விவகாரமாகப் போய் விடும். படைப்பாளி உப்புப்புளி விவகாரத் திற்குட்படாதவன் அல்ல; ஆனால் அவ னிடம் உள்ள கவித்துப் பெருநிலை அனுப வத்தை—கவித்துவப் படிமத்தை அடை யாளங் காணாத அலசல் மலட்டு ஆய்வாகப் போய்விடும். திறனிக்கு, அவனுடைய துருவித்தேடும் கடுமையான உழைப்போடு, இந்தக் கவித்துவப் படிம அனுபவத்தேர்ச்சி இல்லாவிட்டால். திறனாய்வு என்பது இலக்கியத்திற்குத் தொடர்பில்லாததாகப் போய்விடும். படைப்பாளன் வாழ்நிலை களோடு அலசும்போது இன்னொரு கவனப் பார்வையும் திறனிக்கு வேண்டும். அது வரலாற்றுப் பார்வையாகும்.

வரலாற்றியல் நோக்கு : எந்தச் சிறந்த படைப்பாளியிடமும் தனித்துவக் கூறுகள் எவ்வாறு காணப்படுகின்றனவோ, இத் தனித்துவ அமைப்புக்கள் எவ்வளவு முக்கிய மோ, அதுபோலவே வரலாற்றியற் கூறு களும் முக்கியமானவை. ஏனெனில் தன் பாங்கில் ஆற்றலுடன் செயல்படுவது போல வே, படைப்பாளி, ஒரு குறிப்பிட்ட வரலாற் றுக் காலப் பின்னணியிலும் செயல்படுகிறான். தன் காலத்தையும் கடந்து ஓர் உன்னதத் தைப் படைப்புக்களில் உருவாக்குவது

நிகழ்ந்தாலும், இந் நிகழ்வானது, குறிப்பிட்ட அக்கால வாழ்வெல்லைக்குள்ளான அவன் காரியங்கள் நடுவேதான் உருவாகிறது. எனவே படைப்பாளியின் காலம் பற்றிய வரலாற்றியல் அறிவு திறனிக்குக் கட்டாயம் வேண்டும். பொருளாதாரம், அரசியல் என்ற இவற்றின் நிலைகளையும், சமூக அமைப்பின் தன்மைகளையும் அடையாளங் கண்டுகொள்ளும் அறிவு திறனிக்கு வேண்டும். இல்லையென்றால் படைப்புக்களின் பொருளையும் அவற்றின் மரபுகளையும் உணர்ந்துகொள்ள முடியாது. அடிப்படையான பல செய்திகள் தெரியாமலே போய்விடும். சான்றாக, தொல்காப்பியரின் பொருளதிகாரத்தையும் சங்கப் பாடல்களையும் எடுத்துக் கொள்வோம். இவற்றைப் புரிந்துகொள்ள வரலாற்றின் அறிவு இல்லையென்றால் பாடல் அமைப்புக்களை விளங்கிக் கொள்ளவே முடியாது. பொருளதிகாரத்தில் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைப் புரிந்து கொள்ளவும் இது தேவை. வீர இயல் பாடல்களே சங்கப் பாடல்கள் என்பதும், இவை மனித வரலாற்று வளர்ச்சிப் போக்கில் அரசுருவாக்கம் நிகழ்ந்த வீரக்காலச் சூழலில் உருவானவை என்பதும், பொதுவான ஒரு வரலாற்று இயலான கருத்து. இச்சூழலின் வாய்மொழி மரபின் முதிர் நிலையாகவே பழங் கவிதைகள் தோன்றின. வாய்மொழி இசைமை பற்றி, அன்றையப் பாணர்க்கு வழிகாட்டும் முறையில் தொல்காப்பியர் கூறுகிறார்.

அசையும் சீரும் இசையோடு சேர்த்தி
(பொருள், 319-1)

தன்பால் அல்வழி தான் நடை இன்றே
(பொருள், 329)

இசைநிலை நிறைநிற்குவதாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே
(பொருள், 335)

எழுத்தள வெஞ்சினும் சீர்நிலைதானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப
(பொருள், 350)

போன்ற சூத்திரங்கள் மூலம், அசை, சீர் அமைப்பே இசைமையை அடிப்படையாகக் கொண்டதென்றும், இவ்விசைமைத் தன்மை கொண்ட

நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே
(பொருள், 340)

என்பதன் மூலம், அடி என்பது ஒரு அடிப்படையான இசைமை அளவு என்பதும் தெளிவாகப் புலனாகி விடுகிறது.

இவ்வாறான அடிகொண்டதே பாட்டு; இதுவே அதன் தன்மையும் சிறப்பும் என்பதை,

அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே
(பொருள், 343)

என்பார் காப்பியர். இவை வாய்மொழிப் பாடல் மரபின என்பதை,

நிரையவண் நிற்பின் நேரு நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்

என்பார். இவ்வாறு இசைமையோடு கூடிய அசை சீர்அடி அமைத்து ஒரு பொருளைக் கூறி-அடிஅடியாகக் கூறிச் செல்லுமாறு அமைத்தல் யாப்பு எனப்படுவது.(இவ்வாறு அமைவது வாய்மொழிப் பாடலின் வாய்ப் பாட்டு மரபு என்பதை வாய்மொழிப்பாடல் ஆய்வாளர் பலர் விளக்கியுள்ளனர்).

எழுத்து முதலாக ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

இந்த யாப்பு தமிழ் யாப்பு; இந்த யாப்பு மரபில் உள்ள செய்யுள்களே பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, முதுசொல், அங்கதம் முதலானவை. எனவே, செய்யுள் என்பது இலக்கியம் என்ற பொதுவானது என்பதும் விளங்குகிறது; யாப்பு என்பது யாவிற்குமுரிய வெளியீட்டு முறையின் ஒரு மொழித் தோரணை என்பதும் விளங்குகிறது. இன்னும் தொல்காப்பியர் காட்டும் பல்வேறு வண்ணங்கள், நோக்கு, உத்திகள் யாவும் அடிப்படையியல் வாய்மொழி மரபுத்தன்மை கொண்டவை. இவ் வாய்மொழி மரபிற்கே உரிய திரும்பத் திரும்பவரும் அடைகள், தொடர்கள், அடித் தோரணைகள் போன்றவற்றைச் சங்கப் பாடல்களில் காண்கிறோம். இவற்றை டாக்டர் கைலாசபதி தம்முடைய Tamil

Heroic Poetry, ஒப்பியல் இலக்கியம்- ஆகிய நூல்களில் விரிவாக விளக்குகின்றார். சங்கப் பாடல் வாய்மொழிப் பாடல்கள் என்று கூறுவதல்ல இதைக் கூறுவதன் நோக்கம். ஆதிகால வாய்மொழி மரபின் வளர்ச்சியாக, முதிர்ச்சியாக எழுந்து இலக்கியம் உருவானதும் அரசு என்ற உருவாக்கம் நிகழ்ந்த முற்காலத்து வரலாற்றுப் போக்கின் விளைவாக இவ் வெழுத்துருவாக்கம் நிகழ்ந்ததும் வரலாற்று உண்மை. எனவேதான் இக்காலப் பாடல்களுக் கென்று சில பொதுப்பண்புகளுள்ளன. சங்கப் பாடல்களில் காணப்படுகின்ற வாய்மொழிக் கூறுகளே இப்பொதுப் பண்புகள். இவற்றையும் தாண்டி பாடல்களின் தனித்துவ ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும். வாலாற்றுக் கால கட்டங்களை அறிவியல் முறையில் அறிந்து கொள்ளக்கூடிய தகுதி திறனிக்கு இல்லை யென்றால் பொதுப்பண்புகளையும் தனித்துவச் சிறப்புக்களையும் ஈவிற்சி செய்ய முடியாது. மிக எளிதாகவும் ஆரவாரமாகவும் நயங்களைக் கூறிப் பழமபெருமை பேசியே காலத்தை ஓட்டி விடக் கூடிய நிலையே ஏற்படும். சங்க இலக்கிய ஆய்வுக்கு வரலாற்றியல் அறிவு மிகத் தேவை. இக்காலத்தை ஓட்டிய கவிதை உருவாக்கத்தின் வளர்ச்சிப் போக்குகள், கவிதை மொழியின் தோரணைகள்-இவற் றைப் புரிந்துகொள்ளாமல் நயம் உரைப்பது சாதாரணமான ஒரு புலவனின் 'காரியம், திறனிக்கு இவை யாவற்றையும் புரிந்து கொள்ளும் ஆற்றல்வேண்டும். இதுபோலவே எல்லாக் காலகட்டங்களுக்கும் உரிய சில பொதுவான வரலாற்றியல் கூறுகள், சமூகம், பொருளாதாரம், அரசியல் சார்ந்தே இருக் கும். இங்கேயும் ஒரு கவனம் கட்டாயம் வேண்டும். சமூக அரசியல் பொருளாதாரத் தைப் பிரதிபலிப்பது மட்டுமே இலக்கியம் என்ற பிரதிபலிப்புக் கொளகை (Theory of Reflection)க்கு ஆட்பட்டுவிட்டால், திறனி என்பவன் குறையுவடயவ னாகிவிடுவான். ஏனெனில் படைப்பாளி என்பவன் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்து எழுதினாலும், எல்லாக் காலத்திலும், ஓர்மைகளை (Consciousness)த் தொடக்கூடிய மனிதத்துவப் பண்பாட்டு வலுவோடேயே படைக்கிறான். வெறும் பிரதிபலித்தல் என்பது வறட்டுத்தன மான வரலாற்று முறை கொண்ட இலக்கியப் பார்வை. திறனி இங்கே தன்னை, இலக்கிய ஆற்றலை முழுமையாக நேர்கொள்ளும், நேர்கொண்டு நவிற்சி செய்யும் ஆற்றலை அறிவை வளர்த்துக் கொள்ளாவிட்டால், ''இலக்கியத் திறனி'' என்ற தகுதியை இழந்து விளம்பர ஆளாக மாறிடும் நிலைமை ஏற் பட்டும். மதம், கட்சி-சார்ந்தவர்கள் நிலை இதுதான். மதம், கட்சிச் சார்பு இருப்பினும் அதையும் மீறி இலக்கியத்துவத்தைப் புரித்து கொள்வது முடியக்கூடியதே. சமூக அமைப்பு மாற்றம் பற்றிய தீவிரமான கருத்துக் கொள்வதும், இலக்கியத்துவ ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு எதிரான தல்ல. மாறாக ஆரோக்கியமான வலுவான மனித்துவ உயர்வுக்கே பயன்படுவது. ஆனால் இன்று, இலக்கியத்துவம் தெரியாத வறட்டுச் சமூகப் பார்வையே வளர்ந் துள்ளது.

இன்னொரு கவனமும் தேவை. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, ஒரு குறிப்பிட்ட காலத் தேவைக்காக மட்டும் ஓர் இலக்கியம் படைக்கப்பட்டது என்று கூறும போக்கும் உண்டு. இம்முறையில், படைப்பாளியின் நோக்கம்மட்டுமே முகியமாக எடுத்துகொள்ளப்படும். இந்தக் கால்த்தில் இந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது. இஃதோடு சரி; இந்த நோக்கம் ஒன்றினை மையமாகக்கொண்டு ஒவ்வொரு காலத்தின் படைப்புக்களையும் அப்படியே நியாயப் படுத்தி அக்கால எல்லையோடு முடித்துக் கொண்டு போய்விடுவதே இம்முறை. இம் முறையை Historical Reconstructionism (வரலாற்று மீட்புருவாக்கம்) என்பார் ரெனி வெல்லாக். இம்முறைக்குத் திற னாய்வு முக்கியமாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. சிறந்த இலக்கிய ஆற்றல்கள் அடையாளங் காட்டப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் பின்புலத்தில், ஒரு மரபுத் தொடர்ச்சியாக புதிய அனுபவங்கள் வடிவமாகும் நெறியை வெளிப்படுத்தி, இது எவ்வாறு மனித்துவச் சக்தியுடன் காலங் கடந்து வாழ்கின்றது என்பதைப் பார்க்க, இந்த வரலாற்று மீட்புருவாக்கம் தடையாகி விடும். இலக்கிய அனுபவத்தைச் சிறுத்துப் போக வைத்துவிடும். வாழுங் காலத்தில் கிடைத்த

படைப்பாளியின் ஏதோ ஒரு சமகால வெற்றி அல்லது தேவை என்ற அளவில் மட்டுமே நின்று விடும். எனவே, வரலாற்றுப் பார்வையையும் சிறந்ததை அடையாளங் காட்டும் திறனாய்வுப் பார்வையையும், படைப்பாளனின் படைப்புக்களில் வெளிப் படும் முழு அளவிலான அடிப்படைக் கொள்கையையும் திறனி கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் இலக்கியப் படைப்புக்களின் சிறப்புத் தன்மைகளைப் புரிந்துகொண்டு நவிற்சி செய்ய முடியும். வரலாற்றுப் பார்வை எவ் வளவு முக்கியமானதோ அதேபோல இலக்கி யத்துவ நுண்மையைக் காணும் பார்வையும் முக்கியம். இல்லை யென்றால் திறனியால் இலக்கியத்துவத்தை வெளிப்படுத்த முடியாது. எனவே, படைப்பாளியின் வரலாற்றுக் காலம், அதனுள் இயங்கும சமூக, பொருளாதார அடிப் படை, படைப்பாளியின் தனிவாழ்வு, அவன் எழுதும் மொழித்தோரணை போன்றவற்றை எல்லாம் கணக்கில் கொண்டு, ஆற்றல் மிகு படைப்பாக, குறுகிய கால வாழ்வை மீறி நிலைத்திருக்கக் கூடிய இலக்கியத்துவ வீச்சி னைப் புரிந்து வெளிப்படுத்தி, மற்றவர்க்கு இந்த ஆற்றலகளை உணரவைப்பவனே சிறந்த திறனி; இவனிடமும் சில சில புரியாமைகள் இருக்கலாம். ஏனெனில் பரந்த அறிவு என்பது அனைத்தையும் புரிந்துவிட்ட அறிவு என்பது அல்ல. ஆயினும் இவனே தகுதியுடைய திறனி. இவனது எழுத்தே சிறந்த திறனாய்வாகும்.

*இக்கட்டுரையின் ஆதார நூல்கள் :*


1. தொல்காப்பியம், பொருளதிகாரம்.
2. An Introduction to Literary Criticism, S. M. Schrieber, Pragmon Press, London, 1965
3. Functional stylistics, V. Prakasam, Patiala, 1982.
4. Theory of Literature, Rene wellak & Austin Warren, Penguin books, 1970
5. The Singer of Tales, A. B. Lord, London, 1960.
6. Tamil Heroic Poetry, K. Kailasapathy, Oxford University, London, 1968.

# தெம்மாங்கு

டாக்டர் குருவிக்கரம்பை சண்முகம்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

இவர் தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணிக்கு அருகில் உள்ள குருவிக்கரம்பை என்னும் சிற்றூரில் கி.பி. 1942இல் பிறந்தவர்; இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது ''புகாரில் ஒரு நாள்'' என்னும் தலைப்பில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றார்; தஞ்சாவூர் மாவட்டக் கொடிக்கால் ஏற்றப் பாட்டுக்கள் என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பதினான்கு ஆண்டுகளாகப் பணிபுரிந்து வரும் இவர் ''பூத்த வெள்ளி'' முதலிய பத்து நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நிரைப்படப் பாடல்களையும் எழுதி வருகின்றார்.

0.1. தமிழ்நாட்டுக் கிராம மக்களால் பெரிதும் விரும்பிப் பாடப்படும் நாட்டுப் புறப்பாடல்களுள் ஒன்று தெம்மாங்கு. தேன்போல் இனிக்கும் பாடல் என்பதால் தேன்பாங்கு என்றும் கூறுவர்; தென்பகுதியில் வாழும் மக்களால் பெரும்பாலும் பாடப்படுகின்ற காரணத்தால், 'தென்—பாங்கு' எனக் கூறப்பட்டது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

0.2. தெம்மாங்குப் பாட்டு எப்பொழுது பாட வேண்டும் என்பதற்குக் காலக்கட்டுப் பாடு எதுவும் இல்லை. எத்தொழில் புரியும் போதும் இவ்வகைப் பாடலைப் பாடலாம். வண்டி ஓட்டும்போதும், தனிவழியில் நடக்கும் போதும், வயல் வேலைகள் பார்க்கும் போதும், நிலா வெளிச்ச முற்றங்களில் பொழுது போக்கும்போதும் தெம்மாங்குப் பாடல்களைப் பாடுவார்கள்.

0.2.1. பாடுவோர்: வண்டிக்காரர்கள் பாரமேற்றிக் கொண்டு நெடுந்தூரம் பயணம்போகும் பொழுது இப்பாடல்களைப் பாடுவார்கள். களைப்புத் தெரியாமல் வேலையில் மகிழ்ச்சியோடு ஈடுபடவே அவர்கள் பாடுகிறார்கள். வண்டி ஓட்டிச் செல்லும் இரவு நேரங்களில் தாங்கள் உறங்கிவிடாமல் இருப்பதற்காகவும் அவர்கள் இந்தப் பாடல்களைப் பாடுகிறார்கள். தன் காதலியோடு திருவிழாக்களுக்கு நடந்துசெல்லும் இரவு வேளையில் ஆடவர்கள் மகிழ்ச்சியோடு பாடுவதுண்டு.

1.0. தெம்மாங்குப் பாடலின் உட் பொருள் பெரும்பாலும் காதலாகவே இருப் பதால் காதல் பாட்டு என்றே இதனைக் கூறலாம். வெகுசில பாடல்கள் வழிபாட்டுப் பாடலாகவும், ஆண்பெண் தர்க்கப் பாடலா கவும் அமையும். வண்டி ஓட்டும் ஆடவர்கள் தாம் இப்பாடலைப் பெரும்பான்மையாகப் பாடும் பாடகர்களாய் உள்ளனர். எனினும், சிலசமயம் பெண்களும் இப்பாடல்களைப் பாடுவதுண்டு. ஆணும் பெண்ணுமாக மாறி மாறிப் பாடும் வழக்கம் மட்டுமன்றி, பெண் மட்டுமே இப்பாடலைத் தனித்துப் பாடும் வழக்கமும் காணப்படுகிறது. பல வண்டிகள் போகும் பொழுது முதல் வண்டிக்காரன் ஒரு கண்ணி பாடி முடிக்க, அவ்வண்டியினைத் தொடர்ந்து வரும் மற்றொரு வண்டிக் காரன் அடுத்த கண்ணியைப் பாடுவதும் உண்டு.

2.0. இசைப்பாட்டு: தெம்மாங்குப் பாட் டில் பாடற் பொருளைக் காட்டிலும், இசை இனிமையே மேலோங்கி நிற்கும். சங்கீதக் கச்சேரிகளில் இடம்பெறும் அளவிற்குத் தெம்மாங்கு இசைஅமைப்பால் கவர்ந்துள் ளது. பாமர மக்கள் அல்லாமல் பிற்காலப் புலவர் பெருமக்களும் வெகுவாகத் தெம் மாங்கைப் பின்பற்றிப் பாடல் புனைந்துள் ளார்கள். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் ஆகி யோரையும் இப்பாடல்கள் கவர்ந்துள்ள தால் அவர்கள் இப்பாடல்கள் பற்றிப் போற்றி எழுதியுள்ளார்கள்.

3.0. தோற்றமும் வளர்ச்சியும்: இப் பாடல்கள் தமிழ்நாட்டு மக்களால் 'பழங் காலத்திலிருந்தே பாடப்பட்டு வருகின்றன எனலாம். தொல்காப்பியர் 'பண்ணத்தி' என்று குறிப்பிட்டுள்ளது தெம்மாங்கு போன்ற பாடல்களைத்தான். தெம்மாங்குப் பாடல் தனக்குரிய 'மெட்டை', அதாவது 'பண்ணை' ஒட்டியே பாடப்படும். தெம் மாங்கிற்கென்று தனியே ஒருமெட்டு உண்டு. அந்த மெட்டும் மாற்றி மாற்றிப் பாடப் படும்.

3.1. இளங்கோவடிகளின் சிலப்பதி காரத்தில் 'மனையறம்படுத்த காதை'யில் கோவலன் கண்ணகியைப் போற்றிப் பாடும்:

> '' மாசறு பொன்னே; வலம்புரி முத்தே;
> காசறு விரையே; கரும்பே; தேனே!''

எனத் தொடங்கும் பாடல் நாட்டுப்புறப் பாடலான தெம்மாங்குப் பாடலின் பாணி யில் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் வரும் 'மடலேறுதல்' பற்றிய பாடல்கள் ஒரு தலைக் காதலால் ஆடவன் பாடும் பாடல் களாக அமைந்துள்ளன. இப் பாடல்களின் பொருளையும், சொல்லும் முறையையும், பிற்காலத்தில் தோன்றிய ஒருதலைக் காத லை வெளிப்படுத்தும் தெம்மாங்குப் பாடல் கள் பெரிதும் ஒத்து அமைந்துள்ளதால், 'மட லேறுதல்' பற்றிய சங்ககாலப் பாடல்களைத் தெம்மாங்கு பாடலின் இலக்கிய வடிவம் என்று கருத வாய்ப்புகள் உள்ளன: இரு பதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞரான சுப்பிரமணிய பாரதியார் தெம்மாங்குப் பாடலின் வடிவத்தைப் பின்பற்றிப் பாடி யுள்ள 'வண்டிக்காரன் பாட்டு'தான் பிற் காலத் தெம்மாங்குப் பாட்டின் வடிவத்தை இலக்கியவாணர் கையாண்டு பாடியதற் கான சரியான எடுத்துக்காட்டு எனலாம்.

4.0. தற்கால நிலையும் பாடல் பதி வும்: தற்காலத்தில் தெம்மாங்குப் பாடல் களைப் பாடும் பழக்கம் குறைந்துவிட்டது எனலாம். போக்குவரத்துச் சாதனங்களின் (பஸ், ரயில்) பெருக்கமே அதற்குக் காரணம். தமிழகத்தில் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய மாவட் டங்களின் தெம்மாங்குப் பாடல்களைப் பாடுவோர் இன்றும் இருக்கிறார்கள். இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் சில ஊர்களில் இந்தத் தெம்மாங்குப் பாடல்களை ஆடவர்களும், பெண்களும் தனித்தனியே பாட யான் பதிவு செய்துள்ளேன். எனக்குக் கிடைத்த பாடல்கள் வண்டி ஓட்டிகள், வழி நடந்து திருவிழாக்களுக்குச் செல்வோர், வயல் வெளிகளில் வேலை செய்யும் பெண்கள் ஆகியவர்களால் பாடப்பட்டவையாகும். பாடல்களின் பொருள் காதலே யாகும்; பெண்களை வருணித்து ஆண்கள் பாடுவது

போலவே, தன் மனம் கவர்ந்த ஆண் மகனை வருணித்துப் பெண்களும் பாடியுள்ளனர்; தன்னைப் புறக்கணிக்கும் பெண்ணை எண்ணி ஒருதலைக் காதலால் ஆண்கள் பாடுவதுபோல், தன்னைக் கைவிட்ட ஆணை எண்ணிப் பெண்களும் பாடியுள்ளனர். யான் சேகரித்த பாடல்களைக் கொண்டும், மற்றவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ள பாடல்களைக் கவனித்தும் தெம்மாங்குப் பாட்டைப் பற்றிய என் கருத்துக்களைக் கீழே தந்துள்ளேன்.

4.1. வழிநடந்து செல்லும்போது :

கார்த்திகைத் தீபத்தைக் கண்டு மகிழத் தன் காதலியோடு நடந்து போகிறான் ஒருவன்; அவன் நடந்து போகும் அழகைக் காதலி முதலில் பாராட்டிச் சில வரிகள் பாடுகிறாள் :

''தானும் நடந்தநில்லே
நடப்பாரைப் பார்த்தநில்லே
சாமி நடையைப் போல
தரணியில் கண்டநில்லே!''

என்ற அவளது பாட்டு வரிகளைத் தொடர்ந்து அவன் பாடத் தொடங்குகின்றான் :

''மானா மதுரைப் பிள்ளை
மாங்குளத்துக் கள்ளப் பிள்ளை
தேங்காய் நிறத்துப் பிள்ளை
தேடுறானே உங்கத்தை மகன்''

என்ற அவன் பாட்டு வரிகளில் காதலியின் ஊர், காதலியின் நிறம், காதலிக்கும் அவனுக்கும் உள்ள சொந்தம் ஆகியன குறிப்பிடப்படுகின்றன. மேலும், அவன் தொடர்ந்து பாடும் பாட்டு வரிகளில் வழியில் நடந்து செல்லும் ஊர்கள், அதன் நிலஇயல்பு, அவர்கள் செல்ல வேண்டிய ஊர், அந்த ஊருக்கு அவர்கள் எதற்காகப் போகிறார்கள் என்பன குறிப்பிடப்படுகின்றன.

''ஏத்தமடி நாச்சிகுளம்
இறக்கமடி பள்ளவெட்டி
தூரமடி சோழவந்தான்
தொடர்ந்து வாடி நடந்து போவோம்
கார்த்திகைத் தீபமடி
கண்டவர்க்கு மோட்சமடி
நேர்த்திகைத் திருநாளடி
நீயும் நானும் போவோமடி''

(பாடியவர் கு. முத்தையா பிள்ளை, சோழவந்தான், மதுரை மாவட்டம்)

மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் என்ற ஊரில் யான் பதிவு செய்த இப் பாடல், சோழவந்தான் கோயிலுக்குக் கார்த்திகைத் தீபம் காணவரும் காதலர்கள் வழிநடந்து வரும்பொழுது பாடிய பாடலாக அமைந்துள்ளது!

4.2. வண்டி ஓட்டிச் செல்லும்போது :

தெம்மாங்குப் பாடல் தவழ்ந்து வரும் மற்றொரு சூழ்நிலையைக் காண்போம்: நிலவு; தூங்காத நேரம்; விடிந்தால் நகர் ஒன்றில் சந்தை; அதில் வியாபாரம் செய்ய நாட்டுப்புறங்களில் விளைந்த பொருள்களின் பாரம் ஏற்றி வண்டிகள் சென்று கொண்டிருக்கின்றன; திருடர்கள் மிகுந்த காட்டுவழி: வண்டிகள் அதனால்தான் கூட்டம் கூட்டமாக வருகின்றன: வண்டி ஓட்டி உறங்கி விட்டால் தீமை நேரலாம். முதல் வண்டி தடம்மாறினால் பிற வண்டிகளும் மாறும்: எனவே தான், முதல்வண்டிக்காரன் தூக்கத்தை நீக்கித் தொழிலில் விழித்திருக்கும் பொருட்டு ஊக்கமுடன் பாடுகிறான், ஒரு பாட்டு: அந்தப் பாடல், தன் காதலி பற்றி வண்டிக்காரனின் நினைவில் மலர்ந்தது:

''கேப்பை கதிருபோலே
கேட்டேனடி உன் வார்த்தையை
வாழ்க்கைப்பட மாட்டோமுனு
வகைமோசம் ஆனியேடி
கிள்ளிக் கொசுவத்துக்கு
கீழ்மடி வெத்திலைக்கு
அழகு உன் தேமலுக்கும்
ஆசைவச்சேன் உன் மேலே;
தனன னன னான னான தன்னானே

(பாடியவர் சொ. காளிமுத்து, வேம்பத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்)

4.3. கிராமங்களில்:

கூட்டம் கூட்டமாகச் சந்தைக்கு வண்டி ஓட்டிச் செல்கின்றபொழுது மட்டுமல்லாமல், உள்ளூரில் வயல் வேலைகளுக்காகத் தனியே வண்டி ஓட்டிச் செல்கின்ற பொழுதும், தனது மனம் கவர்ந்த பெண்ணைக்

கண்டால் மகிழ்ச்சியால் பாடுவார்கள். சாடைமாடையாக இந்தக் காதல் நாடகம் கிராமங்களில் நடைபெறும். கூடைமேல் கூடைவைத்துச் சுமந்துபோகிற ஒருத்தியைப் பார்த்து ஒருவன் பாடுகிறான்:

கூடைமேலே கூடைவச்சு
கொழுந்தெடுக்கப் போறபெண்ணே உன்
கூடை தவறிச்சுன்னா
கொழுந் தெடுக்கமனம் கூடலியே,
வாழைப் பழமே அடியே எனது
வலதுகை சர்க்கரையே என்
உள்ளங்கைத் தேனே
உருகுறேன்டி உன்னாலே :

(பாடியவர் : வீரமுத்து,
வேதாரணியம், தஞ்சாவூர் மாவட்டம்)

4.4. வயல் வேலை செய்கையில்: வண்டி ஓட்டும் ஆடவர்கள் தெம்மாங்கு பாடுவது பெரும் வழக்கம் என்பதால்தான் தெம்மாங்குப் பாடலை வண்டிக்காரன் பாட்டு என்று கூறுகின்றனர். வண்டி ஓட்டும் ஆடவர்களை எண்ணி அவர்களது காதலியர் பாடுவதும் உண்டு. வயல் வேலை செய்யும் பெண் பாடும் தெம்மாங்குப் பாடலின் சில வரிகள்:

வண்டி அலங்காரந்தான்
வண்டி மாடு சிங்கா ரந்தான்
வண்டி ஓட்டும் பையனுக்கு
வட்டப் பொட்டு ஒய்யாரந்தான்

(பாடியவர் ; தவிட்டுப் பொண்ணு, வடலூர்,
தஞ்சாவூர் மாவட்டம்)

வயல் வேலைகளுக்கு வண்டி ஓட்டிவரும் ஆடவன், தான் ஓட்டிவ ந் த வ ண் டி யி ல் ஏற்றி வந்த நாத்துக்கட்டை வயலில் போட வயலுக்குள் இங்கும் அங்கும் நடப்பான். அதை மேலே கண்ட பாடல் உரைக்கிறது.

5.0. தெம்மாங்குப் பாடலின் வடிவம்: தெம்மாங்குப் பாடல்களின் வடிவத்தை நோக்கும்பொழுது, பெரும்பாலும் நான்கு நான்கு வரிகளாய் வ ரு ம். ஒ ரு வ ரி க் கு இரண்டு சீர்கள் இடம்பெறுதல் பெரு வழக்கம். ஆனால் பாடுகின்றவர் உணர்ச்சிக்கும் இசைக்கும் ஏற்பப் பாட்டின் வரிகளும் அடிகளும் மாறுதல் உ ண் டு. சில ஆடவர்கள் தாம் பாடும்பொழுது 'அடி' என்று பெண்ணை விளித்துப் பாடுவர்.

அடிவெள்ளை வெள்ளைச் சேலைக்காரி
வெள்ளரிக்காய்க் கூடைக்காரி
கோணமான வெள்ளரிக்காயடி அடி
கொண்டு வாடி தின்னு பாப்போமடி

இவ்வாறு 'அடி' என் ற வி ளி ச் சொ ல் பாட்டில் சேர்ந்துகொள்வது பாடுவோரது விருப்பத்தை ஒட்டியதே யாகும். தெம்மாங்குப் பாடல்கள் சிலவற்றைப் பாடுவோர் கடைசி இரண்டு வரிகளின் இறுதியில் தனிச்சொற்களைச் சேர்த்து கண்ணிகளாக்கிப் பாடும் வழக்கமும் உண்டு.

நானும் நடந்த தில்லே
நடப்பாரைப் பார்த்த தில்லே
சாமி நடையைப் போலே
தரணியில் கண்டதில்லே

என்பது தெம்மாங்குப் பாட்டின் இயல்பான அமைப்பு. இதையே,

நானும் நடந்ததில்லே
நடப்பாரைப் பார்த்ததில்லே :
சாமி நடையைப்போலே-என் தங்கமே கட்டழகி
தரணியில் கண்டதில்லே-என் சிங்காரப்
பூஞ்சோடி

என்றும் பாடுவர். மதுரை மாவட்டத்தில் இந்தப் போக்கினைப் பலரிடம் தெம்மாங்குப் பாடல்களைக் கேட்ட பொழுது அறிய முடிந்தது.

5.1. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வேம்பத்தூர் வாசியான காளிமுத்து என்பவரைத் தெம்மாங்கு பாடுமாறு கேட்ட பொழுது, அவர் பலவகையான தெம்மாங்குப் பாடல்களைப் பாடினார். தன் தந்தையிடமிருந்து இந்தப் பாடல்களைக் கற்றுக் கொண்டதாகத் தெரிவித்தார்.

சாலை நல்லா கடந்து வாடி குறத்தி
சந்தைப் பேட்டை தாண்டி வாடி
ஓடை நல்லா கடந்து வாடி குறத்தி
ஓடிப் போவோம் ரெங்கோனுக்கு

என்று அவர் பாடிய பாடலில் 'குறத்தி' என்ற சொல் இடம் பெறுவதால், 'குறவன் குறத்தி'ப் பாட்டாக அப்பாடல் கூறப்படுகிறது. உண்மை என்னவென்றால் இது தெம்மாங்கே யாகும். தெம்மாங்குப் பாட்டைப் பாடுகின்ற பல்வேறு சூழ்நிலைகளில் வாழும் மக்கள் தங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் பாடுகின்றனர். இவ்வாறு

மாற்றிப் பாடப்படுவது வாய்மொழி இலக்கியத்திற்கே உரிய இயல்புகளில் ஒன்று. குறவன் குறத்தி ஆட்டத்தின் போது பாடப்படும் தெம்மாங்குப் பாட்டில், 'குறத்தி' என்ற சொல் ஒட்டிக்கொள்கிறது: இது இயல்பே ஆகும். மேலே யான் எடுத்துக் காட்டியுள்ள வரிகள் 'குறத்தி' என்ற சொல் இல்லாமலேயே தமிழ் நாட்டில் பல இடங்களில் பாமர மக்களால் பாடப்படுகிறது.

5.2. பெரிசி மாக்வீன் (Percy Macqueen) என்ற ஆங்கிலேயரால் நீலகிரியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு, 'மலையருவி' என்ற நூலாக திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் ஆய்வுரையோடு வெளியிடப் பட்டுள்ள நூலில் தெம்மாங்குப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. நீலகிரியில் இப் பாடல்களைப் பாடிய தொழிலாளர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தொழில் தேடி வந்தவர்கள். 'தெம்மாங்கு' என்ற பிரிவில் 'மலையருவி'யில் இடம்பெற்றுள்ள பாடல்களில், இரண்டு வகை அமைப்பைக் காண முடிகின்றது. அதில் ஒருவகை,

செம்பிலே சிலை எழுதி-மாமா
செல்வத்திலே நான் பிறந்தேன்
வம்பிலே தான் கைகொடுத்து-மாமா
வார்த்தைக்கிடம் ஆனேனே!
மூக்குத்தித் தொங்கலிலே-குட்டி
முந்நூறு பச்சைக் கல்லு
ஆளைத்தான் பகட்டுதடி-குட்டி
அதிலே ஒரு பச்சைக்கல்லு!

என முதல் வரியிலும் மூன்றாம் வரியிலும், மாமா, குட்டி, போன்ற தனிச் சொற்களை விளிச் சொற்களாகப் பெற்றுவரும். மற்றொரு வகை:

கானக் கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிற்கட்டுமா? போகட்டுமா?
(மலையருவி, தெம்மாங்கு-17)

என்பது போல் தனிச்சொல் இல்லாமல் வரி தோறும் இரு சொற்களைப் பெற்றுவரும். 'மலையருவி' என்ற நூலில் 'தங்கரத் தினமே' என்ற தலைப்பின்கீழ்த் தரப் பட்டுள்ள பாடல்கள்கூடத் தெம்மாங்கின் ஒரு பிரிவே.

6.0. தெம்மாங்குப் பாடலின் உள்ளடக்கம்: தெம்மாங்குப் பாடலின் உள்ளடக்கம் பெரும்பாலும் காதலேயாகும். காதல் கொண்ட ஆடவன் தன் காதலிக்காக உறவினரையும் பகைத்துக் கொள்கிறான். அந்த ஊரிலிருந்து ஓடிப் போகலாம் எனப் பாடலின் மூலம் அழைக்கிறான்.

சாலைநல்லா கடந்து வாடி குறத்தி
சந்தைப் பேட்டை தாண்டி வாடி
ஓடைநல்லா கடந்து வாடி குறத்தி
ஓடிப்போவோம் ரெங்கோனுக்கு

பார்த்தேனடி உன்முகத்தை பிள்ளை
பகைச்சேனடி என்சனத்தை
கேட்காத வார்த்தை எல்லாம் இப்ப
கேட்டு நல்லா மடியிறேன்டி:
(பாடியவர்: காளிமுத்து, வேம்பத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்)

6.1. தன்னைக் கைவிட்டுவிட்டு மற்றொருத்தியோடு உறவு கொண்டுள்ள தன் காதலனைத் திட்டிப் பாடுகிறாள் ஒரு பெண். தன்னை ஏமாற்றிவிட்ட காதலனின் சுருட்டை மயிரைச் சுருளுக் கத்தியால் வெட்டப் போவதாக வஞ்சினம் கூறுகிறாள்:

ஏ சுருட்டை மயிராழகா: அடியே பொண்ணு
சூதுக்காரக் கண்டாரோலி:
உன் சுருட்டை மயிரிலேயும் சண்டாளப் பாவிநான்
சுருளுக்கத்தி போடப்போறேன்:
(பாடியவர்: ஆயிப்பொண்ணு. ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்)

6.2. ஓர் ஆடவன் ஒருத்திமேல் அளவிலாக் காதல் கொண்டான். அந்தக் காதல் உணர்ச்சியால் அவளைத் தீண்டிவிட்டான். அவன் அவளைத் தீண்டியதை அந்தப் பெண்ணின் தந்தையும் அண்ணனும் பார்த்துவிட்டனர். அதன்பின் அவன் தண்டிக்கப்பட்டுச் சிறையில் வாடுகிறான். அப்பொழுது அவன் தனது துயரத்தை,

உன்னையே நான் தொட்டதுக்கு
உங்க அப்பன் அண்ணன் பார்த்ததுக்கு
மதுரை ஜெயிலுக்குள்ளே
மாடாய் உழைக்கிறேண்டி

என்று பாடுகிறான். இந்த அனுபவத்தைத் தஞ்சாவூர் மாவட்டத்துப் பாடகன் பாடும் பொழுது, மாயவரம் ஜெயிலில் மடிவதாகப் பாடுகிறான். யாரோ ஒரு காதலன் தன் காதலியைத் தீண்டியதால் ஏற்ற சிறைத்தண்டனை, தமிழகத்தின் வெவ் வேறு மாவட்டப் பாடல்களில் அந்த அந்த மாவட்டச் சிறைகளில் துயரப்பட்ட தாகப் பாடப்படுகிறது.

6.3. தெம்மாங்குப் பாடகன் தனது காதலியை வருணித்துப் பாடும்பொழுது அவளை அவன் உண்ணுகின்ற பழங்களாகவே எண்ணிப் பாடுகின்ற தன்மையும் காணமுடிகின்றது. ஒருவன் தன் காதல் கனியை தான் உண்ணுகிற கனிகளாகவே எண்ணிப் பாடும் பாடல்:

வெள்ளரிப் பழமே பிள்ளே
விருதுகட்டு மாம்பழமே;
ஆரஞ்சு பழமே பிள்ளே
ஆசைக்கண்ணாட்டி உன்னை
வெறுக்க மனம் வல்லையடி
நேசக்கண்ணாட்டி:

பேரீச்சம் பழமே பிள்ளே
பெரியகடை மாம்பழமே பிள்ளே
ஆரஞ்சுப் பழமே என்தன்
ஆசைக் கண்ணாட்டி உன்னை
வெறுக்க மனம் வல்லையடி
நேசக் கண்ணாட்டி.

(பாடியவர் : காளிமுத்து, வேம்பத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்)

6.4. வண்டிக்காரர்கள் தங்கள் வண்டிகளில் பாரமேற்றிக் கொண்டு அயலூர் செல்லும் வழியில் தங்களுக்குள் போட்டி போட்டுப் பாடும் தெம்மாங்குப் பாடல்களுள், மாடுகளையும் வண்டிகளையும் வருணித்துப் பாடும் பாடல்களும் உள்ளன.

மாடுரெண்டும் மதுரை வெள்ளை
மணிகள் ரெண்டும் திருநெல்வேலி
குப்பிரெண்டும் கும்பகோணம்
குலுங்குதடி ரோட்டுவழி

அச்சு முறிஞ்ச வண்டி
ஆரக்காலு போன வண்டி
பட்டாத் தெரிச்ச வண்டி
பாதையிலே போகுதடி

(ஏட்டில் எழுதாக் கவிதைகள், பக். 146)

மாடுகளையும், வண்டிகளையும் மட்டுமல்லாமல், வண்டிகளில் ஏற்றிச் செல்லும் பொருள்கள் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லி, வண்டி எந்த ஊருக்குப் போகிறது என்பதையும் குறிப்பிட்டுப் பாடுவார்கள். இத்தகைய பாடல்களை திரு. செ. அன்னகாமு அவர்கள், தனது 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' என்ற நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பு நூலில் அளித்துள்ளார்.

7.0. சேகரிப்பாளர் சிலர் : தெம்மாங்குப் பாடல்கள் பல்வேறு சேகரிப்பாளர்களால் தொகுக்கப்பட்டுள்ளன. திரு. நா. வானமாமலை அவர்களும் 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' என்ற தன் தொகுப்பில் 'காதல்' எனற பகுதியில் தெம்மாங்குப் பாடல்களையும தொகுத்துள்ளார். திரு நெல்வேலி மாவட்டதின் தெம்மாங்குப் பாடலகளை திரு. டாக்டர் சு. சண்முக சுந்தரம் அவர்களும், பெரியார் மாவட்டத் தெம்மாங்குப் பாடல்களை திரு. க. ரா. பழநிசாமி அவர்களும் நேரடியாக ஒலிப் பதிவு செய்து தொகுத்துள்ளார்கள். இலங்கையில் வழங்கும் தெம்மாங்குப் பாடல்களைக் காதல் பாடல்களாகவும், வண்டிக் காரன் பாடல்களாகவும் திரு. மு. இராமலிங்கம், திரு. இ. பாலசுந்தரம் போன்ற வர்கள் தங்கள் நூல்கள் வாயில்களாக வழங்கியுள்ளனர்.

8.0. காதல் நினைவுகளை, சாதாரண மக்களின் ஏக்கப் பெரு முச்சுகளை, இதய உணர்வுகளைத் தாங்கித் தவழ்ந்து வரும் இனிய இசைப்பாட்டே தெம்மாங்கு; இது நாட்டுப்புற மக்களின் நயம் மிகுந்த சிருங்காரப் பாட்டு. வரிசை வரிசையாக வண்டிகள் செல்லும் பாதைகளில்,

''அடடடடா தன்னன்னே னானே னன்னே
னானே னன்னே னானே னன்னே ஏ.....

என்ற மெட்டோடு வரிவரியாக இந்தப் பாடல்கள் தென்றல் காற்றிலே மிதந்து வரும். வண்டிக்கார்கள் பாடும் இந்த இசைப்பாட்டிற்கு மாடுகள் கூட மயங்கும்: மனிதர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமோ?

# புதுக்கவிதை - ஒரு மேலோட்டமான ஆய்வுப் பார்வை

முனைவர் தமிழன்பன்

சேகதீசன் எனும் இயற்பெயர் கொண்ட இவர் பெரியார் மாவட்டத்திலுள்ள சென்னிமலையில் 28-9-1936 ஆம் நாள் பிறந்தார். சுரத்தைப் புலவர் கல்லூரியிற் பயின்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் பயிற்சிபெற்றுத் தாமே தனித்துப் பயின்று முதுகலைத் தேர்வில் மாநிலத்தில் முதலாமவராக வெற்றி பெற்றவர்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். ஈரோடு தமிழ்ப் பேரவையால் தங்கப் பதக்கமளித்துப் பாராட்டப் பெற்றவர். 'தமிழன்பன் கவிதைகள்' எனும் கவிதைத் தொகுப்பிற்கு 1972ஆம் ஆண்டில் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றவர்; 1978இல் தில்லியில் இந்திய மொழிக் கவிஞர்களின் 'கவி சம்மேளத்தில்' கலந்து கொள்ளத் தமிழுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; 'நெஞ்சின் நிழல்' எனும் புதினமும், 'தமிழன்பன் கவிதைகள்', 'தோணி வருகிறது', 'விடியல் விழுதுகள்', 'அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்', காலத்துக்கு ஒரு நாள் முந்தி' முதலிய கவிதைத் தொகுதிகளும் எழுதியவர் இப்போது சென்னைப் புதுக் கல்லூரியிற் பணியாற்றி வருகிறார்.

We must speak of the New
in words that are new.

—Mayakovsky

மாறுவதொன்றே மாறாமலிருப்பது. இது சமுதாயத்திற்கு உரிய இயக்க விதி மட்டுமன்று. சமூகப் படைப்பான மொழிக்கும், அதிலிருந்து உருவாக்கப் படுகின்ற கலைகளுக்கும் பொருந்தக் கூடியதுதான். மாறுதல் முயற்சி என்பது, தற்சார்பு நிலைகளின் பொருந்தாமைகளோடு முரண்படுவதன் அடையாளம். அகவய நிலையிலிருந்தும் புறவய நிலையிலிருந்தும் ஏற்படும் இம் மாற்றங்களின் பரிமாணம், அவறறை முற்படுத்திக் கொண்டிருக்கும் தத்துவங்களால், அத்தத்துவங்களை உருவாக்கும் உந்து சக்திகளால் கணிக்கப்படுகின்றது.

சமுதாய நிலைமைகளை வரலாற்றுப் போக்கில் ஆராய்ந்த காரல் மார்க்ஸ் பின் வருமாறு 4 வகையாகப் பிரிக்கின்றார்.

1. அடிமைநிலைச் சமுதாயம்
2. நிலப்பிரபுத்துவச் சமுதாயம்
3. முதலாளித்துவச் சமுதாயம்
4. சமதருமச் சமுதாயம்

இச்சமுதாயங்கள் வரலாற்றின், மனித குல வளர்ச்சியின் காலகட்டங்கள். இக்கால கட்டங்களில் படைக்கப்பட்ட கலைகள் அனைத்திலும் அவ்வற்றுக்குரிய அம்சங்கள், பண்புகள் இருக்கவே செய்யும். நாம் வாழ்ந்துவரும் இக்காலக்கட்டம் மேற் குறித்த நான்குவகைச் சமுதாய நிலைகளின்

மூலப்பதிப்புக்களைக் கொண்டிருக்காவிட்டாலும், ஒவ்வொன்றன் மூலப்பதிப்பையும்-ஒவ்வொன்றது. மறுபதிப்பையும் கொண்டிருக்கவே செய்கின்றது. இச்சமூக அமைப்புகள், அவ்வப்போது ஏற்படும் சீர்திருத்தங்கள், கலகங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள் ஆகியவற்றின் வல்லமைக்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொண்டிருக்கின்றன; தம் இறுக்கமான பிடிகளை நெகிழ விட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில் புரட்சி, பிரெஞ்சு, அமெரிக்க, ரஷ்ய சீனப் புரட்சிகள், இரண்டு உலகப் பெரும்போர்கள், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் முதலியன வாழ்க்கை அமைப்பிலும், வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டத்திலும் மாறுதல்களை உறுதியாக ஏற்படுத்தி விட்டிருக்கின்றன.

பொருளியல் சிந்தனை, மார்க்ஸாலும், அகவியல் சிந்தனை ஃபிராய்டாலும் புதிய எல்லைகளில விரிந்தன. அவ்வெல்லைகளை நோக்கித் தமது பயணத்தைத் தொடங்கிய கலை இலக்கியங்கள் மாறுதல்களுக்கு உள்ளாயின. நவீன பாணி ஓவியங்களும், கவிதைகளும் பிறந்தன. பழைமையின் எல்லைகள் தாண்டப்பட்டன.

''ஆக, அக, புற உலக மாறுதல்களால் பாதிக்கப்பட்ட இந்த நூற்றாண்டு ஆரம்ப காலத்தவன் புதுக்கவியாக மலர்ந்தது. மேல்நாட்டில் கவிதை உலகம் கண்ட அனுபவம், அது பூத்த பூக்கள் நிறைய..... 1920-30க்களில் மேல்நாட்டில் புதுக் கவிதைக்கு ஒரு உந்துதல், ஃபிராய்டியம், மார்க்ஸீயம் இரண்டிலிருந்தும் மனோதத்துவ லோகாயத தத்துவ ரீதியாகவும் ஏற்பட்டதுபோல்.....''[1] என்று புதுக்குரல்களின் முன்னுரையில் சி. சு. செல்லப்பா குறிப்பிடுகின்றார். உலகம் முழுவதிலும் கவிதைத் துறையில் அகம், புறம் பற்றிய புதுப்பார்வை விச்சுகள் எழுந்தன. பத்திரிகை, தொடர்பு சாதனங்கள், ஆங்கிலக் கல்வி ஆகியவை தமிழுக்கும் புதுக் கவிதையை அறிமுகம் செய்வித்தன.

தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றை, தனி மனித முயற்சிகளின் சரிதமாக வல்லிக்கண்ணன் எழுதியிருக்கிறார். கால அடைவிற்கும், பண்பு அமைதிக்கும் ஏற்றவகையில் இதன் வரலாற்றைக் கலாநிதி கைலாசபதி சுருக்கமாக ஆராய்ந்திருக்கிறார்.[2] சமூகப் பின்னணியோடு புதுக்கவிதை வரலாற்றை ஒரு குறுங்கட்டுரையில் கனகசபாபதி கண்டிருக்கின்றார்.[3]

கலாநிதி கைலாசபதி வகுத்துள்ள கால அடைவுக்கும் பண்பு அமைதிக்கும் ஏற்ற பிரிவுகளிலேயே புதுக்கவிதை வரலாற்றை இங்கு நாம் காணலாம். அவர் புதுக்கவிதை வரலாற்றின் காலகட்டங்களை, அவ்வக் காலத்தில் களம் அமைத்துக் கொடுத்த இதழ்களைக் கொண்டே குறியீடு செய்கின்றார். அவை :

1. மணிக்கொடிக்காலம் — 1930-40 களில்
2. எழுத்துக் காலம் — 1950களில்
3. வானம்பாடிக் காலம்—1970களில்

## மணிக்கொடிக் காலம்

பாரதியின் 'காட்சி'யையும் அதனைப் போன்ற பிறவற்றையும் 'வசன கவிதை' என்ற பெயர்சூட்டித் தழுவிக் கொண்டும், மேனாடுகளில் செய்யப்பட்ட விடுநிலைப் பா(Free Verse) முயற்சிகளைக் கருத்தில் கொண்டும், மணிகொடியில் கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, புதுமைப் பித்தன், வல்லிக்கண்ணன் ஆகியோர் புதுக் கவிதைளைத் தமிழில் முதலில் எழுதத் தொடங்கினர். பாரதிக்குப் புதுக்கவிதைக் குரிய ஆதர்சம் வால்ட் விட்மனிடமிருந்து கிடைத்திருக்கலாம் என்பது இவர்களின் கருத்து. இவர்களில் ந. பிச்சமூர்த்தி மட்டுமே புதுக்கவிதையில் காலூன்றினர். இவர்களைப் பெரிதும் பாதித்தவர்கள் படிமவாதிகள் (Imagists) என்ற பெயரோடு தங்களை இங்கிலாந்தில் 1921ல்

1. செல்லப்பா, சி. சு., புதுக்குரல்கள், முன்னுரை, ப. 4.
2. கைலாசபதி, க., தோணி வருகிறது - தமிழன்பன் கவிதைகள் - முன்னுரை, ப.
3. கனகசபாபதி, சி., விழிகள் - இதழ் ஒன்று, பக். 4-9.

அறிமுகப்படுத்திக் கொண்ட கவிஞர்களும், அவர்களை ஒட்டிப் பின்வந்தவர்களுமே. படிமவாதிகளுக்கு, பிரெஞ்சு மொழியின் குறியீட்டுக் கவிதைகளே(Symbolic poems) தூண்டுதல்களை உண்டாக்கின. முதல் படிமக் கவிதை 1908 மே-26ல் ஓர் உணவு விடுதி-Bill-ன் பின்புறத்தில் டி.யூ ஹ்யூமால் எழுதப்பட்டது. தலைப்பு 'கதிரவன் மறைவு (Sun set) என்பது. படிமவியல் என்ற பெயராக்கத்தைச் செய்தவரும், புதுக் கவிதையின் பிதாமகருமாகிய எஸ்ரா பவுண்ட் — படிமவியலாளர்களை ஒருங்கிணைத்து — அவர்களுக்குச் சில விதிமுறைகளையும் வகுத்தார். அவற்றில் அவர் விலக்கச் சொல்லி விதித்தவை :

1. மிகைச்சொற்களை நீக்குக; பயன் ஏதும் தராத அடைமொழிகளைத் தவிர்த்து விடுக.
2. சூட்சுமத்தை நாடற்க.
3. அலங்காரம் வேண்டாம் — நல்ல அலங்காரம் எனினும்.
4. ஓசைக்காகக் கவிதைப் பொருளைத் துண்டாட வேண்டாம்.
5. சென்று தேய்ந்து ஒவ்வொரு வரியையும் நிற்கச் செய்துவிட்டு மறு வரியை எழுப்பித் தொடங்க வேண்டாம்.[4]

படிமவியலாளர் மேற்கொள்ளத் தக்க வற்றை, ரிச்சர்டு ஆல்டிங்டன் பின்வருமாறு விதித்துள்ளார்:

1. எல்லோர்க்கும் உரியதான பொது மொழியை-வழக்காற்றைப் பயன் படுத்துக. எனினும் மிகச் சரியான சொற்களையே பயன்படுத்த வேண்டும்—சரியானவற்றுக்கு சமீபத்தில் உள்ளவற்றையோ,வெறும் அழகூட்டும் சொற்களையோ அல்ல.
2. பழைய மனோபாவங்களின் எதிரொலிப்புகளாக உள்ள பழைய ஒலிச் சந்தங்களைத் தவிர்த்து விட்டு, புது மனோபாவங்களின் வெளியீடாகப் புது ஒலிச் சந்தங் களைப் பயன்படுத்துக.
3. பாடுபொருளைத் தேர்ந்தெடுப்பதில் முழு உரிமை கொள்க.
4. படிமங்களைப் பாட்டில் வழங்குக.
5. பாட்டில் தொய்வும் தொங்கலும் விழாதபடி இறுக்கமும் செறிவும் ஏற்படுத்துக.
6. கவிதைப் படைப்பின்போது கவிதையின் மீதே அதிதீவிரமான கவனப்பாடு கொள்க.[5]

பொதுவாக இவ்விதிகள் கவிதைகள் அனைத்திற்குமே பொருந்தும் எனினும் சிறப்பாகப் புதுக்கவிதைக்கெனவே இவை வகுக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டன. வெற்றையால் வெளிநாட்டுக் கவிதையின் வாயிலாகக் கண்டு,சோதனை முறையில் தமிழில் கவிதைகள் எழுதப்பட்டு, மணிக்கொடியில் வெளியிடப்பட்டன. ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன் ஆகியோர் கலாநிதி கைலாசபதி சுட்டிக்காட்டுவதுபோல், 'வசனகவிதை' என்னும் வடிவத்தில் நெஞ்சைப் பறிகொடுத்து நின்றனரேயன்றி, புதிய பொருளிலோ, அன்றித் திட்டவட்டமான இலக்கியக் கொள்கையிலோ ஈடுபாடு கொண்டிருந்தனர் அல்லர்.[6] பாரதி பாட்டில் இருந்த ஒருமை (Integration) மணிக்கொடிக்காரர்களால் ஒருவகைச் சிதைவாகப் (Disintegration) போனது என்று கனகசபாபதி குறிப்பிடுவதை நோக்கினால், இவர்களுக்குச் சிதைவுக் கொள்கை இருந்தாக மட்டுமே எண்ண வேண்டியிருக்கிறது. பாரதிக்குப் பிறகு மனிதத் தொகுப்பிலிருந்து தனிமனிதர்கள் விடுபட்டு விடுபட்டுப் பிரிந்து நின்றார்கள்.இதுவே சிதைவு

4. Jones Peter, Introduction to Imagist Poetry, P. 19. Quoted from Pound.
5. John Press, A mape work of Modern English Verse (Quoted from Preface to Some Imagist Poets by Richard Aldington), P. 43.
6. கைலாசபதி, க., தோணி வருகிறது - முன்னுரை - ப. 6.

நிலை எனினும், இவர்களில் ந. பிச்சமூர்த்தி மட்டுமே உலக அமைதியை விரும்பியும், சமூக அவலங்களை எடுத்துக் காட்டியும் கவிதைகளை இயற்றிப் புதுக்கவிதை இயக்கத்திற்குத் தனித்ததோர் ஆதர்சமாக இருந்து வந்தார். இவருடைய 'பூக்காரி' குறிப்பிடத்தக்க சிறந்த கவிதை.

எழுத்துக் காலம்

மணிக்கொடியின் போக்கிலேயே அதன் தொடர்ச்சியாக அமைந்த மற்றொரு களம் 'எழுத்து'. சி. சு. செல்லப்பா வெளியீடாகிய எழுத்துவில், ஃபிராய்டின் உளவியல் கோட்பாடுகளுக்குக் கலைவடிவம் காணும் முயற்சிகள் நடத்தப்பட்டன. படிம, குறியீட்டுக் கவிதைகளும், சப்பானிய ஹெய்குவும் இந்த எழுத்துக் கவிஞர்களிடம் பாதிப்புகளை உண்டாக்கி விட்டிருந்தன. இவர்களில் சிலர் அவசர அவசரமாக, அயல் நாட்டுச் சரக்கைக் கொள்முதல் செய்து இங்கே கடைவிரித்தனர்; தம் பெயரில் விற்பனைப் பலகைகளைப் போட்டுக் கொண்டனர். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு —வைத்தீஸ்வரனின் 'பாதமலர்கள்' என்ற பாட்டில் பார்க்கலாம்.

பாதையில் நடக்கும் பெண்களின் பாதங்களை,

பாவாடை நிழலுக்குள்
பதுங்கிவரும் வெண்முயல்கள்[7]

என்று படிமப்படுத்தும் இவர், சக்லிங்கின் (Suckling)

"Her feet beneath her petticoat
Like little mice, stole in and out"[8]

என்ற வரிகளில் எந்த அளவிற்குத் தன்னை முழுமையாக இழந்து விட்டார் என்பதை எளிதில் எவரும் கண்டு கொள்ள முடியும்.

கிளைக்குத் திரும்பும்
விழுந்த சருகா
பட்டுப் பூச்சி

இது வைத்தீஸ்வரன் தமிழில் மொழி பெயர்த்து 'நடை' இதழில்[9] வெளியிட்ட ஹெய்கு கவிதை. இவருடைய 'உதய நிழலில்' காணப்படும் இவருடைய,

கொடியில் மலரும் பட்டுப்பூச்சி
கைப்பிடி நழுவிக்
காற்றில் பறக்கும் மலராச்சு[10]

என்ற கவிதையில் மேற்காட்டிய ஹெய்கு 'மறுபிறவி' எடுத்திருப்பதையும் நாம் காண முடிகிறது. இவர் உள்ளடங்கலாக எழுத்துவில் புதுக்கவிஞர்கள் என்று விளம்பரமானவர்களில் சுந்தரராமசாமி, சி. மணி, தருமு, சிவராமு, தி. சோ. வேணுகோபாலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களின் கவிதைகளில் தலைதூக்கி நிற்பது தனிமனித வாதம். தனிமனிதனது நிராசை, வக்கிரம், தாபம், தவிப்பு, நனவோட்டம், அக உளைச்சல் ஆகியன இவர்கள் பாடல்களின் கருப்பொருள்கள். நம்பிக்கையின்மை, மனச்சோர்வு, மரண நினைப்பு முதலியவற்றின் பிடியில் இவர்கள் ஆடிய ஆட்டங்கள் இப்பாடல்களில் வெளிப்பட்டு இருக்கின்றன. சி. சு. செல்லப்பா குறிப்பிடுவதுபோல ஃபிராய்டின் கருத்துக்களால் கவிஞர்களது அகநோக்கு இதுவரை கண்டிராத அளவு விரிவும் ஆழமும் பெற்றது உண்மை என்றே எடுத்துக் கொண்டாலும்—அதன் பயன் என்ன என்பதே நம் கேள்வி. கவிதைச் சிகிச்சைமுறை (Poetry Therapy) ஏதும் கண்டார்களா? தனிமனிதனைச் சமூகத்திலிருந்து பிரித்துக் கொண்டது, அவனை ஈடேற்றவா? இல்லை, அவனது பிரக்ஞை நிலையில் அரூபமாக அலையும் உளைச்சல்களுக்கு வடிவம் தந்து அவனைக் கலவரப்படுத்தவா? சமகால சமூக அமைப்புக்களின் வெறுக்கத்தக்க அம்சங்கள், அரசியல் மோசடிகள் இவற்றோடு அவர்கள் மோதுவதற்கு எப்போதும் விரும்பியதில்லை. வேண்டுமானால் அவ்வப்போது சற்றே நையாண்டி செய்துவிட்டு

7. வைத்தீஸ்வரன், உதய நிழல், ப. 6
8. 'Re Imagist Poetry', P. 32.
9. 'நடை', முத்திங்களேடு - இதழ்-1, ப. 56.
10. வைத்தீஸ்வரன், உதய நிழல், ப. 15.

ஒதுங்கிச் சென்று மீண்டும் தங்களுக்குள் ளேயே பயணத்தைத் தொடரப் போய்விடு வார்கள். இவர்களில் சிலர் 'வி டி ய ல்' நேரத்திற்குப் படிமங்களைத் தே டு வ தி லேயே முழுநாளையும் செலவு செய்து விடு வர். கலையின் புது முயற்சிகளுக்கு இவர் களுக்குக் கவிதை மேடை தேவைப்பட்டது. இவர்களைப் பற்றி, 'புதுக்கவிஞர்கள் வர லாற்றுப் போக்கில் உருவான ஒரு சமுதா யத்தில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தில் வாழ்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வில்லை. இச்சமுதாயச் சூ ழ் நி லை யி ல் அவர்கள் உள்ளங்களில் உருவான எண்ணங் களையும், சிந்தனைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அகவயமாகத் திரும்பி உள் ளத்தினுள் வாழ முயற்சி செய்கிறார்கள்'[11] என்று பேராசிரியர் வானமாமலை கணித் திருப்பதும் இங்குக் கருதத்தக்கது.

எழுத்துவிலிருந்து பிரிந்து சென்ற சிலர் தனியே இயங்கத் தொடங்கினர். கசடதபற, அஃ நடை ஆகியன எழுபதுகளில் வெளி வந்து கொண்டிருந்தன. இப்போதும் 'வரும் போகும்' என்கிற நிலையில் கசட தபறவும் அஃகும் உள்ளன. ழ, கொல்லிப் பாவை இரண்டும் புதிதாக முளைத் துள்ளன. எழுத்துவும், எழுத்துத்தன மானதும் ஆகிய ஏடுகளில் எழுதிய அனை வரையுமே அகஉளைச்சல்காரர்கள், சமூகப் பிரக்ஞையற்றவர்கள் என்று முற்றுக முத் திரை குத்திவிடவும் முடியாது. இவ்வேடு களின் மூலம் தமிழுக்குக் கிடைத்த குறிப் பிடத்தக்க புதுக் கவிதைக்காரர் ஞானக் கூத்தன். மிக எளிமையான மரபு வடிவங் களைப் பயன்படுத்தித் தனது வித்தியாச மான பார்வையால்-தொனி, தோரணை, கட்டுமானம் முதலியவற்றுல்-புதிய எல்லை களைத் தொட்டவர் இவர். குத்தலும், நகைச்சுவையுணர்வும் இவருடைய இத மான நடையில் இடம்பெற்று விடுகின்றன.

வாரத்துக் கொன்றிரண்டு வெளியூர்க் கூட்டம்
வரப்பார்க்கும் மனியார்டர், மாலை, துண்டு
காரத்தில் பேசத்துப் பாக்கிச் சூடு
கல்பிறந்த காலத்தில் பிறந்தோர் தம்மை
நேரத்தில் களிப்பூட்ட அகநா னூறு
நெய்யாற்றில் பாலாற்றில் பேசிப் பார்த்த
நீரத்தில் தெரிந்தெடுத்த நகைத்து ணுக்கு
(தமிழர்க்கு வேறென்ன கொடுக்க வேண்டும்)[12]

ஞானக்கூத்தனின் எண்சீர் விருத்தம் இது. அழகான அங்கதம் மிக இயல்பாக இதில் வெளிப்பட்டிருப்பதை நாம் காண முடி கிறது.

கீழ்வெண்மணிச் சம்பவம் முற்போக்கு இலக்கியவாதிகளிடம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அகமன உளைச்சல் காரர்கள் என்று ஒட்டுமொத்தமாகத் தரம் பிரிக்கப்பட்டவர்களிடமும் இச்சம்பவம் பாதிப்பை ஏற்படுத்தாமல் இல்லை என்ப தற்கு, ஞானக்கூத்தன் எழுதி 'நடை'யில் வெளிவந்த 'கீழ்வெண்மணி' என்ற தலைப் பில் உள்ள கவிதையே சான்றாகிறது.[13] 'ழ' மூன்றாவது இதழில் 'ஆகஸ்ட் 15'[14] என்ற தலைப்பில் உள்ள இவருடைய கவிதை முன்னைய பரிணாமத்தின் போக்கிலான இடைவிட்ட தொடர்ச்சி என்று எடுத்துக் கொண்டால்-இவர் முகாம் மாறும் சாத்தி யம் இருப்பதாக நாம் எண்ணலாம். 'ஒரு நாள் மெய்யாய்த் துடிக்கக் கூடுமோ?' என்ற அந்தக் கவிதையின் இறுதி வரியில் எனது எதிர்பார்ப்பை முன்வைக்கின்றேன்.

## வானம்பாடிக் காலம்

ஃபிராய்டின் உளவியல் கோட்பாடு களைக் கொண்டும் அவற்றுக்கு அடித்தள மான மனித நேயத்தை நோக்கமாகக் கொண்டும் கலைப் படைப்புக்களைச் சிலர் உருவாக்கத் தொடங்கினர். புதுக்கவிதை, புதுப்பரிமாணத்தைப் பெறத் தொடங்கிய காலகட்டம் இது. தனிமனித தத்துவத்தி லிருந்து விடுபட்டு, விசாலப் பார்வை யோடு, சமூகத்தை நோக்கித் தன் சிறகு களை உற்சாகத்தோடும், ஒளி நிறைந்த பார்வையோடும், உறுதியான நம்பிக்கை யோடும் புதுக்கவிதை விரிக்கத் தொடங்

11. வானமாமலை, நா., புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், ப. 42
12. ஞானக்கூத்தன், நடை, முத்திங்களேடு, இதழ்-3, ப. 136.
13. ,, ,, ,, இதழ்-5, ப. 1.
14. ,, 'ழ' கவிதை ஏடு, இதழ் ப. 5.

கியது. இத் திருப்பம் 1969க்குச் சற்று முன் பிருந்தே தோன்றியது. 'தாமரை' ஏடு மக்களின் வாழ்விலக்கியத்திற்கு, சத்திய வேட்கையோடு சமூக விடுதலை தேடும் எழுத்திற்கு, முதலாளித்துவ, நிலப்பிரபுத் துவத் தளைகளை அறுத்தெறிய ஆவேசங் கொண்ட படைப்புக்களுக்கு ஒரு களமாக இருந்து, மரபிலிருந்து மாறுபட்டு வரும் கலைவடிவங்களை ஏற்று ஊக்கம் ஊட்டி யதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். வெள்ளையர் விலகிய பின்னும் இங்கு இருந்துவரும் யதார்த்தமான அடிமைத் தனங்களின் உறுத்தல்கள், அவ்வப்போது வெடித்துக் கிளம்பிய தேசிய சர்வதேசியக் குமுறல்கள், புரட்சிகள் ஆகிய சமூக உணர்வுகள் கவிஞர்களை உசுப்பி விட்டன. இத்தகையவர்களின் கவிதை முயற்சிகள் நம்பிக்கை தரும் ஓர் இயக்கமாக உருப் பெற்றது. புவியரசு, ஞானி, அக்கினி புத்திரன், சிற்பி, முல்லை, ஆதவன் ஆகி யோர் கோவையில் எழுபதின் முடிவில் மானுடம்பாடும் வானம்பாடி இயக்கத்தைக் கண்டனர். வானம்பாடி என்ற விலையிலாக் கவிமடலில் பாரதி—பாரதிதாசன் பரம் பரைக் கவிஞர்கள் பலர்—பாரம்பரியத் தொடர் சங்கிலியைத் துண்டித்து எறிந்து விட்டு-புதிய பாரம்பரியத்தின் முன்னோடி களாவதற்குக் கைகோத்துக்கொண்டு நின்ற போது, தொலைதூர இலட்சியம் துலக்க மாகவே தென்பட்டது. பொதுவான மனித நேயம்-ஆக்கபூர்வமாக, ஒரு குறிப்பிட்ட அரசியல் தத்துவத்தோடு இணைந்து—கவனக்குவிப்பு ஏற்படவேண்டும் என்றும், மனித நேயத்திற்கு அதனைச் சக்திமிக்க தாக, செயற்பாடு உடையதாக மாற்றப் போர்க்குணத்தை ஊட்டியாக வேண்டும் என்றும் இவருள் சிலர் எண்ணி முற்பட்ட போது—இயக்கம் உடைந்து போயிற்று. எனினும், இக் காலகட்டத்திலேதான் (வானம்பாடி வாயிலாக) புதுக்கவிதை உலகத்திற்கு, அக்கினி புத்திரன், சிற்பி, தமிழன்பன், புவியரசு, அப்துல் ரகுமான், மீரா, மேத்தா போன்ற பலர் கிடைத் தனர்.

வானம்பாடி இயக்கத்தோடு ஐக்கியப் படாமல், ஆனால் முற்போக்கான கவிதை களை இக்காலகட்டத்தில் எழுதத் தொடங் கிய வர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இன்குலாபும், நா. காமராசனும் ஆவர். புதுக்கவிதையை மிகைப்பட்ட கலையுணர் வோடு சோஷலிசத்தின் பக்கம் இயக்கியவர் காமராசன் எனின், அதனை அரசியற் படுத்தியவர் இன்குலாப் என்று கூறலாம்.

காமராசனின் 'அவர்கள் நீதிமன்றத்தை விசாரிக்கிறார்கள்'—அவர் குறிப்பிட்டிருப் பதைப் போல ஒரு கவிக்கோபத்தின் வெளிப்பாடுதான்.

> கால்நடைகள்
> கட்டுத்தறிகளை நோக்கிப்
> போவதைப் போல்
> நாங்கள் கைச்சாலைகளை நோக்கிப்
> போய்க் கொண்டிருக்கிறோம்
> எமக்கு
>
> இந்த உலகில் பெறுவதற்கு
> என்ன இருக்கிறது. . . .
> கைவிலங்குகளைத் தவிர . . .15

என்று பிச்சைக்காரி நீதிமன்றத்தில் பேசு கிறாள். தான் வாழும் சமூக அமைப்பிற்கும், அந்த அமைப்பால் உருவாக்கப்படும் அரசுக் கும் ஆதரவாக இருக்கும் நீதிமன்றம் தனக்கு என்ன நியாயம் வழங்கும் என்பதை அவள் அறிந்து கொண்டவளாகையால், தனக்குக் கிடைக்கப்போகும் தீர்ப்பையும் முன்கூட்டி அறிந்தவளாக இப்படிப் பேசு கிறாள்.

> இந்த உலகில் பெறுவதற்கு
> என்ன இருக்கிறது
> கைவிலங்குகளைத் தவிர . . . .

என்று ஏங்கிக் குமுறும் இவளுக்கும் நம்பிக் கை மிக்க விடையைக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை தருகிறது.

> இழப்பதற்கு
> என்ன இருக்கிறது
> கைவிலங்குகளைத் தவிர . . .

எழு, ஒன்று சேர், போராடு என்று மக்களை நீதிமன்றத்திற்கு வெளியே அணிதிரளச் செய்கிறது. காமராசனின் 'கறுப்பு மலர்கள்'

---

15. காமராசன், நா., கறுப்பு மலர்கள்,, ப. 22.

தமிழ் இலக்கியத்தில் செய்யப்பட்டு வெற்றி பெற்றுவிட்ட ஒரு சோதனை முயற்சியே. இன்குலாப் முற்போக்கு எண்ணங்களை ஒரு தத்துவ மேடைமீது பெருமிதமாக நின்று முழங்குபவர். இவர் கவிதைகளில் உலகில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதி காரத்தை நிலைநாட்டும் ஆவேசம், இயக்க ரீதியில் பீறிட்டுப் பாய்கிறது.

ஆயிரம் இயந்திரங்கள்
இயக்கும் உன்கைகள்
அரசியல் இயந்திரத்தை
இயக்கும் ஒசைதான்
பூமிக்கு நீதரும்
பூபாள மாகும்16

இவ் வரிகளில் பாட்டாளி வர்க்கத்தை எழுப்பி, உலகின் அனைத்துப் பாகங்களி லும் உள்ள புதுக்கவிதை வளர்ந்த நிலை யைச் சுட்டிக் காட்டும் கனகசபாபதி, ''இன்குலாப் கவிதைகளும், தமிழன்பனின் 'தோணி வருகிறதும்' போராட்ட உள்ளடக் கத்தின் புதிய பாமுறை கொண்ட புதுக் கவிதை நூல்கள்''என்று குறிப்பிடுகின்றார். போராட்டக் குணத்தின் தீவிரப்பாட்டுடன் புதுக்கவிதை எழுதி வருபவர்களுள், மேலும் குறிப்பிடத்தகுந்தவர்கள் அக்கினிபுத்திரன், இளவேனில், கேசவன் ஆகியோர்.

வானம்பாடிகளில் புவியரசு, சிற்பி, தமிழன்பன், அக்கினிபுத்திரன், சக்திக்கனல், கங்கைகொண்டான், மு. மேத்தா ஆகி யோர் சிறப்பான கவனத்திற்கு உள்ளான வர்கள். இவர்களின் நோக்கை, சு. அரங்க ராசன், 'சமூக அமைப்பை விமர்சிப்பது, கண்டிப்பது, வழிகாட்டுவது என்ற மும் முனைத் தாக்குகலைத் தொடுத்துப் பழைய அமைப்பின் வேர்களை அகற்றிவிட்டுப் புதிய முனைகளைப் பேணிக் காக்கும் படைப்புக்களை வெளியிடுகின்றனர்'17 என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

புதுக்கவிதையைப் பேச்சுக் கவிதை (Spoken Poetry) என்பர். இந்த இயல்பை, தனிமனித அந்தரங்க விவகாரங்களில் ஈடு பட்டு முணுமுணுப்பவரிடையே எப்படிக் காண முடியும்? அப்படியே, பேச்சுச் சந்தம் இருப்பினும், அந்த உட்பேச்சும் (Inner Speech) அடங்கியே ஒலித்தாக வேண்டும். வானம்பாடிக் கவிஞர்கள் தம் குரல் வழி யாகச் சமூகத்தின் முழக்கத்தையே வெளிப் படுத்தி விடுகின்றார்கள். எனவே பேச்சுத் தோரணை இவர்களிடம் அழுத்தமாக, ஒங்கி ஒலிக்கிறது.

நாங்களோ
ஜீவமகரந்தம் சுமந்து
செழுந்தேன் பிலிற்றுகின்ற
சிவப்பு ரோஜாக்கள்18

என்று வரும் சிற்பியின் வரிகளும்,

நாங்கள்
ஜனநாயக வயிற்றில்
ஜீரணங்கள் முடிந்த பின்னுல்
வெளித்தள்ளப்படும்
எச்சங்கள்19

என்று வரும் அக்கினிபுத்திரன் வரிகளும்,

இமயப் பறவைகள் நாம்
எரிமலையின் உள்மனம் நாம்
அக்கினிக் காற்றில்
இதழ்விரிக்கும் அரும்புகள் நாம்
திக்குகளின் புதல்வர்கள்
தேசவரம் பற்றவர்கள்20

என்று வரும் தமிழன்பன் வரிகளும், நேரடிப் பேச்சாகவே அமைந்து விடுகின்றன.

புதுக்கவிதை வடிவாக்கத்தில் இவர் களுக்கு மணிக்கொடி எழுத்துக் கவிதைகள் முன்மாதிரி தந்தன என்பதை முழுக்க மறுப்பதற்கில்லை. படிமப் பிரயோகம், குறியீட்டு ஆளுகை இவற்றில்—அதாவது சில உத்திமுறைகளில் அவை இவர்களுக்கு உதவியிருக்கின்றன. ஆனால் கவிதைகளின் முழுமையான கட்டுமானத்திற்கு இவர்கள் மாதிரிகளைத் தேடி அமெரிக்காவிற்கும், பிரான்சுக்கும் ஓடி அலையவில்லை. தம் மோடு வாழும் மக்களின் யாப்பு முறை களையும் இவர்கள் புதுக்கவிதை உள்ளடக்

16. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 84.
17. அரங்கராசன், சு., 10-வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, இ.ப.த.ம., ப. 60.
18. சிற்பி, வெளிச்சங்கள் - தொகுப்பு, ப. 8.
19. அக்கினிபுத்திரன், வெளிச்சங்கள் - தொகுப்பு, ப. 40.
20. தமிழன்பன், வானம்பாடி, இதழ் - 3, ப. 1.

க்கத்திற்குரிய வடிவங்களாகத் தெரிவுசெய்து கொண்டனர்.

புவியரசின் 'ஒரு தூங்காத தாலாட்டு' என்ற கவிதையில்,

ஏன்தான் இப்படிநீ
ஏங்கி அழுகிறாய்?
வயிற்றில் அடிச்சாரோ
வட்டிலில்மண் போட்டாரோ21

இந்த இசைப்பாங்கும், அழுகைக்குக் காரணம் கேட்கும் விதமும், மக்களின் தாலாட்டுப்பாடல்களில் கேட்கப்பட்டவை; பொருள் அப்படியல்ல.

பூக்களிலே நானுமொரு
பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன்விரல்கள் தீண்டலீலையே

பொன்விரல்கள் தீண்டலீலையே நான்
பூமாலை யாகலீலையே22

என்று ஏங்கும் மேத்தாவின் அரளிப்பூவின் குரலில் கிராமப்புறத்தின் நிழலாட்டம் அப்படியே அழகாகப் படிந்திருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

புதுக்கவிதையில் சொற் சிக்கனம் வற் புறுத்தப்படுகின்றது. வானம்பாடிக் கவிஞர் களின் சொற்கள் சாம்பலாய்க் குவிந்து, கவிதைக்கங்கின் மூச்சை நிறுத்தி விடுவ தாகச் சிலர் விமர்சனம் செய்கின்றனர். கவிதைக்குரிய சொற்களின் எண்ணிக்கை யை வரையறுத்துக் கொண்டு கட்டளைப் பாக்களை இயற்றுவதல்ல புதுக்கவிஞனின் நோக்கம். எல்லாக் கட்டுக்களையும் தகர்த் துத் தள்ள எண்ணும் அவன், தான் எடுத்துக் கொண்டுள்ள உள்ளடக்கம் எத்தனை சொற்களை வேண்டி நிற்கிறதோ, அத்தனை சொற்களால் அதனைக் குறைவறத் தான் அவ்வுள்ளடக்கத்தின் மூலம் உணர்த்தத் துடிப்பதை உணர்த்தி விடுவான். சுருக்க மாகச் சொல்வது, சொற்சிக்கனம்தான் கவிதை என்றால், எஸ்ரா பவுண்டுக்கும், எலியட்டுக்கும் கொடுக்கிற மரியாதையை விட அதிகமாக ஆத்திச்சூடி ஔவையாருக் குத் தந்தாக வேண்டும். கவிதையில் சில இணைப்புகள் மறைந்தே இருக்கவேண்டும். அந்த மறைவு இணைப்புகளை (Missing Links) வாசகன் தேடிக் கண்டுபிடித்தால் ஓர் அதிர்ச்சியின் பத்தை அடைய முடியும் என்று சிலர் இந்தச் சிக்கனச் சிக்கலுக்காக வாதிடுகின்றனர். இந்த 'உப் பொளித்து விளையாடும் விளையாட்டு' அகமன உளைச்சல்களுக்கு வேண்டுமானால் ஓர் ஆறுதலாக இருக்கலாம். வேகப்பட்டு விடிவைத் தேடிக்கொண்டிருக்கும் வானம் பாடிகளின் போக்கிற்கும் நோக்கிற்கும் இது ஒத்துவராது. கவிதையின் கலைத் தன்மைக்குப் பழுது செய்யும் வகையில் இல்லாமல்-கூடார்த்தக் கூடாரம்போடும் சொற்களை ஒதுக்கிவிட்டு-கூர்மையும், பயனும், துடிப்பும் உடைய சொற்களையே இப்புதுக்கவிதைக்காரர்கள் தம் ஆளுகைக்கு உரியவாக ஏற்றுக் கொள்கின்றனர். இறுக்கத்தையும் செறிவையும் வானம்பாடி கள் புறக்கணிப்பவர் என்பதும் இதன் பொருள் அன்று.

சுதந்திரம் என்ற தலைப்பில் வானம் பாடியில் வெளிவந்த அரங்கநாதனின்,

இரவிலே வாங்கினேம்
இன்னும் விடியவே இல்லை23

என்ற கவிதையும்,

திட்டங்கள் என்ற தலைப்பில் வெளி வந்த அப்துல் ரகுமானின்,

வரங்களே
சாபங்கள்
ஆகுமென்றால்
இங்கே
தவங்கள்
எதற்காக?24

என்ற கவிதையும், வாமன வடிவத்தில் அமைந்துள்ள விஸ்வரூபத்தின் செறிவுகள்.

---

21. புவியரசு, இதுதான், ப. 79.
22. மேத்தா, மு., கண்ணீர்ப் பூக்கள்.
23. அரங்கநாதன், ஏ., வானம்பாடி. இதழ் - 9, ம. 10.
24. அப்துல் ரகுமான், வானம்பாடி, இதழ் - 7, ப. 1.

தனிமனித சமூக, அரசியல் விமர்சனத்தில் அக்கறை காட்டும் புதுக்கவிதை அதற்குரிய வடிவ உத்திகளில் அதிகமாகப் பயன்படுத்துவது அங்கதத்தைதான்.

ஒரு சூழ்நிலையையோ, தனி மனிதரையோ, அல்லது ஒரு கருத்தையோ எள்ளும்படியாக உரைநடை அல்லது கவிதையில் அமைந்த எந்த இலக்கிய வடிவத்திற்கும் சூட்டப்படும் பெயரே அங்கதம் என்று கொலம்பியா கலைக் களஞ்சியம் கூறுகிறது.[25]

ஒரு பொருளை ஏளனப்படுத்தி அதன் மதிப்பை இறக்கிவிடும் இலக்கியக் கலை அங்கதம். அது வேடிக்கை, வெறுப்புணர்ச்சி, மட்டந்தட்டுதல், நிந்தித்தல் ஆகிய நோக்குகளில் இயங்கும் என்று அங்கதம் என்னும் சொல்லின் ஆழ அகலங்களை இலக்கியச் சொற்கோவை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.[26]

இவ்வங்கதக் கலையைப் புதுக்கவிதை இயக்கத்தின் வேறுபட்ட முகாம்களில் இருக்கும் எல்லோருமே பயன்படுத்தியிருக்கின்றனர்.

சமூகம் கெட்டுப்போய் விட்டதாடா
சரி
சோடாப்புட்டிகள் உடைக்கலாம் வாடா[27]

என்று ஞானக்கூத்தன் 'தீர்வு' என்று தலைப்பிட்டு எழுதியுள்ள கவிதையும்,

பங்கீட்டுக் கடைகளால்
பணக்காரர் ஆனால்
பாவம்என் றேதேதோ
பேப்பரில் வந்தன
பாவமொன் றில்லாவிட்டால்
பாருண்டா?
பசியுண்டா?
மண்ணில் பிறப்பதற்கு
நெல் ஒப்பும்போது
களிமண்ணில் கலந்திருக்க
அரிசி மறுப்பதில்லை[28]

என்ற ந. பிச்சமூர்த்தியின் கவிதையும் அங்கதங்களே!

வானம்பாடிகளில் ஒருவராகிய மீரா அங்கதக் கவிகளாகவே எழுதி அவற்றை 'ஊசிகள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

எங்கள் ஊர் எம். எல். ஏ.
ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை
கட்சி மாறினர்!
மின்னல் வேகம்
என்ன வேகம்
இன்னும் எழுபது
கட்சி இருந்தால்
இன்னும் வேகம்
காட்டி யிருப்பார்
என்ன தேசம்
இந்தத் தேசம்[29]

என்னும் அவர் கவிதை அங்கதத்தை அப்படியே அள்ளிக்கொண்டு வந்து நிற்கிறது. புதுக் கவிதையில் மிகுதியாகப் பயன்படுவதும் அங்கதமே. அங்கதத்தைப் பயன்படுத்துவதால் ஒரு விமர்சனம் அல்லது மறைமுகமான கண்டனம் மட்டுமே செய்ய முடியும். இவ்வங்கதத்தின் துணை விளைவாகிய நகைச்சுவை தன்னாதிக்கம் பெற்று விடுமானால் அங்கதக் கவிஞனின் நோக்கம் அடிபட்டுப் போகிறது. கவிதை ரசனைக்கு மட்டும் உரியதாகி, பயனளவில் வீணாகி விடும் அபாயம் இதில் இருக்கிறது. எனவே அங்கதம் கவிஞனின் உள்நோக்கத்தைக் கூர்மழுங்கச் செய்து விடாமல் அதனைப் பின்னுக்கு எப்போதும் நிறுத்தி வைத்து எச்சரிக்கை செய்வது தேவையானது. போராட்டத் தன்மை வாய்ந்த புதுக்கவிதைகளை மட்டுமே இயற்ற நினைப்பவர்க்கு இந்த அங்கதம் பயன்படுவதில்லை. கட்டளையிட்டு, படை நடத்த எண்ணுபவர்க்குக் கேலியும் கிண்டலும் செய்ய நேரமோ, நினைவோ இல்லை.

---

25. The Columbia Encyclopedia, Third Edition, P. 1893.
26. Abraham, M.H., A Glossary of Literary Terms, Third Edition, P. 226.
27. ஞானக்கூத்தன், நடை, முத்திங்களேடு, இதழ் - 5, ப, 1.
28. பிச்சமூர்த்தி, ந., காட்டு வாத்து.
29. மீரா, நீ - தொகுப்பு நூல்.

இனி, புதுக் கவிதையின் எதிர் நாள் குறித்துச் சில கருத்துக்கள். இவை ஆரூட மல்ல.

பாரதி, பாரதிதாசன் இருவரோடு மரபுக் கவிதையின் உச்சகட்டம் முடிந்து விட்டது. அவர்களின் பரம்பரையினர் குருவுக்கு மிக அடங்கிய மாணவர்களாய் புதிய எல்லைகளைச் சாதனைகளால் தொடாமல்-தம் பாரம்பரியத் தலைவர் களின் புகழை விளக்கமுறச் செய்து விட்ட னர். இந்நிலையில் மேலும் அந்தப் பரம் பரையில் மங்கிய குரல்களில் தம் குரலும் இழைந்து விடக்கூடாது என்பதாலும், சாதனைகளுக்கு வாய்ப்பு மிகவுடையதாகப் புதுக்கவிதைத் துறை இருப்பதைக் கண்ட தாலும் எடுத்தவெடுப்பிலே சிலர் புதுக்கவிதை யாளர்களாக இலக்கியப் பிரவேசம் செய் தனர். சிலர் மரபில் நடந்து பார்த்து அங்கும் பாதமுத்திரை பதித்து விட்டுப் புதுக்கவிதையின் பக்கம் சார்ந்து விறுவிறுப் பாக சாதனைச் சிகரங்களை எட்டியுள்ள னர்; எட்டிக் கொண்டிருக்கின்றனர்.

'புதுக்கவிதை என்பது மரபை உடைப்ப தால் மட்டும் உண்டாவதல்ல. அந்தச் சமூகத்தின் பிரச்சினையைப் புதிய சமூகத் தைப் படைக்கும் நோக்கோடு இனம்கண்டு, புதிய-இல்லாரும் இருப்பவரும் என்ற நிலை நீங்கும்—உலகை நோக்கி எழுதப்படும் எழுத்தே புதிய எழுத்து' என்று 'ஆக்டோ பஸ்ரும் நீர்ப்பூவும்'[30] என்னும் நூலின் முன்னுரை சரியாகக் கணித்துச் சொல்வது போல், இனிப் புதுக்கவிதை எழுதுபவர்கள் ஐக்கியப்பட்டு ஓர் இயக்கத்தில் அணி வகுத்து நின்றாக வேண்டும். கவிதைகள் செயற்பாட்டின் ஒரு கட்டம் என்ற உணர்வு வரும்போதுதான், கலை வலிமை வாய்ந்த கருவி என்பது மெய்ம்மையாகும். இன் றைய மனிதன் சமூகத்தினிடமும் சமூக அரசியல் நிறுவனங்களிடையும் நீக்கமறக் கலந்து விளைவுகளைப் பெற்று வருவதை உணர வேண்டும். அனைத்துலக மானுட விடுதலைக்காக மகத்தான இலக்கிய வேள்வியைச் செய்யவும், அதில் தம்மையே ஆகுதியாக்கிக் கொள்ளவும் புத்திலக்கியப் படைப்பாளர்கள் முற்பட்டு நிற்பதற்கு உரிய தருணம் இதுவன்றி வேறில்லை. அரசியலும் அதிகாரமும் — அனைத்தும் உழைக்கும் வர்க்கத்தின் கரத்தில் சேர்ப்பிப் பதற்காகவே கவிஞனின் ஒவ்வொரு சொல் லும் ஆசைப்படவும், அக்கறை கொள்ள வும், முயலவும் வேண்டும். உழைக்கும் வர்க்கமாகவே உலக மக்கள் மாறியாக வேண்டும். உறிஞ்சும் சுரண்டல் வர்க்கம் கவிதைக் கண்ணின் கனல்பட்டுப் பொசுங் கிட வேண்டும்.

இதனைச் செய்து முடித்துவிட்டு, ரோஜாமலரின் பனித் துளிகளிலும், வண்ண மயிலின் சிறகசைப்புகளிலும், வெண்ணில வின் விழுதுகளிலும் படைப்பாளிகள் மனம் இளைப்பாறட்டும்; எனக்கு மறுப்பில்லை.

---

30. ஆக்டோபஸ்ரும் நீர்ப்பூவும் - முன்னுரை - ப. 8.

# நம்பியாண்டார் நம்பி

பேராசிரியர் பெ. கு. வரதராஜன்,
எம்.ஏ., பி.ஓ.எல்., பி.டி.,

இக்கட்டுரையாசிரியர் சேலம் மாவட்டத்திலுள்ள பெரியபட்டி என்னும் சிற்றூரில் 16-11-1929ஆம் நாள் பிறந்தவர்; இடைநிலை ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கித் தம் சொந்த முயற்சியால் உயர்கல்வி பெற்று முன்னேறியவர்; சமய, இலக்கியச் சொற்பொழிவாற்றுந் திறன் மிக்கவர்; பல பக்திப் பாடல்களும் இலக்கியக் கட்டுரைகளும் எழுதியவர்; திருஷ்ணகிரி ஆய்வரங்க உறுப்பினாகவும், திருஷ்ணகிரி கம்பன் கழகத் தலைவராகவும் தொண்டாற்றி வருபவர்; இப்போது திருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர் ''நம்பியாண்டார் நம்பி காட்டும் ஞான சம்பந்தர்'' என்ற தலைப்பில் முனைவர் (பிஎச். டி.) பட்டத்திற்காக ஆய்வு செய்து வருகின்றார்.

சிதம்பரத்தினின்று குமராட்சி வழியாகச் சென்றால் திருநாரையூரை அடையலாம். அவ்வூரில் இன்றைக்கு சற்றேறக் குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு நம்பியாண்டார் நம்பி என்ற சைவப் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ''அவருடைய தந்தையார் பெயர் அனந்தேசன்; தாயார் பெயர் கலியாணி என்பதாம். இவர் ஆதி சைவ மரபில் தோன்றியவர்.''[1].

''நம்பியாண்டார் நம்பி அவ்வூரில் உள்ள பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் இளமைப் பருவத்தில் ஒருநாள் அவருடைய தந்தையார் வெளியூர் செல்ல நேர்ந்தது.[2] தந்தையார் அவ்வூரில் உள்ள பொல்லாப் பிள்ளையாருக்குப்[3] பூசை செய்து வந்தார். தான் வெளியூர் செல்லும் அந்த நாள் நம்பியைக் கோயிலுக்கு நிவேனதப் பொருள்களுடன் அனுப்பிப் பூசை செய்து வரும்படி ஏற்பாடு செய்திருந்தார். அவ்வேற்பாட்டின் படி விநாயகருக்கு வேண்டிய நிவேதனப் பொருட்களைக் கொடுத்து, நம்பியை அவரது தாயார் கோயிலுக்கு பூசை செய்து வரும்படி

1. திருநாரையூர்த் தலபுராணம்.
2. திருமுறை கண்ட புராணப்படி.
3. பொல்லா-செதுக்கப்படாத-சுயம்பு.

அனுப்பினார். நம்பியும் அன்று பள்ளி செல்லும் நேரத்திற்குள் பூசையை முடித்து வரக் கோவிலுக்குச் சென்றார். கணபதிக்குத் திருமஞ்சன நீராட்டிப், பூச்சூட்டி, நிவேதனப் பொருட்களை வைத்துப் பூசை செய்தார். பூசை முடிந்தபின் பிள்ளையார் தாம் படைத்த நிவேதனப் பொருட்களை உண்ணாமல் இருப்பதைக் கண்டு திகைத்தார். தினமும் பூசையை முடித்துக் கொண்டு தந்தையார் நிவேதனப் பொருட்களுடன் வருவதை அறியாத நம்பி ஏமாற்றமடையவே, தாம் மேற்கொண்ட பூசையில் ஏதாவது தவறுநேர்ந்துவிட்டதோ என வருந்தினார். படைத்த உணவுகளை உண்ணவில்லை யென்றால் பெற்றோர்களுக்குத் தாம் என்ன காரணம் கூறுவது எனத் தெரியாமல் திகைத்தார். கோயில் சுவரில் தம் தலையை மோதி உடைத்துக் கொள்ள முயன்றார். இத்தருணத்தில் விநாயகர், ''நம்பி, பொறு'' எனக் கூறித் தடுத்தார். படைத்த பொருளை எல்லாம் விநாயகர் உண்டார். தாம் வழக்கமாகப் பள்ளிக்குச் செல்லும் காலம் கடந்துவிட்டதை அறிந்த நம்பி மீண்டும் வருந்தினார். காலங் கடந்து பள்ளிக்குச் சென்றால் அங்கு ஆசிரியர் தண்டிப்பாரே என்ற அச்சத்தால் பள்ளி செல்ல வில்லை. சகல கலைகளையும் பொல்லாப் பிள்ளையாரே நம்பிக்குக் கற்பித்து வந்தார்.

நம்பி படைத்த உணவினை விநாயகர் உண்டார் என்ற செய்தி யறிந்து பெற்றோர் திடுக்கிட்டனர். பிறகு நம்பி காட்ட, உண்மையறிந்து மகிழ்ந்தனர். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது. அக்காலத்தில் ஆட்சியிலிருந்த சோழ மன்னன், நம்பியையும் அவருக்கு அருள் செய்த பிள்ளையாரையும் நேரில் காண ஏராளமான நிவேதனப் பொருள்களுடன் வந்தான்.

அரசன் வருவதற்கு ஒரு காரணமும் இருந்தது. தேவார திருவாசகங்களில் ஒரு சில பாடல்களை ஓதக் கேட்ட மன்னன் அப்பாடல்களில் மனம் மகிழ்ந்தான். அவனுக்குப் பாடல்கள் முழுவதையும் கேட்டுத் தெளிக்க வேண்டுமென்ற ஆசை திருவருளால் கூட்டுவிக்கப்பட்டது. அவற்றை எங்கு எப்படிப் பெற முடியும் என்ற சிந்தையிலிருந்த மன்னனுக்குத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பியின் வியத்தகு செயல்கள் அறிவிக்கப்பட்டன. திருநாரையூர் சென்று நம்பியாண்டார் நம்பி மூலம் பொல்லாப் பிள்ளையாரை வேண்டினால், தனது எண்ணம் நிறைவேறலாம் எனக் கருதினான் மன்னன்.

நம்பியை நாடி மன்னன் சென்றான். மன்னனை நம்பி வரவேற்றார். வந்த காரியத்தை மன்னன் கூற, நம்பி யறிந்து கொண்டார். விநாயகப் பெருமானை வேண்டினார். விநாயகருடைய அருள், ''தில்லையில் பரமன் திருக்கூத்தியற்றும் அம்பலத்தின் புறக்கடையில் வைத்துக் கையடையாளமிடப் பெற்றுள்ளன''[4] என்ற ஒலியாக ஒலித்தது. திருநாரையூர்த் தலபுராணம் ''சிதம்பரத்தின் சிற்சபைக்குப் பக்கத்தில் உள்ள அறையில் தேவாரத் திருமுறைகள் முழுவதும் இருக்கின்றன''[5] எனக் கூறியதாகக் கூறுகிறது.

மன்னன் நம்பியுடன் தில்லைக்குச் சென்றான். தில்லையிலிருந்த தில்லை மூவாயிரவர் திருமுறைகள் வைக்கப்பட்டிருந்த அறையினைத் திறக்க அனுமதிக்கவில்லை. ''தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும்''[6] எனக் கூறி, மன்னனைத் தடுத்தனர். மன்னனும் அவர்கள் விரும்பியவாறு செய்வதாகக் கூறித், திருமுறை படைத்தமூவர் முதலிகளைப்போலப் பொன்னால் செய்து, அத் திருமேனிகளைப் பல்லக்கிலேற்றிக் கொணர்ந்தான். தில்லைவாழ் அந்தணர்கள் மேலும் கூற ஏதுமறியாதவர்களாய் அத் திருமேனிகளையே திருமுறையாசிரியர்கள் நேரில் வந்ததாகக்

4. திருமுறைகண்ட புராணம்-பாடல்-1
5. திருநாரையூர்த் தலபுராணம்-பாடல் 29, 15
6. திருமுறைகண்ட புராணம்-பாடல்-19.

கருதி அறையினைத் திறக்க மனம் ஒப்பினர். மன்னன் முன்னிலையில் அறை திறக்கப்பட்டுத் திருமுறைகள் வெளிப் படுத்தப்பட்டன. இதே கருத்தினைத் திரு நாரையூர்த் தலபுராணம், சுருக்கமாக, ''நம்பி சிதம்பரம் சென்று கோயில் திருப்பண்ணியார் விருத்தம் என்னும் தமிழ் மாலையைச் சூட்டி'' தேவார ஏடுகளை வெளிப்படுத்தினர் என்று கூறும்.

நம்பியாண்டார் நம்பி மன்னனுடைய வேண்டுகோளுக்கிணங்கித் தேவாரப் பாடல்களை ''ஏழு திருமுறைகளாக வகுத்தார்'' என்று திருமுறை கண்ட புராணம் கூறுகிறது[7]. மூவர் தேவார மன்றி மற்றைய அடியார்களது பாடல் களையும் திருமுறைகளாக அடைவு செய்ய மன்னன் கேட்டுக் கொண்டான். ''நம்பி யாண்டார் நம்பியும் அவ்வாறே திருவாச கத்தையும் திருக்கோவையாரையும் எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா மாலையை ஒன்பதாந் திருமுறையாகவும், திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறை யாகவும் வகுத்துத் தொகுத்தார்.''[8]

''வைத்தற்பின் நம்பிகழல் மன்னர் பிரான் மகிழ்ந்திறைஞ்சிச் ''சித்திதரும் இறை பொழிந்த திருப்பாசுர முதலாம் உய்த்த பதிகங்களையும் ஒருமுறை யாச் செய்க, எனப் பத்தி தரும் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார்''[9]

மன்னனது வேண்டுகோளை மீண்டும் ஏற்றுக்கொண்ட நம்பி, இறையனார் திரு முகப் பாசுரத்தை முதலாகக் கொண்டு மற்ற அடியார்களுடைய பிரபந்தங்களை யெல்லாம் ஒன்றாகத் தொகுத்துப் பதி னோராந் திருமுறையென ஆக்கித்தந்தார். முதலில் திருமுறைகளை ஏழாகத்தொகுத்த நம்பி, மீண்டும் பதினொன்றாகத் தொகுத்த தேன் என்று வினாவிற்கு விடையாகத்

துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூயமனு ஏழுகோடி என்பதுன்னி[10]

பத்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்த முறை நான்கி னொடு முறை
பதினொன்றாக்கினார்[11]

என்ற தொடர்களைத் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது.

நம்பியாண்டார் நம்பி மீண்டும் திரு முறைகட்குப் பண்ணடைவு வகுக்க வேண்டிய தாயிற்று. திருவெருக்கத்தம் புலியூருக்குச் சென்று இறைவனைத் துதித்து வேண்டினார். ''இவ்வூரில் திரு நீலகண்ட யாழ்ப்பாணர் வழியில் தோன்றி யிருக்கும் பெண்ணெருத்திக்குப் பண்ணிசை யளித்துள்ளோம்; கேட்க[12]'' என அசரீரி கூறிற்று. அதுகேட்ட மன்ன னும் மற்றவர்களும் அப்பெண்ணைத் தில்லைக்கு அழைத்துவந்து இறைவன்முன் நிறுத்திப் பண்ணடைவு செய்வித்தனர். மன்னன் நம்பியாண்டார் நம்பிக்குப் பொன் னும் பொருளும் கொடுத்துச் சிறப்பித் தான். பண்ணமைத்துத் தர உதவிய பெண் ணுக்கும் மன்னன் சிறப்புச் செய்து மகிழ்வித்தான்.

அதன்பிறகு நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் வந்து, பொல்லாப் பிள்ளை யாரைத் தினமும் மனமுருகப் பூசித்துச் சிவனருட் செல்வராய் விளங்கி, நீண்ட நாட் களுக்குப் பிறகு இறைவன் திருவடியடைந் தார் என அவரது வரலாறு கூறுகிறது.

மேற்குறித்த இவ்வரலாறு, அனைவரா லும் ஒப்புக்கொண்ட முடிவெனக் கருதப் படுகிறது. ஆனாலும், இவர்தம் கால வரலாற்றைப் பற்றிய கருத்து வேறுபாடு பல அறிஞர்களுக்கும் இடையே நிலவி வருவ தொன்றாகும். இக்கருத்து வேறுபாட்டிற் குக் காரணம் திருமுறைகண்ட புராணம் இயற்றிய உமாபதி சிவாசாரியாரே யாவர். நம்பியாண்டார் நம்பியவர்களைத் திருமுறை தேடத் தில்லைக்கு அழைத்துச் சென்ற சோழமன்னன் இராச இராசன் என்று மட்டும் குறிப்பிட்டிருந்தால் ஆராய்ச்சியாளர்கள் கருத்து வேறுபாடு

7. திருமுறை கண்ட புராணம்-பாடல் 19
8. ,, ,, ,, -பாடல் 26
9. ,, ,, ,, -பாடல் 27
10. திருமுறை கண்ட புராணம்-பாடல் 24
11. ,, ,, ,, -பாடல் 28
12. ,, ,, ,, -பாடல் 32

கொள்ள வழியில்லை. அவர் அவ்வாறு கூறாமல்,

அலகில் புகழ் பெறு ராச ராச மன்னன்
அபய குலசேகரன் 13

எனக் குறிப்பிட்டுள்ளார். அதோடு மட்டுமில்லாமல் ''குலசேகரனாம் கோன்''[14] எனவும் குறிப்பிட்டுள்ளார். திருநாரையூர்த் தலபுராணம், ''அபய குலசேகரன்'' என உரைக்கின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆராயுமிடத்துத் திருமுறை கண்ட சோழன் இராச ராசன் என்றும், அவன் காலத்திலே நம்பியாண்டார் நம்பி வாழ்ந்தார் என்றும் எளிதிற் சொல்லிவிடலாம். அவ்வாறாயின் இவரது காலம் கி. பி. 980 முதல் 1036 என்று கொள்ளலாமென, திரு. மு. அருணாசலம் கருதுகின்றார். நம்பியாண்டார் நம்பி காலத்தைத் திரு. ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் கி. பி. 870-க்கும் கி.பி. 907-க்கும் இடைப்பட்ட காலமாதல் வேண்டும் என்று கூறுகிறார். இக்கூற்றுக்கு அவர் தரும் காரணம், ''நம்பியாண்டார் நம்பி, தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில், சோழமன்னனான முதல் ஆதித்தனைப் பன்முறையும் பாராட்டிக் கூறுவர். அதனால் அவர் காலம் அவ்வேந்தன் வாழ்ந்த கி.பி. 870-க்கும் 907-க்கும் உள்ள காலமாதல் இனிது விளங்குகிறது''[15] என்பதாம்.

திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், ஆதித்தன் என்ற பெயருடைய சோழ மன்னர்கள் இருவர் இருந்தபடியால், சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்த ஆதித்தன் என நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடும் ஆதித்தன் யாரோ, அவர் காலத்தையே நாம் கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். விசயாலய சோழன் புதல்வனும், முதற் பராந்தக சோழன் தந்தையுமான முதல் ஆதித்த சோழனே சோழமண்டலத்தை 870 முதல் 907 வரையில் ஆட்சி புரிந்தவனாவன் என்பர்.

திரு. எஸ். சோமசுந்தர தேசிகர் அவர்கள் நம்பியாண்டார் நம்பி காலத்தைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: ''இவர் கி.பி. 1070 முதல் கி.பி. 1118 வரை அரசாண்ட முதற் குலோத்துங்கன் காலத்தவரென்று சிலரும், கி.பி. 907 முதல் கி.பி. 947 வரை அரசாண்ட பராந்தகன் காலத்தவர் என்று சிலரும், இராசராச அபயகுலசேகர மன்னன் காலத்தவரென்று சிலரும், கி.பி. 985 முதல் கி. பி. 1012 வரை அரசாண்ட கீர்த்தி வாய்ந்த முதலாம் இராசராசன் காலத்தவர் என்று சிலரும் கூறுவர்.''[16]

பிறகு தம் ஆய்வில் கண்ட ஆறு காரணங்களைக் காட்டி, அவற்றிற்குப் பொருத்தமான சோழ மன்னன் எவனேயாகிலும் அவனே நம்பியாண்டார் நம்பி காலத்துச் சோழ மண்டலத்தை ஆண்ட அரசன்; அவன் காலமே நம்பியாண்டார் நம்பி வாழ்ந்த காலம் என்றும் கூறுவர்.

காரணங்கள் :-

1. சோழ மன்னனது பெயர் ஆதித்தன் என்றிருக்க வேண்டும்.
2. அவனுக்கே இராசராசன், அபயன், குலசேகரன் என்ற பட்டங்களோ வேறு பெயர்களோ இருக்க வேண்டும்.
3. அவன் சிங்கள நாட்டை அழித்தவனாக இருக்க வேண்டும்.
4. பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்தவனாக இருக்க வேண்டும்.
5. நம்பியாண்டார் நம்பி காலத்திலேயே அவன் சிவபெருமானது திருவடி நீழலை அடைந்திருக்க வேண்டும்.

---

13. திருமுறை கண்ட புராணம்-பாடல்-1.
14. திருமுறை கண்ட புராணம்-பாடல்-13.
15. சைவ இலக்கிய வரலாறு-ஔவை. சு. து. பக்கம் 438
16. சைவ சிகாமணிகள் இருவர்-சோமசுந்தர தேசிகர்-பக்கம்-32.

6. சோழர் பரம்பரையில் வந்தவனாய் இருக்க வேண்டும். வேளூர்த் தலைவர்களோடு உறவுடையவனாய் இருக்க வேண்டும்.

இத்தகைய செய்திகளையும், தக்க சான்றுகளையுங் கொண்டு தனித்தனியே ஆராய்ந்து, முடிவில் 'ஆதித்த சோழன் இராசராச அபய குலசேகரன்' என்பவன் இராசராசனே என்றும், ஆதித்தனென்பது சூரிய குலத்தையும், அபயகுலசேகரன் என்பது அவனுக்களிக்கப்பட்ட விருதுப் பெயரையும் குறிப்பன என்றும் கூறித் தம் ஆய்வினை முடித்துக் கொள்ளுகின்றார். இவ்வாய்வினை மு. அருணாசலம் பிள்ளையவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் தரும் திருமுறையாசிரியர்கள் கால அட்டவணையில் நம்பியாண்டார் நம்பி காலம் 11 ஆம் நூற்றாண்டின் முற்பாதி; முதலாம் இராசராசன் காலத்தவர் (985-1014) என்று குறிப்பிடுகின்றார்.

நம்பியாண்டார் நம்பி வாழ்ந்த காலம் அவரது காலத்தில் சோழப் பேரரசனாக விருந்த மன்னனைக் கொண்டு உறுதி செய்யப்பட வேண்டியதொன்றாய் முடிகிறது. அக்கால மன்னனுடைய பெயர் தெளிவுபடாததாக விருப்பதால், ஆராய்ச்சியாளர்கள் கருத்து வேறுபாடு கொண்டு ஒரு முடிவிற்கும் வாராதிருக்கின்றனர். ஆகவே, தெளிந்ததொரு முடிவுக்கு வரும் வரை, நாம் நம்பியாண்டார் நம்பியின் காலம் முதலாம் இராசராசன் ஆண்ட காலமே என்று கூறி, கி.பி. 985-1014 என்றே கொள்வோம்.

நம்பியாண்டார் நம்பி பதினோராந் திருமுறையில் தாம் பாடிய பிரபந்தங்களாகச் சேர்த்திருப்பவை பத்தாகும். அவையாவன :-

1. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை.
2. கோயில் திருப்பண்ணியார் விருத்தம்.
3. திருத்தொண்டர் திருவந்தாதி.
4. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி.
5. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்.
6. ஆளுடைய பிள்ளையார் திரு மும்மணிக்கோவை.
7. ஆளுடைய பிள்ளையார் திரு உலா.
8. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்.
9. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை.
10. திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை.

இவரது பிரபந்தங்களில் முதல் மூன்று பிரபந்தங்கள் தவிர, எஞ்சிய ஏழனுள் ஆறு பிரபந்தங்கள் திருஞான சம்பந்தர் பற்றியவையாகும். நம்பியாண்டார் நம்பிக்குச் சம்பந்தர்பால் உள்ள அன்பின் பெருக்கினை அவை காட்டும். இறுதியாகத் திருநாவுக்கரசர் மீதும் ஒரு பிரபந்தம் செய்துள்ளார். இப்பிரபந்தம் நம்பியாண்டார் நம்பி அவரது தொண்டிலும் தேவாரத்திலும் கொண்டிருந்த மதிப்பினைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

சைவ சமயத்துள் ஒரு வியாசர் போன்று கருதத்தக்க நம்பியாண்டார் நம்பி, திருமுறைகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றைப் பதினொன்றாகத் தொகுத்துப் பண்ணடைவும் செய்து வைத்தார். இவர் காலத்துக்குப் பின் தோன்றியது பன்னிரண்டாந் திருமுறை யாகும்.

# இலக்கணமும்
# மொழியியலும்

# உத்தி வகை

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்

இக் கட்டுரையாசிரியர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருநாகேச்சுரத்தில் 14-1-1917இல் பிறந்தவர்; கரந்தைப் புலவர் கல்லூரியின் முதல் ஆசிரியராயமர்ந்து ஐந்தாண்டுகள் பணியாற்றியவர்; 1943 முதல் 1979 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை விரிவுரையாளர், பேராசிரியர், தலைவர் ஆகிய பொறுப்புக்களில் பணியாற்றியவர்; 1980 முதல் 1982 வரை மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழியற்புலத்தில் இணைப்பாளராகப் பணியாற்றியவர்; 'திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்'; 'முதுபெரும் புலவர்'; 'சங்க இலக்கியச் சான்றோர்'; 'சித்தாந்தச் செம்மல்'—எனும் பல சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்: 'சங்ககாலத் தமிழ் மக்கள்', 'தமிழிலக்கிய வரலாறு'—தொல்காப்பியம்; 'பன்னிரு திருமுறை வரலாறு; (இருபகுதிகள்)—முதலிய சிறந்த பல நூல்களை எழுதியவர்; இப்போது தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத் துறைத் தலைவராகவும் மொழிப்புலத் தலைவராகவும் உள்ளார்.

இலக்கண நூலாசிரியன் தான் கூற எடுத்துக்கொண்ட பொருளைச் சூத்திரத்தாற் புலப்படுத்த மேற்கொண்ட உணர்த்தும் முறைமையே 'உத்தி' எனப்படும். இது தந்திரவுத்தி என அடை புணர்த்தும் வழங்கப்பெறும். தந்திரம் - நூல்; உத்தி - யுத்தி, ''தந்திரமெனினும் நூலெனினும் ஒக்கும். உத்தியென்பது வடமொழிச் சிதைவு. சூத்திரத்திற் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது'' என விளக்குவர் இளம்பூரணர். உத்தியினை நூற்புணர்ப்பு என வழங்குதலும் உண்டு. உத்தி இன்ன வென்பதனை விளக்கும் முறையில் அமைந்தது,

''நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி''

(நன்னூல்-பாயிரம் சூத்-14)

எனவரும் நூற்பாவாகும்.

எல்லா நூற்கும் ஆவதோர் இலக்கணம் உணர்த்துவதாக அமைந்தது,

''ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்''

(108)

எனவரும் தொல்காப்பிய மரபியற் சூத்திர மாகும். சூத்திரத்தின் பொருளை விரித் துரைக்குமிடத்துக் காண்டிகையுரையும், அவ் வுரையாலும் விளங்காக்காலத்து அதனை யும் விளங்க விரித்துரைக்கும் உரைவகையும் உடையதாகி, பத்துவகைக் குற்றமும் இன்றி, நுண்பொருளாவாகிய முப்பத்திரு வகை யுத்தியொடு பொருந்தி வருவது நூலாகும். நுண்ணறிவுடைய புலவர்கள் நூலுக்கு இலக்கணம் இவ்வாறு கூறுவர்'' என்பது இச்சூத்திரத்தின் பொருளாகும். இதன்கண் 'முப்பத்திருவகை யுத்தி' எனத் தொகுத்துரைக்கப்பட்ட உத்திகளை விரித் துக் கூறித் தொல்காப்பியத்தின் மூன்றதி காரங்கட்கும் வேண்டும் புறனடையுங் கூறுவது,

''ஒத்த காட்சி யுத்திவகை யுரைப்பின்
நுதலி யறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்
வாரா ததனால் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்
பிறனுடம் பட்டது தானுடம் படுதல்
இறந்தது காத்தல் எதிரது போற்றல்
மொழிவா மென்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்
பிறன்கோட் கூறல் அறியா துடம்படல்
பொருளிடை யிடுதல் எதிர்பொரு ளுணர்த்தல்
சொல்லி னெச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகங் கூறல்
உய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே

(தொல்-மரபு-112)

எனவரும் தொல்காப்பிய மரபியலின் இறுதிச் சூத்திரமாகும். இதற்கு இளம் பூரணரும் பேராசிரியரும் சிலவிடங்களில் வெவ்வேறு பாடங்கொண்டு உரை வரைந் துள்ளனர்.

இச்சூத்திரத்தில் 'ஒத்த காட்சி உத்தி' என அடைகொடுத் தோதினமையால் முன் னைச் சூத்திரத்தில் கூறப்பட்ட பத்துவகைக் குற்றத்தோடும் ஒத்து நோக்கும் நிலையது 'உத்தி' எனவும், உத்தி என்றமையாது 'உத்திவகை' எனத் தெரித்துணர்த்தினமை யால் நூலாசிரியன் நுண்ணுணர்வின் திறத் தால் இயல்பாக அமையும் நூற்புணர்ப்பு முறையே 'உத்தி' எனப்படும் எனவும், இந் நூற்பாவில் நுதலியறிதல் முதலாக எடுத் துரைக்கப்படுவன நூலாசிரியன் தன் கருத் துப்படி செயற்கையாக அமைத்துக் கொள் ளும் முறையாதலின் 'உத்திவகை' எனப் பட்டன எனவும், 'உத்திவகை விரிப்பின்' எனவே இங்குக் கூறப்படும் உத்திவகை ஒவ் வொன்றினும் இனமாக அடக்கப்படுவன உள எனவும் கொள்வர் பேராசிரியர்.

'பத்துவகைக் குற்றத்தோடும்' எனவே இவை நூற்கள் அன்றி ஒழிந்த செய்யுட்கு வருங்கால் விலக்கப்படுதலும், முற்கூறிய குற்றம்போல இவையும் வேறு சில பொருள் படைத்தலு முடையவாயின. ''காட்சி யுத்தி'' என்று இவற்றைக் கூறியவதனான் நூலுட் காணப்படும் ஐந்து குற்றத்தோடும் (கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மிகை படக் கூறல், பொருளில மொழிதல், மயங் கக் கூறல் என்னும் ஐந்தும் மற்றொரு பொருள் கொள்ளின் அவை வசையற்றன வாதல் போல அவ்வந்நூற்குப் பயன்பட வரும் பகுதியான்) ஒத்தல் கொள்ளப்படும்'' என்பர் பேராசிரியர். உத்தியென்பது செயற்கை வகையாகிய நூற்புணர்ப்பாயின் நூல் செய்யுங்கால் இயல்பு வகையாகிய வழக்குஞ் செய்யுளும் போலச் சொல்லுதல் ஒண்மையுடையதன்று எனின், அவ்வாறு செவ்வனம் (இயல்பு வகையாற்) சொல்லு தல் நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாதல் வேண்டும் என்பது (ஆசிரியன்) முன் னர்ச் சொல்லினனாம். எனவே அங்ங னம் ஒண்மையுடையதாதலே உத்தி என்பது தானே விளங்கும். செவ்வனஞ் சொல் லாத தந்திரவுத்தி வகையும் அவ்வாறே ஒண்மையுடையனவாம் என்பது இச்சூத் திரத்தின் கருத்தாகும். எனவே, செவ் வனஞ் செய்தலே உத்தி எனவும், 'நுதலிய தறிதல் முதலாக இங்குச் சொல்லப்பட் டவை உத்திவகை யெனவும் கொள்வர் பேராசிரியர்.

முன்னர் (மரபியல்-98) எதிரது நோக்கி முப்பத்திருவகையுத்தி எனத் தொகைகூறிப் பின்னர் (இச்சூத்திரத்தில்),

'மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டும்'

என்கின்றாராகலான் அங்ஙனம் இனம் பற்றி அவற்றோடு அடங்குவனவெல்லாம் அவற்று விரியாகும் என்னுங் கருத்தினால் 'உத்தி வகை விரிப்பின்' என்றார் ஆசிரியர்.

'அவனிவ னுவனென வரூஉம் பெயரும்' (சொல்-164) என்பதனுள், தொகையின்றியுஞ் சுருங்கச் செய்வதோர் ஆறு (உபாயம்) உளதாயினும், அவை பதினைந்து பெயருமே ஒரு நிகரனவென்பது அறியலாகும் வண்ணம் 'அப்பதினைந்தும்' எனத் தொகை கூறுதல் வெள்ளிதன்றி ஒள்ளிதாகவே யமைதலின் தொகுத்துக் கூறல் உத்திவகையான் அமையும் எனவும், இனி 'மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே' (செய்-101) என்னுஞ் சூத்திரம் போல்வன பிறிதொரு பொருள் பயக்குமென்றலும் அச்சூத்திரத்துட் காட்டப்பட்டது எனவும், இவ்வாற்றான் இவ்வுத்தி வகை எல்லா நூற்கும் இன்றியமையாவாயின எனவும் கூறுவர் பேராசிரியர்.

'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்' (சொல்-19) என்றாற் போலச் சொல்லிச் செல்வன செவ்வனஞ் செய்யும் உத்தியாகலின், அவை உத்திவகையெனப் படா, உத்தியெனவேபடும் என்பது பேராசிரியர் கருத்தாகும். இச்சூத்திரத்திற் குறிக்கப் பட்ட முப்பத்திரண்டு உத்திவகை இவையெனவும் அவ்வகைக்கு இனமாக விரித்துக் கொள்ளப்படுவன இவையெனவும் பேராசிரியர் உதாரணங் காட்டி விளக்கியுள்ளார்.

எண்ணிய முப்பத்திரண்டு மல்லன தோற்றினும் அவற்றுள் அடக்கி அவை தாம் ஒருங்குவரினும் வேறு தெரிந்து நூல் சொல்லிய அல்ல பிற வருமாறும் அவை சொல்லிய வகையாற் சுருங்கநாடி இனத்திற் சேர்த்துமாறும் பேராசிரியருரையிற் காட்டப்பட்டன.

இவ்வுத்திவகை பற்றி இளம்பூரணரும் பேராசிரியரும் கொண்ட பாடங்கள் உத்திவகையின் பெயர்களிற் சில மாற்றத்தைக் குறிப்பனவாகும்.

'மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல், மொழியாததனை முட்டின்றி முடித்தல்' என இளம்பூரணர் கொண்ட இரண்டுத்திகளையும், 'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்' என ஒரே உத்தியாகக் கொண்டார் பேராசிரியர்.

'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என இளம்பூரணரும், 'வாராததுணர்த்தல்' எனப் பேராசிரியரும் பாடங் கொண்டார்.

'தன்கோட்கூறல் உடம்பொடு புணர்த்தல்' என இளம்பூரணரும்

'தன்கோட்கூறல் முறைபிறழாமை எனப் பேராசிரியரும் பாடங் கொண்டனர்.

'ஒருதலை யன்மை முடிந்தது காட்டல்' என்பதனை இளம்பூரணர் ஒரே உத்தியாகக் கொண்டார். பேராசிரியர் 'ஒருதலை யன்மை' எனவும், 'முடித்துக் காட்டல்' எனவும் இரண்டாகக் கொண்டார்.

'பிறனுடம்பட்டது தானுடம்படுதல்' என்பதற்குப் 'பிறநூன் முடிந்தது தானுடம்படுதல்' எனவும் மூல பாடம் காணப்படுதலால், 'பிற நூன் முடிந்தது தானுடம்படுதல்' என யாருப்பருங்கல விருத்தியினும், நன்னூல் மயிலைநாதருரையினும் காணப்படும் உத்தியும் இதுவும் ஒன்றே யென்பது நன்கு தெளியப்படும்.

'மொழியாததனை முட்டின்றி முடித்த'லாவது, எடுத்தோதாத பொருளை முட்டுப்படாமல் உரையினான் முடித்தல். இதனை 'உரையிற்கோடல் என்ப' என்பர் இளம்பூரணர்.

'வாராததனான் வந்தது முடித்தல், வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்னும் உத்திகள் சொல்லமைப்பில் நன்னூ

லில் இடம் பெறவில்லை. நன்னூலின் வரும் 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்பது ஒருத்தி. இதனை இரண்டுத்தி களாகக் கொண்டு உய்த்துணரவைப்பு என் பதனை உத்திகட்கெல்லாம் அடை மொழி யாக்குதலும் உண்டு. வாராதது முடித்தலை ஒன்றின முடித்தல் என வும், வந்தது கொண்டு வாராதது முடித்தலைத் தன்னின முடித்தல் எனவும் கொள்ளுதற்கும் இடமுண்டு:

'முந்து மொழிந்ததன் தலை தடு மாற்றம்' என்பதனைத் ''தலை தடுமாற்றத் தந்து புணர்ந்துரைத்தல் என்பதோர் உத்தி'' என்பர் காரிகை யுரையாசிரியர்.

'ஒப்பக்கூறல்' என்பது 'ஒப்பின் முடித்தல்', 'மாட்டெறிந்தொழுகல்' என நன்னூலில் வரும் உத்திகளொடு சொல் லாலும் பொருளாலும் ஒத்துளது. 'ஒன்று கூறுங்கால் இரு பொருட் குறித்ததென்று இரட்டுறச் செய்தல்' எனப் பேராசிரியர் விளக்குதலால், இஃது இரட்டுற மொழிதல் என்னும் உத்தி என்பது அவர் கருத்தெனத் தெரிகிறது.

''ஒருதலை மொழியாவது' ஏகாக்கர மென்னும் வடமொழிப் பொருண்மை. அஃதாவது சூத்திரத்துக்குப் பொருள் கவர்த்துத் தோன்றின் அதனுள் ஒன்றனைத் துணிந்து கூறல்'' என்பர் இளம் பூரணர். 'ஒரு தலை மொழிதல்' என்ப தனை நன்னூலில் வரும் 'ஒருதலை துணி தல்' என்னும் உத்தியாகக் கொள்ளலாம். 'தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்' என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். நன்னூலிலும் இவ்வாறே காணப்படுகிறது. 'தன்கோட் கூறல் முறைபிறழாமை' எனப் பாடங் கொள்வர் பேராசிரியர்.

14. 15. 'இறந்தது காத்தல்' 'எதிரது போற்றல்' என்னும் இரண்டும் யாப்பருங் கலவிருத்தியிலும் நன்னூலிலும் 'இறந்தது விலக்கல்', 'எதிரது போற்றல்' என ஆளப் பெற்றன. இங்குக் 'காத்தல்' என்றது, 'குற்றமே காக்க' (திருக்குறள்—434) என் புழிப்போல விலக்குதல் என்ற பொருளில் ஆளப் பெற்றது.

16. 'மொழிவாம் என்றல்' என்பது, இவ்விருநூல்களிலும் 'உரைத்தும் என்றல்' எனக் குறிக்கப் பெற்றது.

17. 'கூறிற் றென்றல்' என்பது, நன்னூலில் 'உரைத்தாம் என்றல்' எனக் குறிக்கப்பெற்றது.

18. 'தான் குறியிடுதல்' என்பது, யாப்பருங்கல விருத்தியிலும் நன்னூ லிலும் 'தன்குறிவழக்கம் மிகவெடுத் துரைத்தல்' எனக் காணப்படுகிறது.

19. 'ஒருதலை யன்மை முடிந்தது காட்டல்' என்பதனை ஒருத்தியாகக் கொண்டு, 'ஒரு பொருளை யோதிய வழிச் சொல்லுதற்கே யுரித்தன்றிப் பிற பொருட் கும் பொதுவாக முடித்தமை காட்டல்'' என விளக்கந் தந்தார் இளம்பூரணர்.

19. 20. 'ஒருதலையன்மை' என்பது 'இரண்டுறமொழிதல்' எனவும், 'முடிந்தது காட்டல்' என்பது 'முடிவிடங்கூறல்' எனவும், யாப்பருங்கல விருத்தியிலும் நன்னூலிலும் கூறப்பட்டுள்ள உத்திகளாகக் கொள்ளலாமா என்பது ஆய்வுக்குரியதாகும்.

21. 'ஆணை கூறல்' என்பது யாப்பருங்கல விருத்தியிலும் நன்னூலிலும் காணப்படவில்லை.

22. 'பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்'—இதனை 'ஏற்புழிக் கோடல்' என வும், 'ஒருபுடைச் சேறல்' என வும் சொல்லுப' என்பர் பேராசிரியர்.

'எடுத்த மொழியின் எய்த வைத்தல்' என நன்னூலில் வரும் உத்தி இங்குக் கருதத்தக்கது.

23. 'தொகுத்த மொழியான் வகுத் தனர் கோடல்'

> சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
> என்பதும் அது
> (நன்னூல்)

என்பர் இளம்பூரணர்.

24. 'மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்' என்பது யாப்பருங்கலவிருத்தி யிலும் நன்னூலிலும் இடம்பெறவில்லை.

25, 26 'பிறன்கோட் கூறல்' என்ப தனையும் 'அறியாதுடம்படல்' என்பதனை யும் யாப்பருங்கலவிருத்தியும் நன்னூலுரை யும், பிறனூன் முடிந்ததும் தானுடம்படுதல்' என்ற சொல்லமைப்பிலேயே அடக்கியிருத் தல் கூடும்.

27. 'பொருளிடையிடுதல்' என்பது ஒரு பொருளை யோதியவழி, அதற்கின மாகிய பொருளைச் சேரக்கூறாது இடை யீடுபடக் கூறுதல் என்பர் இளம்பூரணர். நன்னூலிலுள்ள 'முன்மொழிந்துகோடல்' பின்னது நிறுத்தல்' என்னும் இரண்டு உத்திகளும் இதன்கண் அடங்கும்.

28. 'எதிர்பொருளுணர்த்தல்' என் பது நன்னூலில் வரும் 'எதிரது போற்றல்' என்ற உத்தியிலோ, 'முடிவிடங் கூறல்' என்ற உத்தியிலோ அடங்கும்.

29. 'சொல்லினெச்சஞ் சொல்லியாங் குணர்த்தல்' என்பது, யாப்பருங்கலவிருத்தி யிலும் நன்னூலிலும் வரும் 'எஞ்சிய சொல் லின் எய்தக் கூறல்' என்னும் உத்தியாதல் கூடும்.

30. 'தந்துபுணர்ந்துரைத்தல்' என் பது, நன்னூலில் வரும் 'ஏதுவின் முடித்தல்' என்னும் உத்தியாதல் கூடும்.

31. 'ஞாபகங்கூற'லாவது, 'இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள் கோடல்' என்பர் இளம்பூரணர். 'சூத்திரம் செய்யுங்கால் அரிதும் பெரிதுமாக நலிந்து செய்து மற்றும் அதனாலே வேறு பல பொருளுணர்த்தல்' என்பர் பேராசிரியர்.

32. உய்த்துக் கொண்டுணர்தல்— இஃது 'உய்த்துணர வைப்பு' என யாப்பருங் கல விருத்தியிலும் நன்னூலிலும் இடம் பெற்றுள்ளது.

## யாப்பருங்கல விருத்தி

''முப்பத்திரண்டு தந்திரவுத்தியாவன :

நுதலிப்புகுதல் 1 ஒத்துமுறை வைத்தல் 2
தொகுத்துச் சுட்டல் 3 வகுத்துக் காட்டல் 4
முடிவிடங் கூறல் 5 முடித்துக் காட்டல் 6
தானெடுத்த மொழிதல்7 பிறன்கோட் கூறல்8
சொற்பொருள் விரித்தல்9 இரண்டுறமொழிதல்10
ஏதுவின் முடித்தல் 11
எடுத்த மொழியின் எய்த வைத்தல்12
இன்ன தல்ல திதுவென மொழிதல் 13
தன்னின முடித்தல் 14
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல் 15
மாட்டெறிந் தொழிதல்16
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்17
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல் 18
இறந்தது விலக்கல் 19 எதிரது போற்றல் 20
முன்மேற்கோடல் 21 பின்னது நிறுத்தல் 22
எடுத்துக் காட்டல்23
முடிந்தது முடித்தல் 24
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்25
தொடர்ச்சொற் புணர்த்தல்26
யாப்புறுத் தமைத்தல் 27 உரைத்து மென்றல்28
விகற்பத்து முடித்தல் 29 தொகுத்துடன்
முடித்தல் 30
ஒருதலைதுணிதல் 31 உய்த்துணர வைத்தல்32

என இவை பாடலனார் உரை'' என எடுத்துக் காட்டுவர் யாப்பருங்கலவுரை யாசிரியர்.

## நன்னூல்

நுதலிப்புகுதல்1 ஒத்துமுறை வைப்பே2
தொகுத்துச் சுட்டல்3 வகுத்துக் காட்டல்4
முடித்துக் காட்டல்5 முடிவிடங் கூறல்6
தானெடுத்து மொழிதல்7 பிறன்கோட் கூறல்8
சொற்பொருள் விரித்தல்9 தொடர்ச்சொற்
புணர்த்தல்10
இரட்டுற மொழிதல்11 ஏதுவின் முடித்தல்12
ஒப்பின் முடித்தல்13 மாட்டெறிந் தொழுகல்14
இறந்தது விலக்கல்15 எதிரது போற்றல்16
முன்மொழித்துகோடல்17 பின்னது நிறுத்தல்18
விகற்பத்தின் முடித்தல்19 முடிந்தீவை முடித்தல்20
உரைத்து மென்றல்21 உரைத்தா மென்றல்22
ஒருதலை துணிதல்23 எடுத்துக் காட்டல்24
எடுத்த மொழியின் எய்த வைத்தல்25
இன்ன தில்ல திதுவென மொழிதல்26
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்27
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்28
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்29
சொல்லின் முடிவி னப்பொருள் முடித்தல்30
ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்31
உயர்த்துணர வைப்பெனல32 வுத்தியெண் ணான்கே.

(இ-ள்) இவை முப்பத்திரண்டும் தந்திர வுத்தியாவன. இவற்றுட் சிலவற்றை மாற்றிச் சொல்லுவாரும் முப்பத்திரண்டின் மேலும் பல வென்பாருமுளர். ''அவையும் அறிந்து கொள்க'' என்பர் நன்னூலுரை யாசிரியர் மயிலை நாதர்.

தொல்காப்பிய மரபியல் கூறும் முப்பத்திரண்டுத்திகளுள், நுதலியதறிதலை நுதலிப்புகுதல் எனவும், அதிகார முறைமை யினை ஒத்துமுறை வைப்பு எனவும், தொகுத்துக் கூறலைத் தொகுத்துச் சுட்டல் எனவும், வகுத்து மெய்ந்நிறுத்தலை வகுத்துக் காட்டல் எனவும், ஒப்பக்கூறலை இரட்டுற மொழிதல் எனவும், ஒப்பின் முடித்தல் எனவும், ஒருதலை மொழிதலை ஒருதலை துணிதல் எனவும், பிறனுடம் பட்டது தானுடம்படுதலைப் பிற நூன் முடிந்தது தானுடன்படுதல் எனவும், இறந்தது காத்தலை இறந்தது விலக்கல் எனவும், எதிரது போற்றலை எதிரது போற்றல் எனவும், மொழிவாமென்றலை உரைத்துமென்றல் எனவும், கூறிற் றென்றலை உரைத்தாமென்றல் எனவும், தான்குறி யிடுதலைத் தன்குறிவழக்கமிக வெடுத்துரைத்தல் எனவும், முடிந்தது காட்டலை முடிவிடங்கூறல் எனவும், பிறன் கோட் கூறலைப் பிறன்கோட் கூறல் எனவும், சொல்லினெச்சம் சொல்லியாங் குணர்த்தல் என்பதனை எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் எனவும் கொள்ளலாம்.

பல்பொருட்கேற்பின் நல்லது கோடலை ஏற்புழிக்கோடல் என்பர் உரை யாசிரியர்கள். மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்றி முடித்தல் என்பதனை 'உரையிற் கோடல்' என்பர் இளம்பூரணர்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் இவை பாடலனார் உரையெனக் குறித்த 32 தந்திர உத்திகளுள் முடித்துக் காட்டல், தானெடுத்து மொழிதல், சொற்பொருள் விரித்தல், ஏதுவின் முடித்தல், எடுத்த மொழியின் எய்தவைத்தல், இன்னதல்ல திதுவென மொழிதல், ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல், மாட்டெறிந்தொழு கல், முன்மேற் கோடல், பின்னது நிறுத்தல், எடுத்துக் காட்டல், முடிந்தது முடித்தல், சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல், தொடர்ச் சொற்புணர்த்தல், யாப்புறுத் தமைத்தல், விகற்பத்து முடித்தல், தொகுத் துடன் முடித்தல் எனும் 17 உத்திகள் தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை. இவற்றுள் யாப்புறுத்தமைத்தல் தொகுத் துடன் முடித்தல் எனும் இரண்டும் நீங்க லாக ஏனைய பதினைந்தும் நன்னூலிலுள் உள்ளன.

தொல்காப்பியனார், பாடலனார், நன் னூலார் கூறிய உத்தி வகையுளடங்காத வேறு சில உத்திகளும் பழையவுரைகளில் இடம் பெற்றுள்ளன. யாப்பருங்கலக் காரி கையுரையாசிரியர் 'தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தல்' என்னும் ஓர் உத்தி யினைத் தம் முரையிற் குறித்துள்ளார். தொல்காப்பியவுரை யாசிரியர்களும் நன்னூ லுரையாசிரியர்களும் தத்தம் உரைகளிற் குறிப்பிடும் உத்தியின் பெயர்களும் அவற்றுக்குரிய விளக்கங்களும் எடுத்துக் காட்டுக்களும் ஒப்புநோக்கி ஆராய்ந்து வரையறுக்கத் தக்கனவாகும்.

தொல்காப்பியத்தின் இறுதிப் பகுதி யாகிய மரபியல் பிற்காலத்தில் பல மாற் றங்களைப் பெற்றுள்ள தென்பது,

''வடுவில் காப்பிய மதுரவாய்ப் பொருள்மரபு
வீட்டியதால்
வழுதி யாட்சியை வளவன் மாற்றிட மதுரை
கூப்பிடுநாள்''

எனவரும் ஒட்டக்கூத்தர் வாய்மொழியால் உய்த்துணரப்படும். இம் மரபியலிற் கூறப் பட்டுள்ள முப்பத்திரண்டுத்திகளும் கௌட லீய அர்த்த சாத்திரத்திலுள்ள முப்பத்தி ரண்டு உத்திகளோடு ஒத்துக் காணப்படு கின்றன என்பர் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள்—(தமிழ் வர லாறு-பக்கம் 318). தொல்காப்பிய மரபிய லிற் காணப்படும் முப்பத்திரண்டுத்திகளுக் கும் கௌடலீயத்திலுள்ள முப்பத்திரண் டுத்திகளுக்கும் சொல்வகையாலும் கருத்து வகையாலும் வேறுபாடுகள் உள்ளன. இறந்தது காத்தல், எதிரது போற்றல்,

மொழிவாமென்றல், அறியாதுடன்படல் எனத் தொல்காப்பியத்திலுள்ள உத்திக ளுக்கு ஒத்த வடமொழிப் பெயர்களைத் தேடிக்காண முடியவில்லை. முந்து மொழிந் ததன் தலைதடுமாற்றம் என்ற தனை 'அபவர்க்கம்' என்றும், கூறிற்றென்றலைப் 'பிரதேசம்' என்றும், பல்பொருட்கேற்பின் நல்லது கோடலை 'விகற்பம்' என்றும், பிறன்கோட் கூறலைப் 'பூருவபக்கம்' என் றும், எதிர்பொருளுணர்த்தலை 'வீர்யம்' என்றும், ஞாபகங் கூறலை 'அபதேசம்' என்றும் அவர்கள் குறிப்பிட்டிருப்பது அவ் வுத்திகளின் பொருளியைபுக்கு முற்றிலும் மாறுபடுகிறது. எனவே இவ்வுத்திகளிற் பெரும்பாலன ஒத்திருப்பனவாக மகா வித்துவான் இராகவையங்காரவர்கள் கூறி யிருப்பது அத்துணைப் பொருத்தமுடைய தாகத் தோன்றவில்லை. தொல்காப்பிய மரபியலிலும் கௌடலீய அர்த்தசாத்திரத் திலும் இடம்பெற்றுள்ள உத்திகள் முப்பத் திரண்டுத்தி என்னும்தொகையளவில் ஒத்த னவாயினும், அவற்றின் இலக்கண அமைப் பில் வேறுபட்டனவாகவே யுள்ளன. இவ் வேறுபாட்டினை யுளங்கொண்ட மகா வித்துவான் ஐயங்காரவர்கள் இவ்வுத்தி கள் வடமொழி நூலைப் பின்பற்றியே அமைந்திருத்தல் வேண்டும் என்னும் தமது கொள்கையை வற்புறுத்துங் கருத்தினராய், ''இவ்வுத்தி வகையில் தொல்காப்பியர்க்கும் கௌடலீயர்க்கும் ஒத்த முதனூல் நூல் இஃ தென்று இன்னுந் துணிதற்கில்லை'' யென் றும். ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பாயிரங் கூறுதலால் அவ்வைந்திரத் தேனும் அதன் வழித்தாகிய பிறிதொரு நூலிலேனும் இவ்வுத்திகள் உள்ளனவென் றும் நினைக்கப்படும்'' என்றும் ஐயுறுகின் றார். உத்தி என்னும் சொல் வட சொல் எனக் கருதப்படுமாயினும் தொல்காப்பிய மரபியலில் உத்தியென்னுஞ் சொல்லாற் குறிக்கப்படும் நூற்புணர்ப்பாகிய முறைமை தமிழிலக்கண நூல்களுக்குரிய சிறப்புடைய தாதலின், இதற்கு முதல்நூலாக வடநூல் ஒன்று இருத்தல் வேண்டும் என ஊகிப்ப தும், அவ்வுகத்தினை யடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் காலத்தை உறுதிப்படுத்த எண்ணுவதும் பொருத்த முடையன அல்ல. அர்த்த சாத்திரம் இயற் றிய கௌடலீயர் தமிழ் நாட்டிற் காஞ்சி நகரத்து வாழ்ந்தவராதலின் அவர் காலத்துக்கு முற்பட்ட தொல்காப்பிய மரபியலிலுள்ள உத்தி கள் முப்பத்திரண்டினை யுளங்கொண்டு தாமி யற்றும் பொருள் நூலமைப்புக்கு ஏற்ற வகை தாம் செய்த அர்த்தசாத்திரத்திலும் முப்பத்தி ரண்டு உத்திகளை வகுத்துக் கூறியுள்ளார் எனக் கொள்வதே தொல்காப்பியர் கௌட லீயர் ஆகிய இவ்விருவர் வரலாற்றுக்கும் கால அமைதிக்கும் ஏற்புடையதாகும் எனத் தெளிதல் எளிதாகும்.

# உரிச்சொல்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தஞ்சாலூர் கரத்தையில் 18-1-1924இல் பிறந்தவர்; கரத்தைப் புலவர் கல்லூரியில் பயின்று 1950இல் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுப் புலவர் கல்லூரியில் 1950முதல் 1982 வரை பேராசிரிய ராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவர். தமிழ்ச்சங்க வெளியீடுகள் தமிழ்ப் பொழில் ஆகியவற்றிற் பங்கேற்றுப் பணிபுரிபவர்.

கரந்தைக் கோவை முதலிய இலக்கிய நூல்களும், புலவருள்ளம் முதலிய கவிதை நாடக நூல்களும் இயற்றியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட கவியரங்கங்களில் தலைமை தாங்கியும் பங்கேற்றும் கவிதைப்பணி புரிந்துள்ளார். பாவலரேறு—கவிஞர்கோ முதலிய சிறப்பு விருதுகள் பல சிறந்த இலக்கிய மன்றத்தாரால் அளிக்கப் பெற்ற இவர், தொல்காப்பிய இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். இவருடைய நூல்கள் சென்னை, மதுரை, அண்ணாமலை, பாரதிதாசன் பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்பிற்குப் பாட நூல்களாக அமைத்துள்ளன.

இப்பொழுது தொல்காப்பியத்திற்கு அறிவியல் நோக்கிற் புதிய உரை எழுதி வருகின்றார்.

வட வேங்கடம் தென்குமரி ஆயிடைப் பரந்து வண் புகழ் மூவராற் புரக்கப் பெற்றுக் கிடந்த தமிழகத்தின் வழக்கும் செய்யுளும் நாடிச் செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணித் தொகுக்கப் பெற்ற தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடுகள் மறக்கவும் மறைக்கவும் பட்டுத் திசை மாறிய காலத்து வகுத்துரைக்கப் பெற்ற உரைகளையும், அவற்றொடு சமஸ்கிருத மொழி இலக்கணத்தைத் தழுவிப் படைக்கப்பெற்ற வீரசோழியம் முதலாய இடைக்கால நூல்களையும் இளம்பூரணர் உரைவழித் தம் சமயக் கோட்பாட்டொடு செல்லும் பவணந்தியாரின் நன்னூலையும் அதன் உரைகளையும் அப்படியே ஏற்றுக் கொண்டு, பெரும்பான்மையும் தமிழிலக் கணக் கோட்பாடுகள் இற்றைக்கு ஆராயப் பெற்று வருகின்றன.

தமிழிலக்கண நெறியின் சுவடுமாற்றம் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலேயே தொடங்கி விட்டமையின் ஏனைய அதி காரங்களும் அவ்வழியே சென்று நிற்பன வாயின.

அண்மையில் தோன்றி வளர்ந்துவரும் மொழியியற் கல்வியின் பயனாகத் தொல் காப்பியத்தை நோக்கும் நோக்குச் சிறிது

மாறியுள்ளது. எனினும், பழைய உரை களும் நன்னூல் முதலிய பின்னூல்களும் தொல்காப்பியத்தின் உண்மைப் பொருளைக் காணுதற்கு ஓரளவு தடை யாகவே உள்ளன.

இந்த நிலையில், இலக்கண நோக்கில் வகுத்துக் கூறப்பெறும் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் உரிச்சொல்லைப் பற்றித் தொல்காப்பியம் கூறும் கோட்பாடுகளை யானுணர்ந்த அளவிற் புலப்பாடு செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாம்.

உரிச்சொல்லைப் பற்றித் தொல் காப்பியம் முதற்கண் அறிமுகப் படுத்துங் கால்,

> சொல்லெனப் படுவ பெயரே வினையென்று
> ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே (பெய-4)
>
> இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
> அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப (பெய-5)

எனக் கூறுகின்றது.

இச்சூத்திரங்களான் இலக்கணச் சொல் வகை இரண்டு எனத் தொல்காப்பியர் கூறு வதாகக் கருதுவாருமுளர்.

> ''அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப''

என்பதனான் இடைச் சொல், உரிச்சொற் களின் இயல்புகளையும், அவற்றின் சிறப் பின்மையையும், குறைபாட்டினையும் சுட்டி யதன்றி, அவையும்சொல்வகையே என்பதை ஆசிரியர் மறுத்தாரல்லர் என்பதனை இடைச்சொல், உரிச்சொற்களுக்குத் தனித் தனியே இயல் வகுத்து ஆராய்ந்து இலக் கணங் கூறுவதனான் அறியலாம்.

ஆசிரியர் அந் நால்வகைச் சொற் களுக்கும் இலக்கணம் கூறுமிடத்து அவ்வவ் வியல்களுள் முதற்கண் வினைச்சொற்கும் இடைச்சொற்கும் விதந்து கூறுகின்றார். ஏனைய பெயர்ச்சொல் உரிச்சொற்களுக்கு ஏனைய இயல்களாற் பெறப்பட்டவை ஒழிந்த சிறப்பிலக்கணங்களை மட்டுமே கூறுகின்றார். எழுத்து முதலாய பல வற்றிற்கு இவ்வாறே இலக்கணம் பெறப் பட வைத்தல் இவர் மேற்கொண்ட மரபும் உத்தியுமாகும்.

அம் முறைமையான் உரிச்சொல் பற்றி உரியியலுள் கூறுங்கால் உரிச்சொல்லுக் குரிய ஓரசாரியல்பும், அவற்றின் பொருளைக் காணும் முறையும், குறைச் சொல்லே உரிச்சொல்லாக நிரம்பும் என்னும் நுண்மையும் பிறவும் புலப்படுத்து கின்றார். உரிச்சொல்லின் அடிப்படையை எழுத்ததிகாரப் புறனடையுள்ளும், பயின்று வரும் முறைமையைப் பெயரியலுள்ளும், ஒரு சாரியல்பினை எச்சவியலுள்ளும் இயைபுபற்றிக் கூறிப் பெறப்பட வைத் துள்ளார்.

அங்ஙனம் உரிச்சொற்களைப் பற்றி ஆசிரியர் கூறும் நூற்பாக்களின் செம் பொருளைக் கண்டுணரின் உரிச்சொல் பற்றிய தமிழிலக்கணக் கோட்பாடுகளைத் தெரிந்து கொள்ளலாம.

இனி அச் சூத்திரங்களையும் அவற்றின் பொருளையும் காணுமுன், நால்வகைச சொறகளுக்கும் பொதுவாக ஆசிரியர் கூறும் இலக்கணங்களைத் தெரிந்து கொளளுதல் உரிச்சொற்களின் சிறப்பிலக்கணங்களை அறிந்து கொள்வதற்குத் துணை புரியுமா தலின், அவற்றை முதலிற் காண்போம்.

எல்லாச் சொற்களும் பொருளின்கண் தோன்றி அவற்றை இசைத்துணர்த்து மாகலின்,

> ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே (கிளவி-1)

எனச் சொற்களை அறிமுகப்படுத்திப் பின்

> எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே
> (பெயரி-1)
>
> தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
> இருபாற் றென்ப பொருண்மை நிலையே (பெய-3)

என்பனவற்றான் சொற்கள் வெளிப்படை யாகவோ குறிப்பாகவோ பொருளுணர்த்தி நிற்கும் என வரைந்தார்.

பின்னர் அந் நால்வகைச் சொற்களும் செய்யுட்கண் வருங்கால் ஒவ்வொன்றும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல்,

வடசொல் என நான்குவகைப் படுமென்று கூறி, அவற்றின் விளக்கமாக,

இயற்சொல் திரிசொல் திசைச்சொல்
வடசொலென்
றந்நேத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (எச்-1)

அவற்றுள்,

இயற்சொல்தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே (எச்-2)

ஒருபொருள் குறித்த வேறு சொல்லாகியும்
வேறுபொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி (எச்-3)

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி (எச்-4)

வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (எச்-5)

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் (எச்-6)

எனக் கூறினார்.

இவற்றான் பெயர்ச்சொல் முதலிய நான்குவகையுள் ஒவ்வொன்றும் பொருள் குறிதது வருதலும், இயற்சொல்லாகவும் திரிசொல்லாகவும் திசைச்சொல்லாகவும் வடசொல்லாகவும் வருதலும் அவற்றின் பொதுவிலக்கணம் என்பது பெறப்படும்.

எனவே, அவ்வவ்வியல்களுள் கூறப் பெறும் சிறப்பிலக்கணம் அவ்வவ்வச் சொற் களுக்கே உரியதென்பதும், பிறிதொன்றற்கு அதனை ஏற்றுதல் கூடாதென்பதும் பெறப் படும்.

ஓரோவழி ஒரு சொல்லுக்குரிய இலக்க ணத்துள் ஓரிரு கூறுகள் பிறிதொன்றற்கும் ஒக்குமாயின் அவற்றை ஆசிரியர் விதந்து கூறுவார். ஆங்ஙனம் விதந்து கூறப்பெறா தவை அவ்வவற்றிற்கே உரியதாகும்.

அஃதாவது ''இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப'' என இரண்டற்கும் ஒன்றாக இலக்கணங் கூறினாராயினும், பின்னர்

இடையெனப் படுவது பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே (இடை-1)

என்பதனால், இடைச்சொற்கள் தாமாக நடக்கும் இயல்பில எனவும், உரிச்சொற்குச் சிறப்புவிதி கூறுங்கால்,

பெயரினும் வினையினும் மெய்தடுமாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
(உரி-2)

என அவை பெயர் வினைகட்கு முதனிலை யாகவும் தாமாகத் தனித்தும் வரும் இயல் பின எனவும் கூறியுள்ளார். எனவே,

அவற்றுவழி மருங்கிற் றோன்றும்

என்ற இலக்கணம், இடைச்சொற்கு ஒரு வகையாகவும், உரிச்சொற்கு ஒருவகையாக வும் நிற்பதை உணரலாம். இவ்வாறே ஆசிரியர் நால்வகைச் சொற்களுக்கும் கூறும் நுண்மையான இலக்கண அமைப்பை ஓர்ந்துணருமாறு செய்துள்ளார்.

இனி உரிச்சொல் பற்றிய சூத்திரங்க ளையும், அவற்றின் பொருளையும் காண் போம்.

உயிரும் புள்ளியும் இறுதியாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி
(குற்-புண-16)

இதன் பொருள் : உயிரெழுத்தும் புள்ளி யெழுத்தும் இறுதியாகிக் குறிப்பும் பண்பும் இசையுமாகிய பொருண்மைக்கண் தோன்றி (நால்வகைச் சொற்களுள் யாதானும் ஒன் றன்பாற் படுத்தற்கோ இரு திணைப் பொருள்களுள்யாதானும் ஒன்றனைச் சுட்டி யுணர்த்தற்கோ உரிய) முறைமைப்பட வாராமம் (வடிவானும் பொருளானும் நிரம் பாமல் நிற்கும்) குறைச்சொல்லாகிய கிளவி என்பதாகும். அடுத்து

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப
(பெய-5)

இதன் பொருள் : இடைச் சொல்லா கிய கிளவியும் உரிச்சொல்லாகிய கிளவியும் (மேற்கூறிய) பெயரும் வினையுமாகிய சொற்களின் வழியாகவும் அவற்றினிடமாக வும் விளங்கி நிற்குமெனக் கூறுவர் ஆசிரியர் என்பதாகும். அடுத்து

இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே
(எச்-59)

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய
(எச்-60)

இதன் பொருள் : உரிச்சொற்களுள்ளும் இடைச் சொற்களைப்போல பெயர் வினை கட்கு முன்னும் பின்னும் வந்து அவற்றின் பொருளைச் சிறப்பித்து வேறுபடுத்தற் குரியவை (அடையாக வரும்) அந் நிலைக் குரியவாகும் என்பதாகும். அடுத்து

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்
(உரி-1)

இதன் பொருள்: நால்வகைச் சொற் களுள் உரிச்சொற்களை விரித்து உணர்த்து மிடத்து, இசையும் குறிப்பும் பண்புமாகிய பொருண்மைக்கண் முகிழ்த்துப் பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தம் வடிவு தடுமாறி ஒரு சொல் பல பொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரிமையுடைய வாய்த் தோன்றி வருமிடத்தும், தத்தம் மரபொடு வந்து (தனித்தும் பெயர்வினை கட்கு அடையாயும்) நிலைபெறுமிடத்தும், அவை எச்சொல்லாயினும் வழக்கின்கண் பயின்று வாராத சொற்களைப் பயின்ற சொற்களொடு சார்த்திப் பொருள் வேறு பாடு தெரியுமாறு கிளந்து கூறுக என்ப தாகும்.

இவ்வுரிச்சொற்கள் பெயர் வினைகட்கு முதனிலையாகவும், பெயர் வினை போலத் தனித்தும், அவற்றிற்கு அடையாகவும் வருதலொடு, இயற்சொல் முதலாகிய நால் வகைச் சொற்களாகவும் நிற்குமாதலின் ''எச்சொல்லாயினும்'' என அடக்கிக் கூறப் பட்டது. அடுத்து

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு
(உரி-96)

இதன் பொருள்: ஓரெழுத்தொரு மொழி முதலாகத் தோன்றி உரிச்சொல் லாகி வரும் மொழியினது பொருட்டு ஓதப் பெற்ற இசை, குறிப்பு, பண்பு என்னும் காரணங்கள் கண்கூடாக (விழிப்ப)த் தோன்றுதல் இல. (கருதல் முதலிய அளவைகளான் தோன்றும் என்றவாறு) அடுத்து

எழுத்துப் பிரிந்திசைத்தல் இவண்இயல் பின்றே
(உரி-97)

இதன் பொருள்: (அங்ஙனம் உரிச் சொற்களின் மொழிப் பொருட் காரணங் களை நுணுகி நோக்குங்கால் அவற்றின் பொருட்கூறுகட்கு ஏற்ப எழுத்து வகை யான் முற்பகுதியும் பிற்பகுதியுமாக அமைந்து நிற்பினும், அவற்றை) எழுத்துக் கள் இயைந்துள்ள முறைமை கருதி நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் போலப் பிரிந்திசைத்தல் உரிச்சொற்களின் பால் மரபின்று என்பதாகும். அஃதாவது உரிச் சொற்களைச் சிதைத்து பிரித்துப் புணர்ச்சி விதி நோக்குதல் கூடாதென்பது இதன் கருத்து. அடுத்து,

அன்ன பிறவும் கிளந்தன அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின், இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையிற் கிளந்தவற் றியலான்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர் (உரி-98)

இதன் பொருள்: நெறிப்பட வாராத குறைச்சொல் வடிவும் பொருளும் நிரம்பு தற்கேற்ற ஓரிரு எழுத்துக்களைக் கூட்ட லான் நிரம்பி உரிச்சொல்லாக இயலு மிடத்துக் கிளந்தன அல்லாத அன்ன பிறவு மாய்ப் பல்வேறு நிலையாலும் பரந்துபட்டு வரும் உரிச்சொற்களை எல்லாம் ஒவ்வொன் றும் இத்தன்மைத்து என அறிந்து கொள் ளற்குரிய எல்லை அவை தமக்கின்மையின், தொன்னூலார் ஓம்படை யாணையானே கிளந்து கூறிய (குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றுதல், பெயரினும் வினையினும் மெய்தடுமாறுதல், தத்தம் மரபின் சென்று நிலை பெறுதல், வேறு படுத்தல் முதலிய) நெறியினை நன்கு கடைப்பிடித்து, அவ்விலக்கணத்தான் அவற்றின் பகுதியெல்லாம் பொருந்த உணர்ந்து கொள்க—என்பதாகும்.

இவற்றுள், ''உயிரும் புள்ளியும் இறுதி யாகிக் குறிப்பினும் பண்பினும் இசையினும்

தோன்றி நெறிப்பட வாராக் குறைச் சொற் கிளவி'' என்றது, உரிச்சொல்லின் அடிப்படை இலக்கணம் என்பது உய்த் துணரப்படும். அச்சூத்திரத்துள் உரிச்சொல் என வெளிப்படக் கூறவில்லை எனினும், உரியியலுட் சிறப்பிலக்கணங் கூறுங்கால், ''இசையினும் குறிப்பினும் தோன்றி'' எனக் கூறப்பட்டமையின், அஃது உரிச் சொற்குரியதென்பது புலப்படும்.

ஆண்டு உரிச்சொற் கிளவி என்னாமல், குறைச்சொற் கிளவி என்றதன் காரணம் என்னையெனில், உரிச்சொல் என்பது நால் வகைச்சொற்களுள் ஒன்றாய்த்தனக்கெனப் பொருளுடையதாய் நிற்கும் நிலையில் எய்திய குறியீடாகும். குறைச்சொற்கிளவி என்பது குறிப்பு முதலிய பொருண்மைக் கண் தோன்றி வடிவானும் பொருளானும் நிரம்பா நிலையினதாகும். ஆதலின், அதனைத் தனக்கெனப் பொருளுடைய தாய் நிரம்பி நிற்கும் உரிச்சொல் என்னும் குறியீட்டாற் கூறாமல் உய்த் துணரவைத்தார். நிரம்பா நிலையில்உள்ள குறைச் சொற்கட்கு பொருளுணர்வு காரணம் என்பது தோன்ற ஆண்டுக் குறிப் பினை முன்வைத்துக் குறை நிரம்புதற்குச் சொல்லுணர்வு காரணம் என்பது தோன்ற செவிப்புலனாய இசையினை ஈண்டு முன் வைத்துச் சூத்திரம் செய்ததும் அக்கருத் தானே யாகும்.

அன்மொழித் தொகை என்பது வேற்று மைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகைக்கட்குரிய சொற்களாற் றோன்று வதாயினும், அன்மொழிப் பொருளைச் சுட்டுதற்கண் பிற தொகையினது பெயரைப் பெறாதவாறு போல, பொருளைச் சுட்டும் நிலையில் உரிச்சொல் என்றும், சுட்டாத நிலையிற் குறைச் சொல்லென்றும் குறியீடு பெறுமென்று கொள்க. ஓரெழுத்து ஒலியைச் சுட்டுதற்கண் எழுத்தென்றும், பொருளைச் சுட்டுதற்கண் சொல்லென்றும் பெயர் கூறுவது போன்றது இது.

இனி, ஒருசொல் பலபொருள்களையும், பல சொல் ஒரு பொருளையும் குறித்து வருதல் பெயர்ச் சொல் முதலியவற்றிற்கும் இயல்பாதலின், ஒரு சொல் பலபொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரிமை பூண்டு வருதலை உரிச்சொற்குரிய இலக்கணமாகக் கூறியது என்னை யெனின்,

பொருள் குறித்து வருதல் வேறு; பொருட்கு உரிமை பூண்டு நிற்றல் வேறு. முன்னையது திரிசொற்குரிய இலக்கணம் இரண்டையும் ஒன்றாகக் கருதின் அது கூறியது கூறல் என்னும் குற்றமாம். உரை யாசிரின்மாரும் ஒருசார் ஆய்வாளர்களும் இவற்றை ஒன்றாகவே கருதி மயங்கி யுள்ளனர்.

பல பொருளொரு சொல்லாகிய திரி சொற்கள் வடிவானும் பொருளானும் நிரம்பி, வேறுபடு வினையானும் இனத் தானும் சார்பானும் பொருள்குறித்து நிற்கும். அது தொடர்மொழிக்கண் எய்தும் நிலையாகும். அதனாற் பல பொருள் ஒரு சொல்மரபினைக் கிளவியாக்கத்துடன் விரித்துக் கூறினார் ஆசிரியர். பல சொல் ஒரு பொருளைச் சுட்டுதற்கண் அவை ஒவ் வொன்றும் அப் பொருளின் வேறு வேறு நிலையைச் சுட்டும். அவை பிற பொருளை யும் குறித்து வருதலின் அவையும் திரி சொற்கள் எனப் பெற்றன.

எடுத்துக் காட்டாகக் 'கால்' என்னும் பெயர்ச்சொல், கால் நொந்தது, கால் நட்டான், கடுங்கால் வீசிற்று, கால்படி தந்தான், கால் கோள் செய்யப்பட்டது. எனப் பல பொருள் குறித்து வந்தது. ஓங்கல்-அடுக்கல், வெற்பு-வரை என்பன மலை என்னும் ஒரு பொருள் குறித்து வந்தன. இவையெல்லாம் வடிவும் பொருளும் நிரம்பிய பெயர்ச் சொற் களாகும்.

''நன'' என்னும் உரிச்சொல், 'நனவுப் புகுவிறலியிற் றோன்றும் நாடன்' 'நனந்தலை உலகம்' என ஆடுகளத்தையும், அகலத்தையும் குறித்து வந்தது. பேம், நாம், உரும் என்னும் உரிச்சொற்கள் அச்சம் என்னும் ஒரு பொருள் குறித்து நின்றன. இவை வடிவும் பொருளும் நிரம்பிய உரிச் சொற்களாகும். இவை எல்லாம் திரிசொல் என்னும் இலக்கணத்துள் அடங்கும்.

## இனி உரிச்சொல்லுக்குக் கூறிய

ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றினும்

என்பது, உயிரும் புள்ளியும் இறுதியாகிக் குறைச் சொல்லாய்ப், பின்னர்ப் பொருட் குறை கூட்ட நிரம்பிப் பெயரினும் வினையினும் மெய்தடுமாறி நிற்கும் நிலைமைக்கண் எய்தும் இலக்கண மாகும். அஃதாவது குறைச்சொல்லாகத் தோன்றி நிற்கும் ஓர் உரியடிச்சொல் பின்னர்ப் பெயராகவும் வினையாகவும் தனித்தும், பெயர் வினை கட்கு அடையாகவும் நிற்குமாதலின், அந் நிலை பல்பொருட்கு உரிமை பூண்டு நிற்கும் நிலையாகும்.

எடுத்துக் காட்டாகத் 'தட' என்னும் நிரம்பிய உரிச்சொல் 'தட்' என்னும் புள்ளி யீற்றுக் குறைச்சொல்லால் ஆனது. இந்தத் 'தட்' என்பது ஓர் அகர எழுத்தைப் பெற்று நிரம்பித் தடந்தோள்— தடமருப் பெருமை எனப் பெயரடையாக வந்து உரிச் சொல் லாயிற்று.

தடம், தடா, தடி, தடு (மாற்றம்) தடை என வேறு எழுத்துக்களைப் பெற்றுப் பெயராகவும்; தடவு, தடவி, தடவ எனவும் தடித்தான், தடிந்தான், தடிக எனவும் வேறு எழுத்துக்களைப் பெற்று வினை யாகவும்; தட்டி, தட்டு என ஒற்று இரட்டிப் பெயர் வினைகட்கு முதனிலை யாகவும்; தட தட எனச் சரிந்தது எனக் குறிப்பிடைச் சொல்லாகவும் வந்தது. இங்ஙனம் 'தட்' என்னும் உரியடி பல்வேறு பொருட்கு உரிமை பூண்டு நின்றது.

இனி 'ஓசை' என்னும் பொருட்குரிய வாய் ஒல், கல், இச், குர், சில், கன், சும் என்னும் உரியடிகள் ஒலி, கலி, இசை, குரல், சிலை(த்தல்), கனை, சும்மை என்னும் பொருள் தந்து பல சொல் ஒரு பொருட்கு உரிமை பூண்டு நின்றன.

எனவே, பொருள் குறித்து வருதல் வேறு என்பதும், பொருட்கு உரிமை பூண்டு நிற்றல் வேறு என்பதும் தெளிவாகும்.

மேற்கூறிய கருத்துக்களைத் தொகுப் பின் உரிச்சொல் பற்றிய தொல்காப்பியக் கோட்பாடுகள் பின்வருமாறு அமைந்திருத் தலைக் காணலாம். அவையாவன:

1. இரு திணைப் பொருள்களை இட மாகக் கொண்டு ஒரு சொல் தோன்றுங்கால் அப்பொருள்களைப் பற்றி உள்ளத்தின்கண் நிகழும் குறிப்புப்புலன்கள் இடமாக நிகழும் பண்பும் இசையுமாகியவற்றின் அடிப்படை யிற்றோன்றித் தன் வடிவு நிரம்பாமல் உயிரீ றாகவோ புள்ளியீறாகவோ முகிழ்த்து, ஒரு நெறிப்பட வாராமல், குறையாக நிற்கும் நிலையே உரிச்சொல்லின் அடி, அல்லது வேர் நிலையாகும் என்பதும்,

2. அக் குறைச்சொற்கள் பெயர்ச் சொற்களுக்கு முதனிலையாதற் கேற்ற எழுத்தொடு கூடிப் பொருளைச் சுட்டி உணர்த்தற்கேற்ப நிரம்பி உரிச்சொல்லாக உருப்பெறும் என்பதும்,

3. அங்ஙனம் உருப்பெற்ற உரிச் சொற்கள் இசை, குறிப்பு பண்பு என்பன வற்றுள் ஏற்புடையவற்றைச் சார்ந்து பால்காட்டும் இடைச்சொற்களொடு கூடிப் பெயர்ச் சொல்லாகவும், பால்காட்டும் இடைச் சொற்களொடும் காலமுணர்த்தும் இடைச் சொற்களொடும் கூடி வினைச் சொல்லாகவும் வரும் அந் நிலைமைக்கண், உரிச்சொல் என்னும் பெயர் மாறிப் பெயர்ச் சொல் என்றும் வினைச் சொல் என்றும் பெயர்பெறும் என்பதும்,

4. பால் முதலியவற்றைக் காட்டும் இடைச் சொற்களொடு கூடாத நிலையில், அவை பெயரினும் வினையினும் மெய் தடு மாறுதற்குரியவாய் ஒரு சொல் பல பொருட்கும் பலசொல் ஒரு பொருட்கும் உரிமை தோன்றவும் நிற்கும் என்பதும்,

5. அங்ஙனம் உருப்பெற்று நிரம்பி நிற்கும் உரிச் சொற்கள் வேற்றுமை கோடற்கும் காலங்காட்டற்கும் இயலாமல் தம்பொருளுணர்த்தி வரும் நிலைமைக்கண் அவை தனித்தும், பெயர் வினைகட்கு அடையாகவும் நிற்கும். இந் நிலைமையுற்ற

சொற்களே நால்வகைச் சொற்களுள் ஒன்றாகிய உரிச்சொல் எனப்படும் என்பதும்,

அங்ஙனம் தனித்துப் பொருளுணர்த்தி நிற்குங்கால் அவை பெயர்போலவும் வினைபோலவும் நிற்கும் (இவற்றையே பெயர்ப்போலி- வினைப் போலி என்று கூறினர் உரையாசிரியன்மார்) என்பதும்,

7. பெயர் வினைகளைச் சார்ந்து அடையாக வருங்கால் பெரும்பான்மையும் பண்புரிச் சொற்கள் வரும் என்பதும்,

8. உயிரும் புள்ளியும் இறுதியாகி நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவிகளுள் உயிரீறாக வருவன ஓரெழுத்துச் சொல்லாகவே நிற்குமாதலின் பொருட் குறை நிரம்ப எழுத்துக்களைக் கூட்டும் நிலை அவற்றிற்கு ஏலாமையின், நெறிப்பட வாராமை மட்டுமே அவற்றிற்கு இலக்கண மென்பதும்,

9. புள்ளியீற்றுச் சொற்கள் ஓரெழுத்துச் சொல்லாக வருதற் கேலாமையின் ஈரெழுத்து முதலாக வந்து பொருட்குறை கூட்ட நிரம்பி நிற்கும் என்பதும், ஒரு சில சொற்கள் எழுத்துக்கள் கூட்ட வேண்டாமலேயே நிரம்பி நிற்கும் என்பதும்,

10. ஓரெழுத்துச் சொல்லாய் நிறைந்துவரும் உயிரீற்று உரிச்சொற்களின் பொருட் காரணமும், புள்ளியீற்று உரிச் சொற்களின் பொருட்காரணமும் விழிப்பத் தோன்றா என்பதும், விழிப்பத் தோன்றா எனவே காரணமுடையனவே என்பதும், அவை இயற்கைச் சொற்களே யன்றிக் கட்டிய சொற்கள் அல்ல என்பதும்,

11. புள்ளியீற்று உரிச் சொற்கள் பொருள்தருதற்கு ஏற்ற எழுத்துக்களைப் பெற்று நிற்பன வாயினும், அவற்றைப் பிரித்துப் புணர்ச்சிவிதி காணுதல் மரபன்று என்பதும்,

12. அங்ஙனம் பல்வேறு நிலையில் நிரம்பிப் பரந்து பட்டு வருதலின் உரிச்சொற்களெல்லாம் ஒவ்வொன்றும் இத்தன்மைத்தென அறிந்துகொள்ளற்குரிய வரம்பு அவற்றிற்கின்மையின், தொன்னூலாசிரியர் ஓம்படை ஆணையானே கிளந்து கூறிய மேற்கண்ட நெறியினைக் கடைப்பிடித்து, அவ்வவ் விலக்கணத்தான் அவற்றின் பகுதியெல்லாம் உணர்ந்து, பயிலாதவற்றைப் பயின்றவற்றொடு சார்த்திப் பொருள் வேறுபாடு தோன்றக் கிளத்தல் வேண்டுமென்பது மாகும்.

மேற்கூறிய உரிச்சொற்களின் இயல்புகளைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் ஓரளவு புலப்படுத்தும். பிறவற்றை அவற்றின் வாயிலாக ஓர்ந்து கொள்க.

'ஆ' என்னும் ஓரெழுத்து உயிரீற்றுச் சொல் குறிப்படியாகத் தோன்றிப் பெற்றத்தை உணர்த்திப் பெயராயிற்று. அதுவே மெய் தடுமாறி முதனிலை ஏவல் (ஆகு) வினையாயும், தல் என்னும் இடைச்சொல் சேரத் தொழிற் பெயராயும், இன் என்னும் கால இடைநிலையும் ஆன் என்னும் பால் காட்டும் இறுதி நிலையும் சோ வினை முற்றாயும் நின்றது. 'ஆ' இனிச் செய்வதென்னே எனக் குறிப்புணர்த்தி இடைச் சொல்லாயும் நிற்கும்.

'கா' என்னும் ஓரெழுத்து உயிர்மெய்ச் சொல் குறிப்படியாகத் தோன்றிச் சோலையையும், காவு தடியையும், அளவையையும் உணர்த்திப் பெயராயிற்று. கா, காவு என உகரத்தொடு கூடியும் கூடாமலும் நின்று ஏவல் வினையாயும், 'தல்' சேரத் தொழிற் பெயராகவும், 'த்' ஆன் சேர வினை முற்றாயும் நின்றது.

'மா' என்னும் உரிச்சொல் பண்படியாகத் தோன்றி மாமரத்தையும் குதிரையையும், நிறத்தையும், பெருமையையும் உணர்த்திப் பெயராயிற்று. அதுவே இசையடியாகத் தோன்றி விலங்கையும் வண்டினையும் உணர்த்திப் பெயராயிற்று. அதுவே குறிப்படியாகத் தோன்றித் திருமகளை உணர்த்திப் பெயராயிற்று. இதனடியாகப் பிறந்த வினைச் சொற்கள் வந்த வழிக் கண்டு கொள்க.

'ஆர்' என்னும் புள்ளியீற்றுச் சொல் குறிப்படியாகத் தோன்றி அத்தி மரத்தையும், கொன்றை மரத்தையும், வண்டியின் உருளையையும் உணர்த்திப் பெயராயிற்று. 'தல்' சேரத் தொழிற்பெயராயும், ந்த் ஆர் என்பவை சேர வினைமுற்றாயும் நின்றது. அதுவே பண்படியாகத் தோன்றி ஆர்வம், ஆர்வலர் என்பவற்றிற்கு முதனிலையாயும், ஆராய்வு எனப் பெயரடையாயும் நின்றது. அதுவே இசையடிப்படையாய்த் தோன்றி ஆர்ப்பு, ஆர்த்தான் என்பவற்றிற்கு முதனிலையாயும், அதுவே நெறிப்பட வாராமல் ஆரல் (கார்த்கை), ஆரம் (சந்தனம்) என்பவற்றிற்கு அடியாயும் நின்றது.

'வள்' என்னும் நெறிப்பட வாராத குறைச்சொல் குறிப்படியாகத் தோன்றி வளி, வளம், வளார், வள்ளம், வள்ளி, வளவன் என்னும் பெயர்ச் சொற்களுக்கு அடியாயிற்று. அதுவே வள்வார் முரசு எனப் பெயரடையாயும் நின்றது. அதுவே வள்வள் எனக் குரைத்தது எனக் குறிப்பிடைச் சொல்லாயும் நிற்கும்.

'உர்' என்பது உகரம் பெற்று உரு என நிரம்பிக் குறிப்புரிச் சொல்லாய்த் தானே பெயராயும், உருபு உருவம் எனப் பெயர்க்கு முதனிலையாயும், உருத்தான்-உருத்து என வினைக்கு முதனிலையாயும், உருகெழு கடவுள் என வினையடையாயும் நின்றது.

'சால்' என்பது குறிப்புரிச் சொல்லாய் படைச்சால், மிடா இவற்றை உணர்த்திப் பெயராயும், சால்பு சான்று சான்றோர் எனப் பெயர்க்கு முதனிலையாயும், சாலும், சான்றான், சாறும் என வினைக்கு முதனிலையாயும் நின்றது. சாலச் சிறந்தான் என வினையடையாகவும் வந்தது.

'பரவ், பழிச்' என்பவை பரவு-பழிச்சு எனக் குறிப்புரிச் சொல்லாய் நிரம்பிப் பரவினான் பழிச்சினான் என வினைக்கு முதனிலையாகி நின்றன. பரவு என்பது பராவு எனத் திரிந்தும் வரும். பரவு-பழிச்சு என்பவற்றின் இறுதி உகரம் பிரிந்திசையாமையையும் கண்டு கொள்க. இவற்றின் அடியாகப் பெயர்கள் தோன்றி வந்தவழிக் கண்டு கொள்க.

இவ்வாறே எல்லா உரிச் சொற்களையும் வழிநனி க்டைப்பிடித்துப் பாங்குற உணர்ந்து கொள்க.

இதுகாறும் கூறியவற்றான் ஒரெழுத் தொரு மொழி முதலாகச் சொல்லாக ஆதற்குரியது உரிச்சொல் என்பதும், பெயர்சசொல் முதலாய சொற்களாக ஆதற்கு உரிமையுடையது உரிச்சொல் என்பதும் நனி விளங்கும்.

முடிவுரை: தமிழ்மொழி யமைப்பையும் தொல்காப்பிய கெறியையும் ஓராத உரிச் சொல் பற்றிய உரையாசிரியன்மார் விளக்கங்களும் வீரசோழியம் நன்னூல் முதலிய இடைக்காலப் பிற்கால இலக்கண நூல்கள் கூறும் இலக்கணங்களும், இக்கால ஆய்வாளர்தம் கருத்தும் பெரும்பான்மையும் பொருந்தாமை பற்றிக் கூறப்புகின் மிக விரியுமாகலின் ஒப்பிட்டு ஆராய்ந்து உண்மைப்பொருளைக் கண்டு தெளிக.

# செய்யுள் வழக்கு

பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட். பிஎச். டி., அவர்கள் செஞ்சியில் 1935ஆம் ஆண்டு பிறந்தவர். பச்சை யப்பன் கல்லூரியில் பி,ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றவர். ''குறுந்தொகை'' பற்றிய ஆய்வுரைக்கு 1963இல் எம். லிட். பட்டமும், ''சேர நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்'' பற்றிய ஆய்வுரைக்கு டாக்டர் பட்டமும் பெற்றவர். பத்து நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இவர் எழுதிய ''இலக்கிய அலைகள்'' என்ற நூல் தமிழக அரசின் 2000/-ரூபா பரிசில் பெற்றதாகும். தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும், பெங்களூர் தில்லிப் பல்கலைக் கழகங்களிலும் பாடத்திட்டக் குழுக்களில் உறுப்பினராக இருப்பவர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழித் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

## தோற்றுவாய் - மொழி வழக்கு இருவகை

உலக வழக்கும் செய்யுள் வழக்கும் என மொழியினை வழங்குதல் இருவகைப்படும். இவ்விருவகை வழங்குதலைச் ''செய்யுள் மருங்கிலும் வழக்கியல் மருங்கிலும்'' (தொல். எச்சவியல்-67), ''கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும் வழக்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்'' என்று (குற்றியலுகரம்-77) தொல்காப்பியம் குறிப்பிடுவதைக் காணலாம். இவ்விரண்டுள் உலக வழக்கென்பது பேச்சு வழக்காம். ஒருவன் பேசத்தொடங்கிய காலத்திலிருந்து தன்னைச் சார்ந்துள்ள மக்கள் பேசும் வகையினைக் கேட்டுக் கேட்டுத், தன் உள்ளத்திலே பதிய வைத்துக் கொள்கிறான். வேண்டிய பொழுது, அம் முறைப்படி பேசத் தொடங்குகிறான். பேச்சு வழக்குத் தோன்றுதற்குரிய இடம் பேசுமவன் வாழுமிடத்தின் சுற்றுச் சார்பும், அவனுடைய உள்ளமும் ஆகும். உலகவழக்கு பேச்சு வடிவத்திலிருக்கும்; செய்யுள் வழக்கு எழுதப்பட்டு ஏட்டு வடிவத்திலிருக்கும். பேச்சு வழக்குப் பேசுபவன் வாழும் காலம் வரையிருக்கும்; ஏட்டு வழக்கோ வெனின் வெகுகாலம் வரை வாழ்ந்திருக்கும்.

## அவற்றுள் செய்யுள் வழக்கு

மேலே கூறிய இரண்டில் செய்யுள் வழக்கினை ஆராய்வோம். தன் கருத்தைப்

பிறர்க்கு உணர்த்தவும், பிறர் கருத்தைத் தான் உணர்ந்து கொள்வதற்கும் மொழி கருவியாகும். அங்ஙனமாகப் பேச்சுவழக்கு செய்யுள் வழக்கு என்னும் இரண்டிற்கும் கருத்துணர்வே முக்கியப் பொருளாக உள்ளது. கருத்துணர்வைப் பொருளுணர்ச்சி என்றும் கூறலாம்.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னுக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்னும் நன்னூல் நூற்பா (267) இரு வகை வழக்கில் செய்யுள் வழக்கினைச் செப்புகிறது. பலவகைத் தாதுப் பொருளால் அமைந்த உடம்பு உயிர்க்கு இடமாக இருத்தல் போல, பலவகைச் சொல்லால் பொருளுக்கு இடனாக, அறிவியல் வல்லவர் அழகுபெறச் செய்வன செய்யுளாம், என்று அந் நூற்பா கூறுகின்றது.

உலக வழக்காகிய பேச்சு மொழியைப் பேச ஊமையன் நீங்கலாக எல்லா மக்களும் உரியவராவர். ஆனால், செய்யுளைச் செய்ய உணர்வினில் வல்லவர் வேண்டும். அத்தகைய அறிஞர் பல சொற்களைக் கொண்டு செய்யுள செய்கின்றனர். அவர் உணர்த்த வேண்டும் பொருள்களை அச் செய்யுளில் அமைப்பர். பலவகைச் சொல்லால் பொருளுக்கு இடமாகச் செய்யுள் செய்யும் பொழுது அதனை அழகுபடச் செய்வர். எனவே, செய்யுள் செய்வதற்கு அறிவினில் வல்லவரும், பலவகைச் சொற்களும் உணர்த்தும் பொருளும், அழகுபட உணர்த்தும் முறையும் ஆகிய நான்கும் வேண்டுவனவாம்.

செய்யுள் திறனாய்வு செய்பவர் அல்லது இலக்கியத் திறனாய்வு செய்பவர் (1)ஆக்கியோன், (2) சொல்லமைப்பு, (3) பொருளமைப்பு, (4) உணர்த்தும் முறை என்று நான்கு பாகுபாடுகளைச் செய்துகொண்டு திறனாய்வு செய்ய வேண்டும் என்பதை, மேலே காட்டிய நன்னூல் நூற்பா உணர்த்துகிறது.

## ஆக்கியோன் அல்லது ஆக்குவோன்

மேற்கூறிய நான்கு பாகுபாட்டில் முதலாவதாக நிற்கும் ஆக்கியோனைப் பற்றி ஆராய்வோம். நன்னூல் நூற்பா செய்யுளைச் செய்வோனை 'உணர்வினில் வல்லோன்' என்று குறிப்பிடுகின்றது. இச் சொல் புலமையுடையவனைக் குறிப்பதாகும். தமிழ் நூல்கள் கவி, கமகன், வாதி, வாக்கி[1] என்னும் நான்கும் புலமைக்கியல்பு எனப் புகல்கின்றன.

அப் புலமையுடையார் புலவராவார். அவருள் கவி செய்வோர் 'கவிஞர்' என்று வழங்கப்படுவார். அரிய பொருளை எளிய நடையில் உரைப்பவர் 'கமகன்' என்று கூறப்படுவார்.[2] மேற்கோளும் ஏதுவும் எடுத்துக் காட்டித் தன் கொள்கையை நிலைநாட்டிப் பிறர் கொள்கையை மறுப்பவன் 'வாதி' எனப்படுவான்[3]. அறம் பொருள் இன்பம் வீடெனும் உறுதிப் பொருள்களை உலக மக்கள் விரும்பிக் கேட்டுப் பயனடையுமாறு சொற்பொழிவாற்றும் திறம் படைத்தவன் 'வாக்கி'யாவான்[4]. அவர்களுள் ஆசு, மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நான்குவகைப் பாடல்களைப் பாடுவோன் கவிஞன், பாவ

---

1. கவியே கமகன் வாதி வாக்கியென்
றி வையொரு நான்கும் புலமைக் கியல்பே (3-49) பிங்கலம்

2. ஞாபகம் செம்பொருள் நடையினைப் பொருளும்
காசின் றுரைப்போன் கமக னுவான் (51-3) பிங்கலம்

3. ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டித்
தன்கோ ணிறீஇப் பிறர்கோண் மறுப்போன்
மன்பதை மதித்த வாக்கி யாகும் (52-3) பிங்கலம்

4. அறம் பொருள் இன்பம் வீடெனும் திறங்கள்
கேட்க வேட்க இனியன கூறும்
ஆற்ற லுடையான் வாக்கி யாகும் (52-3) பிங்கலம்

லன் என்று கூறப்படுவான். அக் கவிஞருள் ஒருவன் இன்ன பொருளில் இன்ன பாவில் இன்னவாறு பாடுக எனக் கூறியவுடன் அவன் கேட்டுக் கொண்டவாறு விரைந்து பாடுவோன் 'ஆசு கவி'யாகும். பொருட் பொலிவும் சொல்திறனும் தொடையும் விகற்பமும் பொருந்தி நிற்க உருவகம் முதலிய அலங்காரத்தோடு ஓசைப் பொலி வுடைத்தாய் உய்த்துணர்வோர்க்கு அமிழ்தம்போல் இனிக்குமாறு பாடவல்ல வன் 'மதுரகவி'யாகும். மாலைமாற்று முதலிய சித்திர கவிகளைப் பாடுவோன் 'சித்திர கவி'யாகும். சிற்றிலக்கியம் பேரிலக் கியம் முதலான இலக்கியங்களையெல்லாம் விரித்துப் பாடவல்லோன் 'வித்தாரகவி' அல்லது 'அகலக்கவி'யாகும். புலமையுடைய வரை இவ்வாறு பலவகையினராகத் தோன் றுமாறு தமிழ்நூல்கள் கூறினாலும், மேற் கூறப்பட்ட பலவகை இயல்பும் ஒருங் கமையப் பெற்ற சிறந்த புலவர்களும் வாழ்ந் திருக்கின்றனர். தனி இயல்பு வாய்ந்த புலவர்களும் இருந்திருக்கின்றனர். இப் புலமையுடையவரை [1]மேலோர், பண்டி தர், புலவர், ஆசிரியர். புந்தியர், மேதையர், என்னும் பெயரால் அழைப்பர். இவரின் மேலான அறிஞர் அல்லது அறிவரை [2]ஆன்றோர், சானறோர் என்று கூறுவர்.

புலமைக்கும் அறிவிற்கும் நுட்பமான வேறுபாடொன்றினைக் கற்றோர் கூறு கின்றனர். நிகழ்வில் புலப்படுமவற்றை மட்டும் உணர்தல் புலமையென்பதும், முக் காலச் செய்திகளை உணர்தல் அறி வுடைமை என்பதும் அவ் வேறுபாடாகும். இவ்வறிவுடையவரைப் புலவர் 'அறிவர்' என்று வழங்குவர். தொல்காப்பியர் அறிவன் இலக்கணத்தை,

> மறுவில் செய்தி மூவகைக் காலமும்
> நெறியில் ஆற்றிய அறிவன் தேயமும்

என்று கூறியுள்ளார். இந் நூற்பாப் பகுதிக் குக் ''காமம், வெகுளி மயக்கமில்லாத ஒழு கலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வு மென்னும் மூவகைக் காலத்திலும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடை யோன் பக்கமும்'' என்று உரை கூறி, அகத் தியர் முதலான வரை உதாரணமாகக் காட்டுவர் நச்சினார்க்கினியர். இலக்கியங் களைப் படைக்கும் ஆசிரியன் கவி, கமகன், வாதி, வாக்கியாகவும் இருக்கலாம். ஆசு மதுர சித்திர வித்தாரப் புலவனாகவு மிருக்கலாம்; இவர்களின் மேலான அறிவ னாகவும் இருக்கலாம்.

## நெஞ்சில் ஒளியில்லாத புலவர் பாடல்

முற்காலத்தே யாப்பிலக்கணம் கற்பதும் அவ்விதிப்படி செய்யுள் இயற்றுவதும் அரிய செய்கையாகவே கருதப்பட்டன. இக் காலத்தே உரைநடை எழுதுவதைவிடக் கவி பாடுதல் மிக எளிமையாகக் கருதப் பட்டுச் சொல்முடிவு இல்லாமலும், அசை அமைப்பு சீரமைப்புகளைக் கருதாமலும், தொடையும் தொடை விகற்பமும் அமையா மலும் பாட்டியற்றுவோர் பலகியுள்ளனர். பாட்டு எவ்வாறு இருப்பினும் அதில அமைந் துள்ள பொருள் சிறப்பாக அமைவதில்லை. காரணம் என்னையெனின், பாடுகின்றவர் உள்ளம் தூய்மையாக ஒளிபடைத்ததாக இருப்பதில்லை. அதனால் அவருடைய பாடல் உலகிற்கு நலம் பயப்பதாக அமைவ தில்லை. திருவள்ளுவர், ''மனந்தூயார்க் கெச்சம் நன்றாகும்''—மனம் தூயவர்க்கு எஞ்சிய சொல்லும் செயலும் நன்றாகும் என்று கூறுகிறார், பாரதியார் ''உள்ளத் தில் ஒளியுண்டானால் வாக்கினில் ஒளியுண் டாகும்—வாக்கினில் ஒளியுண்டாகின் அவ் வாக்கிலிருந்து கவிதை வெள்ளம் பெருக் கெடுத்து ஓடும்; அந்நிகழ்ச்சியால் தாழ்ந்த உலகம் உயர்ந்து வாழும்'' என்று கூறுகின் றார். தீய உள்ளம் படைத்தவர் தமிழ்ப் பாட்டைப் பாடுதல் நன்றன்று என்பதைப் பிற்காலப் புலவர் ஒருவர்,

---

1. மேலோர் பண்டிதர் புலவர் ஆசிரியர்
புந்தியர் மேதையர் புலமை யோரே (123-5) பிங்கலம்

2. ஆன்றோர் சான்றோர் அறிஞர்தம் பெயரே (124-5) பிங்கலம்

சீற்றம் காமம் அழுக்காறு சிறந்து நிற்க
மனத்தின்கண்,
ஏற்ற பொய்யும் கடுமொழியும் இகழ்ந்து கூறும்
தீச்சொல்லும்
மாற்ற முரைக்கும் நாவதனில் மண்டிக் கிடக்கும்
மாண்பில்தோய்
நாற்றம் வீசும் நின்வாயால் நல்ல தமிழைக் கூறுதே

என்று பாடியுள்ளதைக் காண்க.

## சொல்லமைப்பு

மாத்திரை வகையால் எழுத்தும், எழுத்தால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியும், அடியால் பாட்டும் தோன்றும். இலக்கண முறைப்படி அமைந்த இப் பாடலில் நல்ல ஓசையின்பத்தினைக் காணலாம். அதுபோல், எழுத்தால் தனி மொழியும், தனிமொழிச் சேர்க்கையால் தொடர்மொழியும், பல தொடர்மொழிச் சேர்க்கையால் செய்யுளும் தோன்றுகின்றது. இலக்கண முறைப்படி சொல் லமைந்த இப்பாடலில் பொருள் இன்பத் தைக் காணலாம். செய்யுள் தோன்றுவதற்குச் சொற்கள் கருவியாக இருத்தலால் அவை செய்யுட்கு உடலுறுப்புப் போன்றவை என்பதை மேற்காட்டிய நன்னூல்[1] நூற்பாவால் உணர்ந்துள்ளோம்.

''சொற்களை உடலாகவும், உணர்த்தும் பொருளை உயிராகவும், வண்ணங்களை (ஓசையை) உடம்பில் நிறமாகவும், நடைகளைச் (செய்யுள்நடை) செல்வ மாகவும் பெற்ற செய்யுளாகிய மனிதனுக்கு அலங்காரமானவை ஆடை அணிகளைப் போன்றன'' என்று வீரசோழியம்[2] விளம்பு கின்றது.

தொல்காப்பியம்[3] இயல்பாகிய சொல் லும் (இயற்சொல்), திரிந்துவரும் சொல் லும், திசைச் சொல்லும், வடசொல்லும் என்று கூறப்படும் அந்நான்கும் செய்யுள் செய்வதற்குரிய சொல்லாகும் என்று கூறு கின்றது. நால்வகைச் சொல்லும் செய்யுள் செய்வதற்குரிய சொல்லாயினும், செய்யுள் செய்வதற்கு இயற்சொல்லே மிகச் சிறந்த தென்பதும், அடுத்துத் திரிசொல்லும் ஆகும் என்பதும், திசைச் சொல்லும் வடசொல் லும் சிறுபான்மை ஆகும் என்பதும் முறை வைப்பால் உய்த்துணரப்படும்.

தொல்காப்பியம் செய்யுளியலில்,

மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று

என்றொரு நூற்பா இருக்கிறது. இது செய்யுட்குக் கூறிய முப்பது நான்கு உறுப் புள் மரபென்னும் உறுப்பைக் கூறவந்த தாகும். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், ''குறித்த பொருள் முடிவு பெறுமாறு சொல் தொடுக்குங்கால், இயற் சொல் லாகிய பெயர் வினை இடை உரியானும், திணை வழு முதலான ஏழு வகை வழுவும் படாமல் அப்பொருளைப் புணர்ப்பது'' என்று கூறி, ''அவற்றுள் இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத் தோடு பொருந்துதல், திரிசொல் மரபாவது தமிழ் நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு; திசைச் சொல் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன் னிரு நிலத்திலும் வழங்கும் மரபு; வட சொல் மரபாவது திரிந்த வகையாகிய சொல் மரபு'' என்று கூறி, ''யாதானும் ஒரு செய்யுள் செய்யுங் காலத்துப் பொரு ளுணர்த்தும் சொற்கள் இவையாதலின், இவை ஒரு பொருட்குரித்தாகிய ஆண் பெயரும் பெண்பெயரும் குழவிப் பெயரும் முதலாயின பிற பொருட்கண் வாராமை யான் அவற்றை அவ்வம் மரபினாற் கூறுத லும், ஒருமை பன்மை மயங்காமையும், பெயரும் வினையும் முடிவுபெறக் கூறுத லும் வேண்டுதலின் மரபென்னும் இவ்வுறுப்

---

1. நன்னூல்-398.
2. உரையுட லாக வுயிர்பொரு ளாக உரைத்தவண்ணம்
நிரைநிற மாநடை யேசெல வாநின்ற செய்யுட்களாம்
தரைமலி மானிடர் தம்மயங் காரங்கள் (வீரசோழியம்-143)
3. இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றந்நான்கே செய்யுள்ஈட்டச் சொல்லே (சொல்லதிகாரம்-391)

பும் செய்யுட்கு வேண்டுவதாயிற்று'' என்று கூறியுள்ளார்.

பேராசிரியர் மேற்கண்ட நூற்பாவிற்கு வேறுபடப் பொருள் கூறியுள்ளார். அவர் கூறுவது வருமாறு :- ''அங்ஙனம் கூறப் பட்ட மரபுதானும், பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் அல்லது இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல்லென்னும் நான்கு சொற்களை யும் உலகத்தார் வழங்கும் வழக்கு, வடிவி னால், மேல் நூற்பாவில் பகுத்த பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் யாப்புவழிப் பொருத்த முடைத்தாக அமைப்பது'' என்று உரை கூறி, ''வழக்கின்கண் வழங்குகின்றபடியே செய்யுளின் கண்ணும் அச்சொற்களை யாத்தல் வேண்டும்'' என்றனர். அவர், மேலும், ''எனவே சொல்லும் பொருளும் அவ்வக் காலத்தார் வழங்கு மாற்றானே செய்யுள் செய்க'' என்பதாயிற்று என்பர்.

நச்சினார்க்கினியர் பேராசிரியரையே பின்பற்றி, ''மரபென்ற உறுப்புத்தானும் நான்கு சொல்லையும் உலகத்தோர் எழு வகை வழுவும் படாமல் வழங்குகின்ற வழக்கு வழுவாதனவாய் அமைய, முற் கூறிய யாப்பின் வழியிலே பொருத்தமுடை யனவாய்க் கிடப்பனவாம் என்று கூறி, இந் நான்கு சொல்லாலும் காலந்தோறும் இடந் தோறும் வழங்குகின்ற வழக்கும் செய்யுளும் இடைதெரியாமல் தொடர்புபடுத்தி முறை பிறழாமல் செய்யுள் செய்க'' என்பர். அவர் மேலும், ''ஒரு காலத்து வழங்கிய சொற்களும் பொருள்களும் அணிகளும் முதலியன ஒருகாலத்து வழங்கா தனவுமுள. வழங்கும் காலமும் இடமும் பற்றி ஏற்ற வற்றாற் செய்யுள் செய்க என்றவாறு. இனித் தமிழ் நூற்கள் வழுவமைத்தவா றன்றி, ஆரியமும் பிறபாடை மாக்களும் தாம் வேண்டுமாற்றால் தமிழ்ச் செய்யுள் செய்தல் மரபன்று என்றுணர்க'' என்பர்.

வீரசோழியம் என்னும் இலக்கண நூல் ''உலக[1] வழக்கோடு பொருந்தியதாயும், வடமொழி எழுத்துடன் பொருந்தாமலிப்ப தாயும், தேர்ந்துணர்பவர்க்கு இனிமையைத் தருவனவாயும், சான்றோரால் தம் செய்யு ளுள் எடுத்தாளப் பெற்றுள்ளதாயும், முறையே பொருளைக் கருதி யுணரப்படுவ தாயும் உள்ள சொற்களே செய்யுளுக்குக் குற்றமற்ற உறுப்பாகும்'' என்றும்; [2]''நன் முறையில் வழங்கப்படாதவையும், தேர்ந்து ணர்வார்க்கு இன்பம் செய்யாதனவாயும், வடமொழி எழுத்தொடு பொருந்தியிருப் பனவாயும், சான்றோர் செய்யுளுள் பயிலா தனவாயும், பொருட்டெளிவினைத் தராதனவாயும் உள்ள சொற்கள் செய்யுட்குக் குற்றமுள்ள உறுப்பாகும்'' என்றும் கூறுகின்றது.

சொற்றொடர்களைத் தனித்தனி நோக்கப்பொருளுடையனவாயிருந்து கூட்டி நோக்கப் பொருளுணர்த்தாததாகிய பிரி பொருட் சொற்றொடரும், முன்மொழிந்த சொற்பொருளோடு பின்மொழியும் சொற் றொடர் ஒன்றாமலிருப்பதாகிய மாறுபடு பொருண்மொழியும், முன்னே கூறியவ தனையே மீண்டும் கூறி அதனால் வேறொரு பொருளைத் தராதாகிய மொழிந்தது மொழிவும், ஒரு பொருளைத் தெளிவாக உணர்த்த வேண்டிய இடத்தில் பலபொருள் தருமாறு கூறும் கவர்படு பொருண்மொழியும் ஆகாத சொற்றொடர் களென்று தண்டியலங்காரம் கூறும்.

---

1. சார்ந்த வழக்கொடு தப்பா வடவெழுத் தைத்தவிர்த்து
தேர்ந்துணர் வார்க்கும் இனிமையைத் தந்துசெய் யுட்களினும்
தேர்ந்து சொலப்பட் டுயர்ந்தவ ராற்நிர லேபொருளே
ஓர்ந்து கொளப்படும் சொல்குற்ற மற்ற உறுப்பென்பரே (143)

2. தெற்றி வழக்கொடு தேர்ந்துணர் வார்க்கின்பம் செய்யவின்றிப்
பற்றி வடநா லெழுத்துக்க ளோடு பயின்றுரைப்பின்
மற்றிவை யில்லென்று வாங்கவும் பட்டுப் பொருள்மருண்டிப்
பெற்றி யுடைச்சொல் பழித்த உறுப்பென்று பேசுவரே. (144)

இதுவரை கூறியவையெல்லாம் சொல் லமைப்புப் பற்றிய செய்தியாகும். இனி செய்யுட்கு உயிர் என்று கூறும் பொருண் மையைப் பற்றி ஆராய்வோம்.

## பொருளமைப்பு

செய்யுளுக்குப் பொருள் அமைப்பு உயிராகும் என்னும் செய்தி முன்னரே கூறப் பட்டது. 'பல்வகைத் தாதுவின்' என்னும் நன்னூல் நூற்பாவுரையில் பொருள் என்றது அகம், புறம் என்று இரண்டு கூறாக இருக்கும் என்பர் சங்கர நமச்சிவாயர். இளம்பூரணர் தொல்காப்பியப் பொருளதி காரத் தொடக்கத்தே, ''பொருள் என்பது யாதொவெனில்? மேலதிகாரத்தே இலக் கணம் கூறப்பட்ட சொல்லால் உணரப் படுவது. அது முதல் கரு உரி என மூவகைப் படும். முதற் பொருளாவது நிலமும் கால மும் என இருவகைப்படும். நிலம் எனவே நிலத்திற்கு நீரும், நீர்க்கு முதலாகிய தீயும், தீக்கு முதலாகிய காற்றும், காற்றுக்கு முதலாகிய ஆகாயமும் பெறுதும். காலமா வது மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், யாண்டு, உகம் எனப் பலவகைப் படும். கருப்பொருளாவது இடத்தினும் காலத்தினும் தோற்றும் பொருள். அது தெய்வம் உணா முதலியன. உரிப்பொருள் மக்கட்கு உரிய பொருள். அஃது அகம் புறம் என இருவகைப்படும். அகமாவது புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவும் கைக்கிளை பெருந்திணை எனவும் ஏழு வகைப்படும். புறமாவது நிரை கோடற் பகுதியாகிய வெட்சியும், பகைவர் மண் மேற் சேறலாகிய வஞ்சியும், எயில் வளைத்த லாகிய மருதமும், இருபெரு வேந்தரும் மைந்து கருதி ஒருகளத்துப் பொருதலாகிய தும்பையும், வென்றி வகையாகிய வாகை யும், நிலையாமை வகையாகிய காஞ்சியும், புகழ்ச்சி வகையாகிய பாடாண் திணையு மென ஏழு வகைப்படும்.

''அஃதற்றாக, அறம், பொருள், இன்பம், வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்கும் எனில்? அவையும் உரிப்பொருளினுள் அடங் கும். அஃதற்றாக, இது பொருளதிகார மாயின் உலகத்துப் பொருளெல்லாம் உணர்த்தல் வேண்டுமெனில், அது முதல் கரு உரிப்பொருள் எனத் தொகை நிலை யால் அடங்கும்'' என்பர்.

## பாக்களில் அமைக்கும் பொருள்

அன்றியும், தொல்காப்பியர், செய்யுளி யலில், ''ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலி யென நாலியற் றென்ப பாவகை விரியே'' என்று நான்கு பாக்களைக் குறிப்பிட்டு, ''அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப'' என்னும் நூற்பாவால், அப்பாக்கள் நான் கும் பொதுப்பட நின்றவழி அறம் பொருள் இன்பம் (வீடு கூறப்படவில்லை) என்னும் மூன்றுவகைப் பொருட்கும் உரிய என்பர்.

## காமம் என்கின்ற ஒன்றே எல்லாப் பொருள்கட்கும் முதல் என்பது தொல்காப்பியர் கருத்து

தொல்காப்பியர் பொருளதிகார முகப் பில் அகத்திணையை வைத்து, அவ்வியல் முகப்பில் கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையும் என அகத்திணை எழுவ கைப்படும் என்று கூறியுள்ளார். அவற்றுள் கைக்கிளை என்பது, தலைவன் தலைவி என்னும் இருவருள் ஒருவர்மட்டும் அன்பு செய்கின்ற ஒருபாற் காமமாகும். காமம் நுகர்வதற்குரிய பருவம் நிரம்பாத இளமை யானவரிடத்தே நிகழும் காமமும் அதன் பாற் படும். ஐந்திணை என்பது தலைவன் தலைவி என்னும் இருபாலரும் ஒருவரை ஒருவர் விரும்புகின்ற அன்புடைக் காம மாகும். காமம் நுகர்வதற்குரிய பருவம் நிரம்பியவரிடத்தே இது நிகழ்வதாம். பெருந்திணை என்பது பொருந்தாக் காம மாகும். இது நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வரும் ஒவ்வாக் காமக் கூட்டமாகும். தலைமகன் முதியனாகித் தலைமகள் இளமையாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக்

காமத்தின் மேல் மனம் நிகழ்தலும், தேறுதலொழிந்த காமமும், மிக்க காமத்தின் மிடலும் ஆகிய இவையெல்லாம் பெருந்திணைப்பாற்படும்.

அவற்றுள் ஐந்திணை என்பது, நிலமும் காலமும் கருப்பொருளும் அடுத்துப், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என உரிப்பொருள் வகையால் ஐந்தாகி, முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் எனப் பெயர்பெற்று நிற்கும் இவ்வேழும் அகத்திணைப் பொருளாம்.

அகத்திணைப் பொருளை நன்கு ஆராய்ந்து கொண்டு காணப் புகுந்தால் அங்கே குறிஞ்சித் திணையின் புறமே மாற்றார்து ஆனிரை கொள்ளும் வெட்சித் திணை. முல்லைத் திணையின் புறமே மாற்றார் மண்கொள்ளும் வஞ்சித்திணை. மருதத் திணையின் புறமே மாற்றார்தம் மதிலைப் பற்றும் உழிஞைத்திணை. நெய்தல் திணையின் புறமே இரண்டு பேரரசரும் மைந்தினைக் கருதிப் போர்புரியும் தும்பைத் திணை. பாலைத்திணையின் புறமே அரசனுடைய வெற்றியையும் ஏனைய மக்களின் தொழில் வெற்றியையும் குறிக்கின்ற வாகைத்திணையாகும். பெருந்திணையின் புறமே உலகமக்களின் பல்வேறு நிலையாமையைக் கூறும் காஞ்சித் திணையாகும். கைக்கிளையின் புறமே புகழ்ச்சி முதலானவற்றைக் கூறுகின்ற பாடாண் திணையாகும்.

இவ்வாறு தொல்காப்பியர் கூறும் கருத்தினை ஆராய்ந்தால், காமம் என்ற ஒன்றிலிருந்தே பலவகை அகப்பொருளும், புறப் பொருளும் தோன்றுகின்றன என்பது தொல் காப்பியர் கருத்தாதல் அறியப்படும். இப் பொருளெல்லாம் செய்யுட்குரிய பொருள் களே ஆகும்.

## குற்றமில் பொருளும் குற்றமுடைப் பொருளும்

கேட்பவர்க்கு இன்பத்தைத் தருவனவும், ஒவ்வொருவரும் கருதும் கருத்திற் கியைந்த பொருளைத் தோற்றுவனவும் சான்றோர் கூறும் குற்றமில்லாதனவும் ஆன பொருள் செய்யுட்கு உயிராம் என்றும்,[1] [2]பொருள் அறிவது அரிதென்று போமாறும், குற்றம் சொல்பவனது குற்றத்திற்கும் உரியதாமாறும், முற்றுப் பொருளாகாமல் குறைப் பொருளாகக் கூறுவனவெல்லாம் பொருட் குற்றம் என்றும் வீரசோழியம் கூறும்.

## குற்றமுடைச் சொல்லாலும் குற்றமுடைப் பொருளாலும் விளைபயன்

வீரசோழிய உரையாசிரியர் சொற் குற்றம் அமைந்த பாட்டினைப் பெற்ற தலைமகனுக்குச் சொல் உடலாதலின் உடலுக்கு ஊனமும், பொருட்குற்றம் அமைந்த பாட்டினைப் பெற்ற தலைமகனுக்குப் பொருள் உயிராதலின் உயிர்க்கு ஊனமும் உண்டாகும். அதனால் சொல் குற்றத்தை விடப் பொருட்குற்றம் தவிர்தல் சிறப்பென்றும் கூறுவர்.

இதுவரை செய்யுளில் வைக்கப்படும் பொருளைப் பற்றி ஆராய்ந்தோம். இனிப் புலவன் செய்யுளிடமாகப் பொருள்களை உணர்த்தும் முறையைப் பற்றி ஆராய்வோம்.

---

1. ஆக்குதல் கேட்டவர்க் கின்பத் தினையன்றி அவ்வவரே
போக்குதல் செய்த கருத்திற் பொருளாய்ப் புராதனரால்
நீக்குதல் செய்த குற்றத்தைக் கூடத்தல் நெறிமுறையே
தாக்குதல் செய்த பொருள்காண் சிறப்புயிர் தாழ்குழலே. (146 - வீரசோழியம்)

2. தெரிவான் அரிது பொருளெனப் போதல் சிதைவுசொல்லப்
புரிவான் பொருளுக்கு மேற்றல் மற்றும் பொருளுண்பெற்றுப்
பரிவா னுடன்சொல்ல வேண்டுதல் என்றிந்தப் பாட்டில் வைத்த
விரிவாம் பொருளென்னும் ஆவியின் குற்றம் விளங்கிழையே. (147 - வீரசோழியம்)

## நான்காவது உணர்த்தும் முறை

உணர்வினில் வல்லவனாகிய புலவன் பொருத்தமான நால்வகைச் சொற்களால் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இரண்டில் தான் விரும்பிய பொருளை உணர்த்தும் பொழுது அப்பொருளுக்கு இடமான செய்யுளை அணிபெறச் செய்ய வேண்டும் என்று பவணந்தியார் பகர்வர். 'அணி பெறச் செய்வன' என்றதனால், அணி என்பது உவமை உருவகம் முதலிய அணிகளையும் குறிக்கும். அவற்றை யன்றி அவ்வணிகளின் வேறாய்ப் பொருளை உணர்த்துகின்ற முறையினையும் குறிக்கும்.

## உணர்த்தும் முறையும் உயிர்

வீரசோழியம், ''செய்யுளுக்குச் சிறந்த பொருளே உயிராதலின், அப்பொருளையே தன்மை, உருவகம் முதலான அணிகளாகச் சொல்லுக. சொல்லும் பொருளும் இளகித் தோன்றாமல், அவை முற்றிய பொழுதே, அச் செய்யுளில் வைத்த உவமை முதலான அணிகள் அணிகளாகத் தோன்றும். அல்லாதபொழுது அணிகளாகத் தோன்றா. எதுபோலவெனின், மூக்கும் கண்ணும் முதலிய உறுப்புக் குறைந்தாரும் சாகைக்கண் முதலிய உயிர் நோவுகளை உடையாரும் அணிகளால் விளங்காதவாறு போலக் கொள்க'' என்று விளம்புகிறது.

மேலே கூறியவற்றால், உயிராகிய பொருள் வேறல்ல, உணர்த்தும் முறையாகிய அணி வேறல்ல என்பது விளங்கும்.

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல்

என்னும் திருக்குறளில் வந்துள்ள உவமை, தாழ்ந்தார் அவைக்கண் ஒருவழியும் சொற்களைச் சொல்லற்க என்ற பொருளை நன்கு உணர்த்துகிறது.

இனமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

என்னும் திருக்குறளில் வந்துள்ள உருவகம் சினந்தவர்க்கு விளையும் தீங்கினைக் கூறுகிறது.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற

என்னும் திருக்குறளில் வந்துள்ள பிறிது மொழிதல் என்னும் அணி பகைவர் தந் நிலத்தினில் வலியர் என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு அணிகளெல்லாம் பாட்டிற்கு உயிரான பொருளையே அழகுபட உணர்த்தலின், வீரசோழியம் ''ஒப்பார் பொருளே உயிராவமையின் உரைத்த வற்றைத் துப்பார் அலங்காரமாகத் தொகுக்க'' என்று சொன்னது ஏற்புடைத் தாதல் அறியலாம்.

இதனால், பொருள் உயிரன்றி அதனை உணர்த்துகின்ற முறையினையும் உயிரென்றல் பொருந்துமாறறிக.

## செய்யுள் செய்முறை

பயனில்லாத சொற்களைப் பெரிதும் பெய்து செய்யுள் செய்யின் அது பதர்ச் செய்யுளாகும். குற்றமுடைய சொல்லால் செய்யுள் செய்தல் கூடாது. அதுவுமன்றிக் குற்றத்தை மக்களுக்குப் புகட்டும் முறையில் செய்யுளைச் செய்வது தமிழ்நாட்டு முறையில்லை. பொருளை மாறுபடக் கருதும் வகையிலும், பொருள் இதுவோ அதுவோ வென்று ஐயமுறும் வகையிலும் செய்யுள் செய்தல் கூடாது. ஓர் இனத்தவர்க்கு மட்டும் பயன்படுமாறு இயற்றப்படும் இலக்கியங்களும் உண்டு. அது சிறப்புடைய தன்று. எல்லா மக்களுக்கும் எல்லா நாட்டவர்க்கும் பயன்படுமாறு இலக்கியம் இயற்றலே சிறப்புடைத்து.

## செய்யுளில் சுவை

சோறு ஒன்றை மட்டும் சமைத்து நாம் உண்பதில்லை. அதனுடன் பல சுவைப் பொருள்களையும் சேர்த்தே உண்கின்றோம். பல சுவைப் பொருள்களைச் சேர்க்காமல் வெறும் சோற்றை மட்டும் நம்மால்

உண்ண முடிவதில்லை. அதனைப் போலப் புலவன் பாடும் பொழுது, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் சுவைகளைத் துன்ப நிகழ்ச்சிக்குத் தகவும், இன்ப நிகழ்ச்சிக்குத் தகவும் அமைத்துப் பாடுதல் வேண்டும். சுவையில்லாத பாட்டு வெறுஞ் சோறு போன்றதே. சோதிடம் மருத்துவம் முதலானவற்றைக் கூறும் பாட்டு இலக்கிய மாவதில்லை அவை வெறும் பொருளை மட்டும் கூறிச் செல்வனவாம். அவற்றில் சுவையில்லை; கற்பனைத் திறன் இல்லை.

## சொல் நடை

''சொல்லின் நடை தெரிந்த நன்மையவர்'' என்னும் குறளில், பரிமேலழகர் சொல் நடை 1) வெளிப்படை, 2) இலக்கணம், (ஆகுபெயர்), 3) குறிப்பு என மூன்று வகையாக வழங்கப்படும் என்றனர். இவையேயன்றி, வேற்றுமொழிக் கலப்பால் உண்டாகும் நடையும், தனித்தமிழ் நடையும், உலகவழக்கு நடையும், செய்யுள் வழக்கு நடையும், கல்லாதவன் நடையும், கற்றவன் நடையும், பேச்சுவழக்கில் எளியவர் பேசும் நடையும், செல்வர் பேசும் நடையும் என மாறுபட்ட நடைகளும் உள்ளன. இவையன்றி உரையாசிரியர் நடையில், இறையனார் களவியல் உரையாசிரியராகிய நக்கீரர் நடை, தொல்காப்பிய உரையாசிரியருள் இளம்பூரணர் நடை, பேராசிரியர் நடை, நச்சினார்க்கினியர் நடை என்னும் இவையெல்லாம் வெவ்வே றியல்பின ஆகும்.

# முன்னிலைப் பன்மைப்பெயர் நீஇர் என்பதா? நீர் என்பதா?

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி அருகில் உள்ள குகையூர் என்ற சிற்றூரில் 1910-இல் பிறந்தவர்; மயிலம் தமிழ்க் கல்லூரியில் 12 ஆண்டுகளும், கரந்தைப் புலவர் கல்லூரியில் 20 ஆண்டுகளும் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றியவர்; சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் ஓர் ஆண்டு ஆராய்ச்சித் துறையில் பணியாற்றியவர்; இப்பொழுது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொல்காப்பிய ஆராய்ச்சி செய்து வருகிறார். இதுவரை 32 நூல்கள் எழுதியுள்ளார். தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திற்குப் பல நூல்களைப் பதிப்பித்துத் தந்துள்ளார்.

## தோற்றுவாய்

இரண்டு பொருள் தோன்றுமாறு வேடிக்கையாகப் பேசும் கற்றறிஞரொருவர், சிறுநீர் வாராமையாகிய நோயால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார். அவர்க்கு மருத்துவஞ் செய்யவேண்டி, மருத்துவர் ஒருவரை வீரைந்து அழைத்து வந்தனர். நோயாளி, வந்த மருத்துவரைப் பார்த்துத் தம் வழக்கப்படி இரண்டு பொருள்பட ''நீர் வராமல் துன்பப்படுகின்றன்'' என்றார். (இவர் பேச்சில் 'நீர்' என்பது சிறுநீரையும், வந்த மருத்துவரையும் குறிக்கும்.) இச்சொற்றொடர் சிறுநீர் வராமல் துன்பப்படுகிறேன் என்றும், மருத்துவராகிய நீர் வராமல் துன்பப்படுகிறேன் என்றும் இரண்டு பொருள் கருதி நோயாளியால் கூறப்பட்டது. நோயாளி கூறிய இரண்டு பொருள்படும் சொற்றொடரைப் புரிந்துகொள்ளாத மருத்துவர், நோயாளியைப் பார்த்து, ''நீர் போகத்தான் வந்திருக்கிறேன்'' என்று பதில் கூறினாராம். இதைக் கேட்ட நோயாளி வருந்தி, ''நான் போக வேண்டிய காரியத்தைச் செய்து விடுங்கள்; உங்களுக்கும் அலைச்சல் இல்லாமலிருக்கும்'' என்று கூறினாராம்.

இவ்வாறு கதையொன்று சொல்வதுண்டு. இக் கதையில் நீர் என்னுஞ் சொல்

சிறுநீரையும், முன்னிலையாரையும் குறிக்க வந்துள்ளது.

## நீர் என்பதன் பொருள்

'நீர் என்னும் சொல் புனல், பண்பு, பூராட நாள் என்னும் இவற்றைக் குறிக்க வரும்' என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. இச்சொல் இப்பொருளில் வருமானால், இது படர்க்கையிடத்துச் சொல்லே ஆக வேண்டும். அந் நிகண்டு, நீர் என்னுஞ் சொல் முன்னிலைப் பன்மைக்கு வரும் என்று கூறாமையால், அச்சொல் முன்னிலையிடத்திற்கு வாராதென்பதும் தெரிகின்றது.

## நன்னூலார் கூறுவது

நன்னூலாசிரியர் தம் நூலில் பெயரியலில் பொதுப் பெயர்களைக் கூறும் பொழுது, ''முன்னிலை ஐந்து'' (281) என்று முன்னே தொகுத்துக் கூறிவிட்டுப், பின்னர் அவ்வைந்தும் ''எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ'' ஆகும் என்று விரித்துக் கூறுகிறார்.

இவ்வைந்துள் நீ ஒருமையாகும், ஏனைய நான்கும் பன்மையாகும். இந்நான்கில் எல்லீர் என்பதை நீக்கிவிட்டால், ஏனைய மூன்றும் முன்னிலைப் பன்மையைக் குறிக்கின்ற ஒரு பொருள் குறித்த பல சொல்லாதல் வேண்டும்.

நன்னூலாசிரியர் நீயிர் நீவிர் நீர் என்னும் மூன்றையும் ஒப்பக் கருதாமல், இவற்றுள் நீயிரும் நீவிரும் எழுவாய் வேற்றுமைக்கே வரும் என்றும், ஐ முதலிய வேற்றுமை உருபுகளை ஏலாவென்றும் (நன்-294), ஆனால் நீர் என்பது மட்டும் எழுவாய் வேற்றுமையாக வருவதோடல்லாமல் ஐ முதலான வேற்றுமை உருபுகளை ஏற்கும் பொழுது நும் என்று திரிந்து (நன்-247) ஏற்கும் என்றும் கூறுவர். இவ்வாறு அவர் கூறுவதைக் கருதினால், முன்னிலைப் பன்மைப் பெயர் ஐந்துள் நீர் என்னும் பெயரையே மூலப்பெயராகக் கொண்டுள்ளார் என்பது தெரிகின்றது.

## நீர் பல பொருள் ஒரு சொல்லா?

புனல் முதலான பொருளில் வரும் நீர் என்னும் சொல்லும், முன்னிலைப் பன்மையைக் குறித்துவரும் நீர் என்பதும் வடிவில் ஒன்றாயிருத்தலால், இது பல பொருள் ஒரு சொல்லாக வேண்டும் எனில், முன்னது படர்க்கையிடத்தும், பின்னது முன்னிலைப் பன்மையிடத்தும் வருவதால், அவ்வாறு கொள்ளுதல் முறையன்றாகும்.

அங்ஙனமாயின், நீர் என்னும் சொல்லிற்கு அமைவு என்னவென்று வினாவின், அச் சொல்லைப் பற்றி நன்கு ஆராய்ந்து துணிதலே அமைவாகு மென்க.

## தொல்காப்பியரின் அச்சம்

முன்னிலைப் பன்மைப் பெயர், படர்க்கைப் பெயர்போல வழங்க வந்து விடுமோ என்ற அச்சம் அந்தக் காலத்தில் தொல்காப்பியர்க்கு ஏற்பட்டிருந்தது. அதனால், முன்னிலைப் பன்மைப் பெயரின் வடிவத்தைத் தெளிவாக அறிவித்துவிட வேண்டும் என்று அவர் கருதினார். தம் நூலுள் அவர் புணர்ச்சி விதி கூறும் பொழுது, உயிர் மயங்கியலில் முன்னே அல்வழிப் புணர்ச்சிக்கும், பின்னே வேற்றுமைப் புணர்ச்சிக்குமாக விதி கூறியுள்ளார். ஆனால், புள்ளிமயங்கியலில் முன்னே வேற்றுமைப் புணர்ச்சிக்கும், பின்னே அல்வழிப் புணர்ச்சிக்குமாக விதி கூறியுள்ளார். இவ்வாறு கூறியுள்ளதற்கு ஏதாவது காரணம் இருத்தல் வேண்டும்.

அந்த முறையில் புள்ளிமயங்கியலில், முன்னே வேற்றுமையில் நும் என்றிருந்த பெயர், அல்வழிக்கு வரும்பொழுது எத்தகைய மாற்றத்தைப் பெற்று வரும் என்பதைக் கூறுமிடத்து,

அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்யியின் ஈவர
இ இடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பான் மொழிவயின் இயற்கை யாகும்.

(தொல்-எழு-புள். நூ. 326)

என்றொரு நூற்பாவைக் கூறி, அதனால் முன்னிலைப் பன்மைப் பெயரின் அல்வழி வடிவத்தைத் தெளிவாகப் புலப்படுத்தி யுள்ளார்.

''வேற்றுமையில் 'நும்' என்று வழங்கும் ஒரு பெயரை அல்வழியிடத்துச் சொல்லும் பொழுது, அப் பெயரினுள், நகரத்தில் உள்ள உகரம் கெட, நின்ற மெய்யிடத்து ஈகாரம் வர, ஓர் இகரம் இடையிலே நிலை பெற, ஈற்றிலே உள்ள மகரம் கெட, அவ் விடத்து ஒரு ரகரம் புள்ளியொடு பொருந்தி நிற்றல் வேண்டும்; அப் பகுதிப் பட்டுத் திரிந்து 'நீஇர்' என நின்ற நிலைமொழி முன்னர் வருஞ் சொல்லெல்லாம் இயல் பாகும்'' என்பது அந் நூற்பாவின் பொருள்.

இந் நூற்பாவில் உக்கெட, ஈறுகெட என்பன குன்றல் விகாரமாகும்; மெய்வயின் ஈவர என்பதும், இ இடை நிலைஇ என்ப தும், ரகரப்புள்ளி நிற்றல் வேண்டும் என் பதும் மிகுதல் விகாரமாகும்; எனவே, மெய் பிறிதாதல் மிகுதல் குன்றல் என்னும் திரிபு மூன்றனுள் 'நும்' என்னுஞ் சொல் இரண்டு குன்றலையும், மூன்று மிகுதியையும் பெற்று 'நீஇர்' எனத் திரிந்து நின்றது.

(நும் என்னும் சொல்லில் உகரத்தைக் கெடுத்தால் 'ந்ம்' என்று ஆகும்; உகரங் கெட்ட நகர மெய்யின்மேல் ஈகாரத்தை ஏற்றினால் 'நீம்' என்று ஆகும்; பின்னர் இகர உயிரை இடையில் நிறுத்தினால் 'நீஇம்' என்று ஆகும்; ஈற்றிலுள்ள மகர மெய்யைக் கெடுத்து ரகரப் புள்ளியை நிறுத்தினால் 'நீஇர்' என்று ஆகும்.)

வேற்றுமையில் நும் என்னும் மகரவீறா யிருந்த முன்னிலைப் பன்மைப் பெயர் மேற் கூறிய விதிப்படி அல்வழியிலே 'நீஇர்' எனத் திரிந்து நின்றது. இதுவே முன்னிலைப் பன்மைப் பெயரின் பழைய வடிவமாகும். இவ்வாறு ஆதலால், நீஇர் என்பதும் நீர் என்பதும் வடிவத்தில் ஒன்றல்ல: அதனால் இவை பல பொருள் ஒரு சொல்லும் அல்ல.

தொல்காப்பியர் நீஇர் என்னும் முன்னி லைப் பன்மைச் சொல் நும் எனத் திரிந்தது என்று கூறியிருந்தால், நீஇர் என்னும் அச் சொல் வடிவம் நமக்குக் கிடைக்காமற் போகும். மேற் கூறியவாறு கூறி அச் சொல்லின் வடிவத்தைப் புலப்படுத்திய அவர்க்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

## பிற்காலத்தவரின் செயல்

தொல்காப்பியர் மிகமிக நினைவாகக் குறிப்பிடும் நீஇர் என்னுஞ் சொல்லை நன்கு கருதாத பிற்காலத்தார், இடையிலே யகர உடம்படு மெய்யைச் சேர்த்து, நீயிர் என்றாக்கியும் இடையிலுள்ள இகரத்தைக் கெடுத்து நீர் என்றாக்கியும் புதிய சொல்லை உருவாக்கி விட்டனர்.

நன்னூலாசிரியர் பெரும்பாலும் தொல் காப்பியத்தைப் பின்பற்றியவராவார். அவர் நீ என்னும் உயிர் மெய்யெழுத்தையும் அடுத்து இகரத்தையும் ரகரப்புள்ளியையும் பெற்று வரும் நீஇர் என்னுஞ் சொல் வேற்றுமையில் நும் என்று திரியும் என்று விளக்கமாகக் கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறாமல் ''நீர் நும் ஆம்'' (நன்-246) என்று கூறுவதனால், அவரும் முன்னிலைப் பன்மைச் சொல்லின் வடிவத்தைத் தெளி வாக அறியாதவருள் ஒருவராகின்றார்.

ஆனால் இளம்பூரணர் தொல்- எழுத்து- புணரியல் ஏழாவது நூற்பாவுரையில், மெய்பிறிதாதல் முதலிய மூன்றும் ஒரு புணர்ச்சிக் கண்ணே நிகழ்வதும் என்று கூறி, 'நீஇர் குறியீர்' என்பது அம் மிகுதி மூன்று வந்தது என்றனர். ஆனால், இளம்பூரணம் கன்னியப்ப முதலியார் பதிப்பும், வ-உ-சி பதிப்பும் 'நீஇர் குறியீர்' என்றே இதனைப் பதிப்பித்துள்ளனர். இளம்பூரணர் 'அம் மிகுதி மூன்று வந்தது' என்று கூறுவது பிழையென்றே ஒருவர் குறிப்பும் எழுதி னார்.

'நீஇர்' என்பதின் பிழைபட்ட வழக் காகிய நீர், நீயிர், நீவிர் என்னும் மூன்றில் மிகவும் பிழைபட்ட நீர் என்பதனையே மூலச்சொல்லாக வைத்துக் கொண்டு, நீர் என்பது வேற்றுமையில் நும் என்று

திரியுமென்றும், ஏனைய நீயிர் நீவிர் என்பன அவ்வாறு திரியாமல் எழுவாய் வேற்றுமைக்கு மட்டும் வருமென்றும் நன்னூலாசிரியர் கூறுகின்றார்.

மேற் கூறியவற்றால் நன்னூலாசிரியர் நீயிர், நீவிர் என்பவற்றை முன்னிலைப் பன்மை முதற்சொல்லாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிகின்றது. இவர் முதற் சொல்லாக ஏற்றுக் கொள்ளாத நீயிர் என்னுஞ் சொல்லை முதற் சொல்லாகக் கொண்டு ''அல்லதன் மருங்கின்'' (புள்ளி மயங்-31) என்னும் நூற்பாவுரையில் 'நீயிர் குறியீர்' என்னும் எடுத்துக் காட்டைக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர். பிற்காலத் தெழுந்த ஆய்வாளரெல்லாம் நன்னூலாசிரியர் கருத்தை யொட்டி நீர் என்பதனையே முன்னிலைப் பன்மை மூலச் சொல்லாகக் கொண்டு ஆய்வு நடத்தி வருகின்றனர்.

## நீஇர் வந்துள்ள இடம்

என்னிடத்திலுள்ள ஓலைச்சுவடியில் தொல்-எழுத்ததிகாரம் 110-ஆம் நூற்பாவுரையில் (இளம்பூரணர்) நீஇர் குறியீர் என்ற பாடமே உள்ளது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் பதிப்பித்த தெய்வச்சிலையார் உரையில் தெய்வச்சிலையார் 'நீஇர் நீயென வருங் கிளவி'(தொல்-சொல்-182) என்றே பாடம் ஓதுவர்.

தொல்காப்பியர் நும் என்பதனை நீஇர் என்று தாம் திரித்த திரிபினை வற்புறுத்த வேண்டி, நீஇரை நும்மின் திரிபெயர் என்றே (விளிமரபு-26) கூறி, அப்பெயர் விளி ஏற்காது என்றும் கூறுகின்றார். அவர் களவியலில்,

பெய்ந்நீர் போலும் உணர்வித் தென்ப (28)

என்ற நூற்பாவில் புனலைத்தான் நீர் என்று குறிப்பிட்டுள்ளார்.

## முடிப்புரை

தம் காலத்துள்ள செய்யுள் வழக்கு உலக வழக்குகளை முந்நூற் பொருளுடன் கூட்டி நன்கு ஆராய்ந்தவர் தொல்காப்பியர். அவர் புணரியலில்,

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும் (10)

என்று வேற்றுமைப் புணர்ச்சியை முதலாவதாகவும், அல்வழிப் புணர்ச்சியை இரண்டாவதாகவுமே கூறியுள்ளார். அவ்வாறு கூறிய அவர், உயிர் மயங்கியலில் மாறுபட்டு முன்னே அல்வழியினையும் பின்னே வேற்றுமையினையுங் கூறுகிறார். புள்ளி மயங்கியலில் புணரியலில் கூறிய முறைப்படி முன்னே வேற்றுமையையும் பின்னே அல்வழியையும் கூறுகின்றார் என்பது முன்னே கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளதற்குக் காரணம் நமக்குப் புலப்படவில்லை. எனவே, புள்ளி மயங்கியலிற் கூறும் முறைப்படி வேற்றுமைக்கு வரும் நும் என்பதற்குப் புணர்ச்சிவிதி கூறிவிட்டுப் பின் இது திரிந்து அல்வழியில் நிற்கும் வடிவத்தைக் கூறி அதன்பின் அது மற்றச் சொல் முன் புணரும் முறையைக் கூறல் வேண்டும். தொல்காப்பியர் அவ்வாறுதான் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள விதியில் நீஇர் என்பதுதான் முன்னிலைப் பன்மையின் மூலம் என்பதும், இதிலிருந்து வேறுபட்டுத் தோன்றிய நீயிரும் நீவிரும் நீரும் மூலச் சொல் அல்ல என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால், தொல்காப்பியர் கூற்றிலிருந்து அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான இச்செய்தியை விட்டுவிட்டு, நும்மிலிருந்து நீஇர் தோன்றிற்று என்று கூறிய முறை பிழை பிழை என்று வேறு குரல் எழுப்பிக் கொண்டுள்ளது இன்றைய உலகம்.

# முன்னிலைச் சொற்கள் திணை - பால் உணர்த்தும் முறை

டாக்டர் செ. வை. சண்முகம்

இவர் திருச்சி மாவட்டம் செங்குந்தபுரத்தில் 1932ஆம் ஆண்டு பிறந்தவர்; கடந்த 28 ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையிலும் மொழியியல் துறையிலும் பணியாற்றி, இப்பொழுது மொழியியல் துறையில் பேராசிரியராக உள்ளார். இங்கிலாந்து ரெடிங் பல்கலைக் கழகத்தில் ஆய்வாளராகவும், இந்தோனேஷியா சாகர்த்தாவில் இந்தியக் கல்விச் சிறப்புப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். மொழியியல் முதலிய பல்வேறு துறைகளில் அறுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளும் பத்து நூல்களும் எழுதியுள்ளார். சுவாமிநாதம் என்ற இலக்கண நூலை உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

தொல்காப்பியர் விரவுப் பெயர்கள் திணை-பால் உணர்த்தும் முறையை மூன்று சூத்திரங்களில் விளக்கியுள்ளார். அவைகளுள் இங்கு முன்னிலைச் சொற்களான நீ, நீயிர் என்பனவும், ஒருவர் என்ற சொல்லும் திணை-பால் உணர்த்தும் முறையினை விளக்க ஒரு சூத்திரம் (பெயரியல் 39) அமைந்துள்ளது. அது மொழி அமைப்பு நோக்கில் மட்டுமின்றி, மொழியை ஒருவர் புரிந்து கொள்ளும் நோக்கிலும் அமைந்த சிறப்புடையதாகிறது. தொல்காப்பியர் கருத்தை இன்றைய மொழியியல் நோக்கில் சொன்னால், சூழல் (context)-இங்கு இடச் சூழல் (context of situation), சொற் சூழல் (verbal context) என்பதை மறைமுகமாகக் குறிக்கிறது. ஆகையினால் பொதுநிலையிலும் அந்தச் சூத்திரம் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

தொல்காப்பியர், முதலில்

நீயிர் நீயென வரூஉங் கிளவி
பால் தெரிபிலவே உடன்மொழிப் பொருள
(பெயரியல்-33)

என்ற சூத்திரத்தால் முன்னிலைப் பெயர்கள் நேரடியாகத் திணை-பால் காட்டாது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் உரையாசிரியர்கள் இதைக் கொஞ்சம் வேறு விதமாக விளக்குகிறார்கள்.

இளம்பூரணர் சூத்திரத்தின் இரண்டாவது வரிக்கு 'திணைப் பகுதி தெரிய நில்லா

இருதிணையும் உடன்தோன்றும் பொருள்' என்று பொழிப்புரை எழுதி, 'நீயிர் வந்தாய், நீ வந்தாய் என இரு திணைக்கும் பொது வாய் நின்றவாறு கண்டு கொள்க' என்று விளக்கமும் தந்துள்ளார். இங்கு இளம் பூரணர் முன்னிலைச் சொற்கள் எப்படித் திணை-பால் காட்டுகின்றன என்பதை விளக்காது, வாசகர் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுப் போய் விட்டார்.

சேனாவரையர் இளம்பூரணரின் மொழிப்புரையையும் விளக்கத்தையும் ஏற்றுக் கொண்டு, 'இருதிணைப் பொருளும் ஒருங்குவரத் தோன்றும் என்றவாறு; பிரிந்து ஒரு திணை விளக்கா என்றவாறு .....இருதிணைக்கும் உரிய பெயரெல்லாம் தத்தம் மரபின் வினையோடு வந்து திணை விளங்குமன்றே; இவற்றுக்கு அன்ன வினையின்மையின் ஒருவாற்றானும் திணை விளக்கா' என்று விளக்கும்பொழுது, முன்னிலைப் பெயர்கள் பால் காட்டவே காட்டாது என்பதை அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தொல்காப்பியரே நான்கு சூத்திரங்கள் தாண்டி அவை பால் உணர்த்தும் முறையை விளக்க வேறொரு சூத்திரம் செய்துள்ளதால், சேனாவரையர் கொடுத்துள்ள அழுத்தமெல்லாம் தொல்காப்பியருக்கு உடன்பாடுடையவையாகக் கூற முடியாது. ஆகையினால்தான் பின்னால் வந்த உரையாசிரியர்கள் இவருடைய விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை போலும்.

எப்படியாயினும், தொல்காப்பியர் இந்தச் சூத்திரத்தால் முன்னிலைச் சொற்கள் பால்காட்டா என்று குறிப்பிட்டாலும், இன்னொரு சூத்திரத்தால் அவை பால் உணர்த்தும் முறையை விளக்கியிருப்பதை இங்கு ஆராய எடுத்துக் கொள்ளப் படுகிறது. அது,

> இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
> முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்
>
> பெயரியல் 39ஆம் சூத்திரம்—

மேலே குறிப்பிட்ட பொதுக்கருத்தையும் முன்னிலைச் சொற்கள் பாலுணர்த்தும் முறையையும் இந்தச் சூத்திரம் விளக்குகிறது. இங்கும் 'முன்னம் சேர்த்து முறையின் உணர்தல்' என்ற இரண்டாவது வரியே சிறப்புடையதாக அமைந்துள்ளது.

இளம்பூரணர், 'சொல்லுவான் குறிப்பொடும் கூட்டி முறையால் உணர்க' என்று பதவுரை எழுதி,

''ஒரு சாத்தன் ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி நீ வந்தாய், நீயிர் வந்தாய் என்னுமன்றே; ஆண்டு அது கேட்டான், இவன் இன்னபால் கருதிக் கூறினான் என்பது உணரும். இனி

'ஒருவரை ஒருவர் சார்ந்தொழுகலாற்றான்' (நாலடி 309) என்பது சொல்லுவான் ஆடூஉ ஒருமை குறித்தான் என்பது விளங்கும்''

என்று உதாரணங்களுக்கு விளக்கமும் தந்துள்ளார்.

பேசுவோன், கேட்போன் ஆகிய இருவரும் பேசப்படும் பொருளை நேரே பார்த்து உரையாடுவதால் கேட்போன் முன்னிலைச் சொல்லின் பாலை உணர்ந்து கொள்வதாக முதல் உதாரணம் விளக்குகிறது. இதைப் பொதுமைப் படுத்தினால் பேச்சின் இடச் சூழல் (context of situation) என்று கூறலாம். பேச்சின் சூழல் பேசப்படும் பொருளை இருவரும் நேரே பார்க்க வேண்டும் என்பதில்லை.

இரண்டாவது உதாரணத்தில் கேட்போர் பலராகவும் அதுவும் ஆண்பாலாகவும் இருக்க வேண்டும். அந்தச் சூழலில் தான் கேட்போன் 'ஒருவரை ஒருவர்' என்பது ஆண்பால் என்று அறிந்து கொள்ள முடியும். ஆனால் இங்கு இளம்பூரணர் பேச்சு நடைபெறும் சூழலை விளக்கவில்லையே யாயினும், 'ஆண்பால்' என்று கூறுவதால், நாமே அந்தச் சூழலை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சார்ந்து ஒழுகுதல் என்பதால் சொற் சூழல் (verbal context) என்று பொருள் கொள்ளலாம்.

சேனாவரையர் இளம்பூரணருடைய பொழிப்புரையையும் உதாரணங்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டு,

'இனி இடமும் காலமும் பற்றிப் பால் விளங்கும் வழியும் அறிந்து கொள்க.'

என்று கூறி உதாரணம் தராமல் போய் விட்டார். நச்சினார்க்கினியரோ,

''இடமும் காலமும் பற்றிச் சொல்லுவான் குறிப்போடு கூட்டி மேல் ஓதின முறையானே திணையும் பாலும் உணர்க' என்று பொழிப்புரை எழுதி,

''விலங்கு வாராததோர் இடத்திலிருந்து நீயிர் வந்தீர், நீ வந்தாய் என்றால் உயர்திணை எனவும், மக்கள் வாராததோர் இடத்திலிருந்து அங்ஙனம் கூறினால் அஃறிணை எனவும் உணரப்படும். 'நீயும் தவறிலை நின்னைப் புறங்கடை' என்ற வழிப் பெண்பால் என்பதூஉம், 'நீயே பிறர் நாடு கொள்ளுங்காலை,' என்ற வழி ஆண்பால் என்பதூஉம், 'இன்றுனைப் பிரிந்தாரை உடையையோ நீ' என்றவழி அஃறிணை எனவும் உணரப்படும்''

என்று புதிய உதாரணங்களும் கொடுத்துள்ளார். இங்கு 'இடம்' என்பது பேச்சு நடைபெறும் இடத்தைக் குறித்தாலும் இதுவும் இடச்சூழலே. இளம்பூரணர் நேரடிப் பொருளையும் நச்சினார்க்கினியர் பேசுவோர் கேட்போர் இடம் பற்றிய அறிவையும் குறிப்பிட்டாலும், இரண்டையும் இடச்சூழல் என்றுதான் கொள்ள வேண்டும்.

'நீயும் தவறிலை' போன்ற உதாரணங்கள் எந்த முறையில் பால் உணர்த்துகின்றன என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடவில்லை. தெய்வச்சிலையார் இதே உதாரணங்களைத் தந்து, 'இவை குறிப்பினான் உணர நின்றன' என்று தெளிவுபடுத்தியுள்ளார். 'நீயே பிறர் நாடு கொள்ளுங் காலை' என்பது 'நாடு கொள்ளுதல்' என்ற வினையால், அதாவது தேர்வுக் கட்டுப்பாட்டினால் தான் ஆண்பால் உணர்த்துகிறது. இதையும் சொற் சூழல் என்று வேண்டுமானால் அழைக்கலாம்.

'நீயும் தவறிலை; நின்னைப் புறங்கடை விட்ட நுமரும் தவறிலர்' என்பது பேசுவோன் நேரே பார்த்துப் பேசுவது போல் உள்ளது; அதனால் மேலே குறிப்பிட்டபடி இது 'இடச்சூழல்' என்பதே பொருந்தும். எனவே, குறிப்பு என்றே தெய்வச்சிலையார் கூறியதோ, நச்சினார்க்கினியர் மறைமுகமாகக் காலம் என்று கருதுவதோ பொருந்தாது. உண்மையில் தெய்வச்சிலையார் உரை கொஞ்சம் மாறுபட்டது.

கல்லாடர், 'கூறுவான் கருத்தினை அச்சொற்களோடு சேர்த்தி நீயிர், நீ எனவும், ஒருவர் எனவும் மேலோதிய முறையானே திணையும் பாலும் உணர்ந்து கொள்க.'

என்று பொழிப்புரை எழுதியுள்ளார். இவர் கருத்துப்படி இடச்சூழலால் பால் விளங்கும் என்று ஆகிறது. இவருடைய உதாரணங்களும் அதே முறையில் உள்ளன. தெய்வச் சிலையாருடைய,

'சொல்லுவான் குறிப்பினோடு சேர்த்தி அவற்றின்பின் வரும் சொல்லால் 'உணர்க' என்ற பதவுரையே புதிதானது. இதையே பின்னும் விளக்கிக் 'குறிப்பினாலும் முறையினாலும் உணர்க' என்று தன்னுடைய கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். மேலே குறிப்பினால் பால் உணர்த்தப் படுவதற்குரிய உதாரணங்களை விவாதித்தோம். ஒருவர் என்ற குறிப்பினால் ஆண்பால் உணர்த்துவதற்கு 'ஒருவரை ஒருவர் சார்ந்தொழுகல்' என்ற உதாரணத்தையே கொடுத்துள்ளார். அந்த வகையில் பெண்பால் உணர்த்துவதற்கு 'வண்டு சுழல வருவார் ஒருவரைக் கண்டு கலங்கிற்று என் உயிர்' என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளார். இதுவும் சொற்சூழல் வகையைச் சார்ந்தது. ஏனெனில் வண்டு சுழல வருவார் என்பதால் பெண் என்று அறிந்து கொள்ள முடியும். எனவே குறிப்பு என்பது சொற்சூழலாக அமைந்துள்ளது. ஆனால் தெய்வச்சிலையார் 'முறை வந்த சொல்லி

ன்றால் பால் உணரப்பட்டன' என்பதற்கு வேறு உதாரணங்களைக் கொடுத்துள்ளார்.

'நீ அரசன், நீ குயத்தி, நீ கடல் என்பன முறைவந்த சொல்லினால் பால் விளங்கின. நீயிர் என்பதற்கும் இவ்வாறே உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க.... ஆயிழையார் ஒருவர், அயில் வேலார் ஒருவர் என்பவை சார்ந்த சொல்லாற் பால் உணரப்பட்டன.'

என்பது அவருடைய வாசகம். இவை சொற்சூழல் என்பது வெளிப்படை. அப்படியானால் ''இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன? அல்லது எப்படி இரண்டும் சொற் சூழலில் அடங்கும்?'' என்ற கேள்விகள் எழுகின்றன. 'நீ குயத்தி,' போன்ற உதாரணங்கள் பால் காட்டும் சொற்களைச் சூழலாகக் கொண்டவை. முன்னர்த் தேர்வுக் கட்டுப் பாட்டினால் சில வினைப் பகுதியும் பால்காட்டும் திறன் பெற்றவை என்று விளக்கப்பட்டது. அதனால் 'நீயே பிறர் நாடு கொள்ளுங் காலை'. . . , என்பது தேர்வுக் கட்டுப்பாட்டினால் பால் உணர்த்துகிறது. தேர்வுக் கட்டுப்பாடு என்பது வாக்கிய நிலையில்தான் அமையும்; தனிச் சொல் நிலையில் அமையாது. எனவே வாக்கியச் சூழலில் பால் உணர்த்துவதும் சொற்சூழல் என்று கருதலாம்.

உரையாசிரியர்கள் இடச்சூழல், சொற் சூழல், என்ற இரண்டு கருத்துகளைக் குறிப்பிட்டதால், அவர்களுடைய உதாரணங்கள் கொஞ்சம் மயக்கம் தருவனவாக உள்ளன.

தொல்காப்பியர் 'முன்னம்' என்பதைச் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் குறிப்பிட்டு (செய்யுளியல் 181.),

இவ்விடத்து இம்மொழி இவர் இவர்க்கு
உரிய வென்று
அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்
(செய்யுளியல் 199)

என்று விளக்கியுள்ளார். அதாவது 'இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத் தகுமெனக் குறித்து அவர்க்கு அம்மொழியை உரைப்பது முன்னம்,' என்னும்போது சமூக உறவில் உரையாடுபவர், உரையாடல், உரையாடுமிடம் ஆகியவை வரையறுக்கப் பட்டிருப்பதால் ஏதாவது ஒன்று குறைபட்டால் உய்த்துணர்ந்து கொள்ள முடியும்.[1] மேலும். உரையாடல் பொருளும் சமூக உறவு அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். இது இடச்சூழல் தான். ஆனால் பரந்துபட்ட நிலையில் பயன் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. தொல் காப்பியர் இதைச் செய்யுளியலில் இலக்கியப் பொருளுக்கு-பாடல் பொருளுக்கு உரியதாகக் கொண்டுள்ளார். ஆனால் இந்தப் பெரிய உண்மையை முன்னிலைச் சொற்கள் பால் உணர்த்தும் முறையை விளக்குவதற்குக் கையாண்டது பேச்சு மொழியிலும் சூழல் பயன்படுகிறது என்பதையே புலப்படுத்துகிறது. இதனால் தான் இன்றைய மொழியியலாளர் சாதாரண உரையாடலிலும் சொல்லின் பொருளைப் புரிந்து கொள்ளச் சூழல் உதவுவதாகக் குறிப்பிடுவார்கள். மேலும் 'சூழல்' என்பதைச் சமூக-பண்பாட்டு நிலைக்கும் நீட்டித்து மொழி ஆராய்ச்சிக்குப் பயன்படுவதாகவும் கொள்வார்கள்.

''சொற்களின் சூழலோடு இடச்சூழலையும் மொழியியலாளர் கருத்தில் கொள்ள வேண்டும். . . . அதாவது உரையாடல் அல்லது பேச்சு நடைபெறும் சூழல் இடச் சூழலைக் குறிக்கிறது. அதையே

1. Every spoken utterance occurs in a particular spatio-temporal situation which includes the speaker and hearer, the action they are performing at the time and various external objects and events. These may be 'deitic' features of the utterance which make reference to the situation in which it occurs.

—Lyons, Introduction to Theoretical Linguistics, 1968, P 413.

பேச்சு நடைபெறும் முழுப் பண்பாட்டுச் சூழலுக்கும் நீட்டித்துக் கொள்ளலாம். மொழிச் சூழல், மொழி அல்லாத சூழல் (இடச்சூழல், கலாச்சாரச் சூழல்) என்று அகலப் படுத்தியது சொல்லின் பொருள் ஆராய்ச்சியில் புதிய பாதையை வகுத் துள்ளது[2]''

என்ற உல்மனின் கருத்து, சூழலின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டும் எனவே தொல்காப்பியர் முன் னிலை பால் உணர்த்துவதற்குப் பயன்படும் என்று கூறிய 'முன்னம்' அதைவிடப் பரந்த நிலையில் பயன்படக்கூடிய ஒரு கோட்பாடு ஆகும்.

---

2. In addition to the verbal context, the linguist must also pay attention to the so-called 'context of situation....'. It means in the first place the actual situation is which an utterance occurs but leads on to an even broader view of context embracing the entire cultural back-ground against which a speech event has to be set. . . . (P 50) the widening of contexts, linguistic and colinguistic has opened a new horizon for the study of meaning.

—Ullmann, **Introduction to Semantics, 1962, P 51.**

# தமிழில் சில துணைவினைகள்

டாக்டர் கி. அரங்கன்
எம்.ஏ., பி.ஓ.எல்.



இவர் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சின்னசேலம் என்னும் ஊரில் பிறந்தவர். இவ்வூரிலேயே பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஓ, எல். பட்டமும், மொழியியலில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். பிறகு தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமுரிய இலக்கண வேறுபாடுகளை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றார். மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் மைய நிறுவனத்தில் 12 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றினார். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள லடாக் பகுதியில் பேசப்படும் புர்கி என்னும் திபத்தோ-பர்மிய மொழியை ஆராய்ந்து அம்மொழிக்கு இலக்கணம் ஒன்றை எழுதியிருக்கிறார். கடந்த ஓராண்டுக்கு மேலாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருக்குக் கோட்பாட்டு மொழியியலிலும் மாற்றிலக்கணத்திலும் மிகுந்த ஈடுபாடு உண்டு.

தமிழில் சில வினைகளை நாம் துணை வினைகளாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். வேண்டும், முடியும், கூடும்போன்ற வினைகளைத் துணைவினைகள்என மொழியியலாளர்களில் சிலர் கருதுகிறார்கள். இவை முதல் வினைகளாக அகஅமைப்பில் இருக்க இயலுமா என்பதை நாம் இக்கட்டுரையில் ஆராய்வோம். இவ்வாராய்ச்சியை மாற்றிலக்கணக் கோட்பாட்டிற்குள் நின்று ஆராய முயற்சி செய்வோம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை முதலில் எடுத்துக் கொள்வோம்.

(1) நான் வர முடியும்
(2) எனக்கு வர முடியும்
(3) நான் போக வேண்டும்
(4) அவன் நாளை வரக்கூடும்
(5) அப்பா இன்று வரலாம்.

இவ் வாக்கியங்களில் முடியும், வேண்டும், கூடும் முதலியவை துணை வினைகளாக உள்ளன. வாக்கியம் (5)ல், —லாம் என மொழியியலாளர்களில் சிலர் பிரிப்பார்கள். துணைவினைகளின் ஒரு பகுதியாக இவற்றைக் கருதுகிறார்கள்.

இங்குக் கொடுக்கப்பட்ட வினைகளை ஏன் துணைவினைகளாகக் கருதவேண்டும் என்பதை முதலில் பார்ப்போம். இவ்வினைகள் துணைவினைகளாகச் செயற்படும்

பொழுது முதல்வினை எச்சவடிவில் இவற்றிற்கு முன்பு வரும். இவ்வினைகள் மூன்று காலங்களையும் காட்டுவதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட வினைகள் தொடர்ந்து வருவதில்லை. இம்முறைகளில் இவ்வினைகள் முதல் வினைகளிலிருந்து வேறுபட்டு இயங்குவதால் இவற்றைத் துணைவினைகளாகக் கருதலாம். இவ்வாறு குறிக்கப்படுகின்ற வேறுபாடுகள் முக்கியமானவை. இவ்வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு மொழியை ஆராய்ந்தால் துணைவினைகள் அகஅமைப்பிலேயே பிரிக்கப்பட்டு விடும். இவ்வாறு பிரிக்காமல் இவற்றை முதல் வினைகளின் ஒரு கூறாக அடக்க முடியுமா என்பதைக் காண்பதுதான் இக்கட்டுரையின் மைய நோக்கம்.

வேண்டும், முடியும் போன்ற வினைகளைத் துணைவினைகளாகக் கருதினால் வாக்கியம் (3) ன் அக அமைப்பு படம் (6) ல் காட்டுவதுபோல் இருக்கும்.

(6)




**Mod** என்பது துணைவினைகளின் ஒரு உட்கூறு. துணைவினைகளை முதல் வினைகளின் ஒரு உட்கூறாகக் கருதினால் அக அமைப்புச் சிக்கலாக அமையும். படம் (7) இவ்வமைப்பைக் காட்டுகிறது.

(7)




**Aux** என்ற குறியீட்டின்கீழ்க் காலங் காட்டுகிற விதி மட்டும் தான் இருக்கும். **Mod** என்ற குறியீடு **AUX** என்ற குறியீட்டின்கீழ்க் காணப்படுவதில்லை.

படம் (7)ல் காட்டியிருப்பது போன்ற அக அமைப்பிலிருந்து புறஅமைப்பு எவ்வாறு வருவிக்கப்படுகிறது என்பதை முதலில் விளக்குவோம். சில தமிழ் வாக்கியங்களைக் கொண்டு இதை விளக்குவோம்.

(8) இராமன் வரலாம்

(9) நீ பள்ளிக் கூடத்திற்கு வர வேண்டும்.

(10) அவள் கல்லூரிக்குப் போகக் கூடும்.

வாக்கியம் (9)ஐ எடுத்துக்கொள்வோம். படம் (11) வாக்கியம் (9)ன் அக அமைப்பைக் காட்டுகிறது.

(11)




நீ பள்ளிக் கூடத்திற்கு வருவாய் $S_1$ என்ற குறியீட்டின்கீழ் உள்ள வாக்கியம் பெயராக்கமாக்கப்படுகிறது.

நீ பள்ளிக் கூடத்திற்கு வரு-வ்-ஆய் →
நீ பள்ளிக் கூடத்திற்கு வரல்

இவ்வாறு பெயராக்கம் செய்யப்பட்ட வாக்கியம் அது என்ற சொல் உள்ள இடத்தை நிரப்புகிறது. இவ்விதி செயல்பட்ட பிறகு நமக்கு நீ பள்ளிக்கூடத்திற்கு வரல் வேண்டும் என்ற அமைப்பை உடைய வாக்கியம் கிடைக்கிறது. வரல் வேறு விதிகளின்மூலம் எச்ச வினையாக மாற்றப்படுகிறது. நமக்கு இறுதியாக,

நீ பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும்

என்ற வாக்கியம் கிடைக்கிறது.

இவ்வாக்கியங்களின் அமைப்பை விளக்கும்பொழுது நாம் புதைந்த வாக்கியத்தை ஒரு மாற்றுவிதி மூலம் பெயராக்கம் செய்தோம். மற்றொரு மாற்றுவிதி மூலம் பெயராக்கம் செய்யப்பட்ட வினை எச்சமாக மாற்றப்படுகிறது. இவ்வாறு வாக்கியங்களைப் பெயராக்கம் செய்வதற்கு விளக்கம் கூற வேண்டும். எச்சமாகச் செயற்படுகின்ற வினையைக் கொண்ட வாக்கியமும் வினையைப் பெயராக்கமாக்கப்பட்ட வாக்கியமும் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவை. இத் தொடர்பை இலக்கணம் விவரிக்க முற்படுதல் நன்று. இதைத் தெளிவாக்க வேறு சில வாக்கியங்களையும் எடுத்துக்கொள்வோம்.

(12) அவன் என்னைப் பார்க்க வந்தான்

(13) அவள் என்னை எழுதச் சொன்னாள்

இவ் வாக்கியங்களையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்விருவகைப்பட்ட வாக்கியங்களுக்கும் இடையே உள்ள உறவு புலப்படும்.

(14) அவன் என்னைப் பார்ப்பதற்கு வந்தான்

(15) அவள் என்னை எழுதும்படி சொன்னாள்

இவ் வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அக அமைப்போடு தொடர்புடையன என்பது தெளிவு.

(16) அவன்#அவன் என்னைப் பார்—காலம்#அதற்கு வந்தான்.

(17) அவள்#நான் எழுது—காலம்#அதன்படிச் சொன்னாள்.

வாக்கியம் (12) எவ்வாறு வாக்கியம் (16) லிருந்து வருவிக்கப்படுகிறது என்பதைக் காட்டுவோம்.

அவன்#அவன் என்னைப் பார்—காலம்#அதற்கு வந்தான்—→

அவன்#அவன் :என்னைப் பார்ப்பது#அதற்கு வந்தான்—→

அவன் அவன் என்னைப் பார்ப்பதற்கு வந்தான்—→

அவன் என்னைப் பார்ப்பதற்கு வந்தான்—→

அவன் என்னைப் பார்க்க வந்தான்.

எச்ச வினையை வருவிக்கும்பொழுது பெயராக்க விதி செயல்பட வேண்டியதின் தேவையை இது சுட்டுகிறது. இத்தகைய விதியை உள்ளடக்கிய இலக்கணம் வாக்கியங்களுக்கு இடையே உள்ள உறவைக் காட்டுகிறது. பெயராக்க விதியின் தேவையை நாம் இப்போது புரிந்துகொள்ளலாம்.

படம் (11)ல் காட்டியதைப் போன்று அக அமைப்பில் துணைவினைகளை முதல் வினைகளின் ஒரு உட்கூறாகக் கருதும் பொழுது சில பிரச்சினைகளுக்கு நம்மால் தெளிவு காண முடிகிறது. தமிழில் எழுவாய்க்கும் வினைக்கும் எண், பால், திணை முதலியவற்றில் இயைபு உள்ளது எல்லோரும் அறிந்ததே.

(18) கண்ணன் நேற்று வாங்கினான்.

(19) நான் ஒரு கதை எழுதுகிறேன்.

(20) மாதவி கோவலனைப் பிரிந்தாள்.

ஆன், ஆள், ஏன் முதலிய விகுதிகள் வாக்கியத்தின் எழுவாயான கண்ணன், மாதவி, நான் ஆகிய பெயர்த் தொடரின் எண், பால், திணை முதலியவற்றோடு இயைவதை நாம் காணலாம். இவ்விதியை மீறிய வாக்கியங்கள் வழுவான வையாகக் கருதப்படும்.

*(21) தம்பி நேற்று வந்தாள்

*(22) நீ நாளை வருவான்

*(23) நான் நேற்று வந்தாய்

எழுவாய் அஃறிணையாகவும் காலம் எதிர்காலம் உணர்த்துவதாகவுமிருந்தால் விகுதி எதுவும் வினையோடு காணப்படுவது இல்லை.

*(24) அது வரும்

(25) இந்த நாய் உன்னைத் துரத்தும்

காலம் இறந்த காலமாகவோ நிகழ்கால மாகவோ இருப்பின், எழுவாயைக் குறிக் கின்ற விகுதி இருப்பது தெளிவு.

(26) அப்பேனா நன்றாக எழுதுகிறது

(27) இக்குதிரை நன்றாக ஓடுகிறது

வாக்கியங்கள் (26-27)ல் திணை, பால், எண் காட்டும் விகுதி புற அமைப்பில் காணப்படுகிறது. வாக்கியங்கள் (24-25)ல் இது காணப்படவில்லை. எழுவாய் அஃ றிணையாகவும் காலம் எதிர்காலமாகவும் இருக்கும்பொழுது வினையோடு திணை, பால், எண் காட்டும் விகுதி இருப்பதில்லை. ஆனால் எதிர்மறை வாக்கியங்கள் திணை, பால், எண் காட்டும் விகுதியைப் பெற் றுள்ளன.

(28) அது வராது

(29) இந்த நாய் உன்னைத் துரத்தாது

நாம் மேலே காட்டிய துணை வினைகளும் எதிர்மறையாக வரும்பொழுது திணை, பால், எண் சுட்டும் விகுதியைப் பெற்றிருக் கின்றன.

(30) இராமன் வரல் ஆகாது

(31) அவன் வர முடியாது

(32) அவள் வரல் கூடாது

புறநிலையில் வாக்கியங்கள் (30), (31), (32)ல் திணை, பால், எண் சுட்டும் —து என்ற விகுதி காணப்படுகிறது. இராமன், அவன், அவள் முதலிய பெயர்த்தொடர் கள் தான் எழுவாய் என்று குறிப்பிட்டால் —து என்ற விகுதி காணப்படுவதை எப்படி விளக்குவது? இவ் வினைகளைத் துணை வினைகளாகக் கொண்டு படம் (6)ல் காட்டியதுபோன்ற அக அமைப்பைத் தேர்ந்தெடுத்தால், அக அமைப்பிலும் புற அமைப்பிலும் இராமன், அவன், அவள் முதலிய பெயர்த்தொடர்கள்தான் எழுவா யாகச் செயற்படுகின்றன. படம் (7)ல் காட்டியது போன்ற அக அமைப்பைத் தேர்ந்தெடுத்தால். இப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காண முடியும். படம் (7)ல் காட்டிய அக அமைப்பை ஏற்றுக்கொள்வது என்பது இவ் வினைகளை முதல் வினைகளின் ஒரு உட்கூறாக இருக்கிறது என்ற முடிவை ஒத்துக்கொள்ள இட்டுச் செல்லும். வாக்கி யம் (31)ன் அக அமைப்பைப் படம் (33) காட்டுகிறது.

(33)




நாம் மேலே குறிப்பிட்டதுபோல் பெய ராக்க விதியால் புதை வாக்கியத்தைப் பெயராக்கம் செய்வதன் மூலம் நமக்கு அவன் வரல் என்பது கிடைக்கிறது. இது எழுவாயாக இயங்குகின்ற நிலையில்தான் திணை, பால், எண் இயைபு விதி செயல் படுகிறது. வாக்கியத்தின் இந்நிலையில் அவன் என்பது எழுவாயாக இல்லாமல் அவன் வரல் என்பது எழுவாயாக இருப்ப தால், து என்ற திணை, பால் இயைபு காட்டும் விகுதி வினையோடு காணப்படு கிறது. படம் (33)ல் காட்டிய அக அமைப்புத்தான் இதற்குத் தீர்வு காண முடியும்.

## முடிவுரை

தமிழில் உள்ள சில வினைகளை முதல் வினைகளாகக் கருதுவதா அல்லது துணை வினைகளாகக் கருதுவதா என்பது இக்கட்டு ரையின் மையப் பிரச்சினை. துணை வினை களாகக் கருதுவதற்குச் சில மேலோட்ட மான சான்றுகள் உள்ளன. ஆனால் முதல் வினைகளுக்கும், துணை வினைகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் காட்ட இவ்வாய்வு தவறி விடுகிறது. அதோடு திணை, பால், எண் இயைபில் காணப்படும் பிரச்சினைக்கு இவ்வாய்வால் தீர்வு காண முடியாது. ஆகையால் முதல் வினைகளின்

ஒரு உட்கூறாக அவற்றைக் கருதும்பொழுது மேலே கூறிய பிரச்சினை தீர்க்கப்படுகிறது. அக அமைப்பில் துணைவினை என்ற பாகு பாட்டையே நீக்க இயலுமா என்பது அடுத்தபடியாக நாம் எதிர்நோக்குகிற கேள்வி. தமிழில் உள்ள வினைகளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி இதற்கு விடை கூறும்.[3]

## குறிப்புகள்

1. இக்கட்டுரை என்னுடைய Models as Main verbs in Tamil என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.

2. டாக்டர் ஷீப்மேன் போன்ற மொழி யியலாளர்கள் அது முடியலாம் போன்ற வாக்கியங்களில்—லாம் என்று பிரிக்கிறார் கள். (Schiffman 1969)

3. முதல் வினைகளுக்குள் இவற்றை அடக்குவதா அல்லது துணை வினை களாகக் கொள்வதா என்று ஆராய்வது ஒரு நிலை. இரண்டாவது நிலையும் ஒன்று இருக்கிறது. இது இவ் வினைகள் எல்லா வற்றையும் ஒரு அளவுகோலில் (SCALE) வைத்து, சில வினைகள் முதல் வினைகளின் கூறுகளை அதிகமாகக் கொண்டுள்ளன என்றும் கூறுவார்கள். முதல்வினை என் பதும் துணைவினை என்பதும் அளவு கோலில் இரு புள்ளிகள். இத்தகைய அணுகுமுறைக்கு டாக்டர் அண்ணாமலை அவர்களின் ஆய்வைக் காண்க (Annamalai 1982)

## சுருக்கம்

S = Sentence; NP = Noun Phrase; VP = Verb Phrase ; Aux = Auxiliary ; Mod = Modals; Tus = Tense; Neg = Negation; V = Verb; Fut = Future; IJDL = International Journal of Dravidian Linguistics.

## உதவிய நூல்களும் கட்டுரைகளும்


Annamalai, E. (1982) 'Dynamics of verbal extension in Tamil' in **IJDL**, 11.1 pp. 22-166.

Rangan, K. (1970) 'Modals as main verbs in Tamil' in **Proceedings of the First All India Conference** of Linguistics, Poona.

Schiffman, H. F. (1969) **A transformational grammar of the Tamil aspectual system**, Seattle : Univ. of Washington.

# குறிப்பு வினையின் பாகுபாடு

டாக்டர் க. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., பிஎச்.டி.

இவர் தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றை அடுத்த பனையூரில் 29-6-1939இல் பிறந்தார்; அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர்ஆய்வு மையத்தில் 15 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றி, 1983 சூன் 23 முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். தொல்காப்பியத்தைப் பற்றியும், பொருளியல், அகராதியியல், வேற்றுமை இலக்கணம் ஆகிய மொழியியல் துறைகளைப் பற்றியும், பழந்தமிழ் அமைப்புப் பற்றியும் ஒரு நூலும் 42 கட்டுரைகளும் எழுதி வெளியிட்டுள்ளார்; தொல்காப்பியச் சொல்லடைவு ஒன்று உருவாக்கியுள்ளார்; தொல்காப்பியத்தை வடமொழிப் பாணினீயத்துடன் ஒப்பிட்டு அதன் தனித்தன்மையை நிறுவியுள்ளார்; தொல்காப்பியத்தின் அமைப்பு, பொருள் தொடர்பு, ஆய்வு முறை ஆகியவற்றை ஆராய்ந்து பிற நாட்டினர்க்கு அறிமுகப்படுத்தும் பணியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்.

தொல்காப்பியரும் நன்னூலாரும் குறிப்பு வினைகளைப் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தினர். ''ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும், ஏழாம் வேற்றுமையது நிலைப்பொருட்கண்ணும், ஒப்பின் கண்ணும், பண்பின் கண்ணும் என அப் பகுதிக் காலம் குறிப்பால் தோன்றும் (தொல், சொல், 213) என்று தொல்காப்பியர் வகைப்படுத்துகிறார். இவற்றுள் அடங்காதவற்றை 'அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள்பற்றி வருவனவும், அவைபோல்வன பிறவும் குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லும், காலம் குறிப்பான் உணரப்படும் (தொல், சொல், 214) என வகுக்கிறார். நன்னூலார் ''குறிப்பு வினை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறனடியாகத் தோன்றும்'' என்கிறார் (நன், 321). பழந் தமிழில் வழங்கும் குறிப்பு வினைகளை மொழியியற் கண்ணோட்டத்தில் சொல் லமைப்பு, இலக்கணக் கூறுகள் இவற்றின் அடிப்படையில் ஆராயும்பொழுது, வேறு சில வகைகள் நமக்குப் புலப்படுகின்றன.

1. கீழ்வரும் குறிப்பு வினைமுற்றுக் களை ஆராய்வோம்.

(அ) உரியன்
உடைய
கொடியை
நன்று

(ஆ) நெறித்து
புறத்தோன்
பொருள
அறிவினன்
செயற்கைய
அவர்கட்கு

மேலே கொடுக்கப்பட்டுள்ள இரு தொகுதிகளின் பகுதிகளைப் பிரித்து ஆராய்ந்தால் ஓர் உண்மை புலனாகும்.

(அ) உரி
உடை
கொடை
நல்

(ஆ) நெறி
புறம்
பொருள்
அறிவு
செயற்கை
அவர்

தொகுதி (அ)-வில் உள்ளவை வேறு எந்தச் சொல்வகையிலும் அடங்கவில்லை. நட, வா, பார், கேள் போன்ற வினைப் பகுதிகள் போலக் குறிப்புவினைப் பகுதிகளாக மாத்திரமே வருவன. ஆனால் தொகுதி (ஆ)வில் உள்ளவை பெயர்ச் சொற்கள். அவை அனைத்தும் நெறி, புறம், பொருள் போன்ற இயல்பான பெயரடியாகவோ அறிவு, செயற்கை, உரிமை, அவர் போன்ற பிற சொல்லடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்களை அடியாகக் கொண்டோ பிறந்தவை. எனவே இவ்வடிப்படையில் குறிப்பு வினைகளை இயல்புக் குறிப்பு வினைகள் என்றும், ஆக்கக் குறிப்பு வினைகள் என்றும் வகைப்படுத்தலாம். தொகுதி (அ)-வில் உள்ளவை இயல்புக் குறிப்பு வினைகள்; தொகுதி (ஆ)-வில் உள்ளவை ஆக்கக் குறிப்பு வினைகள்.

2. இயல்புக் குறிப்பு வினைகள் அனைத்தும் தமக்கென அடிச்சொற்கள் அல்லது பகுதிகளை உடையவை. அவ்வடிச் சொற்கள் வினைக்குறிப்பாயும் அதன் விகற்பங்களாயும் மட்டும் வருபவை. வேறு சொற்களின் அடியாகப் பிறந்தவை அல்ல. இத்தகு இயல்புக் குறிப்பு வினைப் பகுதிகளை மீண்டும் வகைப்படுத்தலாம். இவ்வடிகளுள் பெரும்பாலானவை பண்புப் பெயர் விகுதியாக மை ஏற்பன.

(எ.டு.) அண்மை
அருமை
இளமை
அன்மை
இன்மை
உண்மை

அன்ன, இன்ன, என்ன, ஏன, பிற போன்ற குறிப்பு வினைகளின் பகுதியாக வரும்.

அன் -
இன் -
என் -
ஏன் -
பிற -

போன்றவை மை விகுதி ஏற்காதவை.

மை விகுதி ஏற்கும் வினைக்குறிப்புப் பகுதிகளில் பெரும்பாலானவை பண்புப் பொருளில் வருபவை. செம், வெம், இன், அண், தண், அரும், இரும், பெரும், மெல், வல், வெள் போன்றவை பண்புப்பொருள் உடையவை.

உரி, உடை, உள், இல், அல் என்ற ஐந்து பகுதிகளும் மை விகுதி ஏற்பினும் பண்புப் பொருள் தருவன அல்ல. இவை தெரிநிலை வினைப் பகுதிகளோடு பெரிதும் ஒப்புமையுடையவை.[1] எனவே மை ஏற்கும் வினைக்குறிப்புப் பகுதிகளைப் பொருள் அடிப்படையில் பண்புப் பகுதிகள் என்றும், பண்பல் பகுதிகள் என்றும் பகுக்கலாம்.

மை விகுதி ஏற்கும் குறிப்பு வினைப் பகுதிகள் வேறு சில இலக்கணக் கூறுகளின் அடிப்படையிலும் மை விகுதி ஏற்காதனவற்றிலிருந்து வேறுபடுகின்றன. இவை தெரிநிலை வினைப்பகுதிகளின் பண்புகள்

1. உரி, உடை, உள் இவற்றிற்கு இணையான ஆங்கிலச் சொற்கள் முறையே belong, have, be ஆகியவை காலங்காட்டும் தெரிநிலை வினைச்சொற்கள் என்பது உட்கொள்ளத்தக்கது.

பலவற்றைக் கொண்டுள்ளன. தெரிநிலை வினைப் பகுதிகள் பெயருடன் சேர்ந்து வினைத் தொகையால் உருவாகின்றன.

எ. டு. அழிபடை
கொல்யானை
அதுபோல,

இவ் வினைக் குறிப்பு பகுதிகள் பெயர் களுடன் கூடிப் பண்புத்தொகையாய் உருவாகின்றன.

எ. டு. செந்தமிழ்
அருமரபு
திண்டோள்
பொருள்
அல்வழி

மை விகுதி ஏற்பவை ஏற்காதவை இரண்டிலிருந்தும் குறிப்புப் பெயரெச் சங்கள் பிறந்தாலும் குறிப்பு வினையெச்சம் மை விகுதி ஏற்கும் பகுதிகளின் அடியாகவே பிறக்கின்றன.[2]

எ. டு. இனிது
பெரிது
தொன்று
நன்று

மை விகுதி ஏற்காத வினைக் குறிப்புப் பகுதிகளும் பொருளடிப்படையில் பண்புப் பகுதிகள், பண்பல் பகுதிகள் என இருவகை யாய்ப் பிரிந்தன.

மேலே காட்டிய அன், இன், என், ஏன், பிற- போன்றவை பண்பல் பகுதிகள். இவையே பெரும்பான்மை எனினும் தெற்று என்ற குறிப்பு முற்றில் பகுதியாக வரும் தென்- என்பதும், கருமை என்ற பொருளில் வரும் மாயன், மாயோய் போன்றவற்றின் பகுதியாகிய மாய் என்பதும் பண்புப்பகுதி கள். இவை மை விகுதி ஏற்காவிட்டாலும் பண்புப் பொருள் தருபவை.

எனவே இயல்புக் குறிப்பு வினைப் பகுதிகளை மை விகுதி ஏற்றல், ஏலாமை என்ற அடிப்படையில் இரண்டு வகைப் படுத்தலாம். இவ்விரண்டும் பொருளடிப் படையில் பண்புப்பகுதிகள், பண்பல் பகுதி கள் என இருவகைப்படுகின்றன என்பது தெளிவு.

3. பெயர்களின் அடிப்படையாகப் பிறக்கும் ஆக்கக் குறிப்பு வினைகளை, பொருள், இலக்கணக் கூறுகளின் அடிப் படையில் (தொல் சொல் 213)—

(1) உடைமைப் பொருளில் (2) இடப்பொருளில் வருபவை என இருவகைப் படுத்தலாம். இவற்றுள் உடைமைக் குறிப்பு வினைகள் பின்வரும் சொல்லமைப்பை உடையவை:

பெயர் — (சாரியை — எண், பால், இடவிகுதி.

இவ்வமைப்பில் சாரியை சிலவற்றில் வரும்; சிலவற்றில் வராது.

எ. டு. அடி-த்து
கச்சு-இன்-அன் → கச்சினன்
அறிவு-இன்-அள் → அறிவினள்
அவர் - அது → அவரது
தம்-அ → தம

இங்குக் குறிப்பிடத் தக்கது இடப்பெய ரல்லாத மற்றப் பெயர்களே உடைமைக் குறிப்பு வினைகளின் பகுதியாய் வரும். இடப்பெயர்களும், காலப் பெயர்களும் உடைமைப் பொருளில் வருவதில்லை.

இடப்பொருள் குறிப்பு வினைகள் இரு வகை அமைப்பை உடையவை.

(1) இடப்பெயர் / காலப்பெயர் } (சாரியை) — எண், பால், இடவிகுதி

(2) இடப்பெயரல் பெயர்—(சாரியை)— இடப்பொருள் உருபு—எண், பால், இடவிகுதி

எ.டு. (1) அகம்-அத்து-அர் → அகத்தர்
ஆதிரை-ஆன் → ஆதிரையான்

(2) அவர்-கண்-த்து → அவர் கட்டு நூல் - இன் - ஆன்-அ → நூலி னான.

4. குறிப்பு வினையின் வகைகளைப் பின்வருமாறு வரைபடம் மூலம் காட்ட லாம்:

---

2. இவ்வகையிலும்கூட மிகச்சில பகுதிகளிலிருந்தே குறிப்பு வினையெச்சங்கள் பிறக்கின்றன.


குறிப்பு வினை
இயல்புக் குறிப்பு வினை
(தனிப்பகுதி உடையவை)
ஆக்கக் குறிப்பு வினை
(பெயர் அடியாகப் பிறப்பவை)
மை விகுதி
ஏற்பன
மை விகுதி
ஏலாதன
பண்புப் பகுதி
பண்பல்
பகுதி
பண்புப்
பகுதி
பண்பல்
பகுதி
உடைமைப்
பொருளன
இடப் பொருளன
இடப் பெயர்
அடியாய்ப்
பிறப்பவை
இடப் பெயர்
அல்பெயர்
இடஉருபு
பெறுபவை

# மாணவர்க்கேற்ற இலக்கணத் தமிழ்

இலக்கணப் புலவன் த. சரவணத் தமிழன்

இக்கட்டுரையாளர் தஞ்சாவூரைச் சார்ந்த கரந்தைக்கு அருகிலுள்ள காந்தாவனத்தில் பிறந்தார். கரந்தைப் புலவர் கல்லூரியில் பயின்று புலவர் பட்டம் பெற்றவர். திருவாரூரில் திரு. வி. க.வின் சிலையை அமைத்தவர். ''இயற்றமிழ்ப் பயிற்றகம்'' என்னும் மாலைநேரப் புலவர் கல்லூரியை நடத்தி வருபவர். ''தமிழ் நூல்'', ''யாப்பு நூல்'' என இரண்டு இலக்கண நூல் களை வெளியிட்டவர். இப்பொழுது அம்மையப்பன் அரசினர் உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## எழுவாய் :

கரந்தைத் தமிழ்ப் புலவர் கல்லூரியின் மேனாள் மாணவனாய யான், நயன்மைக் கட்சி உறுப்பினராகிவிடாமல் நயன்மை (நீதி)காத்த உமாமகேசுவரனாரின் எதிர் காலக் கனவுகளில் பூத்த மலர். மலருக்கு மணம் பரப்பும் துணையான், திருவாரூரில் 15 ஆண்டுகளாகக் குடியிருந்து சுற்றுப்புறப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணி யாற்றிப் பள்ளிப்பணியாம் எந்திரச் சுழற் சிக்கிடையே, மாலை வேளைகளில், இயற் றமிழ்ப் பயிற்றகம் என்னும் அமைப்புக் கண்டு, இதுவரை 15 ஆசிரிய மாணவர்க்கு இலக்கணப் பாடத்தைப் பயிற்றியதால் பெற்ற பட்டறிவுகளால் 800 ஆண்டு களாகத் தேங்கிப்போயிருக்கும் தமிழிலக் கணத்தின் 5 கூறுகளில் எழுத்து, சொல், யாப்புக் கூறுகளைப் புதுக்கிக் கற்று (நந்திக் கலம்பகம் - நுவன்று இயற்றுதல்) முனைவர் ஆய்வுக்கு மூலமாக்கியுள்ளேன். அதற்குப் புலவ மாணவர்களின் ஐய வினாக்களே ஆய்வுக்கணைகளாக மாற வாய்ப்பாயின.

## ல-ள-ழ- பெயர் :

இலக்கண நூல்களில் இடம் பெறாமற் போயினும் ஒரோவழி உரையாசிரியர் குறிப் புகள், பாடம் பயிற்றாசிரியர் வாயாடல்கள் இவற்றான் 'ன-றன்னகரம், ண-டண்ண கரம், ந-தந்நகரம், ர-இடையினம், ற-வல்லினம்' என்ற செவியாரல் இருப்பினும், ல-ள-ழ- விற்கு இன்மை ஏன்? ஒருமுறை

கருத்துரை தரும்போது ளகரம் உள்ள சொல்வர, மாணவர் 'எள்ளகரம்' என வினவ, யான் 'பள்ளிக்கு வரும் ளகரம்'




எனப் பகர,மாணவரோ — எப்ப

எனக் கடாவியதும்தான் யான் விழித்தேன். பின்பே எழுத்துப் பிறப்புவழி ல-ஒற்றல், ள-வருடல், ழ-சிறப்பு எனப் பெயர்தந்து தமிழ் நூலில் நூற்றியற்றினேன். இஃது எழுத்தில் நிகழ்ந்த நேர்ச்சி.

## செய்யும்- வாய்பாட்டு வினைமுற்று :

செய்யும் என்னும் வாய்பாட்டில் சொல்லிலக்கணத்தில் பெயர் எச்சமும் வினைமுற்றும் ஆய இருவகை உண்டு. ஏட்டுச்சுவடித் தேட்டாளர் உ. வே. சா. தம் நினைவுமாலையில், திருநெல்வேலிப் புலவர் ஒருவர் அரங்கேற்றப் புகுந்த 'நெல்லை அந்தாதி' முதற்பாட்டு முட்டைக் குறித்தது நினைவுறத் தக்கது.

'தேரோடும் வீதியெலாம் செங்கயலும் சங்கினமும்
நீரோ(டு) உலாவிவரும் நெல்லையே—காரோடும்
கந்தரத்தர் வந்தரத்தர் கந்தரத்தர் சந்தரத்தர்
சந்தரத்தர் வந்தரத்தர் காப்பு'

ஓடும் என்பதை எச்சமாகக் கொண்டு அழுக்காற்றுப் புலவன் வினவ, அவைநலங் கருதி அடங்கிப்போன பெரும்புலவரின் எச்சம் (மைந்தன்) முற்றாக்கி அரங்கேற்றிய அழகே அழகு.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே

என்னும் நன்னூல் நூற்பா தொல்காப்பிய மறு பதிப்பாகி வழக்கிழந்த பின்,

அஃறிணை ஒருமை பன்மையில் மட்டுமே வரும்

என்று வரையறுத்தேன். அக்கால், பயிற்றக நண்பர் ஒருவர் பாட வேளையில்

'அம்மா வரும்'
'அண்ணன் வரும்'

என வருவன உயர்திணை ஒருமைக்கும் -அஃதாவது ஆண்பாற்கும், பெண்பாற்கும் ஏற்கும் தானே எனக் கேட்டார். ஆயின் பிறிதொரு நண்பர்

'அம்மா வந்தது'
'அண்ணன் வந்தது'

என இறந்த காலத்திற் கூறுங்கால் அஃறிணைப் படுவதைக் காட்டினார். நான் இரண்டையும் இயைபுறுத்தி,வரும் என்பது செய்யும் என்னும் வாய்பாடுபோல் தோன்றினும், பெண்மையை அவள் என்ற ழைப்பது இழிவழக்காகி 'அது' என்றழைப் பது பொதுவழக்கான காலத்தில் எழுந்த வழக்கிது; அதுபோல் ''சில்லாண்டு மூத்த அண்ணனை 'அவர்' என்றும் அழைக்க முடியாமல், அவன் என்றும் இழிக்க முடி யாமல் நடுவழக்காக, 'அது' என்று குறித்த காலத்து வழக்கிது'' என்று தெளிவுபடுத்தி னேன்.

## யாப்பில் :

ஆறாம் இலக்கணம் என்று தலைப்புத் தந்த தண்டபாணி சுவாமிகளால் தழுவப் பட்டிருக்க வேண்டிய-பொருள் இலக்கணப் புலவர் வைத்தியநாதரால் இயற்றப்பட்ட இலக்கண விளக்கத்தில் ஓரளவு இவ் வுண்மை உணரப்பட்டது. பாட்டியல் இலக் கனத்தை வார்ப்பியல் என்னும் பெயரில் மூன்றாம் இயலாய்க் கொண்ட யாப்பு நூலில் சீர் வாய்பாட்டை முற்றும் களைந் தேன்.

நேர் நேர் — தேமா
நிரை நேர் — புளிமா
நேர் நிரை — கூவிளம்
நிரை நிரை — கருவிளம்

என்னும் வாய்பாடுகள் கானகச் சூழலில் அமிதசாகரர்க்கு எழுந்த எடுத்துக் காட்டுதலோடு, 'ஈரசையில் முடிவசை என்ன' என்பதை உணர்த்தும் சுருக்க வாய் பாடே எனினும், இக்கால மரபிலக்கணம் அறிய விரும்புவார்க்குச் சுமையாதலின், அவற்றை நீக்கி அசை வாய்பாட்டானே சீர் வரையறை செய்வித்தேன்.

பயனிலை :

இலக்கண பயிற்சி இக்கால் நலிந்தது. தனி இலக்கணப் பயிற்சி பிறதுறை மாண வர்க்குத் தேவை இல்லை எனினும், தமிழ்த் துறை இலக்கிய இளவல், முதுகலை மாணாக்கர்கள் இலக்கணத் துறையைக் கருத்தூன்றிக் கற்க வேண்டும். அண்மை யில் நடத்திவரும் அணி நூல் ஆய்வின் போது திருக்கோவையார் இலக்கியமன்று; புறப்பொருள் வெண்பாமாலை போலக் கொளுவும், இலக்கியக் கொழுவும் கொண்ட அகப்பொருள் இலக்கண நூல் என்பது புலனாகிறது. எனவே, அது போலும் புதிய மெய்ம்மைகள் தலைப்படு வாராக.

# மொழிச் செருகலும் திருகலும்

கோவை இளஞ்சேரன்

இவர் முகவை மாவட்டம் சுல்லல் எனும் ஊரில் 4-1-1923-இல் பிறந்தவர்; 33 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்; நாகையில் தமிழ்ச் சங்கம் நிறுவி, மறைமலையடிகளார் சிலையை நாட்டியவர்; பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்குக் கருத்துரை வழங்கியவர். ''கோவை இளஞ்சேரன் கவிதை'' முதலாக, ''இலக்கியம் ஒரு பூக்காடு'' வரை பதினைந்து நூல்களை எழுதியவர்; ''கவிஞர்கோ'', ''நல்லா சிரியர்'', ''சிலம்புச் சேரனார்'' ஆகிய பட்டங்களைப் பெற்றவர். இவர் இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பதிப்புத்துறையில் பணியாற்றி வருகிறார்.

திருமரைக்காடு என்று எழுதினால் ரகரம் தவறாக உள்ளது என்பர் புலவர். திருமறைக்காடு என்றால் எந்தக் காடு என் போரும், அதுதான் வேதாரணியம் என்றால் புரிந்து கொள்வோரும் மிகப் பலர்.

மறை-வேதம்; காடு-ஆரணியம் என வேதாரணியம் பிறந்தது. தேவார மூவரும் மறைக்காடு என்றே பாடினர். அவர்க்கு முன்னர் வேதாரணியம் இல்லை. பின்னர் தான் அதன் வடமொழி பெயர்ப்பாக வேதாரணியம் முளைத்தது. ஆனால், வேதாரணியத்தைத்தான் தமிழில் 'மறைக் காடு' என்று சொல்வதாகக் கருதும் தமிழர் மிக மிகப் பலர்.

மறைக்காடு (வேதாரணியம்) எனப் பெயர் பெற்றது எவ்வாறு?

மறை சிவபெருமானை வழிபட்டதால் அப் பெயர் வந்தது என்றனர். அவ்வாறா யின் மறை வழிபட்டது காட்டையா? காட் டொடு பொருந்திய ஊரகத்தே அமர்ந்த சிவபெருமானையா? கோவிலில் அமர்ந்த சிவனைத்தான் மறை வழிபட்டது. கோவிலிருந்தால் குடி உண்டு; குடியிருந் தால் ஊருண்டு. மறை வழிபடுவதற்கு முன்னர் ஊர் இருந்தது. அவ்வூர்க்கு ஒரு பெயர் இருந்திருக்குமன்றோ? அப்பெயர் யாது?

அதுதான் மரைக்காடு.

மரைக்காடு என்றால்....?

மரை என்பது ஒருவகை மான். அம் மான் நிறைந்திருந்த காடு 'மரைக்காடு' எனப்பட்டது. அஃதே ஊர்ப்பெயராயிற்று.

இன்றும் அக்காட்டில் மான்கள் அதிகம் உள்ளன. விலங்குகளின் பெயரால் கா, காடு பெயர்பெறுதல் இயல்பான வழக்கு; ஆனைக்கா போல.

மறையின் பெயரால் காடு பெயர் பெறுதல் பொருந்தாத ஒன்று. ஆனால், ஆயிரம் ஆண்டுகளாகப் பொருந்தி வந்தது எவ்வாறு? மொழிச் செருகல் பொருந்தாதையும் பொருந்தவைக்கும் என்பதற்கு இஃதொரு சான்று. வேதாரணியம் என்னும் வடமொழியைச் செருகி மரைக்காட்டை உருவியதையும் நோக்க வேண்டும்.

இவ்வாறு வடசொல்லை மொழிமாற்றாகச் செருகினர், அச்சொற்கு ஒரு தெய்வத் தகுதி கூறினர். அதில் வீழ்ந்த தமிழ்ப்புலவர் கைகுவித்து வணங்கி, அச் சொல்லை ஆண்டனர். காலப் போக்கில் மூலத் தமிழ்ச் சொல் ஆளுகையற்றுத் தானாகவே உருவிக் கொண்டது.

இச்செயல் திட்டமிட்டு நிகழ்ந்தது. மொழிச் செருகல் மொழி ஆளுமையாயிற்று. இருக்குமறை காலம் முதல் இச் செருகல் தொடங்கியது. சங்கப் பாடல்களில் அள்ளித் தெளித்தாற்போல் இச் செருகலைக் காண்கிறோம்.

மொழிச் செருகல் பையப் பையத் தமிழ் மரபுகளை மாற்றிற்று. நல்ல இன மரபுகளைப் புரட்டிப். போட்டது இம்மாற்றம் வலுப்பெற்றதைச் சிலப்பதிகாரம் நன்கு அடையாளம் காட்டுகின்றது.

சங்க காலத்தில்,

ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்
—என 'ஆ' இருந்தது;

பசு இல்லை. சிலப்பதிகாரத்தில்,

ஆ காத்தோம்பி ஆப் பயன் அளிக்கும்
—என ஆவும் இருந்தது.

''பசு பத்தினிப் பெண்டிர்'' எனப் பசுவும் புகுந்து கொண்டது. கூடவே பத்தினியும் புகுந்து கொண்டது. புகுந்த பசு காலப் போக்கில் 'ஆ'வை மேய்ந்து விட்டதே! போகப் போக 'ஆ' உருவிக் கொண்டது; அறவே வழக்கற்றுப் போயிற்று.

இதுபோன்று சிலம்பில்,

திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும்
—எனத் திங்களும் ஞாயிறும் கதிர்விட்டுக் கொண்டிருக்கும் போதே,

சோமகுண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கி,
—எனச் சோமனும் சூரியனும் தோன்றினர்.

மா மறை முதல்வன்
—என்ற மறை முதல்வனோடு,

வேத முதல்வன்
—என வேதம் முதல்வன் ஆனான்.

''தீ வலஞ் செய்வது'', ''தழல் எரி அகமூழ்க'', ''அழல் மண்டிற்றே''
—எனத் தீயும் தழலும் எரியும் அழலும் ஒளிதந்து கொண்டிருக்க,

எரி அங்கி வானவன்
—என அங்கி எரியோடு இணைந்து செருகிக் கொண்டது.

அறம் புரி மாந்தர்
தருமம் சாற்றும்
—என அறத்தொடு தருமமும் நடந்தது.

வாழ்த்துவாள் தேவமகள்
மங்கலத்து ஆசியர்
—வாழ்த்துக்கும் ஆசி கிடைத்தது.

இன்புறு தங்கணவர்
போகம் செய் பூமி
—என இன்பத்தோடு போகம் துய்க்க,

''மணம் தரு பொழிலே'', ''அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்''
—மணம் மணக்கும் போதே வாசம் வீசிற்று.

''மங்குல் வானத்து'', ''விண்ணுறை விற்போல்''
—என வானமும் விண்ணும் தெரிந்த போதே, ''அந்தர சாரிகள்'' என அந்தரம் நேர்ந்தது.

''எண்பேராயம்'' என எட்டு எண்ணப் படும் போதே ''அட்டமி ஞான்று'' என அட்டம் கொட்ட மடித்தது.

''கார் எழுதி''க் கார் கருத்தபோதே, ''நீல மேக மூட்டமும் கூடியது. இவற்றைப் பார்த்து ''விம்மிதம் எய்தி'' வியந்தபோது, ''பெருமகன் அதிசயம்'' என அதிசயம் பிறந்தது.

இறுதியாக ''இறுதியில் இன்பமும்'' ''அந்தமில் இன்பம்'' என அந்தம் ஆயிற்று.

இவை சில. மேலும் இருப்பவை பல. சிலம்பு காட்டும் அடையாளம் எதனைக் குறிக்கின்றது? உண்மை உருவம் இருக்கும் போதே பொலியும் செருகப்பட்டதை அன்றோ? இல்லாததை எடுத்துக்கொண் டால் செருகலாகாது. இருக்கும் போதே கடன் வாங்கினால் என்ன பொருள்? 'இடத் தைப் பிடித்துத்தான் மடத்தைப் பிடுங்கு வர்' என்பதன் தோற்றுவாய் இவை.

இவற்றோடு இடம் பிடிக்காமல், தாய்ச் சொல் தனித்து முழங்கியதையும் சிலம்பு ஒலிக்கின்றது:

''உள்வரி'' இருக்கிறது; வேடம் புனையவில்லை.

''அகவை'' வளர்ந்தது; வயது ஆக வில்லை.

''அமளி'' விரிந்தன; ஆசனம் போட வில்லை.

''அயிர்'' இனித்தது; சருக்கரை இனிக்கவில்லை.

''அஞர்'' வருத்தினாலும் கஷ்டம் இல்லை.

''ஒப்பனை'' கவர்ந்தும் அலங்காரம் கவரவில்லை.

''உவா'' தோன்றியும் பௌர்ணமி வர வில்லை.

சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர், மேலே கண்ட வேடம் முதலிய பற்பல வடசொற் கள் செருகப்பட்டன. ''உள்வரி'' முதலிய தாய்ச் சொற்கள் உருவிக்கொண்டன; அறவே வழக்கற்றுப் போயின. எத்துணை ஆயிரம் சொற்களை இவ்வாறு இழந்திருக் கின்றோம்!

இச்செருகலும் அதன்வழி உருவலும் நிகழ்ந்தபோதே, சில திருகலும் நிகழ்ந்தன. ஆம்; தமிழ்ச் சொற்களைத் திருகி மாற்றி னர். அதிலும் தமிழ்ச்சொல்லுக்கு முத் திரையாகிய ''ழ''கரம் அமர்ந்த சொற்கள் திருகப்பட்டதை அவலம் என்றே குறிக்கத் தோன்றுகின்றது.

மலரும் மங்கையும் உடன் பிறப்புகள் எனலாம். பெண் பக்குவப்பட்டால் ''பூப்பு அடைந்தாள்'' எனப் பூத்ததாகச் சொல்லி னர். பூப்படைந்தவள் முல்லைக்கொடியை நட்டு வளர்ப்பாள். அது நனை தோன்றி, அரும்பி, அகைத்து, முகிழ்த்து மலரும்; மணக்கும். பூப்படைந்த பெண்ணும் மலர்ந்து மணம் பெறுவாள். அதனை அடைமொழியுடன் திருமணம் என்றனர். திருமணம் அமையும் வாய்ப்பான நாளை யும் நேரத்தையும் குறிக்க ஒரு சொல் கண் டனர். மலர்த் தொடர்பிலேயே அதனைக் கொண்டனர். மணம் தரும் மலருக்கு முன் பருவம் முகிழ்; அச்சொல்லைக் கொண்டு திருமணம் கொள்ளும் வாய்ப்பான நேரத்தை ''முகிழ்த்தம்'' என்றனர். 'முகிழ்த்தம்', 'முழுத்தம்' என மருவியது.

சிலம்பில் இதன் அடையாளம் தெரி கின்றது.

வடபுலத்தின்மேல் செல்லுதற்குரிய நல்வாய்ப்பான நாளைச் சேரன் செங்குட்டு வனுக்கு அறிவிக்கக் கணி எழுந்தான். 'நின் பால் தோற்ற வடபுலத்து மன்னர் உனக்குக் காணிக்கை கட்ட வரும் நல்ல நாள் இது' என்று சொல்பவன்,

> திருமலர்த் தாமரை சேவடி வணங்கும்
> முழுத்தம் ஈங்கிது

—என்றான். இம் முழுத்தம் 'முகிழ்த்தம்' என்பதன் மரூஉ. இம் முழுத்தத்தையும் திருகினர்; 'முகூர்த்தம்' என்றனர். ''ழ'' கரத்தைப் படிக்க இயலாத வடவர்

''ர'' கரம் ஆக்குவர். அமிழ்தத்தை அமிர்தம் என்றனர். இதுபோன்றே 'முகிழ்த்தம்'—'முகூர்த்தம்' ஆக்கப்பட்டது. இன்று முகிழ்த்தம் என்றால் விளங்குமா? விளங்கினாலும் 'முகூர்த்தம்' என்னும் வடசொல்லின் மாற்றாகவே கருதுவர். வந்ததை வரவேற்று உடையதை மறந்தனர் தமிழர். இதனைச் சிலம்பு வரலாறே சொல்லாமற் சொல்கின்றதே!

மாதவி மரகத மாலையைப் பரிசாகப் பெற்றாள். அவள் தாய் சித்திராபதி. இவள் கூனி கையில் மாலையைக் கொடுத்து நகர நம்பியர் திரியும் கடைத்தெருவில் விற்பதுபோல் நிறுத்தினாள். 'மாலையை விலைக்குப் பெறுபவன் மாதவியை அடையலாம்'' என அறிவித்தாள். கோவலன் பெற்றான்; கவர்ச்சிக் கன்னி மாதவியை அடைந்தான். அவளை 'விடுதல் அறியா விருப்பினன்'' ஆயினன். ஆகி, ''வடு நீங்கு சிறப்பிற்றன்'' மனை(கண்ணகி)யகம் மறந்தான். இது சிலம்பு வரலாறு. இவ் வரலாறு போன்றே மொழிச்செருகல் வரலாறும் அமைந்தது.

கோவலன்—தமிழர்
மாதவி—வடமொழி
கண்ணகி—தாய்மொழி
சித்திராபதி—மாதவியைச்செருகியவள்

மாதவியாம் வடமொழியை ஏற்றுக் கண்ணகியாம் தாய்மொழியை மறந்தனர் தமிழர்!

இவ்வாறு கூறுவதால் வடமொழி தாழ்ந்தது என்பது கருத்தன்று. மாதவி தாழ்ந்தவள் அல்லளே! கலையரசி; கற்புடைய கலையரசி! வடமொழியும் கலை மொழிதான்; இலக்கியக் கலைமொழிதான். உலகளவில் சிறப்புடைய மொழிதான். இங்கே மற்றைத் தாய்மொழியில் செருகிய செயலைத்தான் நோக்குகின்றோம்; குற்றம் என்கின்றோம். சிலம்புப்படி குற்றத்திற்குரியவர் யார்? பரிச மாலையைக் கடைவீதியில் விலைகூறிக் கோவலனுக்கு வலைபோட்ட சித்திராபதி பரத்தைத் தொழிலில் கைவந்தவள். சித்திராபதி கோவலன் குடும்பத்தில் செருகிய செருகல் கண்டனத்திற்குரியது அன்றோ? அவளது செருகல் சோழமன்னனுக்கு அடுத்த தகுதியில் வாழ்ந்த பெருவணிகர் குடும்பத்தை உருவ வைத்துவிட்டதே! அக் குடும்பம் உருக்குலைந்து போயிற்றே! மொழிச் சித்திராபதிகளின் செருகலும் உலக முதன் மொழி எனத்தக்க செந்தமிழ்க் குடும்பத்தையும் உருவிவிட்டதே!

இம்மொழிச் செருகலும் அதன்வழி உருவலும், மற்றொரு வழியாம் திருகலும் எப்படி நிகழ்த்தப்பட்டன என்பதற்கும் சிலம்பு சான்று பேசுகின்றது.

'கோவலன்' என்னுஞ்சொல் சான்றாகின்றது.

'கோ' என்றால் அரசன்; அது ''ன''கரம் ஒற்றிக் 'கோன்' ஆகும். 'அன்' விகுதி சேர்ந்தால் 'கோவன்' ஆகும். இதன் மற்றொரு வளர்ச்சி 'கோவலன்'.

அவ்வளர்ச்சிச் சொல்லின் வரலாற்றை அறியக் கோவலன் குடும்பத் தகுதியைக் காணவேண்டும். கோவலனது முன்னோன் ஒருவன் இப்பெயர் பெற்றவன். வழிவழியாக இக்குடும்பம் மன்னனுக்கு அடுத்த தகுதி பெற்றிருந்தது.

> ''பெருநில முழுதாளும் பெருமகன் (சோழ மன்னன்) தலைவைத்த (தன் அரச குடிக்கு அடுத்த தலைமைக் குடியென்று சிறப்புறச் செய்து வைத்த) ஒருதனிக் குடி'' கோவலன் குடி.

மன்னன் குடிக்கு அடுத்த செல்வத் தகுதி கொண்ட குடி. மன்னன் என்னும் ஆட்சித்தகுதி இல்லை. அரசன் அல்லன். அதாவது கோ அல்லன். மற்ற வகையில் எல்லாம் உள்ளவன். கோ + அல்லன் என்னும் சிறப்புப் பெயரே, கோ+அலன்= கோவலன் என்னும் பெயராயிற்று.

ஆவைக் குறிக்கக் 'கோ' என்னும் சொல்லைச் செருகினர். அதனைக் காப்பதில் வல்லவர் 'கோவலர்' எனப்பட்டனர். இச்சொல் அமைவதற்கு முன்னர் 'ஆயர்' என்னுஞ் சொல்லே அவரைக் குறித்தது. 'ஆ' விற்கு உரியவர்' என்பது அதன் பொருள். அச்சொற்கு மாற்றாகக் கோவலர் புகுத்தப்பட்டது. கோவைப் பாலிப்பவன் 'கோபாலன்' எனப்பட்டான். சிலம்பில் வரும் கோவலன் வணிகக் குடியினன்.

எனவே, கோபாலன் வேறு; கோவலர் வேறு. இங்கு எடுத்துக்காட்டப்பட்டது 'கோவலன்.' சிலம்புத் தலைவன் கோவலன் என்னுஞ் சொல்லுக்கும் ஆயரைக் குறிக்கும் கோவலர் என்னுஞ் சொல்லுக்கும் பொருட் டொடர்பு இல்லை என்பதை உணர்ந்து மேலே செல்ல வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் அதன் தலைவன் 'கோவலன்' என்றே யாண்டும் குறிக்கப் பட்டுள்ளான். ஓரிடத்தில் மட்டும் வேறு பெயரால் அழைக்கப்படுகின்றான்.

மதுரைப் புறஞ்சேரியில் கவுந்தியுடன் கண்ணகி, கோவலன் தங்கியுள்ளனர். மாடலன் என்னும் மறையோன் அங்கு வருகின்றான். அவன் கோவலனை நன்கு அறிந்தவன். யாவற்றையும் இழந்தவனாக வந்துள்ள அவனைக்கண்டு மிக அவலித்தான். கோவலனது பெருமைகளையெல்லாம் பேசினான். 'யானறிய இப்பிறப்பில் நீ நல்வினைகளையே செய்துள்ளாய். முன்செய்த தீவினைபோலும் இவ்வாறு ஆனாய்'' என்கின்றவன், கோவலன் பெயரைக் கூறுகின்றான். எவ்வாறு?

''விருத்த கோபால'' —என்றான். கோவலனை, எச்சொல்லால் குறித்துள்ளான்? ''கோபாலன்'' என்னுஞ் சொல்லால். இரண்டிற்கும் பொருள் வேறு. இரண்டன் சொற்களுமே வேறு வேறு. முன்னது கோ-அரசன் என்னும் பொருள் கொண்ட தமிழ்ச்சொல். மற்றது 'ஆ' என்னும் பொருளைத் தரும் 'கோ' என்னும் வட சொல்லுடன், 'பாலன்' என்னும் வட சொல்லும் இணைந்த சொல்.

சிலம்பிலேயே அதன் தலைவன் பெயர் வடமொழியால் குறிக்கப்பட்டதைக் காண்கின்றோம். இவ் வேலையை யார் செய்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுவதுபோல் இளங்கோவடிகளார் அமைத்துள்ளார் என்று சொல்லத் தோன்றுகின்றது. சொன்னவன் மாடல மறையோன்! ஆம், மறையோன் ஒருவன் இம்மாற்றம் செய்ததாகக் காட்டுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளதும் ஒரு குறிப்பே எனலாம்.

வடபுலத்து மறையோரும் அவர்வழி வளர்ந்த தென்புலத்து மறையோருமே இச் செருகலையும் திருகலையும் செய்தனர். மறையோர்க்கு மண்டியிட்ட மரத் தமிழ்ப் புலவர் சிலர் அவர்வழி இயங்கினர். தமிழ் எத்துணையோ பொருள் பொதிந்த தூய சொற்களை இழந்து நிற்கின்றது.

'சில சொற்கள் கலப்பதாலும், சில சொற்கள் மறைவதாலும் என்ன குடியா முழுகிப் போகும்?' என்போர் இருக்கின்றனர். குடி முழுகிப்போவது இருக்கட்டும்; குடி கெட்டுப்போகும். போயிற்று!

வடமொழிச் செருகல் காலூன்றாத காலத்தில் தமிழ்நாடு வட வேங்கடம் முதல் குமரிவரை ஒருமொழிபேசும் தமிழ்நாடாக இருந்தது. சேரர், சோழர் பாண்டியர் என மூவர் ஆண்டிருக்கலாம்; ஆனாலும் மொழி ஒன்றாக, நாடு 'தமிழ்நாடு' என்னும் ஒன்றாக இருந்தது.

வடமொழிச் செருகலைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அதிக அளவில் ஏற்றுக் கொண்ட கலப்பு மொழியாக மலைஞால மொழி பிறந்தது. மேலும் வடசொற் களையே மிகுதியாகக் கொண்டு தமிழ்ச் சொல்லைக் குறைத்துக் கொண்டவர் தெலுங்கைப் பிறப்பித்தனர். அது போன்றே கன்னடம் தோன்றியது. நான்கும் திராவிட மொழிக் குடும்பம் எனப் பட்டாலும், ஒருமொழிதான் வடமொழிக் கலப்பால் நான்காயிற்று. மொழி நான்காகி, இனம் நான்காகி, நாடு நான்காகி, அரசு நான்காகி யுள்ளது. ஒருமைப்பாட்டுடன் இருந்த தமிழ்நாட்டை வடமொழி துண்டு போட்டு நான்காகப் பிரித்தது. எனவே வடமொழி 'பிரிவினை மொழி' என்பதில் தவறில்லை.

'பிரிந்தால் என்ன?' என்போரும் உளர் எனில், அவர்க்குக் குறிக்க வேண்டியன பல உண்டு. எனினும் காவிரி நீர்க்கு-ஒரு நாடாகத் திகழ்ந்த தமிழ் நாட்டுக் காவிரி நீர்க்கு, இன்று கேரளம் தடை போடுகின்றது; கன்னடம் கட்டுப் போட்டுள்ளது. ஆந்திராவிடம் 30 கோடி கட்டியுள்ளோம்!

இனியேனும் செருகலை உருவி எடுத்து விட்டுத் திருகலை நிமிர்த்தித் தூய தாய் மொழியைக் காண்போம்.

# வரலாறும்
# கலைகளும்

# தமிழ் ஏட்டுச் சுவடிகள்

புலவர் மு. சண்முகம் பிள்ளை

''புலவர் மணி'', ''பதிப்புச் செம்மல்'' என்று போற்றப்படும் இக் கட்டுரையாசிரியர், புலவர் தேர்வில் மாநில முதன்மையராய்த் தேர்ந்தவர். தமிழ் இலக்கிய இலக்கண நிகண்டு நூல்களைக் கற்று நற்றமிழ்ப் பேராசிரியராக விளங்கி வருகிறார். உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கி, நூற்றுக்கணக்கான நூல்களைப் பதிப்பித்துள்ளார். சென்னை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆய்வாளராக அரும்பணியாற்றியவர். இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஓலைச் சுவடித் துறையின் சிறப்புநிலைப் பேராசிரியராய்ப் பணியாற்றி வருகிறார்.

## இப்பொழுது கிட்டும் சுவடிகள்

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓலைச் சுவடிகள் இப்பொழுது கிடைப்பது அரிது. தக்க பாதுகாப்புள்ள சுவடிகளே நீண்டநாள் நிலைத்திருக்கக் கூடும். எவ்வளவு பாதுகாப்பாக இருப்பினும் முந்நூறு ஆண்டுகளுக்குள் சுவடிகள் பழுதுபட்டுப் போய்விடுவது இயற்கை. பழுதான சுவடிகளை மீட்டும் படியெடுத்து வைத்துப் போற்றுவது முன்னையோர் வழக்கமாயிருந்தது.

நூற்சுவடிகளைப் பொறுத்தவரை 17-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சுவடிகளைக் காணக் கூடவில்லை. கல்கத்தாத் தேசிய நூலகத்தில் உள்ள சுவடிகளுள், 1611-ல் எழுதப்பெற்ற சிவகசிந்தாமணி யுரைச் சுவடி காணப்படுகிறது. 1682-ல் எழுதப்பெற்ற நன்னூல் உரையும், 1702 ஆம் ஆண்டு எழுதப்பெற்ற திவாகரமும் அங்கு உள்ளன.

## ஆவணங்கள்

ஆனால் ஆவணங்களாக உள்ள ஓலைகள் பழமையானதாகக் கிட்டுதல் கூடும். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள், கொல்லம் 448-ல், அதாவது கி. பி. 1273-ல் எழுதப்பெற்ற ஓலை ஆவணம் பற்றிய செய்தியைப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளார். இந்த ஓலையின் தமிழ் நடை கி.பி. 12, 13 ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த சோழ பாண்டியர் கல்வெட்டுகளை ஒத்ததாகும் என்றும் சுட்டியுள்ளார்.

## சுவடி நாட்டம் குறைதல்

காகிதம் எழுது பொருளாகப் பயன் பட்டபோது பழஞ்சுவடிகளைக் காகிதத்தி லும் பெயர்த்து எழுதிப் போற்றுவாராயி னர். சென்ற நூற்றாண்டில் காகிதப் புழக்கமும் அச்சுயந்திரங்களும் மிகுதிப் படவே தமிழ்நூல்கள் ஏட்டிலிருந்து அச்சுப் படிவமாக மாறத் தொடங்கின. அச்சில் வந்தபின் நூல்களை எளிதில் பெறவும் ஏட்டில் எழுத்துகளை நிதானித்துப் படிப் பது போலன்றி விரைவாக வாசிக்கவும் இயன்றது. ஆகவே அச்சில் வந்த நூல் களின் சுவடிகளில் கற்றோர் கவனம் செல்ல வில்லை. ஏட்டுச் சுவடியில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கமும் வரவரக் குறைந்து வந்தது. அதனால் புதிய சுவடி கள் எழுதிவைக்கும் நிலைமையும் மாறி விட்டது. ஒரு சிலர் தாம் போற்றும் நூல் களைக் காகிதத்தில் பிரதி செய்தும் கற்க லாயினர்.

## 19ஆம் நூற்றாண்டு நிலை

பரம்பரையாகக் கல்வியில் சிறந்து விளங்கிய புலவர் பரம்பரையினர் இல்லங் களில் நூற்சுவடிகள் இருந்து வந்தன. ஏனையிடமும் சிற்சில சுவடிகள் தங்கின. இசை, நாட்டியம், சிற்பம், சோதிடம், மருத்துவம், பல தொழிற்கலைகள் பற்றிய சுவடிகள் அத்தகு கலைகளைப் போற்றிய குடும்பங்களில் முடங்கி விட்டன. சமயம் பரப்பும் திருமடங்கள் முன்பு கல்வி நிலை யங்களாகவும் விளங்கியமையால் அந்நிறு வனங்களில் பற்பல சுவடிகள் இடம் பெற் தன. சுவடிவழிக் கற்பது 19ஆம் நூற்றிருந் நாண்டின் இறுதிப் பகுதியில் வெகுவாகக் குறைந்து விட்டது. ஆகவே சுவடிகள் பேணப்படாமல் பரண்களிலும் பெட்டகங் களிலும் சிறைப்பட்டுப் போயின. அவற் றுள் பல செல்லுக்கும் பூச்சிகளுக்கும் இரை யாயின. சுவடிகளின் அருமையறியாமல் பலர் அவற்றை நீருக்கும் நெருப்புக்கும் இரையாக்கி விட்டனர். இத்தகு அழிவு களுக்குத் தப்பிய சுவடிகளே பின்னாளில் கிட்டின.

## ஐரோப்பாவில் தமிழ்ச் சுவடிகள்

கிட்டத்தட்ட முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால், தமிழகத்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அரசியல் தொடர்புகள் ஏற் பட்டபோது, இங்குள்ள ஓலைச்சுவடிகளை மேனாட்டினர் தத்தம் நாடுகளுக்கு எடுத்துச் செல்லத் தொடங்கினர். 18ஆம் நூற்றாண்டிலேயே ஏட்டுச் சுவடிகள், பழைய ஆவணங்கள் முதலியவற்றைத் திரட்டும் முயற்சியில் ஐரோப்பியர் சிலர் இறங்கினர். ஐரோப்பிய நாட்டு நூலகங் கள், அருங்காட்சியகங்கள், ஆவணக் களரிகள் ஆகியவற்றில் இந்திய மொழிச் சுவடிகள் இடம் பெறலாயின.

மேற்கு ஜர்மனி ஹைடல்பர்க் பல் கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி புரியும் டாக்டர் அ. தாமோதரன் அவர்கள், 'ஐரோப்பாவில் தமிழ் ஓலைச் சுவடிகள்' என்பது குறித்து அண்மையில் எழுதியுள் ளார். அவர் தமது உரையில்,

> ''தமிழகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஏராளமான ஓலைச் சுவ டிகள் பிரிட்டன், பிரான்சு, டென்மார்க், கிழக்கு ஜர்மனி, மேற்கு ஜர்மனி, போர்த்துக்கல், இத்தாலி, நெதர் லாண்டு, ஆஸ்திரியா, ஸ்விட்சர்லாந்து, நார்வே, சுவீடன், ருசியா ஆகிய பல் வேறு நாடுகளிலுள்ள நூலகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.''

என்றும்,

> ''என்னுடைய மதிப்பீட்டின்படி ஐரோப்பாவில் சுமார் 2000 தமிழ் ஓலைச் சுவடிகள் நிச்சயமாக இருக்கும்''

என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

---

* மேதகு இ. பழநியப்பனார் பவழமாலையில் ஐரோப்பாவில் தமிழ் ஓலைச் 'சுவடிகள்' என்னும் கட்டுரை யில் (பக். 207-215) மேனாட்டுச் சுவடிகள் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

## மெக்கன்சி தொகுப்பு

கர்னல் மெக்கன்சி என்பார் 1782-ல் இந்தியாவுக்கு வந்தார். முதலில் பொறியாளராகச் சென்னையில் பணிபுரியத் தொடங்கிய இவர், பின்னர் இந்திய நிலக் கணிப்பு உயர் அலுவலராயு மிருந்தார். இவர் இந்திய மொழிகளிலுள்ள பழஞ் சுவடிகள், ஆவணங்கள், வரலாற்றுக் குறிப்புகள், நாணயங்கள் முதலியவறறைத் திரட்டினார். இறுதியில் இவர் கல்கத்தாவில் வாழ்ந்ததனால இவர் திரட்டிய பொருள்களும் அங்கிருந்தன.

## தமிழக அரசாங்கச் சுவடி நிலையம்

மெக்கன்சியின் மரணத்துகுப் பின் (1821) இவருடைய மனைவியிடமிருந்து கிழக்கிந்தியக கம்பெனியார் 1821-ல பதினாயிரம பவுனுக்கு அவற்றை வாங்கினர். கிழக்கிந்திய அலுவலகத்தில டாக்டர் லெயிடன் என்பாரும் பழஞ்சுவடிகளைத திரட்டி வைத்திருந்தார். வலசன என்பாரும் பல சுவடிகளைச சேர்த்திருந்தார். இவர் மேலே சுட்டிய தொகுப்புகு விவர அட்டவணை ஒனறும் ஆக்கினார். இத்தொகுப்புகளுள் ஒருபகுதி இலண்டனிலுள்ள இநதிய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு பகுதி கல்கத்தாவிலேயே வைக்கப்பட்டது. தக்காணம் தொடர்பான சுவடிகள் சென்னைக்குக் கொணடுவரப்பட்டன. 1844-ல் கிழக்கிந்திய அலுவலகத்தில் பாதுகாக்கப்பெற்ற சுவடிகளும் சென்னை இலக்கிய சங்கத்திற்கு மாற்றப் பெற்றன. பிரெளன் என்பார் தொகுத்த சுவடிகளும் இச் சங்கத்திற்குத் தரப்பட்டன. இம் மூவகைத் தொகுப்புகளும் ஒருசேரக் கிழ்த்திசைச் சுவடி நிலையமாக 1870-ல் சென்னை மாநிலக் கல்லூரியில் உருப்பெற்றது. இதுவே பின்னர் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் இடம் பெறலாயிற்று.

இந்த அரசாங்கச் சுவடி நிலையத்தில் மேன்மேலும் கிடைக்கும் சுவடிகளும் அவ்வப்போது இணைக்கப் பெற்றன. இங்குள்ள 66000 சுவடிகளில் தமிழ்ச் சுவடிகள் 1300 உள்ளன. இங்கே சுவடிகளைத் தக்க வண்ணம் பாதுகாத்து வருகின்றனர். இங்கு 19000 அச்சு நூல்களும் உள்ளன. ஆதலால் இந்த நூலகம் ஆய்வாளருக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

## பதிப்பாசிரியர் தொகுப்பு

சென்ற நூற்றாண்டில் தமிழ் நூல்களைச் சுவடிகளிலிருந்து எடுத்து அச்சிட முனைந்தோர் பலர். சிறப்பாக ஆறுமுக நாவலர், இராமானுஜக் கவிராயர், திருவேங்கடாசல முதலியார், கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர், சிவன் பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை, சுவாமிநாத பணடிதர் முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவாகள் தாங்கள் பதிபபிக்க முற்பட்ட நூலகளுக்குரிய சுவடிகளையும் தேடிப்பெற்று அசசிற பதிககலாயினர். இதறகு அசசு முயறசியால அங்காங்கே சிதறுக கிடநத சுவடிகள் பதிப்பாசிரியர் இலலங்களில திரணடன.

## சரசுவதி மகால

சென்னை அரசாங்கச் சுவடி நிலையத்தினும் காலத்தால் முற்படத் தோன்றியது தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையமாகும். 16ஆம் நூற்றாண்டில் தஞசையை ஆண்ட நாய்கக மன்னர் இங்குள்ள அரண்மனையைக் கட்டியதோடு அதன் ஒரு பகுதியில் நூல் நிலையம் ஒன்றையும் நிறுவியிருந்தனர். இதில் தமிழ், தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளில் எழுதப் பெற்ற சுவடிகளைச் சேர்த்து வைத்தனர். பின் வந்த மராட்டிய மன்னர் ஆட்சியிலும் இந்நூலகம் மேன்மேலும் வளர்ந்து வந்தது.

1798-ல் பட்டத்திற்கு வந்த இரண்டாம் சரபோஜி மன்னர் கல்விக்காகப் பெருந்தொண்டாற்றியவர். இவர் இந் நூலகத்தை மிகவும் விரிவு படுத்தினார். இசைத்துறை, மருத்துவத் துறைகளிலும் வியக்கத்தக்க பணிகளைச் செய்வித்தார். பல்லாயிரக்கணக்கான அச்சு நூல்களையும்

வாங்கித் தாம் படித்துத் தம் கையெழுத்திட்டு நூலகத்தில் சேர்த்து வைத்தார். இந் நூலகத்தை இவர் உலகறியச் செய்த காரணத்தால், 'தஞ்சை மன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம்' என்று வழங்கிவரலாயினர். மத்திய மாநில அரசுகளின் ஆதரவுடன் இந் நூலகம் நன்கு நடைபெற்று வருகிறது. இஃது ஆராய்ச்சியாளருக்கு ஓர் அரிய கருவூலமாகும். இங்குள்ள சுவடிகளுள் 1264 தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

## பல்கலைக் கழகங்கள்

திருவனந்தபுரத்தில் திருவிதாங்கூர் மன்னர் அரண்மனையில் சுவடி நிலையம் ஒன்று அமைந்திருந்தது. இதுவே இப் பொழுது கேரளப் பல்கலைக்கழகம் சார்ந்த சுவடி நிலையமாய் விளங்குகிறது. இங்கு 3281 தமிழ்ச் சுவடிகள் உள்ளனவாகத் தெரிய வருகிறது. இவற்றுள் பெரும் பாலனவும் அச்சில் வெளி வந்தனவே. அச்சில் வாராதவை சிலவே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களிலும் நூற்றுக்கணக்கான சுவடிகள் இடம் பெற்றுள்ளன. தெலுங்கு தேசத்துள்ள ஆந்திரப் பல்கலைக் கழகம், உசுமானியாப் பல்கலைக் கழகம், வேங்கடேசுவராப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்ச் சுவடிகள் உள்ளமை தெரிய வருகிறது. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்த சுவடிகள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றுள்ளமை கருதற்பாலது. இவற்றிற்கான சுவடி விளக்கங்கள் இன்னும் அச்சில் வெளிவரவில்லை.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

பாண்டித்துரைத் தேவரவர்களால் பாஸ்கர சேதுபதிகளுடன் கூடி 1901-ல் நிறுவப்பெற்றது மதுரைத் தமிழ்ச் சங்கம். இதன் தொடக்க நாளிலேயே பழஞ்சுவடிகளுக்கும் அச்சு நூல்களுக்குமாகப் பாண்டியன் புத்தகசாலை அமைக்கப் பெற்றது. சங்கத்திற்காக அந்நாளில் புலவர் பலர் ஓலைச் சுவடிகளைத் தேடித் தொகுத்து வரலாயினர். அங்கே இடையில் நேர்ந்த தீவிபத்தில் ஒரு பகுதிச் சுவடிகள் அழிந்து பட்ட போதிலும், இப்பொழுதும் நூற்றுக் கணக்கான சுவடிகள் இருந்து வருகின்றன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னையில் தரமணிப் பகுதியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 200-க்கு மேற்பட்ட சுவடிகள் சேர்க்கப் பட்டுள்ளன. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்துச் சுவடிகள் இவற்றுள் பேரளவினதாகும். இங்கே சுவடியியலை மாணவர்க்குக் கற்பிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

## சாமிநாதையர் நூல் நிலையம்

புலவர் பெருமக்களுள் ஒரு சிலர் தொகுத்த சுவடிகளும் தனி நூல் நிலையங்களாக இப்பொழுது உருப்பெற்றுள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் தொகுத்து வைத்திருந்த சுவடிகளும் நூல்களும் அவர் காலத்திற்குப் பின் கலாக்ஷேத்திரத்தில் தனிநூல் நிலையமாக அவர் பெயரால் உருப்பெற்றது. இப்பொழுது திருவான்மியூரில் டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் சிறந்ததொரு ஆராய்ச்சி மையமாக விளங்கி வருகிறது. இங்கே ஏறத்தாழ 2500 ஓலைச் சுவடிகள் உள; 700 காகிதப் பிரதிகளும் காணப்படுகின்றன. இவற்றிற்குரிய விளக்க அட்டவணைகளை நூல் நிலையத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.

## தேசிய நூலகம்

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் சேர்ந்து வைத்திருந்த முந்நூறுக்கு மேற்பட்ட சுவடிகள் அவர் காலத்திற்குப் பின் கல்கத்தாத் தேசிய நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பெற்றன. சுவடிகளோடு இவர் நூலகத்திருந்த 2500க்கும் மேற்பட்ட அச்சு நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும் இங்கே தனியாக வைத்துப் போற்றப்பட்டு வருகின்றன.

## பேரூர்க் கல்லூரி

எழுமாத்தூர்ப் புலவர் தெய்வசிகா மணிக் கவுண்டர் அவர்கள் திரட்டி வைத்திருந்த சுவடிகளை அவர் மறைவிற்குப்பின் கோயம்புத்தூரை அடுத்துள்ள பேரூர்த் தமிழ்க் கல்லூரியில் வைத்துப் பேணி வருகிறார்கள்.

## தனியார் தொகுப்பு

திருச்சிற்றம்பலம் அறிஞர் மு. அருணாசலம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டு வேலனார், சென்னை மர்ரே எஸ். ராஜம் போன்ற தமிழன்பர்களிடம் சுவடித்தொகுப்புகள் இருந்து வருகின்றன. ஆழ்வார் திருநகரி பெரியன் ஸ்ரீநிவாச ஐயங்கார் திருமாளிகை, மதுரை அரசரடி இறையியற் கல்லூரி போன்ற சில இடங்களிலும் சுவடிகள் பல உள எனத் தெரிய வருகிறது.

## சமய நிறுவனங்கள்

திருவாவடுதுறை மடம், தருமபுர மடம், துறையூர் வீரசைவ மடம், விருத்தாசலத்திலுள்ள வீரசைவ மடம், சித்தாமூர் ஜைன மடம், திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகள் மடம், சிதம்பரம் ஈசானிய மடம், காஞ்சி ஞானப்பிரகாசர் மடம் முதலிய சமய நிறுவனங்களிலும் சுவடிகள் பலவாக உள்ளன.

## தொல்பொருள் துறை

தமிழ்நாடு தொல்பொருள் துறையினருக்கு மாவட்டங்களில் கிளை அலுவலகங்கள் உள. இவ்வலுவலகத்தார் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்தந்த மாவட்டங்களில் தமக்குக் கிட்டிய சுவடிகளைத் தொகுத்து வருகின்றனர். இத் தொல்பொருள் துறையில் இதுவரையில் பன்னூறு சுவடிகள் சேர்ந்திருத்தல் கூடும்.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் அறிஞர் அண்ணாதுரை பிறந்த நாளில் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழக அரசினால் தோற்றுவிக்கப் பெற்றது. இஃது ஓர் ஆராய்ச்சிப் பல்கலைக் கழகம். இங்கே உள்ள ஐந்து புலங்களுள் ஒன்று சுவடிப் புலம் இப்புலத்தில் ஓலைச் சுவடித் துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, கல்வெட்டுத் துறை என மூன்று துறைகள் உள்ளன.

## ஓலைச் சுவடித் துறை

ஓலைச் சுவடித் துறையில் இதுவரை வெளிவராத அருமையான நூல்களைச் சுவடிகள் நோக்கி அச்சிடுதல், செவ்விய முறையில் திருத்தமுற அச்சிடப் பெறாத நூல்களைக் கிட்டும் பிரதிகளுடன் ஒப்பு நோக்கிப் பதிப்பித்தல் என்னும் இருபெரு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## சுவடித் தொகுப்பு

மேலும் இத் துறையில் நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கிட்டும் ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்துப் போற்றுதலும் பெருங் கடமையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் சுவடிகள் அவ்வப்போது வந்த வண்ணமாயுள்ளன. 1983 ஜூன் முடிய 746 சுவடிகள் சேர்ந்துள்ளன. பேரெண்ணிக்கையில் சுவடிகள் தந்தவர் விவரம் வருமாறு:

திருப்பனந்தாள் ஆதீனச் சுவடிகள் 151

ஸ்ரீரங்கம் டாக்டர் ஆர். இராஜன் பாபு தந்தவை 103

சென்னை திரு. ஜி. ஜி. கனஷ்யாம் தாஸ் அனுப்பியவை 77

கரந்தை ஸ்ரீபாலைய ஞான தேசிகர் திருமடத்துச் சுவடிகள் 67

இராமநாதபுரம் சேது சமஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார் இல்லத்திலிருந்து பெற்றவை 51

தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறைச் சிறப்பு நிலை இணைப்

இங்குள்ள சுவடிகள் எல்லாம் சங்க நூல், சைவத்திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரம், இலக்கணம், பிரபந்தம், காவியம், தத்துவம், திவ்யப்பிரபந்தம், தல புராணம், உரைநடை, மருத்துவம். சோதிடம். நாட்டுப் பாடல், பிற மொழிச் சுவடிகள் (கிரந்தம், தெலுங்கு, மலையாளம்) என்னும் வகையில் பாகுபடுத்திக் கண்ணாடிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன. சுவடிகளைச் சரிபார்த்துக் கயிறு மாற்றிச் சார்போலைகள் சேர்த்துப் பூச்சிகள் அண்டா வண்ணம் தடுப்பு எண்ணெய் பூசி முறைப்பட ஒன்றோடு ஒன்று உரசாமல் தனித்தனியாக வைத்துப் பாதுகாக்கப் படுகின்றன. மேலும் இச் சுவடிகளுக்கான விளக்க அட்டவணையும் எழுதிவரப் படுகிறது. விரைவில் ஒரு பகுதி விவரம் அச்சிட்டு வெளியிடப் பெறும். மேலும் மேலும் சுவடி பற்றிய தகவல் தருபவர்களோடு தொடர்பு கொண்டு சுவடிகளைத் திரட்டும் பணியும் இடையறாது நடைபெற்று வருகிறது.

## சுவடி திரட்டும் பணி தொடர்க

தமிழகத்திலும், இந்திய நாட்டின் பிற இடங்களிலும், ஐரோப்பிய நாடுகளிலும், இலங்கை மலேசியா முதலிய கீழ்த்திசை நாடுகளிலும் உள்ள சுவடிகளுக்கு எல்லாம் விவர அட்டவணைகள் வரும்போதுதான் தமிழ் நூல்களின் பெரும் பரப்பினை நாம் காணுதல் கூடும்.

தமிழகத்தில் சிற்சில சிற்றூர்களிலும், பெருநிலக்கிழார் மாளிகைகளிலும், பெரும் புலவர் பரம்பரையினரின் இல்லங்களிலும், மருத்துவம் சோதிடம் இவற்றைத் தொழிலாகக் கொண்டிருந்த குடும்பங்களிலும் தமிழ்ச் சுவடிகள் இந்நாளிலும் இருந்து வரத்தான் செய்கின்றன. அவற்றையெல்லாம் முயன்று தேடுதலும் வேண்டும். தக்க பாதுகாப்பின்றிச் சிதறிக் கிடக்கும் சுவடிகள் தமிழ்ப் பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் வந்து சேருமாயின் அவை முறைப்படி பாதுகாக்கப்பட்டு அரிய சுவடிகள் அச்சுருப்பெற வாய்ப்பாகும். ஆகவே சுவடிகளை வைத்திருப்போர் அவற்றை ஏற்புடைய நிறுவனத்தில் சேர்ப்பிப்பதற்கு முன் வருவார்களாக.

# வரலாற்று நூல்கள்

பேராசிரியர் தா. ஏ. ஞானமூர்த்தி,
எம்.ஏ., பிஎச்.டி.

இவர் கோவை, பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரியில் பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்; இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் வளர்ச்சிக்கு அதன் தொடக்கக்காலத்திலிருந்தே உதவி வருகிறார்; தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினராக இருந்து வருகிறார்; அறிவியல் திங்கள் இதழாகிய 'கலைக்கதி'ரின் உதவி ஆசிரியராக இருந்து அறிவியல் தமிழாக்கத் திற்குப் பெரும்பணி புரிந்துள்ளார். இவர் மேற்பார்வையில் பல மாணவர்கள் ஆய்வுசெய்து பிஎச்.டி. பட்டம் பெற்றுள்ளனர். இவர் பல ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டுள்ளார்.

பழங்காலத்தில் இலக்கியம், இலக்கணம், நிகண்டு, சோதிடம், மருத்துவம் முதலிய நூல்களே தமிழில் இருந்தன. இவைகள் எல்லாம் செய்யுளில் இயற்றப்பட்டன. ஐரோப்பியர் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு தமிழில் தனி உரைநடை வளர்ச்சி ஏற்பட்டது. இதனால் தமிழில் பல புதிய நூல்கள் தோன்றின. புதினம், சிறுகதை, புவியியல், வானநூல், உயிர் நூல், உடல்நூல், வரலாற்று நூல் முதலியவை ஐரோப்பியர் தொடர்பினாலும், தனி உரைநடை வளர்ச்சியாலும் தமிழில் புதியனவாகத் தோன்றிய நூல்களாகும். இந்நூல்கள் எல்லாம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதான் எழுதப்பட்டன.

1850-ஆம் ஆண்டில், 'சென்னைப் பாட சாலைப் புத்தகச் சங்கம்' ஒன்று நிறுவப் பட்டது. இச் சங்கத்தினரே விஞ்ஞானம், வரலாறு முதலிய பாடநூல்களை வெளியிட்டனர். 'உலக சரித்திரம்', 'இங்கிலாந்து தேச சரித்திரம்', 'இந்து தேச சரித்திரம்', 'பல தேச சரித்திரச் சுருக்கம்', 'உரோம சரித்திரம்' ஆகியவை இச்சங்கத்தினரால் வெளியிடப்பெற்ற வரலாற்று நூல்களாகும்.

'உலக சரித்திர மாலை' என்னும் நூல் 1830-ஆம் ஆண்டில் டாக்டர் ஷீமட் என்பவரால் எழுதப்பட்டுச் சென்னை சி.எம்.எல். அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது.

1851-ஆம் ஆண்டில் 'புராதனச் சரித்திரச் சுருக்கம்' என்ற நூலையும், 1855-இல் 'பிரிட்டிஷ் தேச சரித்திரம்' என்ற நூலையும் ரெவரண்டு சாப்ஸ் என்பவர் எழுதினார். இவ்விரண்டு நூல்களும் பாளையங்கோட்டை அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டில் அந்தந்த வகுப்புக் கேற்ற வாறு பல வரலாற்று நூல்கள் எழுதப் பட்டன. இவைகளெல்லாம் பாட நூல் களே ஆகும்.

நெடுங்காலமாகத் தென்னிந்தியாவைப் பற்றிய வரலாறு எழுதப்படவில்லை. சங்க இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், 'தமிழர்கள்' என்ற நூலையும், கனகசபைப் பிள்ளை அவர்கள் '1800 ஆண்டுகளுக்கு முற் பட்ட தமிழர்' என்ற நூலையும், கே. என். சிவராசப் பிள்ளை அவர்கள் 'பழந்தமிழர் வரலாறு' (Chronology of the Early Tamils) என்ற நூலையும், டி. ஆர். சேஷ அய்யங் கார் அவர்கள் 'திராவிட இந்தியா' (Dravidian India) என்ற நூலையும் எழுதி னார்கள். பிறகு கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி யார் அவர்கள், தமிழிலக்கியங்கள், சாசனங்கள், பழைய நாணயங்கள், பழங் காலத்தில் தென்னிந்தியாவுக்கு வந்து சென்ற வெளிநாட்டவர் எழுதிவைத்த குறிப்புக்கள் இன்னோரன்னவற்றை ஆதார மாகக் கொண்டு, பாண்டியர் வரலாற்றினை யும் சோழர் வரலாற்றினையும் விரிவாக எழுதி வெளியிட்டார். அடுத்து, டாக்டர் மீனாட்சி அவர்களால், 'பல்லவர் ஆட்சியும், சமூக வாழ்வும்' என்ற நூல் எழுதப் பட்டது. ஆனால், இந்நூல்கள் எல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன.

நெடுங்காலத்திற்கு முன்பு ஆர். கோபி நாதராவ் அவர்கள் 'சோழவம்ச சரித்திரச் சுருக்கம்' என்ற நூலைத் தமிழில் எழுதி வெளியிட்டார். இந்நூல், பிற்காலச் சோழர்களைப்பற்றி மட்டும் மிகவும் சுருக்க மாகக் கூறுகிறது. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாற்றினை யும், சோழர் வரலாற்றினையும் நன்கு ஆராய்ந்து 'பாண்டியர் வரலாறு', 'பிற்காலச் சோழர் சரித்திரம்' ஆகிய நூல் களைத் தமிழில் வெளியிட்டுள்ளார். டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் பல்லவர் வரலாற்றினையும், சோழர் வரலாற்றினையும் செம்மையாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

'தமிழக வரலாறு' என்னும் நூலினை அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் எழுதி யுள்ளார்.

'பாண்டியர் வரலாறு' என்னும் நூலில், சதாசிவப் பண்டாரத்தார், முதற் கண் கடைச்சங்க காலத்துக்கு முன்னும் அக்காலத்தும் ஆண்ட பாண்டிய மன்னர் களைப்பற்றிய குறிப்புக்கள் தந்துள்ளார். அடுத்து கி. மு. 575 முதல், கி. பி. பதி னான்காம் நூற்றாண்டு வரையில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களின் வரலாறும், பின்பு பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் பதினேழாம் நூற்றாண்டுவரை பாண்டிய அரசர் நிலையும், இறுதியில் பாண்டிய அரசர் அரசியல் முறையும் அந் நூலில் விளக்கப்பட்டுள்ளன. பிற்காலச் சோழர் வரலாறு இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டுள்ளது. முதல் பகுதி கி. பி. 846 முதல் 1070 வரையில் ஆட்சிபுரிந்த சோழர் வரலாற்றைக் கூறுகிறது. இரண் டாம் பகுதி கி. பி. 1070 முதல் 1279 வரையில் அரசாண்டவர்களின் வரலாற் றைக் கொண்டுள்ளது. இந்நூலில் ஒவ் வொரு சோழ மன்னனின் போர் நிகழ்ச்சி களும், அவன் ஆட்சியைப் பெருக்கிய முறை யும், அவனுடைய சிறப்புப் பெயர்களும், அவன் எழுப்பித்த கோயில்களின் திருப் பணிகளும், அவன் மேற்கொண்டொழுகிய சமயம், அவனுடைய மனைவிமார்கள் மக்கள் ஆகியோரின் குறிப்புக்களும், அவன் காலத்தில் தோன்றிய கல்வெட்டுக்களும், அவனுடைய அமைச்சர், படைத்தலைவர், அரசியல் அதிகாரிகள் பற்றிய குறிப்புக் களும், அவனுடைய அரிய செயல்களும் கூறப்பட்டுள்ளன.

டாக்டர் இராசமாணிக்கம் அவர் களின், 'பல்லவர் வரலாறு' பல்லவர்க்கு முற்பட்ட தமிழகத்தைப் பற்றியும், களப்

பிரரைப்பற்றியும், முற்காலப் பல்லவர், இடைக்காலப் பல்லவர் ஆகியோர்களைப் பற்றியும் முதலில் சுருக்கமாகக் கூறுகிறது. அடுத்து சிம்ம விஷ்ணு முதல் மூன்றும் நந்திவர்மன் ஈறுக ஆட்சிபுரிந்த பிற்காலப் பல்லவர்கள் செய்த போர்கள், அவர்கள் கட்டிய கற்கோயில்கள், அவர்களுடைய கல்வெட்டுக்கள், அவர்கள் பட்டப்பெயர்கள் முதலியவைகளைச் சற்று விளக்கமாக உரைக்கிறது. இறுதியில் பல்லவர் ஆட்சி முறை, அவர் காலத்துச் சமயநிலை, கலைக் கழகங்கள், இசை நடன வளர்ச்சி முதலியவைகள் விளக்கப்பட்டுள்ளன.

பரமசிவானந்தம் அவர்கள் இயற்றிய 'தமிழக வரலாறு' என்னும் நூல், பழந் தமிழகம், பல்லவர் காலத்துத் தமிழகம், சோழர் காலத்துத் தமிழகம், பிற்காலப் பாண்டியர்—விசய நகர வேந்தர் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சி, விடுதலைக்குப்பின் தமிழ்நாட்டு நிலை முதலியவைகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகிறது.

தமிழக வரலாற்றைக் கூறும் நூல்கள் இவை போன்று ஒரு சிலவே உள்ளன. இவைகளும் அந்தந்தக் காலத்தினைத் திட்டமாக வரையறுத்து எல்லாச் செய்திகளையும் விளக்கமாகக் கூறுவனவாக இல்லை. இந்த நூல்கள் கூறும் செய்திகளுள் பல உய்த்துணர்வாகவே உள்ளன.

இராஷ்டிரகூட மன்னனாகிய இரண்டாம் கிருஷ்ணனின் மகள் இளங்கோபிச்சி என்பவளை முதலாம் இராசராச சோழன் திருமணம் செய்து கொண்டதாக நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தம் நூலில் கூறியிருக்கிறார். ஆனால் சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் அவளை ஆதித்த சோழன் மணந்ததாகக் கூறுகிறார். தன் தந்தையாகிய ஆதித்த சோழன் இறந்த இடமாகிய தொண்டைமான் பேராற்றூரில், முதல் பராந்தக சோழன் கோயில் அமைத்து, அங்கு ஆண்டுதோறும் ஆயிரம் பிராமணர்களுக்கு உணவளித்தான் என்று நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். இவ்வாறு அவர் கூறுவதால் பராந்தக சோழன் அந்தணர்களையன்றி மற்றவர்களை ஆதரிக்கவில்லை என்று பொருள்படுகிறது. ஆனால் பண்டாரத்தார் அவர்கள் கல்வெட்டுக்களை நன்கு ஆராய்ந்து அறுசமயத்தவர்கள், இருநூற்றுவர், அந்தணர் முந்நூற்றுவர் ஆகிய ஆயிரவருக்கும் உணவளிப்பதற்கு ஏற்பாடு செய்தான் என்று கூறுகிறார். இதிலிருந்து பராந்தக சோழன் பலரையும் ஆதரித்தான் என்று தெரிகிறது. தான் அரியணை ஏறும் பொருட்டுக் கண்ட ராதித்தன் மகனாகிய உத்தம சோழன், இரண்டாம் பராந்தகன் மகனாகிய ஆதித்த கரிகாலனைக் கொன்று விட்டான் என்று சிலர் கருதுவர். பண்டாரத்தார் அரசியல் அதிகாரிகள் சிலர் சேர்ந்து ஆதித்த கரிகாலனைக் கொன்றனர் என்பர்.

இவ்வாறு பழந்தமிழக வரலாற்றில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. எவற்றையும் முடிந்த முடிவாகக் கொள்வதற்கில்லை. இன்னும் பல செய்திகளையும் நன்கு ஆராய்ந்து முடிவான உண்மைகளோடு தமிழில் பல வரலாற்று நூல்கள் தோன்ற வேண்டும்.

தமிழ் நாட்டின் பழைய வரலாற்றினை ஆராய்வதற்குத் தற்போது பல ஆதாரங்கள் உள்ளன. பழந்தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பழங்கால நாணயங்கள், புதைபொருள் ஆராய்ச்சிகளால் கண்ட முடிவுகள், பழங்காலத்தில் தென்னிந்தியாவுக்கு வந்து சென்ற அயல் நாட்டவர் எழுதி வைத்த குறிப்புக்கள் முதலியவைகளைக் கொண்டு, தமிழ்நாட்டின் பழங்கால வரலாற்றையும், இடைக்கால வரலாற்றினையும் ஆராய்ந்து, இன்னும் தெளிவான முறையில் வரலாற்று நூல்களை உருவாக்கலாம். பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு முதலிய சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிய குறிப்புக்களும், பல குறுநில மன்னர்களைப் பற்றிய செய்திகளும் ஆங்காங்கே பொதிந்து கிடக்கின்றன. இவற்றோடு,

பெரிபுளூஸ், டாலமி, மெகஸ்தனிஸ், பிளைனி முதலிய வேற்று நாட்டவர்கள் தமிழகத்தைப் பற்றி எழுதி வைத்துள்ள குறிப்புக்களையும், இலங்கையின் பழைய வரலாற்றினைக் கூறும் 'மகாவம்சம்' என்ற நூலினையும் துணையாகக் கொண்டு ஆராய்ந்து, கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னைய தமிழக வரலாற்றை அறியலாம்—சான்றாக கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிளைனி என்ற யவன ஆசிரியர் பாண்டியரைப்பற்றிக் குறிப்பிடும் போது, ''இந்தியாவில் பன்டோ என்ற ஒரே சாதி பெண்ணரசுக்கு உட்பட்டது; ஹெரீகிளிசுக்கு ஒரே பெண் இருந்தமையின் அவன் மிக்க அன்புடன் ஒரு பெரிய நாட்டை அவளுக்கு அளித்ததாகச் சொல்லுகிறார்கள். அவள் வழியினர் முன்னூறு ஊர்களை ஆட்சி புரிந்தனர். அன்னோர் பெருஞ் சேனைகளை உடையராயும் இருந்தனர்'' என்று கூறுகின்றார். இவர் இவ்வாறு கூறியுள்ள கதை பாண்டியர், மலையத்துவச பாண்டியனுடைய புதல்வியாகிய மீனாட்சியம்மனின் வழித் தோன்றியவராய், 'கௌரியர்' என்று அழைக்கப் பெற்ற செய்தியையோ, அல்லது இவர்கள் பாண்டியன் சித்திராங்கதனுடைய மகள் சித்திராங்கதையின் வழித் தோன்றல்களாயுள்ள செய்தியையோ குறித்ததாகக் கொள்ளல் வேண்டும் என்று சதாசிவப்பண்டாரத்தார் குறிப்பிடுகிறார். இதுபோன்ற பல வேற்று நாட்டவரின் குறிப்புக்கள், தமிழகத்தின் பழங்கால வரலாற்றினை அறியப் பெரிதும் துணை செய்வனவாகும்.

ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும், நாயன்மார்களின் தேவாரப் பாடல்களிலும் பல்லவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றோடு பல்லவ மன்னர்களின் சாசனங்களைத் துணையாகக் கொண்டு, பல்லவர் வரலாற்றை இன்னும் செம்மையான முறையில் உருவாக்கலாம்.

பல்லவர்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டின் வடபகுதியை ஆண்டனர். அவர்கள் காலத்தில் கல்வெட்டுக்கள் வளர்ச்சியுற்றன எனலாம். அவர்கள் முதலில் தங்கள் தாய்மொழியான பிராகிருத மொழியிலேயே சாசனங்களை எழுதி வந்தனர். பிறகு வட்டமொழியில் அவர்தம் கல்வெட்டுக்கள் தோன்றின. அவர்கள் தமிழ்நாட்டில் பல கற்கோயில்களைக் கட்டினர். அக் கோயில்களில் வழிபாடுகளும் விழாக்களும் நடைபெறும் பொருட்டுப் பொன்னும், நிலமுமாகப் பல நிவந்தங்களைக் கொடுத்தனர். பிற அரசியல் அதிகாரிகளும், பொது மக்களும் கோயில்களுக்குத் தானங்கள் வழங்கினர். கோயில் அதிகாரிகளும், ஊர்ச் சபையினரும் அவற்றை எல்லோரும் அறியக் கோயில் சுவர்களில் பொறித்தனர். இவ்வாறு கோயில் சாசனங்கள் பல்லவர் காலத்தில் வளர்ச்சியுற்றன. இச் சாசனங்கள் பல்லவர் வரலாற்றை அறியப் பெரிதும் உதவி புரிகின்றன.

பல்லவர்களுக்குபின் சுமார் நானூற்று முப்பது ஆண்டுகள் சோழர்கள் தஞ்சையிலிருந்து தமிழ் நாட்டை ஆண்டதாகத் தெரிகிறது. அவர்களைத் 'தஞ்சைச் சோழர்கள்' அல்லது 'பிற்காலச் சோழர்கள்' என்று கூறுவார்கள். அவர்களுள் பலர் கற்கோயில்களைக் கட்டி நிவந்தங்கள் கொடுத்துப் பல சாசனங்களை எழுதி வைக்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் எல்லாம் நம் முன்னோர்களுடைய உண்மை வரலாறுகளை உணர்த்துவனவாகும். சேர, சோழ, பாண்டியராகிய முப்பெருந் தமிழ்வேந்தரும், பல்லவரும், குறுநில மன்னரும், பிற தலைவர்களும் செய்த அறச்செயல்களையும், அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகளையும், அக்கால அரசியல் முறைகளையும், போர் நிகழ்ச்சிகளையும் முற்கால வழக்கங்களையும், சமய நிலையையும், மற்றும் பல அரிய நிகழ்ச்சிகளையும் இக் கல்வெட்டுகளிலிருந்தும், செப்பேடுகளிலிருந்தும் நன்கு அறியலாம். சுருங்கக் கூறின் இக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் நமது நாட்டின் பழைய வரலாற்றினை உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்குத் தக்க கருவியாய் உள்ளன.

தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட பழங் கால நாணயங்களும் பழந்தமிழ் வரலாற் றினை அறிய ஓரளவு துணைபுரிவன வாகும். ஆனால், அவைகள் கல்வெட்டுக் கள், சாசனங்கள் போல அத்துணையளவு பயனளிக்கும் என்று சொல்வதற்கில்லை.

தென்னிந்தியாவில் கண்டெடுக்கப் பட்ட உரோம நாணயங்கள் கி. பி. முதல் சில நூற்றாண்டுகளில் இந்தியாவிற்கும், உரோமாபுரிக்கும் நடைபெற்ற வாணிபங் களைப்பற்றி அறிய உதவுகின்றன. சோழ மன்னர் தம் ஆட்சிக்காலத்தில் பொன், வெள்ளி, செப்பு நாணயங்களை வெளியிட் டனர். அந்நாணயங்களின் இரண்டு பக்கங் களிலும் புலி, மீன், வில் ஆகிய சின்னங் களும் மன்னன் பெயரும் உள்ளன. இது ஒரு வகை நாணயம். மற்றொரு வகையான நாணயங்களின் ஒரு பகுதியில் நின்று கொண்டிருக்கும் முரட்டு மனிதனின் உருவமும் மற்றொரு பக்கத்தில் உட்கார்ந் திருக்கும் உருவமும உள்ளன. இந்த வகை யான நாணயங்கள் முதலாம் இராசராசன் காலத்திலிருந்து நெடுங்காலம் வழக்கி லிருந்தனவாகத் தெரிகிறது. இந் நாண யங்களை இலக்கியம், கல்வெட்டுக்கள் இவைகளைக் கொண்டு கண்ட முடிவு களுக்குச் சான்றுகளாகக் கொள்ளலாம்.'

மேனாட்டவரின் தொடர்பால் நமக் குக் கிடைத்த காகிதம், அச்சு இயந்திரம் முதலியவைகளினால் செய்தித் தாள்களும், அச்சு நூல்களும் நம் நாட்டில் பெருகின. இன்னும் தற்காலத்தில் வானொலி, தொலைப்பேசி, தொலைக்காட்சி முதலிய அறிவியல் சாதனங்களும் மிகுந்துள்ளன. இவற்றின் உதவியால் நம நாட்டின் பிற்கால வரலாற்றினையும், தற்கால வரலாற் றினையும் இன்னும் உலக நாடுகளின் வரலாறுகளையும நாம் உணரமுடிகின்றது. இவைகளையெலலாம் திரட்டி ஆராய்ந்து உண்மை வரலாற்றுச் செய்திகள் அடங்கிய தமிழ் நூல்கள் பல வெளிவருதல் வேண்டும்.

வரலாறு மக்களை உலக அறிவு உடை யவர்களாக ஆக்குகிறது. நம் நாட்டிலும் உலக நாடுகளிலும் நிகழும் பொது நிகழ்ச்சி களையும், காலப்போக்கினையும் வரலாறு உணர்த்துகிறது. மனித சமுதாயத்தைப் பற்றியும், அது நாளடைவில் வளர்ச்சி யுறறுத் தற்போதைய நிலையை எய்தி யுள்ள தன்மையைப் பற்றியும் நாம் வரலாற்று நூல்களிலிருந்து அறிகிறோம். மக்கள் சமுதாயங்களின் பழங்கால நிலையும், அது வளர்ச்சியுற்ற முறையும் எதிர்கால சமுதாயங்களை உருவாக மிகவும் பயன்படுவன வாகும்.

ஒரு நாட்டின் வரலாற்றினைப் பல வகையில் ஆராயலாம். ஒரு நாட்டின் ஆட்சி முறை பொது நடைமுறைகள் முதலியவை கள் பற்றி ஆராயலாம். இது அரசியல் வரலாறு (Political History) எனப்படும். அரசியல் அமைப்பு நிலையங்கள், அவறறின் சட்ட முறைகள் முதலியவைகளை ஆராய்வது அரசியலமைப்பு வரலாறு (Consitutional History) எனப்படும். ஒரு சமுதாயம் எப்படித் தன் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய் கிறது என்பதையும், அதன் விவசாய முறை கள், தொழில், வாணிபம், போக்குவரத்து முதலியவற்றைப்பற்றியும் கூறுவது பொரு ளாதார வரலாறு (Economic History) எனப்படும். அச் சமுதாயம் அவற்றை யெல்லாம் எவ்வாறு பயன்படுத்தி வாழ் கின்றது என்பதைக் கூறுவது சமுதாய வரலாறு (Social History) எனப்படும.

இவ்வரலாறுகளுள் நடுநாயகமாக விளங்குவது அரசியல் வரலாறாகும். அரசி யலை ஒட்டியே மற்றவை வளர்ச்சியுற வேண்டியிருப்பதால், அரசியல் வரலாறு சிறப்புடையதாக அமைகின்றது. ஆனால், ஒரு நாட்டின் அரசியல் முறையை மட்டும் விளக்குவது அந் நாட்டின் முழுவரலாறு ஆகாது. அதை நடுநாயகமாகக் கொண்டு பொருளாதாரம், சமுதாயம், பண்பாடு, கலை முதலியவைகளையும் விளக்கிக் கூறு வதே அந்நாட்டின் முழு வரலாறாகும். வரலாற்றில் உண்மைச் செய்திகளே இடம் பெற வேண்டும். அதில் கற்பனையோ, உய்த்துணர்வோ கலவாமல், உண்மைச் செய்திகளைச் சுவையாகவும், தெளிவாக

வும், திட்டமாகவும் கூறுவது சிறந்த வரலாற்று நூலாக அமையும்.

மக்கள் சமுதாயங்களைப் பற்றிய பல செய்திகளையும் நாம் வரலாறுகள் மூலம் அறிவதால், அவைகள் நம் பொது அறிவை வளர்த்து நன்கு பண்படுத்தும் தன்மை வாய்ந்தவைகளாக உள்ளன. கணித நூல் ஒருவருக்கு கணித அறிவை மட்டும் தர வல்லது. இவ்வாறு இயற்பியல், வேதியியல் முதலிய நூல்கள் அந்தந்த அறிவியல் அறிவை மட்டும் தரும் தன்மை வாய்ந்த வையாகும். ஆனால், வரலாற்று நூல் நமக்கு அறிவை நல்குவதோடு அதைப் பண்படுத்தவும் செய்கிறது.

முன்பே குறிப்பிட்ட இத்தகைய வர லாற்று நூல்கள் தமிழ் மொழியில் மிகக் குறைவாக உள்ளன. அறிஞர் பலரும் அத் துறையில் ஆரரய்ந்து சிறந்த வரலாற்று நூல்களை உருவாக்குவது தமிழ்மொழிக்குச் செய்யும் சிறந்த பணியாகும்.

# தமிழகத்தின் உலோகவளமும், கலைவளர்ச்சியும்

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்

இக் கட்டுரையாளர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள குடந்தை மாநகரில் 1-7-1920-இல் பிறந்தவர்; ஓவியம் வரைவதில் வல்லவரான இவர் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர்; பல ஆண்டுகள் உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும், 27 ஆண்டுகள் கரந்தைப் புலவர் கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றினார்; 17-11-63-இல் கண்ணகி கோட்டத்தைக் கண்டு பிடித்தவர்; 'தமிழக லரலாற்றுச் செய்திகள்', 'ஓவியக் கலை நூல்' ஆகிய நூல்களை எழுதியவர். இவர் இப்போது மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் கல்வெட்டு, தொல்பொருள் வரலாற்று ஆராய்ச்சியாளராகப் பணி புரிந்து வருகின்றார். இவருடைய 'கல்வெட்டுக் கலைச் சொல் அகராதி', 'கரந்தைச் செப்பேடுகள்-ஆராய்ச்சி' ஆகிய நூல்கள் பல்கலைக் கழக வெளியீடுகளாக விரைவில் வெளிவரவுள்ளன.

## தோற்றம்

உலக நிலப்பரப்பில், ஆங்காங்கே பல் வேறுபட்ட மக்களினங்கள் வாழ்கின்றன. அவ்வவற்றின் தோற்றம், தொன்மை, நாகரிக வளர்ச்சி ஆகியவற்றைப்பற்றி யறியும் ஆராய்ச்சி, இவ்விருபதாம் நூற் றாண்டில் பெருகியுள்ளது. அதற்கமைந்த முயற்சிகளுள், அகழ்வாராய்ச்சி வழியே கிடைத்துள்ள பொருள்களே பண்டைய மனிதனின் காலவளர்ச்சி நிலைகளை அறுதி யிட்டு அறிவதற்கமைந்த சான்றாக இருக் கின்றன.

அகழ்வாராய்ச்சியின் பயனாக ஆதி மனிதன் கையாண்ட பொருள்களுள், வலிய கற்களாலான கருவிகளும் உலோகங்களா லான கருவிகளும் பொருள்களும் கிடைத் துள்ளன. அவற்றைக் கொண்டே அக்கால மனித இனத்தின் வளர்ச்சிக் காலங்களை, கற்காலம், உலோககாலம் என முறையே அறிஞர் பாகுபடுத்திக் கூறுவாராயினர். இவ்வாராய்ச்சிக்கு இலக்கான புதை பொருள்களுள் முதுமக்கள் தாழிகள் முத லிடம் பெற்றிருப்பதை ஆய்வுரைகளால் அறிய முடிகின்றது.

## கல்லும் பொன்னும்

கற்கால மனிதன் காட்டுத் தீயினின்றும் தீயினைக் கொண்டு தான் கொன்ற விலங் கின் இறைச்சியை வாட்டித் தின்னும் செய

லைக் கற்றிருந்தான். அக்காலத்தில் காட்டுத் தீபரவிய உருக்குப்பாறைகள் கனிந்து உருகி நின்றதைக் கண்டு வியந்து, அவற்றைப் பெயர்த்து ஆய்ந்தபோது, அவை கற்களை விட வலிமையும் தேவைகட்கேற்ற வடிவ மும் பெற்றிருந்ததினால், அவற்றை ஆயுதங் களாகப் பயன்படுத்தத் தொடங்கி யுள்ளான்.

## பொன்னின் பொதுமை

உருக்குப் பாறைகள் கடிய காட்டுத் தீயினால் உருகி வழிந்து தீப்பிழம்பாக நின்றபோது, காட்சிக்குப் பொலிவுடனும் மஞ்சள் நிறத்துடனும் தோற்றமளிப்பது இயல்பு. இதநிறத்தானே அது பண்டை மனிதனால 'பொன்' எனும் சொல்லால் குறிக்கப் பெறுவதாயிற்று. உலோக உருக் குக் கனியினை உருகிநின்ற பொறுக்குப் பாறைகளினின்றும் பொல்லலாகப் பெயர்த் தெடுத்த காரியத்தால் 'பொல்' என்ற சொல்லால் சுட்டப்பட்டு, கால வழக்கில் மொழி வளர்ச்சியில் 'பொன்' என்றாகி யுள்ளது என்றும் கூற முடிகின்றது.

இதனை வடவர் 'லோகம்' என்பர். தமிழாக்கம் 'உலோகம்' என நடைபெற்றது. இதனால் தமிழன் செம்பு, இரும்பு, வெள்ளி, ஈயம் ஆகிய உலோகங்களுக்கு இட்ட பொதுப் பெயர் 'பொன்' என்பதாகு மென்பது புலனாகும்.

## பொன்னும்-வகையும்

ஒரு காலத்தில் தீப்பிழம்பாக நின்று குளிர்ந்தது நிலவுலகமாதலின், இதன் பாறைப்படிவங்கள் பல்வேறுபட்ட தாதுப் பொருள் செறிவுகளாகவே தனித்தும், படர்ந்தும், செறிந்தும் இயற்கையாகவே உறைந்து நிற்பதாயிற்று. இவற்றையே 'கனி வளம்' என்பர்.

கடுந்தீயில் உருகிய அக்கனிவளங்களுள் குளிர்ந்தபின் செவப்பேறி நின்ற உருக் கினைக் கண்டு அன்றைய தமிழன் 'செம் பொன்' (செம்பு) என்றான். கருமையாக உறைந்து நின்ற பொன்னைக் கண்டு 'கரும் பொன்' என்றான். இவற்றினும் மஞ்சள் நிறத்தில் திண்மை குன்றாத தன்மையும் பளபளத்த ஒளிர்ப்பும் உடையதாக நயப்பு டன் காணப்பட்ட கனியினைப் 'பொன்' என்னும் தனிச்சொல்லாலேயே சிறப்பாகச் சுட்டிக் கூறி, மற்றைய உலோகத்திலும் மேலானதாகக் கொண்டான். வெளிர் நிறமும் ஒளியும் குன்றாது வழிந்து நின்ற கனியினை 'வெண்பொன்' என்றே கூறி யிருக்க வேண்டும். அது 'வெள்ளி' எனும் பெயரான் வழக்கில் நிலைத்து வந்துள்ளது. இது போன்றே கரும்பொன் செறிவும் வலிவும் மிக்கதாக இருந்ததால் 'இரும் பொன்' என்றான். கால வழக்கில் இரும்பு என்றாகியுள்ளது.

## தொன்னெறிவழக்கில்-பொன்

கொல்லனால் ஏற்றவடிவில் எஃகினால் உருவாக்கப்பட்ட போர்க்கருவிகளுள் சிறந்தது 'வாள்' என்ற பெயரினைப் பெற்றுள்ளது. தொல்காப்பியர் வாள் என்பது ஒளிக்குரியதாகு மென்பதனை, ''வாள் ஒளியாகும்'' என்று உரியியலில் உரைப்பாராயினர். அவ்வழக்கானே ஒளி யும், தரமும், அணுச்செறிவும், நயமும் பெற்ற கனிப்பொருள் பொலிவுடன் தோற்றங் கொண்டுள்ளதால் 'பொலம்' என்பதன் அடிப்படையில், 'பொன்' என்ற தனிச் சிறப்புடன் சுட்டப்பெற்று வழக்கி லும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பர்.

## நிலைப்பும் கணிப்பும்

உலகில் உலோகக் கனியினைக் கண் டறிந்து பயன்படுத்திய தொன்மையான வளாகங்களுள் கடல்கொண்ட குமரிநாடும், எஞ்சிய தமிழ்நாடும் ஒன்றாகும். முன் தோன்றி மூத்த குடியாக விளங்கும் தமிழன் இன்றைய தமிழகத்தில் கண்டதும் கொண்டதுமாகிய உலோகக் கலைவளத் தினைத் தொன்றுதொட்டு நன்கு அறியப் பண்டைய இலக்கியங்களும், குமரித்துறை யைச் சார்ந்துள்ள தாமிரபரணி யாற்றங் கரையில் இருந்து, காலத்தால் புதையுண்ட ஆதிச்சநல்லூர் கொற்கை முதலான இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட உலோகப் பொருள்களும் சான்றாக இருக் கின்றன. தாமிரமாகிய செம்புக் கனிவளம்

பரவிய பரற்கற் பரம்பு நிலமேடுகளின் தாக் இடையே வழிக்கொள்ளும் பொதியமலை யாறு நிலத்தின் இயற்கை வளப்பெயரான் 'தாமிர பரணியாறு' என்று பெயர் பெற் றிருப்பது, உலோககால மக்களின் வாழ்வு ஒரு காலத்தில் இங்கு இடம் பெற்றிருந்தது என்பதற்கு இலக்காகி நிற்கின்றது.

தமிழகத்தின் நிலவியற்கையில் செம் பாறைப் படர்நிலமும், உருக்குப் பொறுக்குக் குவியல் செறிந்த நிலமும் ஆங்காங்கே தொடர்ந்து படர்ந்து உள்ளதனை இன்றும் காணலாகும். அப் பாறைகளில் செம்பு, இரும்பு ஆகிய உலோகக் கனிவளங் கள் மிகுந்துள்ளதனை உருக்குத் தொழி லாளர் உற்றறிவர். அகழ்வாராய்ச்சியினால் கிடைக்கும் பொருள்களுள் இரும்பு, செம்பு, வெண்கலம் ஆகிய உலோகங்களினாலான போர்க்கருவிகளும் பொருள்களும் கிடைத் துள்ளன. இவை பண்டைத் தமிழரின் நாகரிக வாழ்வியலைக் கணிக்கும் சான்று களாகுமென்பதனை வரலாற்றறிஞர் வகுத் தறிவர். எனவே, குமரிநாட்டு நாகரிகத்தின் எஞ்சிய சின்னமாக அமைந்த தாமிரபரணிக் கரை நாகரிகமே, தமிழர்தம் வாழ்வியல் வரலாற்றுக் கணிப்பின் தொடக்கமாக அமைவதால் தமிழக வரலாறும், இந்திய வரலாறும், 'தாமிரபரணிக்கரை நாகரிகம்' என்னும் தொடக்கமாகவோ, அன்றி 'குமரித்துறை நாகரிகம்' என்னும் தலைப்பி லான தொடக்கமாகவோ எழுதப்பெறுதல் வேண்டுமென்பது, தமிழக வரலாற்றினை உள்ளவாறு உரைப்பதற்கமைந்த கருத் தாகும்.

## இரும்பும் எ.:கும்

துருக்கொள்ளும் மாற்றமும், வளையும் தன்மையும், மழுங்கும் இயல்பும் கொண்டது இரும்பு என்னும் உலோகமாகும்.

இரும்பின் கனிப்பொருளின் உயர்தரமே எஃகு என்னும் உலோகமாகும். இவ் வுலோகம் வளையாத கடுமையும், துருப் பெறாத தன்மையும், கூர்மை மழுங்காத இயல்பும் பெற்ற, ஒளியோடு கூடிய வல்லிரும்பாதலின் எஃகு என்று பெயர் பெற்றுள்ளது.

சங்க கால இலக்கியங்களில் இரும்பும் எஃகும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. இரும்பு நயமும் வளையும் தன்மையும் உடைய உலோகம் என்பதனை, ''இரும்பு திரித்தன்ன'', ''இரும்பு செய்தொடி'', ''இரும்பு இயன்றன்ன கருங்கோட்டு எருமை'' என்னும் அகநானூற்றுச் சான்று களால் அறிய முடிகின்றது.

எஃகு தாக்கத்தினால் வளையாது உடையும் தன்மையும். மிக்க வலிமையும், கூர்மை குன்றாத தன்மையும் பெற்ற வல்லிரும்பாதலின், அதனாலாக்கப்பட்ட 'வேல்' என்னும் சிறந்த படைக்கலத்தினை 'எஃகு' என்றே பண்டைத் தமிழர் குறித் துள்ளனர். 'எஃகு விளங்கு தடக்கை', 'வடிவேல் எஃகு', 'ஒளிறு இலைய எஃகு' என்பனவற்றால் எஃகின் பெயர்ச் சிறப் பினை அறிய முடிகின்றது. எஃகின் வலிமை யினையும் உறுதியினையும் வீரர்களிடம் கண்ட புலவர்கள், 'எஃகுறு மாந்தர்', 'எஃகுடை வலத்தர்', 'எஃகுடை எழில் நலம்'' என்று கூறியுள்ளனர். இதனால் எஃகு என்னும் உறுதிக் கமைந்த பண்புச் சொல்லே அதனாலாகிய வேல் என்ற போர்க்கருவிக்குரிய பெயராகவும், உடல் வலிமையும் உள்ளத்திண்மையும் பெற்ற வீரர்கட்கமைந்த சான்றாகவும் வழக்கில் நிலைத்துள்ளமை புலனாம். இதைப் போன்றதே பொன்னும் வாளும் என்பது மேலே புலப்படுத்தப் பெற்றது.

## பசும்பொன்-வகை

பொன் என்ற பொதுப்பெயர், பொலம் என்ற சொல்லாட்சியின் வழியே நடை பெற்றது என்பதனைத் தொல்காப்பியம் தருதலான், ஒளியும், மாசு பெறாத தன்மை யும், திண்மையும், நயமும், திறமும், தரமும் பெற்ற உலோகம், பொன் என்ற பெயரையே சிறப்பாகப் பெற்று விளங்கலா யிற்று. இதனைப் 'பசும்பொன்' என்றும் பண்புடன் பகர்ந்துள்ளனர். தமிழகம்

மேலை நாடுகளோடு கொண்டிருந்த வணிகத்தின் பயனாகவே பொன்னாலான பொருளாதாரத்தினை நன்கு பெருக்கியுள்ளது. ஒளிநிலை, தரம் ஆகியவற்றால் வகைசெய்து வணிக வழக்கில் நிலவிய பொன், சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்ற நான்கு வகையில் புகார்த்துறையிலும், மதுரையிலும் விற்பனை செய்யப்பட்டிருந்ததைச் சிலப்பதிகாரம் குறிக்கின்றது.

## செம்பொன்—செம்பு

தூய உலோகங்களுள் பொன்னுக்கு அடுத்த மதிப்பில் இருந்தது செம்பொன் என்னும் செம்பாகும். இதன் கனிப்பொருள்கள் தமிழகம் முழுவதும் ஆங்காங்கே செம்பாறைப் படிவங்களாகக் கிடைக்கின்றன. உருக்குப் பாறைகளாகவே காணப்படுதலினால் 'செம்பு உருக்காம் பாறை' என்று பெயரிட்டுள்ளனர். இப்பெயர் கால வழக்கில் தேய்ந்து திரிந்து 'செம்பூரான் பாறை' என்றாகியுள்ளது.

தமிழகத்தின் உலோக கால மக்கள் இரும்பைப் பயன்படுத்தியுள்ளாராயினும், தொடர்ந்து செம்பினையும் அதன் கலப்பு நிலை உலோகமாகிய வெண்கலத்தினையும் பயன்படுத்தியுள்ளனரென்பதனை, ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியினால் அறிய முடிகின்றது. கி மு. 5000 அளவில் இரும்பின் பயனைத் தமிழ் மக்கள் கண்டுள்ளனர். கி. மு. 1000-அளவிலிருந்தே செம்பு என்னும் உலோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. செம்பினை அரண்கட்குப் பயன்படுத்தியுள்ள செயலே முதற்கண் நிகழ்ந்துள்ளது. இதனைச் ''செம்பு புனைந்து இயற்றிய சேண்நெடும் புரிசை'' என்ற புறப்பாட்டடிகள் புலப்படுத்தும்.

## செம்பு செய்குநர்

இயற்கையாகத் தமிழகத்தில் கிடைத்த செம்பின் கனிப்பாறைகளைச் சிதைத்துக் குவையிலிட்டு உலையில் உருக்கிப் பிரித்தெடுக்கும் கடிய செயலுடைய உருக்குத் தொழிலாளர் 'செம்பு செய்குநர்' என்று குறிக்கப்பட்டனர்.

செம்பு செய்குநர் புகார் நகரின் மருவூர்ப்பாக்கத்தில் இருந்தார்கள் என்பதனையும், மதுரை அங்காடி வீதியில் செம்பிற் செய்நவும் விற்பனைக்கு உரியதாக இருந்தன என்பதனையும், சிலம்பு பகுத்துக் கூறுகின்றது. (செம்பு செய்குநர் என்பதற்குச் செம்பினால் பொருள்களைச் செய்பவர் என்று பொருள்கொள்ளுதலினும், செம்புக் கனிப்பொருளை உலையிலிட்டு உருக்கித் தூய செம்பினைச் செய்யும் உருக்குத் தொழிலாளர் என்று கொள்ளுதலே பொருத்தமாகும்.)

## கரும்பொன்

கருமை நிறமுடன் உருக்குக்கற்களாகக் கிடைக்கும் இவ்வுலோக மூலத்தினை உலையிலிட்டு உருக்கித் தனித்துப் பிரித்தெடுப்பினும் கருமை நிறமுடன் கானப்படுதலின் இதனைக் கரும்பொன் என்றனர். இவ்வுலோகத்தின் அணுச்செறிவு, கனப்பாங்கு ஆகியவற்றால் இரும்பொன் என்ற பெயரால் சுட்டப்பெற்றதாகி, அப்பெயர் கால வழக்கில் 'இரும்பு' என்றாகியுள்ளது. சங்க காலத்திலேயே இரும்பு என்ற பெயர் பொன் வகையிலொன்றாகக் கூறப்பட்டுள்ளது. இரும்புத்தொழில் செய்தவர் கொல்லர் என்று குறிக்கப்பட்டனர். ''இரும்பு செய் கொல்லென'' (அகம்-72:6), ''வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே'' (புறம்-312:3), ''கருங்கைக் கொல்லர்'' (சிலம்பு-5:29).

## வெண்பொன்—வெள்ளி

வெள்ளிய ஒளியும் நிறமும் பொருந்திய பொன்னாதலின் வெள்ளி எனப் பெயர் பெற்றது. இது தூய உலோகங்களிலொன்றாகும் இப்பொன் (உலோகம்) பாபிலோன், மெசபடோமியா ஆகிய நாடுகளில் கனிப்பொருளாகக் கிடைத்தலினால், வணிகவழி தமிழகத்தில் புழக்கதிற்கு வந்த உலோக மெனலாம்.

வெள்ளியின் குறைந்த விளைவான களிப்பொருளிலிருந்து ஆக்கப்படுவது வெள்ளி ஈயம். அதன் கழிவுப்பொருளை மேலும் உருக்கினால் கருமை நிறத்துடன்

உண்டாவது கரிய ஈயம். இதுவே கார்ஈயம் என்றாகி, 'காரீயம்' என்று வழக்கில் நிலைத்துள்ளது. ஈயம் தனிநிலை உலோகமாகும்.

தூய வெண்மை நிறம் பெற்றதால் வெள்ளி என்று குறிக்கப்பெற்ற மொழிநிலையைக் கருத்திற்கொண்டு சிந்திக்கின், தூய மஞ்சள் நிறத்தினைப் பண்டைத் தமிழர் பொன்நிறம் என்று குறித்துள்ளனர் என்று கொள்ள முடிகின்றது—(பொன்நிறம்—தூய மஞ்சள் நிறம்).

## வெண்கலம்

வெண்மை நிறமுள்ள பாத்திரம் என்ற பொருள் தரும் பெயருடைய உலோகம். இது உயர் கலப்பு உலோகமாகும். உலோகத் தொழிலாளர்கள் கலப்பு உலோகங்களை உருவாக்கியதில் களிம்பு கொள்ளாத வகையில் ஆக்கிய கலப்பு உலோகம். செம்போடு வெள்ளீயம் உருகிய நிலையில் சிறிதளவு நாகத்தினையும் சேர்த்து உருக்குக் கலவையாக்கி உண்டாக்கும் உலோகம். இக் கலப்பு உலோகத்தாலான பொருளை மற்றொரு உலோகக் கம்பியால் தட்டினால் இனிய நல்லோசை எழும். அவ்வோசை 'கிண்' என்ற சொல்லோசையாக அலைநிலை பெற்று நிற்பதால், அத்தகைய நல்லோசை எழுதற்கமைந்த வெண்கலத்தாலான குழிந்த பாத்திரம் 'கிண்ணி' என்று பெயர் பெறுவதாயிற்று. மற்றும் வெண்கல வுலோகத்தில் கிண்ணெனும் நல்லோசை பிறத்தலான் 'கிண்ணி' என்ற சிறப்புப் பெயரும், முறியும் தன்மை உடைமையால் 'முறி' என்ற காரணப் பெயரும் இவ்வுலோகம் பெற்றதெனலாம். வெண்பொன் என்ற பெயர் தூய உலோகமாகிய வெள்ளிக்குச் சிறப்பாக அமைந்தால், கலப்பு உலோகமாக இதனைக் கண்டறியும் குறிப்பாக, இதனாலாக்கப்பட்ட கலத்தின் பெயராலேயே 'வெண்கலம்' என்று சுட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

## பித்தளை

பித்தளை கலப்பு உலோகமாகும். செம்பு, (ஈயம்,) நாகம் ஆகிய கூட்டினால் உருக்கி உண்டாக்கும் உலோகம். இதன் நிறம் பசுமை இணங்கிய வெளிர்பொன் நிறமாகும் (பொன்நிறம்—மஞ்சள்நிறம்). பித்தளை பொன்னைப் போன்ற நிறம் பெற்றதால் 'பித்தளை ஆடகம்' என்றும் பெயர் பெறும். போலிப் பொருளால் வஞ்சனை செய்யும் செயலை, 'பித்தலாட்டம்' (பித்தளை மாறாட்டம்) என்று கூறுதலும், இவ்வுலோகம் தரத்தால் குறைந்ததாயினும் நிறத்தால் பொன்னை ஒத்திருக்கும் மாறாட்டம் கருதியேயாகும்.

## தரா

இவ்வுலோகம், மிகக் கலப்பு உலோகமாகும். இது தன்மையும் தரமும் நிறமும் தராத மட்டக் கூட்டு உலோகமாதலின், மதிப்புத் தராத மட்ட உலோகம் என்ற விரிபொருளைத்தரும் குறிப்பில் 'தரா' என்னும் பெயரால் தொழிலாளர்கள் குறித்துள்ளனர்.

இவ்வுலோகம், பித்தளைத் துகள்கள், செம்புத்துகள்கள், வெண்கலச் சிதைவுகள், நாகம், காரீயம் ஆகியவைகள் வீண்போகாமல் இயன்ற அளவில் தூய்மை செய்து கலந்து, மண்குவையிலிட்டு உருக்கி வார்த்தெடுக்கும் மிகுகலப்பு உலோகம். தரா இருவகைப்படும். கலப்பின் தன்மையால் வெளிர்நிறம் மிகுந்திருப்பின், 'வெட்டைத் தரா' என்றும், பித்தளை நிறமுள்ளதாக அமைந்திருப்பின் 'நயத்தரா' என்றும் தொழிலாளர் பெயரிட்டுப் பிரிப்பர். உலோகத்தால் பாத்திரங்களையும் பிற பொருள்களையும் உருவாக்கும் கன்னார் எனும் கம்மாளர்கள், வெண்கலத்திற்குப் போலியாக உருவாக்கிய மட்டக் கலப்பு உலோகமே தரா வாகும்.

வெண்கலத்தாலும் பித்தளையாலும் விளக்கு வகைகள் வார்ப்புருவாக்கப் பெறினும், தொழில் முறையில் தரா கையாளப்

பெற்றுவருவதனை இன்றும் காணமுடிகின்றது.

சோழர்காலக் கல்வெட்டுகளில் தராவினால் செய்யப்பட்ட கோயில் விளக்குகளும், பாத்திரவகைகளும், திருமேனிகளும் குறிக்கப்பெற்றுள்ளன.

''செம்புத் தராவால் எழுந்தருளிவித்த திருமேனி பொன்னார் மேனியார்''
(தெ. கல், தொ. 5. கல். 644.)

''தரா விளக்கொன்று நிறை ஐம்பத்து முப்பலம்''; தரா ''கெண்டி ஒன்று நிறை ஐம்பத்தெண் பலம்''; 'வெண்தரா சங்குக்கால், (தெ. கல். தொ. 5. கல். 521). தரா பற்றிய விளக்கம் தமிழ் லெக்சிகனில் விளக்கப்பட்டுள்ளது.

## ஐம்பொன்

வெள்ளி, செம்பு, ஈயம், நாகம்—பசும் பொன் ஆகிய ஐந்துவகையான உலோகங்களை ஒன்றாகச் சேர்த்து உருக்கி உருவாக்குவது ஐம்பொன் ஆகும். உலோக வார்ப்பாகச் செய்யப்பெறும் தெய்வச் சிலைகள் பெரும்பான்மையும் இவ்வாறான கலப்பு உலோகத்தினாலேயே செய்யப் பெறுதல் வழக்காகும். 'ஐம்பொன்' என்ற வழக்கு இன்றும் இருப்பதினால் உலோகத் தினைப் பொன் என்ற பெயரால் வழங்கிய பண்டைய மொழிநிலை இன்றும் வழக்கில் உள்ளதனை அறியலாகும்.

## கலைவளம்

தமிழக உலோகத்தொழில் வளர்ச்சியினை அறிதற்குச் சங்ககால இலக்கியங்கள் சான்றாக இருப்பினும், தொடர்ந்து நாட்டுவழக்கில் உலோகக் கலைத் தொழிலின் உருவாக்கம் எவ்வெவ்வாறு நிகழ்ந்துள்ளன என்பதைக் கல்வெட்டுகள் தரும் செய்திகளால் நன்கு அறியமுடிகின்றது.

கல்வெட்டுகள் பெரும்பான்மையும் திருக்கோயில்களிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. அவைகள், சமயத்துறையில் கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கமைந்த திருவுருவங்களை உலோகங்களினால் உருவாக்கிவைத்த செய்திகளையும், அவற்றிற்குரிய வழிபாட்டிற்கமைந்த உலோகப்பொருள்களையும், பொன்னாலும் மணிகளாலும் உருவாக்கி வைத்த அணிகலன்களையும் மிக விளக்கமாகத் தரும் சான்றுகளாக உள்ளன.

## செப்புச் சிலைகள்

தெய்வச் சிலைகளின் உலோக உருவ அமைப்பினைப் பல்லவர்காலம் முதலாகக் காணமுடிகின்றது. சோழர்காலச் சிலைகளில் ஒப்பனைக் கலை வளர்ச்சி உயர்வு பெற்றுள்ளது. தெய்வமூர்த்தங்களாகிய சிலைகளை, ஆகமம், சிற்பநூல், புராணம் ஆகியவை தரும் நெறிமுறைகட்குரிய வடிவமாகவே, சிற்பி மனத்தில் உருவாக்கியதை உலோகத்திலும் வடித்துத் தந்துள்ளானென்பதனை, அவற்றைக் காணும்போது உணர முடிகின்றது. பொன் வெள்ளி ஆகிய உயர் உலோகங்களினால் சிலைகள் வார்க்கப் பெற்றிருப்பினும், செம்பினால் செய்தமைக்கப்பெறும் வழக்கே மிகுந்துள்ளது.

தெய்வங்கட்குச் செம்பினால் உருவாக்கி அமைத்த சிலைகள் 'திருமேனிகள்' என்றும், அரசர், அடியார்கள் ஆகியோர் கட்கு உலோகத்தால் செய்யப்பட்ட உருவங்கள் 'பிரதிமங்கள்' என்றும் கல்வெட்டுக்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

ஒரு பொருளின் உருவ அமைப்பினைப் போன்றோ சாயலுடனோ செய்யப்படுவது 'படிமம்' என்று பெயர் பெறும். இத்தமிழ்ச் சொல்லினைக் கையாண்ட ஆரியம் திரித்து 'பிரதிமம்' என்று கூறியுள்ளது. தொல் காப்பியத்தில் படிமம் என்ற சொல் பயின்று வருதலின், அதற்கு முன்னரே தமிழ் வழக்கில் இச்சொல் வழங்கப்பட்டுள்ளது என்பது போதரும் - (தொல்-அகத்திணை-நூற்பா-28).

## கனம், பொல்லல்

திருமேனிகள் கனமாகச் செய்யப்பட்டிருந்தன என்பதனால், உலோக

வார்ப்புத் தொழில் முறையில் உள்கூடு இல்லாமல் கெட்டியாக வார்க்கப்பட்டன என்பதும், கனப் பொல்லாக வார்க்கப் பட்டது என்பதனால், உள்கூடு உள்ள முறையில் உலோக வார்ப்புத் தொழில் கலைநுட்பமுடன் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதும் புலனாகின்றது. இதனை

1. ''கீழ்க்கிடந்த முசலகனோடுங்கூட பாதாதிகேசாந்தம் முக்காலே அரைக்கால் முழ உசரமும், ஸ்ரீ ஹஸ்தம் நாலும் — ஜடைமேல் கங்கா பட்டாரகியும் ஜடை ஒன்பதும் பூமாலை ஏழும் உடைய கனமாக எழுந்தருளிவித்த ஆட வல்லார் திருமேனி ஒன்று.''

2. "குளம்பில் நின்றுங் கொம்பளவுஞ் செல்ல ஒரு முழமே அறுவிரலே ஐஞ்சு தோரை உசரம் உடைய கனபொல்லலாகச் செய்த ரிஷபம் ஒன்று''—(தெ. கல். தொ. 2. பகுதி 2. கல். 42, 46).

என்னும் முதல் இராசராசன் கல்வெட்டுப் பகுதிகள் உணர்த்தும்.

## சோழநாட்டுக் கலைஞர்

தமிழக உலோகக் கலைஞர்களில், சோழர் காலத்தில் வாழ்ந்திருந்த 'கம்மாளர்' என்னும் கலைஞரே சிறந்த வடிவமைப்பும், உயிர்ப்பும், எழிலும், நொசிப்பும் பொருந்திய உலோகச் சிலைகளை வார்த்துத் தந்துள்ளனர். இன்றும், சோழர்காலச் சாயல் குன்றாத சிலைகளை உருவாக்கும் கம்மாள மரபினர், 'பத்தர்' என்ற பட்டப் பெயருடன், சோழநாட்டில் குடந்தை, தாராசுரம், நாச்சியார்கோயில் ஆகிய ஊர்களில் பரம்பரையினராக வாழ்ந்து வருவதுடன், உலோக உருக்கு, வார்ப்புத் தொழிலாளராகவே இருந்து வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## பொற்கலை வளம்

சிலம்பில், மாதவி ஆடரங்கு ஏறுதற்குத் தன்னை ஒப்பனை செய்து கொள்ளும் திறப்பினை அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள்—

விரல் நல்லணி, மோதிரம், பரியகம், கண்டிகை, தோள்வளை, சித்திரகூடகம், செம்பொற் கைவளை, வால்வளை, பவழப் பல்வளை, பூண்ஞாண், கழுத்தாரம், தூமணிகோவை, கடிப்பிணை, தொய்யகம், புல்லகம், தலைக்கணி, நூபுரம், பாடகம், சதங்கை, மரகதத் தாள்செறி, குரங்குசெறி ஆகிய அணிகலன்களை முறையாக அணிந்தாளென்று கூறுகின்றார். பொன்னாலும் மணிகளாலும் கலைத்திறன் வாய்ந்த அணிகலன்களை அக்காலப் பொற் கொல்லர் திறம்பெறச் செய்தளித்துள்ள உயர் உலோகக் கலைத்திறன் இதனாற் புலப்பாடுறும். மற்றும், ''கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய நுண்வினைக் கொல்லர்'' என்னும் அடிகள், தமிழகப் பொற்கொல்லரின் கலை வளத்தினையும் புலப்படுத்தும்.

## கம்மக்கலை

கம்மத்தொழிலால் கலைவளம் பொருந்தியதாக உருவாக்கப் பெறுவதே அணிகலன்களாகும். பொன்னணிகள் பல்லவர், சோழர், பாண்டியர் அரசியலில் தமிழகத்தில் எத்தகைய பாங்குடன் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதைக் கல்வெட்டுச் செய்திகள் நன்கு புலப்படுத்துகின்றன.

முதல் இராசராசன் காலத்தில் செப்புத் திருமேனிகட்குச் செய்தளிக்கப் பட்ட அணிகலன்கள் பல்வகைத் திறங்களுடன் காணப்படுகின்றன.

சோழவரசர்க்குரிய அணிகலன்களைச் செய்தளிக்கும் பொற்கலைஞன் 'தட்டான்' என்ற பொதுப்பெயராலும், 'செம்பியன் மாதேவிப் பெருந்தட்டான்,' 'ஒலோக மாதேவிப் பெருந்தட்டான்' என்ற சிறப்புப் பெயர்களாலும் குறிக்கப்பட்டதுடன், 'தட்டாரக்காணி' என்ற பெயரால் இறையிலி நிலமும் பெற்றுள்ளனர்.

'' நவரத்ன மோதிரம் ஒன்றில் கட்டின வயிரம் ஒன்றும், நீலம் ஒன்றும், முத்து ஒன்

றும், புஷ்பராகம் ஒன்றும், கோமேதகம் ஒன்றும், பவழம் ஒன்றும், மரகதம் ஒன்றும், வைடூரியம் ஒன்றும், மாணிக்கம் ஒன்றும் உட்பட நிறை கழஞ்சறை யேய் முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி''—(தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு, தொகுதி-2).

## நாணயக்கலை

பண்டைத் தமிழத்தில் வாணிபம், பண்டமாற்று மதிப்பீட்டிலேயே பெரும் பான்மையும் நிகழ்ந்துள்ளது, வாணிப வளர்ச்சிக் காலமாகிய சங்ககாலத்தில், பொருள்மதிப்பீட்டுச் சின்னமாகவும், நம் பிக்கைக்குரிய பொருளீடாகவும் நாணயங் கள் பொன்னால் செய்யப்பட்டுள்ளன. அவை, கா, காசு, காணம் ஆகிய பெயர் களில் சமுதாய வாழ்வியல் வழக்கில் இருந் துள்ளதனைப் பதிற்றுப்பத்து, சிலம்பு, மேகலை முதலான இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வரலாற்றில் பல்லவர்காலம் முதலாக நாணயங்களைப் பற்றி அறிய முடிகின்றது. பல்லவர் பாண்டியர் சோழர் ஆகிய அரசர் கள் வெளியிட்ட நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு, பித்தளை ஆகிய உலோ கங்களில் அச்சுப் பொறிப்புடன் உருவாக்கப் பட்டுள்ளன.

பெரும்பான்மையும் வட்டவடிவில் உரு வாக்கப்பட்டுள்ள இந்நாணயங்களில், சுவத் திகம், இடபம், சிவலிங்கம், திருவிளக்கு, சங்கு சக்கரம், வில் மீன் புலி, கொற்றக் குடை, கவரிகள், குதிரை, சிங்கம், மனித உருவம் ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட் டிருப்பதுடன், எழுத்துக்களால் அரசர் களின் பெயர்களும் பொறிக்கப்பட் டுள்ளன.

சோழர்காலக் காசுகளில் உத்தம சோழன் காசுகள் காலத்தாற் முற்பட்ட தாகும். முதல் இராசராசன் வெளியிட்ட பொற்காசு 'இராசராசன் மாடை' என்று பெயர் பெற்றுள்ளது.

பாண்டிய மன்னர்களில், கி. பி. 9 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்த ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியன் காசுகளே காலத்தாற் முற்பட்டனவாகக் கிடைத் துள்ளன. அக்காசுகளில் ஒருபுறம், இரண்டு மீன்களும், மறுபுறம் 'அவனீப சேகர கோளகை'' என்ற பெயரும் பொறிக்கப் பட்டுள்ளன. இதைப் போன்றே, ஸ்ரீ வரகுண, சோணாடு கொண்டான், கச்சி வழங்கும் பெருமான், எல்லாம் தலையா னான் என்ற பெயர்கள் பொறிக்கப்பட்ட தாகப் பாண்டியர் நாணயங்கள் அமைந் துள்ளன.

இவ்வாறமைந்த நாணயங்களின் அமைப்பினைக் கொண்டு தமிழக உலோகக் கலைஞர் நாணயப் பொறிப்புக் கலையில் எந்த அளவு வளர்ச்சி பெற்றிருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. நாணயங் கள் உருவாக்கப் பெற்ற தொழிற் கூடம் 'அக்கசாலை' என்ற பெயரால் குறிக்கப் பட்டிருந்ததனைக் கல்வெட்டுகள் புலப் படுத்துகின்றன. இச் சாலையில் உலோகக் கலை நயம் மிகுந்த பொற்கொல்லரும், கம்மாளரும் இருந்து நாணயங்களை அச்சிடும் பொறிப்புக் கலையினை வளர்த் துள்ளனர்.

பணம், பழங்காசு, புதுக்காசு, அன்றாடு நற்காசு, ஈழக்காசு, பொன்காணம், ஆணை அச்சு, பஞ்ச சலாகை அச்சு, கழஞ்சுபொன், வாளால் வழிதிறந்தான் பணம், நெடுங் கொடிகாசு, அழகிய திருவையாறன், திறை குறையாப் பழங்காசு என்ற பெயர்களில் கி.பி.7ஆம் நூற்றாண்டு முதலாக நாணயங் கள் வழக்கிலிருந்ததைக் கல்வெட்டுக்கள் உணர்த்துவதால், தமிழக வரலாற்றில் நாணயப் பொறிப்புக் கலை வளர்ச்சி பெற்றிருந்ததனை அறிய முடிகின்றது.

## செம்பின்மேல் பொன்கடுக்கும் கலை

செம்பால் செய்த பொருள்களின்மீது பொற்றகட்டினைக் கடுக்கும் இணைப்புத் தொழிலும் சோழர் காலத்தில் சிறந் திருந்தது. கடுக்குதலாவது, செம்பினால் செய்யப்பட்ட குடம் போன்ற பொருள்

களின்மீது, பொற்றகட்டினை நகாசு செய்து போர்த்திப் பதிய வைத்தல் என்னும் தொழில் நிலையாகும். இதனைச் சுருக்குதல் என்றும் கூறப்பட்டுள்ளது. இக் காலத்தில் 'Gold Covering Work' என்று கூறுவர்.

இத்தகைய உலோகக் கலையினால் தஞ்சை இராச ராசேச்சரத்தின் விமான உச்சியிலுள்ள கலசம் செய்யப்பட்டுள்ளது. கலசம் 3085 பலம் நிறையுடைய செப்பால் செய்யப்பட்டு, அதன்மேல் 2926½ கழஞ்சு எடையுடைய பொற்றகட்டினைப் பொருத்திச் சுருக்கப் பட்டுள்ளதனைக் கல்வெட்டொன்று புலப்படுத்துகின்றது.

''சண்டேசுவரர் கோயிலில் வைத்த செம்பின் மேல் பொன்கடுக்கின குடம் ஆடவல்லான் என்னும் கல்லால் நிலை எடுத்துக் கல்லில் வெட்டின'' என்பது தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு.

## முலாம் பூசும் கலை

இக் கலை உலோக நகாசுக் கலையின் ஒரு பகுதியாகிய மெருகுத் தொழிலின் திறனாகும். இக்கலை தமிழகத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்ததனைக் கல்வெட்டுச் செய்திகள் அறிவிக்கின்றன. தரத்தில் குறைந்த உலோகத்தின்மீது பொன்னைக் கரைசல் நிலையில் பூசுதலாகிய தொழிலே முலாம் பூசும் தொழிலாகும். இதனை, 'Gold Gilting Work' என்று கூறுவர்.

செம்பினாலாய பொருள்களின் மீது பொன் பூசுதல் தொழிலாக இன்றும் நடைபெற்று வருகின்றது. சோழர் காலத்திலேயே பொன் முலாம்பூசும் கலை நன்கு நாட்டில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதனைத் திருமழபாடிக் கல்வெட்டால் அறிய முடிகின்றது.

''செம்பின் மேல் பொன் பூசின மகுடம்'' என்பது கல்வெட்டுத் தொடராகும்.

## செம்பின்மேல் பித்தளை முலாம்

செம்பின் மேல் பொன் பூசுதல் இயல்பு நிலையாகும். ஆனால் செம்பின் மேல் பித்தளை பூசுதல் அரிய தொழில் நுட்பமாகும். இதனை முதல் இராசராசன் காலத்துப் பொற்கலைஞர் நன்கு செய்துள்ளார்.

இராசராசனின் விருப்பப்படி அர்த்த நாரீசுவரர் திருமேனியினைச் செம்பில் உருவாக்கிய வார்ப்புக் கலைஞர், உமா பாகம் தனித்துப் புலப்படுமாறு உடலிற் பாதியுருவைப் பித்தளை முலாம் பூசிக் காட்டியுள்ள கலைத்திறன் சிந்தனைக்கு விருந்தாகச் சிறந்துளது. முலாம் பூசும் கலையில், இம்முறை கைத்திறனும் கலைத்திறனும் தொழில் நுட்பமும் பொருந்தியதாகும். இத்தகைய முலாம் கலை வளர்ச்சியினைச் சோழர்கால உலோகக் கலைஞர்கள் கையாண்டுள்ளமையினை,

''உமாபாகம் செம்பின்மேல் பித்தளை கொண்டு கனமாக எழுந்தருளுவித்த அர்த்தநாரீஸ்வரர் திருமேனி ஒன்று'' (தெ. கல். தொ. 2 பகுதி பகுதி-2 கல். 39) என்னும் கல்வெட்டுப் பகுதி நன்கு உணர்த்துகின்றது.

## கலைநலம்

செம்பு, இரும்பு, வெள்ளி, ஈயம், நாகம், பொன் ஆகிய தனிநிலை உலோகங்களும் வெண்கலம், தரா, செப்புத்தரா ஆகிய கலப்பு உலோகங்களும் உருக்குமுறையால் தமிழகக் கன்னார்கள் உண்டாக்கிக் கொண்டதுடன், அவற்றால் பொருள்களையும் அணிகலன்களையும் இரத்தினங்கள் வைத்திழைக்கப்பட்ட நுண்கலைத்திறனமைந்த பொன்னணிகளையும் படைத்துத் தந்ததுடன், பொன்பூசுதல், கடுக்குதல் ஆகிய தொழில் திறனாலும் உலோகக் கலை வளர்ச்சியினைத் தமிழகத்தில் பெருக்கியுள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

## நிறைவுரை

இவ்வாறாகத் தமிழகத்தின் பண்டைய மனிதன் நிலத்தில் செம்பு இரும்பு ஆகிய உலோகக் கனிகளைக் கண்டறிந்து,'பொன்' என்னும் பெயரால் சுட்டியதோடு, அவற்றால் படைக்கலங்களும் பொருள்களும் செய்யும் தொழிலையும் கற்றறிந்து, கால வளர்ச்சியில் பொன் வெள்ளி ஆகிய உயர் உலோகத்தினை உணர்ந்து, அவற்றால் அணிகலன்களையும் ஆக்கிக் கொண்டுள்ளான் என்பதும்,

சங்க காலத் தமிழகம் இத்துறையில் முன்னேற்றம் பெற்றிருந்ததனை இலக்கியங்கள் தரும் செய்திகளால் அறிய முடிகின்றது என்பதும், அதன் வளர்ச்சியாகவே.

வரலாற்றுக் காலத்தில், கொல்லர், பொற்கொல்லர், கன்னார் என்னும் பெயர்களோடு உலோகத் தொழிலைத் திறம்பெற வளர்த்த கலைஞர்கள், வார்ப்புக்கலை, கடுக்கும் தொழில், முலாம் பூசும் தொழில் ஆகிய துறைகளில் சோழர் காலத்தில் மிகவும் சிறந்திருந்தார்கள் என்பதும், அவர்களால் தமிழக உலோகக் கலை வளர்ச்சி பெற்றிருந்தது என்பதும் நன்கு புலனாகும்.

# ஐயன் ஆரிதன்

புலவர் செ. இராசு,
எம்.ஏ.,



இவர் பெரியார் மாவட்டத்தில் உள்ள வெள்ளமுத்துக் கவுண்டன் வலசில் 1938இல் பிறந்தவர்; 1959 முதல் 1981 வரை ஈரோட்டில் தமிழாசிரியராகவும், 1981-82இல் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஆய்வாளராகவும் பணிபுரிந்தவர்; 'கொங்கு' என்னும் ஆராய்ச்சித் திங்களிதழுக்கு 5 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தவர்; ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் கொங்கு நாட்டுக் கலைக்கூடம் உருவாக உதவியவர்.

50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர்; 1982 பிப்ரவரி முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டுத் துறையில் பணிபுரியும் இவர் தொகுத்த ''தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50'' என்னும் நூல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் நூலாக வெளி வந்துள்ளது.

## புறப்பொருள் வெண்பா மாலை:

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத் தின் பின்னர்த் தோன்றிய தமிழ் இலக்கண நூல்களுள் புறப்பொருள் வெண்பாமாலை யும் ஒன்று. 'புறப்பொருளுக்கு இலக்கிய மாகிய வெண்பாக்களின் வரிசை' என்று இந்நூற் பெயருக்குப் பொருள் காண்பர் அறிஞர்.[1] டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களால் கி. பி. 1895-இல் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றது. டாக்டர் ஜி. யூ போப் அவர்களால் இந்நூலின் சில பகுதிகள் ஆங்கில மொழியாக்கம் செய்யப் பெற்றன.[2]

'தொல்காப்பியத்தின்பின் அகப் பொருள் இலக்கணம் பல தோன்றினும், புறப்பொருள் பற்றித் தோன்றிய தனிநூல் ஐயனாரிதனார் செய்த புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூல் ஒன்றேயா கும்' என்பது இலக்கிய வரலாற்று அறிஞர் மு. அருணாசலம் அவர்களின் கருத்தாகும்.[3]

புறப்பொருள் வெண்பாமாலைப் பகுதி களை இளம்பூரணர், நச்சினார்க்கினியர்,

(1) உ. வே. சாமிநாத அய்யர், புறப்பொருள் வெண்பாமாலைப் பதிப்பு-முன்னுரை பக். 5.
(2) டாக்டர் மு. வரதராசனார், இலக்கிய வரலாறு-பக். 290.
(3) இலக்கிய வரலாறு, ஒன்பதாம் நூற்றாண்டு-முதல் தொகுதி, பக். 249.

பேராசிரியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், புறநானூற்றின் பழைய உரையாசிரியர் ஆகியோர் எடுத்துக் கையாண்டுள்ளனர். புறத்திரட்டிலும் இந்நூலின் பல செய்யுட்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

இந்நூல் 'வெண்பாமாலை என்றே' பல இடங்களிலும் அழைக்கப் பெற்றுள்ளது.[4] இச் சிறப்பு மிகு நூலாசிரியர் 'ஐயன் ஆரிதன்' அவர்களின் பெயர் அமைப்புப் பற்றிச் சில கருத்துக்களைக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## நூலாசிரியன் ஐயன் ஆரிதன் :

புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரத்திலும், அந்நூல் பதினெட்டாம் நூற்பாவிலும், நூலாசிரியர் பெயர் கூறப் பெறுகின்றது.

> ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட
> வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
> ஐயனா ரிதன்[5]
> மெய்யி னார்தமிழ் வெண்பா மாலையுள்
> ஐயனா ரிதன்[6]

'ஐயனாரிதன்' என்ற பெயரை 'ஐயன் ஆரிதன்' என்று பிரிக்கலாம். இந்நூலாசிரியரின் சிறப்புநோக்கி ஆர் விகுதி கொடுத்து 'ஐயன் ஆரிதனார்' என்றே உரையாசிரியர்களும், இலக்கிய ஆராய்ச்சியாளர்களும் எழுதினர்.

புணர்ச்சி விதிப்படி ஐயன்+ஆரிதனார்-ஐயனாரிதனார் என எழுதப்பெற்றதால், இவர் பெயரை'ஐயனார் இதனார்' என்றே தமிழாசிரியர்களும், மாணாக்கர்களும் தவறாக உச்சரித்து வந்தனர்[7]-வருகின்றனர்.

## தமிழ் ஈழப் பேராசிரியர் கருத்து :

ஆர்வமிக்க தமிழ் ஈழத் தமிழாசிரியர்களுள் தொல்புரக்கிழார் புலவர் நா. சிவபாதசுந்தரனார் ஒருவர். அவர் 1972ல் 'புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி' என்ற அரிய நூல் ஒன்றை எழுதியுள்ளார்.[8]

அவர் ஐயனாரிதன் என்ற பெயரை 'ஐயனார்+இதன்' என்றே பிரித்துள்ளார். ஆதன் என்ற சேரர் குடும்பத்துப் பெயரே (செல்வக் கடுங்கோ வாழியாதன்; நெடுஞ் சேரலாதன்) இதன் என்று திரிந்திருக்க வேண்டும் என்று இவர் கருதுகின்றார். 'ஐயனாராதன்' என்பதை ஏடு பெயர்த்து எழுதுவோர் பிழைபட (ஐயனாரிதன் என்று) எழுதியிருக்க வேண்டும்' என்பது சிவபாதசுந்தரனார் கருத்து.[9]

## மு. இராகவையங்கார் கருத்து :

அறிஞர் மு. இராகவையங்கார், ஐயனாரிதனார் ஹரித கோத்திரத்தவர்; அரித கோத்திரத்திற்கு உரியவர் ஆரிதன் ஆகலாம் என உரைத்தார்.[10]

மேற்கண்ட இருவர் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ள இயலாதவை. எந்த இடத்தும் இவர் பெயர் 'ஆதன்' எனப் பயின்று வரவில்லை.

ஆரிதன் என்பதை இங்குக் குலப்பெயராகக் கொள்ளல் இயலாது. குலம் அல்லது கோத்திரப் பெயராயின் அது இயற்பெயருக்கு முன்னர்ப் பயின்று வரும்; அதுவே பண்டைய வழக்கு.

---

(4) 'வெண்பாமாலை' எனப்பெயர் நிறீஇ'-புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம், வரி 11; நூற்பா 18 'பன்னிருபடல முதனூலாக வழி நூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரும் இது கூறினார்'-தொல், மரபு-நூ 94-பேராசிரியர் உரை.

(5) புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம் 7-9.

(6) மேலது-நூற்பா 18-7, 8.

(7) கட்டுரையாளரும் இவ்வாறே தவறாகப் பொருள் உணர்ந்திருந்தார்.

(8) யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கத்தார் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

(9) புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி-பாயிர உரைப் பகுதி. புலவர் நா. சிவபாத சுந்தரனார் (தமிழ் ஈழம்) 1972.

(10) பெருந்தொகை, குறிப்புரை-பக். 629.

ஆரிதன் திருவரங்கன் கேசவன் 11
ஆரிதன் அண்ணாத்தடிகள் 12
ஆரிதன் திவாகரன் தாழி
ஆரிதன் திருவரங்கன் சங்கர நாராயணன் 13
ஆரிதன் குறுக்கை காவலன் ஆராவமுது 41
ஆரிதன் நாரணன் சோமன் 15
ஆரிதன் தேவன் சோமன் 16
ஆரிதன் அரங்கன் இராமன் 17

மேற்கண்ட பெயர்கள் அனைத்துக்கும் முன்னர் வந்துள்ளவை கோத்திரப் பெயர். இவர் அனைவரும் அந்தணர்கள்; அரித கோத்திரத்திற்கு உரியவர்கள். ஆனால் பாயிரம் தெளிவாக ஐயனாரிதனார் சேரர் பரம்பரையினர் என்று கூறுகிறது. எங்கும் சேரர்கட்கு அரிதகோத்திரம் கூறப் பெற வில்லை. சேரர் சந்திராதித்ய குலத்தினர்.[18] சேரர் மரபினரை அரித கோத்திர அந்தணர் என எவ்வாறு உரைப்பது? எனவே அறிஞர் மு. இராகவையங்கார் கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

## உ. வே. சாமிநாதய்யர் கருத்து:

டாக்டர் உ. வே. சா. அவர்கள் ஐயனாரிதனார் என்ற பெயரை சாஸ்தாவின் பெயர் என்றே கருதினார்.[19] ஐயன், ஐயனார் என்ற பெயர்கள் சாத்தனைக் குறிக்கும். ஐயனார் என்று முதற் சொல்லைப் பிரித்தால் எஞ்சியுள்ள பெயர் 'இதன்' அல்லது 'இதனார்' என்பதுதானே. இதற்குச் சாமிநாத அய்யர் கருத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் எவரும் இவ்வாசிரியர் பெயர் குறித்து விரிவாக ஆராயவில்லை.

## ஐயன் :

வெண்பாமாலை ஆசிரியர் பெயரில் முதற்கண் வருவது ஐயன் என்ற சொல். ஐயன் என்பதற்கு வானோர், முனிவர், அந்தணர், ஆசான், சாத்தன், மூத்தோன், தகப்பன் எனப் பல பொருட்களை நிகண்டு தருகிறது.[20] சேரர் மரபினரான இவருக்கு முனிவர், ஆசான், மூத்தோன் என்னும் பொருளில் முன் அடைமொழியாக ஐயன் என்ற சொல்லைச் சேர்த்திருக்கலாம்.

இவ்வாறு பெயருக்கு முன் 'ஐயன்' என்ற அடைமொழியைச் சேர்த்துக் கூறும் வழக்கம் கல்வெட்டிலும், செய்யுள்களிலும் பயின்று வருவதைக் காணுகின்றோம்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள ஒரு கொங்குப் பாண்டியர் கல்வெட்டில் 'ஐயன் காலிங்கராயன்' என்ற தொடர் காணப்படுகிறது.[21]

செய்யுள்களிலும்

'வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரென்று
ஐயன் களந்தைப் புகழேந்தி
ஆண்டான் உரைக்கும் அவரோ நீர் !

எனப் பயின்று வருவதைக் காணுகின்றோம்.

## ஆரிதன்-இயற்பெயர் :

தமிழ்க் கல்வெட்டுகளில் 'ஆரிதன்' என்ற பெயர் இயற்பெயராகக் கொள்ளக்

---

(11) ARE 133 of 1906
(12) ARE 141 of 1906
(13) ARE 473 of 1937-38
(14) SII III 70
(15) SII VIII 617
(16) SII VI 31
(17) SII V 651
(18) பெரியார் மாவட்டம் பொன்னிவாடிக் கல்வெட்டு.
(19) 'ஐயனாரிதனார் என்பது திருவிடைக்கழியைச் சேர்ந்த குராஞ்சேரியிலுள்ள சாஸ்தாவின் பெயர்'-உ. வே. சா. பதிப்பு, முன்னுரை-அடிக்குறிப்பு.
(20) 'வானோர் முனிவர் மறையவன் ஆசான் சாத்தன் மூத்தோன் தகப்பனும் ஐயன்'-பிங்கல நிகண்டு ஒரு சொல் பல பொருள் வகை, பெயர்ப் பிரிவு-209.
(21) ஈரோடு வரலாற்றுச் சங்கக் கல்வெட்டுத் தொகுதி. 1.

கூடிய வகையில் சில இடங்களில் வருகின்றது. திருதாவூர், கருங்காலக்குடி போன்ற ஊர்களில் காணப்பெறும் கல்வெட்டுக்களில்

பங்காட ஆர் இதன்
ஏழை ஊர் ஆரிதன் 22

என்ற பெயர்களைக் காணுகின்றோம்.

முடிவுரை :

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் மரபினரான 'ஐயன் ஆரிதன்' பன்னிரு படலம் கற்று அதன் வழியில் வெண்பாமாலை என்ற பெயரில் புறப் பொருள் பற்றிய நூலொன்றை இயற்றினார். அவர் இயற்பெயர் 'ஆரிதன்' என்பது. சிறப்பு அடைமொழியாக முன்னால் ஐயன் என்ற சொல்லையும் பின்னால் ஆர் என்ற அடைமொழியையும் பெற்று 'ஐயன் ஆரிதனார்' என்று அழைக்கப் பெற்றார் என்று கொள்ள வரலாற்று, இலக்கியக் குறிப்புக்கள் இடந் தருகின்றன.

(22) கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, பக். 46, 51.

# ஆப்பிரிக்கர்தம் உணவு முறை

முனைவர் திருமதி தாயம்மாள் அறவாணன்

இக் கட்டுரையாளர் 23-5-1944 இல் குமரிமாவட்டம் சேந்தன் புதூரில் பிறந்தவர்; தொல்லியல், மொழியியல், பிரஞ்சுமொழி ஆகிய வற்றில் சான்றிதழ்கள் பெற்றவர்: தக்கார் பல்கலைக் கழக இலக்கியத் துறையில் ஐந்தாண்டுகள் ஆப்பிரிக்கர்க்குப் பிரெஞ்சு மொழிவழித் தமிழ் கற்பித்தவர்; பல ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள், அமெரிக்கா ஆகியவற்றிற்குச் சென்று வந்தவர்; ''பெண் மொழி'', பல்லாங்குழி, திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு முதலிய நூல்களை எழுதியவர்; இப்போது சென்னைச் செல்லம்மாள் மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

உலக மாந்தர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி உணவுப் பழக்கம் அமையும். சப்பானியர், அவர்களுக்கு 'என்றே தனி உணவுப் பழக்கத்தை உடையவர்கள். அராபியர், இசுரேலியர், ஐரோப்பியர் அனைவரும் தனிப்பட்ட வகையில் உணவு தயாரித்தலும் உண்ணுதலும் ஆகிய மர பினை உடையவர்கள். உணவு தயாரித்தலி லும் உண்ணும் முறையிலும் வேறுபாடான வழக்கத்தை உடையவர்கள்ஆப்பிரிக்கர்கள். எந்த ஊருக்குச் சென்றாலும் உணவுப் பழக் கத்தை மட்டும் மாற்றிக் கொள்ளுதல் எளி தன்று.

## உணவு – ஊன் உணவு :

ஆப்பிரிக்கர் திராவிட இனத்துச் சில குழுவினரைப்போல் காய்கறி உண்ணுபவர் (Vegetarian) அல்லர். காய்கறி மட்டும் உண்ணும் Vegetarian என்ற பகுப்பே இந்திய நாட்டு இனத்தில் மட்டும்தான் உண்டு. ஆடு, மாடு, கோழி, மீன் முதலிய வற்றின் ஊன் உணவே ஆப்பிரிக்கரின் மிகப் பிரியமான உணவாகும். அவற்றிலும் மீன் துண்டங்களையும் முழு மீனையும் வாங்கி உணவோடு கலந்து உண்ணுதலே ஆப்பிரிக்க மக்களிற் பெரும்பாலோர் பழக்கமாகும்.

## காய்கறி வகைகள் :

ஆப்பிரிக்கர் காய்கறிகளையும் ஊனோடு சேர்த்து உண்ணும் பழக்கத்தினர். முக்கிய மாக மஞ்சள் பூசனி, புளிச்சக்கீரை, கேரட்டு, மரவள்ளிக் கிழங்கு, கத்தரிக்காய், மிளகாய், உருளைக்கிழங்கு, பீன்சு, பயற்றங்காய், வெண்டைக்காய், தக்காளி முதலிய காய்

கறிகளை உணவில் சேர்த்துக் கொள்வர். வெண்டைக்காய் முற்றிப் போனாலும் சிறிது சிறிதாக அரிந்து காய வைத்துத் துகள்களாக்கிக் குழம்பில் சேர்த்துக் கொள்வது அவர்தம் பழக்கம்.

திராவிட இனத்தினர் உண்பதுபோல் பாகற்காய், கொத்தவரங்காய், புடலங்காய், வெள்ளைப் பூசனி முதலிய காய்களை அவர்கள் உண்பதில்லை. அங்கே விளைவிப்பதுமில்லை. கொத்துமல்லி, புதினா, எலுமிச்சம்பழம் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வர்.

## கீரை வகைகள் :

கீரை வகைகளை உணவில் சேர்த்து உண்ணுவர். புளிச்சக்கீரை என்ற கீரையை உப்பிட்டு இடித்து, வகிர்ந்த மீனின் உள்ளே வைத்துக் குழம்பில் இட்டுக் கொதிக்க வைப்பர். பயற்றங் கீரையையும், பசலைக் கீரையையும் சமையலுக்குப் பயன்படுத்துகின்றனர். முருங்கைக் கீரையை 'கொஸ் கொஸ்' என்ற ஒருவகை ரவை போன்ற கோதுமை வகையில கலந்து இடித்து வேக வைததுச் சாப்பிடுவர். முருங்கைக் கீரையை உண்ணும் இவர்கள் முருங்கைக் காயை உண்பதில்லை.

## குழம்பு செய்யும் முறை :

குழம்பு செய்யும் முறை மிக அருமையாக இருக்கும். வேர்க்கடலையை உணவில் சேர்த்துக் கொள்வர். வேர்க்கடலையை வறுத்து, வேர்க்கடலை அரைக்கும் கருவியால் மாவு போல் அரைத்து வைத்துக் கொள்வர். மிளகாய்த் தூள், உப்பு, வேர்க்கடலை மாவில் கொஞ்சம் எடுத்துச் சேர்த்து வைத்துக் கொள்வர். அடுப்பில் பெரிய பாத்திரத்தை வைத்து, அதில் நிறைய எண்ணெய் ஊற்றி, வெங்காயம், பச்சை மிளகாய் இட்டு வதக்கித் தக்காளியையும் அதில் இட்டு நன்கு வதக்கியபின் சேர்த்து வைத்த குழம்பையும் அதில் ஊற்றிக் கொதிக்க வைப்பர். பின் வெட்டிக் கழுவிவைத்த மீன் துண்டங்களில் புளிச்சக் கீரையையும் வெங்காயத்தையும் இடித்து உள்ளே வைத்துக் கொதிக்கும் குழம்பில் இடுவர். ஏனைய காய்கறிகளையும் அக்குழம்பில் இட்டு நன்கு கொதிக்க வைத்திடுவர். ஆட்டின் ஊனையும் இப்படியே குழம்பு செய்து உண்பர். நம் ஊரில் பயன்படுத்தும் பெருங்காயம் போன்ற ஒருவகைப் பொருளையும் அவர்கள் பயன்படுத்துவர். பூண்டையும் குழம்பில் இடுவதுண்டு.

## அரிசி உணவை ஆக்கும் முறை :

அரிசியை நொய்யாகத்தான் பயன்படுத்துவர். முழு அரிசியாக இருந்தாலுங் கூட அதை உணவுக்குப் பயன்படுத்த ஆப்பிரிக்கர் விரும்புவதில்லை. நொய்யில் உள்ள கற்களைப் பொறுக்கி அகற்றி விடுவர். நொய்யரிசியைக் கழுவி வண்டு கட்டி முதலில் ஆவியில் வேக வைப்பர். ஓலைத் தட்டு ஒன்றின்மேல் அரிசியைக் கொட்டி வேகவைப்பர். ஆவியில் வெந்த அரிசியை வெளியே எடுத்து வைத்துக் கொண்டு, வேறொரு பெரிய பாத்திரத்தில் அரிசிக்குத் தகுந்த அளவு தண்ணீர் வைத்து நன்கு கொதிக்க வைப்பர். கொதித்த நீரில் ஆவியில் வெந்த அரிசியைக் கொட்டுவர். பின் அந்த அரிசி சோறாக வெந்ததும் எடுத்துத் தனியாக ஒரு பாத்திரத்தில் கொட்டி வைப்பர். முன்பே குழம்பு செய்து வைத்ததில் சோற்றோடு கலந்து உண்பது ஆப்பிரிக்கர்தம் பழக்கம்.

## புலால் கலந்த அரிசி உணவு :

ஆடு, மாடு, கோழி முதலியவற்றின் ஊன், கத்தரிக்காய், மிளகாய், மிளகுத் தூள், உப்பு, வெங்காயம், தக்காளிப் பசை (Tomato Paste) முதலியவற்றை நன்கு வேக வைப்பர். ஊன் நன்கு வெந்ததும் அளவான தண்ணீரில் அரிசியைக் கொட்டுவர். இவ்வாறு புலால் உணவைச் சமைத்து உண்பர்.

## கம்புக் கூழ் செய்யும் முறை :

கம்பைத் தண்ணீர் தெளித்து நன்கு இடிப்பர். இடித்த கம்பை முறத்தால் புடைத்து எடுப்பர்; அதனுடன் அரிசி நொய்யையும் கலப்பர். பின்பு மாவரை எந்

திரத்தில் கொடுத்து மாவாக்குவர். மாலையில் சிறிது தண்ணீர் தெளித்துப் பிட்டுக் குரிய பதம்போல் குழாவி வைத்திருப்பர். மறுநாள் காலை தண்ணீரைக் கொதிக்க வைப்பர். அதில் கம்பு மாவை ஒருவர் தூவித்தூவிப் போட, மற்றவர் பெரிய அடுப்பில் நன்கு குழாவிக் கிண்டி இறக்குவர். ஆற வைத்த பின், அதில் தயிர் கலந்து உண்பர். தொடுகறியாகக் கறி மீன் முதலியவற்றையும் உண்பர். திருமணம், மகப்பேறு, இறப்பு நிகழ்ச்சி முதலியவற்றுக்குக் கம்புக் கூழையும் செய்து கறிக் குழம்பையும் செய்து கலந்து உண்பர். இந்தக் கம்புக் கூழில் தயிர் கலந்து உப்பிட்டுப் பலரும் சேர்ந்து உண்பர். 'கலபாஸ்' என்று அழைக்கப்படும் சுரைக் காய்ப் பாத்திரத்தில் கம்புக் கூழைப் பகிர்ந்து வைப்பர். பின் சுரைக்காய் அகப்பையை ஆளுக்கு ஒன்றாக வைத்துக் கொண்டு கூழை மொண்டு மொண்டு குடிப்பர்.

## உண்ணும் முறை :

உணவைப் பெரிய தட்டில் அல்லது பெரிய வாயகன்ற பாத்திரத்தில் கொட்டிப் பின் அதன் நடுவில் மீன் குழம்பை ஊற்றி வைத்திருப்பர். பெண்களுக்கு ஒரு பாத்திரம். ஆண்களுக்கு இன்னொரு பாத்திரம் என்று இரண்டாகப் பகிர்ந்து வைப்பர். பின் ஆளுக்கு ஒரு சிறு கரண்டியை வைத்துக் கொண்டு எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உண்பது பழக்கம். மகளிர் தனியாகச் சிறு கரண்டியைப் பயன்படுத்தியோ கையைப் பயன்படுத்தியோ உண்பர். மீன் முள், கறி எலும்பு முதலியவற்றை இடக் கையால் வாயிலிருந்து எடுத்து அவரவர் பக்கத்தில் சேர்த்து வைத்துக் கொள்வர். பின் கை அலம்பச் செல்லும் பெண்கள் அவற்றை எடுத்துச் சென்று குப்பையில் சேர்ப்பர்.

அமர்ந்து உண்ணும்போது, பின்பக்கத்துக்கு மணையைப் பயன்படுத்துவர். மணை இல்லாதவர்கள் காலைக் குத்திட்டு அமர்ந்த நிலையில் சேர்ந்திருந்து உண்பது முறை. கூழ் குடிக்கும் போதும் இவ்வாறே சேர்ந்திருந்தே அருந்துவர். அடுத்தவர் எச்சிலைப் பற்றி அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

## அரிசிப் பாயசம் சாப்பிடுதல் :

ஆப்பிரிக்கர் அரிசிக் கஞ்சியில் சீனி கலந்து பாயசமாக்கிச் சாப்பிடுவர். ஆனால் அதில் பால் கலந்து சாப்பிடுவது இல்லை. இக் கஞ்சிப் பாயசத்தை மாலைப் பொழுதிலேயே பருகுவர்.

## மாங்காயும் முருங்கைக்காயும் :

மாங்காயைச் சமைத்துச் சாப்பிடுதல் இல்லை. மாங்காயை ஊறுகாய் செய்து சாப்பிடுதலோ, குழம்பு வகையில் சேர்ப்பதோ இல்லை. பெரும்பாலும் பழமாகவே சாப்பிடுவர். காயாகக் கடிப்பர். முருங்கைக் காயைச் சாப்பிடுவதே இல்லை. இக் காய்கள் மரங்களில் காய்ந்து தொங்கும்.

## உணவு வேளைகள் :

காலையில் ரொட்டியைத் தேயிலையுடன் சாப்பிடுவர். 'ஆலைநீர்' என்ற ஒரு வகை இலைப பானத்தை அருந்துவர். அது தேயிலை போன்றே இருக்கும். உடலுக்கும நலலது. நண்பகல சோறறுணவு. தேயிலை, காப்பி தவிர மாலை எதுவும் சாப்பிடுவது இலலை. இரவு அரிசி உணவு. ஆப்பிரிக்கர் நணபகல உண்டபின் பேசிக் கொண்டே தேநீர் சாப்பிடும் பழக்கமுடையவர்கள்.

உணவு சமைக்க எரிவாயு முதலியவற்றைப் பயன்படுத்தல் இல்லை. கரியை நெருப்பாக்கி அதில்தான் சமைப்பர். பெரும்பாலும் கரி அடுப்பையே பயன்படுத்துவர்.

தயிரை உணவோடு கலந்து உண்பதில்லை. தனியாகக் குடிப்பதும் கூழோடு சேர்த்துச் சாப்பிடுவதும் உண்டு. நம் போலப் பொரியலைத் தனியாகச் செய்து உணவுடன் சேர்த்துச் சாப்பிடுதல் இல்லை.

## அவல் உணவு :

அவல் செய்வது ஆப்பிரிக்கர் சிலரிடம் (செனகால்—சோலா) உள்ள பழக்கம். அவலை நம்மூரில் செய்வது போலவே அவர்களும் செய்து சீனி, பால் கலந்து உண்பர்.

# ஆவூர்ப் பழம்பதி

டாக்டர் இரா. கலைக்கோவன்,
எம்.பி.பி.எஸ்., டி.ஓ.,

இவர் சென்னையில் 1948 ஆம் ஆண்டிற் பிறந்தவர். கல்லூரி நாட்களில் பல கவிதைப் போட்டிகளிலும் சொல்லாற்றல் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றதுண்டு. கண் மருத்துவப் பணியுடன் இலக்கிய ஈடுபாடும் உண்டு. முப்பதுக்கு மேற்பட்ட சிறு கதைகளும், கவிதைகளும் இதழ்களில் வெளியாகியுள்ளன. கோயில்களின் கலை வரலாறு, கல்வெட்டாய்வு போன்றவற்றில் ஆர்வம் கொண்டு பல அரிய கட்டுரைகளையும், வானொலி வழி உரையோவியங்களையும் வழங்கி வரும் இவர், இப்போது மாடக் கோயில்கள், தாண்டவத் திருக்கோலங்கள் குறித்த ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளார்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் ஆவூரைப் பற்றிக் குறிப்பிடும்போது,

''அங்கணர்க் கிடமாகிய பழம்பதி ஆவூர்'' என்று போற்றுகிறார். அவரின் கூற்றைச் சங்க இலக்கியங்களில் காணப்படும் ஆவூரைப்பற்றிய செய்திகள் மெய்ப்பிக்கின்றன. புறநானூற்றில் ஆவூர் குறிக்கப் பெறுகிறது. நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் தன் பங்காளியான நெடுங்கிள்ளியின் ஆளுகையில் இருக்கும் ஆவூர்க் கோட்டையை முற்றுகையிடுகிறான். நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளைச் சாத்திக் கொண்டு உள்ளிருக்கிறான். இந்நிலையில் கோவூர்கிழார் கோட்டைக் குள்ளிருக்கும் நெடுங்கிள்ளியைப் பாடுவதாகப் புறநானூற்றின் நாற்பத்து நான்காம் பாடல் மலர்கிறது. 'பாலில்லாத குழவி அழவும், மகளிர் பூவில்லாத வறிய தலையை முடிப்பவும், நீரில்லாத தொழில் புனைந்த நல்ல மனையிடத்துள்ளார் வருந்திக் கூப்பிடும் குரல் எழும்பவும்' என்று இப்பாடலில் முற்றுகையின் துன்பம் காட்டப்பெறுகிறது.

அறவை ஆயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்

என்று கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறுகிறார். 'நீ அறவழி நிற்பவனாயின் 'இது உனதன்றோ' எனக் கூறி, நலங்கிள்ளிக்குக் கோட்டையைத் திறந்திடுக. வீரவழி நிற்க விரும்பிடின்,



ஆவூர் மாடக்கோயில் முகப்பு

கோட்டைக் கதவுகளைத் திறந்து நலங்கிள்ளியுடன் போரில் ஈடுபடுக. இவ்விரண்டு வழிகளில் எதிலும் ஈடுபடாது கோட்டைக் கதவுகளை மூடியபடி உள்ளே ஒதுங்கியிருத்தல் நாணுடைய செயலன்றோ' என்னும் இப்புலவரின் கருத்துரை, தவறிடும் அரசுக்குத் தக்க வழிகாட்டும் சங்ககாலத் தமிழ்ப் புலவரின் நெஞ்சுத் துணிவையும், அறவுரை கூறவல்ல ஆண்மைத் திறத்தையும் எடுத்தோதுகிறது.

சங்க காலந் தொட்டே சோழர்களின் ஆட்சியிலிருந்த ஆவூர், காவிரியின் தென் கரையிலுள்ள பாடல் பெற்ற சிவத்தல மென்று புறநானூற்று உரையில் குறிப்பிடப்படுகிறது. இவ்வூரில் புகழ்பெற்ற பல புலவர் பெருமக்கள் சோன்றியிருக்கின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், பெருந்தலைச் சாத்தனார் என்போராவர். இப் பெருமக்களின் பாடல்கள் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் காணப் பெறுகின்றன. ஆவூர் மூலங்கிழாரின் செய்யுட்கள் அகநானூற்றில் நான்கும், புறநானூற்றில் எட்டும் உள்ளன. 'பலநாள் உடல் உலரக் காத்திருந்து. பெருஞ்செல்வரிடத்துப் பெற்ற யானை முதலிய பெரும் பரிசில்களைக் காட்டிலும், ஒருவன் அன்புடன் அளிக்கும் உணவைக் காலையில் பனம்பட்டையில் உண்ணல் மிகச் சிறந்தது'. என்னும் பொருளமைந்த இவரது பாடல் சங்க காலத்துப் புலவர் தம் பண்பு நலன்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இவரது புதல்வர் பெருந்தலைச் சாத்தனாரும் புகழ்பெற்ற புலவர். குமண வள்ளலைப் பாடிய இப்பெருமகனின் பாடல்கள் பல இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆவூரில், கி. பி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கோச்செங்கட் சோழன் மாடக் கோயிலொன்றை எழுப்பி இவ்வூரின் புகழுக்குப் புகழ் சேர்த்தான். சிவபெருமானுக்காக அப் பெருமகன் எழுப்பிய கோயிலைப்

பத்திமைப் பாடல் அறாத ஆலூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடு நாவே

என்று கி.பி. ஏழாம் நூற்றாண்டினரான சம்பந்தர் போற்றி மகிழ்கிறார். ஆன்ம கோடிகளாகிய பசுக்களுக்கெல்லாம் பதியாக விளங்கும் ஈசனைப் பசுபதியென்று போற்றுதல் சைவமுறையாதலின் அவர் உறையும் கோயில் 'பசுபதீச்சரம்' எனப் பட்டது. இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில், பாபநாசம் பகுதியில், பட்டீச்சரத்திற்குத் தென் மேற்கில், பத்துக் கிலோமீட்டர் தொலை வில், கோவிந்தகுடிக்கு அருகில் அமைந் துள்ளது.

எழுச்சியுடன் விளங்கும் ஐந்துநிலைக் கோபுர வாயிலைக் கடந்து உள் நுழைந் ததும் கண்ணெதிரே மையத்தில் அமைந் திருக்கும் மாடக்கோயில் படக்காட்சிபோல் தோன்றுகிறது. இம் மாடக் கோயிலின் வெளித் திருச்சுற்றில், தென்மேற்கு மூலை யில் பிள்ளையாருக்கும், மேற்கில் முருக னுக்கும், வடமேற்கில் யானைத் திரு மகளுக்குமாய் விமானங்களுடன் கூடிய சுற்றாலைக் கோயில்கள் அமைந்துள்ளன. முருகன் வில்லும் அம்புமாய் வள்ளி தெய் வானையுடன் காட்சியளிக்கிறார். கிழக்குத் திருச்சுற்றில் கோபுர வாயிலின் இடப்பக்கம் யாகசாலையும், ஒன்பான் கோள்களுக்கான திருமுன்னும் அமைந்துள்ளன. வடகிழக்கு மூலையில் உள்ள வசந்த மண்டபம் இப் போது கோயில் அலுவலகமாகப் பயன் படுத்தப்படுகிறது. மாடக்கோயிலின் அடித் தள அமைப்பின் தெற்கிலுள்ள தெய்வப் புரையில் ஆலமர் கடவுள் அமர்ந்துள்ளார். இது தனிக் கோயிலாக்கப் பட்டுள்ளது. வடக்கில் உள்ள இரண்டு தெய்வப்புரை களில் இரண்டு கொற்றவை வடிவங்கள் உள்ளன. ஒன்று பழையது. இது பின்ன மாகிவிட்டதால் புதிய கொற்றவையை நிறுவியிருக்கிறார்கள்.

மாடக்கோயிலின் அமைப்பு பின்னர்ச் செய்யப்பட்ட திருப்பணிகளால் மாறி யுள்ளது. இம்மாடக் கோயிலைச் சுற்றிலும் உயர்ந்த மதில் அமைந்துள்ளது. கோயில் இரண்டாம் தளக் கூரையின் முகப்பில் இறைவனும், இறைவியும் காளையின் மீதமர்ந்த கோலத்தில் காணப்படுகின்ற னர். தென்கிழக்கு மூலையில் இரண்டாம் தளத்துக்குச் செல்ல இருபத்தைந்து படிக் கட்டுகளுடன் கூடிய வாயில் அமைந் துள்ளது. இதன் கிழக்கு முகப்பில் மட்டும் துணைத்தளம், தாங்கு தளம், கால், பலகை போன்ற கட்டிட உறுப்புக்கள் காணப்படுகின்றன. படிக்கட்டுகள் முடியு மிடத்தில், வலப்புறம் ஒரு வாயிலும், நேரே ஒரு வாயிலும் அமைந்துள்ளன. வலப்புற வாயில் சோமாஸ்கந்தர் திருமுன்னிற்கு அழைத்துச் செல்கிறது. நீண்ட திறந்த வெளி நடைபாதையை அடுத்து இருதள விமானத்துடன் இத்திருமுன் அமைந் துள்ளது. பாதுகாப்பைக் கருதி இத்திரு முன்னிலுள்ள சோமாஸ்கந்தர் வடிவத்தை அகற்றியிருக்கிறார்கள். இப்போது இங்குத் தெய்வமில்லை. இத் திருமுன்னைச் சுற்றி வர வசதியாக ஒரு திருச்சுற்று நடைபாதை யின் தொடர்ச்சி போல அமைந்துள்ளது.

நேரே அமைந்துள்ள வாயில் முகமண்டபத்திற்குள் அழைத்துச் செல் கிறது. இம்மண்டபம் செவ்வக வடிவில், வண்டிக்கூடு போன்ற கூரையுடன் அமைந் துள்ளது. இதன் வடபுறத்தில் ஆடல் வல்லான் திருமுன் தெற்கு நோக்கிய நிலை யில் உள்ளது. இத் திருமுன்னின் உள் மண்டபத்து வாயிலை வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். இம்மண்டபத்தின் வடபுறத்திலும் கீழே செல்லப் படிக்கட்டு கள் உள்ளன.

இதையடுத்து அமைந்துள்ள உள் மண்டபத்தின் வடபுறத்தில் பைரவர்களின் சிலைகள் ஐந்து உள்ளன. இதற்கடுத்துள்ள பளிங்கறையில் செப்புத் திருமேனிகள் உள்ளன. இக்கோயிலில் உள்ள செப்புத் திருமேனிகள் அழகும், கலைத்திறனும் வாய்ந்தவை. இன்பவல்லி அன்னையின் வார்ப்பு வடிவம் மயக்கும் அழகு கொழிப்பது.

பள்ளியறையை அடுத்துத் தெற்கு நோக்கிய நிலையில் இறைவியர் திருமுன் கள் உள்ளன. இக்கோயிலில் வழக்கத்துக்கு மாறாக இரண்டு இறைவியர் இருக்கின்ற

னர். பள்ளியறையை அடுத்திருப்பது அருள்மிகு பங்கயவல்லி அன்னையின் திருமுன். இதற்கடுத்திருப்பது அருள்மிகு மங்களாம்பிகை அன்னையின் திருமுன். அருள்மிகு மங்களாம்பிகையின் வடிவம் இங்குள்ள திருக்குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுக் கோயிலுள் நிறுவப்பட்டிருப்பதாகச் செவி வழிச் செய்தியொன்று வழங்கி வருகிறது. பங்கயவல்லி அன்னையின் திருமுன்னே பழமையானதாகக் கருதப்படுகிறது.

இம் மண்டபத்தின் தென் கிழக்குச் சுவரில் சடா மகுடத்துடன் ஒருவர் சிவலிங்கத்தை வழிபாடு செய்து வணங்குவது போன்ற சிற்பம் அமைந்துள்ளது. இவ் வடிவத்தைத் தசரதன் என்றும், தசரதன் இக்கோயில் இறைவனை வழி பட்டதாகச் செவிவழிக் கதை இருப்பதாகவும், கோயில் சிவாச்சாரியார்கள் குறிப்பிடுகிறார்கள். இது தசரதனோ முனிவரோ தெரியவில்லை. சிற்பம் மிக அழகாகக் கலை நுணுக்கத்துடன் மெய்ப்பாடுகள் விளங்க அமைக்கப்பட்டுள்ளது. இதையடுத்துச் சண்டிகேசுவரி சிற்பமும், முனிவர் ஒருவரின் சிற்பமும் காணப்படுகின்றன.

முன் மண்டபத்திலிருந்து, உள் மண்டபத்திற்குச் செல்லும் வழியின் வலப்புறம் பிள்ளையாரும், இடப்புறம் முருகனும் அமர்ந்துள்ளனர். உள்மண்டபத்தின் தென் கிழக்கில் கதிரவன், சந்திரன் முதலிய தெய்வத் திருமேனிகளும், தெற்கில் அப்பர், சம்பந்தர் வடிவங்களும், அதையடுத்து எழுவர் நங்கையர் வடிவங்களும் காணப்படுகின்றன. எழுவர் நங்கையர் வடிவங்களில் ஆறு வடிவங்கள் ஒரே அளவாகச் செய்யப்பட்டுள்ளன. ஒரு வடிவம் மட்டும் பெரியதாக உள்ளது. இதையடுத்து அய்யனாரும், காளியும் உள்ளனர். அய்யனார் தம் தேவியருடனும், தனித்தும் இரு நிலைகளில் காணப்படுகிறார். இம்மண்டபத்தின் தொடர்ச்சியாக உள்திருச்சுற்று கருவறையைச் சுற்றிலும் செல்கிறது.

கருவறைக்கு முன் அமைந்துள்ள நடையை வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். இங்கும் வலப்புறம் பிள்ளையாரும், இடப்புறம் முருகனும் காணப்படுகின்றனர். கருவறையில் இறைவன் இலிங்கத் திருமேனியராய், பசுபதீசுவரராய் எழுந்தருளியுள்ளார். நடை, கருவறை இவற்றின் புறச்சுவர்களில் உள்ள தெய்வப் புரைகளில் தெற்கில் ஆடல் பிள்ளையாரும், மேற்கில் இலிங்கோத்பவரும், வடக்கில் நான்முகனும் காணப்படுகின்றனர்.

உள்திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் பிள்ளையாருக்கு ஒரு சிறு கோயிலும் வடக்குப்புறத்தில் சண்டேசுவரரின் சிறு கோயிலும் அமைந்துள்ளன.

இறைவன் எழுந்தருளியிருக்கும் கருவறை, விமானம் இவற்றின் கட்டட அமைப்பு மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. கோயிலின் துணைத்தளம், தாங்குதள வடிப்புக்கள், கால், பலகை முதலிய உறுப்புக்கள் மிகுந்த சிற்பச்செறிவுடனும், கலைநுணுக்கத்துடனும் அழகுபட வடிக்கப்பட்டுள்ளன. கொடுங்கை அமைப்பும் அழகாக உள்ளது. விமானம் இரண்டு தள அமைப்புடையது. முதல் தளத்தில் நடுவில் சாலையும், இரு கோடிகளில் கர்ண கூடுகளும், சாலைக்கும் கர்ண கூடுகளுக்கும் நடுவில் சாலைப்புரைகளும் உள்ளன. தென் புறச் சாலையில் தென்திசைக் கடவுளும், மேற்குப்புறச் சாலையில் சுகாசன மூர்த்தியாய்த் திருமாலும், வடபுறச் சாலையில் நான்முகனும் காணப்படுகின்றனர். மேற்குப் புறச் சாலைப் புரைகளில் ஒன்றில் குருந்த மரத்துக் கண்ணனும், ஆடையிழந்த ஆயர் மகளிரும் விருந்தளிக்கின்றனர். இன்னொரு புரையில் நரசிங்கராய் இரணியனைக் கிழிக்கும் திருமால் காட்சி தருகிறார்.

விமானத்தின் கிரீவங்களிலும் சிற்பங்கள் அமைந்துள்ளன. சிகரம் வட்ட வடிவமானதாய் அமைந்துள்ளது. துணைத்தளத்திலிருந்து கொடுங்கை வரையிலும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள இக்கோயிலின் விமானம் சுதையாலும் செங்கற்களாலும் ஆனது.

இக்கோயிலிலிருந்து திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாம் இராசராச தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று மட்டுமே கிடைத்துள்ளது. இதில், இக்கோயில் பசுபதீசுவர முடையார் கோயிலென்றும், இவ்வூர் நித்த விநோத வளநாட்டின் உட்பிரிவான ஆவூர்க் கூற்றத்து ஆவூர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளன. இராசராச சோழ தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டின்போது இக் கோயிலுக்கு உரிமையுடையதாய் விளங்கிய நிலங்களின் பட்டியலை இக் கல்வெட்டுக் கூறுகிறது.

கோச்செங்கட் சோழனால் கட்டப் பட்ட இக்கோயில் பிற்காலச் சோழ மன்னர் களால் கற்றளியாக்கப்பட்டிருக்கிறது.கோயி லின் அமைப்பு முறை, கட்டட வேலைப் பாடு, கலைத்திறம் இவற்றைக் கொண்டு, இது பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டில் கற்றளியாய் மாற்றப் பட்டிருக்கலாம் என்ற முடிவுக்கு வர நேர் கிறது. பின்னர் நடந்திருக்கும் திருப் பணிகளே இங்கிருந்த கல்வெட்டுக்கள் மறைந்து போனமைக்குக் காரணம். இக் கோயிலின் கலை வரலாற்றை அறிய முடியாத கொடுமைக்கு யாரை நோவது? திருப்பணி செய்யும் அருளாளர்கள் கோயி லில் உள்ள கல்வெட்டுக்களைப் பாதுகாத் திடல் வேண்டும். அவை நம் வரலாற்று வடிப்புகள். அவற்றைச் சேதப்படுத்து வதோ, அவற்றின்மீது சுண்ணாம்பு பூசி மறைப்பதோ, அவையுள்ள கற்களைத் துண்டுகளாக்கி வேறு வேலைகளுக்குப் பயன்படுத்துவதோ மன்னிக்க முடியாத குற்றங்களாகும். இனியாகிலும், இது போன்ற கொடுமைகள் நிகழாது, திருப் பணிகள் நடக்குமாறு கண்காணிப்பது அரசினர் கடமையாகும். தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இதில் கவனமும் ஈடுபாடும் கொண்டு நம் வரலாற்றைப் பாதுகாத்திடல் வேண்டும்.

# அறிவியல்

# தமிழில் அறிவியல் - ஒரு பார்வை*

பேராசிரியர் ப. க. பொன்னுசாமி

இக்கட்டுரையாளர் 22-0-1938இல் கோவை மாவட்டத்திலுள்ள பள்ளபாளையம் எனுமூரில் பிறந்தவர்; சென்னைப் பல்கலைக் கழக இயற்பியல் துறை (Physics)யில் இளநிலை ஆய்வாளராகவிருந்து, பின்பு இணைப் பேராசிரியரானவர்; நியூயார்க் கார்நல் பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டுகள் மேனிலை ஆய்வாளராயிருந்தவர்; திருச்சி தன்னாட்சிப் பட்டமேற்படிப்பு மைய இயக்குனராகவும், இயற்பியல் துறைத் தலைவ ராகவும் ஐந்தாண்டுகள் பணிபுரிந்தவர்; உயிரியல் தொடர்பாக அறுபதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர்; உருசியா, அமெரிக்கா, ஐப்பான், பிரான்சு, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக் குச் சென்று வந்தவர்; பல வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் கட்டுரைகள் படித்தளித்தவர்; இப்போது பாரதிதாசன் பல்கலைக் கழக இயற்பியல் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

## அறிவியல் வளர்ச்சியில் மொழியின் பங்கு

அறிவியல் இன்று மனிதனின் வாழ் வோடு ஒன்றிவிட்டது. அதனை ஒதுக்கி விட்டு எந்த நாடும் இனி வாழ முடியாது. அறிவியற் படைப்புக்களைப் பிற நாட்டா ரிடமிருந்து விலை கொடுத்து வாங்கி மேம்பட வாழும் இயற்கைச் செல்வம் மிக்க நாடுகள் பலவும் இன்று சிக்கலில் சிக்குண்டுள்ளன. அடிப்படை அறிவியலைப் பற்றிக் கவலைப்படாமல், பிறநாட்டாரிட மிருந்து தேவைப்பட்ட அறிவியல் நுணுக் கங்களை மட்டும் எடுத்துப் பயன்படுத்திப் பொருட்களை விரைந்து உற்பத்தி செய்து உலகச் சந்தையில் முதல்தர வியாபாரியாக விளங்கும் ஐப்பானும், இன்று அறிவியலைத் தனது இளைய சமுதாயத்திற்குக் கற்றுக் கொடுக்கும் பாங்கில், பெரிதும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. அறிவியல் துறையில் வியத்தகு வளர்ச்சியைப் பெற்று முன்னோடி களாக இருந்துவரும் சில நாடுகளும், இன்று தங்களுடைய குறிப்பிட்ட தேவை களை முன்வைத்துக் குறிப்பிட்ட துறை களில் மட்டுமே முன்னுரிமை காட்டி ஆராய்ச்சிகளை நடாத்தி வருகின்றன. இந்த உண்மைகளை அறிவியல்-தொழில் நுட்பத் துறைகளில் தங்கள் சொந்தக் கால்களை ஊன்ற முனைந்துவரும் வளரும் நாடுகள் படிப்பினைகளாகக் கொள்ளுதல்

*நன்றி: தமிழ்க் கலை, தமிழியல் காலாண்டு ஆய்வகம், தமிழ் I. கலை, 2; சூன், 1982,

நலம். நமது இந்திய நாட்டைப் பொறுத்த வரை அறிவியல் துறை வளர்ச்சி இரண்டு முக்கிய குறிக்கோள்களை அடையும் திசை களில் நடைபெற வேண்டியுள்ளது. ஒன்று: கல்வியறிவைப் பெறும் வாய்ப்பை இழந்து விட்டுப் பல்வேறு துறைகளிலும் கீழ்மட்ட வருமானத்தில் உழைத்து உழலும் பாமர மக்களின் உணர்வுகளுக்கூடே அறிவியலறி வைப் படரச் செய்யும் முயற்சிகள்; இரண்டாவது: ஆழ்ந்து விரிந்த அறிவியல் ஆய்வுகளை நமது தேவைகளின் பாற்பட நடாத்திப் பயன்பெறவல்ல சூழ்நிலைகளை உருவாக்கும் முயற்சி. இந்த இரு திசை முயற்சிகளின் வெற்றிகளும் நமது அணுகு முறைகளைப் பொறுத்தே கிட்டி வரும்; அல்லது எட்டிப் போகும். இந்த அணுகு முறைகள் யாவை?

அறிவியல் என்பது மனிதன் தனது சிந்தனையை ஒருமைப்படுத்தி இயற்கையை அணுகித் தன் தேவைகளைப் பெறப் பயன்படுத்தும் ஓர் அற்புதக் கருவி. அந்த அற்புதக் கருவியை இயக்க அவனுக்கு ஏற்ற சூழ்நிலை வேண்டும். ஆய்வுக் கூடங்களும், பொறிகளும் மட்டும் அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தி விடா. அவனது சிந்தனை செழிக்க வேண்டும். அது செழித்து முழுவது மாய் வெளிப்பட வேண்டும். இந்தச் சிந்தனைச் செழிப்பும், வெளிப்பாடும் தொடக்கத்தில் குழந்தையாக முதன் முதலில் பெற்றோரிடமிருந்து கற்றுக் கொண்ட மொழியில்தான் முழுமையாக விரியும் என்று ஆய்ந்தறிந்தோர் கூறு கின்றனர். ஆக, நமது இருதிசை அறிவியல் வளர்ச்சிக் குறிக்கோள்களும் தாய்மொழி யின் துணையைக் கொண்டால்தான் எளிதில் அடையக் கூடியனவாகும். உலகில் அறிவியல் வளர்ந்த வரலாற்றை தாம் சற்று உன்னிப் படித்தோமானால் தாய் மொழி பற்றிய மேற்குறித்த நமது கருத்து மேலும் வலுப்பெறும். மனிதன் என்று தோன்றினானோ, அன்றே அறிவியலும் தோன்றியிருக்கக் கூடும். ஆனாலும், அறிவியல் பற்றிய குறிப்புக்கள் நமக்குப் பிற்காலத்திலேயே கிடைத்தன. அக் குறிப்புக்களின்படி நாம் அறிவது, இன்று மனிதன் கண்டுள்ள மாபெரும் அறிவியல் முன்னேற்றங்கள் எல்லாம், ஒரே மொழி யினரால், குறிப்பாக ஆங்கிலம் கற்றவர் களினால் மட்டுமே உருவாக்கப்பட்டவை அல்ல என்பதாகும். அறிவியல் தன் அன்னையின் மடியில் கேட்ட மொழி கிரேக்கம்; தாலாட்டில் கேட்ட மொழி இலத்தீன்; பாலூட்டும்போது கேட்ட மொழி அரேபியம்; நடை பழகியபோது நவின்ற மொழிகள் ஜெர்மன், பிரஞ்சு, உருசியம், ஜப்பானியம். இப்போது காதலில் துணை புரிவதுதான் ஆங்கில மொழி. இந்த மழலையும், தாலாட்டும், பாலூட்டும், நடை பழகலும் என்றென் றும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக் கும். ஏனென்றால் அறிவியல் என்றும் குழந்தையாக, சிறுவனாக, காளையாக மட்டுமே இருக்கும்படி வரம்பெற்ற ஓர் அற்புத வெளிப்பாடாகும். அதற்கு முது மையும் இல்லை, முழுமையும் இல்லை!

இப்போது ஒரு குறிப்பைக் காண் போம். 1972-ஆம் ஆண்டில் பொறியியல் துறையில் மட்டும் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்ட மொழிகளில் வரிசையைப் பாருங்கள்:

| மொழி | கட்டுரைகளின் எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| ஆங்கிலம் | 1627 | 72.8 |
| ஜெர்மன் | 195 | 8.7 |
| பிரஞ்சு | 111 | 5.0 |
| உருசியம் | 81 | 3.9 |
| ஜப்பான் | 74 | 3.3 |
| பிற மொழிகள் | 146 | 6.6 |
| | 2234 | 100.0 |

ஏறத்தாழ மூன்று பங்குக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும், ஒரு பங்குக் கட்டுரைகள் ஏனைய மொழிகளிலும் உள்ளன. இதே முறைப்பாட்டில்தான் இன்றும் பல்வேறு அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில்

கட்டுரைகள் பல மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் ஆங்கிலம் தவிர்த்த பிறமொழிகளில் எழுதும்போது சில குறிப்பிட்ட வரைமுறைகளைப் பின் பற்றி எழுதுகிறார்கள். தேவையானால் அவற்றை ஆங்கிலத்திற்கு மொழி மாற்றம் செய்து விடுகிறார்கள். இந்த உண்மைகள் நமக்கு உணர்த்துவது என்ன? தாய்மொழி யில் ஆய்வின் முடிவுகளை வெளியிடுவதில் அறிவியல் வளர்ச்சி எந்தவிகிதத்திலும் தடைபட்டுப் போகாது. எளிய, சிறிய முயற்சிகள் சிலவற்றை மேற்கொள்வதன் மூலம், முக்கிய அறிவியல் செய்திகளையும் கண்டுபிடிப்புகளையும் ஆங்கிலத்தின் வழி யாக உலகுக்கு அறிவிக்கலாம். இந்த முறை யைத்தான் ஜெர்மானிய, உருசிய, பிரஞ்சு ஜப்பானிய நாடுகள் கடைப்பிடித்து வரு கின்றன. இரண்டு நூற்றாண்டுக்கால ஆங்கிலக் கல்வி, உலகில் ஆங்கிலம் பேசும் நாடுகளோடு நமது தொடர்பை எளிமைப் படுத்தியிருந்தாலும், தாய்மொழி வழிச் சிந்தனையைத் தடைப்படுத்தி வந்துவிட்ட தால், அறிவியல் துறைகளில் நாம் பெற இருந்த வெற்றி வாய்ப்புக்களை இழந்து விட்டோம். தாய்மொழி மட்டுமே தெரிந்த எண்ணற்ற பாமர மக்களின் அறிவியல் உணர்வைத் துண்டித்தும் விட்டோம். இந் நிலை மாற வேண்டும். தாய்மொழியில் அறிவியல் தடையின்றி நடையிடவேண்டும்.

## தாய்மொழியின் தன்மை

தமிழ் உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்று. நீண்ட வரலாறும், விரிந்த இலக் கியச் செல்வமும், செவ்விய இலக்கணக் கோட்பாடும் தமிழின் பெருமை கூறும் பண்புகள். வேறு எந்த ஓர் உலக மொழிக் கும் இப்பண்புகளைப் பொறுத்தவரை தமிழ் ஏற்றம் குறைந்ததன்று. ஆனால் இப்பெருமைகளையெல்லாம் தமிழ் இயல், இசை, நாடகமென்ற மூன்று துறைகளில் மட்டுமே வளர்த்துக் கொண்டு வந்து விட்டது. இந்த வளர்ச்சிகள் தமிழர் சமுதாயத்தின் அந்தந்தக் காலகட்டங்களின் தேவைகளைப் பொறுத்தே அமைந்தன. தமிழரின் சிந்தனை அறிவியல் குறையைத் தொட்டது இயலிசை நாடக வளர்ச்சியை ஒட்டிய, அல்லது அதற்கும் முந்திய கால கட்டத்தில்தான் என்றாலும், ஏனோ தெரியவில்லை அத்துறையின் வளர்ச்சி யைத் தம் மொழியோடு இணைத்து அணைத்து வந்த செயலில் அவர்கள் மிகவும் பின்தங்கிவிட்டனர். தம் வாழ் வோடு ஒட்டிய அறிவியல் நுட்பங்களை அவர்கள் நன்கு பயன்படுத்தியதற்கான சான்றுகளை இன்று நாம் ஏராளமாகக் கண்டாலும், அறிவியலை இயலிசை நாடகத்துக்கு ஒத்த துறையாகக் கட்டி வளர்க்காமல் இருந்து விட்டனர். அவர்கள் எழுப்பிய கோபுரங்களும், கட்டிய அணை களும், சமைத்த நகரங்களும், சாலைகளும், அறிவியலை ஒதுக்கிவிட்டு ஆற்றிய செயல் கள் அல்ல. ஆனால் அவர்கள் அச்செயற் பாடுகள் பற்றிய உண்மைகளைக் குறித்து வைத்தது கொஞ்சம்; குறிக்காமற் போனவை ஏராளம். அண்மைக் காலம் வரை அறிவியல் செய்திகளைப் புறக் கணித்தே, அல்லது அதன் இன்றியமை யாமையை உணராமலே தமிழர் இருந்து விட்டனர். இடைப்பட்ட ஆங்கில ஆதிக்கம் தமிழ்த்தாயின் அறிவியலங்கத்தை ஊனப் படுத்திவிட்டது. இந்த ஊனத்தை நீக்கிச் சரிபடுத்த வேண்டும். அப்போதுதான் தமிழ் ஒரு முழுமை பெற்ற மொழியாக உருப்பெறும். மனிதன் இன்றுவரை கண்ட அறிவியல் நுணுக்கங்கள் அத்தனையையும் தமிழ் சுமந்து நிற்க வேண்டும். இன்றி லிருந்து தமிழர் செயற்படுத்தும் அறிவியல்-தொழில் நுட்பப் புது முயற்சிகள் யாவும் தமிழின் துணை கொண்டு முன்னேற வேண்டும். முத்தமிழ் நாற்றமிழ் ஆக வேண்டும்.

## அறிவியல் தமிழ்

அறிவியல் தமிழ் என்னும் இந்தப் புதிய பகுதியை நாம் இரண்டு வழிகளில் வளர்த் தாக வேண்டும். முதலாவது, அறிவியல் துறைகளுக்கான புதிய சொற்களை ஆக்கு தல். இரண்டாவது, அறிவியல் துறைகளுக் கான நூல்களை ஆக்குதல். அறிவியல்

புதுமை முயற்சிகள் செயல்படுத்தப்படும் போது, அப் புதுமைகளைக் குறிக்கும் சொற் கள் உருவாக்கப்படுகின்றன. அறிவியல் வளர்ச்சியோடு அங்கே கையாளப்படும் மொழியும் தன் தகுதியைப் பெருக்கிக் கொள்கிறது. இன்று அறிவியலோடு நெருங் கிய தொடர்பு கொண்டுள்ள மொழிகள் யாவும் இந்த முறையில்தான் அறிவியல் தழுவிய இலக்கியச் செல்வங்களை உரு வாக்கிக் கொண்டன. குறிப்பாக ஆங்கிலம் தனது சொல்வளத்தை கூட்டிக் கொண் டது இப்படித்தான். தமிழில் அறிவியல் முயற்சிகளை அண்மைக் காலத்தில் தான் தொடங்கியுள்ளோம். அதனால் கலைச் சொற்கள் ஏராளமான எண்ணிக்கையில் உருவாக்க வேண்டிய நிலைமை ஏற்பட் டுள்ளது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் துறைச்சொற்களை உருவாக்கும் முயற்சியில் கையாளத்தக்க நான்கு வகைப் பாகுபாடுகளைப் பரிந்துரைத்துள்ளார். அவை:

* மாற்றமில்லாது அப்படியே பயன் படுத்தப்பட வேண்டிய குறியீடுகள்,
  சான்று : குறியீடுகள்
  சூத்திரம்

* மாற்றமில்லாது அப்படியே ஒலி பெயர்த்து பயன்படுத்தப்பட வேண்டிய சொற்கள் :
  சான்று : மீட்டர்
  ராடார்

* மாற்றமில்லாது ஒலி பெயர்ப்பதா, அல்லது புதிய சொல்லை உருவாக்கு வதா என்ற கருத்து வேறுபாடுகட்கு இலக்கான சொற்கள் :
  சான்று :

* புதிய சொற்கள் உருவாக்கப்பட்டே யாக வேண்டிய சொற்கள் :
  சான்று :

அண்மைக்காலத்தில் நான் உருசிய நாட்டில் ஒரு திங்களும், ஜப்பானிய நாட் டில் ஒரு திங்களும், பிரான்சில் சில நாட் களும் தங்கியிருந்து அறிவியல் கற்பிக்கும் முறைகளைக் கண்டறியும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது வகுப்பறைகளிலும், கருத்துரையாடல்களிலும், சொற்பொழிவு களிலும் கலந்து கொண்டேன். ஆராய்ச்சி யாளர்களில் பெரும்பாலோர் ஆங்கிலத்தைக் கற்றிருந்தாலும், தங்கள் மொழியிலேயே உரையாடல்களை நிகழ்த்தினர். பொதுக் கலைச்சொற்களைப் பெரிதும் கையாண்டு உரையாடல்களை நிகழ்த்தியபோது, அவர் களது மொழி புரியாத நிலையிலும், சொல்லிய அறிவியல் கருத்துக்களின் வடிவை என்னால் புரிந்துகொள்ள முடிந் தது. தங்களது ஆங்கில அறிவைப் பிற ரோடு தொடர்புகொள்ள மட்டுமே அவர் கள் பயன்படுத்தியதைக் கண்டேன். நாமும் ஏன் அந்த முறையையே பின்பற்றக்கூடாது? ஆகவே குறியீடுகளையும், சூத்திரங்களை யும், ஒலிபெயர்த்துப் பயன்படத்தக்கூடிய பிறமொழிச் சொற்களையும் தமிழில் கலந்து எழுதுவதில் தவறில்லை என்று நாம் ஒப்புக் கொள்ளலாம். இந்த முறை பொது உண்மைகளை எல்லோருக்கும் எளிதில் புரிய வைப்பதோடு, தேவையற்ற மொழி பெயர்ப்புச் சிக்கலையும் தவிர்க்கும். புதிய சொற்களை உருவாக்கியே தீரவேண்டிய கட்டங்களில், நல்ல தமிழ்ச் சொற்களையே உருவாக்குவதுதான் சாலச் சிறந்த முறை யாகும். இந்தச் சொல்லாக்க முறைக்கும் டாக்டர் குழந்தைசாமி அவர்கள் தமது கட்டுரையில் சில யோசனைகள் வெளி யிட்டுள்ளார்.

பிறமொழிச் சொற்களை அப்படியே தமிழில் கையாளும்போது ஒரு முக்கிய குறைபாட்டை நாம் உணர்கின்றோம். அக் குறைபாடு, சில பிறமொழிச் சொற்களைத் தமிழில் உச்சரிக்கும்போது ஏற்படும் ஒலி வேறுபாடுதான். குறிப்பாக ஆங்கிலச் சொற்களில் வரும் F, Z எழுத்துக்களை ஒலிக்கும்போது சிக்கல் எழுகிறது. இச் சூழ் நிலைகளைக் கையாளும் வழிமுறைகள் சில வற்றைத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி ஆய்வு நடத்தியவர்கள் கூறியுள்ளார்கள்.

அவற்றை ஒப்பு நோக்கித் தமிழ் மொழிக்கு ஏற்ற ஒரு முறையைப் பின்பற்றி இந்தக் குறைபாட்டை நீக்கலாம்.

கலைச் சொல்லாக்கம் பற்றி இப்போது நாம் மிக முக்கியமாகச் செய்ய வேண்டியது ஒன்றுள்ளது. அஃது, இதுகாறும் பயன்படுத்தப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட, பல்லாயிரக் கணக்கான சொற்களையும், சொற்றொடர்களையும் தொகுத்தலாகும். அந்தத் தொகுப்பை ஒரு வல்லுநர் குழு அலசியாய்ந்து, குறையை நீக்கி, விளக்கங்கள் தந்து, எல்லாத் துறைகளிலும் ஒரேசீராகப் பயன்படுத்தப்படும் வண்ணம் பரிந்துரைகள் செய்ய வேண்டும். இந்தத் தொகுப்பாய்வு இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். (தமிழ்ப் பல்கலைக்கழகம் அண்மையில் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறேன்)

## அறிவியல் இலக்கியம் ஆக்கல்

கற்பதற்கு எளிதாத இருப்பதாலோ, எந்த நிகழ்வையும் எழுதிக்காட்டத் தேவையான சொல்வளம் மிக்கதாக இருப்பதாலோ, ஒரு மொழி அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்பட்டுவிடாது. அறிவியல் துறைகளில் புதுமைகள் திடீரென்று தோன்றி விடுவனவல்ல. ஒவ்வொரு கண்டுபிடிப்புக்குப் பின்னாலும் ஒரு நீண்ட வரலாறே இருக்கும். அந்தத் துறையிலே ஆழ்ந்து கிடப்பவர்களுக்குத்தான் அஃது புரியும். ஆய்வாளனொருவனுக்கு, ஓர் அகன்ற பரப்பைக் காட்டி, அப்பரப்பின் ஒரு புள்ளியில் அவன் சிந்னையை நாட்டி, அங்கிருந்து அவன் பார்வையை ஊடுருவ வைத்து, அப் புள்ளியையே வேறொரு புதிய பரப்பாக ஆக்கிவிடும் அற்புதத்தைச் செய்பவை, அவன் கைக்கு எட்டும் அறிவியல் இலக்கியங்கள்தாம்; அன்றுவரை அவனது துறையில் தோன்றிய புதுமைத் தொகுப்புகளும், சுருக்க விளக்க நூல்களும், விதிமுறை நூல்களும் நாளும் வெளிவரும் ஆய்வுக் கட்டுரைகளும்தாம். இத்தகைய அறிவியல் இலக்கியச் செல்வங்களில் மூழ்கித்தான் தனது வெற்றியை அறிவியலாளன் நிலைநாட்டுகிறான். கலைச்சொற்களின் தொகுப்புகளை மட்டுமல்லாது, இந்த அறிவியல் செய்திகளைக் குவித்து வைத்திருக்கும் இலக்கியத் தொகுப்புக்களையும் உள்ளடக்கித்தான் நாம் ''அறிவியல் தமிழ்'' என்ற புதிய பிரிவைக் குறிக்கின்றோம்.

அறிவியல் இலக்கியம் உலகில் இன்று எப்படி வளர்ந்துள்ளது? இந்த நூற்றாண்டின்தொடக்கத்தில் வேதியியல் துறையில் ஆராய்ச்சி நடத்திவந்த ஓர் அறிஞர், அந்தத் துறையில் அன்றுவரை கண்டுபிடிக்கப்பட்ட புதுமைப் பொருட்கள் கோட்பாடுகள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்க விரும்பினார். உலகில் பல பாகங்களிலிருந்தும் வரும் ஆய்வுக் கட்டுரைகளைப் புரட்டியும், நூல்களைத் திரட்டியும், புதிய செய்திகளைத் தொகுக்கத் தொடங்கினார். அவ்வேலையை ஓராண்டுக்காலம் தொடர்ந்தார். பின்னர் ஒருநாள் செய்தித்தாள்கள் பலவற்றில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். என்ன அந்த அறிக்கை? ''அறிவியல் ஆராய்ச்சியாள நண்பர்களே, தயைசெய்து ஓராண்டுக் காலத்திற்கு உங்கள் ஆராய்ச்சிகளை நிறுத்தி வையுங்கள்—அப்போதுதான் என்னால் நமது துறையின் புதிய செய்திகளின் பட்டியலை முடிக்க முடியும்''. வேதியியல் துறையில் மட்டுமல்ல, மற்ற எல்லாத் துறைகளிலுமே இத்தகைய வியத்தகு வளர்ச்சியைத்தான் நாம் இன்று காண்கிறோம். வேதியியலின் ஒரு பிரிவான ஆர்கானிக் துறையில் மட்டும் ஏறத்தாழ 14,000 பத்திரிகைகள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இன்று பிரசுரித்து வருகின்றன. எல்லாத் துறைகளிலும் பத்திரிகைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால், அந்த எண்ணிக்கை நம்மை மயக்கத்தில் ஆழ்த்திவிடும்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், விரிவுரைக் கட்டுரைகள், சிறப்பு நூல்கள் என்ற முறையில், ஒவ்வோர் ஆண்டும் அறிவியல் இலக்கியங்கள் குவிந்து வருகின்றன. இந்த இலக்கியங்களின் துணை கொண்டுதான்

புதியனவற்றை அறிவியலாளர்கள் தோற்று விக்கின்றனர். அறிவியலில் ஈடுபடும் ஒவ்வொரு ஆய்வாளனுக்கும் இந்த இலக்கியச் செல்வங்கள் கிடைக்கும் வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழில் இந்தச் செல்வங்களை எப்படி உருவாக்குவது? எப்போது உருவாக்குவது? இங்கே மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையை நாம் உணர்கிறோம். தமிழிலேயே ஆய்வுக் கட்டுரைகளையும் முதல் நூல்களையும் படைக்கும் செயலின் மலைப்பையும் உணர்கிறோம்.

தமிழைப் பயிற்று மொழியாக ஏற்ற கடந்த 22 ஆண்டுகளாக, நமது அரசின் துணையோடு மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடந்து கொண்டுதான் வருகின்றன. ஆனால் இதுகாறும் நம்மால் எத்துணை அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பாக அல்லது முதல் நூலாக எழுத முடிந்தது? ஏறத்தாழ 2,000 நூல்கள் தான்! இவற்றிலும் பெரும்பாலன பட்டப் படிப்புக்கான பாட நூல்களே. அறிவியல் துறைகளில் விளைந்துவரும் புதுமைகளை முழுவதும் உணர்ந்து எழுதப்பட்டனவாக, ஆராய்ச்சியாளர்கள் பயமின்றிப் பயன் படுத்தும் தகுதிவாய்ந்த நூல்கள் மிகச் சிலவே. இந்த நூல்கள் பலவற்றிலும் இரு மொழியறிவின் குறைவால் ஏற்படக்கூடிய குறைகள் பலவும் விரவியுள்ளமையைக் காண்கிறோம். பொருள் விளங்காச் சொற் றொடர்களும், சீரில்லாத மொழி நடையும், ஆசிரியருக்கு ஆசிரியர் மாறுபடும் கலைச் சொற்களும் மிகுந்துநின்று, பயில்வோருக்குத் தமிழ் மொழியின் மேலிருக்கும் நம்பிக் கையை உடைத்து நிற்கின்றன. முதற் பதிப்பு நூல்களே விற்காமல் தேங்கிக் கிடக்கும் நிலையில், மறுபதிப்புக்கள் வர வாய்ப்பில்லை. தெரியும் குறைபாடுகளை நூலாசிரியர்கள் நீக்கிட விரும்பினாலும் அது சாத்தியமின்றியே போய்விடுகிறது.

இங்கும் உடனடியாக, துறைக்கு ஒரு வல்லுநர் குழு வெளிவந்துள்ள நூல்களின் குறைகளைத் திருத்திட இயங்க வேண்டும். வருத்தத்திற்குரிய செய்தி யென்னவென்றால், ஒவ்வொரு நூலையும் மேற்பார்வை யிட அமைக்கப்பெறும் வல்லுநர் குழுக்கள் பலவும் தம் பணியைச் சரிவரச் செய்வ தில்லை என்பதே. நூல்களை மொழி பெயர்க்கும் போதும், புதிய அறிவியல் கட்டுரைகளைத் தமிழில் எழுதும்போதும் ஒரு முறையை நாம் பின்பற்றுவது மிகவும் நலமாகும். அறிவியல் நூல்களிலும், ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் மிக முக்கிய இடம் பெறுவன வரைபடங்களாகும். ஒரு சோதனையின் முடிவுகளை ஒரு சிறிய படம் எளிதாக விளக்கி விடும். ஒரு படத்தை நாம் தமிழ் நூல்களில், கட்டுரைகளில் சேர்க்கும் போது, அப் படத்திற்கான விளக்கக் குறிப்புகளை ஆங்கிலத்திலேயே கொடுத்து விடலாம். அப்படிச் செய்வதால், வேற்று மொழியினர் அக்கட்டுரையைக் காணும்போது, படத்தை முழுதும் புரிந்து கொண்டு, கட்டுரையின் மையக் கருத்தை ஊகித்துக்கொள்ளக் கூடும். தேவையெனப் பட்டால், மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம். இந்த முறையை ஜப்பானியர் வெகுவாகப் பயன்படுத்து வதைக் காண்கிறோம்.

ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை ஒருவர் எப்படி எழுதுகிறார்? கட்டுரைகளைப் பிரசுரிக்கும் பத்திரிகைகள் சில கட்டுப்பாடு களை முன் வைக்கின்றன. தலைப்புக்கள், வரைபடம், பட்டியல், மேற்கோள் போன்ற வற்றை எப்படி அமைக்க வேண்டுமென்ற வழிமுறைகளை அவை கூறுகின்றன. உற்றுக் கவனித்தால், எல்லா அறிவியல் கட்டுரைகளுமே ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு வகை அமைப்புக்களில் எழுதப் பட்டிருப்பதை நாம் காணலாம். கட்டுரைச் சுருக்கம், கருதுகோள், சோதனைகள், முடிவுகள், விளக்கங்கள் என்ற பகுதி களாகவே பெரும்பாலும் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் எழுதப்படும் முறை ஒரே மாதிரியாகத் தான் இருக்கும்—குறிப்பிட்ட சில சொற் றொடர்கள் மட்டுமே கையாளப்பட்டிருக் கும். மிக முக்கியமாக, பரிசோதனைகளும், படங்களும், பட்டியல்களும் விளக்கப்படும் முறை ஒரே சீராக, சில சொற்களைக்

கொண்டே எளிமையாக எழுதப்பட்டதாக இருக்கும். நாம் செய்ய வேண்டியது என்ன? திரும்பத் திரும்பத் பயன்படும் சொற்களை, சொற்றொடர் அமைப்புக்களைத் தமிழில் ஆக்கி வைத்துக்கொண்டு, முடிந்த அளவுக்கு அவற்றையே பயன்படுத்தி ஆய்வுக்கட்டுரைகளைப் படைக்க வேண்டும். சிறிது காலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது என்பது ஒரு கைவந்த கலையாக மாறி, ஓர் ஆராய்ச்சி முடிந்ததும், அதைக் கட்டுரையாக எழுத முற்படும்போது கடினமே இராது. ஒவ்வொரு கட்டுரைக்கும் சிறிது ஆங்கிலச் சுருக்கத்தைப் பின்னுரையாகக் கொடுத்து விட்டால், அஃது ஆராய்ச்சிக் கட்டுரைகளின் கருத்துக்களைத் தொகுத்து வெளியிடும் நிறுவனங்களால் கையாளப் பட்டு, உலகின் எல்லா மூலைகளுக்கும் சென்று அடைந்து விடும்.

## அறிவியல் மொழி நயம்

இப்போது ஒன்றை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். அது மொழி நயமாகும். இலக்கிய மொழியிலும் அறிவியல் மொழியிலும் நடை நயத்தின் பங்கு வெவ்வேறாக இருக்க வேண்டிய உண்மையை நாம் உணரவேண்டும். இலக்கியம் பிறப்பதற்கும், அறிவியல் பிறப்பதற்கும் அடிப்படைச் செயல் ஒருமைப்படுத்தப்பட்ட சிந்தனைதான். என்றாலும், அவற்றின் குறிக்கோள்கள் வெவ்வேறானவை. எனவே அவற்றின் வெளிப்பாடுகளும் வெவ்வேறாக உள்ளன. இலக்கிய ஆக்கத்தில் சில நேரங்களில் நயத்தை முன்னிட்டுப் பொருளை உய்த்துணர வைக்கலாம். அப்போதுதான் இலக்கியம் இனிக்கும். நயத்தை முன்னிட்டுப் பல பொருட்களைக் கொடுக்கும் சொற் கூட்டை அமைக்கலாம். அப்போதுதான் இலக்கியம் நம்மை மயக்கும். ஆனால், அறிவியலில் சொல்லும் விளக்கங்களை, உண்மைகளை மற்றவர்களும் அதே வழியைக் கடைபிடித்து உண்டாக்கும் வண்ணம் திட்டமாகச் சொல்லியாக வேண்டும். தெளிவு இங்கு முக்கியம். மொழிநயம் ஏற்புடைத்தாயினும், நயத்தில் பொருளைத் திணித்து மறைக்கக் கூடாது. இதன் காரணமாக, அறிவியல் மொழியின் நடையிலும், சொல்லாட்சியிலும், அமைப்பிலும் இலக்கியத் துறையினின்றும் சற்று விலகிப்போக நேரிடும். இந்தப் பிறழ்ச்சியை நாம் மொழியின் சீர்கேடாகக் கொள்ளக் கூடாது. ஆக, அறிவியல் தமிழின் வடிவம் முழுவதும் எளிமைக் குறியாகவே இருத்தல் வேண்டும்.

## எழுத்துச் சீர்திருத்தம்

அறிவியல் தமிழ் வளரத் தொடங்கியிருக்கும் இந்தக் கால கட்டத்திலேயே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து ஏற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாகும். இங்கு மூன்று கருத்துக்களை நோக்க வேண்டும். முதலாவது, தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளும் வித்தையை எளிதாக்குதல்; இரண்டாவது, சில புதிய ஒலிகளுக்கான எழுத்துக்களை உருவாக்குதல்; மூன்றாவது, அச்சுப் பொறிகளில் தமிழை விரைவாகக் கையாளுதல். இம்மூன்று கருத்துக்களும் அறிவியல் தமிழ் வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை.

தமிழ் நெடுங்கணக்கில் உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1, ஆக 247 எழுத்துக்கள் உள்ளன. இவற்றின் வரிவடிவங்களை எழுத 131 குறியீடுகள் தேவைப்படுகின்றன. இந்தக் குறியீடுகளுக்குள்ளும் சில குழப்பத்தைக் கொடுக்கும் வண்ணம் நெருங்கிய ஒற்றுமையோடு வரிவடிவங்களைப் பெற்றுள்ளன. எழுத்துக்களின் அதிக எண்ணிக்கையும், வரிவடிவக் குழப்பமும் கற்பவருக்கு ஒரு மலைப்பையும், விரயத்தையும் ஏற்படுத்துகின்றன. இந்த உண்மைகளை நாம் அறிவியல் தமிழின் கண்ணோட்டத்தில் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். முன்னர் நாம் குறிப்பிட்ட கற்பதில் எளிமை, சில புதிய ஒலிகளுக்கான (F, Z) வரிவடிவங்கள், அச்சுப் பொறிகளை எளிமையாகக் கையாளுதல் போன்றவற்றை முன் வைத்து மொழியியல்-அறிவியல் ஆய்வாளர்கள், தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம் பற்றிச்

சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். அவற்றுள் குறிப்பிட்டத் தக்கவை:

ஐந்து அல்லது ஆறு உயிரெழுத்துக்கள் போதும்,
மெய்யெழுத்துக்களில் புள்ளியை நீக்கிவிடலாம்,
உயிர்மெய் எழுத்துக்களில் உகர ஊகார வரிசைகள் சீர்படுத்தப்பட வேண்டும்,
குறியீடுகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.

இந்த மாற்றங்களைச் செய்தால், எழுத்து வடிவங்களின் எண்ணிக்கையை 131-லிருந்து, ஏறத்தாழ 30-வரை குறைத்து விடலாம். புதிய பல ஒலிகளுக்கு எழுத்துக்கள் கிட்டும். ஆங்கிலத்துக்கு ஒப்பப் பலவகை அச்சுப் பொறிகளிலும் தமிழை எளிதாகவும் விரைவாகவும் பயன் படுத்தலாம்.

அறிவியல் தமிழின் முக்கியத் தகுதிகளாக நாம் முன்னர் குறிப்பிட்டவை எளிமையான நடை, புதிய ஒலிகளைக் கொண்ட கலைச் சொற்கள், படைக்கப்பட வேண்டிய அறிவியல் தழுவிய ஏராளமான நூல்கள், கட்டுரைகள், தமிழ் எழுதுச் சீர்திருத்தம். இவை இந்தத் தகுதிகளைக் கூட்டப் பெரிதும் துணை புரியும் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய தில்லை.

# வெப்பவியலும் பொருளாய்வும்

டாக்டர் எஸ். நடராசன்,
எம்.எஸ்சி., பிஎச்.டி,

சென்னை, அறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றிவரும் இக் கட்டுரையாசிரியர் 3-1-1941இல் பிறந்தவர். அமெரிக்காவில் மார்க்குயட்டி பல்கலைக் கழகத்தில் நான்காண்டுகளும், மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான்காண்டுகளும் பணியாற்றியவர். 35க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் எழுதியவர்.

பொறியியல் துறையில் உபயோகப்படும் பொருள்களின் தரத்தையும் உள் அமைப்பையும் ஆராய்வதற்குப் பொருளை வீணாக்காமல் சோதனை செய்யும் முறை உதவுகிறது. இந்த முறையில் பல ஆண்டுகளாக எக்ஸ் கதிர், செவி உணரா ஒலி, மற்றும் காமா கதிர் முதலியவைகள் உபயோகப்படுகின்றன. இந்தத் துறையில் வெப்பவியல், வெப்ப நிழற்படம் உதவி கொண்டு பொருளின் தன்மையை ஆராய்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வித வெப்பவியல் சோதனைகளுக்கு அகச்சிவப்புக் கதிர்வீச்சு உபயோகப்படுகின்றது. இவ்வித வெப்பக் கதிர்கள் எல்லாப் பொருள்களிலிருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எந்தப் பொருளும் சார்பிலா வெப்பநிலை (Absolute temperature)க்கு மேல் உள்ள வெப்ப நிலையில் இருந்தால் இவ்வித வெப்பக்கதிர்களை வெளிவிடும். அணுக்களும், மூலக்கூறுகளும் அசையும் நிலையில் இருப்பதனால் தான் இவ்வித கதிர்வீச்சுகளும் வெளிவிடப் படுகின்றன. ஒரு பொருளில் இருந்து வெளியாகும் வெப்ப சக்தியைக் கணக்கிடுவதன் மூலம் அந்தப் பொருளின் உஷ்ண நிலையை கண்டுபிடிக்க முடியும். இந்த முறை பொருளைத் தொடாமலேயே அதனது வெப்ப நிலையை கண்டுபிடிக்க உதவுகிறது. இந்த முறையைக் கொண்டு வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருக்கும்

இயந்திரத்தின் வெப்பநிலையையும் கண்டு பிடிக்கலாம். மேலும் இந்த முறை வெப்ப நிழற்படத்தை (Thermogram) எடுக்கவும் உதவும்.

## வெப்பக் கதிரைக் கண்டறிதல் :

வெப்பக் கதிரைக் கண்டறிவதற்கு தெர்மிஸ்டர் போலா மீட்டர் போட்டான் பகுப்பான் (Photon Detector) முதலிய கருவிகள் உபயோகப்படுகின்றன. மேலும் குறை கடத்தியை (Semi Conductor) உபயோகப்படுத்தி வெப்பக்கதிர்களை அளக்கும் கருவிகளையும் கண்டு பிடித்துள்ளனர்.

## ரேடியோ மானி (Radiometer) :

ஒரு பொருளை ஆராயவேண்டுமானால் அந்தப் பொருளிலிருந்து வெளிப்படும் வெப்பக் கதிரை 'போட்டான்' பகுப்பான்' துணை கொண்டு அளக்கலாம். இவ்வித கருவியிலிருந்து வெளிப்படும் வெப்ப சக்தியைத் தவிர்ப்பதற்கு ஃச்சாப்பர் (Chopper) எனும் ஒரு பாகம் உபயோகப்படுகிறது. இவ்விதம அளக்கப்படும் வெப்பச்சக்தியின் அளவு மேலும் அதிகமாகப்பட்டு ஒரு மின் அழுத்தமானியில் காண்பிக்கப்படுகிறது. மாறாக இந்த வெப்ப சக்தியின் அளவை பதிவு மானியிலும் பதிவுசெய்யச் சில கருவிகளில் வசதியுள்ளது. இவ்வித வெப்பலியல் நுண்ணோக்கி (Radio Metric Microscope) உதவி கொண்டு பொருளின் உஷ்ண நிலையை (1/1000 செ.மீ.இடைவெளியில்) துல்லியமாக அளக்க முடிகிறது.

## வெப்பக்கதிர் உதவிகொண்டு பொருளைக் காணுதல் :

ஒரு பொருளைச் சிதைவு செய்யாமல் ஆராயவேண்டுமானால், பொருளின் பிம்பத்தைப் பதிவு செய்யவேண்டும். இதற்கு ஒலி வரிக் கண்ணோட்டம் பயன்படுகிறது. இதற்கு பலவிதப்பட்ட வெப்பக் கதிர் வீச்சைப் படமாக மாற்றக் கூடிய கருவிகள் உபயோகப்படுகின்றன.

## ஒளி & இயந்திர வரிக் கண்ணோட்டம் (Optical & Mechanical Scanning) :

வெப்ப நிழற்படத்தை உண்டாக்குவதற்கு ஒலி அல்லது இயந்திரவரிக் கண்ணோட்டம் உதவுகின்றது. இந்தக் கருவியில் பைரோ எலக்ட்ரிக் பகுப்பான் (Pyro-eletric detector) அளவு மானியாக அமைந்துள்ளது. இந்த கருவியில் ஜெர்மானியம் குவிவில்லை உதவிகொண்டு ஒரு பொருளிலிருந்து வெளிவரும் வெப்பக் கதிர் வீச்சை, வரிக்கண்ணோட்ட ஆடியில் (Mirror)-ன் மூலம் பகுப்பான் மேல் பிரதிபலிக்கப்படுகின்றது. பொருளின் செங்குத்து, படுக்கைக் கோடுகளில் ஏற்படும் வெப்பமாற்றத்தை அளவுமானியில் வெவ்வேறு நேரத்தில் விழவைப்பதற்கு 'டார்க்' (Torque) திருப்புவிசை மோட்டார் உதவுகிறது. இந்தக் கருவியில் இடமிருந்து வலம் நகர்வதற்கு 3 1/3 Secondம், மேலிருந்து கீழ் நகர்வதற்கு 30 Secondsம் வரிக்கண்ணோட்டத்தின் வேகமாக அமைந்துள்ளது. ஒரு சிறிய குறி ஆடி, வரிக் கண்ணோட்ட ஆடிக்குப் பின்பக்கம ஓட்டப்படுகிறது. பொருளிலிருந்து வெளிப்படும் வெப்பத்தின் அளவிற்கேற்ப (From Light Modulator) பண்பேற்றப்பட்ட ஒளி நிழற்படம் உண்டாக்கும் தட்டின் மேல் விழும். இதனால் பொருளின் வெப்பநிலை மாற்றத்திற்கேற்ப நிழற்படத்தை உண்டாக்கலாம். இந்த நிழற்படத்தில் போலராய்டு தானே படம் (Develop) ஆகக்கூடிய வெள்ளை கறுப்பு கலர் போலராய்டு பொருள் (Material) பயன்படுத்தப்படுகிறது. இந்த நிழற்படத்தில் அதிக வெப்பமான பகுதி வெண்மை நிறத்திலும் வெப்பம் குறைந்த பகுதி கருமை நிறத்திலும் காணப்படும். மற்றும் கலர் வெப்ப நிழற்படத்தில் அதிக வெப்பமுள்ள பகுதி சிகப்பு நிறமாகவும் குறைந்த வெப்பமுள்ள பகுதி நீல நிறமாகவும் காட்சியளிக்கும்.

## வெப்பவியலின் உபயோகங்கள் :

வெப்பவியலின் உபயோகங்களைப் பல பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று மிக அருகில்

# ரேடியோ மாணி பெருக்கி


அகச்சிவப்பு பகுப்பாளர்
முன் பெருக்கி
சாப்பர் மூன்னோடி
தூண்ட அடி
சாப்பர்
இயந்தியின் இசைவுபொருத்தம்
மெலிப்பான்
வோல்ட் மாணி




வெப்ப நிழற்பட வரைவி

உள்ள பொருள்களைப் பற்றி ஆராய்வது. இரண்டு; வெகு தூரத்தில் உள்ள பொருள் களைப் பற்றி ஆராய்வது. மூன்று; தானாக வெப்பத்தை வெளிவிடும் பொருள்களின் ஆராய்வு (Active). நான்கு; வெளியிலிருந்து தரப்படும் வெப்பச்சக்தியின் உதவியுடன் பொருளை ஆராய்வு (Passive). தானாகவே வெப்பத்தை வெளியிடும் பொருட்களுக்கு உதாரணம் மின் அடுப்பு, சூடான இரும்பு முதலியவற்றை கூறலாம். தானே வெப்பத் தை வெளியிடாத பொருட்களுக்கு உதாரணம் பாலிதின் பை—உணவுப் பொருளை அடைத்த பாலிதின் பை (காற்று புகாவண்ணம்). வெப்ப அடைப்பு செய்யப் பட்டிருக்கின்றதா எனக் கண்டுபிடிப்பதற்கு ரேடியோ மானி நுண்ணோக்கியின் மூலம் சோதனை செய்து பார்க்கலாம். இந்த முறையில் பாலிதின் பையின் கீழ்புறத்தி லிருந்து வெப்பக் கதிரைச் செலுத்தவேண் டும். மேற்பக்கத்தில் அகச்சீப்பு பகுப்பான் உதவிகொண்டு பாலிதின் பை வழியாக வரும் வெப்பக் கதிரை அளக்கவேண்டும். அடைப்பு நன்றாக இருந்தால் வெளிப்படும் வெப்பத்தில் மாற்றமிருக்காது. பாலிதின் பை அடைப்பில் காற்றுக் குமிழ்களோ, (or) மடிப்புக்களோ (or). வேறு பொருள்களோ இருந்தால், வெளிப்படும் வெப்பத்தில் மாற்றமிருக்கும். இதிலிருந்து பாலிதின்பை அடைப்பில் உள்ள குறைகளை எளிதில் கண்டுபிடிக்க முடியும். இந்த முறையை உணவுப் பண்டம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையிலும் உபயோகிக்கிறார் கள்.

அச்சிடப்பட்ட மின்சுற்றுப் பலகையி லுள்ள (Printed Circuit board) குறை களைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அகச் சிவப்பு நுண்ணோக்கி பயன்படுகிறது. மேலும் இந்த முறையின் உதவியால் மின் கம்பத்தின் மேலுள்ள பழுதடைந்து போகக் கூடிய நிலையில் இருக்கும் மின் இணைப் பான்களை எளிதில் கண்டுபிடிப்பதற்கு மேல் நாடுகளில் நடமாடும் சோதனைச் சாலைகள் செயல்படுகின்றன. இதில் அகச் சிவப்பு கேமரா (Camera) பயன்படுகிறது. இங்கு பழுதடையக்கூடிய நிலையில் உள்ள இணைப்பான்களின் வெப்ப நிலையை அளக்கவேண்டும். இதை அகச் சிவப்புக் கேமரா மூலம் படமாக்கிப் பார்த்தால் வெப்பமாற்றம் நன்கு புலப்படும். உடன் பழுதடையக்கூடிய நிலையில் உள்ள இணைப்பான்களைச் சீர் செய்யவோ, புதிய இணைப்பான்கள் போடவோ இப் படம் உதவுகிறது இந்த நவீன கருவியின் உதவியால் மின் தடங்கல்கள் ஏற்படும் முன்பாகவே மின் இணைப்புகளைச் சரி செய்ய முடியும். முக்கியமாக இந்த முறையை மின் உற்பத்தி செய்யும் நிலையங் களிலும் (Power Stations), உயரழுத்த மின்பரப்பிகள் (High Voltage Trans-mission) உள்ள இடங்களிலும் உபயோகிக் கலாம். துணைக் கோளிலிருந்து பூமியில் உள்ள கனிமங்களைக் கண்டுபிடிக்க வெப்ப வியல் பொருளாய்வு மிகவும் உதவி செய் கிறது. பகல் நேரங்களில் சூரிய ஒளியைப் பூமியின் மேற்பாகத்திலுள்ள கனிமங்கள் பெற்றுக் கொள்கின்றன. இதனால் அதனு டைய வெப்ப நிலை வெப்ப எண்ணிற் கேற்ப உயரும். இரவு நேரங்களில் இந்தக் கனிமங்கள் வெப்பத்தை வெளிவிடும். எனவே, இரவு நேரத்தில் துணைக்கோளி லிருந்து அகச் சிவப்பு கேமரா உதவி கொண்டு வெப்ப நிழற்படங்களை எடுப் பதன்மூலம் கனிமங்கள் எங்கெங்கு பூமியில் இருக்கின்றன என்பதை நன்கு கண்டுபிடிக்க முடியும். இந்த முறையின் உதவிகொண்டு வெகு எளிதல் கனிமங்களைக் கண்டுபிடிக்க லாம்.

வெப்பவியல் நிழற்படத்தின் உதவி கொண்டு மருத்துவத் துறையில் பலவித வியாதிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். மனித உடலில் நோய்க்கிருமிகள் உண்டுபண்ணும் மாற்றங்களினால் அக்குறிப்பிட்ட பகுதியில் வெப்பநிலை சிறிதளவு அதிகமாகும். இந்த மாற்றத்தின் அளவு ஒவ்வொரு நோயின் தன்மைக்கேற்ப மாறுபடும். எனவே வெப்ப நிழற்படத்தின் உதவி கொண்டு, மனித உடலின் வெப்ப மாற்றத்தை மிகத் துல்லிய மாக (O.1.C) அளப்பதன் மூலம் கண்டு பிடிக்கலாம். இத் துல்லிய மாற்றத்தை மருத்துவ வல்லுனர்கள் பகுப்பாய்வு

செய்து வியாதிகளின் தன்மையையும் அவ் வியாதி எவ்வளவு நாட்களாக இருந்து வருகின்றது என்பதனையும் கண்டறிகின்றனர். மனிதனுக்கு எந்தவிதச் சிரமமுமின்றி (திசு சோதனை இல்லாமல் Without biopsy Test) நோயின் தன்மையைக் கண்டுபிடிக்க முடிகிறது.

முக்கியமாக மார்புப் புற்றுநோயை (Breast Cancer) இம்முறையினால் எளிதில் கண்டு பிடிக்க முடிகிறது.

இவ்வாறாக வெப்பவியல் பொருளாயும் முறை பல துறைகளிலும் மனித சமுதாயத் துக்குப் பலவிதமான உதவி அளித்து வருகிறது.

# இயக்கம்

பேராசிரியர் ச. சம்பத்து,
எம். எஸ்சி,



இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கீரப்பாளையம் என்னும் ஊரில் 10-2-1935ஆம் நாள் பிறந்தவர்; இலக்கியம், அறிவியல், தமிழாக்க நெறிமுறைகள் போன்ற துறைகளில் எண்ணற்ற கட்டுரைகளும், ஆறு நூல்களும் எழுதியவர். 'ரேடார்' எனும் நூலுக்குத் தமிழக அரசின் பரிசும், 'கவர்ச்சி' எனும் கவிதை நூலுக்கு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகப் பரிசும் பெற்றவர்; அறிவியல் பயிற்றுவித்தல் பற்றிப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கட்கு மாவட்ட, மாநில அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தியவர்; அறிவியல் பணிக்காக 1970ஆம் ஆண்டு உலகக் கல்வியாண்டை யொட்டி அனைத்துநாட்டுக் கல்வி பண்பாட்டுக் கழக (UNESCO MANDRAM) விருது பெற்றவர். இப்போது திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியில் இயற்பியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

மூச்சின்
முற்றுப்
நாவின்
நாவலன்
செவிப்பறை
செவிடன்
இயக்க
மயக்கில்
பகலும்
கோடையும்
அன்றும்
நிலமகள்
வலம்வரும்

இயக்கம்
பெற்றது
இயக்கம்
ஆவதும்
இயக்கம்
என்றே
மின்றி
சுவர்க்கமும்
இரவும்
காரும்
இன்றும்
தானும்
இயக்கம்

முடிந்து
வாழ்க்கை
நலிந்து
நடக்கக்
சிதைந்து
செப்புதல்
இருந்திட
மாண்புடைத்
பருவமும்
குவலயம்
என்றும்
நெடிது
வழங்கும்

போனால்
தானும்.
போனால்
கூடுமோ?
போனால்
செய்வர்.
வேண்டில்
தாமோ?
காலமும்
தன்னில்
வருவதும்
சுழன்று
கொடையே.

வானில் பரந்த வளியில் இயக்கம்.
விண்ணில் மேவும் மீன்களில் இயக்கம்.
அண்ட சராசரம் அனைத்திலும் இயக்கம்.

இயக்கம் என்பதே இயற்கையாய் இருக்க
இயக்க நெறிகள் என்னே என்பதை
அறியும் ஆர்வம் அறிஞர் கொண்டனர்.
இயக்கம் பற்றிய விதிகள் மூன்றை
இயற்றித் தந்தார் நியூட்டன் தானும்.

## முதல் விதி

வீதியில் நாயை விரட்டும் சிறுவன்
நாதியில் கல்லை நாடி எடுத்தே
எறிதல் மேவிடும் சுட்சி தானும்
அறிவியல் உண்மை ஒன்றை உணர்த்தும்.

விதியை நொந்து வீணே சோம்பி
மதியை இழந்து மயங்கிக் கிடக்கும்
உலுத்தர் போன்றே ஓய்ந்த கல்லும்
இருந்த இடத்தில் இருப்பதே யன்றி
பருந்தெனத் தானே பாய்ந்து தாக்குமோ?

ஏறி மிதிப்போன் இலாதீ ருருளி
மீறி ஓடுமோ? மேவியே கிடக்கும்

ஆசை முடுக்கிட ஆடுவர் மக்கள்.
வினையை முடுக்கின் விரையுமே ஊர்தியும்.

இயக்குனர் இன்றிச் சிறக்குமோ நாடகம்?
மயக்குடை வாழ்க்கை மண்ணில் தொடர்தலும்
எல்லாம் அறிந்தவன் எங்கும் நிறைந்தவன்
எல்லையில் லாதவன் ஏதும் வல்லவன்
மறைமுதற் பொருளாம் மாணுடை முதல்வன்
இறைவன் திருவுளம் இயக்கு வழியென்றே
இறைநெறி நிற்போர் இயம்புதல் செய்வர்.

எனவே,
ஒய்வு நிலையில் உளதாம் பொருளெலாம்
அந்நிலை மாறா திருக்குமப் படியே.
அதன் நிலை மாறிட அயலொரு செயலி
அதன்மேற் செயல்பட வேண்டும் தானே.

அவ்வாறே,
ஓடும் தேரின் ஓட்டம் நிறுத்தப்
போடுதல் வேண்டும் முட்டுக் கட்டை.

போகும் பாதையில் திருப்பம் வந்தால்
ஏகும் ஊர்தி ஏற்ற வகையில்
திரும்பவும் கூடுமோ தனியல் பாக?
திருப்பிட வேண்டுமே விருப்புடன் சாரதி.

எனவே,

ஒருதிசைப் போக்கில் ஒருதனி விரைவில்
பருப்பொருள் எதுவும் பயணம் செய்தால்
அசைந்திடும் பொருளதன் இயக்கம் தன்னின்
திசையோ வேகமோ இரண்டும் தானோ
இயல்பாய் மாறா தென்பதும் உண்மை.
மாறவேண் டுமென மனமும் கொண்டால்
புறச் செய லியொன்றைப் பொருளின் மீதே
உறச்செய வேண்டும் உணர்ந்த கதைதான்.

எண்ணிப் பார்க்கும் எவர்க்கும் புரியும்
உண்மைகள் இவற்றை ஒன்றாய்ச் சேர்த்தே
முதலாம் இயக்க விதியென மொழிந்தார்
மேதகு நியூட்டன் மேலோர் மெச்ச.

அவ்விதி தானும்: எப்பொரு ளேனும்
எவ்வகை இயக்கமும் இல்லா தோய்ந்து
இருக்கும் நிலையில் இருந்தா லுமன்றி
கூடுதல் குறைதல் இல்லா வேகத்தில்
கோடுதல் இல்லாக் கோட்டில் செல்லும்
இயக்கமே பொருந்தி இருந்திட் டாலும்
அயலொரு செயலிக் காட்படும் வரையில்
தன்னிலை தன்னில் தான்தொடர்ந் திருக்கும்.

இவ் விதியே,

பருப்பொருள் எதுவும் பாங்குடன் கொண்ட
ஒருசீர் இயக்கமோ ஒய்வு நிலையோ
எதனையும் தானே எண்ணிய வண்ணம்
எதனுடைத் துணையும் எதிர்பா ராது
மாற்றிக் கொள்ளும் மாண்பே இல்லதாம்
என்னும் உண்மையை எடுத்தியம் பும்மே.

இயலாமை யாகிய இப்பண்பு தன்னை
நயமுடன் அறிஞர் 'நிலைமம்' என்பர்.
முன்னே நாமும் மொழிந்த வண்ணம்
புறத்தே யிருந்து பொருளின் இயக்கம்
மாற்றிட முனையும் மாற்றவும் செய்யும்
'வினையி' அதனை 'விசை'யென மொழிவர்.

உந்தம்

பாய்ந்தே வந்திடும் பருங்கல் ஒன்றே
ஒய்ந்து கிடக்கும் ஒருகல் மீது
பட்டால் அதனைப் பெயர்ந்திடச் செயல்போல்
இயங்கும் பொருள்தான் எதுவா யினுமே
இயங்கு பாதையில் எதிர்ப்படு பொருளின்
மீதே பட்டு மோதல் நிகழ்த்தின்
இயக்கம் தந்ததன் இயக்கம் மாற்றிடும்.

இவ்விதம் உந்தித் தள்ளும் இயல்பை
நல்கும் இயக்கத் தொகையின் இருப்பே
'உந்தம்' என்றே உரைக்கப் படுமே.

பொருள்தான் கொண்ட உந்தத் தளவே
அப்பொருள் நிறையும் அதன்திசை வேகமும்
பெருக்கிடக் கிட்டும் மதிப்பே யாகும்.

## இரண்டாம் விதி

விசைதான் தாக்கின் பொருளின் இயக்கம்
மாறும் என்பதை முதல்விதி காட்டும்.
இயக்கம் மாறிடும் என்றே சொன்னால்
உந்தம் மாறிடும் என்பதும் உண்மை.

இவ்வாறு.

உந்தம் மாறிடும் விகிதம் தானும்
பெரருளின் மீதே பொருந்தும் விசையின்
அளவைப் பொறுத்தே அமைத லன்றியும்
விசையள வுக்கு நேர்விகி தத்தில்
இருத்தல் செய்யும்; விசையின் திசையில்
உந்த மாற்றமும் உண்டா கிடுமே.
இரண்டாம் விதியென இதனை மொழிவர்.

## மூன்றும் விதி

எவ்வினை செயினும் எதிர்வினை யுண்டு
வினைகட் கொப்பவே விளைவுகள் நிகழும்.
என்பது சான்றோர் இசைத்திடும் பொருண்மொழி.
மனித வாழ்வு மட்டிலு மன்றிப்
பருப்பொ ருளுலகின் பௌதிக விதியும்
இதுவே யாமென மூன்றாம் விதியாய்
இயக்கம் பற்றி இயம்பினார் நியூட்டன்.

அதுவே,

எவ்வொரு வினைக்கும் எதிர்வினை யுண்டுகாண்
எதிர்வினை அளவும் வினையின தளவே.

அளந்தறி மூன்றும் அடிப்படை
இயக்க விதிகள் என்றனர் ஈண்டே.

# அறுவடைக்குப் பின்

டாக்டர் வ. சுப்பிரமணியன்,
பி.எச்டி.

இக்கட்டுரையாசிரியர் 12-3-1934இல் தஞ்சை மாவட்டம் புதைகிரி எனும் ஊரில் பிறந்தவர்; வேதியியல் பொறியியல் துறையில் முதுநிலைப் பட்டமும், பி,எச்டி. பட்டமும் பெற்ற இவர், இந்திய மற்றும் அயல்நாட்டு இதழ்களில் வேதியியல் பொறியியல் துறை, வேளாண் பதன்செய் துறை சார்ந்த ஐம்பதிற்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்; தமிழிலும் பல அறிவியல் கட்டுரைகள் எழுதியுள்ளார்; மேற்குறித்த துறைகள் சார்ந்த மாநாடுகளுக்குத் தலைமை யேற்றுள்ளார்; கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார்; தொலைக்காட்சி வானொலி ஆகியவற்றில் பல உரைகள் நிகழ்த்தியுள்ளார்; 1982இல் இலங்கை சென்று வந்துள்ளார்; இந்திய வேளாண் பொறியியலார் கழகத் தமிழகப் பிரிவிற்கும் இந்திய வேதியியல் பொறியியலார் கழகக் கோவைப் பிரிவிற்கும் தலைவராக உள்ள இவர், இப்போது கோவை வேளாண் பொறியியல் வேளாண் பதன்செய் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்து வருகிறார்.

காட்டிலும் மேட்டிலுமாக அலைந்து திரிந்த மனிதன், கண்டதைக் கண்ட இடங்களில் தின்று திரிந்த மனிதன், நிலம் திருத்திப் பயிர் விளைத்து உண்ணும் முறையை வழக்கத்திற்கு கொண்டுவந்த நாள், மனித இனம் நாகரிகமாக வாழத் தலைப்பட்ட முதல் நாளாகும். விளைவித்த உணவுப் பொருட்களைப் பதன் செய்து பக்குவப்படுத்திச் சேமித்து வைக்கத் தொடங்கிய நாள் அவன் வாழ்வின் வெற்றிக்கு வித்திட்ட நாளாகும்.

கண்மூடிக் கண் திறக்குமுன் பன்மடங்காகப் பெருகிவரும் மக்கட் பெருக்கத்துடன் போட்டியிட நாம் அண்மைக் காலத்தில் மேற்கொண்ட பசுமைப் புரட்சியின் விளைவாக உணவுப்பொருட்கள் உற்பத்தியினைப் பன்மடங்காக உயர்த்தியிருக்கின்றோம் என்பது மறுக்க முடியாத உண்மையெனினும், விளைவித்த பொருட்களின் பயனை முழுமையாகப் பெறுகிறோமா என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். 1978-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் பல்வேறு தானியங்கள் 118 மில்லியன் டன்னும், பயறு 12 மில்லியன் டன்னும் விளைவிக்கப்பட்டுள்ளன வென்று கணக்கிடப்பட்டுள்ளது. அறுவடைக் காலத்திலும் அறுவடைக்குப் பின்னரும் தக்க கவனம் செலுத்தப்படாததால் விளைவித்த பயிரில் ஏறத்தாழ 10 விழுக்காடு, அஃதாவது ஆண்டுக்கு 12 ஆயிரம் மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அண்மையில்

தமிழகத்தில் எடுத்த கணக்கெடுப்பின்படி, நெல்லில் மட்டும் சுமார் 156 கோடி ரூபாய் இழப்பு அறுவடைக் காலத்திலும் பின்னரும் தக்க முறைகள் கையாளப் பெறாததால் ஏற்படுகின்றது என்பது தெரியவந்துள்ளது. இந்தப் பேரிழப்பை எப்படித் தடுப்பது என்ற சிந்தனை அவசியமானதும், அவசர மானதும் ஆகும். இந்தச் சிந்தனையுடன் இந்திய அரசு அறுவடைப் பின்சார் தொழில் நுட்ப வியலுக்கெனத் (Post Harvest Technology) தனித்துறை ஒன்று தொடங்கவிருப்பது வரவேற்புக்குரியதாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், மற்றும் நாடெங்கிலும் உள்ள பிற பல்கலைக் கழகங்கள், ஆய்வு மையங்கள் ஆகியவை, அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்க்கும் வழிமுறை களைக் காணத் தீவிர ஆய்வுகள் மேற் கொண்டுள்ளன. அத்தகைய ஆய்வுகளின் விளைவாகக் கிடைக்கப்பெற்ற முடிவுகள் சிலவற்றை இங்கே காண்போம்.

பொதுவாக நம் நாட்டில் பயிர்கள் வயலிலேயே நன்கு உலர்ந்த பின்னர்த்தான் அறுவடை செய்கிறோம்.நெல்லை எடுத்துக் கொண்டால் ஈரப்பசை 17 முதல் 18 விழுக் காடு அடையும்போதுதான் நாம் அறுவடை செய்கிறோம். இதனால் 3 முதல் 6 விழுக் காடுவரை சிதறல் மூலம் இழப்பு ஏற்படு கிறது. ஆனால் சைனா, ஜப்பான் போன்ற நாடுகளில் 22 முதல் 25 விழுக்காடு ஈரம் இருக்கும்போதே அறுவடை செய்கின்றார் கள். இதன்மூலம் பெருமளவிற்கு இழப்புத் தவிர்க்கப்படுகிறது. வயலில் பயிர் அதிக நாள் இருந்தால் அதிக விளைச்சல் கிடைக் கும் என்று நாம் நம்புகின்றோம். அது தவறான நம்பிக்கையாகும். எந்தப் பயிரும் தனது முதிர்ச்சியை அடைந்தபிறகு எத்த னைக் காலம் வயலில் இருந்தாலும் அது எடையில் அதிகரிப்பதில்லை. எனவே, விதைத்த பின்னர் எத்தனை நாட்களில் பயிர் முதிர்ச்சி அடைகிறது என்பதைச் சரி யாகக் கணக்கிட்டு விட்டால் பயிரை வழக் கத்திற்கு முன்னதாகவே அறுவடை செய்ய லாம். மேலும் சிதறல் மூலமும் பறவைகள் மூலமும் ஏற்படும் இழப்பையும் தவிர்க்க லாம். ஒவ்வொரு பயிருக்கும் அறுவடைக் குரிய தக்க தருணத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு அறுவடை செய்வதன் மூலம் மேற்கூறிய இழப்புகளைத் தவிர்ப்பதோடு, பயிர் வயலில் வீணே இருக்கும் நாட்களைத் தவிர்த்து, அடுத்த பயிருக்கு முன்னதாகவே வழி விடுவதாகவும் அமையும். இந்த நோக்குடன் பல்வேறு இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுப் பல பயிர் களுக்கான அறுவடைக்கேற்ற தக்க தருணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்டு பிடிப்புக்களைப் பயன்படுத்தி உழவர் பெருங்குடி மக்கள் பயன்பெறுதல் அவசியம்.

அக்டோபர் மாதத்தில் வழக்கமாக அறுவடைக்கு வரும் குறுவை நெற்பயிர் பெரும்பாலும் மழையால் பாதிக்கப்படு கிறது. மழைக்காலத்தில் மூட்டம் போட் டிருப்பதால், பயிர் அறுவடை சமயத்தில் தானியத்தில் ஈரம் அதிகமுள்ளது. இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற மாற்றுக் கண்டு பிடிக்க வும்,அறுவடையை முன்னதாகச் செய்யவும், தானியத்தின் ஈரத்தன்மையைக் குறைக்க வும், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 15 விழுக்காடு உப்புக்கரைசலை நெற்கதிர் களின்மேல் தெளிப்பதன்மூலம் 48 மணி நேரத்தில் பயிர் அறுவடைக்குத் தயாராகி விடுவதாகவும், இம்முறையில் மூன்று முதல் ஐந்து நாட்கள் முன்னதாகவே பயிரை அறுவடை செய்ய முடிகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனழக் காலத்தில் அறுவடையாகும் பயிர்கள், நமது நாட்டில் தகுந்த கள வசதி கள் இல்லாததால் பெருமளவிற்குச் சேத மடைகின்றன. சேறு நிறைந்த களத்தில் மண்ணொடு கலக்கும் தானியங்கள் ஒரு புறமெனில், தானியத்துடன் கலக்கும் மண் ஒருபுறமாக அமைகிறது. இக்குறையை நீக்க ஒவ்வொரு கிராமத்திலும் தக்க கள வசதிகள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

பிறநாடுகளிலெல்லாம் அறுவடை செய்யவென வகை வகையான இயந்திரங் கள் பயன்படுகின்றன. எனினும் நமது நாட்டு வயல்கள் சிறிய அளவினவாக

இருப்பதால் இந்த இயந்திரங்கள் நடை முறைக்கு வரமுடியவில்லை. நமது நாட்டு வயல் அமைப்புக்கேற்ற அறுவடை இயந்திரங்கள் செய்வதில் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அறுவடை செய்வதிலும் கதிரடிப் பதிலும் சரியான முறைகளைப் பின்பற் றாத காரணத்தால் விளைச்சலில் சுமார் 5 விழுக்காடு வரை நாம் இழக்க நேரிடு கிறது. வேளாண்மைக்கெனக் கொடுக்கப் படும் மொத்தக்கூலியில் சுமார் 30 விழுக் காடுவரை அறுவடைக்கும் கதிரடிப்பதற்கும் மட்டுமே செலவாகிறது. எனவே, இந்த இழப்பையும் மிகையாக ஆகும் கூலியையும் குறைக்க வேண்டியது மிகவும் அவசிய மாகும். நெல், சோளம், கேழ்வரகு மற்றும் சிறு தானியங்களைக் கதிரடிப்பதற்கும், மக்காச்சோள மணிகளைப் பிரித்தெடுப்ப தற்கும், பல புதிய கருவிகள் வடிவமைக்கப் பட்டுள்ளன. கதிரடிக்கும் இயந்திரங் களைப் பயன்படுத்துவதன் மூலம், ஆள் கூலியும் நேரமும் பெருமளவிற்கு மீதமா கின்றன.

தானியத்தைக் களங்களிலும், சாலை ஓரங்களிலும் வெய்யிலில் உலர்த்துவது என்பது சாதாரணமாக எல்லா உழவர் பெருமக்களும் கையாளும் முறையாகும். நமக்கு வேண்டிய நேரத்தில் தானியங்களை உலர்த்தும் அளவுக்குத் தேவையான வெயில் கிடைக்கும் என்பது உறுதியற்றது. அவ்வாறு வெயில் இருப்பினும், தானியத் தைக் குறைச்சலான ஈரத்தன்மைக்கு ஒரே சீராக உலர்த்துவது என்பதும் இயலாத ஒன்றாகும். இதுதவிர, இம்முறையில் பறவைகளாலும் பிற வகையாலும் நிறைய இழப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். மேலும், குறுகிய காலப் பயிர்கள் வெகு விரைவில் அறுவடைக்குத் தயாராகி விடு கின்றன. அப் பயிர்கள் சிலவற்றை மழைக் காலங்களில் அறுவடை செய்ய நேரிடுவதும் உண்டு. இத்தகு காலங்களில் வெயிலை நம்பி உலர்த்துவது என்பது இயலாத ஒன்றாகும். இந்த நிலையை மாற்று வதற்குப் பலவகைத் தானிய உலர்த்தி கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்த உலர்த்திகளின் சிறப்பு என்னவெனில், வெப்பக் காற்றின் அளவையும், வெப்பத் தையும் நாம் வேண்டிய அளவிற்கு அதிகப் படுத்தவோ அல்லது குறைக்கவோ முடியும். இதனால் தானியச் சேமிப்புக்கு ஏற்ற ஈரத் தன்மைக்கு ஒரே சீராக உலர்த்த முடிகிறது. இந்த உலர்த்திகளில் உலர்த்தப்படும் விதை களின் முளைப்புத் திறனும் சிறிதளவும் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் தற்சமயம் வடிவமைக்கப்பட்டுள்ள உலர்த்திகள் எல்லாம் விலை அதிகமாகவும் உலர்த்த ஆகும் செலவு அதிகமுள்ளதாகவுமே இருக் கின்றன. இதைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

நல்ல தரமான தானியம் மக்களுக்குக் கிட்ட, தானியத்தைச் சுத்தம் செய்து தரம் பிரிக்க வேண்டியது அவசியம். சாதாரண மாகக் கதிரடித்து உலர்த்தப்பட்ட தானி யத்தில் தூசு, மண், சிறுகற்கள் மற்றும் கூளங்கள் நிறைந்திருக்கும். வீசும் காற்றைப் பயன்படுத்தியும், முறத்தாலும் இவற்றைப் பிரித்தெடுப்பது சாதாரணமாக நடைமுறையில் உள்ள வழக்கமாகும். இந்த முறையில் தானியம் முழுமையாகத் தூய்மையாக்கப்படுவதில்லை. சுத்திகரிப்புச் செய்ய அதிக நேரமும் செலவும் ஆகின்றன. இதைத் தவிர்க்கச் சுத்திகரிப்புக் கருவி களும், தரம் பிரிக்கும் கருவிகளும் வடிவ மைக்கப்பட்டுள்ளன. அதுபோலவே விதை நேர்த்திக்கெனவும் பல கருவிகள் வடிவ மைக்கப்பட்டுள்ளன. அக்கருவிகளைப் பயன்படுத்தி உழவர் பெருங்குடி மக்கள் அனைவரும் பயன்பெறலாம்.

விளைந்த உணவுப் பொருட்களை எதிர்காலத்துக்கெனச் சேமித்து வைக்கும் பழக்கம் நம்மிடையே பண்டு தொட்டு இருந்து வருகின்றது. பொதுவாக நாம் தானியங்களைச் சாக்குப்பைகளிலும் மண் குதிர் போன்றவற்றிலும் சேமித்து வைக்கி றோம். இவ்வகையில் சேமிக்கப்படும் பொருட்கள், அளவுக்கு அதிகமான ஈரப் பசையாலும், பூச்சி, பூசணத் தாக்குதலா லும், மற்றும் எலித் தொல்லைகளாலும் பெரிதும் பாழ்படுத்தப்படுகின்றன. நமது

நாட்டின் உணவுப் பொருள்கள் உற்பத்தியில் ஏறத்தாழ 7 முதல் 10 விழுக்காடு இழப்பு, தகுந்த பாதுகாப்பின்மையால் ஏற்படுகிறது.

இதன் விளைவாகத் தானியச் சேமிப்பில் பலவிதமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டு, பாதுகாப்பான சேமிப்பு முறைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் திருத்தியமைக்கப்பட்ட தானியச் சேமிப்புக் கலன்கள் அல்லது குதிர்கள் முக்கியமானவையாகும். இவை தவிர, சாக்குப் பைகளில் சேமிக்கப்படும் தானியங்களின் இழப்பைத் தவிர்க்க, மாலத்தியான் 50 சதவீத திரவ மருந்தை, 50 கிலோ அளவு சாக்கு ஒன்றுக்கு 4 மில்லி லிட்டர் வீதம் நீரில் கலந்து, சாக்குகளின் மேல் தெளித்து நிழலில் உலர்த்திப் பின் தானியங்களை அவற்றுள் சேமித்துப் பயன் பெறலாம்.

பொதுவாகச் சேமிப்பில் ஏற்படும் தானியச் சேதத்தைத் தடுக்கப் பின்வரும் முறைகளைக் கையாளுதல் அவசியமாகும்.

1) சேமிப்புக் கலன்களில், சேமிக்கப் படும் தானியம் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

2) சேமிப்புக் கலன்கள், அறைகள், கிடங்குகள் ஆகியவை சுத்தமாக இருக்க வேண்டும்.

3) சுவர் மற்றும் தரைகளில் வெடிப்பு இருந்தால் அவற்றைச் சிமெண்ட் வைத்து மூட வேண்டும்.

4) தானிய மூட்டைகளை மூங்கில் பாய் அல்லது மரப்பலகைமீது தேவையான இடைவெளி விட்டு அடுக்குதல் நலம். இதனால் காற்றோட்டமும், அவசியமாயின் பின்னர் மருந்து தெளிக்க வசதியும் ஏற்படும்.

5) மூட்டைகளின்மீது ஈரமோ அல்லது அதிகமான ஈரக்காற்றோ படாத வாறு பாதுகாத்தல் அவசியம். பூச்சிகளால் சேதப்படுத்தப்பட்ட தானியங்களை நல்ல தானியங்களோடு சேர்த்து வைக்கக் கூடாது.

பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு தானிய மணியும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட தானியத்திற்கு இணையாகும். நல்ல மண் வளம், நீர் வளம் இருந்தும், உழைப்புக் கேற்ற உரமான மனமும் கரமும் இருந்தும், புதிய புதிய தொழில் நுட்ப வசதிகள் இருந்தும், பாதி வயிற்றுக்குக்கூட உணவு கிடைக்காத மக்கள் கூட்டம் பெருகி வருவதைத் தடுக்கும் வழிகளில் ஒன்றாக, அறுவடைக் காலத்திலும் அதன் பின்னரும் ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்கும் முறைகளில் ஆழமான அழுத்தமான கவனம் செலுத்துதல் வேண்டும்.

# பல்வகை

# பொதுவுடைமை ஒரு நாட்டின் தனியுடைமை அன்று !

பெருஞ்சித்திரனார்

இவர் 10-3-1933இல் சேலத்தில் பிறந்தவர், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் தலை மாணாக்கர்; கூட்டுறவுத் துறையிலும், கானகத் துறையிலும் பணியாற்றியவர். இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றதால் பணி இழந்தவர்; ''தென்மொழி'', ''தமிழ்ச்சிட்டு'', என்னும் இதழ்களை நடத்தி வருபவர்; பத்துக்கு மேற்பட்ட உரைநடை நூல்களையும் வெளியிட்டவர்; ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர். பல்வேறு கிழை நாடுகளுக்கும் மேலைநாடுகளுக்கும் பயணம் சென்று வந்தவர்; ''உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'' என்னும் ஒரு கழகத்தை நிறுவித் தமிழ் மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டாற்றி வருபவர்.

பொதுவுடைமை என்பது முற்றும் பொருளியல் சார்ந்த ஒரு கொள்கையே ஆகும். ஆனால் ஒரு நாட்டின் உடைமைகள் யாவும் அரசைச் சார்ந்தே இயங்க வேண்டியிருத்தலின், பொதுவுடைமை என்னும் பொருளியல் கொள்கையும் ஓர் அரசியல் கொள்கையே என்று கருதப் பெறும். எனினும், இரண்டு கொள்கைகளும் மக்கள் நலம் பற்றியே அமைந்தனவாகலின் இரண்டும் குமுகாயக் கொள்கையின் உட்கிடைக் கொள்கைகளே ஆகும். பொதுவுடைமையைப் புறக்கிடையாகவும், அகக்கிடையாகவும் கொண்டு கூறப்பெறும் Socialism, Communism என்னும் இரண்டு ஆங்கிலச் சொற்களும் Society, Community என்னும் குமுகாயப் பொருளடைவுச் சொற்களையே அடிப்படையாகக் கொண்டிருத்தல் கவனத்திற் கொள்ளத்தக்கது. குமுகாயம் இன்றி அரசியலும் இல்லை; அரசியலின்றிப் பொருளியலும் இல்லை. ஆனாலும் இக்காலத்தில் பொருளியல் சார்ந்த பொதுவுடைமைக் கொள்கை என்பது, தனிப்பட்ட ஓர் அரசுக்கே—ஒரு நாட்டிற்கே உரிய ஒரு கொள்கை போலவே பேசப்பட்டும், கருதப்பெற்றும் வருகின்றது. பொதுவுடைமை என்னும் சொல்லைக் கேட்ட மட்டிலேயே நமக்கு உருசியாவும், சீனாவும் நினைவிற்கு வருவதும், அஃதோர் அயல்நாட்டுக் கொள்கை போல் தோன்றுவதும் அக்கருத்தின், பாற்பட்ட மயக்கத்தினாலேயாம். தேவையா

னால் அம் மயக்கத்திற்கும் கரணியம் ஒன்று கூறலாம். இந்த இரண்டு நாடுகளில்தான் இக்கொள்கை முதன் முதலில் நன்கு ஆயப் பெற்று, அரசியல் வடிவாக ஏற்கப்பெற்றுச் சட்ட முலாம் பூசப் பெற்று, நடை முறைக்குக் கொண்டு வரப்பெற்றது. இக் கொள்கையை உலகில் முதன் முதல் அரசியலளவாக ஏற்றுக் கொண்டவர் உருசியரோ, சீனரோ ஆகலாம். அதனால் இக் கொள்கை அவர்களுடைய கொள்கையே யென்று ஆகிவிடாது. இக் கொள்கையைப் பின்பற்றுவோரெல்லாரும் அவர்களுக்குக் கட்டுப்பட்டவராகவும் ஆகிவிடார். மக்கள் வளர்ச்சியில் எக்காலத்தில் குடும்பங்கள் அமைந்தனவோ, அக்காலத்திலேயே இக் கொள்கை வேரூன்றி விட்டது. ஒரு குடும் பத்தில் உள்ள எல்லோருக்கும் அக்குடும்பச் சொத்துக்கள் யாவும் பொதுவானவை என்று கருதப்படுவதைப் போலவே, குமுகா யத்தில்-ஒரு நாட்டில் உள்ள மக்கள் எல்லோருக்கும் அந்நாட்டில் உள்ள சொத்துக்கள் யாவும் பொதுவானவை யாகக் கருதப்பட வேண்டும் என்பதே இப் பொதுவுடைமைக் கொள்கையின் மையக் கருத்தாகும். எனவே ஒரு சரியான நாட்டு அரசியல், அல்லது ஒரு சரியான குமுகாய அமைப்பொழுங்கு எந்த இனத் தால் முதன்முதலில் அமைத்துக் கொள்ளப் பெற்றதோ, அந்த இனமே இக்கொள் கையை முதன்முதல் செயல்படுத்தத் தொடங்கிய இனமாகும். இந்தவுண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், உருசியர்களும், சீனர்களும் இந்தக் கொள் கையைப்பற்றி ஏதும் அறிந்திராத ஒரு மிகப் பழங்காலத்திலேயே, உலகத் தொல் குடி யாகிய தமிழ்க்குடிதான் இக்கொள்கையை முதன்முதல் பின்பற்றியதாகப் பெருமைப் பட்டுக் கொள்ள இடமுண்டு. ஆனால் நாட் டின் பருப்பொருளாகிய உடைமைகளே தனிப்பட்ட எவருக்கும் உரிமையுடையன வாகக் கருதப்படக்கூடா வென்னுமிடத்து, அவ்வாறு சமைக்கப்பெற்ற நுண்பொருளா கிய ஒரு கொள்கை தங்கட்கே உரியது என்பது நகைப்பிற்கே இடந்தரும் என்பது டன், அக்கொள்கைக்கே அஃது இழுக்காக முடியும் என்க.

இனி, பொதுவுடைமை என்னும் கொள்கையை அகநோக்காகச் சிறிது நோக்குவோம். உடைமைகள் இரண்டு; ஒன்று தனியுடைமை; மற்றொன்று பொது வுடைமை. நாம் விலைகொடுத்து வாங்கிய வீடு நம்மின் தனிவுடைமை; நம்மை ஆளும் சட்டமன்றக் கட்டிடம் நம் எல்லாருக்கும் உரிய பொதுவுடைமையாகும். அஃதாவது நம்முள் எவருக்கும் தனி உரிமை உடைய தன்று. ஆட்சியளவாக இவ்வுடைமைகள் தனியுடைமையும், பொதுவுடைமையும் ஆகுமெனினும், இவ் வுலகையும், அதில் வாழும்மக்களையும் கருதலளவாக எண்ணிப் பார்க்குமிடத்து, நாம் விலைக்கு வாங்கிய வீடும், நம் பொருட்டாக நம் எல்லாரின் வரிப்பணத்தினின்றும் கட்டப்பெற்ற சட்டமன்றக் கட்டிடம்போல நம் எல்லா ருக்கும் பொதுவானதாகவே கருதப்பட வேண்டும் என்பதே பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படைக் கூறாகும். இங்கு தான் தனியுடைமையும், பொது வுடைமையும் ஒன்றுக்கொன்று எதிரான வையென்று கருதிக்கொள்ள வேண்டிய கருத்துக் குழப்பம் ஏற்படுகின்றது. நம் வீடு, நாம் ஈட்டிய பணத்தைக் கொண்டு நமக்காக நாமோ அல்லது நாம் தந்த கூலி யைப் பெற்றுக் கொண்டு கட்டிட வல்லு நரோ கட்டியது. இதற்கெனச் செல வழிக்கப்பட்ட முழுப்பணமும் அல்லது பொருளும் நாம் தனிப்பட உழைத்து ஈட்டி யதே. இஃது எப்படி நம்மைப்போல் தம் பணத்தை இதற்கெனச் செலவழிக்காத பிறர்க்கும் உடைமையாகும் என்பது தனி யுடைமையின் கேள்வி. ஆனால் பொது வுடைமைக் கொள்கை கூறுவது வீட்டைக் கட்டிய முயற்சி பற்றியதே அன்று; அவ் வீட்டை நாம் கட்டிக் கொள்ள நமக்கு எப்படி அந்த அளவு பணம் அல்லது பொருள் கிடைத்தது என்னும் அடிப்படை பற்றியதே. பணம் நாம் ஈட்டியது; நம் அறிவைக் கொண்டு, நம் திறமையை விலை போக்கி, நம் உழைப்பைப் பொருளாகவோ, பணமாகவோ மாற்றியதால் வந்தது என்று தனியுடைமைக் கொள்கை பேசலாம். ஆனால் பொதுவுடைமைக் கொள்கை அதற்கு மேலும் உட்சென்று, நம்மைப்

போல் உள்ள பிறரும் அவ்வாறு தம் உழைப்பால் ஈட்டவியலாதபொழுது நமக்கு மட்டும் இவ்வீட்டம் எப்படி வந்தது; ஒன்று, நாம் பிறர் போலன்றி ஏதோ ஒரு வகையில் தவறாக, மக்கள் அமைப்புக்கு மாறாக உழைத்துப் பொருளீட்டியிருத்தல் வேண்டும்; அல்லது பிறரது போலவே உள்ள நம் உழைப்புக்கு மட்டும் இவ்வளவு வருவாய் வரும்படி நம் மக்களமைப்பில் எங்கோ ஓரிடத்தில் பிழையேற்பட்டிருத்தல் வேண்டும்; அந்தப் பிழைகளை நாம் சரி செய்து விடுவோமானால் நம் உழைப்புக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கின்றதோ, அதே வருவாய் நம்மைப்போல் உழைக்கும் ஒருவருக்கும் கிடைக்கும் அன்றோ என்று பொதுவுடைமைக் கொள்கை பேசுகின்றது. இங்கும் தனியுடைமை விடவில்லை; நம் போல் உள்ள ஒருவனைவிட நாம் மிகுதியாக உழைத்து மிகுதியாகப் பொருள் சேர்த்திருக்கக் கூடாதா என்று மேலேறிப் பேசுகின்றது. இக்கேள்விக்கும் பொதுவுடைமை சரியான விடையை வைத்துக் கொண்டுள்ளது. நம் போல் உள்ள ஒருவனைவிட நாம் மட்டும் எப்படி மிகுதிப்படியாக] உழைக்க முடிந்தது? நம்மைப்போல் இவனால் ஏன் உழைக்க முடியவில்லை? அவன் உழைப்பைவிட நம் உழைப்பு மிகுமாறு அவனைவிட நாம் மிகுதியான அல்லது சத்துள்ள உணவு உண்டு வருதல் வேண்டும். அவனால் எப்படி உண்ண முடியாமல் இருந்திருத்தல் வேண்டும், என்று மேலும் உட்புகுந்து ஆய்ந்து விளக்குகின்றது. இவ்வாறு உணவு, உழைப்பு, ஊதியம், வாழ்க்கை ஆகிய எல்லாவற்றிலும் பொதுவுடைமை மிகச் சரியான கொள்கைகளையே வகுத்துக் கொண்டுள்ளது. தனியுடைமைக் கொள்கையைவிடப் பொதுவுடைமைக் கொள்கை மாந்தனுக்குத் தேவையான எல்லாத் துறைகளிலும் சிறந்தது என்று ஒப்புக்கொள்ளும்படி சிறப்பு வாய்ந்த கொள்கைதான். ஆனால், இப்படிப்பட்ட சிறந்த கொள்கையும் சில சிறப்பற்ற அடிப்படைகளில் வேரூன்றி விடுவதே இக்கொள்கையின் கடைப்பிடி வேறுபாடுகளுக்கும், மாறுபாடுகளுக்கும், தோல்விகளுக்கும் காரணியமாகும்.

எடுத்துக்காட்டாக, உருசியா, சீனா போன்ற மிகப் பெரிய நாடுகளும் செக்கோசுலவேகியா, கிழக்கு செருமனி, போலந்து, ருமேனியா, யுகோசுலாவியா, பல்கேரியா, ஆத்திரியா போன்ற மிகச் சிறிய நாடுகளும் பொதுவுடைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் நாடுகளாகக் கருதப் பெற்று வருகின்றன. ஆனாலும் உருசியப் பொதுவுடைமை வேறு; சீனப் பொதுவுடைமை வேறு; கிழக்கு செருமனி, போலந்து போன்ற நாடுகளில் உள்ள பொதுவுடைமை அமைப்புக்கள் வேறு. இவற்றுள் ஒரு நாட்டின் கொள்கை பிழையென்று ஒரு நாடு குற்றஞ் சாட்டுகின்றது. இவற்றுள் மிகப்பெரிய நாடுகளான சீனப் பொதுவுடைமைக்கும், ருசியப் பொதுவுடைமைக்கும் மிகப் பெரிய வேற்றுமையுள்ளது. சீனக் கொள்கை, கொள்கையைச் செயற்படுத்தும் முறை முதலியன தவறு என உருசியாவும், உருசியா முறை தவறு எனச் சீனமும் ஒன்றையொன்று பேரளவில் கடுங் குற்றங்களைச் சாட்டிக் கொள்கின்றன. இவை இரண்டின் நிழலுக்கும் வெயிலுக்கும் உட்பட்ட நாடுகளுக்குள்-வேறு முட்டலும் மோதலும்! இவ்வேறுபாடுகள் ஏன்? இவ் வேறுபாடுகளுக்கு இங்குள்ள பொதுவுடைமைக்காரர்கள் விடை கூறுகின்றபொழுது, ''அவற்றின் கொள்கையில் வேறுபாடுகள் இல்லை; கொள்கையைச் செயற்படுத்தும் முறைகளில்தாம் வேற்றுமைகள் உள்ளன'' என்பதாகக் கூறி ஆற்றுப்படுத்துகின்றனர். எஃது எவ்வாறாயினும் பொதுவுடைமைக் கொள்கை முறையிலோ, அல்லது செயல் முறையிலோ எங்கோ ஓட்டையும் உடைசல்களும், உடைசல்கள் இல்லாமற் போனால் விரிசல்களாகிலும் இருக்கத்தான் வேண்டும் என்பதைத் தவிர, நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் இவ்வோட்டைகளும், உடைசல்களும், விரிசல்களும், சிற்றளவிலோ, பேரளவிலோ, கொள்கையிலோ, நடைமுறைகளிலோ எங்கே இருந்தாலும், தனியுடைமை குடியரசு போன்ற கொள்கைகளில் உள்ளவற்றைவிடக் குறைவானவையாகவும் அல்லது விரைந்து சரி செய்து கொள்ளக் கூடியனவாகவும் இருக்கும் என்பதில் மட்டும் நமக்கு நல்ல உறுதி

உண்டு. ஆனால் இவ்வுயர்ந்த கொள்கையில் உள்ள இக்குறைகளும் இக்கொள்கைக் குள்ள பெருத்த இழுக்கே. இவற்றிற்குக் காரணியந்தான் நாம் முதலிற் கூறிய ''சிறப் பற்ற அடிப்படைகளில் வேரூன்றிய'' தன்மையாகும். இதன் அகக் கூறுபாடுகளை இவ்வளவில் நிறுத்திக் கொண்டு, இதன் புறக் கூறுபாடுகளைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

மாந்தனுக்குச் செல்வம் மிகமிகத் தனியுடைமை உணர்வுகளும், வறுமை மிகமிகப் பொதுவுடைமை உணர்வுகளும் கால் கொள்ளுகின்றன. எண்ணிக்கையில் மிகுந்த வர்களுக்குரிய உணவும், பிற வுடைமைகளும் போதாவிடத்து இருப்பதைப் பங்கிட வேண்டிய தேவையோ, உடைமைப் பொதுவோ ஏற்படுகின்றன. இஃது இயற்கையின் கூர்தலற வளர்ச்சியே யாகும். இவ் வியற்கைக் கொள்கை விளைவை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. உலகத்தின் மக்கட் பெருக்கத்தை அடியொட்டி எழும் இக்கொள்கை மிகவும் இயற்கையானதாம் என்றும், சரியானதாம் என்றும் கருதி, இதற்கு வழிவிட்டொதுங்குவதே அறிவுடைமையாகும். இக்கொள்கை ஒருமுறை காலூன்றி விட்டால் பிற அனைத்துக் கொள்கைகளும் வலிவிழந்து போகின்றன. கரணியம், பசித் தேவைக்குப் பின்னரே மாந்தரின் அனைத்துத் தேவைகளும் கருதப் பெறுதல் வேண்டும். உண்ண உணவும், உடுக்க உடையும் அற்று எண்ணற்ற கோடி மக்கள் உழன்று கொண்டிருக்கும் போது, உணவுப் பொருள்களையும், உடைமைப் பொருள்களையும் ஏராளமான அளவில் மிகச் சிலர் பதுக்கி வைத்துக் கொண்டிருப்பது இயற்கையின் பொதுமைச் சட்டத்திற்கு மிகவும் முரணானதாகும். நாட்டின் விளைவு மிகுதியாக இருந்து அதனைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய வர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக விருந்தபொழுது, எவருக்கும் உடைமை பற்றியே கவலையில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இருப்பதைப் பங்கிட்டாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும் பொழுது, இதனை எவரேனும் மறுக்கவோ தடுக்கவோ முனைவார்களாயின் அவர்கள் திருடர்களாகவோ, நாணயமற்றவர்களாகவோதாம் இருத்தல் வேண்டும். எனவே தான் பசுமையான மண்ணில் மண்டி வளரும் பயிர்போலப் பசியுள்ள மக்களிடத்தில் கூறப்படும் அமைதிகள், அறமுறைகள், அவையாட்டங்கள் முதலிய எவையும் அவர்கள்முன் பொருளற்ற தருக்கமுறைகளாகப் போகின்றன. இந்நிலைக்குச் செல்வக் கொள்ளையர்களே கரணியமன்றிப் பாடுபட்டும் பசியடங்கா உழைப்பாளிகள் அல்லர் என்பதை மிகவும் அமைதியாக எண்ணி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அல்லாக்கால் சிலரின் ஆக்க விளைவைவிட அழிவு விளைவுகளே மிகுதியாக இருக்கும்.

இனி, இயற்கையாக ஏற்படும் இவ் வெழுச்சியையும், அதன் அடிப்படையாக உருவாகும் இக்கொள்கையையும் ஒரு நாட்டிலுள்ள மாந்த இனத்தின் இயல்பான மாற்ற விளைவுகள், குமுகாயத் திருப்பு முனைகள் என்று கருதாமல், வேறு எந்த நாட்டிலிருந்தோ இறக்குமதி செய்யப் பெற்றவை போலும், இக் கொள்கைக்கான ஆட்ட இயக்குநர்கள்-அல்லது தலைவர்கள் வேறு எந்த நாட்டாரோ எனக் கருதும்படி நடப்பதும், தங்களை அவர்களுக்கும், அவர்கள் நாட்டிற்கும் முகவர்களாக அல்லது கொள்கைக் கங்காணிகளாக அல்லது அடிமைகளாகக் கருதிக்கொண்டு, இங்குள்ள ஒருசிலர் இங்குள்ள மக்களின் தன்மானத்தையும், உரிமையையும் அடகு வைப்பதும் அல்லது விலைபோக்குவதும் அல்லது எருவாகப் பயன்படுத்திக் கொள்வதும் அறியாமையும், அடாவடித்தனமும். இனங் காட்டிக் கொடுப்பும் ஆகும் என்பதை மிகவும் அடக்கத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டிக் கொள்கின்றேன். ஒரு நாட்டின் எழுச்சியுணர்வுகளும், அடக்கவமைதிகளும் அந்நாட்டிற்கே உரியனவன்றிப் பிற நாட்டினின்று இறக்குமதி செய்யப்பெற்றனவாகக் கருதக் கூடாது. மார்க்சு கொள்கை மட்டுந்தான் பொதுவுடைமைக்கு வழிகோலிற்று என்று நாம் கருதிவிடக் கூடாது. அந்தந்த நாட்டின் பழைய வரலாறுகளிலும், குறிப்பாகத் தமிழக வரலாற்றிலும் அக் கொள்கையின் மூட்டம் இருக்கத்தான்

இருந்திருக்கின்றது. இப்படிக் கூறுவதால் மார்க்சின் பொதுவுடைமை அமைப்புக்கு மாசு கற்பித்ததாகக் கருதக் கூடாது. அவரைப்பற்றி இங்கிருக்கும் பொதுவுடைமையரைவிட என் மதிப்பும், பாராட்டும் எள்ளளவும் குறைந்தனவல்ல; கூடியனவாகவே இருக்கும் என்று பெருமையுடன் கூறிக் கொள்வேன். ஆனால் நான் கூறுவதெல்லாம் ஒரு நாட்டின் மக்களமைப்பு, பண்பாட்டு ஒழுங்கு முறைகள், மொழி, இன வரலாறுகள், வேளாண்மை, தொழிலாண்மை முதலியவற்றின் அடிப்படையில் தான் அந்தந்த நாட்டின் பொதுவுடைமைக் கொள்கைகள் அமைக்கப் பெறுதல் வேண்டும் என்பதுதான் என்பதைப் பொதுவாக இந்தியர்க்கும், குறிப்பாக இத்தமிழக மக்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். பொதுவுடைமை இயக்கத்திற்கு உருவமைத்துக் கொடுத்த மார்க்சின் கருத்தும் அதுவே. நமக்கு வேண்டிய ஓர் அரசியல் அல்லது பொருளியல் அல்லது குமுகாயவியல் சார்ந்த கொள்கையை நாம் புதிதாக உருவாக்கிக்கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, அல்லது திருத்தியமைத்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, அது நமக்குப் பொருந்தின அளவில் தான் அமைதல் வேண்டும். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தல் கொள்கைக்கும் பொருந்தாது; செயலுக்கும் பொருந்தாது; அறிவுக்கும் பொருந்தாது. எனவே எவ்வளவு உயர்ந்த வெளிநாட்டுத் துணியாக விருந்தாலும், அதனை நம் பருமன உயரங்களுக்குத் தக்கவாறு வெட்டி அளவெடுத்துப் பொருந்திய முறையில் தான் நம் உடையான கொள்கையைத் தைத்துக் கொள்ளலாமே தவிர, வேறொரு நாட்டிற்கு, அதன் அரசியல், பொருளியல், குமுகாயவியல், வெப்ப தட்ப நிலைகளுக்கேற்பத் தைக்கப் பெற்ற ஆடை நமக்குப் பொருந்தாது என்பதை அறிவினால் எண்ணி ஏற்றுக்கொள்ள வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து, எந்த ஒரு கொள்கையானாலும் சரியே, அது மக்களின் உணர்ச்சியைப் பொறுத்த செய்தியே. மக்கள் உணர்ச்சிக்குப் பொருத்தமில்லாத சில கொள்கைகள் சிற்சிலகால் அரசியல் வல்லாண்மையாலும், செல்வச் செருக்காலும் வலிந்து மக்களிடையில் திணிக்கப்படலாம். அக்கொள்கைகளை மக்களும், அப்பொழுதைக்குப் பெயரளவிலோ, புதியது வேட்கும் தன்மையாலோ, அல்லது தங்களுக்குப் பொருந்தாதன என்றறியவியலா அறியாமையாலோ, நோயாளி சுவையான ஆனால் தன்னுடலுக்கு ஏற்காத உணவை ஏற்றுக் கொள்வது போல அல்லது குழந்தை தன் தந்தையின் புதுச்செருப்பைத் தான் போட்டுக்கொண்டு நடப்பது போல, அல்லது தன்னை ஏதோ ஒரு வகையில் கவர்ந்து விட்டவன் என்ற ஒரே கரணியம் பற்றித் தனக்கு எவ்வாற்றானும் பொருந்தாத ஒருவனை உலகறியாப் பேதைப்பெண் ஒருத்தி மணந்து கொள்வதைப் போல, ஏற்றுக் கொள்ளலாம். நாளடைவில் தங்களின் பொருந்தாத தேர்வினால் வரும் துயரங்களின் அழுத்தத்தால், தங்களின் கொள்கைத் தேர்வைப் பிழையென்று உணரலாம். சில பொழுது கொள்கையேகூடப் பிழை என்று மயங்கலாம். எஃது எவ்வாறாயினும் ஓரின மக்களின் உள்ளுணர்வுக்குப் பொருந்தி வராத ஒரு கொள்கையோ, அரசியலோ, நெடு நாட்களுக்கு, ஏன் சிறிது காலத்திற்குக் கூட நிலைத்து நிற்பதில்லை. விரைவில் ஆட்டங் கொடுத்துவிடத் தொடங்கும்; அல்லது உள்ளரிப்புப் போன்ற பூசல்கள் நிகழும். அக்கால் மூலக்கொள்கையே பிழையோ என்ற ஐயப்பாடு கூட அதனைப் புறமிருந்து பார்க்கும் பிறர்க்கும், சிற்சிலகால் அகமிருந்து இயங்கும் கொள்கையாளர்க்கும் தோன்றிவிடலாம். இந்நிலையில் தேவையில்லாத ஆய்வுகள் நிகழலாம்; வேறுபாடுகள் தோன்றலாம். அவற்றின் அடிப்படையில் வலப்புற இடப்புறக் கட்சிகள் உருவாகலாம். அப்படிப்பட்ட உருவாக்கங்களும், பூசல்களுந்தாம் இப்போது நாம் பார்க்கின்ற இந்தியப் பொதுவுடைமைக் கட்சியிலும், உருசிய, சீன அரசியலும் நிகழ்ந்தனவும், நிகழப் போகின்றனவுமாகும். இவற்றைத்தான் 'சிறப்பற்ற அடிப்படைகளில் ஊன்றிவிடும் தன்மைகள்' என்று முன்னர் குறித்தேன். எத்தகைய சிறந்த விதையானாலும் அதை ஊன்றுகின்ற நிலத்தையும், முறையையும்,

பொறுத்தே அதன் விளைவு. பொதுவுடைமைக் கொள்கை சிறந்ததுதான். ஆனால் அதனை ஊன்றுகின்ற முறைதான் இந்நாட்டில் சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அக்கொள்கையை ஊன்றவே இவ்வளவு காலம் பிடிப்பதும், ஊன்றிய விடத்தும் ஆட்ட அசைவுகள் ஏற்படுவதால் நன்கு வளராமலிருப்பதும், அக்கொள்கையின் விளைவாக்க முறைகளின் தோல்வியைத் தான் குறிக்கும். இத்தோல்வியை அவர்கள் ஒப்புக் கொள்வார்களானால், அதனை வெற்றியாக்கும் சில முறைகளிலும், அவர்கள் கருத்துச் செலுத்தியாகல் வேண்டும்.

அதற்கு அவர்கள் முன்வருவார்களானால், முதலில் பொதுவுடைமை என்பது ஒரு நாட்டின் தனியுடைமை; அஃதாவது ஒரு நாட்டிற்கே மட்டும் உரிய கொள்கை அன்று என்பதையும், ஒரு நாட்டினால் மட்டுந்தான் அக்கொள்கைக்குத் தலைமை ஏற்கமுடியும் என்பது சரியன்று என்பதையும், அந்தந்த நாட்டிற்கும் பொருந்துமாறு அக்கொள்கையை உருவாக்கம் செய்து கொள்ள முடியும் என்பதையும், அவ்வியக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இரண்டாவதாகப் பொதுவுடைமை என்பது, மக்களின் உணர்ச்சியைப் பொறுத்தும் பண்பாடுகளையொட்டியும் அமைக்கப்பட வேண்டிய கொள்கையாகலின், பொதுவுடைமைக் காரர்கள் தமிழக மக்களிடையே இக் கொள்கையைப் பரப்ப விரும்புவார்களாயின், இத் தமிழக மக்களின் மொழியுணர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் மதிப்பளித்தே யாகல் வேண்டும். மொழி, இனம் போன்றவை குறுகிய கொள்கைகள் என்பது அவர்களின் கருத்தானால், பொதுவுடைமையை மேற்கொள்ளும் இயற்கையுணர்விற்கும், அதனைச் செயற்படுத்தும் விளைவாக்க முனைப்பிற்கும் அவர்கள் மாறுபட்டவர்கள், தகுதியற்றவர்கள் என்று கருதிக் கொள்ளுதல் வேண்டும். மூன்றாவதும், முடிவானதுமான ஒருண்மையை அவர்களின் பொருட்டும், இந்நாட்டு மக்களின் பொருட்டும் கூறி இவ்வுரையை முடித்துக் கொள்வதே சால்பாகும் என்று நினைக்கிறேன். நான் மேற்கூறிய இரண்டு வழிகளையும் கடைப்பிடித்து அவற்றிற்குத் தகுந்த வழியில் பொதுவுடைமைக் கொள்கை இங்கு நிலைநாட்டப் பெறவில்லையானால், அறிவுக்கும், இயற்கைக்கும், மாந்தர் உணர்விற்கும் பொருந்தியவழி மொழியையும், இனத்தையும், பண்பாட்டையும் அடியொட்டியவாறு ஒரு பொதுமைக் குமுகாயம் இங்கு உருவாகி வருமென்றும், அவ்வாறு அது தலையெடுக்குங்கால், இவர்கள் பேசும் இக்காலப் பொதுவுடைமைக் கொள்கை பொருளற்றதாகவும் தேவையற்றதாகவும் போய் விடலாம் என்றும், அக் கொள்கை வலுப்பெற வலுப்பெற அமைதி தவழும் ஓர் உயர்ந்த புதுமை உலகம் உருவாகும் என்றும், அவர்கள் உணர்ந்து கொள்வார்களாக.

# இந்தியப் பொருளாதாரமும், தமிழகப் பொருளாதாரமும்

பேராசிரியர் அர. சேஷாசலம்,
எம்.ஏ.,

இக் கட்டுரையாசிரியர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கீழையூரில் 3-3-1923இல் பிறந்தவர்; 1947ஆம் ஆண்டு முதல் மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் பொருளியல் துறை விரிவுரையாளராகவும், 1957ஆம் ஆண்டு முதல் தஞ்சை மன்னர் சரபோசி அரசினர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், பின்பு பேராசிரியராகவும், 1977ஆம் ஆண்டு முதல் இராமநாதபுரம் சேதுபதி அரசினர் கல்லூரிப் பேராசிரியராகவும், 1979 முதல் பதவியுயர்வு பெற்று முதல்வராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர்; 'பணம்' (MONEY), 'PUBLIC FINANCE' ஆகிய நூல்களை எழுதியவர். இவர் 22-8-1983ஆம் நாள் புகுமுடம்பு எய்தினார்.

## 1. அடிப்படை உண்மைகள்

1981-இல் எடுத்த கணக்கின்படி இந்தியாவின் மக்கட்டொகை 685.2 மில்லியன்கள் (ஏறக்குறைய 69 கோடி) ஆகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் யூனியன் ஆகிய இருநாடுகளின் மொத்த மக்கட்டொகையைக் காட்டிலும், இந்தியாவின் மக்கட்டொகை கூடுதலாகும். ஆனால் இவ்விரு நாடுகளின் மொத்த நிலப்பரப்பு, இந்தியாவின் நிலப்பரப்பைக் காட்டிலும் 9 மடங்குக்குமேல் கூடுதலாகும்; ஏறத்தாழப் பத்து மடங்காகும். சீனாவின் மக்கட்டொகை 96 கோடியாகும் (95.7 கோடி). ஆனால் சீனா, நிலப்பரப்பில் இந்தியாவைக் காட்டிலும் மூன்று மடங்குக்கு மேல் பெரியதாகும். நிலப்பரப்பில் உலகில் ஏழாவது இடத்தைப் பெறும் இந்தியா, மக்கட்டொகையில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. மக்கட்டொகையில் முதலிடத்திற்குரியது சீனா.

(அ) சில நாடுகளில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் வருமாறு : 1979

| நாடு | பிறப்பு வீதம் | இறப்பு வீதம் | குழந்தை இறப்பு வீதம் |
|---|---|---|---|
| இந்தியா | 34 | 14 | 12.5 |
| சோவியத் யூனியன் | 18 | 9 | 28 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 17 | 9 | 14 |
| கனடா | 17 | 9 | 12 |
| ஆஸ்திரேலியா | 17 | 8 | 13 |
| ஜப்பான் | 15 | 7 | 9 |
| பிரான்ஸ் | 14 | 11 | 11 |
| பிரிட்டன் | 12 | 12 | 14 |
| மேற்கு ஜெர்மனி | 10 | 12 | 16 |

(ஆ) இந்தியாவில் ஒருவர் வாழும் சராசரி வயது

| கால வரையறை | ஆண்கள் | பெண்கள் | கூடுதல் சராசரி |
|---|---|---|---|
| 1941-51 | 32.5 | 31.7 | 32.1 |
| 1951-61 | 41.9 | 40.6 | 41.2 |
| 1961-71 | 47.1 | 45.6 | 46.4 |

1979-இல் எடுத்த கணக்கின்படி சில குறிப்பிட்ட நாடுகளில் ஒருவர் வாழும் சராசரி அகவை வருமாறு: 1. ஜப்பான்-76; 2. டென்மார்க், ஸ்விட்ஸர்லாந்து - 75; 3. கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ்-74; 4. மேற்கு ஜெர்மனி, பிரிட்டன்-73; இந்தியா-52.

(இ) சில குறிப்பிட்ட நாடுகளில் திருமணம் ஆகும் சராசரி வயது வருமாறு:

| நாடுகள் | | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| நார்வே | | 28.0 | 24.4 |
| கிழக்கு ஜெர்மனி | | 27.4 | 24.7 |
| பிரான்ஸ் | | 26.0 | 22.6 |
| ஜப்பான் | | 25.8 | 23.0 |
| இந்தியா | (1921) | 20.7 | 13.7 |
| | (1951) | 19.9 | 15.6 |
| | (1961) | 21.6 | 15.8 |
| | (1971) | 22.2 | 17.2 |

(ஈ) மக்கட் செறிவு (ஒரு சதுர கிலோ மீட்டருக்குள் வாழும் மக்களின் எண்ணிக்கை) 1976.

1. வங்காளதேசம்-517; 2. ஜப்பான்-311; 3. மேற்கு ஜெர்மனி-246; 4. பிரிட்டன்-228; 5. இந்தியா-221 (1981-ஆம் ஆண்டுக் கணக்கு); 6. ஸ்ரீ லங்கா-200; 7. கிழக்கு ஐரோப்பா-107; 8. சீனா-87; 9. அமெரிக்க ஐக்கிய நாடுகள்-24; 10. இலத்தீன் (தென்) அமெரிக்கா-16; 11. ஆப்பிரிக்கா-13; 12. சோவியத் யூனியன்-12; 13. கனடா-2; 14. ஆஸ்திரேலியா-2; 15. உலகம்-33.

(உ) மக்கட் பெருக்கம்

கடந்த பத்தாண்டுகளில் (1971-1981) இந்தியாவில் மக்கட்டொகை 138 மில்லியன்கள் பெருகியுள்ளது. இது சோவியத் யூனியனின் மக்கட்டொகையல (267 மில்லியன்கள்) 50%க்கு மேல் ஆகும். ஜப்பான் (120 மி.), ஆஸ்திரேலியா (100 மி.) ஆகிய நாடுகளின் மக்கட்டொகைகளைக் காட்டிலும் அதிகம். பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் மொத்த மக்கட் டொகையைக் காட்டிலும் கூடுதலாகும். இந்தியாவில் 1½ நொடிப் பொழுதுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. இதனால் ஆண்டொன்றுக்கு இந்தியாவுக்கு 12.80 மில்லியன் குவிண்டாலகள் உணவும், 250,000 வீடுகளும், 200 மில்லியன் மீட்டர்கள் துணியும், 120,000 பள்ளிக்கூடங்களும், 300,000 ஆசிரியர்களும் அதிகப்படியாகத் தேவைப்படுகிறார்கள்.

(ஊ) குடும்பக் கட்டுப்பாடு

இதுகாறும் கூறியவற்றிலிருந்து நம் நாட்டில் எடுக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் தோல்வியுற்றன என்பது விளங்கும். குடும்பக் கட்டுப்பாடு முறைகள் வெற்றி பெற வேண்டுமானால், நாம் சீனாவை எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும். அத்துடன் சமயத்தின் பெயராலோ, அல்லது வேறு காரணத்தினாலோ இத்திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு குறைந்த அளவு ஆறு ஆண்டுகள் கடுமையான சிறைத் தண்டனை வழங்க வேண்டும். சீனாவில் கையாளப்பட்ட முறைகள் வரு

மாறு-: 1) மூன்றாவதாக குழந்தை பிறந்தால், பெற்றோர்கள் இருவரும் தத்தம் ஊதியத்தில் 10%ஐ (அக்குழந்தை 14-ஆம் அகவையை எய்தும் வரை) இழப்பார்கள். நான்காம் குழந்தைக்கும், ஐந்தாம் குழந்தைக்கும் இவ்விழப்பு முறையே 15%, 20% ஆக உயர்த்தப்படும். 2) சீனாவின் குறிக்கோள் புதிதாக மணமானவர்கள் ஒரு குழந்தைக்கு மேல் பெறக்கூடாது என்பதே. 3) 1948க்கு முன்பு 30ஆக (ஆயிரத்துக்கு) இருந்த பிறப்பு விதம், இப்பொழுது 19ஆகக் குறைந்து விட்டது. 4) குழந்தைகளின் இறப்பு வீதம் 11ஆகக் குறைந்துள்ளது (இந்தியாவில் 120). 5) கருவுற்ற நாளிலிருந்து மூன்று திங்களுக்குள் கருச்சிதைவு செய்துகொள்ளுதல் சட்டப்படி செல்லுபடியாகும். சோவியத் யூனியன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சில மாநிலங்கள், ஹங்கேரி, பல்கேரியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் இம்முறை கடைப்பிடிக்கப்படுகிறது. 6) சீனாவில் 26 அகவைக்குக் குறைந்த இளைஞரும், 24 அகவைக்குக் குறைந்த மங்கையும் திருமணம் செய்துகொள்ளச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. மேலும், சீனாவில் ஆறாம் ஆண்டிலிருந்து சிறுவர் சிறுமியர்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள். தொடக்கப் பள்ளிகளிலிருந்து யாரும் இடையில் விலகுவதில்லை. 20 சிறுவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். சீனாவில் சலுகைகள் பெற்றுள்ள வருக்கம் 14 அகவைக்கு உட்பட்ட 250 மில்லியன் சிறுவர்களே. ஆனால் இந்தியாவில் ஐந்தாம் படிவத்தை முடிப்பதற்கு முன்னமேயே 64% சிறுவர், சிறுமியர் பள்ளிகளை விட்டு விலகுகிறார்கள். 1982-83இல் 120 மில்லியன் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசின் குறியளவு. ஆனால் 87.91 மில்லியன் சிறுவர்களே சேர்க்கப்பட்டனர்.

## 2. வேளாண்மையும் கால்நடைப் பராமரிப்பும்

குறைந்த வருமானமுடைய நாடுகளில் மக்கட்தொகையில் 77%னரும், இடைப்பட்ட வருமானமுடைய நாடுகளில் 46%னரும், தொழிற்றுறையில் முன்னேறிய நாடுகளில் 7%னரும், பொதுவுடைமை நாடுகளில் 25%னரும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 3%னரும் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சீனாவில் 104 மில்லியன் ஹெக்டேர்களும், இந்தியாவில் 145 மில்லியன் ஹெக்டேர்களும் பயிரிடப்படுகின்றன. (1 ஹெக்டேர்=2½ ஏக்கர்). அமெரிக்காவில் பயிரிடப்படும் நிலப்பரப்பும், இந்தியாவில் பயிரிடப்படும் பரப்பும் சமமாகும். இங்ஙனமிருந்தும் சில ஆண்டுகளில் இந்தியா உணவுத் தானியங்களுக்குப் பிற நாடுகளின் தயவை நாடவேண்டிய நிலையில் உள்ளது என்பதையும், அமெரிக்கா பல நாடுகளுக்கும் உணவுத்தானியத்தை ஏற்றுமதி செய்கிறது என்பதையும், 1982-இல் சோவியத் யூனியனுக்கு மட்டுமே 23 மில்லியன் டன்கள் உணவுத் தானியத்தை ஏற்றுமதி செய்ததென்பதையும், 1982-இல் தன் விளைச்சலில் 40% ஏற்றுமதி செய்து அமெரிக்கா உருபா 40,230 கோடியை ஈட்டியது என்பதையும் உள்ளத்தில் கொள்ள வேண்டும். சோவியத் யூனியன் இற்றைநாள் வரை உணவுத் தானியங்களுக்கு அயல்நாடுகளையே நம்பியிருக்கிறது. ஆனால் ஜார் சக்கரவர்த்திகள் ஆட்சியின்போது உணவுத் தானியங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. சீனா உணவுத்தானியத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் தன்னிறைவு பெற்றுள்ளது. சில ஆண்டுகளில் மட்டும் பிற நாடுகளிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்கிறது. 104 மில்லியன் ஹெக்டேர்களை விளைநிலமாகக் கொண்ட சீனா, 145 மில்லியன் ஹெக்டேர்களை விளைநிலமாகக் கொண்ட இந்தியாவைக் காட்டிலும் 2½ மடங்கு அதிகமான விளைச்சலைப் பெறுகிறது. இந்தியா ஆண்டொன்றுக்குச் சராசரி 130 மில்லியன் டன்கள் உணவுத் தானியத்தையும், சீனா 332.2 மில்லியன் டன்கள் உணவுத் தானியத்தையும் உற்பத்தி செய்கின்றன.

இப்பொழுது உணவுத் தானியத்தை மிகுதியாக ஏற்றுமதி செய்யும் நாடுகள் கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா. இவற்றுக்கு அடுத்த நிலையில் பிரான்சும், தென் கொரியாவும் உள்ளன. அமெரிக்காவிலும் ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தைச் சார்ந்த நாடுகளிலும், சீனாவிலும், ஜப்பானிலும் உணவுத் தானியங்கள் உற்பத்திக்கு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. நிலங்களைத் தரிசாகப் போட்டு வைப்பதற்கும்கூட அமெரிக்க அரசாங்கம் மானியம் அளிக்கிறது. சீன அரசாங்கம் தன் வரவு செலவு திட்டத்தில் மூன்றில் ஒரு பகுதியை உணவுத் தானியங்களின உற்பத்திக்கு மானியமாக அளிக்கிறது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தைச் சேர்ந்த நாடுகள் கடந்த ஆண்டு உணவுத் தானியங்களின் ஏற்றுமதிக்காக 800 கோடியை மானியமாக அளித்தன. இத்தொகை அவற்றின் வரவுசெலவுத் திட்டத்தில் மூன்றில் ஒரு பங்காகும். இதற்கெல்லாம் மாறாக, இந்தியாவில் குடியானவர்கள் குறுவாளிகளாகக் கருதப்பட்டுக் கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றனர். உரத்திற்கு அளித்துவந்த மானியத் தொகையை இரண்டாண்டுகளுக்கு முன்பே இந்திய அரசாங்கம் நிறுத்தி விட்டது. மாநில அரசாங்கங்களும் கொள்முதல் எனற பேரில் உணவுத் தானியங்களின் விலையைக் குறைவாக நிர்ணயம் செய்வதுடன், உபரி தானியம் அனைத்தையும் அரசுக்கே விற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றன. இவ்விதமான கெடுபிடி கம்யூனிச நாடுகளில் கூட இல்லை. சோவியத் யூனியனில் விளைச்சலில் 50%ஐ அரசாங்கக் கொள்முதலுக்கு (அரசு நிர்ணயித்த விலையில்) விற்க வேண்டும். மீதியைக் கூடுதல் விலைக்கு விற்றுக் கொள்ளலாம். யூகோஸ்லேவியாவில் உணவுத் தானியங்களை அங்காடியில் விற்கும் விலைக்கே அரசு வாங்க முடியும்; அதாவது அவற்றின் விலையை அரசு அறுதியிடுவதில்லை. இந்நாட்டில் விளைநிலத்தில் 85% தனியார் உடைமை. ஆனால் ஒரு நிலக்கிழார் 25 ஏக்கருக்குமேல் வைத்திருக்க முடியாது. போலந்தில் 350,000 தனியார் பண்ணைகள் உள்ளன. பல்கேரியாவில் தனியார் பண்ணைகள் நல்ல நிலையிலேயே உள்ளன. ஹங்கேரியில் தனியார் தங்கள் பண்ணைகளை விற்கலாம்;அல்லது தங்கள் வழியினருக்கு (வாரிசுதாரருக்கு) வழங்கலாம். ஆனால் இங்கே, எடுத்துக்காட்டாகத் தஞ்சை மாவட்டத்தில், அரசாங்கம் நெல் கொள்முதல் செய்யும் விலையைக் காட்டிலும், இரு மடங்குக்குமேல் பிற மாவட்டங்களில் நெல் விற்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 3½ தாலூகாகள் டெல்ட்டாப் பகுதி. அங்கு விளைச்சலும் தஞ்சையைக் காட்டிலும மாவுகு இரு மடங்கு அதிகம். ஆனாலும் அங்குக் கட்டாயக் கொள்முதல் இல்லை.

இந்தியாவில் உற்பத்தியைப் பெருக்குவதறகு இரண்டு வழிகள் உள்ளன. 1) நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினால் 4 மடங்கு விளைச்சல் பெருகும். 2) இயற்கை எரு, செயற்கை உரம் முதலியவறறைப் பயன்படுத்தி விளைச்சலை மும்மடங்கு பெருக்க முடியும். இங்ஙனம் செய்தால், வெளிநாடுகளுகு, சிறப்பாக மேற்காசிய நாடுகளுக்கு உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்து பெருமளவில் பிறநாட்டுச் செலாவணியை ஈட்டலாம்.

பல நாடுகளிலும் விளை நிலத்தில் நீர்ப்பாசன வசதி உள்ள நிலப்பரப்பு வருமாறு: 1. ஜப்பான்-75% 2. பாக்கிஸ்தான்-72% 3. இந்தியா-24% 4.வங்காள தேசம்-17%. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலங்களில் 40%க்கு மட்டுமே நீர்ப்பாசன வசதியைப் பெருக்கியிருந்தால் இந்தியாவில் 15 மாநிலங்களும் (மொத்த மாநிலங்கள் 22), தமிழகத்தில் 11 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கமாட்டா. இந்தியாவின் நீர் வளங்களும், அமெரிக்காவின் நீர் வளங்களும் ஏறக்குறையச் சமம் எனலாம். ஆனால் இந்தியாவைக் காட்டிலும் அமெரிக்கா ஐந்துமடங்கு நீரைத் தேக்கி வைத்திருக்கிறது என்று மத்திய நீர்ப்பாசன அமைச்சரான திரு. கேதார்பாண்டே அவர்கள், 24-7-1980 அன்று, மக்கள் சபையில் கூறினார்கள்.

இந்தியாவில் கால்நடைகளின் எண்ணிக்கை 350 மில்லியன்கள், இது உலகிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையில் 1/6 ஆகும். இவற்றில் மாடுகளின் எண்ணிக்கை 240 மில்லியன்கள். உலகிலேயே கூடுதலான எண்ணிக்கையுள்ள மாடுகள் இந்தியாவிலேயே உள்ளன. உலகிலுள்ள எருமைகளில் பாதி இந்தியாவில் இருக்கின்றன. ஆனால், இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் மொத்த வேளாண்மை வருமானத்தில் 14%தான். இது மிகவும் குறைவு என்பது கீழ்வரும் புள்ளி விவரங்களிலிருந்து விளங்கும். 1. டென்மார்க்-82%; 2. பிரான்ஸ்-64%; 3. நெதர்லாந்து - 69%; 4. அமெரிக்கா-60%; 5. பிரிட்டன்-78%; 6. ஸ்வீடன்-79%; 7. மேற்கு ஜெர்மனி-71%.

## 3. ஆற்றல் அல்லது சக்தி

ஒரு நாடு முன்னேறியுள்ளதா என்பதை அளவிடுவதற்கான ஒரு கோல் அந்நாடு உற்பத்தி செய்யும் ஆற்றல் அல்லது சக்தியாகும். மூன்றாம் உலகில் (வளர்ந்து வரும் நாடுகள் அல்லது ஏழை நாடுகள்) அடுத்த 20-30 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து மாடுகளையும் (பெருமளவில்), குதிரைகளையும் (சிறு அளவில்) பயன்படுத்தும். இந்தியாவில் பல இனங்களிலிருந்து பெறும் ஆற்றலின் அளவு வருமாறு: 1. விறகு-29% 2 சுழிவுப் பொருட்கள் (சாணம், எச்சம் முதலானவை) 6%. 3. உலர்ந்த சருகு, அழுகிப்போன காய்கறிகள்-9%. 4. நிலக்கரி 14%. 5. எண்ணெய்ப் பொருட்கள்-26% 6. மின்சாரம்-16%. நம் நாட்டில் உழவுக்கும், சவாரிக்கும் பயன்படும் மாடுகள் 80 மில்லியன்கள். இவற்றிலிருந்து கிடைக்கும் பயன்பாடு 30,000 மெகாவாட்டுக்கள் மின்சாரத்திற்குச் சமம். இந்தியாவில் உள்ள மாட்டு வண்டிகளின் எண்ணிக்கை 15 மில்லியன்கள். இவற்றை அப்புறப்படுத்த வேண்டும் என்றால், உருபா 25,000இல் இருந்து 36,000 கோடி வரை முதலீடு செய்ய வேண்டும். இந்தியாவில் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் காட்டிலும், மாட்டு வண்டிகள் தரும் ஆற்றல் கூடுதலானது.

## 4. தொழிற்சாலைகளும் இலாபமும்

1950-51-இல் அரசுத் தொழில் நிறுவனங்களில் செய்த முதலீடு உருபா 29 கோடியாகும். 1980-81இல் இது உருபா 21,126 கோடியாகப் பெருகியது. இவை முறையே உருபா 92,40,47,122 கோடிகளை 1977-78, 1978-79, 1979-80, 1980-81 ஆண்டுகளில் இலாபமாக ஈட்டின. இந்திய உணவுக் கார்ப்பரேஷன் ஐந்தாண்டுகளில் அடைந்த இழப்புக்கள் வருமாறு :

| | டன்கள் | கோடி |
|---|---|---|
| 1977-78 | 299,000 | 47.59 |
| 1978-79 | 300,000 | 52.83 |
| 1979-80 | 480,000 | 75.00 |
| 1980-81 | 640,000 | 104.00 |
| 1981-82 | 680,000 | 120 00 |

இதேபோன்று மாநில மின்சார வாரியங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும், மாநிலப் போக்கு வரத்து (பேருந்து) நிறுவனங்களும் அடைந்த இழப்புக்கள் வருமாறு ;

| | 1975-76 | 1976-77 | 1977-78 | 1978-79 | 1979-80 |
|---|---|---|---|---|---|
| | (உருபா கோடியில்) | | | | |
| மாநில மின்சார வாரியங்கள் | 120 | 112 | 172 | 230 | 450 |
| நீர்ப்பாசனத் திட்டங்கள் | 216 | 244 | 278 | 297 | 339 |
| மாநிலப் பேருந்துப் போக்குவரத்து | 34 | 14 | கிடைக்கவில்லை | | 111 |

தமிழ்நாட்டு சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன் சென்ற ஆண்டு 152,000 டன்கள் உணவுத் தானியங்கள் கொள்முதல் செய்து உருபா 532.000 இழப்பை அடைந்தது.

## 5. முன்னுரிமை முதலீடு

1973-74-இல் இந்திய ரிசர்வ் வங்கி அரசைச் சேர்ந்திராத 1650 கம்பெனிகளைப் பற்றிய ஆய்வு ஒன்றை நிகழ்த்தியது. இவ்வாய்விலிருந்து 369 கம்பெனிகளின் (இவற்றின் ஒவ்வொன்றில் செலுத்தப்பட்ட மூலதனம் உருபா ஒரு கோடிக்கு மேல்) மொத்தம் செலுத்தப்பட்ட மூலதனம் உருபா 1279 கோடியென்றும், அவற்றின் மொத்த இலாபம் உருபா 709.2 கோடியென்றும் தெரிகிறது. எஞ்சிய 1281 கம்பெனிகளில் செலுத்தப்பட்ட மூலதனம் (இவை ஒவ்வொன்றில் செலுத்தப்பட்ட மூலதனம் உருபா 500,000இல் இருந்து உருபா ஒரு கோடி வரை) உருபா 432 கோடியாகும். இவை ஈட்டிய மொத்த இலாபம் உருபா 282.2 கோடியாகும். ஆனால் பத்தாண்டுகளுக்கு முன்பு 369 கம்பெனிகளில் செலுத்தப்பட்ட மூலதனம் 33.3% ஆகும் (இப்பொழுது 74.8%). இவற்றிலிருந்து இந்தியப் பொருளாதாரத்தின் மீதுள்ள முன்னுரிமை மூலதனத்தின்படி இருமடங்குக்குமேல் பெருகியிருக்கிறது என்பது புலனாகும்.

## 6. பண வெளியீடும், வங்கிகளும், விலைவாசிகளும்

இந்திய மக்களின் கைவசம் உள்ள பணம்-உருபா-கோடியில்

| | 1950-51 | 1960-61 | 1970-71 | 1980-81 |
|---|---|---|---|---|
| மக்கள் கையில் இருக்கும் நோட்டுக்கள் | 1410 | 2100 | 4370 | 13,460 |
| மக்கள் கையில் வைப்பாக உள்ள பணம் | 610 | 770 | 2970 | 9,810 |
| கூடுதல் | 2020 | 2870 | 7340 | 23,370 |

தனக்கு நிதியமாகப் பயன்படுத்தப்பட்ட தொகை (உருபா-கோடியில்) முதல் ஐந்தாண்டுத் திட்டம்-330; இரண்டாம் திட்டம்-948; மூன்றாம் திட்டம்-1133; நான்காம் திட்டம்-1006; ஐந்தாம் திட்டம் (1974-78) 2960; 1978-82 (மதிப்பீடு)-7500-ஆகக் கூடுதல் 13.877 கோடியாகும்.

30-6-1981 அன்று இந்தியாவில் இருந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 35,207 ஆகும். இவற்றின் மொத்த வைப்புக்கள் உருபா 37,850 கோடி. ஆனால் இவை பெற்ற இலாபமோ உருபா 30 கோடிதான். இவை 12%இல் இருந்து 36% வரை வட்டி வாங்குகின்றன. ஏறக்குறைய இலாவாதேவிக்காரர்கள் போன்றே இயங்குகின்றன. இவை வைப்பாளர்களுக்கு 8% தான் வட்டி அளிக்கின்றன. இதிலிருந்து வங்கிகள் (ஸ்டேட் வங்கி+14 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்) பெறும் மொத்த இலாபத்தில் பெரும் பகுதியையும் ஊழியர்களின் சம்பளமே விழுங்கி விடுகிறது என்பது தெளிவு. இதனால் கடன் வாங்குவோருக்கும் நன்மையில்லை. இந்தியா விடுதலை பெறாததற்கு முன்பு எந்த வங்கியும் 12%க்கு மேல் வட்டி வாங்கியதில்லை. இப்பொழுது கூட்டுறவு வங்கிகள் மட்டுமே குறைந்த வட்டிக்குக் கடன் அளிக்கின்றன.

நம் நாட்டில் உணவுப் பண்டங்களின் மொத்த விலைகளின் குறியீட்டெண் (1961-62=100), 1973-74இல் 296ஆகவும், பிற பண்டங்களின் விலைகள் 254ஆகவும் ஏறியுள்ளன. 1982-இல் அனைத்துப் பண்டங்களின் விலைகளும் (1970-71=100) 277 ஆக உயர்ந்துள்ளன. அதாவது கடந்த இருபதாண்டுகளில் 550%மேல் விலைகள் ஏறியுள்ளன. சில்லறை விலைகள் மொத்த விலைகளைக் காட்டிலும் கூடுதலாக ஏறியுள்ளன என்பது கூறாமலே விளங்கும். (மொத்த விலைகள் ஆண்டொன்றுக்குச் சராசரி 27.5% ஏறியுள்ளன.)

## 7. வறுமைக் கோட்டுக்கும் கீழே

ஆண்டொன்றுக்கு ஐம்பது டாலருக்கும் (உருபா 425) குறைவாய்ப் பெறுபவரை வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ளதாக உலக வங்கி (ஸஸ்ஸெக்ஸ் ஆய்வு-1969) கூறுகிறது. இந்தியா, பாக்கிஸ்தான், வங்காள தேசம், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் மட்டுமே உலகில் வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள மக்களில் 55% வாழ்கிறார்கள். 1977-78-இல் 290 மில்லியன் பேர்கள் (45%) நம் நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழிருந்தனர்.

## 8. வேலையின்மை

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1951-56) 3.3 மில்லியன்களாக இருந்த வேலையில்லாதோரின் எண்ணிக்கை 1980-இல் (ஆறாம் திட்டத் தொடக்க காலத்தில்) 20.6 மில்லியன்களாகப் பெருகியுள்ளது. 1979-இல் 10-ஆம் வகுப்பு படித்தவர்களில் 37.84 லட்சம் பேரும் (54.5%), பட்ட வகுப்புவரை படித்தவர்களில் 17.97 லட்சம் (29.9%), பேரும் பட்டதாரிகள், மேற் பட்டதாரிகளில் 13.56 லட்சம் (19.6%) பேரும் வேலையின்றிருந்தனர். அமெரிக்காவிலும் ஐரோப்பியப் பொருளாதாரத்தைச் சேர்ந்த நாடுகளிலும் மக்கட்தொகையில் 10% பேர் வேலையின்றி உள்ளனர். கம்யூனிச நாடுகளில் வேலையில்லாதோர் இல்லை. இதற்கு விதிவிலக்கு சீனா. 14 மில்லியன் பேர்கள் சீனாவில் வேலையின்றி இருக்கிறார்கள்.

## 9. வருவாயில் ஏற்றத்தாழ்வுகள்

பொதுவுடைமை (சோஷலிச) நாடுகளில் மக்கட்டொகையில் 40%னர் நாட்டின் மொத்த வருமானத்தில் 25%க்கு மேலும், வளர்ச்சி பெற்ற நாடுகளில் 16%ஐயும் பெறுகிறார்கள். வளர்ச்சி பெறாத நாடுகளை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். முந்தியதில் ஏற்றத்தாழ்வுகள் அத்துணைக் கடுமையாக இல்லை. இவற்றில் 40% மக்கள் நாட்டின் வருமானத்தில் 18%ஐப் பெறுகின்றனர். பிந்தியதில் ஏற்றத் தாழ்வுகள் மிகவும் அதிகம். இவற்றில் 40% மக்கள், நாட்டின் மொத்த வருமானத்தில் 9%ஐயே பெறுகின்றனர். இந்தியாவில் கிராமங்களில் 19% மக்கள் 41.6% வருமானத்தையும், நகரங்களில் 22 7% மக்கள் 58.1% வருமானத்தையும் பெறுகிறார்கள். குறைந்த வருமானமுடைய 54% கிராமப்புற மக்கள் மொத்த வருமானத்தில் 30.8%ஐயும், நகர்ப்புற மக்கள் (35%) மொத்த வருமானத்தில் 13%ஐயும் பெறுகிறார்கள். நகர்ப்புற மக்களில் 8.6% பேர் மொத்த வருமானத்தில் 40%ஐப் பெறுகின்றனர்.

## 10. தொகுப்புரை

1. முப்பதாண்டுகளுக்கு மேல் திட்டமிட்ட பொருளாதாரத்தைப் பின்பற்றியும், வேளாண்மை நாடான இந்தியா உணவுற்பத்தியில் தன்னிறைவு எய்தவில்லை. ஒருவகையில் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. 1964-65இல் இந்தியன் ஒருவனுக்குக் கிடைத்த சராசரி உணவின் அளவு 175.3 கிலோகிராம் ஆகும். இது 1982-83 இல் 150 கிலோகிராமாகக் குறைந்துள்ளது 2. 1970-71-இல் ஒரு இந்தியப் பண்ணையின் சராசரி பரப்பு 2.28 ஹெக்டேராகும். 1976-77-இல் இது 2 ஹெக்டேராகக் குறைந்துள்ளது. 3. இதுவரை முடிந்த ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களிலும், இந்தியா, திட்டக் குழுமம் அறுதியிட்ட அனைத்துக் குறியளவுகளையும் எய்தவில்லை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், திட்டக் குறியளவுகளை எய்தப் போவதில்லை. 4. நம் நாட்டில் 2 மில்லியன் பேர்கள் கொத்தடிமைகளாக உள்ளார்கள். இவர்களில் 30,000 பேர்களே மறுவாழ்வு பெற்றுள்ளார்கள். 5. வேலையில்லாதவர்களின் தொகையும் திட்டம் தோறும் பெருகியே வந்திருக்கிறது. 6. எழுத்தறிவு பெற்றவர்களின் விகிதமும் 36.17%தான் (ஆடவர் 46.74%; மகளிர் 24.88%). உலக மக்களில் 800 மில்லியன் பேர்கள் எழுத்தறிவு இல்லாதவர்கள். இவர்களில் பாதிப் பேர் இந்தியாவில் இருக்கின்றார்கள். 7. கடந்த பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை 25% கூடியிருப்பதிலிருந்து

குடும்பக் கட்டுப்பாட்டு முறை சரியாகச் செயல்படவில்லை என்பது விளங்கும். 8. கங்கை காவிரித்திட்டமும் தொடங்கப் படவில்லை. 9. வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதியும் அதிகமாயுள்ளது. 10. விலைவாசிகளும் வாரந்தோறும் ஏறிக் கொண்டே வருகின்றன. 11. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 97,500 கோடி. இதில் ரூபா 17,794 கோடிதான் (மருத்துவ வசதி, வீடு கட்டுதல் முதலானவை) சமுதாய நலன்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. (18.3%). 12. வெளிநாடுகளில் இருந்து நாம் பெற்ற கடன் தொகையும் பெருகியே வந்திருக்கிறது. 1982-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் இந்திய அரசின் வெளிநாட்டுக் கடன் ரூபா 20,533 கோடி. இக் கடன் தொகை 1939-இல் (இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன்னர்) ரூபா 469.12 கோடியாகவும், முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்க காலத்தில் (1950-51) ரூபா 32.03 கோடியாகவும் இருந்தது. 13. அண்மையில் புது டில்லியில் நிகழ்ந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கூட இந்தியா ஐந்தாவது இடத்தையே பெற்றது. ஒலிம்பிக் விளையாட்டுக்கள் போன்று இப் போட்டி உலகளாவியதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

11. 1. பரப்பளவில் இந்தியாவில் தமிழகம் 11ஆவது இடத்தையும், மக்கள் தொகையில் 7ஆவது இடத்தையும், சராசரி வருமானத்தின் அடிப்படையில் 9ஆவது இடத்தையும் பெறுகிறது. நில உற்பத்தியின் (ஹெக்டேருக்கு) அடிப்படையில் 9 ஆவது இடத்தையும், நிலத்தொழிலாளர் (ஒருவர் எவ்வளவு உற்பத்தி செய்கிறார் என்ற) அடிப் படையில் 14 ஆவது இடத்தையும் பெறுகிறது. 2. இந்தியாவில் வறட்சிக்கு ஆளாகி இருக்கும் 90 மாவட்டங்களில், 60 விந்திய மலைக்குத் தெற்கில் உள்ள பகுதியிலேயே இருக்கின்றன. 3. 1970-71 இல் தமிழ் நாட்டில் ஒரு பண்ணையின் சராசரி பரப்பு 1.45 ஹெக்டர்கள். 1976-77 இல் இது 1.26 ஹெக்டேர்களாகக் குறைந்துள்ளது. 4. இந்தியாவிலேயே அதிகமான கடன் பளுவுக்கு ஆளான குடியானவர்கள் ஆந்திரம், கருநாடகம், தமிழ்நாடு ஆகிய மூன்று தென் மாநிலங்களிலேயே உள்ளனர். 5. திட்டங்களுக்கான முதலீட்டுச் செலவில் தமிழ்நாடு 21ஆம் இடத்தைப் பெறுகிறது; (மொத்த மாநிலங்கள் 22). 6. இந்தியாவில் 110 மாவட்டங்கள் தொழில் வளம் ஒழிந்த மாவட்டங்கள் என அறிவிக்கப் பட்டுள்ளன. இவற்றில் ஒரு மாவட்டங் கூடத் தமிழகத்தில் அறிவிக்கப்படவில்லை என்பது வருந்துவதற்குரியது. 7. இந்தியப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் திரு. ஆர். வெங்கட்டராமனின் கூற்றுப்படி, 1952-53 இல் தொழில்துறையில் 3ஆவது இடத்தைப் பெற்றிருந்த தமிழகம், இப்பொழுது 13ஆவது இடத்திற்குப் போய்விட்டது. 1967ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் பெரிய தொழிற்சாலை ஒன்றும் நிறுவப்படவில்லை. 8. நம் நாட்டிலேயே சிறுவர், சிறுமியர் அதிகம் ஆலைகளுக்கு வேலைக்குச் செல்வதும் தமிழகத்தில்தான். சிவகாசியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள பட்டாசு, தீப்பெட்டித் தொழிற் சாலைகளில் 39,666 சிறுவர், சிறுமியர் வேலை பார்க்கின்றனர். 9. தமிழ்நாடு, பெரும்பாலும் உணவுதானிய உற்பத்தியில் தன்னிறைவு உள்ளதாக இருக்கிறது. சில ஆண்டுகளில் மட்டும் (இந்த ஆண்டைப் போன்று) பிற மாநிலங்களையும் இந்திய அரசையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. 10. அறுவடை செய்வதற்கு முன்பு, தமிழ்நாட்டுக் குடியானவர்கள் ஆண்டு தோறும் ரூபா 200 கோடி இழப்பை அடைகின்றனர். 11. தமிழகத்தில் மட்டும் 750,000 குட்ட நோயாளிகள் உள்ளனர். இந்தியாவில் உள்ள மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் ஊனமுற்றோர்களின் தொகை கூடுதலாக உள்ளது. 12. தமிழ்நாட்டில் வட்டிக்கடை வைத்திருப்போர்களின் எண்ணிக்கை 40,000. இவர்களில் 3,000 பேர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ளனர். 13. பம்பாய் நகரத்தில் ஆள் ஒன்றுக்குச் சராசரி நாடோறும் 140 லிட்டர் தண்ணீர் கிடைக்கின்றது. ஆனால் சென்னைவாசிக்கு இதில்

பாதி அளவுதான் தண்ணீர் கிடைக்கிறது. 14. இயற்கைத் தர வாழ்க்கைக் குறியீட்டின்படி 1971ஆம் ஆண்டில், கேரளம், 66 எண்களையும், மகாராட்டிரம், பஞ்சாப் ஆகியவை 30 எண்களையும், மேற்கு வங்காளம் 47 எண்களையும், கருநாடகம் 46 எண்களையும், தமிழ்நாடு 45 எண்களையும், அரியானா 44 எண்களையும், ராஜஸ்தானம் 42 எண்களையும், ஆந்திரம், பீகார், கூர்ஜரம், ஒரிஸ்ஸா ஆகியவை 40 எண்களையும் அஸ்ஸாம் 37 எண்களையும், உத்திரப் பிரதேசம் 31 எண்களையும், பெற்றுள்ளன. இவ்வரிசையில் தமிழகம் 6ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. 15. இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே தமிழ் நாட்டுச் சட்ட மன்ற உறுப்பினர்கள் நாம் மிகக் கூடுதலான திங்கள் ஊதியத்தைப் பெறுகிறார்கள். இவர்கள் பெறும் ஊதியம் உருபா 1050.

12. 1. கருநாடகத்தில் இருந்தும், கேரளத்தில் இருந்தும் மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கும் கல்லாடம், அச்சன் கோயிலாறு முதலான ஆறுகளை மலையைக் குடைந்து தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிட்டால் தமிழ்நாட்டுக்கு ஆண்டு தோறும் 47 மில்லியன்கள் கனஅடி நீர் கிடைக்கும். இதனால் இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் குடிநீர்ப் பஞ்சம் நீங்குவதுடன், பல ஆயிரம் ஏக்கர் நிலங்களையும் சாகுபடிக்கு கொண்டுவர முடியும். இத் திட்டத்தினால் திருநெல்வேலி மாவட்டமும் சிறிதளவு பயன்பெறும். கேரளத்தின் நீரில் 20%ஐ இப்பொழுது தமிழ்நாடு பயன்படுத்தி வருகிறது.

2. தமிழ்நாட்டில் 300 மக்களுக்கும் மேலுள்ள அனைத்துச் சிற்றூர்களிலும் பள்ளிக்கூடங்கள் உள்ளன. இது மகிழ்ச்சிக் குரியது. ஆனால் இங்ஙனம் இருந்தும், கேரளம்தான் எழுத்தறிவில் முதலிடத்தைப் பெறுகின்றது; (69.17%). தமிழ்நாட்டில் இவ்வீதம் 45.6% தான். அனைத்து இந்திய சராசரி 36.17% ஆகும்.

3. மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில்தான் தொழில் நுட்பப் பள்ளிகள் கூடுதலாக உள்ளன. இவற்றின் எண்ணிக்கை 55.

4. அனைத்து இந்திய சராசரியைக் காட்டிலும், தமிழகத்தில் பயன்படுத்தப் படும் மின்சாரத்தின் அளவு 40% கூடுதலாகும்.

5. தமிழ்நாட்டுக் குடியானவர்கள், தாங்கள் பயன்படுத்தும் மின்சார அலகு ஒன்றுக்கு 12 காசுகளே கட்டணமாகச் செலுத்துகின்றனர். இது மிகக் குறைவானதாகும். ஆந்திரத்தில இக்கட்டணம் 16 காசுகளாகும். 10 மாநிலங்களில் இக்கட்டணம ஆந்திரத்தைக் காட்டிலும் கூடுதலாகும்.

6. இந்தியாவில் மக்கட்டொகையின் படி 3ஆவது இடத்தை வகித்த சென்னை, இப்பொழுது 4ஆவது இடத்தை வகிக்கிறது.

7. செய்தித்தாட்களைப் பொறுத்த வரையில் நம்நாட்டில் சென்னை 3ஆவது இடத்தைப் பெறுகிறது. முன்பு 2ஆவது இடத்தில் இருந்தது. இப்பொழுது டிலலி 2ஆவது இடத்தைப் பிடித்துவிட்டது.

8. நியாய விலைக் கடைகளைப் பொறுத்த மட்டில் 2500 மக்களுக்கு ஒரு கடையாவது இருக்கவேண்டும் என்பது இந்திய அரசின் முடிவு. இக் குறிக்கோளைக் கேரளம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களே எட்டியுள்ளன. இதிலும் கேரளம்தான் முன்னணியில் நிற்கிறது.

9. வேலையில்லாதோருக்குக் கேரளம், தமிழ்நாடு, மேற்குவங்கம் ஆகிய மூன்று மாநிலங்களே மானியங்கள் அளிக்கின்றன. தமிழகத்தில், திங்கள் ஒன்றுக்கு ஒருவருக்கு உரூபா 50 மானியமாக வழங்கப்படுகிறது.

10. 60 அகவைக்கும் மேற்பட்ட நிலம் இல்லாத தொழிலாளர்களுக்கு மேற்குவங்கமும் கேரளமும் ஓய்வூதியம் வழங்குகின்றன, தமிழக அரசும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இன்னும் செயல் படுத்தவில்லை.

## 13. நிறைவுரை

1. வெறுங்கை முழம் போடாது. அது போன்றே வெற்று முழக்கங்கள் சோறு போடா. ஆகவே, முழக்கங்களை நம்பி யிராமல் ஜப்பான், டைவான், தென் கொரியா, ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைப் போன்று நாமும் முன்னேற வேண்டும். இதற்குக் கடின உழைப்புத் தேவை. பிற நாட்டினர்களுடன் ஒப்பிடும் பொழுது, இந்தியர்களைச் சோம்பேறிகள் என்றே சொல்லவேண்டும். இதற்குத் தட்ப வெப்ப நிலையும் ஒரு காரணமாக இருக்கலாம். பேராசிரியர் ராஜ் கிருஷ்ணா அவர்களின் மதிப்பீட்டின்படி இந்தியர்களில் 28./· மடிந்திருக்கிறார்கள்; 35./· வறிஞர்களாக இருக்கிறார்கள்; 12./· ஓசாம்பேறிகளாகவும், ஏழைகளாகவும் இருக்கிறார்கள்.

2. இந்தியர்களுக்கு அறிவு இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளில் (இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு), அமெரிக்காவிற்கு மட்டும் சென்று குடியேறியிருக்கும் இந்தியர்களின் உழைப்பின் மதிப்பு உருபா 900 கோடியாகும். நம் நாட்டிலேயே வாய்ப்புக்கள் அதிகம் அனிக்கப்பட்டிருந்தால், அவர்கள் இங்கேயிருந்து நாட்டின் வளர்ச்சிக்கான பணிகளை ஆற்றியிருப்பார்கள். கூடுதல் ஊதியத்திற்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பது அத்துனை முக்கிய காரணமன்று.

நம் நாட்டில் இயற்கை வளங்கள் அதிகமாக இல்லையாயினும், அவற்றின் குறையை அறிவைப் பயன்படுத்தி ஈடுகட்டிக் கொள்ளலாம். ஜப்பானின் நிலப்பரப்பில் 80./· மலைப்பாங்கானது. அந்நாட்டில் இரும்பு, நிலக்கரி, எண்ணெய் ஆகிய வளங்கள் இல்லை. இவற்றுக்குப் பிற நாடுகளையே எதிர் பார்த்திருக்கிறது. அங்ஙனமிருந்தும் நம்மெல்லோருக்கும் அதிர்ச்சி தரத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. இதற்குக் காரணம், அவர்களின் நாட்டுப் பற்றும், கடின உழைப்புமே. அமெரிக்காவில் இருக்கும் சிறு கம்பெனிகளைப் போன்று இருமடங்கும், பிரிட்டனில் இருக்கும் கம்பெனிகளைப் போன்று பத்து மடங்கும், ஜப்பானில் சிறு கம்பெனிகள் உள்ளன. இவற்றின் எண்ணிக்கை 6.4 மில்லியன்கள். சீனாவின் கடற்கரைப் பகுதியில் மட்டும் 400 மில்லியன் டன்கள் எண்ணெய் கிடைக்கிறது. நம் நாட்டிலும் முயன்றால் பெரும் எண்ணிக்கையில் எண்ணெய்க் கிணறுகளைக் கண்டு பிடிக்க முடியும்.

நாம் பாடுபட்டால் சில ஆண்டுகளிலேயே உணவுத்தானியங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். கடலில் உண்டாகும் பண்டங்களையும், மிகுதியும் ஏற்றுமதி செய்ய முடியும். தோல், பட்டு வளர்ப்பு ஆகிய துறைகளிலும், பொறியியல் பண்டங்கள் உற்பத்தியிலும் முன்னணியில் நிற்க முடியும்.

இவற்றுக்குத் தடங்கல்களாக உள்ளவை, இந்தியா தழுவிய அளவிலும் சரி, மாநிலம் தழுவிய அளவிலும் சரி, சரியான தலைவர்கள் இல்லாமையே. நம்மிடம் நாணயமும் மிகவும் குறைவு. எடுத்துக்காட்டாக, இடைநிலையில் உள்ள ஒரு தொழில் அதிபர் அனைத்துச் சட்ட விதிகளுக்கும் உட்பட்டுத் தொழிலைத் தொடங்கும் ஒரு திட்டத்திற்கு, 18 கட்டங்களில் கையூட்டுக் கொடுக்கவேண்டியுள்ளது.

மக்கள் நல்லவர்களாகத் திருந்தி ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்து பாடுபட்டால், நாட்டில் நிலை கிடுகிடு என்று உயரும். மனிதன்தான் அனைத்துக்கும் அளவுகோல் என்று ஒரு கிரேக்கப் பழமொழி கூறுகிறது. இக்கருத்தையே,

> காடா கொன்றோ நாடா கொன்றோ
> அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே.
>
> நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை நிலைகலக்கிக் கீழ் இடுவானும்—நிலையினும் மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத் தலையாகச் செய்வானும் தான்.
>
> உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்.
>
> அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்.
>
> தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு.
>
> தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்.
>
> ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்

என்ற தமிழ்ப் புலவர்களின் வாக்குக்களும் வலியுறுத்துகின்றன.

# கபிலரும் ஓர்ட்சு ஓர்த்தும்

டாக்டர் ம. செ. இரபிசிங்

இக் கட்டுரையாளர் 22-6-1939இல் குமரி மாவட்டத்திலுள்ள இருளப்பபுரம் என்னும் ஊரிற் பிறந்தவர்; இந்தி, மலையாளம், வடமொழி முதலிய ஐந்து மொழிகளை யறிந்தவர்; உயர்கல்வி, வடமொழி, செர்மன் மொழி ஆகியவற்றில் மேற்சான்றிதழ் பெற்றவர்; 'அண்ணாவின் மொழி நடை', 'மாலிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பம்', 'அகிலனின் பொன்மலர்- ஓர் ஆய்வு', 'தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்', 'பிற சமயக் கவிஞர் பார்வையில் கிறிஸ்து" ஆகிய நூல்களை எழுதியவர்; 'செங்கோல் வேந்தர்' 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூல்களின் பதிப்பாசிரியர்; பூண்டி அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியின் முதுகலைப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணிபுரிந்து வருகிறார்.

சுற்றுப்புறச் சூழலைப் பற்றிய சிந்தனை இன்று ஓர் அறிவியலாக (Environmental Science) வளர்ந்துள்ளது. எல்லா நிலையி லும், எல்லாத் தரப்பிலும். சுற்றுப்புறச் சூழலையே அடிப்படையாகக் கொண்டு முடிவுகள்—பலன்கள் தீர்மானிக்கப்படுகின் றன. கவிஞர்களின் படைப்புக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கபிலரின் படைப் புக்களும், ஆங்கிலக் கவிஞர் ஓர்ட்சு ஓர்த் தின் படைப்புக்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

சங்க காலத்தைச் சாரிந்தவர் கபிலர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் செர்மனியில் தோன்றி, பிரஞ்சு நாட்டில் செல்வாக்குப் பெற்று, இங்கிலாந்தில் சிறப் புற்று மிளிர்ந்த வீறுணர்ச்சிக் கவிதை இயக் கத்தைச் (Romantic Movement) சார்ந்தவர் வில்லியம் ஓர்ட்சு ஓர்த்.

காலத்தாலும் நிலத்தாலும் இருபெருங் கவிஞர்களுக்கிடையே நீண்ட இடைவெளி யிருப்பினும், தம் சுற்றுப்புறச் சூழலின் தாக்கம் பெற்ற தன்மையில் அமைந்த உணர் வால் இருவரும் ஒன்றுப்பட்டவர்கள்.

சோலைகளும், அருவிகளும், குன்று களும் மிகுந்த, மலைவளம் கொழிக்கும் பாரியின் பறம்புமலை கபிலரின் வாழ்க்கை யோடு மிக நெருங்கிய தொடர்புடையது.

இதற்குக் காரணம் வள்ளல் பாரியின்மீது அவர் கொண்ட நட்பே!

பறம்பின் இயற்கையில் ஒவ்வொரு சிறு சிறு கூறும், புதுப்புது உணர்வுகளையும், புத்தின்பத்தையும் வழங்கியது. அருவியின் ஆரவாரமே ஓர் அருமையான இசை நாதத்தை வெளிப்படுத்துகிறது. அது மத்தளமாக மகிழ்வூட்டுகிறது. புல்லாங்குழலின் இசை இன்பத்தை மூங்கில் துளையில் படும் காற்று வெளியிடுகிறது. யாழின் இனிய கானம் வண்டின் ரீங்காரத்தால் ஒலிக்கிறது. ஓர் அறிய இசை அரங்கமே கவிஞரின் கண்முன் காட்சியளிக்கிறது. அக் கவினுறு காட்சி, செவியுறும் இன்பம், இயற்கை தரும் புது அனுபவம். இயற்கையின் சுற்றுப்புறச் சூழல் கபிலரைச் சுற்றமாகச் சுற்றியது; இசையின் பேரின்பத்தை வாரி வழங்கியது.

ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்விசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்
கண்கவை இருக்கும் கருங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயா ழாக. (அகம் : 82)

கம்பர் லேண்டில் (Cumber land) வாழ்ந்தவர் ஓர்ட்சு ஓர்த். அங்குள்ள மலையும், ஏரிகளும், பசுமையான வெளியிடமும், அவற்றினூடே ஓடும் டெர்வென்ட் நதியும் அவரது வாழ்வோடு ஒன்றியவை. அவை வழங்கிய இயற்கையின் கவினுறு காட்சிகளும் உணர்ச்சிகளும் அவரை இயற்கைக் கவிஞராக்கின. இயற்கையின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் அவருக்குப் புத்துணர்வையும், புது அனுபவத்தையும் வழங்கின.

பசுமையான புல்வெளியின் இடையே அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் டெர்வென்ட் நதியின் இயக்கம் ஒரு புது அனுபவத்தைக் கொடுக்கிறது. அந்நதியின் இயற்கை ஓட்டம் ஒருவிதமான ஓர் இசை இன்பத்தைத் தருகிறது. ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கும் அந்நதி தரும் இசை இன்பம், கவிஞர் காதில் இரவும் பகலும் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கிறது. கேட்கும் போதெல்லாம் புத்தின்பத்தையே வழங்குகிறது. குழந்தைப் பருவத்திலிருந்தே சுற்றமாகக் கொண்ட அந்நதி தரும் ஓசை, இசை தரும் இன்பமாக ஓர்ட்சு ஓர்த்தை ஈர்க்கிறது. கவிஞர் அதில் ஆனந்தப் பரவசப்படுகிறார்.

O Derwent! travelling over the
green plains
Near my 'Sweet Birth place' didst
thou, beauteous stream,
Make ceaseless music through
the night and day
(Prelude, Book, I, II, 277—280)

கபிலரும் ஓர்ட்சு ஓர்த்தும், மலையும் மலைசார்ந்த இயற்கை வளம் மிகுந்த நிலத்தையும் சூழலாகக் கொண்டவர்கள், பெரிதும் அதன் தாக்கத்திற்குள்ளானவர்கள். அவர்தம் படைப்புக்கள் அத்தாக்கத்தைப் பெற்றவையே. இரு கவிஞர்களும், அவர்கள் வாழ்ந்த காலக் கவிஞர்களுள் இயற்கையைப் பற்றி மிகுதியாகப் பாடியவர்கள். எனவே, இயற்கைக் கவிஞர்கள் (Nature poets) என்ற பெருமைக்குரியவர்கள்.

பறம்பின் அருவியும், கம்பர்லேண்டின் நதியும் ஒரே இன்பத்தையே வழங்கின. அது இயற்கை தந்த இசை இன்பம்.

கபிலருக்குக் காந்தளும், ஆம்பலும், குவளையும் கொடுத்த அழகின்பத்தை, ஓர்ட்சு ஓர்த்திற்கு டெபோடிலிசும் (Daffodils), லில்லியும் (Lily) வழங்கின.

பாரியின் பிரிவு கபிலரைக் கையறு நிலை பாட வைத்தது; தம்பி சான் ஓர்ட்சு ஓர்த்தின் பிரிவும், நண்பர்கள் பிரிவும், சிறப்புடையோர் பிரிவும் ஓர்ட்சு ஓர்த்தையும் கையறு நிலைப் பாடல்கள் பாடச் செய்தன.

இப்பாடல்களுக் கிடையே இப்பெருங் கவிஞர்களின் இயற்கை ஈடுபாடும் உணர்வுகளும் ஒன்றாய் இருத்தல் அவர் பெற்ற சூழலே என்பது ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

# தொல்காப்பிய நூற்பாக்கள் பற்றிய ஐயங்கள்

பேராசிரியர் கே. எம். வேங்கடராமையா,
எம்.ஏ.,

இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காரம்பாக்கத்தில் 4-4-1911இல் பிறந்தார். 1-6-1945 முதல் 31-3-1974 வரை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்; பின் எழும்பூர்த் தமிழ் சமஸ்கிருத ஆராய்ச்சி நிலையத்தில் மூன்றரையாண்டுகள் பணிபுரிந்து, பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் இருக்கையில் மூன்றரை ஆண்டுகள் பணியாற்றி, இப் பொழுது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக அரிய கையெழுத்துச் சுவடிப் புலச் சிறப்புப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

திருப்பனந்தாள் காசி மடத்து நூல் வெளியீட்டுப் பணியில் 20 ஆண்டுக்காலம் துணை புரிந்துள்ளார். கல்வெட்டுப் பற்றிய ஆய்வு நூல்கள், பாடநூல்கள் பல எழுதியுள்ளார். சமயச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். தமிழ் இலக்கியங்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

தொல்காப்பியம் மிகப் பழமையான இலக்கண நூல், கடைச்சங்க நூல்கள் எனக் கருதப்பெறும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை ஆகியவற்றுக்கும் பல நூற்றாண்டுகட்கு முன் எழுதப்பெற்றது என்பது பலருக்கும் ஒப்பமுடிந்த உண்மை யாகும்.

இதனைப் பன்னூறாண்டுகள் தமிழ் மக்கள் பயின்றனர். இந்நூலுக்குரிய உரைகளோ, இது எழுதப்பெற்ற இருபது நூற்றாண்டுகட்கும் பிறகே எழுதப் பெற்றன என்பதில் ஐயம் இல்லை. பன்னூறு ஆண்டுகள் பயிலப் பெற்ற நூலாதலான் தொல்காப்பியம் ஆகிய இப்பழமையான நூல் யாக்கப்பெற்ற காலத்திய உருவிலேயே உள்ளது என்று கொள்ளவேண்டிய தேவையில்லை. அதில் சில மாறுதல்கள், காலவெள்ளத்தில் படிப் பவராலோ, சொல்பவராலோ, ஏடு எழுது வோராலோ, இடைச்செருகல் செய் வதையே குறியாகக் கொண்ட சிலராலோ ஏற்பட்டிருத்தல் கூடும் என்று கொள்ள இடமிருக்கிறது. காய்தல் உவத்தல் அகற்றி, நடுநிலையினின்று காணின், தொல் காப்பியத்திலும் சில நூற்பாக்கள் இடைச் செருகல்களாகவும், வேண்டாதனவாகவும் தோன்றக்கூடும். இங்ஙனம் எண்ணித் தொல்காப்பியத்தைப் படித்தபொழுது அங்குமிங்குமாகச் சில ஐயங்கள் தோன்ற லாயின. அவற்றைப்பற்றி எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. எழுத்ததிகார நூற்பா எண் ஒன்பது பற்றிய ஐயம்:

முதல் நூற்பாவில் 'எழுத்தென்பவை அகர முதல் னகர விறுவாய் முப்பஃதென்ப' என்று ஆசிரியர் கூறினார்.

அம் முப்பது எழுத்துக்களையும் உயிர் என்றும் மெய் என்றும் குறியிட்டுக் கூறியவர், உயிர் எழுத்துக்களைப் பன்னிரண்டு என்று,

''ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப''

என்ற எட்டாவது நூற்பாவில் கூறினார். இந்நூற்பாவில் ''ஔகார இறுவாய்'' என்று இறுதி எழுத்தைக் கூறியதென் எனின், முதல் நூற்பாவில் 'அகரமுதல' என்று கூறினமையால் என்பது சொல்லாமே போதரும்.

முதல் நூற்பாவிலும் இவ்எட்டாவது நூற்பாவாலும் உயிர் எழுத்துக்கள், ''அகரமுதல ஔகார விறுவாய்ப் பன்னிரண்டு'' ஆகும் என்பது போதருகிறது.

இனி மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. முதல நூற்பாவில் ''னகரவிறுவாய்'' என்று இருப்பதால், மெய்யெழுத்துக்கள் பற்றிக் கூறவந்த ஒன்பதாவது நூற்பாவில், மெய் எழுத்துக்கள் ககரத்தை முதலாகக் கொண்டு வருவன என்று ஆசிரியரிடம் எதிர் பார்க்கலாம். அங்ஙனமாயின் ஒன்பதாம் நூற்பா,

''ககர முதலாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப''

என்றிருத்தல் நேரிதாகும். ஆனால் அந் நூற்பா,

''னகர விறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப''

என்றுள்ளது.

முதல் நூற்பாவில் உயிரின் முதலெழுத்தையும் மெய்யின் இறுதி எழுத்தையும் கூறி முப்பது என்றார்.

எட்டாவது நூற்பாவில் உயிரின் இறுதியெழுத்தைக் கூறிப் பன்னீருயிர் என்றார்.

ஒன்பதாவது நூற்பாவில் முதல் நூற்பாவில் கூறிய ''னகர விறுவாய்'' என் பதனையே கூறின், மெய்யெழுத்துக்கள் எவ்வெழுத்தை முதலாகவுடையன என்று ஆசிரியர் கூறவில்லையே என்று தோன்றக் கூடும். ஆகவே ஒன்பதாவது நூற்பா,

''ககர முதலாய்''

என்ற தொடக்கத்தையுடையதாய் இருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. இங்ஙனமே இருந்திருத்தலும் கூடும். எட்டாம் நூற்பா 'ஔகார விறுவாய்'' என்றிருத்தலை நோக்கினால், அடுத்த நூற்பாவும் ''னகரவிறுவாய்'' என்றிருத்தலே பொருந்தும், ஆசிரியர் கருத்தும் ஆகும் என்று கருதியிருத்தல் கூடும்.

ஆனால் முதல் நூற்பாவில் ''னகர விறுவாய்'' என்று கூறிய ஆசிரியர், மீண்டும் ஒன்பதாம் நூற்பாவில் ''னகரவிறு வாய்'' என்றே கூறினர் எனின் ''கூறியது கூறல்'' எனும் குற்றம் தங்கும். ஆகவே வேறொரு பொருளை விளைப்பதாயின் கூறியது கூறினும் குற்றம் இல்லை. இங்கும் விளைந்த வேறு ஒரு பொருள் யாது என்று புலப்படவில்லை. ஆகவே,

''னகரவிறு வாய்'' என்றவிடத்துக்
''ககர முதலாய்''

என்றிருப்பது பொருந்தும் எனத் தோன்றுகிறது.

## 2. எழுத்ததிகார நூற்பா ஏழு பற்றியது:

''கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை'' என்பது ஏழாவது நூற்பா முதல்வர்.

இதன் கண் ''மாத்திரை'' என்ற குறியீடு கொடுக்கப்பெற்று, அம்மாத்திரையாவது கண் இமைக்கும் அளவும் கைந் நொடிக்கும் அளவும் ஆகும் என்று கூறியிருக்கிறது.

''மாத்திரை'' என்பது எழுத்தைக் கூறுவதற்குரிய நேரம் ஆகிய கால அளவையைக் குறிக்கும் சொல் ஆகும். இது வட

சொல். ''மாத்ரா'' என்பது மாத்திரை என்றாயிற்று. இருக்குவேத பிராதிசாக்கியம் முதலாய வேத இலக்கண நூல்களில் ''மாத்ரா'' என்ற சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது. வியாஸ சிக்ஷை என்ற வடமொழி நூலில் ''கைந்நொடி மாத்திரை'' என்றும், நாரத சிக்ஷை என்பதில் ''கண்ணிமையளவு மாத்திரை'' என்றும் கூறப் பெற்றுள்ளது.

கீழ்க்காணும் எழுத்ததிகார நூற்பாக்கள் எழுத்துக்களுக்கு மாத்திரையாகிய அளவைக் கூறுவனவாய் உள்ளன :

1. அவற்றுள்
அஇஉ
எஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளவு இசைக்கும் குற்றெழுத்தென்ப'' (எழுத்து—3)

2. ஆ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்தென்ப. (4)

3. மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே. (5)

4. நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர். (6)

5. மெய்யின் அளபே அரையென மொழிப. (11)

6. அரையளபு குறுகல் மகர முடைத்தே. (13)

7. அளவு இறந்திசைத்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப. (33)

8. ஓரளபு ஆகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயினான. (97)

9. அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதிவ ணுவலாது எழுந்துபுறத்
திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபு நுவன்
றிசினே. (102—3)

மேலே காட்டிய நூற்பாக்களில் ''அளபு'' என்ற குறியீடே காணப்படுகிறது. மேல் அடிக்கோடிட்டுக் காட்டிய விடங்களில் நச்சினார்க்கினியர் அளவு என்றே பாடம் கொண்டுள்ளார். அளவு என்பதற்குக் கால அளவு என்பது பொருள்.

ஏழாவது நூற்பாவாகிய ''கண்ணிறை நொடியென அவ்வே மாத்திரை'' என்பதன் உரையில், ''மாத்திரை'' என்பதற்கு ''மாத்திரைக்கு அளபு'' என்ற பொருள் தருவர், இளம்பூரணர். ஆனால், மேலே கண்ட ஒன்பது நூற்பாக்களிலும் கண்ட ''அளபு'' என்ற சொல்லுக்கு மாத்திரை என்றோ அளவு என்றோ பொருள் தந்தார். மாத்திரை என்பதற்கு ''மாத்திரைக்கு அளபு'' என்று பொருள் தந்தது எங்ஙனம் என்பது விளங்கவில்லை. மாத்திரை எனினும் அளபு எனினும் ஒக்கும் என்பது அவர் கருத்தாயின், ''மாத்திரையாகிய அளபு'' என்று உரைகூறியிருத்தல் வேண்டும். 11ஆம் நூற்பா 13ஆம் நூற்பா ஆகியவற்றுக்குரிய உரையில் ''அளபு'' என்பதற்கு மாத்திரை யென்றே பொருள் தந்தார். எனவே மாத்திரை எனினும் அளவு எனினும் ஒன்றே என்பது அவர் கருத்து என்பது பெறப்படும்.

இனி, ''கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை'' என்ற நூற்பாவில், தொல்காப்பியனார் மாத்திரை என்ற குறியீட்டுச் சொல்லைப் பயன்படுத்தியிரார் என்று எண்ணத் தோன்கிறது. ஒன்பது நூற்பாக்களில் 'அளபு' என்ற குறியீட்டைப் பயன்படுத்திய ஆசிரியர், ''அளபாவது யாது'' என்பதைக் கூறும்பொழுது,

''கண்ணிமை நொடியென இவ்வே அளபு''

என்று கூறுவதை எதிர் நோக்கலாமேயன்றிக்

''கண்ணிமை நொடியென இவ்வே மாத்திரை''

என்று வேறொரு சொற்பெய்து கூறினார் என்பது எதிர்பார்த்தற்குரியதாகாது. அன்றியும் ''அளபு'' என்ற குறியீட்டைக் கூறுதல் பொருந்துமேயன்றி, ''மாத்திரை'' என்ற குறியீட்டைப் பெய்ததும் பொருத்தமில்லாததாகத் தோன்றுகிறது. எனவே இவ்வேழாவது நூற்பாவுக்கு முன்னும் பின்னும் ''அளபு'' என்ற குறியீட்டையே பெய்து இருத்தலானும், ''அளபு'' என்பதற்கே விளக்கம் கூற வேண்டியவர் ஆகையாலும், இந்நூற்பாவிலும் ''அளபு'' என்பதையே பயன்படுத்தியிருப்பர் என ஊகித்தறியலாம். அங்ஙனமாயின், அந்நூற்பா,

''கண்ணிமை நொடியென அவ்வே அளபு''

என்றாகிப் பொருத்தமாகவும் சிறப்புடையதாகவும் காணக்கூடும்.

திரு தெ.பொ.மீ. போன்ற பேரறிஞர்கள் இரு தொல்காப்பியர்கள் இருந்தனர் என்று கருதுவர்; இது ஏற்றுக்கொள்ளப் பெறுமேல், அல்லது உறுதி பெறுமேல், இந்நூற்பா இரண்டாவது தொல்காப்பியனாருடையதாகலாம். அதனை இதனுள் சேர்த்துக் கொண்டனர் என்று கருதினும் அமையும்.

எழுத்து 102, 103 ஆம் நூற்பாக்களில், அந்தணர் மறை கூறப்படுகிறது. அந்நூற்பாக்களிலும் அளவு என்ற சொல்லே காணப்பெறுகிறது. அந்தணர் மறை கூறுவதால், அங்கு மாத்திரை என்ற குறியீட்டைப் பெய்திருக்கலாம். அங்ஙனம் மாத்திரை என்பதைப் பயன்படுத்தாமல் அளபு என்ற குறியீட்டையே தந்துள்ளமையின், தொல்காப்பியனார் அளபு என்றதையே தம் கருத்துட் கொண்டார் என்பது அறியப் பெறும்.

சொல்லதிகாரத்தில் மூன்றிடங்களில் ''அளபு'' என்ற குறியீடு காணப்படுகிறது.

உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விரிக்குங் காலை. (152)

ஈரளபு இசைக்கும் இறுதியில் உயிர். (281)

ஈற்றினின் றிசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரளபு ஆகலும் உரித்தே. (286)

இம்மூன்று நூற்பாக்களில் காணப்பெறும் ''அளபு'' என்பதற்கு மாத்திரை யென்றே சேனாவரையர் பொருள் தந்தார்.

இங்ஙனம் எழுத்து சொல் ஆகிய ஈரதிகாரங்களிலும் எழுத்து 7ஆம் நூற்பாத் தவிர்த்து மற்ற பன்னிரு நூற்பாக்களிலும் ''அளபு'' என்ற குறியீட்டையே பயன்படுத்திய ஆசிரியர், செய்யுளியல் முதல் நூற்பாவில், செய்யுளியல் நுதலும் பொருள் கூறுமிடத்து, ''மாத்திரை'' என்ற சொல்லைப் பெய்திருப்பது வியப்புத் தருவதாகவுள்ளது. இங்கு அளவு என்ற குறியீடு இருந்திருத்தல் கூடும். அதனை மாற்றி மாத்திரையாக்கியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது. இங்கு மாத்திரை என்ற சொல்லுக்குச் சிறப்புரையாகப் பேராசிரியர்,

''மாத்திரை யென்பது எழுத்திற்கு ஓதிய மாத்திரைகளுள் செய்யுளில் விராய்க் கிடக்கும் அளவை என்றவாறு. மாத்திரையது மாத்திரையினை ஈண்டு மாத்திரை யென்றார். அது மாத்திரையளவு என்பதாற் பெற்றாம்'' என்று எழுதினார். இச் சிறப்புரை அல்லது விளக்கவுரை எந்த அளவு விளக்கமானது என்று தெரியவில்லை.

அடுத்த நூற்பா ''மாத்திரை யளவு'' என்று தொடங்குகிறது. இதற்கு விளக்க வுரையாக,

''மாத்திரைகள் பல தொடர்ந்து செய்யுட்கண் விராய்நிற்கும் அளவு.....மாத்திரை யென்றொழியாது மாத்திரையளவு என்றதனான், அம் மாத்திரையை விராய்ச் செய்யும் அளவை ஈண்டுக் கூறினார் என்பது'' என்று பேராசிரியர் எழுதியுள்ளார். இந்தச் சிறப்புரையும் எந்த அளவு பயன்படும் என்பது தெளிவாக இல்லை. இங்ஙனம் தெளிவில்லாத உரை வரைந்திருப்பதாலேயே ''மாத்திரை'' என்ற சொல், இந்த இடத்துக்குப் பொருத்தமான சொல் அன்று என்பதும், இவ்விரிடங்களில் முதல் நூற்பாவில் ''மாத்திரை'' என்ற விடத்து ''அளபே'' என்றும், அடுத்த நூற்பாலில் ''மாத்திரை யளவும்'' என்றவிடத்து, ''அளபின் வகை

யும்'' என்றும் இருந்திருத்தல் கூடும் என்று கொள்ளலாம். ''எழுத்தியல் வகை'' என்று இவ்வரியிலேயே அடுத்து நிற்பதால், ''அளபின் வகை'' என்று மாற்றலாம்.

இங்ஙனம் மாற்றுவது பொருத்தமானதும் சரியானதும் ஆகும். எங்ஙனம் எனில் மாத்திரை யென்பது முன்னர் ஈரதிகாரங்களிலும் ஒரு முறையே பயன்படுதியமையாலும் அளபு என்பதைப் பன்னிரண்டு இடங்களில் பயன்படுத்தியமையானும் என்க.

உயிர் எழுத்துக்கள் தம்மளவின் நீண்டு ஒலித்தல் உயிர் அளபெடை என்று குறிக்கப் பெறுகிறது. அளபெடை என்பதற்கு அளவு நீளுதல் என்பது பொருள். பொருளதிகாரம் 330இல் ''ஒற்றளபெடுப்பினும்'' என்பது ஒற்றெழுத்தின் அளவு நீளுதல் என்று பொருள்படும். பொருளதிகாரம் 409ம் நூற்பா ''அளபெழின் அவையே அளபெடைத் தொடையே'' என்ற விடத்தும், அளபு என்பதே காணலாகும்.

''நோக்கு'' என்பதை விளக்கும் பொருள், 416 ஆம் நூற்பா,

''மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே''

என்பதாகும். இங்கும் ''மாத்திரை''யை எடுத்துவிட்டு ''அளபு'' என்பதைப் பெய்திடின், பாடமும் சிறக்கும்; பொருத்தமாகவும் இருக்கும்.

இதுகாறும் கூறியவற்றான்—

1. 'அளபு' என்பது எழுத்ததிகாரத்தில் பத்திடங்களிலும், சொல்லதிகாரத்தில் மூன்றிடங்களிலும், பொருளதிகாரத்தில் (330, 409) ஈரிடங்களிலும் காணப்படுவன என்றும்,

2. ''மாத்திரை'' என்பது எழுத்ததிகாரத்து ஓரிடத்திலும், பொருளில் மூவிடங்களிலும் உள்ளன என்றும்,

3. நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழுதுதலை ''அளபெடை'' என்று கூறுவதால் எழுத்தின் அளவைக் குறிப்பிடுவதற்குரிய குறியீடு ''அளபு'' என்பதே யாகும் என்றும்,

4. இளம்பூரணர் மாத்திரை என்பதற்கு அளபு என்று பொருள் கூறினும், ''மாத்திரைக்கு அளபு'' என்றவிடத்து மாத்திரையாகிய அளபு என்றிருத்தல் தகும் என்றும்,

5. தொல்காப்பியனார் ''அளபு'' என்ற சொல்லையே யாண்டும் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்றும்,

6. அளபு என்ற சொல்லை எடுத்து விட்டு மாத்திரை என்ற சொல்லைப் பின்னுள்ளோர் சேர்த்தனராதல் கூடும் என்றும் அறியப் பெறும்.

## 3. எழுத்ததிகாரம் 102, 103ஆம் நூற்பாக்கள் :

அந்நூற்பாக்கள் பின்வருமாறு :

எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை யிரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே. (102)

அஃதிவண் நுவலாது எழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுறுவன் றிசினே (103)

இவற்றுள் 102ஆம் நூற்பாவுக்கு, ''இது எல்லா எழுத்திற்கும் ஆவதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று'' என்றும் இளம்பூரணர் கருத்துக் கூறுவர். நச்சினார்க்கினியர் இவ்விரு நூற்பாக்களையும் பொருளியைபு கருதி ஒரே நூற்பாவாகக் கொண்டார்.

இஃது பிறன்கோட்கூறல் என்னும் உத்திக்கு இனம் என்பர் நச்சினார்க்கினியர்.

''அளபிற் கோடல் அந்தணர் மறைத்து'' என்பதுவரை பிறன்கோட் கூறல்; இது பிறன்கோட் கூறுதற்கும், பிறன்கோட்கூற்று நேர்ந்து உடம்படுதற்கும் ஒப்பக்கிடந்தமையின் அவ்வையம் தீர்தற்கு,

''அஃது இவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே.''

என்றார் ஆசிரியர். இந்நூற்பாவைத் தன் கோட் கூறலுக்கு எடுத்துக் காட்டாக்குவர் பேராசிரியர் (மரபியல் நூற்பா 110).

''புறத்து இசைப்பதன் முன்னர் அகத்து இசைக்கும் வளியிசையை அம் மறைக்கண் ஓர் எழுத்திற்கு மூன்று நிலை உளதாகக் கூறும்.'' அவை வைகரி, மத்திமை, பைசந்தி என்பன. இவற்றைக் கூறுவதால் பயன் இன்மை கருதித் தொல் காப்பியர் கூறவில்லை.

சிறப்புப் பாயிரத்தில்,

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி

இந்நூல் யாக்கப்பட்டது என்றுள்ளது. செந்தமிழ் நிலத்து வழக்கொடு முறைப்பட ஆராய்ந்து கூறப்பட்டது இந்நூல். ஆகலின் பிறன்கோட்கூறி அஃது இவண் நுவலாது, ''புறத்தெழு வளியிசை அளபு நுவன்றி சின்'' என்று கூறியது, வேண்டாத கூற்றாகிறது.

இந்நூற்பா இல்லாது போயின், குன்றக்கூறல் ஆகிய குற்றம் தங்குமோ எனின் தங்காது. இதனைக் கருதியே போலும், பதவியல் என்று ஓர் இயல் பகுத்தும், வடமொழியாக்கம் கூறியும் தன்குறிவழக்கம் மிகவெடுத்துரைத்த நன்னூல் ஆசிரியராகிய பவணந்தி முனிவரும், ''அகத்தெழு வளியிசை பற்றி''க் கூறவில்லை.

எனவே இவ்விரு நூற்பாக்களையும் வடநூல் வழித் தமிழாசிரியராயினார் பின்னாட்களில் யாத்துச் சேர்த்தனராதல் கூடுமோ என்று ஐயப்பட வேண்டியுள்ளது.

## 4. சொல்லதிகாரம் 112, 113 ஆம் நூற்பாக்கள் :

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
இன்னதற் கிதுபயன் ஆக வென்றும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முத
னிலையே (112)

அவைதாம்,

வழங்கியன் மருங்கின் குன்றுவ குன்றும் (113)

112 ஆம் நூற்பாவுக்கு கருத்துரையாக,

''வினைச்சொல் இலக்கணம் உணர்த்துகிறது'' என இளம்பூரணரும்,

''வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் கூறுகின்றது'' என நச்சினார்க்கினியரும்,

''எழுவகை வேற்றுமையினும் காரக வேற்றுமை வரையறுத்துணர்த்துகிறது,''

எனத் தெய்வச் சிலையாரும் கூறினர்.

''தொழில் முதனிலை என்றது தொழிலது காரணத்தை காரியத்தின்முன் நிற்றலின் முதனிலையாயிற்று. காரணம் எனினும் காரகம் எனினும் ஒக்கும்'' என்பர் சேனாவரையர்.

எனவே, தொழில் அல்லது வினையானது வினை முதலாகிய எட்டுக்காரணத்தானும் நிகழும் என்பது இந்நூற்பாவான் பெறப்படும். வனைந்தான் என்றவழி வனைதற் றொழிலும், வனைந்த கருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அத்தொழில் நிகழுங் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனானாய பயனும் ஆகிய எட்டும் பற்றி அத் தொழில் நிகழ்ந்தவாறு கண்டு கொள்க'' என்ற சேனாவரையர் விளக்கத்தைப் படித்ததும், இந்நூற்பா வினையின் இலக்கணத்தைக் கூறுவதாகவே தோன்றும்.

இந்நூற்பா வேற்றுமை மயங்கியலில் இருத்தலான், இங்ஙனம் இருப்பதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியர் விளக்குவாராயினர்.

சேனாவரையரும், ''செய்வது முதலாகிய முதனிலை வேற்றுமை யோத்தினுட் கூறப்பட்டமையின் இச்சூத்திரம் வேண்டாவெனின்'' என்று வினாவிக் கொண்டு, ஒரு சமாதானமும் கூறினார்.

இளம்பூரணர் இந் நூற்பாவினைச் சொல் இலக்கணம் கூறுகின்றது என்றே கூறினார்.

நச்சினார்க்கினியரும் சேனாவரையரும் அமைதி கூறியமையானும், இளம்பூரணர் வினைச்சொல் இலக்கணம் கூறுகின்றது என்றமையானும், இந்நூற்பா வினையியலில் இருத்தல் தகும் என்று தோன்றுகிறது.

நன்னூலாரும் இத் தொல்காப்பிய நூற்பாக்கருத்தை மனங்கொண்டு வினைச் சொல்லின் இலக்கணத்தை உணர்த்துவார்,

''செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே''

என்ற நூற்பாவால் கூறினார். இதன் கண் ''ஆறும்'' என்பதனை எச்சவும்மை யாக்கி, இத்தொகையிற் சில குறைந்து வரவும் பெறும் எனப் பொருளுரைத்துக் கொடி ஆடிற்று, கொடி துஞ்சும் என்புழி முன்னையது செயப்படுபொருளும், பின் னையது செயப்படுபொருளோடு கருவியும் குறைந்துவரும் எனவும், இனி ''ஆறும்'' என்னும் உம்மையை உயர்வுச் சிறப்புமை யாக்கி, ''இழிந்தன சில உள அவையும் வேண்டுமேற் கொள்க'' எனவுரைத்துக் குடத்தைப் பிறர்க்கு வனைந்தான் என இன்னதற்கு என்பதும், அறம் முதலிய பயன் கருதி வனைந்தான் என இது பயன் என்பதும், ஏதுவின் பாற்பட்டுக் கருவியுள் அடங்கவும் பெறும் ஆதலின் அவை இழிந் தனவாயின எனவும், சிவஞான முனிவர் விளக்கம் தந்துள்ளார்.

இங்ஙனம் மேற்குறித்த இரு தொல் காப்பிய நூற்பாக் கருத்துக்களுக்கேற்ப நன்னூல் நூற்பாவுக்குச் சிவஞானமுனிவர் உரை கூறுதலின், இவ்விரு நூற்பாக்களும் (102, 103) வினைச்சொல் இலக்கணம் கூறுவனவாம் என்பது தெளிவு.

எனவே வினைச்சொல் இலக்கணம் கூறும் நூற்பாக்கள் (102, 103) வேற்றுமை மயங்கியலில் இடம் பெறுவதற்கு உரியன வல்ல என்பது போதரும்.

இவ்வியலில் ஒரு வேற்றுமைக்குரிய உருபு மற்றொரு வேற்றுமையோடு மயங் கும் உருபுமயக்கமும், ஒருவேற்றுமைக்குரிய பொருள் மற்றொரு வேற்றுமையில் சென்று மயங்கும் பொருள் மயக்கமும் கூறப்படுவன வாம். எனினும் வழுவாய் அமைத்துக் கொள்வனவும் இவ்வியலில் இடம் பெற் றுள்ளன. அங்ஙனம் இன்றி வினையின் இலக்கணத்தைக் கூறும் நூற்பா இவ்விய லில் அமைவது பொருந்தாதெனவே தோன்றுகிறது. நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் இவ்வியலில் இந்நூற்பா இடம் பெறுவதற்குரிய காரணத்தைக் கூறுவ தெனினும், நூற்பாவைப் படித்ததும் வினைச்சொல் இலக்கணம் இந்நூற்பாக் கூறுகிறது என்ற எண்ணத்தையே தோற்று விப்பதாக வுளது.

எனவே, இந்நூற்பா வேற்றுமை மயக்கம் கூறாமையானும், வினைச் சொற் இலக்கணம் கூறுவதாலும், இந்நூற்பாக் கருத்தையே நன்னூலார் வினைச்சொற் இலக்கணமாக வினையியலில் கூறியமை யானும், இந்நூற் பாவும் இதற்கடுத்த நூற்பாவும் வினையியலில் இருத்தலே பொருந்தும்.

(இதற்கடுத்த நூற்பாக்கள் ஆகுபெயர்க் இலக்கணம் கூறுவதால், அவையும் இவ்வேற் றுமை மயங்கியலுள் இடம்பெறற் குரியவை யல்ல.)

## 5. சொல்லதிகாரம் விளிமரபு 2ஆவது நூற்பா:

விளிமரபு முதல் மூன்று நூற்பாக்கள் பின் வருவன:

1. விளியெனப் படுப கொள்ளும்பெய ரொடு
தெளியத்தோன்றும் இயற்கைய வென்ப.

2. அவ்வே
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப

3. அவைதாம்
இ உ ஐ ஓ வென்னு மிறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்

மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

இவற்றுள் இரண்டாவதாக வுள்ள நூற்பா வேண்டாத தொன்று.

''அவற்றை இவ்வோத்தினகத்துக் கிளக்கப்படும்'' என்று சொல்லவேண்டிய தேவையில்லை யாகையாலும், பிற இயல்களில் இங்ஙனம் நுதலிப்புகுதலாக நூற்பாக்கள் இன்மையானும், இந்நூற்பா அதிகப்படியானதாகக் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் அடுத்த நூற்பா (3) வின் தொடக்கம் ''அவைதாம்'' என்பது முதற் நூற்பாவையே சுட்டுவதாக அமைந்துளது. அன்றியும் தெய்வச்சிலையார் ''அவைதாம்'' என்ற இடத்து ''அவற்றுள்'' என்ற பாடம் கொண்டு, இரண்டாவது நூற்பாவினைச் சுட்டாதவாறு செய்துவிட்டார்.

எனவே ''அவ்வே இவ்வென'' என்ற நூற்பா வேண்டாததொன்று எனத் தோன்றுவதாக அமைந்துள்ளது.

## 6. சொல்லதிகாரம் விளிமரபு 7 ஆவது நூற்பா :

ஏனை யுயிரே யுயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்

என்பது அது. ''ஏனையுயிர்'' என்றது விளிமரபு 3ஆவது நூற்பாவாகிய

''அவைதாம்
இ உ ஐ ஒ வென்னும் இறுதி
அப்பால் நான்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே''

என்பதில் கண்ட ''இ உ ஐ ஒ'' என்னும் நான்கு உயிர்களல்லாப் பிற உயிர் எழுத்துக்களை,

''ஏனையுயிர்'' என்ற நூற்பாவுரையில் சேனாவரையர்,

''கொள்வன இவையென வரையறுத் துணர்த்தவே ஏனைய கொள்ளா வென்பது உணரப்படும், வரையறைக்குப் பயன் அது வாகலான்; அதனால் இச்சூத்திரம் வேண்டா வெனின், அஃதொக்கும். வரையறையாற் பெறப்படுவதனையே ஒரு பயன் நோக்கிக் கூறினார்; யாதோ பயன் எனின்?.... மேற்கூறப்பட்ட உயிர் கூறியவாறன்றிப் பிறவாற்றானும் விளி கொள்வனவுமுள என்பதுணர்த்துதற் கென்பது'' என்று தடைவிடைகளான் கூறியுள்ளதினின்றும், ''இச்சூத்திரம் வேண்டா'' என்று சேனாவரையர் கொண்டார் என்றும், இந்நூற்பா இருத்தலின் அதற்கு ஓர் அமைதி கூறினார் என்றும் கொள்ளலாம்.

எனவே இந்நூற்பாவை இன்றியாமையாத நூற்பாவாகக் கொள்வதற்கில்லை என்றும், இதுவும் வேண்டாததொன்று என்றும் பெறப்படும்.

## 7. சொல்லதிகாரம் விளிமரபு 12 ஆவது நூற்பா :

விளிமரபு 11ஆவது நூற்பா,

''னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே''

என்பது. இதற்கு அடுத்ததுதான்,

ஏனைப் புள்ளி யிறுவிளி கொள்ளா'' என்பது. இதுவும் வேண்டாத நூற்பாப் போலும் என்று கருதிய சேனாவரையர்,

''ஈண்டும் விளிகொள்ளா என்றதனாற் பயன், கூறப்பட்ட புள்ளியிறு பிறவாற்றான் விளி கொள்வன வுளவென்று உணர்த்தலாம்'' என்று சிறப்புரை தந்தார்.

''னரலள'' என்ற (11) நூற்பா எங்ஙனம் விளி கொள்ளும் என்று கூறவில்லை. விளியேற்பன எவை என்றுமட்டும் கூறுவதாகவுள்ளது. ஆகவே பிறவாற்றான் விளி கொள்வனவுள வென்று உணர்த்துதல் யாங்ஙனம் என்பது புலப்படவில்லை.

இதற்கு அடுத்த நூற்பா

(விளிமரபு 13)

''அவற்றுள்
அன்என் இறுதி ஆவா கும்மே''

என்பது முதற்கொண்டு புள்ளியீற்றுயர்திணைப்பெயர்கள் விளியேற்குமாறு உணர்த்தப் பெற்றுள்ளன. இங்ஙனம் விளியேற்குமாறு உணர்த்துதற்கு முன்னரே சேனாவரையர் சிறப்புரையில் கூறியாங்கு, ''பிறவாற்றான் விளி கொள்வ' தியாங்ஙனம் எனப் புலப்பட்டிலது.

அன்றியும், மேலே காட்டிய விளிமரபு 13 ஆவது நூற்பா, ''அவற்றுள்'' என்று தொடங்குவது. அவற்றுள் என்ற சுட்டு, 11 ஆம் நூற்பாவில் உள்ள ''னரலள'' என்பவற்றைச் சுட்டுவனவாயுள்ளன. அங்ஙனம் ஆதலின் இடையில்,

''ஏனைப்புள்ளி யீறுவிளி கொள்ளா'' என்ற நூற்பா (12) வேண்டாத நூற்பா வாதலை ஓர்ந்து உணரலாம்.

இங்ஙனம் இன்னும் சில நூற்பாக்கள் இருக்கலாம். அவற்றை இனங்கண்டு எடுத்து விட்டதனால், தொல்காப்பியனார்க்கு இழுக்கு ஏதும் ஏற்படாது; பெருமை சேரும் என்பது உறுதி.

# இயற்கை இலக்கியம்

டாக்டர் மெ. சுந்தரம்,
எம்.ஏ., எம். லிட்., பிஎச். டி.

இக் கட்டுரையாசிரியர் புதுக்கோட்டைப் பகுதி சார்ந்த வேந்தன்பட்டியில் பிறந்தவர். வரலாற்றறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் நன் மாணவர். மதுரைத் தியாகராயர் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றிய பின்பு சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், தலைமைப் பேராசிரியராகவும் பணியாற்றி, அண்மையில் ஓய்வு பெற்றவர். நகைச்சுவையோடு எந்தக் கருத்தையும் எடுத்துரைப்பதில் மிகவும் வல்லவர். 'தமிழர் கடல் வாணிபம்', 'தமிழக நாட்டுப் பாடல்கள்' முதலிய பல நூல்களின் ஆசிரியர். தமிழ் வளர்ச்சியிலே ஆழமான பற்றும் ஆர்வமும் கொண்டு, நாட்டுப்புற இலக்கியங்களிலே மிகுந்த ஈடுபாடு காட்டித் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி மகிழ்ந்து வருபவர். தாய்த் தமிழிற் போலவே ஆங்கிலத்திலும் கேட்போர் வியப்புறும் வண்ணம் பேச்சாற்றும் திறன் மிகுந்தவர்.

## பாயிரம்

பாட்டினைப் போல் இன்பம்
பாரின்மிசை இல்லையடா

என்று நாட்டுப் பெருங் கவிஞர்-இன்றைய நூற்றாண்டு விழா நாயகர்—பாரதியார் பாடினார்.நாட்டுப்புறப் பாடலை எண்ணித் தான் பாரதி இவ்வரிகளைப் பாடியிருக்க வேண்டும். ஏனென்றால் நாட்டுப்புறப் பாடல்களில் நடனமிடும் இசையின்பம், நாட்டியமாடும் கருத்தின்பம் ஈடுஇணையற்றவை. நானிலத்தின் எல்லா இன்பங்களும் ஒரு தட்டில்; நாட்டுப்புறப் பாடல் இன்பம் மறு தட்டில். இங்ஙனம் தட்டில்லாமல் தொட்ட இடமெல்லாம் இன்பம் தட்டும் இசைத்தட்டுத்தான் நாட்டுப்புறப் பாடல்கள். அவை விண்ணையும், மண்ணையும் விரித்துப் பாடுகின்றன; மலைகளும், பொழில்களும் அதில் நிழலாடுகின்றன. மாறுபடும் பருவங்கள் வேறுபடு பண்ணில் கூறுபடும் கோணங்களில் கோலக் காட்சி நல்குகின்றன. அனைத்திற்கும் மேலாக, மனிதமனங்கள் படம்பிடித்துக் காட்டப் படுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் இயற்கைப் பாடல்கள்; அது ஓர் இயற்கை இலக்கியம். இயற்கை அன்னை தன் முகம் பார்த்துக் கொள்ளத் தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி நாட்டுப்புறப் பாடல். அவள் எண்ணம் என்ற வண்ணக் குழம்பெடுத்து, உருவம் என்ற ஒப்பனை பெறுவதும் இப்

பாடல்களால்தான். இப்பாடல்கள் இயற்கை அன்னையின் மடியில் துயிலும் நாட்டுப்புறங்களில்—கிராமப் புறங்களில் தோன்றுகின்றன. நன்செய்யும், புன்செய்யும் தோன்றும் நாட்டுப்புறங்களில் தான் இந்த இலக்கிய நன்செய்யும் தோன்றுகிறது. ஆண்டவன் தன் ஓய்வு நேரங்களில் வரைந்து தள்ளும் திரைச்சீலைகள் தாம் இந்நாட்டுப் புறங்கள்-கிராமப் புறங்கள்.

இந்த மண்ணின் மைந்தர்கள்-இந்த மண்ணின் மடியில் தவழும் மழலைகள் தாம் நாட்டுப்புறத்தார்—கிராமவாசிகள். அவர்களை ஆண்டவனின் அமுதச் செல்வங்கள் என அழைப்பர். அவர்கள் உள்ளத்தால் குழந்தையை விட இளமையானவர்கள்; உடலால் கடும்பாறையைவிட முதுமையானவர்கள். அவர்களின் கண்கள் இயற்கையைத்தவிர வேறு எதனையும் காண்பதில்லை; அவர்களின் காதுகள் இனிய இசையைத் தவிர வேறு எதனையும் கேட்பதில்லை; கால்கள் இனிய பாதையைத் தவிர வேறு எங்கும் நடப்பதில்லை; உதடுகள் இனிய உண்மையைத்தவிர வேறு எதுவும் பேசுவதில்லை. இதனாற்றான் கவிஞர் தாகூர், ''கிராமங்கள் நல்ல பெண்களைப் போன்றவை'' என்றார் போலும்! இத்தகு நாட்டுப்புறப் பகுதிகளில் கோற்றம் பெறும் இலக்கியங்கள், குறுந்தொகைத் தலைவி தன் காதலின் அன்பைக் கூறுமாப் போலே. விண்ணைப் போன்று உயர்ந்தும், வீரி கடலைப் போன்று பரந்தும் விளங்குகின்றன. என்றாலும், அவை வண்ண மலர்களைப் போல் மணக்கின்றன. இந்த ஏட்டில் எழுதா இலக்கியம், நாட்டுப்புற மக்கள் பேசும் மொழியிலேயே கிடைக்கின்றது.

இது முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய் விளங்குவது; தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வந்து கொண்டிருப்பது; வளர்ந்து கொண்டிருப்பது. இவை இவற்றின் பண்பு நலங்கள். இந்த இயற்கை இலக்கியத்தைத் தொகுத்தால், இயற்கையான நாட்டுப் புறங்களையும், செயற்கையான நகர்ப்புறங்களையும் இணைக்க முடியும். இவற்றிற்கு இடையே உள்ள இடைவெளியைப் போக்க முடியும். இவற்றின் இடையேயுள்ள ஆழத்தையும், அகன்ற மடுவையும் கடக்க முடியும்.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனார் இந் நாட்டுப்புறப் பாடல்களைப் 'பண்ணத்தி' என்ற பைந்தமிழ்ப் பெயர் சூட்டி அழைக்கின்றார். ஆண்டவனைப் போல் இது தோன்றிய காலம் கூற வொண்ணாததாய், தோற்றம், வளர்ச்சி காண முடியதாய், அடி முடி தேடியும் அப்பாலுக்கு அப்பாலாய், ஆதி அந்தம் அற்ற அனாதியாய்க் காட்சி அளிக்கிறது. இது அனாதியாய் விளங்குகிறதே யொழிய அனாதையாய்க் காட்சி அளிக்கவில்லை. ஆசிரியர் பெயர் தெரியாக் காரணத்தால் இதனை அனாதை இலக்கியம் எனச் சிலர் கூறுகின்றனர். அப்படியானால் ஆண்டவன்.....? விண்ணும், மண்ணும், கடலும், ஆறும் இயற்கையும்.....? தோன்றிய காலம் துணிந்து கூறமுடியாத தொன்றே இதன் தொன்மையை விளக்கப் போதிய சான்றாகும்.

நாட்டுப்புறப் பாடல், தாய்; இதன் சேய்கள் தாம் நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியவை யெல்லாம்.

## ஊற்று இலக்கியம்

நாட்டுப்புறப் பாடல் ஓர் இலக்கிய ஊற்று, இன்னும் ஆழமாகச் சிந்தனை செய்தால், அது ஓர் ஊற்று இலக்கியம் என்ற உண்மை பெறப்படும். ஏனென்றால் இந்த அடிப்படை இலக்கிய ஊற்றிலிருந்து தான், நாட்டு வரலாறுகள், குடும்ப வரலாறுகள், கலைகள், காவியங்கள், பழமொழிகள், விடுகதைகள், பண்பாடுகள் பிறக்கின்றன. அனைத்துப் பொருள்களும் இந்த ஊற்றிலிருந்துதான் தோற்றம் செய்கின்றன. அனைத்து இலக்கிய வகைகளுக்கும் இதுதான் மூல ஊற்று. இந்த ஊற்றுக்கண் எக்காலத்தும் ஊறிக்

கொண்டேயிருக்கும் ... கொடி மாறும்; முடி மாறும்; கோலவிழிப்பார்வை மாறும். நீலவான் மாறினாலும், நெடுங்கடலும் தன் நீர்மை குன்றினாலும், விண்ணும், மண்ணும், விரிகடலும் நிலை மாறினாலும், தன் நிலை குன்றாது, குணமென்னும் குன்றேறி நின்ற பெரியோர்போல மணம் கமழும் பாக்களை மக்கள் மன்றத்திற்கு வாரி வழங்கும் வள்ளல்களாக-வாழைகளாக விளங்கி வந்தன; விளங்கி வருகின்றன; விளங்கி வரும் வினைத்தொகை போல.

## முறை சாராக் கல்வி

நாட்டுப்புற இலக்கியம் முறைசாராக் கல்வியின் (Non-Formal Education) முன்னோடியாகும், ஏடு தூக்கிக்கொண்டு எடு பிடிபோல் பள்ளியில் சென்று பாடத்திட்ட முறைப்படி படிக்காமல் வானமே பள்ளியாய், வையகமே ஆசானாய், மோனத் தவமிருக்கும் முக்கடலே ஞானக்கல்வியாய், பாடம் பயின்றுவரும் நாட்டுப்புறத்தான் கல்விதான் முதன் முறைசாராக் கல்வி. அதன் அடியொற்றி வந்ததுதான் இன்றைய முறைசாராக் கல்வி. இந்த முறைசாராக் கல்வியை முறைப்படி கற்ற முதல் மகன், மூத்த மகன் தான் நாட்டுப்புறத்தான். அவனை நம்புறத்தான் ஆக்கத்தான் நாம் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்தப் பாடு பலிக்கிறதோ என்னவோ, அவன் பாட்டுப் பலிக்கிறது; பண்ணால் இனிக்கிறது.

## போலி இலக்கியம் (Fake Literature)

நாட்டுப் புறத்தானைப் போலவே நாமும் பாட நினைத்துப் பாடுகிறோம். அதனைக் கேட்டுச் சிலர் கிண்டலாக, 'இவரைப் பாடையிலே பார்த்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்' என்று கூறுகிறார்கள். இவர்கள் கூற்று உண்மையிலே இலக்கியக் கூற்று. ஆம்; இலக்கியத்திற்குப் பாடுவோர் வைக்கும் கூற்று-கூற்றுவன். இப்படிப் பாடுவது நாட்டுப்புற இலக்கியம் ஆகாது; போலி இலக்கியம். (not folk literature, but fake literature) வந்திச்சு, போச்சு என்ற சொற்களை மட்டும் வைத்து நாம் பாடுவதால் அது நாட்டுப்புறப் பாட்டு ஆகிவிடாது. இது நாட்டுப்புறப் பாட்டுக்கு நாம் வைக்கும் வேட்டு. அந்த வேட்டிலிருந்துகூட நாட்டுப்புறப் பாடல் தப்பிப் பிழைக்கிறது என்றால்; அதன் ஆயுள் கெட்டி என்று பொருள்.

## பண்பு நலன்கள்

இந்த நாட்டுப்புறப் பாடல்களுக்கு அகப் பண்புகள் ஆறும் புறப்பண்புகள் ஆறும் உள்ளன.

## அகப் பண்புகள் (Internal Criteria)

(1) இலக்கியச் சுவை
(2) கற்பனை வளம்
(3) பொருள் நலம்
(4) சொல் நயம்
(5) குறிப்புப் பொருள்
(6) உருவமைப்பு

## புறப் பண்புகள் (External Criteria)

(1) வாய் மொழியாகப் பரப்புதல்
(2) மரபு வழிப்படுதல்
(3) பல்வேறு வடிவுகளில் திரிபடைதல்
(4) ஆசிரியர் அறியவொண்ணாமை
(5) வாய்பாட்டுக்கள் அடங்குதல்
(6) ஒரே படிம நிலை

## வாய்மொழிப் பண்பாடு (Oral Culture)

இந்த இரு கூறு ஆறுவகைப் பண்பாட்டிற்கும் அடிப்படை-மூல ஊற்று- வாய் மொழிப் பண்பாடே யாகும் (Oral Culture). இந்த வாய்மொழிப் பண்பாடுதான். பின்னர் எழுந்த ஏட்டு இலக்கியங்களுக்கு இலக்கியப் பண்பாட்டினையே ஊட்டி வளர்த்தன என்று கூறலாம். அவைகளுக்கு நிலைத்த வடிவத்தினையும், கருத்து வளத்தினையும், இவை வாரி வழங்குவன எனக் கூறுதல் மிகையாகாது.

## பன்னிரு கோட்பாடுகள்

முருகனுக்குரிய பன்னிரு கரங்கள் போல, நாட்டார் வழக்காற்றிற்கும் பன்னிரு கோட்பாடுகளை அமெரிக்காவில்

உள்ள இந்தியானாப் பல்கலைக் கழக நாட்டார் வழக்காற்றியல் துறைப் பேராசிரியர் ரிச்சர்ட் எம். டார்சன் வகுக்கின்றார்.

(1) வரலாற்று நிலவியல் கோட்பாடு (Historical Geographical Theory)

(2) வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு (Historical Reconstructional Theory)

(3) குறிக்கோள் கோட்பாடு (Ideological Theory)

(4) செயல்திறன் கோட்பாடு (Functional Theory)

(5) உளவியல் ஆய்வுக் கோட்பாடு (Psycho-analitical Theory)

(6) அமைப்பியல் கோட்பாடு (Structural Theory)

(7) வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு (Oral Formulaic Theory)

(8) கலப்புப் பண்பாட்டுக் கோட்பாடு (Cross-Cultural Theory)

(9) நாட்டார் பண்பாட்டுக் கோட்பாடு (Folk-Cultural Theory)

(10) மக்கட் பண்பாட்டுக் கோட்பாடு (Mass Cultural Theory)

(11) அரை (பாதி) உலகக் கோட்பாடு (Hemispheric Theory)

(12) சூழ்நிலைக் கோட்பாடு (Contextual Theory)

இப் பன்னிரு கோட்பாடுகளில் பெரும் பாலன தமிழ் நாட்டுப்புற வழக்காற்றிற்கு ஏற்று வருகின்றன. ஏனென்றால், மண்ணிற்குத் தக்கபடி எண்ணங்கள் மாறும். மண் வளம்தான் மனித வளம். இது நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுபடும். இது உலகியற்கை. ஆனால் நாட்டார் வழக்காற்றியல் அடிப்படை-மூலநிலை-பெரும் பாலும் ஒத்தே விளங்குகின்றன. மனிதனின் தொடக்க காலநிலைச் சிந்தனையும் செயலும் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் ஒன்று போன்றே இருந்திருக்கின்றன. தட்ப வெட்ப நிலை கருதி அதில் சிறிது மாறுபாடு காணப் பட்டிருக்கலாம். அனைவரின் தொடக்கநிலைச் செயல்கள் ஏறத்தாழ ஒன்று போன்றே அமைந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது நாட்டுப்புறப் பண்பாடும் ஒன்று போன்றே அமைந்திருத்தல் இயற்கையே. ஏனென்றால், நாகரிகத்தின் தொடக்க நிலையில் எல்லா மாந்தரும் ஏறத்தாழ ஒரு நிலையிலேயே இருந்திருத்தல் கூடும் என்பது நிலவியலார் கூறும் உண்மை. அவரின் நிலையும் நினைப்பும் ஏறத்தாழ ஒரே நிலையில்தான் இருந்திருக்க வேண்டும். குளிரும் வெம்மையும் சில நிலைகளையும், நினைப்பையும் மாற்றியிருக்கலாம். ஆனால், அடிப்படை பெரும்பாலும் ஒத்தே காணப்படுகின்றன. அதனாற்றான், மேலே குறிக்கப்பெற்ற அமெரிக்கப் பேராசிரியர் ரிச்சர்ட் எம். டார்சன் அவர்களின் நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகளும், தமிழிற்கும் பெரும்பாலும் ஒத்து வருகின்றன, என்று நாம் ஒருவாறு துணிந்து உரைக்கலாம்.

## இலக்கியச் சுவை :

இங்ஙனம் ஆய்விற்கும் திறனாய்விற்கும் இலக்காகி நிற்கும் இந்நாட்டுப் புறப்பாடல்கள் இலக்கிய வளத்தில் இமய மலையையும் தாண்டி நிற்கின்றன. பைந் தமிழ்ப் பாக்கள் பனிமலையிலும் பாரிய சுவை கொண்டு மிளிர்கின்றன.

இலக்கிய நயங் கொழிக்கும் பாட்டுக்களில் தாலாட்டுப் பாட்டிற்குத் தனி இடம் உண்டு. தாலாட்டு, தமிழ்ப் பாட்டின் முதல் பாட்டு. குழந்தையை உறங்க வைக்கும் அப்பாட்டுகள் நம்மை விழித்தெழச் செய்கின்றன. உறங்கிக் கிடக்கும் நம் உணர்வுகளை-உணர்ச்சிகளை அவை உசுப்பி விடுகின்றன; எழுப்பி விடுகின்றன. பாட்டின் பொருள் தெரியாமலேயே பிள்ளைக் கனியமுது-பேசும் பொற்சித்திரம்

உறங்கி விடுகிறது. காரணம், அதன் இசை இனிமை-பண் இனிமை பாலகனைத் தூங்கவைத்து விடுகிறது. பாலகன் உறங்கும் வரை பாட்டும் நீள்கிறது; பண்ணும் ஒலிக்கிறது; தொட்டில் நின்று விடுகிறது. ஆனால் கட்டில் அதிலிருந்து தொடர்கிறது.

இலக்கியச் சுவைக்கு இவற்றைக் காட்டிலும் வேறென்ன சான்று வேண்டும்?

## தந்தை

தெள்ளுதமிழ் வளர்த்த தென்னவனும் பாண்டியர்க்குப்
பிள்ளைக்கலிதீர்க்கவந்த பெருமானும் நீதானோ?
மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டு
தேன்பாய்ந்து தெல்விளையும்
செல்வமுள்ளார் புத்திரனோ?
வெள்ளித்தேர் பூட்டி மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும் அதிட்டமுள்ளார் புத்திரனோ?

இதனால் அந்தக் குடும்பத் தலைவராம் ஐயாவின் செல்வ வளமும், செல்வாக்கு நலமும் விளங்குகிறதல்லவா?

அருமை அம்மான்கள் தன் தங்கை மகனுக்குச் சீர் கொண்டு வருகிறார்களாம். என்னென்ன சீர்?

கற்பகத்தைத் தேடிக் கனிந்து வரும்பொழுது
உன்அரிய அம்மான்மார் என்ன கொண்டு
வந்தார்கள்?
கொத்துவிடா நெத்தும் கோதுபடா மாங்கனியும்
கோடைப் பலாச்சுளையும் பக்குவத்து மாங்கனியும்
பருவப் பலாச்சுளையும் குலைசேர்ந்த மாங்கனியும்
அக்கரையில் சர்க்கரையும் அதிமதுரத்
தென்னவட்டும்
காய்ச்சிய பாலும் கற்கண்டும் செந்தேனும்
ஏலங்கிராம்பும் இளங்கொடிக்கால் வெற்றிலையும்
சாதிக் களிப்பாக்கும் சங்கு வெள்ளைச்
சுண்ணாம்பும்
அத்தனையும் கொண்டுன்னை அறியவந்தார்
அம்மான்மார்
கனிவருக்கம் கொண்டுன்னைக் காணவந்தார்
அம்மான்மார்
பழவருக்கம் கொண்டுன்னைப் பார்க்க வந்தார்
அம்மான்மார்.

இந்தப் பாடலிலே அம்மான்களின் கருவிலே திருவுடைய வளமான வாழ்க்கை படம் பிடித்துக் காட்டப்பெறுகிறது அல்லவா?

தம்பி ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தினான், அது தாய் உள்ளத்தில் ஒரு காப்பியத்தையே உருவாக்கிவிட்டது.

தம்பி அழுத கண்ணீர்
ஆறாகப் பாய்ந்து ஆனை குளித்தேறி
கடலாகப் பாய்ந்து காளை குளித்தேறி
இஞ்சிக்குப் பாய்ந்து எலுமிச்சை வேரோடி
மஞ்சளுக்குப் பாய்ந்து மருதோன்றி வேரோடி
வாய்க்காலில் பாய்ந்து வழிப்போக்கர் வாய்கழுவி
வாழைக்குப் பாய்கையிலே வற்றியதாம் கண்ணீரும்
தாழைக்குப் பாய்கையிலே தழும்பியதாம்
கண்ணீரும்

இந்தக் கண்ணீர்க் காவியத்திற்கு இணையாக வேறு ஒரு காவியத்தைக் கற்ற புலவோர்கள் புலமைபெற்ற செல்வர்கள் காட்ட முடியுமா? இந்த இலக்கியச் சுவை ஒரு பாலைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம். அந்தச் சுவை ஆழ்கடலினும் பெரிது.

வீட்டுப் பாடலின் வெளிப்பாடே நாட்டுப் பாடல். தமிழ் இலக்கியத்தில் மூலஊற்றே நாட்டுப் பாடல்கள். தாய் மொழி இலக்கியங்களின் தலைக் காவிரியே வாய்மொழி இலக்கியங்களாகிய நாடடுப் பாடல்கள் தாம். இந்த ஏட்டில் எழுதா இலக்கியங்களின் சிறப்பினைப் பற்றி ஏறத்தாழ முப்பதாண்டுக் காலமாக ஆய்வு நிகழ்த்தி வருகின்றேன்.

உயர்தனிச் செம்மொழியாகிய தமிழின் நினைப்பிற்கும் எட்டா நெடுங் காலச் சிறப்பிற்கு இந்நாட்டுப் பாடல்களே அடிப்படைக் கரணியமாகும். தொல் காப்பியர் காலந்தொட்டு இக்காலம் வரை எல்லோருடைய மடியிலும் தவழ்ந்து வரும் மழலையாக இப்பாக்கள் திகழ்கின்றன. தொல்காப்பியர் இதனைப் 'பண்ணத்தி' என உரைக்கின்றார். எண்ண உணர்ச்சிகளை இசைவடிவாக்கி உயிரோட்டமுள்ள பாக்களாக ஆக்கியுள்ளனர் படித்தறியாத-ஆனால் இயற்கைப் பல்கலைக் கழகத்தில் படித்து முற்றிய பாவையர். இப்பாட்டுக்களைப் பாடியோர் ஏடு படித்தறியார், எழுத்தாணி பிடித்தறியார். இயற்கை அவர்களுக்கு அளித்த கொடை, இப்பாக்க

ளெனும் ஆட்சிக்குடை. அந்த இயற்கைப் புலமை எனும் வெண்கொற்றக்குடை நிழலில் இலக்கிய உலா வருகின்றனர் செந் தமிழ்நாட்டுச் செல்வியர். அவ்வுலாக் கோலம் கண்டு உள்ளம் உருகி நிற்கின்றனர், கற்றறிந்த புலவரெனும் மச்சகள் மாமன்றத் தார்.

நாட்டுப் பாடல்களின் சிறப்பு இயல்பு களில் தலைமையானவை சில. அவை தம் முள் தலையாயது நுங்கும் நுரையுமாகப் பொங்கி வரும் உணர்ச்சி வெள்ளம். உண்மையான உள்ளத்தில் இருந்து வெளிப் பட்டு வருவதால், அவை உணர்ச்சிக் குழம்பு களாகக் கொப்புளித்து வருகின்றன. இரண்டாவது, அனைத்துப் பாக்களிலும் பொதுவாக ஊடுருவி நிற்கும் ஓர் உணர்வு நிலை. மூன்றாவது கருத்துக்கள் சங்கிலித தொடர் போன்று தொடர்ந்து வருதல். நான்காவது, தமிழ் அகப்பொருள் புறப் பொருள் மரபுகள் எளிய இனிய வடிவில் வெளிப்படுதல். ஐந்தாவது, ஒரு குடும் பத்தின் முழு வரலாற்றினை இலக்கிய வடிவில் தொகுத்து உரைத்தல்.

இந் நாட்டுப் பாடல்களால் இன்றும் உயிர் பெற்று விளங்குபவை பழந்தமிழ் வேந்தர், சிற்றரசர், குறுநில மன்னர், வள்ளல்கள், வீரர்கள் ஆகியோர் வரலாறு கள். ஆதலின், இந் நாட்டுப் பாடல்கள் வரலாற்றுப் பெட்டகங்களாகக் காட்சி யளிக்கின்றன. வாழ்க்கை முறை முழுமை யும் விளக்குவதால் இவை வாழ்வுப் பேழை களாகவும் விளங்குகின்றன.

காலங்கள் மாறினாலும், தம் இயற் கைக் கோலம் மாறாமல், பழைய இலக் கியப் படைப்பிற்கும் முன்னோடியாய்த் திகழும் இந் நாட்டுப் பாடல்கள் பண் பாட்டுக் கருவூலங்கள். நாகரிகத் தொட் டில்கள்.

## இலக்கிய ஊற்று

வற்றாமல் நீரை வாரிவாரிக் கொடுப் பது ஊற்று. இது குடிக்கும் நீருக்கு மட்டு மல்ல, குறிக்கோளைத் தாங்கி நிற்கும் இலக்கியங்களுக்கும் பொருந்தும். ஊற்றுப் பெருக்கால் உலகூட்டுகிறது நீர் ஊற்று. அதுபோலவே, உணர்ச்சிப் பெருக்கால் பாட்டினை ஊட்டுகின்றது, படித்தறியாப் பாவையர் ஊற்று. இரண்டு ஊற்றுக்கும் காலமும் பொழுதும் இல்லை. கோடை நீடிய நேரத்திலும், வேனில் விளங்கும் பொழுதிலும், இவ்வூற்று அடைபடாமல் சுரந்து கொண்டேயிருக்கும்; நானிலத்தில் பாய்ந்து நல்ல வளம் நல்கும். ஒன்று அளிப்பது நெல் அறுவடை. மற்றொன்று கொடுப்பது சொல் அறுவடை. இந்தச் சொல் அறுவடையினை அளிக்கும் ஊற்று. நல்லார் என்ற மலையிடைப் பிறந்து போந்து, நானிலத்தில் பாய்கிறது. அவ் வூற்று, ஆறாகிக் கடலாகி இலக்கிய உலகை வாழச் செய்கிறது. அவ்வூற்றுப் பிறக்கும் மலை-ஒண்டொடியர் என்ற நிலை என்பது நாடு நன்கு அறியும். வில்லேர் உழவரினும் வீறுபெற்று விளங்கும் அச்சொல்லேருழவர் திறம் அவர்தம் பாட்டுக்களில் நன்கு புலனாகும். இந்நல்லார், சொல்லுக்கு வல்லார் எனக் காட்டும் அவர்தம் பாட்டுக் கள் நாட்டுப் பாடல்கள் என்ற நல்ல பெயர் தாங்கி நாட்டில் உலா வருகின்றன. இவற் றைத் தவறாகச் சிலர் 'நாடோடிப் பாடல் கள்' என்று கூறி வருகின்றனர். நாடோடி கள் என்பார் ஊரும் நாடும் ஒரு நிலையும் அற்று, உண்டியும் உறையுளும் கண்ட கண்ட இடத்தில் கொண்டு திரியும் நிலையா வாழ்வினர். ஆனால் இப்பாட்டுக்களைப் பாடும் நம் தாய்மார்களோ, மற்றவர்களோ நாடோடிகள் அல்லர்; வீடும் வாசலும் கொண்டு கூடி வாழ்பவர்கள். தொழிற் பாட்டுக்களைப் பாடுகின்ற தொழிலாளி களும் நாடு நகரமில்லா நாடோடிகள் அல்லர்; 'முத்தமிழே கற்று முழங்கு மெய்ஞ்ஞானிக்குச் சத்தங்க ளேதுக்கடி' என்று பாடுகின்ற சித்தர்களும் நாடோடி களல்லர். ஆதலால், இவர்கள் உருவாக்கி நாட்டிற்கு அளித்திருக்கும் பாட்டுக்களும் நாடோடிப் பாடல்கள் ஆகா. இனிமேலா வது அவை தம்மை 'நாட்டுப் பாடல்கள்' என்ற பொருள் பொதிந்த சொல்லால் நாட்டார் வழங்கி வருவாராக. சுவை ததும்பும் அப்பாடல்களில் சிலவற்றைக் கீழே கண்டு மகிழ்வோம்.

பிள்ளைக் கனியமுதாகிப் பேசும் பொற் சித்திரமில்லாமல் வருந்தி உழன்ற ஒரு பெண் நீண்ட பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவள் மகிழ்ச்சி, அணையில்லா நீர்போல் பெருக்கெடுத்து ஓடியது. கொள்ளை ஆசையைக் குழந்தைமேல் குவித்தவள் ஆதலின், வெள்ளை மனத்தோடு வெற்றிப் புன்னகையோடு பாடுகின்றாள் :

முத்தில் ஒரு முத்தோ
முதிர விளைந்த முத்தோ
பாண்டிப் பெருமுத்தோ
பாட்டனார் ஆண்ட முத்தோ
தொண்டிப் பெருமுத்தோ
துரைமார்கள் ஆண்ட முத்தோ
சின்னஞ் சிறு முத்தோ
சியாக்கள் ஆண்ட முத்தோ
ஐந்தும் பதிந்த முத்தோ
ஐயாக்கள் ஆண்ட முத்தோ
ஆராய்ந்த முத்தோ
அலைகடலில் ஆழி முத்தோ
கோர்க்காத முத்தோ
கோதைகைக் குஞ்சலமோ.

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற தொன்மையான துறைமுகங்களில் தொண்டி ஒன்று. அங்கிருந்தும் ஏனைய தமிழகத் துறைமுகங்களிலிருந்தும் குளித்தெடுத்த முத்துக்கள் வெளிநாடு சென்று வெற்றியுலா வந்த வரலாற்றுச் செய்தியை உலகறியும். தமிழகத்தினின்றும் பண்டமாற்றாக ஏற்றுமதியான இப்பொருள் தமிழகத்தின் பொருளாதாரச் செம்மைக்கு நடுநாயமாகத் திகழ்ந்தது.இவற்றையெல்லாம் நன்கறிந்து நாட்டு வரலாற்று நல்லுணர்வோடு பிள்ளையைத் தாலாட்டும் பெண்ணினல்லாள் பாடுகிறாள். ஆழ்கடலில் தேடியெடுக்கும் முத்து அருமையும் பெருமையும் சான்றது என்ற செய்தியையும் இப்பாட்டுக் காட்டுகிறது. கோக்காத முத்து குவலயத்தில் தனி முத்தாகும். அதைப் போன்று இவளுக்கு ஒரு தனி மகனாய் வந்து அவன் உதித்துள்ளான் என்ற கருத்தை நயம்படக் கூறுகின்றாள்.

இவன் வந்த வழி யாது? யாருடைய பெயரைச் சொல்ல நாட்டிலே குழந்தையாய் 'நாலு காலோடு' தவழ்ந்து திரிகின்றான்? பேர் வைத்த பெருமகன் யார்? பேரன் என்று பெருமையோடு கூறிக் கொள்பவர் யார்?

கூடையிலே சோறும்
குடத்தோட நெய்மோரும்
சாலையிலே வைத்துத்
தர்மமிட்டார் பேரனோ
வீதியிலே வைத்து
விளங்குவார் பேரனோ?

இப்பேரப் பிள்ளையைப் பெற்றெடுத்த ஐயாவின் பெருமை அளவிட முடியாது. அரசரோடு சரிநிகர் சமானமாக நாடுடுக் காவலில மட்டுயன்று, வீட்டு விளையாடிலும் விளங்கக் கூடியவர்.சென்றால் வென்று வருவாரே தவிரத தோற்று வருதல அவா குடியிலேய இலலை. அவர் விளையாடும் விளையாட்டைப் பாருங்கள். யாரோடு விளையாடுகிறார்? சீரோடும சிறப்போடும நாடடையாளுகின்ற பேரரசரோடு விளையாடுகின்றார. தேரோடும் வீதியலே திருமுடி சூடிப் பாரோரும் தன்னைக் கண்டு மகிழப் பவனிவரும் அரசன், ஐயாவ்வாடு விளையாடுகிறான். எனன விளையாட்டு?

பல்லாங் குழியாடிப்
பாண்டியரைத் தோற்கடித்து
சொக்கட்டா னாடிச்
சோழரையும் தோற்கடித்து

பெருமை பெற்றவர் தான் ஐயா. அவருடைய பேரன்தான்,

பாண்டியரும் சீர்மகளும்
பனித்தீர்த்தம் ஆடையிலே
பாசியிலை ஒதுக்கிப்
பார்த்தெடுத்த குஞ்சலம்

அவன் தூங்க எத்தகைய தொட்டில் கட்டியிருக்கிறார்கள்? ஐயாவின் பெருமைக்குத் தகுந்த அருமையான தொட்டிலல்லவா கட்ட வேண்டும்.

தங்க வளை பூட்டி
சருகையினால் தொட்டில் கட்டி
வெள்ளி வளைபூட்டி
விலாசமாய்த் தொட்டில் கட்டி
ஆட்டுவோம் அன்னலிஞ்சா
அனந்தல் வருமருதி
ஊட்டுவோம் பாலமிர்தம்
உறக்கம் வருமருதி

இந்த இன்ப ஒலிகளுக்கிடையே இன்துயில் கொள்கின்றான். தண்டை மணிச் சத்தமிடத் தாய்மார்கள் முத்தமிட தொண்டை கவி பாடிவரத் துரைமார்கள் முத்தமிட தொட்டியிலே ரத்தினக்கிளி தூங்குகிறது. யார் மகன்? ''இன்னார் மகனோ. இந்திரனார் பேரனோ'' மன்னர் மகனோ மகராஜா பேரனோ'' என்று தாய் பெருமகிழ்வோடு பாடுகின்றாள். கணவன் பெயரையும் மாமன் பெயரையும் பெண் கூற மாட்டாளாதலால் ''இன்னார் மகனோ இந்திரனார் பேரனோ'' என்று குறிப்பிடுகின்றாள். தன் கணவனை மன்னனாக்கி, அவன் தன் தந்தையைப் பெரு மன்னனாச்கிக் கூறும் திறம் அறிந்து மகிழத் தக்கது.

மொழி வளர்ச்சிக்குதவும் இம்மூவாத் தமிழ் இலக்கியங்களைச் சாவாக் கருவூலங்களைத் தொகுத்தளித்தல் மொழி நலம் நாடுவார் தலையாய பணியாகும்.

# இயற்கை உண்மை

டாக்டர் கு. சீனிவாசன்,
எம்.எஸ்சி., பிஎச்.டி.

இக் கட்டுரையாளர் தஞ்சை மாவட்டத்திலுள்ள தென்னிலக்குடி என்னும் ஊரில் 19-10-1920இல் பிறந்தவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நெடுங்காலம் தாவரவியல் துணை விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பணிபுரிந்து, அத்துறைத் தலைவராகி ஓய்வு பெற்றவர்; 'தமிழில் தாவரம்' எனுந் தலைப்பில் 1954ஆம் ஆண்டுமுதல் பல கட்டுரைகளை எழுதி வருபவர்; சுத்த சன்மார்க்க விளக்கம்', 'AN INTRODUCTION TO THE PHILOSOPHY OF RAMALINGA SWAMI....' ஆகிய நூல்களை எழுதியவர்; இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத் தொல்அறிவியல் துறைப் பேராசிரியராகவும், தலைவராகவும், பணியாற்றி வருகிறார்.

''இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞான சபைக்கண்ணே, இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருஉருவினராய், இயற்கையின்பம் என்கின்ற சத்தியத் திருநடம் புரிகின்ற எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளே!'' என்று இறைவனை அழைக்கின்றார் இராமலிங்க அடிகள். இயற்கை விளக்கமாவது திருவருள் நிறைந்த இடம். அங்கே இயற்கை உண்மை நடமிடும். இந்த இயற்கை உண்மையை அறிந்து கொள்ளுதற்கு எத்தனையோ உயிர்கள் எத்தனையோ காலமாக எத்தனையோ விடங்களில் முயன்று வந்துள்ளன. மனித இனத்திற்கு ஆதிமூலமெனக் கருதப்படும் ஹோமோ எரெக்டஸ் (Homo Erectus) என்ற நிமிர்ந்து நடக்கும் குரங்கினம் தோன்றிய, ஏறக் குறைய இரண்டரைக்கோடி ஆண்டுகளாக மனித நெஞ்சம் இவ்வியற்கை உண்மையைக் கண்டு கொள்ளப் பெருமுயற்சி எடுத்து வந்துள்ளது. இன்றைக்கும் அம் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அந்த இயற்கை உண்மையின் ஒரு கூறு தான் உயிர். 'உயிரெலாம் ஒன்றென உளம்பட நோக்கு' தலை உணரும் ஓர் உயிர் பிறிதோர் உயிருக்கு உதவி வாழ்தல் கூடும். இயற்கை உண்மையின் இக்கூறு பாட்டை மக்கள் உணரும்பொருட்டு ஏனைய உயிர்களும் வாழ்ந்து காட்டுகின்றன.

ஏனைய உயிர்களாவன விலங்குயிர்களும். தாவர உயிர்களும். ''உள்ளது சிறத்தல்'' என்னும் பரிணாம முறையில் தாவர உயிர்கள் சிறந்து வளர்ந்து விலங்குயிர்கள் தோன்றின என்பது அறிவியல் உண்மையாயினும். பெரிதும் வேறுபட்ட இவ்விரு பேர் உயிரினங்களில் பிளாஸ்டோஃபாகா (Blastophoga sp) என்ற குளவியும், பைகஸ் காரிகா (Ficus Carica) என்ற அத்தி மரமும், ஒன்றுக்கு ஒன்று உதவியும், ஒன்றினால் ஒன்று வாழ்ந்தும் வருகின்ற இயற்கை உண்மைச் செய்தியைத் தருவது இக்கட்டுரை.

அத்தி, அரசு, ஆல் முதலிய மரங்கள் ஒரே தாவரப் பேரினத்தைச் சார்ந்தவை. உண்ணுதற்குரிய பழந்தரும் அத்திமரம் மெடிட்டெரேனியன் கடல் ஓரமாக வளர்கிறது. அத்திக்காய், ஆல், அரசின் காய்களைப் போன்ற ஒரு பூங்கொத்து ஆகும். அத்தியில் ஆண் பூக்களும், பெண் பூக்களும் தனித்தனியாக ஒரே காயினுள் (பூங்கொத்து) தோன்றுகின்றன. ஆண் அத்தி மரத்தில் உண்டாகும் காயினுள் மலட்டுப் பெண் பூக்களும் (gall flowers) ஆண் பூக்களும் இருக்கும். பெண் அத்தி மரத்தில் உண்டாகும் காயினுள் பெண் பூக்களும் மலட்டு ஆண் பூக்களும் இருக்கும். மலட்டுப் பெண்பூவில் சூல் தண்டு (Style) குட்டையானது. இப்பூச் சூலுறாது. சூலுற்றுச் செயல்படும் பெண்பூவின் சூல் தண்டு நீளமானது. மலட்டு ஆண் பூக்களில் மகரந்தம் விளையாது. மலட்டுப் பெண் பூவானது குளவிகள் முட்டையிடுவதற்கு இடங் கொடுக்கவே பயன்படுகின்றது. இப் பூவில்தான் குளவிகள் நன்கு அமர்ந்து முட்டையிட முடியும். மற்றைய பெண் பூவில் சூல்தண்டு நீளமாக இருப்பதால் அதன்மேல் குளவிகள் அமர முடியாது. இருப்பினும் இதனுடைய நீளமான சூல் தண்டின் முடியில் சான் நுண்ணிய மயிரிழைகள் அடர்ந்திருக்கின்றன. இவை மகரந்தங்களைப் பற்றிக் கொள்கின்றன. அங்குச் சுரக்கும் இனிய நீர்க்கசிவின் துணையால் மகரந்தங்கள் முளைத்து நுண்ணிய மகரந்தக் குழாயினைத் தோற்றுவித்து, அதன் வழியாகத் தாதுவின் உட்கரு, சூல் தண்டின் மூலம் உட்புகுந்து, சூலகத்தைச் சென்றடையும். அங்கு தாதுவின் உட்கரு, சூலகத்திலுள்ள சூலக உட்கருவுடன் கலந்து கரு முதிர்ந்து விதையுண்டாகும். இப்பூக்களை உடைய பூங்கொத்துத் (காய்) தான் அத்திப் பழமாகின்றது.

நீண்ட சூல் தண்டையுடைய இப்பூக்களுக்கு மகரந்தம் எவ்வாறு வந்து சேருகிறது என்பதை இனிக் காண்போம். அத்தியில் மகரந்தச் சேர்க்கை (Pollination) ஒரு வகைக் குளவியால் உண்டாகின்றது என்று மேலே கூறினோம். அத்திக்காய் பழமாவதற்கு இக்குளவி வர வேண்டும். இக்குளவி குஞ்சு பொரிக்க இவ்வத்தி பூத்தாக வேண்டும். அத்தி பூத்தவுடன் பெண் குளவி அத்திக்காயின் (பூங்கொத்து) மேற்புறத்திலுள்ள சிறு துளை வழியாக உட்செல்லும். பிஞ்சு இணரில் இத்துளை சிறு செதில்களால் மூடப் பெற்றிருக்கும். இதனுள் மலட்டுப் பெண் பூக்கள் இருக்குமானால், குளவி அதில் அமர்ந்து முட்டையிடும். இல்லாவிடில் வெளியில் வந்து மலட்டுப் பெண் பூக்களைத் தேடி அலையும்.

முட்டையிடப்பட்ட அந்த ஆண் அத்திகளின் (Capri figs) உள்ளே குஞ்சுக்குளவிகள் ஆணும் பெண்ணுமாக இருக்கும். அங்குள்ள ஆண் பூக்கள் உண்டாக்கும் தாதுக்களை உண்டு இவை வளர்ந்துவரும். புணர்ச்சிப் பருவம் முடிந்த பின்னர் கருவுற்ற பெண் குளவிகள் வெளிக் கிளம்புகின்றன. ஆண் குளவிகள் தாம் பிறந்த அந்த அத்திக் காயிலேயே இறந்துபடுகின்றன. வெளியில் ஊர்ந்துவரும் பெண் குளவிகளின் உடல் முழுவதும் தாது ஒட்டிக் கொண்டிருக்கும். இப்பெண் குளவி பறந்து போய் அருகில் உள்ள அத்தியில் நுழையும். இந்த அத்தி, பெண் அத்திக்காயானால் குளவியின்மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் மகரந்தம் பெண் பூக்களிலுள்ள நீண்ட சூல்தண்டின் மேல் பட்டு மகரந்தச் சேர்க்கை ஏற்படும். ஆனால், அதில் நுழைந்த குளவியின் நோக்கம் நிறைவேறாது. சூல்தண்டு நீளமாக இருப்பதால் குளவி அப்பூவில் தங்கி

முட்டையிட முடியாமல், மகரந்தச் சேர்க்கையைத் தான் அறியாமலேயே செய்து விட்டு வெளிப்படும்.

குளவி நுழைந்தது ஆண் அத்தியானால் அதிலுள்ள மலட்டுப் பெண் பூவில் முட்டையிட்டு அதனுள்ளே இறந்துவிடுகிறது. முட்டைகள் குஞ்சுகளாகி இம்மலட்டுப் பெண் பூக்களின் சூலகத்திலிருந்து வெளியேறுகின்றன. ஆண்குளவிகள் இந்த ஆண் அத்தியிலேயே இருந்து சாகின்றன. குளவிகள் முட்டையிடுவதற்கும் மகரந்தம் வெளிப்படுவதற்கும் அத்தி மரம் ஆண் அத்திக் காய்களை உண்டாக்க வேண்டும். இல்லாவிடில் அத்தி பழுக்காது. குளவியும் முட்டையிடாது. இவ்விரு உயிர்களின் வாழ்க்கையும் முற்றுப்பெறும் பொருட்டு இயற்கையன்னை கையாளும் எத்தனையோ வியத்தகு இயற்கை உண்மைகளில் இதுவும் ஒன்று.

# "மகனே தோழி என்றனள்"

பேராசிரியர் ந. இராமநாதன்,
எம்.ஏ., பி.ஓ,எல்.,

இக் கட்டுரையாசிரியர் தஞ்சை மாவட்டத்திலுள்ள சித்திரக்குடி என்னும் ஊரில் 1-4-1922ஆம் நாள் பிறந்தவர்; கரந்தைப் புலவர் கல்லூரி, நாகப்பட்டினம் கனகசபைப் பிள்ளைத் தமிழ்க் கல்லூரி, காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தந்தை பெரியார் கொள்கைகளை நாடு முழுதும் பரப்பும் பெரும்பணிக்காகத் திராவிடர் கழகத்தாரால் ''பெரியார் பேருரையாளர்'' எனும் பட்டம் வழங்கப் பெற்றவர்; பாவேந்தர் பாடல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, ''கவிஞரும் காதலும்'' எனும் அருமையான திறனாய்வு நூலை எழுதியவர்; ''அபிராமி அந்தாதி''க்கு உரையியற்றியவர். இப்போது பெரியார் சிந்தனையியல் அஞ்சல்வழிக் கல்லூரியில் மதிப்பியல் முதல்வராகப் பணிபுரிந்து வருகிறார்.

சங்க காலம் பலவகையில் தனித் தன்மை பெற்ற காலம். மக்கள் வாழ்க்கை முறையும் அவ்வாழ்க்கை முறையைப் பாடும் பாங்கும் ஆகிய இரண்டிலும் இத் தனித்தன்மையை எங்கும் காணலாம். இல்லது புனைதல் என்பது இல்லாத காலம். உள்ளதை உள்ளபடியே பாடிச் செல்லும் காலம். எந்த ஒன்றையும் மிகச் சிறுமைப்படுத்திப் பாடுதல் என்பது இல்லாத காலம். இதனைப் போன்றே மிகப் பெருமைப்படுத்திப் பாடி வியக்க வைக்கும் இயல்பும் இல்லாத காலம். செயற்கைச் சிந்தனைகளும் செயற்கை வாழ்வு முறைகளும் மிகமிகக் குறைந்து காணும் காலம், இக்காலம். சங்கப் பாடல்களைப் பாடியவர் எவ்வளவு படித்தவர் என்பதைவிட எவ்வளவு துய்ப்பறிவு உடையவர் என்பது பளிச்செனத் தோன்றும் காலமாக இக்காலம் இருக்கின்றது. சங்க கால மக்களின் அறிவின் எல்லை மிகச் சுருக்கம். ஆனால் அவர்கட்கிருந்த துய்ப்பறிவை எண்ணினால் அது ஆழமாகவும், தெளிவாகவும், பட்டாங்கு அமைந்ததாகவும், இன்றும் திரிபில்லாததாகவும் விளங்குகின்றது. புலமைத் தொழிலை நடத்திக் கொண்டிருந்தவர்கள் மட்டும் பாக்களைப் பாடவில்லை. அப்படி உள்ளவர்கள் குறைவு. ஆனால் வாழ்க்கையில் பல்வேறு

துறைகளில் ஈடுபட்டிருந்த பலரும் பங்கு கொண்டு பாடியுள்ள புதுமையைச் சங்கப் பாக்களில் காணலாம்.

சங்ககால மக்கள் பாக்களைப் பாடு தற்கு அமைத்துக் கொண்ட மரபுகளும் தனித்தன்மை வாய்ந்தவை. அவர்கள் வாழ்க்கையை அகம் புறமாகப் பகுத்துக் கொண்டு திணை துறைக் கருத்துக்கள் அமையப் பாடிச் செல்லும் மரபுகளும் தனித்தன்மை வாய்ந்தவை. சங்க கால மக்கள் கையாண்ட அகப்புறக் கோட்பாடு களும் கொள்கைகளும் மரபுகளும் பிற்காலத் தில் காவியங்களாகவும் பக்திப் பாடல் களாகவும் மிக விரிவுபடுத்திப் பாடியுள்ள பாக்களில் எங்கும் ஊடுருவி அழுத்தமாக ஆழமாக நிற்பதைக் காணலாம். பிற்காலக் காவியங்களிலும் பக்திப் பாடல்களிலும் ஊடுருவி நிற்கும் சங்க கால மரபுகளும் கொள்கைகளும் காவியங்களுக்கும் பக்திப் பாடல்களுக்கும் உயிரூட்டத்தைக் கொடுத் துக் கொண்டிருக்கின்றன. பாக்களுக்கு வேண்டிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட முறையும், அவைகளை வழங்கும் முறையும் ஆகிய இரண்டிலும், சங்கப் பாக்கள் சிறந்து விளங்குவதை இன்றும் என்றும் காணலாம்.

சங்கப் பாடல்களில் அகம் பற்றிய பாடல்களும் கருத்துக்களும் சிறப்புடையன. புறம் பற்றிய கருத்துக்களும் நடைமுறை களும் பெரிய மாற்றத்துக்கு ஆட்பட்டு இன்று விளங்குகின்றன. அவைகளை அப்படியே இக்காலத்துக்கு ஏற்றுக்கொள்ள இயலாது. ஆணும் பெண்ணும் கூடி வாழும் அகவாழ்வு பற்றிய செய்திகள் இன்றும் புதுமையோடு இலங்கும் பண்புகளைப் பெற்று விளங்குகின்றன. சங்ககால மக்கள் வாழ்வில் குழந்தை மணம் இல்லை; விதவை மணமும் இல்லை. விதவை நிலை உண்டு. இரண்டாம் முறையாகப் பெண்கள் மணஞ் செய்து கொள்ளும் நிலையும் இல்லை. திருமணம் என்பது ஒரு தடவை நடந்த தாகவே காணுகின்றாம். விதவைத் திருமணம், கணவன் உள்ளபோதே விலக்கி விட்டுச் செய்யும் திருமணம் ஆகியவைகள் சிறுபான்மையாக நடந்திருக்கலாம். அவை களை ஒரு பொருளாக எடுத்துக்கொண்டு பாடவில்லை என்று கருத இடம் உண்டு. 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்ற கருத்துப்படி, எடுத்துக்காட்டான ஒரு வாழ்வு முறையை வற்புறுத்துதற்கு அவ் வாறு பாடினார்கள் என்றும் கருத இடமுண்டு. மேலும் அவைகளை அறக்கழி வுடையனவாகக் கருதியிருக்கலாம். ஆயினும் இப்படி நிகழ்பவைகளை வெறுத்தும் இழித் தும் பேசவும் இல்லை.

'மனிதர்களின் உள்ள இயல்பு எப்படிப் பட்டது?' என்பதைச் சற்றுக் காணலாம். கூடிய வர்களோடு கூடவே உள்ளம் விரும்புவது இயல்பாக இருக்கின்றது. கூடிய மனிதர்கள் மட்டும் இல்லை; தாம் பழகிய இடம், கையாண்ட பொருள்கள் எல்லாவற்றிலும் முன்னர் நம்மோடு தொடர்பு கொண்டவற்றையே மனித உள்ளம் நாடுவதைக் காணலாம். உண்ட கலத்திலேயே உண்ண விரும்புவதும், பழகிய வர்களோடேயே பழக விரும்புவதும் இன்றும் உலகியலாக விளங்குகின்றன. உயிருள்ள உணர்வுள்ள ஆணும் பெண்ணும் ஆகிய இருவரும் ஒருமுறை சேர்ந்து பழகிய பிறகு பிரிந்துவிடுகின்றார்கள் என்பது அவ் வளவு எளிதான ஒன்றல்ல. இந்த நிலையில் பிரிந்துவிட வேண்டுமென்று இருவருக்கு மோ ஒருவருக்கோ எண்ணம் ஏற்பட்டு விடுமானால், அதனைத் தடை செய்யவும் வேண்டியதில்லை. அல்லது அதனைக் குறைத்துப் பேச வேண்டியதும் இல்லை. ஆக இப்படி நிகழும் நிகழ்ச்சி என்பது மனித வாழ்வில் மிகக் குறைவுதான். ஆகவே, சங்க இலக்கியங்கள் அத்தகையவற்றைப் பாடவில்லை என்று கொள்ளலாம். நிற்க.

ஆணும் பெண்ணும் கலந்து வாழும் அகவாழ்வு எந்த அடிப்படையில் அரும்பி— மொட்டாகி—மலர்ந்து மணம் பரப்பு கின்றது என்பதைச் சங்க இலக்கியம் மூல மாக நாம் காணலாம். காதல் வாழ்வுக்குக் காண்டல் என்பதை முதல் நிலையாக இலக்கியங்கள் கூறுகின்றன. உலகம் உள்ள ளவும் உள்ள நடைமுறையும் இதுதான்.

காண்டல் என்பதைக் கண்ணாற் காண்டலை மட்டும் குறிப்பதாகக் கொள்ளக் கூடாது. உள்ளத்தால் எண்ணி முடிவுக்கு வருதலும் காண்டலில் அடங்கும். கண் பார்வை புறத்தோற்றத்தை முடிவு செய்யும். உள்ளம் காண்டலாகிய அகப் பார்வை என்பது பண்பு நலன்களை ஆய்ந்து முடிவு செய்யும். ஆகவே உண்மைக் காதல் தோன்றி நிலைபெற இரு வகையிலும் நிறைவு பெற வேண்டுமென நாம் அறிந்து கொள்ளலாம். காதல் மூலத்தை விளக்கும் சங்கப் பாடல் ஒன்றைக் காணுவோம்.

இப்பாடல் அகநானூறு களிற்றியானை நிரைப் பகுதியில் 48ஆம் பாடலாக விளங்குகிறது. இதனைத் ''தங்கால் முடக்கொற்றனார்'' என்ற புலவர் பாடியுள்ளார். இப்பாடல் தோன்றியுள்ள பின்புலத்தை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். பின்புலத்தை அறிந்து கொண்டாலன்றிப் பாடலின் கருத்தைப் புரிந்து கொள்ள முடியாது. பாடலின் கருத்தையோ பாடிப்போகும் போக்கையோ உணர்ந்து அனுபவிக்க முடியாது. இதற்காகவே சங்கச் சான்றோர்கள் பின்புலதைத் திணை துறை என்ற பெயர்களில் குறித்துள்ளனர்.

இப்பாடலின் பின்புலம் என்ன? தாய் தன்னுடைய வயதுவந்த பெண்ணின் நடைமுறையில் சில மாற்றத்தைக் காணுகின்றாள். மாற்றத்தைக் கண்ட தாய், தன்னுடைய மகளைத் தானே நேர்முகமாகக் கேட்பது என்பது நல்ல நடைமுறையில்லை. மகளுக்கு வேண்டிய அல்லது நெருங்கிப் பழகுகின்ற மற்றொரு பெண்ணின் மூலமாக அறிந்துகொள்ள முயலுகின்றாள். இப்பெண்ணையே சங்க இலக்கியம் 'தோழி' என்று கூறுகின்றது. தாய் கண்ட மாற்றங்கள் என்ன? தன்னுடைய பெண் முன்புபோல உணவு உண்ணுவதில்லை; உணவு தான் உண்ணவில்லை-யென்றால், அவள் எப்போதும் விரும்பிப் பருகும் பாலையும் பருக விரும்புவதில்லை. இப்படியாகப் பல மாற்றங்களைக் காணுகின்றாள் தாய். இச் செய்தியைத் தன் மகளுக்கு நெருக்கமான பெண்ணிடம் கேட்டு அறிந்துகொள்ள விரும்பித் தாய் அப் பெண்ணை வினவினாள். வினவப்பட்ட தோழியாகிய அந்தப் பெண் தாய்க்கு விடை கூறுவது போல அமைந்ததுதான் இவ் வழகிய பாடல். இப்பாடலில் நீங்கள் கருத்தை மட்டுமல்லாமல், மனிதர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் எப்படிப் பழகிக் கொள்ளவேண்டும் என்ற பண்பாட்டைச் சங்க இலக்கியம் அழுத்தமாக ஆழமாகச் சுட்டிக் காட்டுவதையும் காணலாம்.

தன் மகளின் மாறுபட்ட நடைமுறையைக் கேட்ட தாய்க்கு நேர்முகமாக இப் படித்தான் என்று கூறலாம்; அல்லது நேர் முகமாகத் 'தெரியாது' என்றும் கூறலாம். இரு வகையிலும் தோழியின் டேச்சு தொடங்கப்படவில்லை. தோழி, தாய் என்ன கேட்டாளோ அதனையே தானும் கொண்டு கூறுகின்றாள். இக்கருத்தை விளக்கும் பாட்டடிகள் வருமாறு:

> அன்னாய் ! வாழி ! வேண்டன்னை ! நின்மகள்
> பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
> நனிபசந் தனள் என வினவுதி; அதன்திறம்
> யானும் தெற்றென உணரேன்

தாய் கேட்கும் கேள்விக்குரிய விடையாகிய செய்தியைத் தோழி நன்கு அறிவாள். ஆனாள் வெளிப்படையாகச் சட்டென்று கூறுவது நாகரிகமாகாது. தான் எப்படிக் கூற வேண்டுமென்பதற்குப் படி நிலை அமைத்துக் கொள்வதற்காகத் தாய் கேட்ட கேள்வியையே தானும் கொண்டு கூறுகின்றாள்.

அன்னாய்!-இது அண்மை விளி. தாயே என்பது கருத்து. வாழி !-நீ வாழ்வாயாக. இது முகமனாகப் பேசும் பேச்சு முறை. தன்னுள்ளத்தில் மண்டிக் கிடக்கும் தாயின் மீதுள்ள அன்பைப் புலப்படுத்தும் ஒரு மொழி. மேலும் குற்றப்படுத்து முறையில் ஆய்வு செய்யத் தாய் வினவுகின்றாள். அவளை அமைவு செய்யும் முறையில் மேலும் ஒருமுறை விளித்து ''அன்னை வேண்டு !'' என்று கூறுகின்றாள். வேண்டன்னை ! என்ற தொடரை

அன்னை, வேண்டு ! என்று மாற்றிக் காண வேண்டும். அன்னை—இதுவும் விளிதான். வேண்-என்பது விரும்பிக் கேள் என்ற கருத்துடைய மொழி. வேண்டுதல் என்ற சொல்லுக்கு விரும்புதல் என்பது பழைய பொருள். 'குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்' என்று வரும் இடத்தில், நச்சினார்க்கினியர் நிற்றலை ஆசிரியன் விரும்பும் என்று உரை எழுதியுள்ளமையால் அறியலாம். இவ்வாறெல்லாம் பலமுறை விளித்துக் கூறிய தோழி, 'எனக்கும் தெளிவாகத் தெரியாது, ஆனால் ஒன்றுண்டு' என்று மேலும் கூறுகின்றாள்.

முந்திய நாளிலே பூக்கள் நிறைந்துள்ள மரம் செடி கொடிகளையுடைய மலைச் சாரலிலே தழைத்துள்ள வேங்கை மரத்தில் பூக்களைக் கொய்யும் பொருட்டு எங்களுடைய மற்றைய தோழிகளுடன் நாங்களும் சென்றோம். சென்ற நாங்கள் மலை நாட்டு வழக்கப்படி வேங்கை மரத்தின் அடியில் நின்று 'புலி! புலி!' என்று எல்லோருமாகச் சேர்ந்து ஒலி எழுப்பினோம். இக் கருத்துக்களை விளக்கும் பாட்டடிகள் வருமாறு:

ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி
புலி ! புலி ! என்னும் பூசல் தோன்ற

'மலிபூஞ்சாரல்' என்பதனைப் பூமலிசாரல் என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். பூக்கள் நிறைந்த மலைச்சாரல் என்பது கருத்து. ஒலிசினை-என்பது தழைத்த கிளை என்பது கருத்து; அவைகளை உடைய வேங்கை மரம். வேங்கை கொய்தல் என்பது வேங்கைப் பூவைக் கொய்தல் என்று கொள்ள வேண்டும். இதனை முதலாகு பெயர் என்பர். பூசல் என்பது, ஆரவாரம். இவ்வாறு ஆரவாரம் செய்தால் வேங்கை மரக்கிளைகள் தாழ்ந்து பூக் கொய்யப் பெண்களுக்கு இடம் தரும் என்பது மலைநாட்டு வழக்கு. அதன்படி அவர்கள் புலி! புலி! என்று ஆரவாரம் செய்தனர். புலிக்கும் வேங்கைப் பூவுக்கும் ஒற்றுமை உண்டு. இதனால் தமிழர்கள் வேங்கை மரம் என்றனர்.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை

என்பது அய்ங்குறுநூற்றுப் பாட்டு. துறுகல் என்பது சிறிய குண்டு வடிவில் அமைந்த பாறை. அதன் மீது வேங்கை மரத்தின் மலர் விழுந்து மூடி மறைத்து விட்டது. அந்தத் துறுகல்லைப் பார்க்கும்போது அது புலிக்குட்டி போலத் தோற்றம் அளித்தது என்பது பாட்டின் கருத்து. நிற்க.

வேங்கை மரத்தின் கீழே நின்று பெண் மக்கள் எழுப்பிய ஒலி மலையின் முழைஞ்சுகளிலெல்லாம் தாக்கி மலைச்சாரல் முழுவதுமாக எதிரொலி செய்தது. அம்மலைச் சாரலில் குதிரை பூட்டிய சிறுதேர்மீது ஏறிக்கொண்டு இளைஞன் ஒருவன் செல்லுகின்றான். அவன் காதில் இவ்வொலி விழுகின்றது. அந்த இளைஞனின் ஒப்பனையை அகநானூற்றுப் பாடல் பின் வருமாறு குறிக்கின்றது. அவன் செங்கழு நீர்ப் பூவின் தேர்ந்தெடுக்கப்பட்ட இதழ்களை ஊசியால் கோவை செய்து அதாவது கோத்துத் தன்னுடைய கழுத்தைச் சூழ்ந்து கிடக்க அணிந்திருந்தான். வெட்சி மரம் அல்லது பூச்செடியினுடைய மலரால் கோக்கப்பட்ட சிறிய மாலையைத் தலையில் ஒரு பக்கம் சாய்ந்திருக்கச் சூட்டிக் கொண்டிருந்தான். கண்ணி-என்பது முடி மாலை. தார்-என்பது மார்பில் அணியும் மாலை. இளைய மகளிரின் மார்புகள் மண்டிப் பொருந்துதற்கு இடமான தன்னுடைய அகன்ற மார்பில் சந்தனக் கட்டையால் முறையாக உருவாக்கப்பட்ட சாந்தினைப் பூசிக் கொண்டிருந்தான். வரிந்து புனையப்பட்ட வில்லில் புலியை உடனடியாகக் கொல்லும் அம்புகளைத் தேர்ந்து எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, பெண்களின் ஒலிவந்த திக்கில் புலியால் நேர்ந்த இடர் யாதோ என்று எண்ணியவனாய்த் தேரை ஓட்டிக் கொண்டு வந்தான். இத் தொடர்க் கருத்துக்களைக் காட்டும் பாட்டடிகள் வருமாறு :

ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்

30459

குயமண் டாகம் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிரம் படரென
வினவி நிற்றந் தோனே

ஆயிதழ்-ஆராய்ந்து எடுக்கப்பட்ட பூவின் இதழ். ஊசி போகிய-ஊசியால் கோத்த. சூழ்செய்மாலை-கழுத்தில் சூழ்தலைச் செய்யும் மாலை. பக்கம் சேர்த்திய கண்ணி-தலையின் ஒரு பக்கம் தாழ அணிந்துள்ள முடிமாலை. குயம்-பெண்களின் மார்புகள். ஆகம் இங்கே மார்பு. செஞ்சாந்து-இங்கு நிறம் பற்றியில்லாமல் சந்தனச் சாந்தை முறையாக அரைத்தெடுத்த சாந்தைக் குறித்தது. நீலி-மெத்தெனத் தடவி. வரிபுனைவில்-வரிந்து கட்டப்பட்ட வில். ஒருகணை-புலியைக் கொல்லும் ஒப்பற்ற அம்பு. மாதிரம்-திக்கு; ஒலி வந்த திக்கு. இப்படியில்லாமல் மாதிறம்-என்றிருந்தால் மாவால்-அதாவது புலியால் வந்த தீங்கு என்று பொருள்கொள்ள வேண்டும். நிற்றந் தோன்-நிற்றலைத் தந்தவன்; அதாவது நின்றவன் என்பது கருத்து. நிற்க.

அவ்வாறு வந்து நின்ற ஆடவனை நாங்கள் பார்த்தோம். அவன் கையில் தேர்ந்தெடுத்த அம்பை உடையனாய் நின்று உங்கட்குப் புலியால் விளைந்த தீங்கு யாதோ? அல்லது புலி சென்ற திக்கு யாதோ என்று வினவினான். நாங்கள் விடை ஒன்றும் கூற முடியாதவர்களாய் வெட்கப்பட்டோம். நாணத்தால் நின்ற நாங்கள் ஓடி ஒளியவும் முடியவில்லை. ஆகவே நாங்கள் ஒருவர் உடம்பில் ஒருவராக மறைந்து கொண்டு தலைதாழ்த்தி நின்றோம். எங்களைப் பார்த்து, 'அழகிய நெற்றியையும், அய்ந்து வகையாகப் பின்னி முடிக்கப்பட்ட கரிய எண்ணெய் பூசப்பட்ட கூந்தலையும் உடைய பெண்களே! உங்கள் வாயில் பொய்யும் உண்டோ?' என்று கூறியவனாய் உன்னுடைய மகளின் மையுண்ட கண்ணைப் பலமுறை பார்த்தவனாய், ஞாயிறு மறையும் மாலைக் காலத்தில் போய்விட்டான். அவன் மறைந்த திக்கை நோக்கியவளாய் இவன் தான் மகன் என்ற கருத்துப்பட ''மகனே தோழி'' என்று நின்மகள் கூறினாள். இதனடியாகச் சிலவற்றைக் கருத இடம் தருகின்றது, என்று கூறுகின்றாள். இக்கருத்திற்கான பாட்டடிகள் வருமாறு :

.... .... .... .... .... அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாலரி நின்றனெ மாகப் பேணி
அய்வகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யு முளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்து
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்றமக் குன்றுகிழ வோனே!
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
'மகனே தோழி' என்றனள்
அதனள வுண்டுகோள் மதிவல் லோர்க்கே.

இங்கே நின் மகளுடைய மையுண்ட கண்ணைப் பலமுறை பார்த்துச் சென்றான் என்றாள். மகளின் கண்ணை அவன் பார்த்தான் என்றதனால், மகளும் அவனை நோக்கினாள் என்பது பெறப்படுகின்றது. பார்வையால் இருவரும் புற அழகில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் உள்ளத்தைக் கவர்ந்த பாங்கை நாம் கொஞ்சம் சிந்தித்துத் தான் உணர வேண்டும். அதனால்தான் இறுதியில் உள்ள பாட்டடிகள், மதிவல்லவர்கள் மேலே நடந்த நிகழ்ச்சியைக் கொண்டு உள்ளத்தால் உணர்ந்து அறியக் கூடிய செய்தியும் உண்டு என்பதைச் சுட்டுகின்றது. புலி! புலி! என்று சத்தம் கேட்டால் மனித உள்ளம் என்ன எண்ணும். முதலில் நாம் எப்படித் தப்புவது? என்பது தான் தோன்றும். ஆனால் இந்த ஆண் மகன் 'புலி! புலி!' என்ற ஒலி வந்த திக்கை நோக்கிப் புலியால் வந்த இடரைக் களைய வந்தான் என்றால், இத் தலைமகனின் உள்ள உணர்வு தெற்றெனப் புலனாகின்றது. பெண்ணுக்கு ஆணும் ஆணுக்குப் பெண்ணும் ஒருவருக்கொருவர் எச்சம் சொச்சம் இல்லாமல் தியாகம் செய்து கொள்ளுவதே உண்மைக் காதலாகும். இந்தத் தியாகவுணர்வை இந்தத் தலைமகனிடம் தலைவி கண்டுதான் உள்ளத்தைப் பறி கொடுத்தாள். ஆனால் இக்கருத்தைப் புலப்படுத்தப் பல சொற்களைச் சொல்லவில்லை. உணர்வின் ஆழத்தில் சிக்கிக் கொள்ளும்போது மனிதருக்குப் பல

சொற்களைப் புனைந்து, பேச வராது. ஆகவே 'மகனே! தோழி' என்று மட்டும் குறித்தாள். 'மகனே' என்றால் இவன்தான் மகன் என்பது கருத்து. இங்கே மகனே தோழி என்ற தலைமகள் கூற்றில் கருத்தாழ வைத்து மாயஞ் செய்யும் தங்கால் முடக் கொற்றனார் வாக்கு வளத்தைப் பிறிதொரு வகையில் காண்போம்.

சூலியசு சீசர் என்னும் புகழ் பெற்ற ஆங்கில நாடகத்தில், சீசரைக் கொன்ற பிறகு, அந்தோணியின் கருத்தாழமும் கவர்ச்சியும் மிக்க உரையால் தூண்டப் பெற்ற மக்கள் சதிகாரர்களைக் கொன்று விடுதற்கு விரைகின்றனர். போர் மூளுகின்றது. 'சீசரைக் கொன்றது சரியே' என்று அறிவார்ந்த உரை நிகழ்த்திய புகழ்பெற்ற அறிஞனான புரூட்டசு, தன்னுடைய குற்றத்தை உணர்ந்து, தன்னுடைய கூடாரத்தில் தானே தன்னுடைய மார்பில் கத்தியைப் பாய்ச்சிக் கொண்டு இறந்து விடுகின்றான். போர் முடிந்து அமைதியான சூழ்நிலையில் புரூட்டசின் கூடாரத்திற்கு அந்தோணியும் மற்றவர்களும் வருகின்றனர். புரூட்டசின் உடலைப் பிணமாகக் கண்ட அந்தோணி அவனுடைய பண்பு நலங்களை உணர்ச்சி வசப்பட்ட நிலையில் சில கூறி, முடிந்த முடிபொருளாகக் கூறிய மொழி-'இவனொரு மனிதன்' என்பதுதான்.

> புரூட்டசின் வாழ்க்கை பண்பட்ட ஒன்று. இயற்கையானது உலகவருக்கு முன்னே எழுந்து நின்று, மனிதர்களே! 'இவன் ஒரு மனிதன்' என்று கூறுமளவுக்கு, இவனுடைய உடலில் மூலக் கூறுகள் கலந்திருந்தன.

'மகனே! தோழி' என்று கூறிய தலைமகளின் சொல்லாழத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

# சங்ககாலப் பொதுவுடைமை

க. தமிழ்நிலவன்



இக் கட்டுரையாசிரியர் 7-6-1930-இல் தஞ்சாவூரில் பிறந்தவர்; இளமை தொட்டே தமிழ்த் திருமணங்களை ஊக்குவித்தல், ஆதிதிராவிட முதியோருக்குக் கல்வியளித்தல் முதலிய சமுதாயப் பணிகளில் ஈடுபட்டவர், கூட்டுறவுத் துறையில் முப்பத்து மூன்றாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற வர்; தூய தமிழ்ப்பற்றுக்கொண்டு இலக்கிய அமைப்புக்களை நிறுவியும், பங்கு கொண்டும் பணியாற்றி வருபவர்; இலங்கைத் தமிழர் சிக்கலின் பொருட்டு 17-9-81 முதல் 2-10-81 வரை (15 நாட்கள்) சிறையிலிருத் தவர்; திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகத்தாரால் ''தமிழ்த் தொண்டர்'' எனும் பட்டம் வழங்கப் பெற்றவர்; சமுதாய மொழி நலத் தொண்டுகளைத் தொடர்ந்தாற்றிவருவதோடு இப்போது தமிழ்நாட்டுத் தமிழர் பேரவையின் துணைச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

தமிழகத்தின் சங்க காலம் ஒரு தங்கக் காலம். அத் தங்க மாளிகையுள் ஒளிவீசிக் கிடக்கும் அகவாழ்வு, புறவாழ்வுக்கான இலக்கியங்கள் இலக்கணங்கள் ஆகிய அணி கலன்கள் பல.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்த'

குடியினரின் செம்மாந்த வாழ்வு பொதுமை பூத்ததாக இருந்தது. சங்க காலத்து ஔவையார் வாழ்ந்து காட்டிய வாழ்வு ஒரு புரட்சி வாழ்க்கையாகும்.

வேந்தரோடும் குறுநில மன்னர் களோடும் சார்ந்து பெருமிதமாக வாழ்ந்த ஔவையார், எளிய குடிமக்களோடும் அவ்வாறே தொடர்பு கொண்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார். அக் காலத்து வாழ்ந்த ஆண்பாற் புலவர்களை ஒப்பவும், அவர்களிற் சிறந்தும் விளங்கி னார்.

வள்ளுவர், இளங்கோ, கம்பர் போன்ற பெரும்புலவர்களை ஒப்பப் பெண்பாற் புலவர்கள் சிறப்பிடம் பெறவில்லை. இது ஏனென்று புரியவில்லை. பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையும் குறைவாகத் தான் தெரிகிறது. பிற்காலச் செய்யுட்களில் ஆடூஉ மூன்னிலையைவிட மகடூஉ முன் னிலையாகப் பாடப்பெற்றவை அதிக அள வில் உள்ளமையால், ஆண்பாற் புலவர்களே இலக்கண இலக்கியங்களைப் பெரும்பான் மையும் கையாண்டு வந்துள்ளமை தெரி கின்றது.

இத்தகைய புறக்கணித்தல் மேனாட்டு இலக்கியங்களிலும் தெரிகின்றது. அங்கும் மேரி லாம்பு (Mary Lamb), அடிலாய்டு அன்னிபொரெக்டர் (Adelaide Anne procter) போன்ற விரல்விட்டு .என்னும் அளவில் தான் பெண்பாற் புலவர்கள் காணப்படுகின்றனர்.

சங்ககாலப் பெண்பாற் புலவர்களாகக் காணப்படுவோர் ஔவையார், வெறி பாடிய காமக்கண்ணியார் முதலிய இருபத்தெண்மர். இவர்களுள் மிகச்சிறந்தவராக ஔவையார் காணப்படுகிறார்.

'ஔவை' என்ற சொல்லுக்குக் கிழவி (பேரிளம் பெண்) என்னும் பொருள் தவறாக வழக்கத்தில் உளது. அகராதியில் தாய்-தவப்பெண் என்று பொருள் தரப் பட்டுள்ளது. இதுவே பொருத்தமாகும்.

ஔவையார் பற்றிய தெளிவான வரலாறுகள் கிடைக்கவில்லை. ஆராய்ச்சியாளர் பலவாறாகக் கூறுகின்றனர். இப் பெயரில் மூவர் வாழ்ந்தனரெனவும் கருதுகிறார்கள். முதலாம் ஔவை கால்ம கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்றும், இரண்டாம் ஔவை சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவர் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) என்றும், மூன்றாம் ஔவை கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் கூறுகின்றனர். வள்ளுவர் காலத்து ஔவையாருக்குப் பின்வரும் கருத்துக்கள் தரப்படுகின்றன.

ஔவையார் சோழநாட்டில் தோன்றியவர் என்பது, தமிழகம் முழுவதையும் சுற்றித் தொண்டு புரிந்திருப்பினும் சோணாட்டைச் சிறப்பாகப் போற்றியுள்ளமையால் தெரிகிறது. இவர் ஒரு சோணாட்டுப் பெண்புலி எனலாம்.

இவர், அதிகமான் நெடுமானஞ்சி பரிசில் தரக் காலம் கடத்தியபோது வருத்தமும் சினமும் தோன்றக் கூறிய செய்யுளுள், யாம் எமது யாழ் முதலிய இசைக்கருவிகளை மூட்டை கட்டிக் கொண்டோம் என்று வருவதனால், இவர் இசைவல்லவர் என்ற குறிப்புப் புலனாகின்றது.

எனவே, இவர் பாணர் குலத்தில் தோன்றியவர். தன் குலவித்தையோடு இலக்கிய இலக்கணப் பயிற்சியும் பெற்ற பெரும் புலவராகத் திகழ்ந்திருக்கிறார். இரண்டு தமிழ் வல்லவரெனவே, மூன்றாவதாகிய நாடகத் தமிழிலும் இவர் தேர்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

புறநானூற்றில் காணப்படும் இவர் பாடல்கள் தமிழகத்தின் சொத்துக்கள். உலகிற்கே உரியவை. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியவை இளஞ்சிறார்க்குப் பயன்தரப் பாடியவையாதலால், மிக எளிமையாகக் காணப்படுகின்றன. அதனால் அவற்றைப் பாடியவர் பிற்கால ஔவையார் எனக் கருதுகின்றனர். இவர் செய்த ஆத்திசூடி பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் வழிகாட்டியாக அமைந்தமை எண்ணத்தக்கது.

மேலும் ஔவையார் பெயரால் உள்ள மூதுரை, நல்வழி, விநாயகரகவல், அருந்தமிழ் மாலை, ஞானக் குறள், அசதிக் கோவை முதலியனவும், அவர்தம் பெருமையையே எடுத்துக் காட்டுகின்றன. இவர் பாடிய நூல்கள் பல மறைந்திருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு. இருப்பவற்றைப் போற்றுதல் நமது தலையாய கடமையாகும்.

ஔவையார் தம் வாணாளில் ஓரிடத்திலும் நிலைத்திராமல் நாடும் நகரும், பட்டியும் தொட்டியுமான இடங்கள்தோறும் சுற்றி, அறநெறிகளைத் திறமான செந்தமிழ்ப் பாக்களாற்பாடிப் பரப்பிச் சமுதாய மாற்றத்திற்குரிய பெரும் பணியைச் செய்து வந்திருக்கிறார் என்பது புலனாகின்றது. ஔவையார் விரும்பிய பொதுவாழ்வைப் பாவேந்தர் பாரதிதாசன்,

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்

இல்லாரும் அங்கில்லை, பிறன் நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் ஆங்கே
நல்லாரே எல்லோரும் அவ்வையத்தில்

என, இக் காலத்தில் புரட்சிப் பாக்களால் வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

பொய்யா நாவிற் புலவர் மொழிகளாதலின், அவை ஒருநாள் மெய்யாகும்; மெய்யாதல் வேண்டும்.

ஔவையார் வாழ்ந்த காலத்தை ஒட்டி வாழ்ந்த மேனாட்டுப் பெரும் புலவர்கள் சமுதாயத்திற் பெருமாற்றங்களைச் செய்துள்ளனர். பெரும்புலவர்கள் உலகமக்களின் நன்மையே கருதி வாழ்ந்தவராவர். பெரும் புலமைசான்ற சான்றோர்கள் சாதி, சமய, இன, நாடு முதலியவற்றால் வேறுபாடுடையவர்களாக வாழ்ந்தாலும், குறிக்கோளும் தொண்டும் ஒருநோக்குடையவாக இருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சமுதாயத்தின் உறுப்பினர். ஒருவர் எல்லோருக்கும், எல்லோரும் ஒருவருக்கும் என்னும் தத்துவமே பொதுவுடமைப் பூங்காவிற்குத் திறவுகோல்.

ஔவையார் ஆத்திசூடியில் ''ஙப்போல் வளை'' என்னும் சிறு தொடரால், சுற்றத்தைத் தழுவி வாழவேண்டுமென்னும் உயர்ந்த தத்துவத்தை எளிமையாகக் கூறுகிறார். ''அனந்தலாடேல்'' என்னும் தொடர், வீணில் உண்டு களிக்க எண்ணுவோரை மறைமுகமாக எள்ளி உழைப்பின் மேன்மையை வற்புறுத்துகின்றது. இதனை இக்காலக் கவிஞர், 'தூங்காதே தம்பி தூங்காதே' என இசையோடு கூட்டி இயம்புகின்றார். ''சக்கர நெறி நில்'' என்பது அரசு ஆணைக்குக் கட்டுப்பட்டுச் சமுதாய நெறியைப் பேணும் ஓர் அருமையான கொள்கை. இதனை அறிஞர் அண்ணா அவர்கள் கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு என அழகாக விரித்துரைத்தார்.

சுதந்தரம் — தன்மான உணர்வுகளை ஔவையார் 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' எனச் சுருக்கமாகக் கூறுகின்றார். சாதிகள் இன வேறுபாடுகள் இவையல்ல; உண்மையான சாதி இடுவாரும் இடாதாருமே என முதலாளி தொழிலாளி நிலைமைத் தத்துவமாகக் கூறும் அவர் திறம் மிகவும் போற்றற்குரியது.

ஔவையார் வரலாறு ஆராய்ச்சிக்குரியதொன்றாகும். வழங்கிவரும் வரலாற்றில் காணப்பெறும் நிகழ்ச்சிகள் ஔவையாரின் ஒப்பற்ற பண்பாட்டினை உலகத்திற்கு அளிப்பதாக இருப்பதைக் காணலாம். கம்பர் ஒரு பாட்டிற்கு ஆயிரம் பொன் தந்தால்தான் பாடுவேன் என்று கூறி சிலமபிஎன்ற ஒரு பெண்ணிடம் ஐநூறு பொன் பெற்றுக் கொண்டு

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணுவதும் சோழ மண்டலமே

என இரண்டடிகளைப் பாடி, முடிக்காமல் சென்ற பின்-அப்பாடலை அப்பெண் அன்போடளித்த கூழினை உண்டு, ஔவையார்

—பெண்ணாவாள்

அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு

என்று பாடி முடித்ததாக ஒரு நிகழ்ச்சி உண்டு. அவ்வரலாறு எப்படியிருப்பினும், காசுக்காகப் புலமையை விற்கும் நிலையையும், பண்பாட்டிற்காகப் புலமையை வழங்கும் ஒரு நிலையையும், இது காட்டுகின்றது எனலாம்.

இனி ஔவையார் பாடலாக வழங்கும் பாடலகளால் அவர் உயர்ந்தகுறிக்கோளும் சமுதாய நோக்கும் இனிது விளங்குவதை ஒரு பாடலிற் காணலாம்.

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும் — சேரமான்
வாராய் என அழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்.

ஒரு நாட்டு மக்களின் வளத்திற்கும் வாழ்விற்கும் அவர் வாழும் நிலப்பகுதி பெரியகாரணமாகாது, அம்மக்களே காரணமாவார் என்னும் அரிய உண்மையை,

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே''

என்னும் புறநானூற்றுப் பாடல் அழகாகத் தெரிவிக்கிறது.

ஔவையாரின் ஒப்பற்ற தமிழ்ப் பணியினையும், உலகப் பொதுநலமாகிய பண்பாட்டினையும், எளிமை, அன்பு, அருள், தன்மான உணர்வு ஆகியவற்றையும், ஓரளவு தெரிந்த மக்கள், அரிதும் பெரிதுமான கருத்துக்களைக் கூறத்தக்கவர் ஔவையாரே என்று கருதி-ஆத்திசூடி-மூதுரை-நல்வழி, கல்வி ஒழுக்கம், அருந்தமிழ் மாலை, ஞானக் குறள்-அசதிக்கோவை முதலிய நூல்களையும், விநாயகரகவல், பந்தனந்தாதி முதலிய சமயநூல்களையும், பன்னிரு தனிப் பாடல்களையும் அவர் நிகழ்த்தியதாகக் கூறுவர்.

இங்ஙனம் சமுதாயப் பொதுவுடைமையாகத் தமிழ் வளர்த்துத் தன்னலமின்றி வாழ்ந்து, அரிய பலசெயல்களைச் செய்தவர் ஒரு பெண்பாற் புலவர் என்பதை நோக்கத் தமிழகத்து மகளிரின் மாண்பும் சிறப்பும் தெளிவாகப் புலப்படும். ஔவையார் கூறிய நெறியில் பொற்காலப் பொதுவுடைமை தமிழகத்தில் மீண்டும் மலர்வதாக.

# புறத்தூய்மை

டாக்டர் தே. வேணுகோபாலன்

இக் கட்டுரையாசிரியர் 15-7-1940இல் தஞ்சை மாவட்டத்தில் உள்ள உரத்தூரில் பிறந்தவர்; பொருளியல் துறையில் இரும்பு உத்தரங்களின் திறனறி முறையொன்றை ஆய்ந்து கண்டு டாக்டர் (Ph. D) பட்டம் பெற்றவர்; ஓராண்டு பொதுப் பணித்துறையில் இளநிலைப் பொறியாளராகப் பணிபுரிந்தவர்; பின்பு ஆசிரியர் பயிற்சி பெற்று, ஒன்பதாண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றிப் பத்தாண்டுகள் கோவை அரசு பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக இருந்து வருபவர்; பத்து முதுநிலைப் பொறியியல் மாணவர்க்கு ஆய்வு ஆலோசகராகவும், ஒரு டாக்டர் பட்ட ஆய்வுக்குத் தரமறி குழு உறுப்பினராகவும் இருப்பவர்; கட்டிடவியல் பற்றிய தமிழ்நூலை நுண்ணாய்வு செய்தவர்; பல மாடிக் கட்டிடங்கள். உயர்மட்ட நீர்த்தொட்டிகள் ஆகியவை பற்றிய துறைகளில் ஆலோசகராகப் பணிபுரிந்தவர்; பொறியியல் துறையில் மட்டுமன்றிக் கூட்டுறவுத் துறை, விடுதிப் பராமரிப்பு, கல்லூரித் தமிழ் மன்றம், இசை நாடகத் துறை ஆகியவற்றிலும் ஈடுபட்டுப் பணியாற்றியவர். 'கட்டிடங்களுக்கும் உணர்வு உண்டு' என்ற கோட்பாட்டில் ஆய்வு செய்து வருகிறார்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்.

—என்பது திருக்குறள். புறத்தூய்மையும் வாழ்க்கைக்கு வேண்டற்பாலது என்று இக் குறள் மூலம் உணரலாம்.

சமுதாய வாழ்க்கைக்குப் பொருள்களின் உற்பத்தி அவசியம். பொருட்களை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு இயக்கத்திலும், உற்பத்திப் பொருளை அடுத்து கழிவுப் பொருட்களும் உருவாகின்றன. இவற்றைச் சீர்ப்படுத்தி அப்புறப் படுத்தா விட்டால், இக் கழிவுப் பொருட்கள் புறத் தூய்மையைக் கெடுத்து, மனிதனுடைய உடல்நலம் மனநலம் இவை இரண்டிற்குமே கேடு விளைவிக்கும். இவற்றைப் புறத் தூய்மைக் கேடு என்று கூறலாம். இந்த புறத்தூய்மை பற்றிய அறிவியல், மருத்துவத் துறையும், பொறியியல் துறையும் இணைந்து செயல்படும் ஒரு துறையாகும். இதை Environmental Engineering என்று கூறுவார்கள். பொறியியற் துறையில் இதை ஒரு முக்கியமான அங்கமாகக் கருதி ஆராய்ச்சியாளர்கள் அதிக அளவு முயற்சியோடு ஆய்வுகள் நடத்தி வருகிறார்கள்.

1930 ஆம் ஆண்டு, பெல்ஜியத்தில், Meuse Valley என்னும் இடத்தில் ஏற்பட்ட 'Fog disastar'—அதாவது ''பனிமூட்ட அழிவு'' சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. மூன்றே நாட்களில் இவ்வூரில் சுமார் 60 பேர் திடீரென மாண்டனர். கால்நடை, பறவைகள், ஏன் எலிகளும் கூட இறந்தன. இதை ஆராய்ந்த விஞ்ஞானிகள், தொழிற் கூடங்களினின்று வெளியேறிய கந்தக வாயு ஒரு குறிப்பிட்ட பருவநிலையில் பனி மூட்டத்தோடு சேர்ந்து, காற்றைச் சுவாசிக்கத் தகுதியற்றதாக்கி விட்டது என்று முடிவு கூறினார்கள்.

நதியோரமுள்ள நகரங்களில், சில சமயத்தில் காமாலை என்று கூறப்படும் Jaundice வெகுவாகப் பரவிப் பல உயிர்களைக் கொள்ளை கொண்டதை நாம் அறிவோம். கழிவுநீரைச் சீர்படுத்தி ஓடும் நதிகளில் வெளியேற்றுவது, கழிவு நீர்ப்போக்கு முறையாகும். இந்த முறையில் கழிவு நீரிலுள்ள தொற்று நோய்க் கிருமிகள் கொல்லப்படாமல் விடுபடுமானால், ஆற்று நீரை அருந்துவோர் இக் கிருமிகள் மூலம் இந்நோய்க்கு ஆட்படுவார்கள். பெரும் பாலும் இதுபோன்ற புறத்தூய்மைக் கேடுகள் உயிருக்கு இன்னல் விளைவிக்கக்கூடிய வையாகும். மனிதர்களுக்கு மட்டுமன்றி நீரில் வாழும் உயிரினங்களுக்கும் அவை ஊறு செய்யும். சில நாட்களில் ஆற்றுநீரில் ஏராளமான மீன்கள் இறந்து மிதப்பதை நாம் பார்த்திருக்கலாம். நீர்வாழ் உயிர்களுக்கு தேவையான நீரில் கரைந்திருக்கும் பிராண வாயுவைக் கழிவுநீர் ஆக்கிரமித்துக் கொள்வதே, இத் தீங்கிற்குக் காரணம்.

சர்க்கரை ஆலைகள், தோல் பதனிடும் கூடங்கள் இவற்றின் சுற்றுப்புறங்களில் ஓர் துர்நாற்றம் அடிப்பதைச் சில சமயங்களில் நாம் உணர்ந்திருக்கிறோம். இந்தத் தொழிற் கூடங்களினின்று வெளியேறும் வாயுக்கள் காற்று மண்டலத்தோடு கலந்து சுவாசிப் பவர்களுக்குத் தூக்கமின்மை, பசியின்மை, மனச்சோர்வு ஆகியவை ஏற்படக் காரணமாகலாம். அதனாலேயே இதுபோன்ற ஆலைகளைக் குடியிருப்புப் பகுதிகளி னின்றும் ஒதுக்கலாகத் தூரத்தில் கட்டி இருப்பதைப் பார்க்கிறோம்.

மோட்டார், கார், பஸ் இவற்றினின்று வெளியேறும் கரியமிலவாயு (Corbon-di-Oxide) சுவாசிக்கும் காற்றில் பத்தாயிரத்துக்கு மூன்று பங்கு இருந்தாலே உயிருக்கு ஊறு நேரலாம். குளிர் காலத்தில் ஒரு ஊரில், புகை போக்கி இல்லாத ஒரு அறையில், கணப்புக்காக நிலக்கரி அடுப்பை அருகில் வைத்துக் கொண்டு உறங்கிய இரு சிறுவர்கள், காலையில் இறந்து காணப் பட்டார்கள். இதைப் போலவே Nitrogen Oxide, Ozone, Sulphur di-oxide ஆகியவை ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் காற்றில் இருந்தால், சுவாசிப்போர்களின் சீர் குலையும், உயிருக்கும் ஆபத்து நேரிடலாம்.

சுற்றுப்புறக் காற்றில் புகை மிகுந்து இருந்தால், பார்வை மங்கலாகத் தெரியும். இது சாலை மற்றும் விமானப் போக்கு வரத்தைப் பாதிக்கக் கூடாது. புகை மிகுந்த காற்று சூரிய ஒளியை முழுவதும் உடலில் படாமல் தடுக்கிறது. இதனால் சீதள நாட்டில் வாழும் சிறுவர்களுக்கு Rickets என்னும் வியாதி பரவக்கூடும். இவர்களது எலும்புகள் கோணலாக வளர்ந்து கூன் முதுகு ஏற்படலாம். பற்கள் சம்பந்தமான வியாதிகளும் உண்டாகலாம்.

இதுவரை கூறப்பட்ட புறத்தூய்மைக் கேடுகள் அசுத்தமான காற்றாலும். தூய்மையற்ற குடிநீராலும் ஏற்படக் கூடியவை. புறத்தேயுள்ள மற்றுமொரு கேடு மிகையான ஒலியாகும். இதை Noise Pollution என்று கூறலாம். ஒலி மெதுவாகவும், இதமாகவும் இருந்தால் ரசிக்கக்கூடியதாகும். சிறப்பான முறையோடு ஒலிகள் தொகுக்கப் படும்போது அது இசையாகிறது. அதையே காது செவிடுபடும்படி இசைத்தால் அது கூச்சலாகவோ, கூக்குரலாகவோ மாறிவிடுகிறது. நரம்புகளை முறுக்கேற்றி, தலைவலி முதலியன ஏற்படக் காரணமாகிறது. சாலைகளில் போகும் பல்வேறு ஊர்திகளின் ஒலிகள் மிகைப்பட்டால் அருகாமையில் உள்ளோர்களின் தூக்கத்

தைக் கெடுக்கும். நாளடைவில் செவிப் புறைகள் பழுதுபடக் காரணமாகலாம். மன அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் எந்த ஒலி யையும் Noise Pollute என்று கூறுவார்கள்.

இதனால் கவனக்கூர்மை பழுதுபடும். சிந்தனைத் தெளிவு பாதிக்கப்படும். உரக்கப் படிக்கும் மாணவர்களைவிட அமைதியாகப் படிப்பவர்கள் விரைவாகப் படிக்க முடிகிறது என்று பேராசிரியர் Morgan கூறுகிறார். உரக்கப் படிப்பதால் மூச்சை இழுத்துவிட வேண்டியிருக்கிறது. இதனால் படிப்பின் வேகம் தடைப்படு கிறது. திடீரென உருவாகும் வெடிச் சத்தம் சிலரது உள்ளத்தை உலுக்கி ஒரு பயத்தை ஏற்படுத்துகிறது. அப்போது இதய ஒட்டம் சீர் குலைகிறது. நாடித் துடிப்பும், இரத்த அழுத்தமும் உயருகின்றன. தசைநார்கள் முறுக்கப்படுகின்றன. ஆகவே, இத்தகைய Noise Pollutions விரும்பத்தக்கதல்ல.

அணுவைப் பிளந்து ஆக்க சக்தியை உருவாக்கும் இக்காலத்தில் கதிரியக்க அணுக் கள் (Radio active elements) காற்றில் பரவு கின்றன. இவை உடலில் பட்டால் தோல் சம்பந்தமான வியாதிகள் உருவாகலாம். சுவாசத்தின் மூலம்மூச்சுக் குழாயைப் பாதிக் கலாம். மகப்பேறு காலத்தில் சிசுவின் வளர்ச்சியைப் பலவிதங்களில் சீர்குலைக் கலாம்.

இனி, இப்புறத்தூய்மைக் கேடுகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பற்றிச் சற்றுச் சிந்திப்போம். திறந்த ஆகாய வெளி யும், ஓடும் நீரும் தம்மைத்தாமே ஓரளவு தூய்மைப் படுத்திக் கொள்ளத் திறம் படைத்தவை. இயற்கை மனிதனுக்கு அளித்த பல நன்மைகளில் இதுவும் ஒன்று. ஆனால் வரைமுறையின்றி நாம் இவற்றை அசுத்தப்படுதினால் விளையும் கேடுகளுக்கு நாமே பொறுப்பாவோம். வேண்டத்தகாத வாயுக்கள் தொழிற்சாலைகளில் உருவாகு மானால், அதுபோன்ற தொழிற்சாலை களைப் புறநகர்ப்பகுதிகளில் அமைக்கலாம். இடையே உள்ள நிலப்பகுதியை மழைக் கால நீர் தேங்கும் ஏரிகளாகவோ, விமான தளங்களாகவோ மாற்றி, குடியிருப்புப் பகுதிகளில்உள்ள காற்றை ஓரளவு தூய்மை யாக வைத்துக் கொள்ளலாம். புகை போக்கிகள் உள்ள தொழிற்சாலைகளை நெருக்கமாக அமைக்காமல், பரவலாக அமைத்தால், காற்றில் உள்ள தூய்மை கெடுக்கும் வாயுக்களின் பங்கைக் கணிச மாகக் குறைக்கலாம்.

குடி நீரின் தூய்மையைக் கட்டுப்படுத்த, அவ்வப்போது ஆற்றிலிருந்தோ, குழாயி லிருந்தோ மாதிரித் தண்ணீரை எடுத்து, அ தை ரசாயனச் சோதனை செய்தல் வேண்டும். நீரில் கரைந்துள்ள பொருட்கள், கரையாத பொருட்கள் இவை எத்தனை அளவு இருந்தால் பருகத் தகுதியுடையது என்று பொதுநல ஆராய்ச்சி வல்லுனர்கள் வரையறுத்திருக்கிறார்கள். அதன்படியின்றி நோய் பரப்பும் கிருமிகள் இருந்தால் உடனே அ தன் மூ ல க் காரணத்தை அ றி த ல் வேண்டும். அ து போ ன் ற நேரங்களில் நீரைக் கொதிக்கவைத்து, குளிரவைத்துப் பிறகு குடிப்பதை அனைவரும் கடைப் பிடித்தல் வேண்டும். அதுபோலவே, சழிவு நீரை ஆறு முதலிய ஓடும் நீரில் வெளியேற் றுவதற்கு முன்பு கழிவுநீர் சீர்செய்யப் படல் வேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் இதற்காகவே ஒரு செயற்கூடம் (Sevage Treatment Plant) உள்ளது. இங்கு Alum என்று கூறப்படும் அலுமினியம் சல்பேட், Iron Sulphate, Feric Chloride ஆகிய மருந்து களில் ஏதாவது ஒன்றைக் கழிவு நீரோடு கலந்து, நீரிலுள்ள கேடு விளைவிக்கும் பொ ரு ட் க ளைப் பிரித்தெடுக்கிறார்கள். நீச்சல் குளம் போன்ற இடங்களில் Chlorination மூலம் நீரைத் தூய்மையாக்கலாம். மற்றும் அசுத்த நீரை நுண் துகள்களாகக் காற்றில் சிதறிவிட்டால்,அவற்றில் பிராண வாயு கலந்து நீர் தூய்மை அடைகிறது. அதனாலேயே நீ ச் ச ல் கு ள ங் க ளி ல் செயற்கை நீரூற்றுகள் இருப்பதைப் பார்க்க லாம். நீரில் கரைந்துள்ள கதிரியக்கப் பொருட்களைக் காய்ச்சி வடித்தல், மருந்து கலந்து கூழாக்கி இறுத்தல், மணலில் வடி கட்டுதல், மின்சாரம் பாய்ச்சுதல், வேறு படுத்துதல் ஆகிய முறைகளில் வெளியேற்ற லாம்.

அடுத்து தோல்பதனிடுதல், சர்க்கரை உற்பத்தி செய்தல் ஆகிய தொழிற்கூடங்கள் நடத்துவோர், அங்கிருந்து வெளியேற்றப் படும் பொருட்களை எவ்வாறு சீர்செய்ய வேண்டும் என்று அருகாமையிலுள்ள பொதுநலப் பொறியியல் வல்லுநர் இடம் ஆலோசனை பெறலாம். ஒலிபெருக்கி உபயோகிப்பவர்கள், பலவித வாகனங்கள் ஓட்டுவோர்கள், மற்றவர்களின் அமைதிக்கு நாம் ஊறு விளைத்தல் வேண்டாம் என்ற, பரந்த மனப்பான்மையோடு, சாலையில் ஒலிபற்றிய விதிகளைக் கடைப்பிடித்தால், அனைவரும் மன அமைதியோடும், கவனத் தோடும் தத்தம் வேலைகளைச் செய்யலாம்.

இயற்கை நமக்கு அளித்த செல்வங்கள் ஏராளம். உண்ணும் உணவும், பருகும் நீரும், சுவாசிக்கும் காற்றும் அப்பழுக்கு இன்றி இயற்கையால் நமக்குக் கொடுக்கப் பட்டுள்ளன. நாகரீக வேகத்தில் நாம் அகத் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்வதோடு புறத்தூய்மையையும் பாதுகாக்கக் கடமைப் பட்டுள்ளோம். அறிவியல் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை முறைப் படி பயன்படுத்தினால் புறத்தூய்மைக் கேடுகளைக் கட்டுப்படுத்திய மகிழ்வோடு வாழலாம். மற்றவர்களையும் மகிழ்வோடு வாழவிட்ட பெருமை நமக்கு உரித் தாகட்டும்.

# திருவள்ளுவரிடம் காணும் 'உலகம் என்னும் உணர்வு'

டாக்டர் கு. மோகனராசு,
எம்.ஏ., பிஎச்.டி.

டாக்டர் கு. மோகனராசு அவர்கள் 1947ஆம் ஆண்டு, சென்னை இராயபுரத்தில் பிறந்தவர். திருக்குறளில் மரபுகள், தொல்காப்பிய விருந்து, ஒப்புமை ஒளியில் வள்ளுவம், முதலிய பன்னிரண்டுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். 75-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வரைந்தவர். ''ஒற்றுமை ஒளி'' என்னும் இலக்கியத் திங்கள் இதழின் சிறப்பாசிரியர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வு மையத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

## உலக அறிவு

அறிவியலில் இன்று காணும் வேகமான வளர்ச்சி, உலகம் முழுவதையும் விரைந்து சுற்றிவர வாய்ப்பாக அமைந்துள்ளது. உலகில் ஒரு மூலையில் நடைபெறும் செய்தியைப் பல்வேறு கருவிகளின் வழியாக நாம் உடனுக்குடன் பெரிதும் அறிந்து கொள்ளவும் வாய்ப்புள்ளது. அறிவியல் நுட்பங்கள் பெருகப் பெருக நாம் வாழும் இவ்வுலகைப் பற்றிய நுட்ப இயல்புகளையும் பல்வேறு பகுப்புகளாகப் பகுத்து அறிய வாய்ப்புகள் பெருகி வருகின்றன. இவ்வுலக உருண்டைக்கு வெகு தொலைவில் இருந்துகொண்டே இதன் முழு அமைப்பையும் ஆராய இன்றைய மனிதர்களுக்கு வாய்ப்புகள் வாய்த்துள்ளன.

வள்ளுவர் வாழ்ந்த காலம் அறிவியலில் இத்துணை வளர்ச்சி பெறாத காலம். உலகம் முழுவதையும் தெளிவாக அன்றைய மக்கள் அறிந்திருப்பார்களா என்பதே பெரிதும் ஐயத்திற்குரிய ஒன்றாகும். அவர்கள் அறிந்திருக்கக் கூடியவெல்லாம் அவர்கள் வாழ்ந்த காலத்திலிருந்த உலகின் சில பகுதிகளைப் பற்றியும், ஒருசில மனித

இனங்களைப் பற்றியுமே எளத் துணிந் துரைக்கலாம்.

ஒருசில நிலப்பகுதிகளின் இயல்பு களையும், ஒருசில இன மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்டைத் தமிழ் மக்கள் அறிந்திருந்தனரே யாயினும், இவ் வுலக உருண்டையில் ஒரு பகுதி கடலாக வும், மற்றொருபகுதி நிலமாகவும் விளங்கிய தையும், நிலப்பகுதி குறைந்து கடற்பகுதி மிக்கு விளங்கியதையும், நிலப்பகுதிகள் கடலால் சூழப்பட்டிருந்தன என்பதையும் அவர்கள் தெளிவாக அறிந்திருந்தனர். இதனைப் பின்வரும் சங்க இலக்கியத் தொடர்கள் உறுதிப்படுத்துகின்றன.

கடல்சூழ் மண்டிலம் -குறுந் 137;7

இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து -முருகு 293

புலவுக் கடல் உடுத்த,..

மலர்தலை உலகம் -பெரும்.409,410

விரிகடல் வேலி வியலகம் -சிறுபா 114

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகம் -குறுந். 41:11

வள்ளுவர் இவ்வுலகம் கடலால் சூழப் பட்டது என்பதைத் வெளிவாக அறிந் திருந்தார் என்பதற்கு,

விரிநீர் வியனுலகம் -குறள் 13

மாறாநீர் வையம் ,, 710

என வரும் தொடர்கள் சான்றுகளா கின்றன. மேலும்,

வளி வழங்கும் மல்லன்மா ஞாலம் -குறள் 245

ஈர்ங்கண்மா ஞாலம் ,, 1058

என வள்ளுவர் வழங்கும் தொடர்களும், இந்த உலகம் முழுமைக்கும் உரிய ஒருசில இயல்புகளை வள்ளுவர் அறிந்திருந்தார் என்பதற்குச் சான்றுகளாய் அமைகின்றன.

## மூவேறு உலகங்கள்

தேவர்கள் வாழும் ஓர் உலகிருப்பதாகக் கொண்டு, அதனை மேலுலகம் என்று வழங்குவர். இதனையே வானோர் உலகம், வானுலகம், புத்தேளுலகம் என வள்ளுவர் வழங்குகின்றார். நரகர்கள் வாழும் ஓர் உலகிருப்பதாகக் கொண்டு அதனைக் கீழுலகம் என்று வழங்குவர். இதனையே நரகம், அளறு என்று மறுபெயரிட்டும் அழைப்பர். மக்கள் வாழும் உலகினை உலகம், ஞாலம், வையம், நிலம், மாநிலம் என்னும் பல்வேறு பெயர்களால் வழங்குவர்.

மேலுலகம், உலகம், கீழுலகம் என மூன்றாகப் பாகுபடுத்திக் காணும் போக் கினால், நாம் வாழும் இவ்வுலகு முழு வதையுமே ஒரு கூறாகக் கருதியிருக் கின்றனர் என்பது தெளிவு. இந்நிலை வள்ளுவத்திலும் தெளிவாகக் காணப் படுகின்றது.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்ற லரிது. -குறள் 101

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே ஒப்புரவின் நல்ல பிற -குறள் 213

அருளிலார்க்(கு) அவ்வுலகம் இல்லை பொரு ளில்லார்க்(கு) இவ்வுலகம் இல்லாகி யாங்கு -குறள் 247

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து -குறள்-353

என்னும் குறள்களில் வரும் அவ்வுலகம், இவ்வுலகம், வையம், வானம், வையகம் வானகம், புத்தேளுலகம், ஈண்டு என்னும் இணைகள், வள்ளுவருக்கு இவ்வுலகம் முழுவதையும் ஒருசேரக் கருதும் எண்ணம் இருந்தமையைத் தெளிவாக விளக்கு கின்றன.

மேற்சுட்டிய கருத்துக்களை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றபொழுது, இவ்வுலகம் முழுவதையும் சுட்டும் குறியீடுகளாக உலகம், ஞாலம், வையம் ஆகிய சொற் களை வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவு.

அதே நேரத்தில், இச்சொற்கள், நில வுலகின் ஒரு பகுதியைக் குறிப்பிடும் குறியீடு களாகவும், திருக்குறளில் ஒருசில இடங் களில் வழங்கப்பட்டுள்ளன என்பதை மறுப் பதற்கும் இல்லை. சான்றுகளாக,

செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு -குறள் 389

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு -குறள் 544

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் -குறள் 547

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் -குறள் 386

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு -குறள் 452

என வரும் குறள்களைக் கொள்ளலாம். எனினும், மேற்சுட்டிய சொற்குறியீடுகள் உலகம் முழுமையும் உள்ளடக்கியனவாகவே திருக்குறளில் பெரும்பாலான இடங்களில் வழங்கப்பட்டுள்ளன.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்(து)
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று -குறள்-22

என்னும் குறளில், எண்ணிக்கை இன்ன தென எணணிக் கணக்கிட முடியாப் பேரெல்லைக்கு, ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் மனித இனம் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரையிலும் இறந்துபட்ட மனிதர்களின் எண்ணிககையை எல்லை யாகக் கொள்வதிலும், உலகம் முழுவதிலும் மனிதன் தோன்றிய காலம் தொட்டு இன்று வரையிலும் இறந்துபட்டவர் களின் எண்ணிககையை எல்லையாகக் கொள்வதே பேரெல்லையாகவும், பெரும் பொருத்தமாகவும், கருத்து நயம்படவும் அமைந்திருத்தல் தெளிவு. இவ்வாறு ஒவ்வொரு வகையிலும் பேரெல்லையைக் கருதும்பொழுது, வள்ளுவர் பரந்துபட்ட இவ்வுலகம் முழுவதையுமே கருத்தில் கொள வதை,

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது -குறள் 102

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் ,, 484

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர் ,, 485

என்னும் குறள்கள் வழியும் தெளிவாக அறிய முடிகின்றது.

சில பொதுவான-இயல்பான செய்தி களைக் கூறும்பொழுது, உலகம் முழுவதை யும் ஒருங்கிணைத்த நிலையிலேயே வள்ளுவர் தம் கருத்துகளை வெளியிடு வதை,

வான்நின்று உலகம் வழங்கி வருதலால் -குறள் 11

நீர்இன்று அமையா(து) உலகெனின் ,, 20

மாரிமாட்டு,
என்ஆற்றுங் கொல்லோ உலகு ,, 211

ஒன்றா உலகத்து ,, 233

தெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு -குறள் 336

வானோக்கி வாழும் உலகெல்லாம் ,, 542

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே ,, 557

என வரும் பொருளுரைகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

''சோத்துக்குத் தெண்டம், பூமிக்குப் பாரம்' எனபது பேச்சு வழக்கிலான பழமொழி; ஏச்சு மொழி. இப்பழமொழி யில் 'பூமி' என்பதன் பொருணமை கருதத் தக்க ஒன்றாகும். ஒரு பொருளில் எந்த வோர் இடததில் அழுத்தம் ஏற்படினும் அந்த அழுத்தம் அந்தப் பொருள்மீது முழு வதும் பாதிப்பை ஏற்படுத்துவது இயல்பு; இயற்கை. அதுபோல் உலகத்தில் எந்த வோர் மூலையில் கூடுதலாக வொரு மனிதன் தோன்றினும், அதனால் இவ் வுலகின் தாங்கும் ஆறறல், அணுவளவாகி லும் கூடுதலாகின்றது. இக்கருத்தையே, 'பூமிக்குப் பாரம்' என்னும் தொடர் வெளிப்படுத்துகின்றது. ஆகவே மேற் சுட்டிய பழமொழியில் உள்ள பூமி என்னும் சொல், இவ்வுருண்டையான உலகம் முழு வதையும் குறிக்கும் சொல் என்பதில் ஐயப் பாடில்லை.

'பூமிக்குப் பாரம்' என்னும் தொட ரையே, 'நிலத்திற்குப் பொறை' என்னும் தொடராலும், அப்பொருள் தரும் பிற தொடராலும், வள்ளுவர் வழங்கியிருப்ப தைக் குறளில் ஒரு சில இடங்களில் காண முடிகினறது. சான்றுகளாக,

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம்
புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை -குறள் 189

இசையிலா, யாக்கை பொறுத்த நிலம் ,, 239

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்ல(து)
இல்லை நிலக்குப் பொறை -குறள் 570

கண்ணோட்டத் துள்ள(து) உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை -குறள் 572

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை -குறள் 990

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை ,, 1003

என வரும் குறள்களைக் கொள்ளலாம்.

மேற்சுட்டிய கருத்துகள் எல்லாம் வள்ளுவர் உலகம் முழுவதையும் தம் உணர்வில்/உள்ளத்தில் கொண்டமைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

## உலக ஒருமைப்பாடு

உலகம் என்னும் உணர்வு வள்ளுவரின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்த காரணத்தால், அவர் உலக மனித இன ஒருமைப்பாடு-உலக உயிரின ஒருமைப்பாடு காண வேண்டுமெனப் பெருமுனைப்போடு இருந்து, தம் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை வள்ளுவத்தில் தெளிவாகக் காண முடிகின்றது. சமய ஒருமைப்பாட்டை உருவாக்குவதன் வழியும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் உயரிய சிந்தனையை மனித மனத்தில் ஊன்றுவதன் வழியும், எல்லா மனிதர்க்கும் எல்லா உரிமைகளும் வழங்குவதன் வழியும். ஒன்றி வாழ்வதே வாழ்வு என்னும் உயர் நெறிக்கு மக்களை ஆற்றுப்படுத்துவதின் வழியும், நல்லன மதித்தல், உலகம் பழித்தன நீக்கல், உலகம் போற்றுவன பேணல் ஆகிய எண்ணங்களை ஏற்பிக்கச் செய்வதன் வழியும், பிற வகைகளாலும் உலகில் ஒருங்கிணைந்த மனித இன ஒருமைப்பாட்டை உண்டாக்க இயலும் என வள்ளுவர் கருதுவதை அறிய முடிகின்றது.

## சமய ஒருமைப்பாடு

உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்கள் பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களாக விளங்கியதையும், அச்சமயங்களின் அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் மன வேறுபாடு கொண்டு சொல்லளவிலும் போரிட்டுப் பிரிந்து நின்ற அவலநிலையையும் கண்ட திருவள்ளுவர், சமய வேறுபாடு அற்ற ஓர் ஒருமைப்பாட்டு உணர்வை-சமய ஒருநெறிப் பாதையை — ஒருங்கிணைப்புப் பாலத்தை உருவாக்கவேண்டும் என எண்ணியதைத் திருக்குறள் தெளிவாகக் காட்டுகின்றது. சமயங்கள் பெரும்பான்மையும் ஏற்றுக் கொண்ட, நல்லனவாகக் கருதிய மெய்ப் பொருள் சிந்தனைகளையும், சமுதாயத்திற்குப் பயன்படும் எனக் கருதத்தக்க அளவில் குறிப்பிட்ட சில சமயங்களில் மட்டுமே விளங்கிய சமயக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டுள்ளார்: அவற்றைத் 'தன்வயம்' ஆக்கி உள்ளார். குறிப்பாக வள்ளுவர் காணும்/காட்டும் கடவுள், வள்ளுவரின் சமய ஒருமைப்பாடுணர்விற்கு ஓர் அரிய/பெரிய சான்றாதல் தெளிவு.

சமயங்களில் காட்டும் மாறுபட்ட பல்வேறு சிந்தனைகளுள் தம் கடவுள் சிந்தனையைச் சிக்கவிடாமல் பார்த்துக் கொள்வதில் வள்ளுவர் மிக விழிப்பாக இருந்துள்ளார். மனிதன் அடையத்தக்க-அடைய வேண்டும் எனச் சான்றோர்களால் எதிர் பார்க்கப்பட்ட குறிக்கோளின் முழுமை வடிவினராக, மீதுயர் குறிக்கோள் வடிவினராக வள்ளுவர் இறைவனைக் காட்ட முனைகின்றார். அதாவது, ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், இறைவன், அறவாழி அந்தணன் என்னும் எண்வகைப்பண்புகளை உள்ளடக்கியவனாக - எண்குணத்தானாக வள்ளுவர் இறைவனைக் காணுகின்றார்; காட்டுகின்றார். இப்பண்புகள் அனைத்தும் பொதுமை நோக்கோடு அமைவதால் உலகச் சமயத்தார் வணங்கும் எல்லாக்

கடவுளர்க்கும் பொருந்துவதில் வியப் பொன்றும் இல்லை.

மேலும், இறைவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும் என்பதை, 'ஆதிபகவன் முதற்றே உலகு' எனமுதற் குறளில் அழுத்த மாக வலியுறுத்தியும் காட்டுகின்றார். இதன்வழி உலகம் அனைத்தும் ஓரே கடவுளை வழிபடும் சீரிய நெறிக்கு-ஒருமைப்பாட்டு நெறிக்கு ஒருங்கிணைதல் வேண்டும் எனத் தெளிவாக-உறுதியாக எதிர்பார்க்கின்றார்; இதன்வழி ஒருங் கிணைந்ததோர் உலக சமய ஒருமைப் பாட்டை வள்ளுவர் எதிர்பார்க்கின்றார் என்பது தெளிவு.

## உயிரின ஒருமைப்பாடு

உலகத்து உயிரினங்களை ஓரறிவு முதல் ஆறறிவு முடிய அவ்வவற்றின் புலன் எண்ணிக்கைக்கு ஏற்பப் பாகுபடுத்திக் காண்பது இன்றைக்கு மட்டுமன்று தொல் காப்பியர் வாழ்ந்த அன்றைக்கே மரபாக இருந்துள்ளது. இவ்வேறுபாடு புலன்களின் எண்ணிக்கை அடிப்படையில் அமைந்தது மட்டுமே. எனினும், உயிர்கள் அனைத்தை யும் எவ்வகை வேறுபாடும் கருதாமல் ஒன்றெனக் கருதுவதே அருள்நெறி; இயற்கை வழிநெறி. இந்த அருள்நெறிக்கு உரனூட்ட எழுந்ததே வள்ளுவம் எனலாம்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை -குறள் 322

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் -குறள் 260

என்னும் குறள்களில், இந்த அருள்நெறியை விரிந்த நிலையில் தெளிவாகக் காண முடி கின்றது. இவ்விரிவின் விரிவாக அமைவதே,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் -குறள் 972

என்னும் செந்நெறியாகும். இத்தொடர் உயிரின ஒருமைப்பாட்டிற்கே வழி வகுப்ப தாக அமைதல் தெளிவு. மனித இன ஒருமைப்பாடு இதனுள் அடக்கமே. இதனால் வள்ளுவர் உலக மனித இன ஒருமைப்பாட்டையும் அதன் விரிவான உலக உயிரின ஒருமைப்பாட்டையும் கருதுகின்றார் என்பது வெள்ளிடை மலை.

## சமவுரிமையும் ஒருமைப்பாடும்

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனக் கூறி மனித இன ஒருமைப்பாட்டிற்கு ஆற்றுப்படுத்தும் வள்ளுவர், அவ் வொருமைப்பாட்டை நோக்கிச் செல்ல வேண்டுமானால் மனிதவுரிமைகள் மதிக்கப் பட வேண்டும், எல்லார்க்கும் எல்லா உரிமையும் சமமாக வழங்கப்பட வேண்டும் எனக் கூறுவதை-குறிப்பாக,

வழிபாட்டு உரிமை
கல்வி கற்கும் உரிமை
செல்வம் ஈட்டும்/நுகரும் உரிமை
புகழ் ஈட்டும் உரிமை
இன்பம் நுகரும் உரிமை

முதலியன உலகமக்கள் அனைவருக்கும் சம நிலையில் வழங்கப்பட வேண்டும் எனக் கருதுவதைத் திருக்குறள் தெளிவாகக் காட்டுகின்றது.

## வழிபாட்டு உரிமை

இறைவனை உலகமக்கள் அனைவர்க் கும் உரியவனாகவும், அவன் நெறி நிற்பதே கற்றதன் பயனாகவும் வரையறுத்து உரைக் கும் திருவள்ளுவர், தாம் காட்டும் இறைவனை வழிபடுதற்குரியார் யார் யார் என்பதை விளக்குகையில்,

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் -குறள் 3
வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார் -குறள் 4
இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் ,, 5
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் -குறள் 6
தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார் -குறள் 7
அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார் ,, 8

ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். இத் தொடர்கள் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு நிலையைக் குறிப்பிடும் தொடர்களாக அமைகின்றனவே ஒழிய, எந்தவொரு குறிப்பிட்ட மனிதப் பிரிவை யும் சுட்டுவனவாக அமையவில்லை என்பது தெளிவு.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு -குறள் 350

என்பனபோல வரும் ஒரு சில குறள்களிலும் இவ்வாறே எந்தவொரு குறிப்பிட்ட மனிதப் பிரிவையும் சுட்டாமல் பொதுமையாகவே சுட்டிச் செல்கின்றார். இதனால் இறைமை நம்பிக்கை உடைய/உணர்வுடைய எல்லா மனிதர்களும், இறைவன் தொடர்பை நாடும் எல்லா மனிதர்களும், அவ்விறைவனை வழிபடுவதற்கு/அவனுடைய நெறி செல்வதற்கு உரியர் என்பது பெறப்படுகின்றது. இவ்வகையில் இறைவன் ஒருவன் உண்டு என்பதை நம்பும் எல்லாப் பிரிவு மக்களுமே அணுவளவும் வேறுபாடு அற்ற நிலையில் இறைவனை வழிபடுதற்கு உரியர் என நெறி வகுத்து, அந்நெறிக்கு மக்களினத்தை ஆற்றுப்படுத்துவதன் வழி மனித இன ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கின்றார் வள்ளுவர்.

## கல்வி கற்கும் உரிமை

கற்றதன் வழித்தான அறிவைப் பெறல், சமுதாயத்திற்கு — உலகத்திற்கு நன்மை பயக்கும் நற்பண்புகளை வளர்த்தல், கற்றவர்களுக்குச் சமுதாய அரங்கில் நன்மதிப்பை உருவாக்கித் தருதல், உலகளாவிய விரிந்து பரந்த பார்வையை வளர்த்தல், உலக உயிர்கள் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் மனப்பக்குவத்தை உருவாக்கல், 'தன்'னை உணர வழிகாட்டல், மெய்ப்பொருள் காணத் தூண்டுதல், இறைவனை—இறைநெறியை அடைய ஆற்றுப்படுத்துதல் முதலியவற்றைக் கல்வியின் நோக்குகளாக வள்ளுவர் வரையறுத்துரைத்துள்ளார். இந் நோக்குகள் எல்லா வகைப் பிரிவினர்க்கும் உரிய பொதுமை நோக்குகள் என்பதில் ஐயப்பாடில்லை. உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதருமே தம் முயற்சியினால் இந் நோக்குகளை அடைய முடியும்.

கல்வி கல்லாதவர்களை விலங்குகள் என்றும், கடையர்கள் என்றும், அவர்களுக்கு கண், வாய், செவி என்னும் உறுப்புகள் இருந்தும் அவற்றால் எவ்வகைப் பயனும் இல்லை என்றும் வள்ளுவர் வரையறுத்து உரைப்பதனால், கல்லாதார்யாராயினும் அவர் மனிதரல்லர் என்பது வள்ளுவர் கருத்தாதல் தெளிவு. இதனால், மனிதன் என்ற அடிப்படைத் தகுதியையே ஒருவன் பெற வேண்டுமானால் அவன் கற்றவனாக இருத்தல் வேண்டும் என்பது வள்ளுவர் துணிபாகின்றது. எனவே, உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதருமே கல்வி கற்க வேண்டும் என வள்ளுவர். எதிர்பார்ப்பதை அறிய முடிகின்றது.

மேலும், கல்வி கற்றற்கு உரியார் யார் யார் என்பதைக் குறிப்பிடும் பொழுது 'வாழும் உயிர்', 'மாந்தர்', 'ஒருவன்' என்பன போலும் தொடர்களையும் சொற்களையுமே பயன்படுத்துகின்றார்; இதனாலும் அவர், கல்வியை எல்லார்க்கும் உரித்தாக்க வேண்டும் என விழையும் விழைவு தெளிவாகின்றது. அன்றியும் கருத்து வெளிப்பாட்டு நிலைகளிலும் 'எல்லார்க்கும் கல்வி' என்னும் கோட்பாட்டையே அவர் வலியுறுத்துவது புலனாகின்றது.

இவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து நோக்கும்பொழுது, மனிதராகப் பிறந்தார் எல்லாரும் கல்வி கற்க வேண்டும்; அவர்கள் கல்வி கற்பதற்குரிய எல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என வள்ளுவர் எதிர்பார்ப்பதை உய்த்துணர முடிகின்றது. கல்வியினால் மனம் பண்பட்டு விரிவடையும்; உலக உறவுக்கு வழி வகுக்கும். ஆதலின், எல்லார்க்கும் கல்வியை வழங்குவதன் வாயிலாக உலகில் மனித இன ஒருமைப்பாட்டை வள்ளுவர் நிலைநாட்ட விரும்புகிறார் என்பது தெளிவாகின்றது.

## செல்வம் ஈட்டும்/நுகரும் உரிமை

இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருளே அடிப்படை என்பதை மிகத் தெளிவாக அறிந்தவர் வள்ளுவர் என்பதை,

பொருளில்லார்க் கிவ்வுலகம் இல் -குறள் 247

என்னும் தொடர் தெளிவாகக் காட்டுகின்றது. அதனாலேயே அவர் 'செய்க

பொருளை' (குறள்-759) என ஆணையிடு வதையும் காண்கிறோம்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் தம்முயற்சியான் முயன்று பொருளீட்ட வேண்டும் என்பதைக் கூறி, அப்பொருளை எவ்வெவ்வகையான் எல்லாம் பெருக்கிக் கொள்ளலாம் என்பதையும் வள்ளுவர் தம் குறளில் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுச் செல்கின்றார். அவ்வாறு குறிப்பிடுகையில் பொருள் ஈட்டும் உரிமை இன்னின்னார்க்கே உரியது என ஒரு குறிப்பிட்ட நிலையில் எங்குமே சுட்டாமல், பொருள் ஈட்டும் வழி களை எல்லார்க்கும் பொதுமை ஆக்கியே குறித்துள்ளார். இதனால் பொருள் ஈட்டும் உரிமை எல்லா மனிதர்க்கும் உரியது என்றும், அவரவர் நோக்கில் (அறநெறி பிறழா நிலையில்) பொருள் ஈட்டும் உரிமையைச் சமுதாயம் ஒவ்வொரு மனிதர்க்கும் வழங்க வேண்டும் என்றும் வள்ளுவர் கருதுவதையும் குறளின் வழி உய்த்துணர முடிகின்றது.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதரின் உரிமைகளையும் பிறர் மதிக்க வேண்டும் என வள்ளுவர் எதிர்பார்க்கின்றார். அதனால் ஈட்டிய செல்வத்தின் பயனைப் பல்வேறு வகைகளில் நல்வழிகளில் நுகரும் உரிமையை உலகம் ஒவ்வொரு மனிதருக்கும் வழங்க வேண்டும் என வள்ளுவர் எதிர் பார்ப்பது புலனாகின்றது. இத்தகைய மதிப்பின் வழியாக கள்ளாமை, வெஃகாமை ஆகிய பண்புகள் செழித்து, மனித உறவுகள் கொழித்து வளர வாய்ப்புகள் உருவா கின்றன. ஆக, இவ்வகையிலும் மனித உறவுக்கு வழிகாட்டி, மனித இன ஒருமைப் பாட்டிற்கு வலிமையூட்டுகின்றார் வள்ளுவர் என்பது தெளிவாகின்றது.

## புகழ் ஈட்டும் உரிமை

செல்வத்தைத் தக்க முறையில் செல விடுவதனானும், அறநெறிப் பிறழாமை யானும், பிற வகையானும் ஒருவனுக்குப் புகழ் வாய்க்கின்றது. நிலையற்ற இவ்வுலகில் நிலையாக நிற்கத் தக்கது இப்புகழ் ஒன்று தான் என்பது வள்ளுவர் கருத்து. இதனை,

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில் -குறள் 233

என்னும் குறளின் வழியே தெளிவாக அறிய முடிகின்றது.

புகழினைப் பெறுதற்கான வழிகள் இருந்தும், அதனைப் பெறாது வீணே வாழ்வது வாழ்வாகாது என்பதை வள்ளுவர் கீழ்வரும் குறள்களால் தெளிவு படுத்து கின்றார் :

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு -குறள் 231

வசையென்ப வையத்தார்க் கெல்லாம்
இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின் -குறள் 238

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. ,, 1003

இவற்றால், உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் புகழ் பெற்று வாழ்தல் வேண்டு மென வள்ளுவர் எதிர்பார்ப்பது புலனா கின்றது. இதனை,

தோன்றின் புகழொடு தோன்றுக -குறள் 236

என்னும் வள்ளுவர் வாய்மொழியும் வலியுறுத்துகின்றது. இங்கும் எவ்விதப் பாகுபாடும் கருதாமல் பொதுமை நிலை யிலேயே வள்ளுவர் தம் கருத்துக்களை உரைத்துள்ளார். புகழ் நாட்டம் இகழ் நீங்கிய அறநெறிக்கு ஆற்றுப்படுத்து மாதலின், அதன் வழியும் மனித உறவுகள் தழைத்து மனித இன ஒருமைப்பாடு பூக்க வழியுண்டு.

## ஒன்றி வாழ்வதே வாழ்வு

ஒரு சமுதாயக் கூட்டமைப்பின் அடிப் படையாக விளங்குவதும், உறவுகள் தழைத்து ஓங்க அடிப்படையாக அமைவ தும், உள்ளத்தால் ஒன்ற வாழும் வாழ்வே யாகும். இஃது தனி மனித உறவு நிலை யிலும், சமுதாய உறவு நிலையிலும் எவ் வெவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஒல்லும் வகையான் எல்லாம் வள்ளுவர் தெள்ளத் தெளிவாக உரைத்திருப்பதை முப்பால்களிலும் காணமுடிகின்றது. இவை

முன்னரே குறிக்கோள் இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

சமுதாய அரங்கில்-உலக அரங்கில் ஒருவன் கல்வி கற்று, அதன் பயனாகிய அறிவினைப் பெறுவதன் அடிப்படை நோக்கம் உலகத்தோடு ஒன்றி வாழ்வதே என்பது வள்ளுவரின் உறுதியான எண்ணமாக இருந்துள்ளது. இதனை,

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் -குறள் 140

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் ,, 399

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு ,, 425

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு ,, 426

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல் ,, 637

என வரும் குறள்கள் தெளிவுறுத்துகின்றன. இவை வள்ளுவரின் உள்ளத்தில் மனித இன ஒருமைப்பாட்டுணர்வு எத்துணை அளவிற்கு ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதைப் பறைசாற்றுகின்றன.

மேலும், உலகம் பழிப்பன ஒழித்துப் புகழ்வன ஏற்று வாழவேண்டும் என்றும், பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளர்களாக - பகைவர்க்கும் அருளும் அருளுணர்வுடையவர்களாக-பகையினை விளையாட்டிற்காகவும் கருதாதவர்களாக ஒவ்வொருவரும் விளங்கவேண்டும் என்றும் (குறள்கள் 773, 871, 874) வள்ளுவர் எதிர்பார்ப்பன, இவ்வொன்றி வாழும் வாழ்க்கைக்கு ஆற்றுப்படுத்துவனவே எனலாம்.

## உலகப் பயன் கருதல்

கல்வி கற்பதனால் அறிவு மிகுகின்றது; அந்த அறிவினால் உலகம் ஒன்றென்னும் உணர்வு மிகுகின்றது; அதனுடைய விளைவு உலகப்பயன் கருதும் பாங்கு வளர்ந்து ஓங்குகின்றது. இத்தப் பயன் கருதியே ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டும் என வள்ளுவர் எதிர்பார்க்கின்றார். பெற்றோர்கள் தம் குழந்தைகளைத் தம்மினும் அறிவுடையவர்களாக ஆக்கல் வேண்டும்; அவ்வாறு ஆக்கித் தம்மினும் தம் மக்களால் உலகத்திற்குப் பெரும் பயன் கிடைக்குமாறு செய்தல் வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார். இவ்வாறு உலகமக்களின்-இன்னும் விரிந்த நிலையில், உலக உயிர்களின்-பயனைக் கருதியே ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும்; தம் மக்களுக்கும் கல்வி கற்பிக்க வேண்டும் என்பது வள்ளுவம் (குறள்-68).

அறிவின் பயன் மட்டுமன்று, செல்வத்தின் பயனும் உலகத்தார் எல்லார்க்கும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் சென்றடைய வேண்டும் என்றும் வள்ளுவர் எதிர்பார்ப்பதை,

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு -குறள் 215

என்னும் குறள்வழி உய்த்துணர முடிகின்றது. இவ்வாறு ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொருவரும் உலகப் பயன் கருதியே நடையிட வேண்டும் என்பது வள்ளுவத்தின் ஊடுபொருள்களுள் ஒன்றாக இருப்பதை உய்த்துணர முடிகின்றது.

மனிதர்கள் ஒவ்வொருவரும் உலகப் பயன் கருதும் உயர்ந்த பயனாளர்களாக விளங்கவேண்டும் என எதிர்பார்க்கும் வள்ளுவர், இயற்கையின் பயன்கூட உலகம் முழுமைக்குமாக அமைய வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார். இதனை,

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று -குறள் 11

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின் றுடற்றும் பசி -குறள் 13

நீரின் றமையா துலகெனின் ,, 20

வானோக்கி வாழும் உலகெல்லாம் ,, 542

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே ,, 557

என வரும் குறள்கள், மற்றும் தொடர்கள் வழியாக உய்த்துணர முடிகின்றது.

இவ்வாறு, பல்வேறு வகையாலும் உலக ஒருமைப்பாட்டை வலியுறுத்தி, உலக உயிர்கள் அனைத்தும் பயன்பெற ஒவ்வொருவரும் தம்முடைய பார்வையை விரிவுடையதாக்கிக் கொள்ள வேண்டுமென உரைப்பதன் வழியும், வள்ளுவர் தம் உலகம் என்னும் உணர்வை வெளிப்படுத்திக் கொள்கின்றார்.

# தொடக்க கால வரலாற்று நாவல்கள்

மா. ரா. அரசு
எம்.ஏ.



இக் கட்டுரையாசிரியர் 31-10-1950இல் சென்னையில் பிறந்தவர். பள்ளி, கல்லூரி நாட்களில் பல சொல்லாற்றல் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் கலந்து கொண்டு, பரிசுகள் பல பெற்றவர். இவருடைய ஆய்வுக் கட்டுரைகள், பல இதழ்களில் வெளிவந்துள்ளன. 'வ. உ. சி.யின் இலக்கியப் பணிகள்' என்னும் தலைப்பில் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்து வரும் இவர், இப்போது கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றி வருகிறார்.

ஒவ்வொரு மொழியிலும் காலந் தோறும் அம்மொழியின் இலக்கிய வடிவம் மாறுவது என்பது தவிர்க்க இயலாத ஒன்றாகும். ஒரு மொழியின் பழமை, அம் மொழி பேசுபவர்களின் சமூக அமைப்பு, பிற இனத்தவருடன் கொள்ளும் தொடர்பு, வேற்றுமொழித் தாக்கம் போன்ற பல காரணங்களால் அம்மொழியின் இலக்கியம் புதுப்புது வடிவங்களைப் பெறுவதும், முன்னரே வளர்ந்திருக்கும் மரபுகளில் மாற்றங்கள் நிகழ்வதும் இயல்பு. இத்தகைய மாற்றங்களை-புதிய வடிவங்களைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நெடுகக் காணலாம்.

சமணம், பௌத்தம் போன்ற புதிய சமயங்களின் அறிமுகமும், புராண இதிகாசச் செய்திகளும், தத்துவம், கலை சார்ந்த உணர்வுகளும், தமிழிலக்கியம் புதிய புதிய துறைகளையும், அத்துறைகளுக்குரிய தனியான வடிவங்களையும் வளர்த்துக் கொள்ள வழிவகுத்தன. இந்த வடிவங்கள் எல்லாம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை செய்யுள் செய்யும் இலக்கிய முயற்சியாகவே அமைந்தன. ஐரோப்பியரின் வருகையும் அச்சுப் பொறியின் அறிமுகமும் உரைநடை வடிவில் பல இலக்கியங்கள் உருவாக வாய்ப்பளித்தன. அவ்வழியில் தமிழுக்குப் புதிதாக வந்து சேர்ந்ததே நாவல் என்னும் இலக்கிய வடிவம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் தோன்றி வளர்ந்து உலக அரங்கில் உயர்ந்து நின்ற ஆங்கில நாவல் இலக்கியம், நூற்றாண்டுகள் கழிந்த

பின்னரே நம்மவரால் படிக்கப்பட்டு, பயன் படுத்தப்பட்டது.

இந்திய மொழிகளில் முதன்முதலாக வெளிவந்த நாவல், வங்காள மொழியில் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் எழுதப்பட்ட துர்கேசநந்தினீ என்று கருதப்படுகிறது. 1865இல் இந்நாவல் வெளிவந்தது. மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமே (1879) அனைத்திந்திய அளவில் இரண்டாவதாக வெளிவந்த நாவலாகும். அடுத்ததாக, 1880 இல் இராஜ கேர சரித்திரமு என்னும் தெலுங்கு நாவல் வெளி வந்தது. இதன் ஆசிரியர் வீரேசலிங்கம் பந்துலு. இதையடுத்து, குண்டலதா என்ற பெயரில் அப்பு நெடுங்காடி என்பவரால் எழுதப்பட்ட மலையாள நாவல் (1887) வெளிவந்தது. அனைத்திந்திய அளவில் குறிப்பிடத்தக்க தொடக்ககால நாவல்கள் இவை.

தமிழைப் பொறுத்தவரையில் வேத நாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமே முதல் நாவலாக மலர்ந்தது. அதைத் தொடர்ந்து வேறு பல நாவல்கள் அங்கும் இங்குமாகத் தோன்றின என்றா லும், ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திர மும் (1896), மாதவையாவின் பத்மாவதி சரித்திரமுமே (1898) குறிப்பிடத் தகுந்த அளவில் இலக்கியத் தரத்தோடு அமைந்தவை.

முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் வெளிவந்து ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கழிந்த பின்னரே, தமிழில் சமூக நாவல் உலகில் திருப்பு முனையாகக் கருதப்படும் இவ்விரு நாவல்களும் தோன் றின. இவற்றைத் தொடர்ந்து, கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக தமிழில் சமூக நாவல்கள் பலவாக-மிகப் பலவாகப் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளன. தமிழ் நாவல் வரலாற்றில் இது ஒரு கட்டம்.

இரண்டாவது கட்டமாக வளரத் தொடங்கிய நாவல்களைப் பற்றி அறிவது தான் இங்கு நம் நோக்கமாகும்.

## தொடக்க கால வரலாற்று நாவல்கள் (1895-1940)

தமிழ் வரலாற்று நாவல் உலகின் தந்தை என்று போற்றப்படும் கல்கி வரலாற்று நாவல்கள் எழுதத் தொடங்குவ தற்கு முன்பே, வேறு சிலர் அம்முயற்சியில் ஈடுபட்டனர்.

1895க்கும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த நாவல்களே இங்குத் தொடக்க கால நாவல்களாகக் கொள்ளப் படுகின்றன.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே முதல் தமிழ் வரலாற்று நாவல் வெளிவந்து விட்டது. 1895 இல் தமிழில் முதல் வரலாற்று நாவலாகக் கருதப்படும் மோகனாங்கி வெளிவந்தது. இலங்கையின் திரிகோண மலையைப் பிறப்பிடமாகவும், சென்னையை வாழ்விடமாகவும் கொண்ட வரும், புகழார்ந்த தமிழறிஞரான தி. த. கனகசுந்தரம் பிள்ளையின் தம்பியு மான சரவணமுத்துப்பிள்ளை என்பவரே இதனை எழுதி, அதன்வழி முதன்முதலாகத் தமிழில் வரலாற்று நாவலை அறிமுகம் செய்தவர்.

தமிழ் நாவல் வரலாற்றின் தொடக்க காலத்தில் முழு நாவல்களாகவும், தொடர் கதைகளாகவும் வந்து மக்கள் அரங்கில் சிறப்பும் பெருமையும் பெறத் தொடங்கிய சமூக நாவல்களுக்கிடையே மோகனாங்கி ஒரு வியப்பான அறிமுகமே.

ஒரு செறிவான வரலாற்றுச் செய்தியை எடுத்துக் கொண்டு, அதை நாவலாக்க வேண்டும் என்ற முனைப்பு சரவணமுத்துப் பிள்ளைக்கு எழுந்ததன் காரணம் முழுமை யாக அறியுமாறு இல்லை. மோகனாங்கி நாவலில் முன்னுரை என்ற பெயரிலோ, வேறு வகையிலோ எதுவும் எழுதப்படாத தால், வரலாற்று நாவல் எழுதுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தின் அடிப் படையை அவர்வழி அறியும் வாய்ப்பு அமையவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றபின் மாநிலக் கல்லூரியில் அப்போது இருந்த கீழைநாட்டுச் சுவடிகள் நூல் நிலையத்தில் காப்பாளராகப் பணி புரிந்தவர் சரவணமுத்துப்பிள்ளை. அது போது, நாயக்க மன்னர் வரலாற்றை ஆராயக் கிடைத்த வாய்ப்பில் எழுதப்பட்டதுதான் மோகனாங்கி என்ற இந்த முதல் வரலாற்று நாவல்.[1]

பதினேழாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் திருச்சியிலிருந்து ஆட்சி புரிந்த சொக்கநாத நாயக்கர், அப்போது தஞ்சையில் இருந்து ஆண்ட விஜயராகவ நாயக்கரின் பெண் மோகனாங்கிமீது காதல் கொண்டு மாறு வேடத்தில் சென்று அவளைச் சந்தித்து உறவாடித் திரும்புகிறார். பின், முறைப்படி மணம் பேசத் தம் அமைச்சர் ஒருவரைத் தூதனுப்புகிறார். இடையில் சதி நடந்து, பல சிக்கல்கள் உருவாகி, இறுதியில் சொக்கநாதர்-மோகனாங்கி திருமணம் நிறைவாக நடந்தேறுகிறது. இப்படி முடிகிறது அந்த நாவல்.

இந்த நாவலை எழுதிய சரவணமுத்துப் பிள்ளை, தம் ஆய்வுகளில் கண்ட வரலாற்று உண்மைகளுடன் அளவான கற்பனையைக் கலந்து கதை புனைந்துள்ளார் என்றும், இந்நாவலில் மோகனாங்கியைச் சொக்கநாதர் சந்தித்ததாக வரும் சம்பவம் ஒன்றுதான் கற்பனை என்றும் கருதப் படுகிறது.[2]

வரலாற்று நாவலாசிரியர் என்ற முறையில் சரவணமுத்துப் பிள்ளையை ஒரு மதிக்கத்தகுந்த முன்னோடியாகப்போற்றும் வகையில் அவருடைய மோகனாங்கி அமைந்துள்ளது.

மோகனாங்கி வெளிவந்து ஏறக்குறைய எட்டாண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு 1903இல் எஸ். கூடலிங்கம் பிள்ளை எழுதிய மங்கம்மாள் என்னும் வரலாற்று நாவல் வெளிவந்தது. இந்நாவலைப் பற்றி மிகுதியான செய்திகளை அறிய முடியவில்லை. குழந்தைச்சாமிப் பிள்ளை எழுதிய சத்தியவல்லி என்னும் நாவல் 1910ஆம் ஆண்டில் வெளிவந்தது.[3]

முதலிரு நாவல்களும் தமிழக வரலாற்றை-குறிப்பாக, நாயக்கர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு எழுந்தவை. முன்றாவதாக வெளிவந்த சத்தியவல்லியோ இராஜஸ்தானத்தின் வரலாற்றுப் பின்னணியில் அமைந்தது. தமிழ்நாட்டிற்கு அப்பாலுள்ள மாநில வரலாற்றை அடிப்படையாக வைத்துத் தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் என்ற பெருமை சத்தியவல்லிக்கு உண்டு.

1930க்கும் 1936க்கும் இடைப்பட்ட காலத்தில், நெல்லையா என்பவர் எழுதிய சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி என்னும் நாவல் வெளிவந்தது. மராட்டிய அரச குடும்பத்தைச் சார்ந்த சந்திரவதனாவை, இராகுலன் என்னும் இளவரசன் விரும்புகிறான். ஆனால், அவள் அவனை விரும்பவில்லை இறுதியில் பல்வேறு இடையூறுகளுக்குப் பின்னர் இராகுலனின் காதல் வெற்றியடைகிறது. மராட்டிய அரச குடும்பங்களில் நேர்ந்த காதல், பூசல், போர் முதலியவைகளைப் பற்றியதாக இக்கதை அமைந்துள்ளது.

தமிழ் நாட்டைக் கடந்து அமைந்துள்ள பிற இந்திய மாநிலங்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இரண்டாவது நாவல் சந்திரவதனா. ஏறக்குறைய ஆயிரம் பக்கங்கள் கொண்டதாக இந்நாவல்

---

1. பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி), சோ. சிவபாதசுந்தரம், தமிழ் நாவல் - நூறாண்டு வரலாறும், வளர்ச்சியும், 1977 (முதற் பதிப்பு), கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, பக். 27.

2. மேற்படி, பக். 28.

3. டாக்டர் தா. வே. வீராசாமி, தமிழ் நாவல் வகைகள், 1979 (முதற் பதிப்பு), தமிழ்ப் பதிப்பகம், சென்னை, பக். 163.

அமைந்துள்ளது. கல்கி, சாண்டில்யன், ஜெகசிற்பியன், 'நா. பார்த்தசாரதி, கோவி. மணிசேகரன் போன்றவர்களின் நெடிய வரலாற்றுக் கதைகளுக்கு இதுவே முன்னோடியாகக் கருதப்படுகிறது.

ஏறக்குறைய இதே கால கட்டத்தில் மேகலாம்பிகை அல்லது காதலும் கடமையும் என்ற நாவலைச் சாமிநாத முதலியார் என்பவர் எழுதினார். இது பதினேழாம் நூற்றாண்டின் மராட்டிய வரலாறு பற்றிய நாவலாகும்.

கல்கி அவர்கள், ஆனந்தவிகடன் ஆசிரியராக இருந்தபோது 1934ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரூபாய் ஆயிரம் பரிசு கொண்ட நாவல் போட்டி ஒன்றை அறிவித்தார். தமிழகத்தில் முதல் மாபெரும் இலக்கியப் போட்டியான அதில் குகப் பிரியை எழுதிய சந்திரிகா என்ற சமூக நாவலும், வேங்கடாசலம் எழுதிய மஞ்சுளா என்ற சரித்திர நாவலும் பரிசைப் பகிர்ந்து கொண்டன[4] என்னும் குறிப்பு மஞ்சுளா என்ற பெயரில், ஒரு வரலாற்று நாவல் 1934 வாக்கில் எழுதப்பட்டது என்ற செய்தியை நமக்கு அறிவிக்கிறது.

1939இல் ஒறையூர் நாராயண மாதவன் என்பவர் விஜயபால பவானி என்ற வரலாற்று நாவலை எழுதினார். இது இரண்டு தொகுதிகளாக வெளிவந்தது. வரலாற்று நாவல் உலகில் தொகுதிகளாக வந்த முதல் நாவல் இதுவேயாகும். பின்னால், கல்கியின் பொன்னியின் செல்வன், விக்கிரமனின் நந்திபுரத்து நாயகி, சாண்டில்யனின் கடல்புறா முதலிய நாவல்கள் பல தொகுதிகளாக வெளிவருவதற்கு அடித்தளமாக அமைந்தது விஜயபால பவானியே.

இவை தவிர, பிரிதுளை, வித்யாரண்ய நகரம் போன்ற ஒன்றிரண்டு வரலாற்று நாவல்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றி மறைந்தன. இவற்றில் வரலாறு இருந்ததே தவிர நாவல் இல்லை.[5]

தொடக்க கால வரலாற்று நாவல்களில் மோகனாங்கி ஒன்றைத் தவிரக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான நாவல்கள் எதுவும் தோன்றவில்லை. பல நாவல்கள் தமிழக எல்லையைக் கடந்து பிற மாநில வரலாறுகளைப் பின்னணியாகக் கொண்டு அமைந்தவை.

கல்கிக்கு முன்பு தோன்றிய வரலாற்று நாவல்களில், இராஜபுத்திர, மராட்டிய வரலாறுகள் இடம் பெற்றமைக்குக் காரணம் கூற விழையும் திரு. எஸ். தோதாத்ரி என்பவர், தம்முடைய, தமிழ் நாவல்-சில அடிப்படைகள் (1980) என்னும் நூலில் கூறும் காரணம் இங்குக் கருதத்தக்கது. அந்நாளில் தமிழ்நாட்டு வரலாற்றைப் பற்றிய விவரங்கள் அறியப் படாமல் இருந்தமை ஒரு காரணமாக அவரால் சுட்டப்படுகிறது.[6]

இக்கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமையவில்லை. காரணம், தமிழ்நாட்டு வரலாறு பற்றிய செய்திகள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே வெளிவரத் தொடங்கி விட்டன என்பதே வரலாற்று உண்மை. வரலாற்று அறிஞர்கள் இந்திய, தென்னிந்திய, தமிழக வரலாறுகள் தொடர்பாகத் தாம் அறிந்த செய்திகளைத் தொகுத்து அந்நாளிலேயே நூல்களாக வெளியிட முற்பட்டனர்.

மதுரை நாயக்கர் பற்றிய மதுரை மாநகர் (The Madura Country) என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க நூல் 1868 ஆம் ஆண்டில் ஜே. எச். நெல்சன் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது மதுரை

---

4. சுந்தா, பொன்னியின் புதல்வர் (கல்கியின் வாழ்க்கை வரலாறு), 1976 (முதற் பதிப்பு), வானதி பதிப்பகம், சென்னை, பக். 338.

5. டாக்டர் இரா. தண்டாயுதம், நாவல் வளம், 1977 (இரண்டாம் பதிப்பு), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, பக். 76.

6. பக். 102.

நாயக்கர் பற்றிய அரிய பல வரலாற்று உண்மைகளைத் தன்னகத்தே கொண்ட தாக அந்நூல் விளங்கியது.

கனகசபைப் பிள்ளையின் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் (The Tamils 1800 years ago) என்னும் நூல் 1904 ஆம் ஆண்டிலேயே வெளிவந்து தமிழர்தம் நாகரிகத்தின் தொன்மையை உணர்த்தியது. இந்நூலின் கட்டுரைகள் 1895 முதல் 1901 முடிய மெட்ராஸ் ரெவ்யூ (Madras Review) என்னும் ஆங்கில இதழில் தொடர்ந்து வெளிவந்தவை என்னும் செய்தி இங்குக் குறிக்கத்தக்கது.

டி. ஜி. ஆராவமுதனின் சங்க காலம் (The Sargam Age) என்னும் சிறப்புமிக்க நூல் 1925 இல் வெளிவந்தது.

பி. டி. சீனிவாசய்யங்காரின் தமிழர் வரலாறு (History of the Tamils) 1929 இலும், கே. என். சிவராஜ பிள்ளையின் பண்டைத் தமிழர் கால நிலை (The Chronology of the Early Tamils) என்னும் நூல் 1932 இலும் வெளிவந்து, தமிழக வரலாறு தொடர்பான அரிய பல செய்திகளை வெளிப்படுத்தின.

பிரெஞ்சு அறிஞர் துப்ரயில் எழுதிய பல்லவர்கள் (The Pallavas) 1917 இலும், டெக்கானின் பண்டைய வரலாறு (Ancient History of the Deccan) 1920 ஆம் ஆண்டிலும், பல்லவன் ஆண்டிகுட்டிஸ் (Pallava Antiquities) 1923 ஆம் ஆண்டிலும் வெளிவந்து, பல்லவர் பற்றிய மகத்தான செய்திகளை உணர்த்தின.

ஆர். கோபாலனின் காஞ்சிப் பல்லவர் வரலாறு (History of the Pallavas of Kanchi) 1928 இலும், தவத்திரு ஈராஸ் அடிகளாரின் பல்லவர் வரலாற்றுச் செய்திகள் (Studies in Pallava History) 1933 இலும் வெளிவந்தன.

பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியின் பாண்டிய நாடு (The Pandyan Kingdom) 1929 இலும், சோழர்கள் (Cholas) 1935 இலும் வெளிவந்து சேரம், பாண்டியர்களைப் பற்றிய செய்திகளை வெளிப்படுத்தின.

வி. ரெங்காச்சாரி இந்தியன் ஆண்டிகுயரி (Indian Antiquary) இதழில் மதுரை நாயக்கர் வரலாறு தொடர்பாக எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் 1914க்கும் 1917க்கும் இடையிலும், பேராசிரியர் சத்தியநாத ஐயரின் மதுரை நாயக்கர் வரலாறு (History of the Nayaks of Madura) 1923 இலும் வெளிவந்துள்ளன.

இவையெல்லாம், 1868 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 1935 வரை வெளிவந்த தமிழக வரலாற்றுத் தொடர்பான குறிப்பிடத் தகுந்த நூல்களில் சில. இவை, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குரிய தமிழக வரலாற்றினைத் தெளிவுபடுத்திய மகத்தான நூல்கள்.

தொடக்க கால வரலாற்று நாவல்கள் ஏறக்குறைய 1895 முதல் 1940 வரையிலான காலகட்டத்தில் வெளிவந்துள்ளன. இவற்றில், 1895 இல் வெளிவந்த சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கியும் 1903 இல் வெளிவந்த கூடலிங்கம் பிள்ளையின் மங்கம்மாளும் 1868 இல் வெளிவந்த நெல்சனின் மதுரை மாநகர் என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன என்று கருத இடமுண்டு.

தமிழக வரலாறு பற்றிய பல்வேறு செய்திகள் இந்தக் காலகட்டத்தில் மிக விரிவாக வெளிவந்திருந்தும் ஏனைய நாவலாசிரியர்கள் தமிழக வரலாற்றுப் பின்னணியில் ஆர்வம் காட்டாமல் பிற மாநில வரலாறுகளைத் தேடிப் பிடித்து எழுதியது வியப்பிற்குரிய செய்தியாகவே உள்ளது. இவ்வளவு நூல்கள் இந்த இடைக் காலத்தில் வெளிவந்து தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பைப் பாரறிய உணர்த்திய நிலையிலும், தொடக்க கால நாவல்களுக்குத் தமிழகம் கனமாக அமையாமைக்குக் காரணம் தமிழக வரலாறு பற்றிய செய்திகள் அறியப்படாமையே என்னும்

திரு. தோதாத்ரியின் கூற்றும் வியப்பிற் குரியதே.

தொடக்க கால நாவல்களாக இது வரை அறியப்பட்டுள்ள நாவல்களின் எண்ணிக்கை ஏறக்குறையப் பத்து.

முயன்று உழைத்தால்-பழைய நூலகங் களையும் பழைய இதழ்களையும் தேடிப் பிடித்து, அவற்றில் உறங்கிக் கொண்டிருக் கும் செய்திகளைத் தொகுக்க முடியுமா னால் தொடக்ககால வரலாற்று நாவல்கள் பற்றிய வரலாற்றை இன்னும் தெளிவாக-இன்னும் விரிவாக உருவாக்க முடியும். அந்நாவலாசிரியர்களின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளும் முறையாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுமேயானால், தொடக்க கால வரலாற்று நாவல்களின் தோற்றத்திற்கு இலட்சியப் பின்னணி ஏதும் உண்டா? இல்லை, வெறும் பொழுதுபோக்கு என்ற அடிப்படையில் தான் அவை எழுந்தனவா? என்பன போன்ற அரிய பல உண்மைகளை அறியும் வாய்ப்பு அமையும்.

# SEIZING THE CATTLE

## A Common Custom among the Dravidians and Africans

**Dr. K. P. ARAVANAN**
M.A. M.Litt., Ph.D.

*The Author of this Essay Dr. K.P. Aravanan Ph d., was born on 9-8-1941 in Kadalangudi Village in the Thanjavur District. He is a Certificate holder in Linguistics, Arthropology and archaeology. He Served as Additional Professor in the Dakka University in Senegal State and he has visited many European Countries, Japan, Honkong, America and Africa. He is the author of five English works and more than twenty Tamil works. His special field of interest is cultural Aruthropology and at present he is the head of the Department of Tamil in the Lyola College, Madras.*

### Cattle-Give basic needs.

The pastoral life was more ancient than the agricultural life. The latter was a settled one but the former was not. Mostly people of pastoral complex are nomads. Cattle breeding is their main occupation. The cattle give them, milk, meat and blood. The Masai, an African ethnic of Kenya and Tanzania never eat meat. But they take blood for their diet without killing the cattle. The Bantu of Kenya and the Blin, Karamojong, Nandi and Masai of Africa drink quantity of fresh blood drawn from the necks of their cattle by means of a miniature arrow. The Hima nomads of northwest Rwanda bleed their animal to use the blood as their diet. Besides food, the skin of the cattle is useful to them as dress and shelter. Thus, cattle offer the basic needs to the human being.

### Cattle-as wealth.

After passing the pastoral life, people have practised agriculture. Land-owning system came into existence. People obtained land as they could, but even after that, the importance of the cattle-raising

did not diminish. Infact, cattle was used as a medium of exchange. By this way cattle in themselves constitued a true economic value.

Pastoral and agricultural activities were going on side by side in mixed societies. Even though in these societies, cattle breeding has not been ignored due to the following reasons.

1. Cattle offer milk, meat and blood as food.
2. - - skin as their dress and shelter
3. By cattle, one can get goods or services by exchange.
4. Lesser labour for cattle raising than the land-farming.
5. More profit in cattle-breeding than from land.
6. Cattle are movable goods, and do not require their owner to stay in one place; they may be moved without losing any of their value.
7. Easy to count the heads.
8. Easy to acquire.

The reasons mentioned above made cattle a rtue wealth. Most of the ancient societies were really fond of them Cattle played a big role in the economic life of the ancient people until the introduction of money.

## The position of cattle in Africa.

The cattle has an economic significance in Africa. Most of the Aftican societies consider cattle as their wealth. They use cattle in the place of money. For example, they "pay" cattle as taxes for government institutions and "pay" fines for courts. So many ethnics have been donating cattle as bride-price to bride-grooms. In Senegal this custom is still in vogue among most of the ethnics. Besides, the Ambas, the Acholi, the Bantu, the Dama the Ganda, the Hima, the Karamoja and other African ethnics retain cattle-raiding as their importent occupation even today. Most of the women-folk in Africa look after land as agriculturist and the men look after cattle as pastoralists in mixed societies.

Even from earlier days, the role of cattle amoung the life of the Africans is a remarkable one. Their life and death always centred the cattle than any other people of the world. The following custom will show their close relation-ship with the cattle even at the time of one s death.

—In the province of equatoria of the Sudan Republic, every young boy at the end of his pubetry, will choose a male-calf as his favorite animal. This calf will be cherised with him. It should not be neigther castrated nor killed. After some years the male-calf will become a bull. The boy will be called as "the father" of the bull. The bull may be killed after the death of its "father". When the bull dies, its "father" exposes himself to various dangers in their hunt or in battle; he musf wear mourning symbols for the death ot a close relative; he sometimes commits suicide (1)—
The above practics shows the extreme affinity of the black Atricans with cattle.

## The position of cattle in India :

All early raids were chiefly for cattle. There are a large number of hymns in the Atharva veda praying for the protection of cows and cattle in the 13th hymn of book XIX. There are references to cow-stalls and kine-winning chariots (Refer : 5 and 7, book II-26; IV-21; VI-59) From these references one may conclude that

cattle seizing was practised on an extensive scale in Vedic age " (2).

In Mahabharatha, a chief called, Thirikartha has seized cattle from the city, Viraata and Arjuna, the epic hero regained them after a war.

According to the Indo-European languages including Sanskrit, those who are searching cattle will be named as warriors.

## The position of cattle in ancient Tamilnadu:

An old custom called, **eerukootal** (Bull-jumping) of the Tamils might be compared with the Africans' custom of "favorite bull". According to Tamil literary sources, after the birth of a female child, the parents should cherish a male-calf. At the time of girl's marriage, the calf will become a bull. One who wants to marry the girl should courageously jump on the bull and bring it under his control. The winner of the bull will be accepted as the bride-groom of the girl. Kalitthokai (Second century A. D.) (Number of the Verses: 101 : 39-42, 103 : 74-76, 104 : 29-31) and the Cilappathikaaram (3rd century A. D.) have described (17 : 8) exclusively the practice of the pastorals in connection with the choice of the bride-groom by the bride.

In modern Tamil, the word, **maatu** means cattle, but in ancient usage, the same word denoted wealth like the word "pecuniary" in English and French. Thiruvalluvar, the famous Tamil poet of 2nd century A. D. has also used this word in the meaning of wealth under his couplet number 400.

The tribal communities of Nilagriri, Tamilnadu, like the Todas, the Kotas, and the Badagas consider cattle as their true wealth. Their life is entirely dependent on their cattle.

## Africans' way of seizing the cattle :

Though in olden days, the cattle was considered as weaith in most of the societies, particularly among the black Africans, it was considered as their flesh and blood. Their life was completely surrounded by the cattle.

This led them even for war in many times. These expeditions occured when a group of a few villages was threatened by a shortage of meat or milk because its own cattle had been reduced by an epidemic or some other reasons. The raiders tried to seize cattle without fighting by capturing them by surprising when they were away from the village. Their attacks might be a sudden and surprising one to the losers. But every raid has been planned thoroughly and carried out carefully by the chief and his colleagues.

### 1 Seeking permission from the chief :

When the members of the particular band of warriors planned a raiding operation, **they must ask their local chief** to lay out a plan of attack and eventually to obtain the co-operation of other bands.

### 2 Diviner's authorisation.

The leaders of expedition went to the diviner to get his approval. The diviner could grant his approval only after studying the situation profitiously.

### 3 Beginning of expedition.

After obtaining the consent from the chief and diviner, the warriors prepared themselves by feast on meat; **scouts**

were sent out, and the expedition began.

### 4 Place of expedition.

Expeditions were carried out against the neighbouring tribes and sometimes went as for as the coast, more than 250 miles.

### 5 Sharing the seized cattle.

After their sucess to seize the cattle, the cattle were shared according to very precise rules :

1 A certain number of animals went to the diviner

2 Another set to the warriors who had distinguished them-selves.

3 The rest were shared among the members of the expedition.

### 6 Way to war :

The members of the raided groud were not **enslaved** or **taken prisoner.** The man who resisted during the battle were killed and sometimes a warrior would carry off a woman to marry or a child to adopt.

This type of cattle seizing was reported even in 1883 from Kenya and Tanzania. J. Thompson, the first European to cross Masai country saw two each of about 3000 warriors, camped not far from each other's camp actually wage a battle; their wives helped in the fighting and screamed encouragement to them; the winners took the loser's cattle (3)

### Tamil's way of cattle-seizing :

It is surprising to note that most of the African methods far seizing the cattle are almost similar to the ancient Tamils. Planning, seeking permission from the chief, advice of the diviner, spying, scouting, fighting, killing the resistants, sharing and way of sharing and enjoying are similar to the Tamils, but carrying women for marriage and child for adoption are dissimilar to them. Tholkaappiar, one of the oldest Tamil grammarian of Dravidian languages has beautifully described the warfare for cattle under the head of Vetchi thinai (Porul athigaaram : Nuurpaa 59, 60, and 61)/He has divided the warfare into fourteen division. Among them the following are more appropriate to quote here : I = Asking king's permission (60), 2-waitting for divining words (paakkatthu viricchi), the details of expedition (61), the way of sharing the seized animals (paathiitu and kotai) (61) and killing the resistants (Murriya uurkolai- (61).

The Cankam Tamil literature, for example, verses like. 257, 258, 262, 269 and 297 of purana nuuru and lines 140 to 142 of perumpaanaarru patai mention this cattle lifting. purapporulvenpaa maalai, an eighth century (A D) Tamil grammar on warfare has elaborately explained this warfare under the title of Vetchipatalam. Most of the latter grammars in Tamil have also described about the warfare on cattle. Besides, Tamil inscriptions have recorded this incident in various periods.

### Seizing the cattle was a prelude ?

A few Tamil scholars have pointed out that seizing the cattle war the first act of aggression in a declaration of war i. e., the war for cattle was a prelude which must be followed by a great war. They have further explained that the war for cattle was not for seizing the cattle for their own end but it was for protecting the cattle from the procee ding war. However (4), these views are incorr-

30549

ect. There is no evidence either from literature or from inscriptions to support their view. The whole purpose of these raid is only for seizing the cattle and sharing them according to the people's tradition. There was no further great war beyond the seizure of cattle except when the losers of the cattle fought to regain their stock. The source from Tamil land, African land and ancient war customs support latter view.

## Origin of this war custom :

The conception of cattle as wealth and the custom of seizing the cattle might be common in all ancient societies. But, among the Black Africans the above concept and custom have deeply rooted in their economic and social life, because of their pastoral life. But, they dit not have any written old sources to prove that this system was their own due to the lack os writting system in black Africa. The Tamilf have much on rhis subject. Their ancient grammar, literature and inscription have explained this warfare in details. Even through, it is premature to say about the original place for cattle-lifting, one can say, according to present knowledge on this sucject, the Dravidians (Tamils) and black Africans are closer, particularly on this unique practics of seizing the cattle in a planned manner.

## NOTES

| | | |
|---|---|---|
| 1 | —Jacques Maquet | —Civilizations of Black Africa., pp. 125, 126. |
| 2 | —V. R. R. Dikshithar | —War in Ancient India., p. 15 |
| 3 | —G. W. B. Huntingford | —Quoted by Jacques Maquet., p, 117 |
| 4 | —K. Vellaivaaranam | —Tholkaappiam., p. 93 |

## SELECT BIBLIOGRAPHY

Jacques Maquet —Civilizations of Black Africa
Oxford University Press, New York 1972.